A DAILY DEVOTIONAL TO GUIDE YOU DAILY

தினசரி தியான நூல்

மனம் புதிதாகட்டும்

தினமும்

சாம்சன் பால்

மனம்
புதிதாகட்டும்
தினமும்

ஜீவ நீரோடை தினசரி தியான நூல்

சாம்சன் பால்

மனம் புதிதாகட்டும் தினமும்
Manam Pudhithagattum Thinamum
(ஜீவ நீரோடை தியான நூல் வரிசை - 18)
முதல் பதிப்பு - 2015
Rs.140/-

சகோ. சாம்சன் பால் மாதந்தோறும்
வெளியிடும் மாத இதழ்,
பிரசங்க வீடியோ, சி.டி.க்கள் மற்றும்
புத்தகங்களைக் குறித்த விபரங்களுக்கு
தெளிவான முகவரியுடன்
கடிதம் அனுப்புங்கள்.

Cover Design By : Wilson Paul, Chennai.

SAMSON PAUL
126, Muthaiya Muthaliar Street,
Pondicherry - 605 003.
INDIA
Phone : 0413-2236042
e-mail : jeevaneerodai@gmail.com
Website : www.jeevaneerodai.com

Printed by : United Bind Graphics, Chennai-10 Ph : 2640 1531

Living Stream

Daily Devotional Book

Gift

Presented to Mrs. Shanthakumari George.

By

Date

Occasion

ஆசிரியரிடமிருந்து...

தேவன் நமக்கு அளிக்க விரும்புகின்ற அனைத்து ஆசீர்வாதங்களிலும் அவர் நமக்கு அளிக்கும் அவருடைய வார்த்தைகள்தான் நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம். இதை நான் அடிக்கடி சொல்லுவதுண்டு. வாழ்க்கையின் பலவிதமான சூழல்களில் தேவன் அருளுகின்ற நல்ல வார்த்தைகளைப் போல வேறெதுவும் நமக்கு மிகுந்த பயனைத் தர இயலாது. அவருடைய வாயிலிருந்து புறப்படுகின்ற வார்த்தைகளால்தான் மனிதன் உண்மையான வாழ்க்கையை வாழ முடியும் என்பது வேதம் கூறும் செய்தி (உபாகமம்-8:3)

ஒரு புதிய நாளைக் காணும் போது அங்கே ஒரு புதிய சூழ்நிலையையும் காண நேரிடுகிறது. சில சூழ்நிலைகள் இதுவரை நாம் சந்தித்து அறியாதவை. அப்படிப்பட்ட நேரங்களில் வெறும் அறிவுப்பூர்வமான ஆலோசனைகளோ, தத்துவார்த்த ரீதியாக இந்திக்கப்பட்ட சிந்தனைகளோ பெரிய உதவியைச் செய்ய முடியாது. எந்தெந்த சூழ்நிலைக்கு எந்தெந்த விதமான வழிநடத்துதலும் ஆலோசனையும் தேவை என்பதை தேவன் ஒருவரே அறிவார். எனவே அவர் அந்தந்த சூழ்நிலையின் நடுவில் நமக்கு அருளும் வார்த்தைகளே நமக்கு பேருதவியாக இருக்கும். இந்தவிதமாக அநேக ஆண்டுகளாக ஜீவ நீரோடை தியானநூல் வாயிலாக தேவன் அருளும் சத்தியம் பொதிந்த வார்த்தைகள் ஆயிரக்கணக்கானோருக்கு மிகுந்த உதவியாயிருக்கிறது.

உங்கள் சிந்தனைகள் நன்றாயிருக்கின்றன, உங்கள் தினசரி தியான நூல் செய்திகள் மிகவும் நன்றாயிருக்கிறது என்றெல்லாம் மனதார பாராட்டும் அன்பர்கள் பலர் உண்டு. ஆயினும் அவற்றால் இவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது? அவற்றால் அவர்கள் கண்ட பயனுள்ள மாற்றங்கள் என்ன என்பதே எனக்குள் எழுகின்ற கேள்வி. ஏனென்றால் கருத்துக்களும், வார்த்தைகளும் வெறும் ரசனைக் குரியவைகளாக நின்றுவிடாமல் ஆழமாக அவை இருதயத்திலும் வாழ்க்கையிலும் வலிமையான நல்ல விளைவுகளை ஏற்படுத்த வேண்டும். நல்ல சிந்தனைகளை வெறுமனே ரசித்து மகிழ்கின்ற ஒரு பழைய மனமாக மட்டும் இராமல் ஒவ்வொருடைய மனமும் புதிதாக வேண்டும்.

இந்த தியான நூல் எப்படியிருக்கிறது? என்ற கேள்வியை விட இந்த தியான நூல் மூலமாக தேவன் உங்களோடு பகிர்ந்து கொள்ளப் போகும் நல்வார்த்தைகளால் உங்கள் மனமும் வாழ்க்கையும் இப்போது எப்படியிருக்கிறது? என்பதே உங்களிடம் கேட்கப்படப் போகிற கேள்வி. சபைப் பிரிவுகள், உபதேச வித்தியாசங்கள் ஆகிய எல்லைகளைக் கடந்து எல்லாராலும் மிக நல்ல தினசரி தியான நூலாக அடையாளம் கண்டு கொண்ணப்பட்டுள்ள ஜீவநீரோடை தினசரி தியான நூல் இந்த ஆண்டும் அதனை உறுதிப்படுத்தும் என நம்புகிறேன். மீண்டும் ஒரு தியான நூலை ஆயத்த மாக்க தேவன் தந்த கிருபைக்காக அவருக்கு ஆயிரம் நன்றி கூறி அவருடைய மகிமைக்காக இதனை அர்ப்பணிக்கின்றேன்.

சாம்சன் பால்

உங்கள்

நண்பருக்கோ, உறவினருக்கோ ஒரு சிறந்த பரிசை அளியுங்கள்

ஆண்டுதோறும் வெளிவந்து கொண்டிருக்கும் ஜீவநீரோடை தினசரி தியான நூல்கள் ஆயிரக்கணக்கானோரால் விரும்பிப் படிக்கப்படுகின்றன. அவர்களின் வாழ்க்கை சூழ்நிலைகளில் தினசரி தியான நூல்களின் சிந்தனைகள் அவர்களுக்கு தேவனுடைய தெளிவான நேரத்திற்கேற்ற ஆலோசனைகளைக் கொடுத்திருக்கின்றன. அவர்கள் இதனை மிகவும் பிரயோஜனமான ஒரு தியான நூலாக அடையாளம் கண்டுகொண்டதால் மற்றவர் களுக்கும் இதனை வாங்கித் தருகின்றனர். அவ்விதம் தியான நூலை பெறுகின்றவர்கள் உண்மையிலேயே மிகச் சிறந்ததோர் பரிசை பெற்றதாக உணருகின்றனர்.

நீங்களும் இந்த ஆண்டில் உங்களால் நேசிக்கப்படும் சிலருக்கு இந்த தியான நூலை பரிசாக அளித்து அவர்களும் பயனடையச் செய்யலாமே. உங்கள் பெயரைக் குறிப்பிட்டு அதனை நாங்கள் அவர்களுக்கு அனுப்பி வைக்க உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

இந்த தியான நூல் ஆங்கிலத்திலும் கிடைக்கும்.
BE RENEWED IN MIND DAILY

SAMSON PAUL'S
DEVOTIONAL BOOKS IN ENGLISH

- BE RENEWED IN MIND DAILY
- GOD'S WORD'S FOR YOUNG HEARTS
- IN THE HEARTS OF BUDS
- O LORD IN THY PRESENCE
- BLESSED WORD FOR TODAY
- EVERY DAY IN HIS PRESENCE
- WALKING CLOSER WITH GOD
- EVERYDAY WITH THE EVERLASTING GOD
- A JOURNEY WITH GOD
- WALKING WITH GOD
- GOD'S GUIDANCE TODAY
- STREAM OF LIFE

வாலிபர்களுக்காக...

வாலிபர்களின் வாழ்க்கையில் புத்தொளி வீசி புதியதோர் பாதையில் வழிநடத்தும் புதிய தினசரி தியான நூல்



இளம் நெஞ்சங்களுக்கு இறை வார்த்தைகள்

GOD'S WORDS FOR THE YOUNG HEARTS

இந்த தினசரி தியான நூல்

வாலிபர்களைக் கவரும் !
அவர்களை மாற்றும் !
அனுதினம் அவர்களை சரியான வழிகளில் நடத்தும்

வாலிபர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு கர்த்தரின் வழியில் தீர்வுகள் !

எளிய நடை
சிறுசிறு சம்பவங்கள்
குட்டிக்கதைகள்
தெளிவான ஆலோசனைகள்

ஆங்கிலத்திலும் இந்த தியான நூல் கிடைக்கும்



சிறு பிள்ளைகளுக்காக
ஒரு சிறந்த
தியான நூல்

இளந்தளிர்களின் இதயங்களுக்கு

**பெற்றோர்கள் தங்களின்
சிறு பிள்ளைகளுக்காக
அவசியம் வாங்க
வேண்டிய நூல்**

சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு
தேவனைத் தேடும் உணர்வைக்
கொடுத்து, அவர்கள் சிறந்த
ஒழுங்குகளில் வளர்வதற்கு
வழிகாட்டுகின்ற
தியான நூல்.

மிக எளிதாக பிள்ளைகள் புரிந்துகொள்ளும்
வகையில் எழுதப்பட்டது.

ஆங்கிலத்திலும் கிடைக்கும்.

FOR THE HEARTS OF BLOOMING BUDS



கிறிஸ்தவம் சொல்வது என்ன?

நற்குணம், நற்சிந்தனைகள் நற்செயல்கள்

பொதுவாக நாம் சரீரவியாதிகள், பொருளாதாரக் குறைவுகள், மகிழ்ச்சி தராத உறவுகள், ஆசைகள் நிறைவேறாமை போன்றவற்றைத்தான் வாழ்க்கையில் நம்மை வேதனைப்படுத்தும் பிரச்சினைகளாக அடையாளம் கண்டுள்ளோம். நம்முடைய முயற்சிகள் மூலமாகவும், ஆன்மீக நம்பிக்கைகள் மூலமாகவும் இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஆசைப்படுகின்றோம். ஆனால் இதுபோன்ற பிரச்சினைகள் அதிகமாக இல்லாதவர்களையும் அல்லது இதுபோன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இயன்றவர்களையும் கவனித்துப் பாருங்கள். அவர்கள் இப்பொழுதும் சந்தோஷத்துடனும், அமைதியுடனும், மனநிறைவுடனும் வாழ முடியவில்லை.

காரணம் என்னவென்றால் ஒரு சராசரி மனிதன் தன்னிடமுள்ள மிகப்பெரிய தோர் பிரச்சினையை பெரும்பாலும் அடையாளம் காண இயலாதவனாக உள்ளான். அந்த பிரச்சினையை அவன் பிரச்சினையாக எண்ணி அதற்கொரு சரியான தீர்வைக் காணாதவரை வேறு எத்தனை தீர்வுகளைக் கண்டாலும் அவன் நலமானதோர் வாழ்வைக் காண இயலாது.

முக்கியமான 3 விஷயங்கள்

அந்த பிரச்சினையைக் குறித்து சற்று ஆராய்வோம். ஒரு மனிதனிடம் நல்ல குணங்கள், நல்ல செயல்கள், நல்ல சிந்தனைகள் என மூன்று விஷயங்கள் மிகவும் முக்கியமானவை. அவன் நலமானவற்றை சிந்திக்க இயலாமலும், நலமான செயல்களைச் செய்ய இயலாமலும் போகும் போது அவன் நலமான

தோர் வாழ்வைக் காணவும் இயலாது. பணம், பொருள், ஆஸ்தி, அந்தஸ்து, அறிவு, ஞானம், அதிகாரம், உயர்பதவி என பல விஷயங்கள் அவனோடு இணைந்திருந்தாலும் நற்சிந்தை, நற்குணம், நற்செயல் ஆகியவை அவனோடு பிணைந்திருக்காவிட்டால் அந்த வாழ்க்கை நலமான வாழ்க்கையாக இராது.

மனிதன் நற்குணங்கள் இன்னது என்று அறியாமலில்லை. தன்னிடம் நற்சிந்தனைகள் இருக்க வேண்டும் என்று அவன் அறியாதிருக்கவில்லை. தான் நல்லதையே செய்ய வேண்டும் என்று சிந்திக்காமலில்லை.

அவன் நற்குணங்களை நல்லது என்று அறிந்திருக்கின்றான். ஆனால் நற்குணங்களோடு வாழ முடியவில்லை. அவன் நல்லதையே சிந்திக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான். ஆனால் அவனுடைய கட்டுப்பாட்டையும் மீறி அவனுக்குள்ளிருந்து தீய சிந்தனைகள் வந்துகொண்டேயிருக்கின்றன. அவன் நல்லதையே செய்ய விரும்பினாலும் அவனால் அவற்றில் போதிய வெற்றியைக் காண இயலவில்லை.

செயல்பட இயலாத அடிமை

சிலரிடம் நற்குணங்கள் உண்டு. ஆனால் தீய குணங்களும் உள்ளன. சிலர் நல்ல சிந்தனைகள் உள்ளவர்கள்தான். ஆனால் தீய சிந்தனைகளுக்கும் குறைவில்லை. சிலர் நல்ல பல செயல்கள் செய்யாமலில்லை. ஆனால் தீய செயல்களும் நிகழ்ந்து விடுகின்றன.

நாம் எவற்றை நலமானவை என்று அறிந்திருக்கின்றோமோ அவற்றை போதுமான அளவிற்கு நமக்குள் கொண்டிருக்க முடியவில்லை. இதுதான் மனித வாழ்க்கையில் மிகப் பெரிய பிரச்சினை. ஏனென்றால் நற்சிந்தையும், நற்குணமும், நற்செயலும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் முடியாத விஷயங்கள் என்றால் அவன் ஒரு விதமான அடிமைத்தனத்தில் கைதியாக இருக்கிறான் என்று அர்த்தம்.

அடிமை தான் நினைத்ததையெல்லாம் செய்ய முடியாது. தன் விருப்பங்களை நிறைவேற்ற இயலாதவன் அடிமை. நற்குணம், நற்சிந்தனை, நற்செயல் ஆகியவை விரும்பப்பட்ட போதிலும் ஒரு மனிதனால் அவை கூடாத விஷயங்களாயிருந்தால் அவன் செயல்பட இயலாததோர் அடிமையாயிருக்கின்றான் என்று அர்த்தம்.

நற்குணம், நற்செயல், நற்சிந்தனை ஆகியவற்றை செயல்படுத்த விடாமல் அடிமைப்படுத்தும் அந்த எஜமான் அல்லது முதலாளி யார் ? அந்த எஜமானை அடையாளங் கண்டாக வேண்டும்.

பாவம் என்றால் . . .

அதைத்தான் வேதாகமம் பாவம் என்று சொல்கிறது. (ரோமர்-7:17) எது

நல்லது என்று நம்பப்படுகிறதோ அந்த நம்பிக்கையைச் சார்ந்து செயல்பட முடியாமல் நாம் தடுக்கப்படுகிறோம் என்றால் நாம் அடிமைகளாயிருக்கின்றோம் என்று அர்த்தம். நம்மை அடிமைகளாக்கி செய்யத் தக்கவைகளைச் செய்ய விடாமல் செய்யும் எஜமானன்தான் பாவம்.

மனவலிமைகளும், அறநெறி அறிவு நிலைகளும், மதநம்பிக்கை சார்ந்த வழிபாடுகளும், இந்த அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவிக்க முடியாது. இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடையாமை மனித வாழ்வின் வேறெந்த பிரச்சினைகளை விட மிகப்பெரிய பிரச்சினை.

நற்சிந்தனை, நற்குணம், நற்செயல் ஆகிய யாவும் மனிதனுடைய இருதயம் தொடர்பான விஷயங்கள். இருதயம் பாவம் என்றதோர் தீய வலிமையின் ஆதிக்கத்தில் இருப்பதால் அந்த இருதயத்தினால் மேற்கண்டவைகளை செயல் படுத்த இயலவில்லை. எனவேதான் இந்த இருதயத்தை வேதம் எல்லாவற்றைப் பார்க்கிலும் திருக்குள்ளதும். மகா கேடுள்ளதுமாயிருக்கிறது என்று கூறுகிறது. (எரேமியா-17:9)

இப்படிப்பட்டதோர் இருதயம் எப்படி ஒரு மனிதனுடைய வாழ்க்கையை நலமற்றதாகவும், சுகமற்றதாகவும் மாற்றுகின்றது என்பதை நாம் அறிய வேண்டும். மனித வாழ்க்கையின் மிகப்பெரிய எதிரிகள் வேறும் யாரும் அல்ல. அவனுடைய இருதயத்திலிருந்து எழுந்து வரும் தவறான சிந்தனைகளும், தவறான குணங்களும் இருதயத்தால் தூண்டப்பட்டு நடந்து விடுகின்ற தவறான செயல்களுமே. இவற்றைப் போல ஒரு மனிதனுக்கு அதிக வேதனையையும், அமைதியின்மையையும், அளிக்கின்ற பெரிய எதிரிகள் கிடையாது.

எது பெரிய பிரச்சினை?

இப்படிப்பட்ட இருதயம் ஏற்படுத்தும் மூன்று விளைவுகளைக் கவனிப்போம். **முதலாவதாக** இந்த இருதயம் பாவம் என்ற தீய வல்லமையின் ஆளுகை யிலிருப்பதால் இதற்கு தேவனோடு எந்தத் தொடர்பும் இல்லை. இந்த இருதயம் தேவனை விட்டு நாம் தூரமாகப் போவதற்குக் காரணமாகிறது. **இரண்டாவது** இந்த இருதயம் பாவத்தின் ஆளுகையிலிருப்பதால் இதனுடைய செயல்பாடுகள் தாறுமா றானதாகயிருக்கும். பாவத்தின் ஆளுகையின் விளைவாக இந்த இருதயத்தின் செயல்பாடுகள் ஒழுங்குமுறை அற்றதாகவும், கட்டுப்பாடற்றதாகவும், சரியான பாதையில் செல்ல இயலாததாகவும் இருக்கும். **மூன்றாவதாக** இந்த இருதயத் தினை உடையவருக்குள் உண்மையான அமைதி இராது. இந்த இருதயத்தின் ஒழுங்கற்ற செயல்பாடுகளால் இவர் தொடர்பு கொள்ளும் மனிதர்களுக்கும் தொல்லைகள் பெருகும்.

இதுதான் பெரிய பிரச்சினை. இந்த பெரிய பிரச்சினையை கண்டுகொள்ளாம லும் இந்த பிரச்சனையிலிருந்து விடுபட வழிதேடாமலும் போகும் போது. பிரச்சினைகள் வேறெதுவும் இல்லாத வாழ்வு கூட ஒரு பிரச்சினையாக மாறி விடும். அநேகர் நற்சிந்தனைகள் இல்லாமையையும், நற்பண்புகள் இல்லா மையையும், நற்செயல்கள் இல்லாமையையும், பெரிய பிரச்சினைகளாக எண்ணாமைதான் வாழ்வில் பலவிதமான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இயலாமல் போகிறது.

பிரச்சினைகளின் அடிவேராக இருப்பவற்றைக் கவனியாமல் வேறு விதங்க ளில் எவ்வளவுதான் முயற்சிகளால் பல காரியங்களை சாதித்தாலும் பயனில்லை.

பொதுவாக மனிதர்கள் தங்களின் அடிப்படைப் பிரச்சினை என்ன வென்பதை அடையாளங்காணாமல் வேறு வழிகளில் தங்களைப் பிரச்சினை

களற்றவர்களாக மாற்றிக்கொள்ள மிகுதியாகப் பிரயாசப்படுகின்றனர். பணத்தால், பொருட்களின் நிறைவால், செல்வங்களின் பெருக்கத்தால், அறிவால், புத்திசாலித்தனத்தால் தங்களைச் சௌகரியமாக்கிக் கொள்ள விரும்புகின்றனர். ஆனாலும் அவற்றால் அவர்கள் தங்களைச் சௌகரியமாக்கிக் கொள்ள முடியவில்லை என்பதே உண்மை. வேதாகமக்கால மனிதனாகிய சாலொமோன் இராஜா அறிவு, ஞானம், செல்வம், அதிகாரம், அந்தஸ்து, பேர் புகழ், என நினைத்ததையெல்லாம் சாதிக்கும் திறன் என எல்லாவற்றையும் பெற்றிருந்தும் கூட இறுதியில் வாழ்வை மாயையாகவும், அர்த்தமற்றதாகவுமே கண்டு மனவிசனமடைந்தான். (பிரசங்கி 1:14)

மனிதன் அடையும் மிகுதியான துன்பங்களுக்கு பணம், பொருள், சரீர நலன் தொடர்பான காரியங்களைவிட, குணம், செயல், சிந்தனை போன்ற விஷயங்கள்தான் மிகப்பெரிய காரணங்களாக உள்ளன. மனித வாழ்வின் மிகப் பெரிய வேதனைகளுக்கெல்லாம் அவனிடம் நற்குணங்களும், நற்செயல்களும், நற்சிந்தனைகளும் குறைவுபடுவதுதான் மிக முக்கியமான காரணங்களாக உள்ளன.

கிறிஸ்தவத்தின் மிக முக்கிய நோக்கம்

எனவே நமக்கு மிகவும் நலமானதும் தேவையானதுமாக இருக்கிறதெதுவோ அவை நம்மிடம் செயல்பட இயலாமல் போவதுதான் அடிமைத்தனம். எனவே இருதயத்தை அடிமைப்படுத்தியிருக்கிற பாவம் என்ற அடிமைத்தனத்திலிருந்து வெளியே வருவதைத்தான் கிறிஸ்தவம் மிக முக்கியமான விஷயமாகக் காட்டுகிறது. பாவம் என்ற தீயவல்லமையின் விளைவான அடிமைத்தனத்திலிருந்து மனிதனை மீட்பதுதான் கிறிஸ்தவத்தின் மிக முக்கிய நோக்கமாயுள்ளது. மனித வாழ்வின் அனைத்துப் பிரச்சினைகளைவிட பாவம் தான் மனிதனைப் பாதிக்கும் மிகப் பெரிய பிரச்சினை என்று கிறிஸ்தவம் கோடிட்டுக் காட்டுகிறது. மனிதன் நற்குணங்களோடு வாழ இயன்றவனாக வேண்டும். அவன் நற்செயல்களை செயல்படுத்த முடிந்தவனாக வேண்டும். அவனை நல்ல சிந்தனைகள் ஆளுகை செய்ய முடிய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு மனிதனாகச் செயல்பட அவனுக்கு ஒரு விடுதலையைக் கொடுப்பதே கிறிஸ்தவத்தின் மிக முக்கியமான செய்தி. தேவனால் மனிதனுக்குக்



கிடைக்க வேண்டிய எல்லா நன்மை களைவிட, அவரால் கிடைக்கின்ற ஆத்தும விடுதலைதான் அவன் பெற வேண்டிய மிகப்பெரிய நன்மை என்பதை கிறிஸ்தவம் கோடிட்டுக் காட்டுகிறது.

இப்படிப்பட்ட ஒரு நன்மையைக் கொடுக்கத்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்தார். எனவேதான் பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார் என்று வேதம் சொல்கிறது. (1 தீமோத்தேயு-1:15) மனித வாழ்விற்குத் தேவையான எல்லா நன்மைகளையும் தேவன் தாம் பரலோகத்திலிருந்தவண்ணமே தம்முடைய சர்வ வல்லமையினால் அருள முடியும். ஆனால் மனிதனுக்கு மிக அவசியமான இரட்சிப்பு அல்லது பாவத்திலிருந்து விடுதலையைக் கொடுக்கவோ அவர் மனிதராக இந்த பூமிக்கு வந்து தம்முடைய இரத்தத்தை சிலுவையில் சிந்தி பாவ நிவாரணம் செய்ய வேண்டியது அவசியமாகியது. எனவேதான் இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருந்தால் தண்டனைக்கு எப்படி தப்பிக் கொள்வீர்கள் என்று தேவமனிதர் ஒருவர் வேதாகமத்தில் கேட்கின்றார். (எபிரேயர்-2:4)

ஆம். நம்மிடம் வசதிகள் இருக்கலாம். ஆனால் அன்பு, அமைதி, தாழ்மை, பொறுமை, சாந்தம், உண்மை, ஒழுக்கம், மனத்தூய்மை, சகிப்பாற்றல் போன்ற உயர்ந்த மனிதப் பண்புகள் இருக்கிறதா என்பதே முக்கியம். நாம் எவ்வளவு கற்றவர்கள். எவ்வளவு அறிவாளிகள் என்பதைவிட நம் முடைய இருதயம் எந்த அளவிற்கு உயர்ந்த சிந்தனைகளினாலும், சிறந்த எண்ணங்களினாலும் நிறைந்திருக்கிறது என்பதே மிக முக்கியம். நாம் உலகம் புகழும் சாதனையாளர்களாகவும் மிகப்பெரிய செயல்களை உடையவர் களாகவும் இருக்கலாம். ஆனால் நம்மிடம் நற்செயல்கள் என்பது எவ்வளவு என்பதே மிகமிக முக்கியமானவை.

ஆம் நமக்கு மிக அவசியமான இரட்சிப்பை அல்லது பாவவிடுதலையை இரட்சகராகிய இயேசுவிடமிருந்து பெற்றவர்களா என்பதே முக்கியம். அவ்விதம் பெற்றது உண்மையாயின் நாம் நற்குணங்களோடு வாழ இயலாதவர் களாகவோ, நற்செயல்கள் செய்திட முடியாதவர்களாகவோ, நற்சிந்தனைகளால் இருதயத்தை அழகாக வைத்திட முடியாதவர்களாகவோ இருக்கமாட்டோம்.

அடுத்த தியான நூல்

கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த வருடத்திற்கென்று புதிய தியான நூல் வெளியிடப்படும். இந்த தியான நூலுக்கு அடுத்தபடியாக வெளிவருகின்ற புதிய தியான நூலைப் பெற்றிட கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

SAMSON PAUL
126, Muthaya Mudaliar Street,
Puducherry - 605 003. Ph : 0413 - 2236042

இன்றைய கிறிஸ்தவ உலகத்தில்
இது முற்றிலும் வித்தியாசமானதோர் மாத இதழ்



ஆயிரக்கணக்கானோர்
விரும்பிப் படிக்கும்
ஜீவ நீரோடை
மாத இதழை வாசித்துப்
பயனடையுங்கள்.

சகோ. சாம்சன் பால்
எழுதிய புதிய புத்தகங்கள்,
கைப்பிரதிகள்,
பிரசங்க வி.சி.டிக்கள்,
தொலைக்காட்சி
நிகழ்ச்சிகள் மற்றும்
ஊழியங்கள் தொடர்பான
விபரங்களை மாத
இதழ் மூலமாக தெரிந்து
கொள்ளலாம். மாதிரி
பிரதிக்கு எழுதுங்கள்.



வருட சந்தா
₹. 150/-

ஆங்கிலத்திலும் வெளிவருகின்றது

LIVING STREAM

Editor : Samson Paul



An
inspiring
monthly magazine
in English from
Jeevaneerodai
ministries.

A Dynamic and practical guide to help you to live a successful and meaningful christian life

It is not
just one another
Christian magazine.
It will shape
and transforms
your lifestyle.

Annual Subscription
₹. 150/-

கிறிஸ்தவ வாழ்க்கையின் 7 தூண்கள்

இரட்சிப்பின் அனுபவம்

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பலவிதமான பக்தியான செயல்களைச் செய்வதில் அல்ல. முதலாவது இரட்சிப்பின் அனுபவம் பெற வேண்டும். பாவம் செய்து கொண்டே பக்தியாகவும் பல காரியங்களைச் செய்ய முடியும். பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட அனுபவம் இருந்தால்தான் தேவனுக்குப் பிரியமாகச் செயல்பட முடியும். இயற்கையாகப் பாவம் செய்கிற அல்லது தேவனுடைய விருப்பங்களுக்கு எதிராகச் செயல்படுகின்ற ஒரு இயற்கை நம்மிடம் உள்ளது. அவ்விதம் பாவம் செய்யாமல் வாழ்வதற்கு அந்தப் பாவத்தின் வலிமையிலிருந்து இரட்சிப்பு அல்லது விடுதலை தேவை. நம்மை பாவத்திலிருந்து இரட்சிப்பது நம்மிடம் இயேசு செய்ய விரும்பும் முதலாவது முக்கியமான பணி. நான் இரட்சிக்கப்பட்டவன் என்ற நிச்சயமான அனுபவம்தான் உண்மையான இறை வாழ்க்கையினைத் தாங்கும் முதலாவது முக்கியமான தூணாக விளங்குகிறது.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். (1 தீமோ–1:15)

தேவ உறவின் அனுபவம்

கிறிஸ்தவ வாழ்க்கை அல்லது ஆவிக்குரிய வாழ்க்கை என்பது கடவுளை வழிபடுவதோடும் ஆராதிப்பதோடும், நிறைவடைவதில்லை. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது இறை உறவுடன் வாழ்வது ஆகும். நாம் பக்தியாய் வாழ்கின்றோம் என்பதல்ல. நாம் தேவ உறவுடன் வாழ்கின்றோம் என்பதே முக்கியம். கர்த்தர் ஆராதனைக்குரியவர் என்பதும் மகா கனத்திற்குரியர் என்பதும் உண்மை. ஆயினும் நாம் பிரதானமாக கிறிஸ்துவை வழிபடவோ, ஆராதிக்கவோ அல்ல. அவரோடு ஐக்கியமாயிருக்கவே அழைக்கப்படுகிறோம். (1 கொரிந்தியர்-1:9) நாம் தேவ பக்தர்களாக அல்ல, தேவ பிள்ளைகளாக வாழ்வதற்கு அழைக்கப்படுகின் றோம். (யோவான்-1:12) எனவே வெறும் பக்தியுடன் வாழ்வதில் அல்ல அனுதினம் தேவ உறவிலும் அன்பிலும் வாழ்கின்ற அனுபவத்தைத் தேட வேண்டும். அவருடைய அன்பை, உறவை, ஐக்கியத்தை, அனுதினம் தேடுகின்ற ஆவிக்குரிய அனுபவம் கிறிஸ்தவ வாழ்க்கையைத் தாங்குகின்ற முக்கியமான தூணாகும்.

ஜெப அனுபவம்

கிறிஸ்தவ வாழ்க்கையை உயிரோட்டமுள்ளதாகவும். செயல்படுகின்ற ஒன்றா கவும் நிறுத்துவது ஜெப அனுபவமே. ஜெபம் என்றால் தேவனோடு பேசுவதும், மனதில் உள்ளதைப் பகிர்ந்து கொள்ளுதலுமே. பக்தியாய் வாழ்ந்திட ஆன்மீகச் செயல்களைச் செய்தால் போதும். தேவ உறவில் வாழ்ந்திடவோ பேச்சு வார்த்தை கள் வேண்டும். நாம் தினமும் அதிகமான நேரங்கள் தேவ சமுகத்தில் மனம்விட்டுப் பேச வேண்டும். தேவனோடு எவ்வளவு அதிகமாக பேசுகின்றோமோ அந்த அளவிற்குதான் தேவ உறவை நமக்குள் அடையாளம் காணமுடியும். அந்த அளவிற்குதான் தேவபலம் நம்மிடம் செயல்படும். ஜெப வாழ்க்கையில் நாம் வலிமையாக இல்லாவிட்டால் ஆவிக்குரிய வாழ்வில் நாம் பலமுடையவர்களாக விளங்க முடியாது. தேவ உறவையும் நமக்குள் அடையாளம் காண முடியாது.

அவரோ வனாந்தரத்தில் தனித்துக் போய் ஜெபம் பண்ணிக் கொண்டி ருந்தார். (லூக்கா-5:16)

சுய பரிசோதனை

பலவிதமான பக்திச் செயல்களோடு நம்மை இணைத்துக் கொண்டு நாம் வாழும்போது நமக்குள் ஆவிக்குரிய திருப்தி ஏற்படலாம். ஆயினும் அவ்வப் பொழுது நம்மை நமக்குள் தற்பரிசோதனை செய்து பார்த்தால்தான் நம்முடைய பலத்தையும், பலவீனத்தையும் அறிய முடியும். சபை கூடிவரும் இடங்களில் நாம் உண்மையாக நம்மை தற்பரிசோதனை செய்து அறிவது கடினம். நாம் தனித் திருந்து நம்மை தேவசமுகத்தில் சோதிக்க வேண்டும். நம்முடைய குறைநிறைகளை நாம் கவனிக்க வேண்டும். நம்மிடம் இல்லாதவைகளை அறிந்துணரும் வாய்ப்பு பெற்றால்தான் அவற்றை தேவனிடமிருந்து பெற முடியும். வேத வெளிச்சத்தில் நம்முடைய குணங்களையும், செயல் களையும், மனநிலைகளையும் உற்றுக்கவனித்தால்தான் நம்முடைய நிலைமையை நாம் அறிய முடியும். இந்த அனுபவம் பரிசுத்த வாழ்க்கையின் முக்கியமானதோர் தூணாகும்.

தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும். (சங்கீதம்-139:23)

சாட்சி வாழ்க்கை

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கிறிஸ்துவை ஆராதிக்கின்ற வாழ்க்கை அல்ல, கிறிஸ்துவை நாம் வாழ்கின்ற விதத்தினால் பிரதிபலிக்கின்ற வாழ்க்கை ஆகும். ஜெபம், வேத வாசிப்பு, ஆராதனை, காணிக்கை, தேவ ஊழியம், கிறிஸ்தவ மார்க்க பக்தி என நாம் நமக்கு பல அடையாளங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆயினும் கிறிஸ்துவின் மகிமையான நிலையை நாம் நம்முடைய குணங்களாலும், செயல்களாலும், நல்ல மனநிலைகளாலும், ஒழுக்கமான ஓர் வாழ்க்கை முறையி னாலும் பிறர் அறியச் செய்யாவிட்டால் அது பிரயோஜனமற்றது. நாம் நல்லதோர் வாழ்க்கைக்கு முன்மாதிரிகளாக வாழ்ந்து காட்டாவிட்டால் கிறிஸ்தவ வாழ்க்கை அர்த்தமற்றது. தேவ உறவில் வாழ அழைக்கப்பட்ட நாம் அந்த உறவின் தாக்கங் களை நம்முடைய வாழ்க்கைமுறையின் மூலமாக பிறர் அறியச் செய்ய வேண்டும்.

மனுஷர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தேயு-5:16)

கனிதரும் அனுபவம்

கிறிஸ்தவம் கனிதருகின்ற அனுபவத்தை குறித்து அதிகமாகப் பேசுகின்றது. ஒரு மரத்தில் நல்ல கனிகள் இருந்தால் பலர் அதனால் பயனடைய முடியும். நம்முடைய வாழ்க்கை நமக்கு மட்டுமே பயனுள்ளதாயிராமல் பிறருக்கும் பயனுள்ளதாயிருப்பதே கனிதரும் அனுபவம். நம்முடைய நற்குணங்கள் மிகுந்த நல்ல வாழ்க்கைதான் பிறருக்கு அதிகமான பயன்களைத் தருகின்றவை. அதே வேளையில் செயல் சார்ந்த பயன்பாடுகளும் வேண்டும். அன்பு, இரக்கம், தயவு ஆகிய கிறிஸ்தவப் பண்புகள் மற்றவர்களுக்கு சில உதவிகளைக் கொண்டு செல்ல வேண்டும். நம்மால் மற்றவர்களுக்கு சில நன்மைகள். ஏற்பட வேண்டும். நாம் வாழ்வதால் பிறர் பயனடைய வேண்டும் என்ற சிந்தை கிறிஸ்தவ வாழ்க்கை யின் முக்கியமானதோர் தூண் ஆகும்.

நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக் கடவோம். (கலாத்தியர்-6:10)

ஊழியம் செய்யும் அனுபவம்

கிறிஸ்தவ வாழ்க்கை கிறிஸ்துவினால் பயனடைகின்ற ஒரு வாழ்க்கை ஆகும். ஆனால் நாம் பயனடைகிறவர்களாக மட்டுமல்ல. கிறிஸ்துவுக்குப் பயன்படுகின்ற வர்களாகவும் விளங்க வேண்டும். இந்தப் பூமியில் இயேசு கிறிஸ்துவினால் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்வைப்பெற்ற எவரும் அவருடைய கரத்தின் கருவிகளாகச் செயல்பட வேண்டிய கடமை உள்ளவர்களே. பாஸ்டர்களாக, சுவிசேஷகர்களாக செயல்படுவது மட்டுமே தேவ ஊழியம் அல்ல. கர்த்தர் பல்வேறு விதங்களில் நம்மை அவருடைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியும். அவருடைய கரத்தினால் பயன்படுத்தப்படும் ஒரு பாத்திரமாக நாம் இருக்க வேண்டும் என்று விரும்பிச் செயல்படும் ஒரு அனுபவம் கி றிஸ்தவ வாழ்வை உயர்ந்து நிற்க உதவுகின்ற வலிமையானதோர் தூண் ஆகும்.

ஆவியிலே அனலாயிருங்கள் கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள். (ரோமர்-12:11)

ஓராண்டிற்குள் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்கும் திட்டம்

ஜனவரி

	காலை	மாலை
	மத்தேயு	ஆதி
1	1	1–3
2	2	4–6
3	3	7–9
4	4	10–12
5	5:1–26	13–15
6	5:27–48	16, 17
7	6:1–18	18, 19
8	6:19–34	20–22
9	7	23, 24
10	8:1–17	25, 26
11	8:18–17	27, 28
12	9:1–17	29, 30
13	9:18–38	31, 32
14	10:1–20	33–35
15	10:21–42	36–38
16	11	39, 40
17	12:1–23	41, 42
18	12:24–50	43–45
19	13:1–30	46–48
20	13:31–58	49, 50
		யாத்
21	14:1–21	1, 2, 3
22	14:22–36	4, 5, 6
23	15:1–20	6, 8
24	15:21–39	9–11
25	16	12, 13
26	17	14, 15
27	18:1–20	16–18
28	18:21–35	19, 20
29	19	21, 22
30	20:1–16	23, 24
31	20:17–34	25, 26

பிப்ரவரி

	காலை	மாலை
	மத்தேயு	யாத்
1	21:1–22	27, 28
2	21:23–46	29, 30
3	22:1–22	31–33
4	22:23–46	34, 35
5	23:1–22	36–38
6	23:23–39	39, 40
		லேவி
7	24:1–28	1–3
8	24:29–51	4, 5
9	25:1–30	6, 7
10	25:31–46	8–10
11	26:1–25	11, 12
12	26:26–50	13
13	26:51–75	14
14	27:1–26	15, 16
15	27:27–50	17, 18
16	27:51–66	19, 20
17	28	21, 22
	மாற்கு	
18	1:1–22	23, 24
19	1:23–45	25
20	2	26, 27
		எண்
21	3:1–19	1, 2
22	3:20–335	3, 4
23	4:1–20	5, 6
24	4:21–41	7, 8
25	5:1–20	9–11
26	5:21–43	12–14
27	6:1–29	15, 16
28	6:30–56	17–19
29	7:1–13	20–22

மார்ச்

	காலை	மாலை
	மாற்கு	எண்
1	7:14–37	23–25
2	8:1–21	26, 27
3	8:22–38	28–30
4	9:1–29	31–33
5	9:30–50	34–36
		உபா
6	10:1–31	1, 2
7	10:31–52	3, 4
8	11:1–18	5–7
9	11:19–33	8–10
10	12:1–27	11–13
11	12:28–44	14–16
12	13:1–20	17–19
13	13:21–37	20–22
14	14:1–26	23–25
15	14:27–53	26, 27
16	14:54–72	28, 29
17	15:1–25	30, 31
18	15:26–47	32–34
		யோசுவா
19	16	1–3
	லூக்கா	
20	1:1–20	4–6
21	1:21–38	7–9
22	1:39–56	10–12
23	1:57–80	13–15
24	2:1–2	16–18
25	2:25–52	19–21
26	3	22–24
		நியா
27	4:1–30	1–3
28	4:31–44	4–6
29	5:1–16	7, 8
30	5:17–39	9, 10
31	6:1–26	11, 12

ஏப்ரல்

	காலை	மாலை
	லூக்கா	நியா
1	6:27–49	13–15
2	7:1–30	16–18
3	7:31–50	19–21
4	8:1–25	ரூத்
		1 சாமு
5	8:26–56	1–3
6	9:1–17	4–6
7	9:18–36	7–9
8	9:37–62	10–12
9	10:1–24	13, 14
10	10:25–42	15, 16
11	11:1–28	17, 18
12	11:29–54	19–21
13	12:1–31	22–24
14	12:32–59	25, 26
15	13:1–22	27–29
16	13:23–35	30, 31
		2 சாமு
17	14:1–24	1, 2
18	14:25–35	3–5
19	15:1–10	6–8
20	15:11–32	9–11

21	16	12, 13
22	17:1–19	14, 15
23	17:20–37	16–18
24	18:1–23	19, 20
25	18:24–43	21, 22
26	19:1–27	23, 24
		1 இரா
27	19:28–48	1, 2
28	20:1–26	3–5
29	20:27–47	6, 7
30	21:1–19	8, 9

மே

	காலை	மாலை
	லூக்கா	1 இரா
1	21:20–38	10, 11
2	22:1–20	12, 13
3	22:21–46	14, 15
4	22:47–71	16–18
5	23:1–25	19, 20
6	23:26–56	21, 22
		2 இரா
7	24:1–35	1–3
8	24:36–53	4–6
	யோவான்	
9	1:1–28	7, 8, 9
10	1:29–51	10–12
11	2	13, 14
12	3:1–18	15, 16
13	3:19–38	17, 18
14	4:1–30	19–21
15	4:31–54	22, 23
16	5:1–24	24, 25
		1 நாளா
17	5:25–47	1–3
18	6:1–21	4–6
19	6:22–44	7–9
20	6:45–71	13–15
21	7:1–27	13–15
22	7:28–53	16–18
23	8:1–27	19–21
24	8:28–59	22–24
25	9:1–23	25–27
26	9:24–41	28, 29
		2 நாளா
27	10:1–23	1–3
28	10:24–42	4–6
29	11:1–29	7–9
30	11:30–57	10–12
31	12:1–26	13, 14

ஜூன்

	காலை	மாலை
	யோவான்	2 நாளா
1	12:27–50	15, 16
2	13:1–20	17, 18
3	13:21–38	19, 20
4	14	21, 22
5	15	23, 24
6	16	25–27
7	17	28, 29
8	18:1–18	30, 31
9	18:19–40	32, 33
10	19:1–22	34–36
		எஸ்றா
11	19:23–42	1, 2
12	20	3–5
13	21	6–8
	அப்	
14	1	9, 10
		நெகே
15	2:1–21	1–3
16	2:22–47	4–6
17	3	7–9
18	4:1–22	10, 11
19	4:23–37	12, 13
		எஸ்தர்
20	5:1–21	1, 2
21	5:22–42	3–5
22	6	6–8
23	7:1–21	9, 10
		யோபு
24	7:22–43	1, 2
25	7:44–60	3, 4
26	8:1–25	5–7
27	8:26–40	8–10
28	9:1–21	11–13
29	9:22–43	14–16
30	10:1–23	17–19

ஜூலை

	காலை	மாலை
	அப்	யோபு
1	10:24–48	20, 21
2	11	22–24
3	12	25–27
4	13:1–25	28, 29
5	13:26–52	30, 31
6	14	32, 33
7	15:1–21	34, 35 8
8	15:22–41	36, 37
9	16:1–21	38–40
10	16:22–40	41, 42
		சங்கீதம்
11	17:1–15	1–3
12	17:16–34	4–6
13	18	7–9
14	19:1–20	10–12
15	19:21–41	13–15
16	20:1–16	16, 17
17	20:17–38	18, 19
18	21:1–17	20–22
19	21:18–40	23–25
20	22	26–28
21	23:1–15	29, 30
22	23:16–35	31, 32
23	24	33, 34
24	25	35, 36
25	26	37–39
26	27:1–26	40–42
27	27:27–44	43–45
28	28	46–48
	ரோமர்	
29	1	49, 50
30	2	51–53
31	3	54–56

ஆகஸ்டு

	காலை	மாலை
	ரோமர்	சங்கீதம்
1	4	57–59
2	5	60–62
3	6	63–65
4	7	66–67
5	8:1–21	68, 69
6	8:22–39	70, 71
7	9:1–15	72, 73
8	9:16–33	74–76
9	10	77, 78
10	11:1–18	79, 80
11	11:19–36	81–83
12	12	84–86
13	13	87, 88
14	14	89, 90
15	15:1–13	91–93
16	15:14–33	94–96
17	16	97–99
	1 கொரி	
18	1	100–102
19	2	103, 104
20	3	105, 106
21	4	107–109

22	5	110–112
23	6	113–115
24	7:1–19	116–118
25	7:20–40	119:1–88
26	8	119:89–176
27	9	120–122
28	10:1–18	123–125
29	10:19–33	126–128
30	11:1–16	129–131
31	11:17–34	132–134

செப்டம்பர்

	காலை	மாலை
	1 கொரி	சங்கீதம்
1	12	135, 136
2	13	137–139
3	14:1–20	140–142
4	14:21–40	143–145
5	15:1–28	146, 147
6	15:29–58	148–150
		நீதி
7	16	1, 2
	2 கொரி	
8	1	3–5
9	2	6, 7
10	3	8, 9
11	4	10–12
12	5	13–15
13	6	16–18
14	7	19–21
15	8	22–24
16	9	25, 26
17	10	27–29
18	11:1–15	30, 31
		பிரசங்கி
19	11:16–33	1–3
20	12	4–6
21	13	7–9
	கலாத்தியர்	
22	1	10–12
		உன்
23	2	1–3
24	3	4, 5
25	4	6–8
		ஏசாயா
26	5	1, 2
27	6	3, 4
	எபேசியர்	
28	1	5, 6
29	2	7, 8
30	3	9, 10

அக்டோபர்

	காலை	மாலை
	எபேசியர்	ஏசாயா
1	4	11–13
2	5:1–16	14–16
3	5:17–33	17–19
4	6	20–22
	பிலிப்பியர்	
5	1	23–25
6	2	26, 27
7	3	28, 29
8	4	30, 31
	கொலோ	
9	1	32, 33
10	2	34–36
11	3	37, 38
12	4	39, 40
	1 தெச	
13	1	41, 42
14	2	43, 44
15	3	45, 46
16	4	47–49
17	5	50–52
	2 தெச	
18	1	53–55
19	2	56–58
20	3	59–61
	1 தீமோ	
21	1	62–64
22	2	65, 66
		எரே
23	3	1, 2
24	4	3–5
25	5	6–8
26	6	9–11
	2 தீமோ	
27	1	12–14
28	2	15–17
29	3	18, 19
30	4	20, 21
	தீத்து	
31	1	22, 23

நவம்பர்

	காலை	மாலை
	தீத்து	எரேமியா
1	2	24–26
2	3	27–29
3	பிலேமோன்	30, 31
	எபிரேயர்	
4	1	32, 33
5	2	34–36
6	3	37–39
7	4	40–42
8	5	43–45
9	6	46, 47
10	7	48, 49
11	8	50
12	9	51, 52
		புலம்பல்
13	10:1–18	1, 2
14	10:19–39	3–5
		எசேக்
15	11:1–19	1, 2
16	11:20–40	3, 4
17	12	5–7
18	13	8–10
	யாக்கோபு	
19	1	11–13
20	2	14, 15
21	3	16, 17
22	4	18, 19
23	5	20, 21
	1 பேதுரு	
24	1	22, 23
25	2	24–26
26	3	27–29
27	4	30–32
28	5	33, 34
	2 பேதுரு	
29	1	335, 36
30	2	37–39

டிசம்பர்

	காலை	மாலை
	2 பேதுரு	எசேக்
1	3	40, 41
	1 யோவான்	
2	1	42–44
3	2	45, 46
4	3	47, 48
		தானியேல்
5	4	1, 2
6	5	3, 4
7	2யோவான்	5–7
8	3யோவான்	8–10
9	யூதா	11, 12
	வெளி	ஓசியா
10	1	1–4
11	2	5–8
12	3	9–11
13	4	12–14
14	5	யோவேல்
		ஆமோஸ்
15	6	1–3
16	7	4–6
17	8	7–9
18	9	ஒபதியா
19	10	யோனா
		மீகா
20	11	1, 2, 3
21	12	4, 5
22	13	6, 7
23	14	நாகூம்
24	15	ஆபகூக்
25	16	செப்பனியா
26	17	ஆகாய்
		சகரியா
27	18	1–4
28	19	5–8
29	20	9–12
30	21	13, 14
31	22	மல்கியா

சகோ. சாம்சன் பால் எழுதிய
தமிழ் தினசரி தியான நூல்கள்



SAMSON PAUL'S
OTHER
DAILY DEVOTIONAL BOOKS IN ENGLISH

















கருப்பொருள் அட்டவணை

கருப்பொருள்	பக்கம்
அன்பு	
❖ அன்பின் ஐக்கியம்	48
❖ மனிதருக்கு அன்பு	70
❖ அன்பை அறியச் செய்தல்	113
❖ சிந்தையில் அன்பு	133
❖ அன்புத் தாகம்	139
❖ அன்பும் - பரிதாப உணர்வும்	180
❖ அன்பிற்கு தகுதி	182
❖ மனதுருக்கமும், மன இறுக்கமும்	196
❖ அன்பும் தீர்மானமும்	221
❖ அன்பும் வார்த்தையும்	276
❖ அன்பின் அடையாளங்கள்	309
❖ உண்மை அன்பு	340
❖ அன்பு இல்லாத பரிசுத்தம்	372
❖ அன்பும், மரியாதையும்	390
ஆசீர்வாதங்கள்	
❖ பரிபூரண நன்மை எங்கே?	71
❖ கொஞ்சத்தை	102
❖ உள்ளே ஆசீர்வாதம்	165
❖ தேவையா, ஆசையா?	185
❖ ஆசீர்வாதத் தகுதி	247
❖ சவக்கடல்	368
❖ பொருளாதார ஆசீர்வாதம்	35
ஆராதனை	
❖ ஆராதனையும் வாழ்க்கையும்	96
❖ ஆராதனையின் அடுத்த பக்கம்	228
❖ வெறும் புகழ்ச்சி	384
ஆறுதல்	
❖ தேவன் எதையோ தந்திருக்கிறார்.	63
❖ அவர் சுமப்பார்	208
❖ ஆறுதலின் ஒரே வழி	238
❖ பலப்படுத்தும் துன்பங்கள்	265
❖ தீமையும் நன்மையாக	330
❖ செயல்பட வேண்டும்	331
❖ ஸ்தோத்திரம்	393
❖ பயணத்தில் துணை	38
ஆத்ம பரிசோதனை	
❖ மருத்துவர் சோதிக்கட்டும்	80
❖ காரணம் யார் ?	172
❖ ஆராய்தல் அவசியம்	189
❖ சரியாகக் காண்பிக்கும் வெளிச்சம்	231
❖ இது சரியா?	281
❖ தேவன் பேசினால்...	320
❖ உகந்தவைதானா ?	223
இறை அனுபவம்	
❖ இன்னும் இன்னும் வளர வேண்டும்	95
❖ உள்ளே கிரியை	129
❖ கோபம் மட்டுமல்ல	134
❖ தேவனின் பாராட்டு	136
❖ அற்புதம் எப்போது?	161
❖ தேவன் அன்பானவரா ?	215
❖ கோட்பாடுகளும் அனுபவமும்	289
❖ அறிவு மட்டும் போதுமா !	318
❖ வசதியிருந்தும் வறுமை	339
❖ அறிவும் அனுபவமும்	354
❖ அஸ்திபாரம்	385
இதய நிலைமை	
❖ கசப்பை மறப்போம்	74
❖ முறுமுறுக்காமல்	114
❖ உள்ளான அழகு	115
❖ நல்ல இருதயம் வேண்டும்	128
❖ நல்லவரிடம் கண்டகுறை	209
❖ இருதயத்தின் தரம்	260
❖ பழைய ஆவி?	283
இரட்சிப்பு	
❖ இருதயமா, தாலந்தா	56
❖ ஆர்வம் எப்பொழுது	89
❖ யார் கெட்டவர்கள்?	202

கருப்பொருள்	பக்கம்	கருப்பொருள்	பக்கம்
✣ இரட்சிப்பே சுமையா ?	242	✣ போலி கிறிஸ்தவம்	303
✣ குறிக்கோள்	308	✣ விடுதலை எப்படி?	325
இதய அமைதி		✣ வெள்ளை நிற அடிமைத்தனம்	356
✣ இறைநட்பும் அமைதியும்	32	✣ சிறு குறைவு	389
✣ அமைதி, ஆனந்தம்	93	**கண்டிப்பு**	
✣ வேகத்தைக் குறைக்கும் பாரம்	163	✣ முகஸ்துதி	155
✣ அவருக்கு அக்கரையில்லையா?	200	✣ தவறு எங்கிருந்தாலும்	206
✣ சமாதானம் எப்போது ?	261	✣ ஏன் இந்த முரட்டுத்தன்மை?	293
இலக்கு		**கனி கொடுத்தல்**	
✣ தேடல் தேவை	84	✣ நல்லவைகள் இருந்தும்	52
✣ மாற்று வழி	212	✣ பிறருக்குப் பயன்	386
✣ ஆசீர்வாதம் இலக்கானால் !	255	✣ மிகுந்த கனி	55
உலகம்		**காலங்கள்**	
✣ ஆபரணங்கள்	87	✣ பொன்னான நேரம்	33
✣ எது சரி ?	164	✣ நாளைக்கு அல்ல இன்று	272
✣ அதிக சௌகரியம்	237	✣ விலைமிக்கது நேரம்	307
✣ சௌகரிய நிலை	343	✣ ஒரே ஒரு நாள்	336
✣ எதனால் பயன்பட?	358	✣ தூக்கமும் ஆன்மீகமும்	344
உறவுகள்		**காணிக்கை**	
✣ மனித உறவு	249	✣ காணிக்கையா, லஞ்சமா?	101
✣ இருளை விட்டு ஓடாமல்	295	✣ காணிக்கையும் அர்ப்பணிப்பும்	143
உண்மை		✣ பிறரைப் பார்த்து	259
✣ நேரடியாக	132	**கிறிஸ்தவ வாழ்க்கை**	
✣ உண்மையின் உயர்வு	147	✣ வெறும் வைராக்கியம்	98
✣ தேவனிடத்திலிருந்து பலன்	194	✣ நண்பர்களாய் பிரிவோம்	157
✣ மதிப்பு என்றால் என்ன?	262	✣ வாழ்வது யாருக்காக ?	170
✣ உண்மையினால் உயர்வு	269	✣ இனிமையும் தரமும்	201
✣ உண்மையான உணர்ச்சியா?	304	✣ உண்மையான ஆன்மீகம்	210
✣ மூலதனம்	383	✣ சரியான சூழ்நிலைகள்	285
ஊழியம்		✣ எப்படி வாழ வேண்டும் ?	297
✣ ஊழியத்திற்குச் செல்லலாமா?	357	✣ மூடி மறைத்தல்	353
✣ சுவிசேஷகன்	359	✣ சுத்தம் ஒழுங்கு	378
எச்சரிக்கை		**கீழ்ப்படிவு**	
✣ இன்றே செயல்படு	110	✣ இசைந்து நடப்போம்	192
✣ அவர் ஏன் வீழ்ந்தார்?	181	✣ யாருக்காகச் செய்கின்றீர்கள் ?	248
✣ போனால் வராது	184		

கருப்பொருள்	பக்கம்
❖ கீழ்ப்படிவா, அன்பா?	279
❖ கீழ்படிதல் எப்படி?	348
கீழ்ப்படிதல்	
❖ நல்ல நாட்களில்	77
குடும்பம்	
❖ குடும்ப வாழ்வு	42
❖ பயன்தராத நியாயங்கள்	219
❖ பிள்ளைகள்	226
❖ நல்ல கணவன்	280
❖ மற்றவர்களின் சுவை	321
சத்தியம்	
❖ யார் வழி?	105
❖ குப்பைக் கூடையில்	130
❖ தவறைக் கண்டி	131
❖ சத்தியம் வற்புறுத்தும்	154
❖ நல்லதை ஏற்போம்	179
❖ சத்திய ஆர்வம்	195
❖ சத்தியம்	229
❖ குறை கூறுவது பாவமா ?	254
❖ சத்திய பசி	264
❖ உண்மையை அறிந்தால்	290
❖ சத்தியம் தேவையில்லை	319
சந்தோஷம்	
❖ பரலோக சந்தோஷம்	144
❖ சந்தோஷம்	214
❖ மகிழ்ச்சியின் ரகசியம்	253
❖ கர்த்தருக்குள் மகிழ்ச்சி	288
❖ மகிழ்ச்சியின் வழி	317
❖ மகிழ்ச்சி எப்படி?	323
❖ கிறிஸ்தவமும், சந்தோஷமும்	364
சடங்காச்சாரம்	
❖ கொண்டாட்டக் கிறிஸ்தவம்	117
❖ எது பக்தி?	118
❖ 40 நாள் டிராமா	119
❖ அது என்ன ?	135
❖ கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்	388
சாட்சி வாழ்க்கை	
❖ வாழ்க்கை பேசணும்	138
❖ நற்சிந்தனைகள்	168
❖ கடினமானவை - ஆனால்	227
❖ பிறர் பார்க்கணும்	301
❖ எதிர்பார்ப்பு	314
❖ அதிக எதிர்பார்ப்பு	342
சிலுவை	
❖ வீண் பக்தி	120
❖ சிலுவை புனிதமா?	121
❖ சிலுவைகள் ஏன்?	123
❖ சிலுவையை புரிந்து கொள்தல்	250
சுயம்	
❖ சின்ன விஷயங்களில்	230
❖ முந்திச் செல்லாதே	64
❖ தவறான மனநிலை	300
செயல்படுதல்	
❖ கொஞ்சம் ஆற்றல்	82
❖ இது முடியுமா?	106
❖ மனதை ஈடுபடுத்தி	137
❖ ஏன் முயற்சிக்கவில்லை ?	252
❖ துவக்கமும் முடிவும்	267
❖ ஆயத்தமாவோம்	394
சோதனைகள்	
❖ பலப்படுத்தும் சோதனை	57
❖ சோதனையின் நடுவில்	125
❖ போராட்டங்கள் சகஜம்	150
❖ சிகிட்சையின் வேதனை	173
❖ தண்டனையா ?	232
❖ மிகப் பெரிய சோதனை	251
❖ பிரச்சினைகள்	387
❖ போர் வீரன்	392
தடைகள்	
❖ ஆசீர்வாதத்தடை	94
❖ ஆசீர்வாதமும் தடைகள்	188
❖ சூழ்நிலை தடையல்ல	292
தாழ்மை	
❖ தாழ்மையும், உயர்வும்	47
❖ பெருமையின் வடிவம்	72

கருப்பொருள்	பக்கம்
✣ பரிசுத்தம் தரும் தாழ்மை	211
✣ இரண்டு வகைத் தாழ்மை	298
✣ எது நற்குணம்?	352
✣ நல்லதை ஏற்போம்	375
துன்பங்கள்	
✣ துன்ப வேளையில் 3 கேள்விகள்	40
✣ துன்பங்களின் காரணம்	126
✣ தேவையின் அழுத்தம்	322
தேவ உறவு	
✣ வேலையாள் அல்ல, பிள்ளை	61
✣ இறை உறவில்	85
✣ பிரிக்க இயலாதது	127
✣ பின்வாங்க முடியாது	223
✣ தேவ உறவின் வாழ்க்கை	199
✣ தேவ நட்பு	217
✣ அவரோடு நிற்போம்	311
தேவ அன்பு	
✣ அன்பும் சுவையும்	46
✣ அன்பினால் விருப்பம்	140
✣ தேவன் அன்பானவரா?	299
தேவ சித்தம்	
✣ ஏவுதல் தேவையா ?	257
✣ பிரதான நோக்கம்	263
✣ பரிசுத்த நிறைவை நோக்கி	337
தேவனின் கட்டளைகள்	
✣ வாஞ்சை	86
✣ சுதந்திரம்	345
தேவ பிரசன்னம்	
✣ தேவாலயம் எங்கே?	54
✣ பிரதிஷ்டை	302
✣ அதிக பயம் ஏன்?	326
தேவ ஐக்கியம்	
✣ தேவன் தங்குமிடம்	162
✣ நெருங்க நெருங்க	222
✣ ஆலயம் எங்கே ?	233
✣ தேவ ஐக்கியம்	236

கருப்பொருள்	பக்கம்
தேவனை அறிதல்	
✣ தேவன் அறியப்பட	45
✣ நீங்களும் தரிசிக்கலாம்	124
✣ கர்த்தர் நல்லவர்	216
✣ அவர் எப்படிப்பட்டவர் ?	225
✣ தேவன் நல்லவர் ஆனால்...	291
தேவ வல்லமை	
✣ தேவ உறவினால் வல்லமை	50
✣ வல்லமை எப்படி வரும் ?	244
✣ வல்லமை	360
தேவ திட்டம்	
✣ தேவனின் திட்டம்	37
✣ தேவ உறவின் நோக்கம்	53
✣ தேவனுடைய கருவி	142
தேவனுக்கு கனம்	
✣ உண்மையான கனம்	39
✣ தேவன் மகிமைப்பட	88
✣ வெறும் மரியாதை	166
✣ அன்பும், மரியாதையும்	380
தேவ பக்தி	
✣ தவறான பக்தி	66
✣ தேவ பக்தி எதற்காக?	73
✣ அர்த்தம் தெரியாதா?	109
✣ அறிவு அலட்சியம் செய்யப்படுகிறது	207
தேவவார்த்தை	
✣ சுவைக்கேற்ற போதனைகள்	69
✣ அதிகநேர பிரசங்கம்	146
✣ செயற்கை உரம்	205
தேவனை தேடுதல்	
✣ முக்கியமான தேவை	79
✣ படித்தலும் சிந்தித்தலும்	305
நம்பிக்கை	
✣ புதிய காரியம்	59
✣ வார்த்தை தரும் நம்பிக்கை	158
✣ மனிதரைக் கடவுளாய்	224
✣ நான் நம்பவில்லை	266
✣ சிறு தோல்விகள்	274

கருப்பொருள்	பக்கம்
❖ தனிமை ஏன்?	286
❖ கப்பல் உடைந்தாலும்	367
நற்குணங்கள்	
❖ நல்ல செயலும், குணமும்	104
❖ பரிசுத்தவான்கள் எங்கே?	193
❖ மறைக்கப்பட்ட கோபம்	268
❖ நற்குணக் கவர்ச்சி	282
❖ பரிசுத்தம் தேடுவோம்	349
❖ குணங்கள் ஏன் மாறவில்லை?	374
நன்மை செய்தல்	
❖ நன்மைக்குச் சாட்சி	62
❖ கொடுப்பதில் சந்தோஷம்	78
❖ சுனாமி	90
❖ உதவியும் சந்தோஷமும்	112
❖ நமக்கு நல்லது	148
❖ ஒரு தாலந்து	284
❖ இரங்கும் குணம்	332
❖ துன்பத்தைக் கண்டவர்கள்	361
❖ நன்மை செய்ய வேண்டும்	370
நிலைப்பாடுகள்	
❖ நஷ்டம் நமக்கே	81
❖ நல்ல பழக்கம்	111
❖ மன உறுத்தல் இருந்தும்	213
❖ உயர்ந்து நிற்போம்	329
நித்திய வாழ்வு	
❖ வாடகை வீடு	159
❖ தகப்பனின் தரிசனம்	296
பரிசுத்த ஆவி	
❖ பரலோக ஆவி	51
❖ தோற்றங்களும் விளைவுகளும்	75
❖ பரிசுத்த ஆவி	351
பரிசுத்தம்	
❖ உட்புறம் எப்படி?	60
❖ பரிசுத்தமில்லாத பக்தி	99
❖ அழகான முகம் அழகற்ற வாழ்க்கை	103

கருப்பொருள்	பக்கம்
❖ சுத்த இதயம் வேண்டும்	145
❖ பரிசுத்தமாகுதல்	156
❖ அழகு அவசியம்	160
❖ வாயின் வார்த்தைகள்	174
❖ பரிசுத்தவான் யார் ?	190
❖ முதலாவது பரிசுத்தம்	198
❖ அவர் மிக நல்லவர்–ஆனால்	203
❖ நெருப்பில் தங்கம்	341
பரீட்சைகள்	
❖ கவனம் – திரும்புதல்	44
❖ சோதனைகள்	177
❖ தொடரும் பலவீனம்	218
❖ பரீட்சிக்கப்படும் வேளை	347
❖ குறைந்த மதிப்பீடு	373
பணம்	
❖ பொருளாசை	76
❖ அதிக ஆசையினால்	108
❖ தேவையும் ஆசையும்	176
❖ பணம் அவசியம்... ஆனால்	183
❖ பணமும் ஆடம்பரமும்	256
❖ பணம் எச்சரிக்கை	355
❖ பணத்தை விட முக்கியமானது	366
❖ பணம் எதற்காக ?	382
பாவம்	
❖ பாவத்தின் விளைவு	41
❖ எது பாவம்?	116
❖ நான் பாவியா?	197
❖ எல்லாம் பாவமே	220
❖ மீண்டும் பாவ வாசனை	235
❖ ஏன் உணர்வில்லை?	273
பொறுமை	
❖ விட்டுக் கொடுத்தலின் பலன்	258
❖ மறைத்துக் கொள்ளாமல்	365
❖ அடையாளத்தை இழக்காதீர்	381
போலி ஆன்மீகம்	
❖ அனுபவமும் சாட்சியும்	83
❖ இதுவும் விக்கிரகமே	306

கருப்பொருள்	பக்கம்
❖ ஏன் பிரியமில்லை?	310
❖ தவறானவிதைகள்	313
❖ போலியான சுவிசேஷம்	315
❖ இந்த இரட்சிப்பு வேண்டாம்	333
போதனை	
❖ போதனையும் வாழ்க்கையும்	122
❖ தேவ ஆலோசனைகள்	149
❖ மிஞ்சுவது	294
❖ சரியான வேத அறிவு	327
மனந்திரும்புதல்	
❖ முதலில் மருத்துவம்	36
❖ மனதுருக்கம் எப்போது?	153
❖ மனமாற்றமில்லா மனஸ்தாபம்	278
மாய்மாலம்	
❖ யார் யூதாஸ்?	97
❖ அன்பின் வேடம்	167
❖ மன இயல்புகளில்	204
❖ நற்செயலும், நற்பண்பும்	391
முன்மாதிரி	
❖ போதனையும், போதகரும்	169
❖ ஆசிரியர் தினம்	277
❖ நல்லவர் யாருமில்லையே	287
❖ முதலாவது கற்றுக்கொள்	338
❖ முதலில் உன்னைப்பார்	369
வழிபாடுகள்	
❖ பரிசுத்த சூழ்நிலை	171
❖ அழகற்ற பின்னணி	243
❖ பக்தியான வாழ்க்கை	246
❖ அறிவும் உணர்ச்சியும்	335
❖ எது முக்கியம்?	350
வாழ்க்கை	
❖ பயணத்தின் பாதை	34
❖ திருப்தி எப்போது ?	234
❖ வாழ்வு பயனற்றதா?	312
❖ திசை மாறினாலும்	316
❖ சௌகரியங்கள் பெருகினால்	328

கருப்பொருள்	பக்கம்
வாழ்க்கை மாற்றம்	
❖ மாற்றம் எப்படி?	91
❖ மாற்றத்தை விரும்பணும்	178
❖ அரைகுறை மாற்றம்	186
❖ வலிமையான சாட்சி	187
❖ மாற்றங்கள் போதுமா?	191
விசுவாசம்	
❖ நிச்சயம் தேவை	31
❖ உறவும் விசுவாசமும்	100
❖ தேவனால் வராத உயர்வு	151
❖ அவிசுவாசம்	271
❖ விசுவாசப் பார்வை	362
❖ வாக்குறுதி அல்ல விசுவாசம்	30
விழிப்புணர்வு	
❖ விழிப்புணர்வு	141
விமர்சனங்கள்	
❖ வீண் விமர்சனம்	65
❖ நாம் யார்?	67
❖ சரியாகக் கவனியுங்கள்	107
❖ பலவிதக் கண்ணாடிகள்	175
❖ குறை இருந்தால்	270
❖ சத்தமும் அமைதியும்	334
வேத அறிவு	
❖ பயன்படாத வேத அறிவு	58
❖ இறையியல் அறிவு	68
❖ சத்திய வார்த்தை	239
❖ வேதத்தை வாசித்திருந்தும்	275
ஜெபம்	
❖ நேரடியாக ஜெபிப்போம்	43
❖ வீணான ஜெபம்	49
❖ ஜெபம் எதற்கு	92
❖ ஜெபம் மட்டும் போதுமா?	152
❖ ஜெபம் வீணாகாது	240
❖ வல்லமை தேவனுடையதே	241
❖ இதுதான் ஜெபம்	245
❖ சிறிய கல்	324
❖ துன்பத்தின் நடுவில் ஜெபம்	363
❖ தேவ மகிமையைத் தேடாமல்	379

இந்த தியான நூலை எப்படி உபயோகிக்கலாம்?

- இந்த தியான நூலின் தியானங்களை தினமும் ஒன்று வீதம் மட்டும் படிப்பது அதிக பயனுள்ளதாயிருக்கும்.
- உங்கள் குடும்ப ஜெபங்களில் அந்தந்த நாளுக்குரிய தியானங்களை வாசியுங்கள்
- ஒவ்வொரு நாள் தியான சிந்தனைகளையும் இரண்டு முறை படியுங்கள். அப்போது கருத்து ஆழமாக இதயத்தில் பதியும்
- ஒவ்வொரு நாள் தியானப் பகுதிகள் மூலம் நீங்கள் கற்றுக் கொண்டவற்றையும் உணர்ந்து கொண்டவற்றையும் பிறரோடு பகிர்ந்துக் கொள்ளுங்கள்.
- இந்த தியான நூல் தினமும் ஒரு தெய்வீகச் சிந்தனையை உங்களுக்கு தரவேண்டுமென்பதையும், உங்களின் தியான வாழ்க்கையை ஊக்குவிக்க வேண்டுமென்பதயும் முக்கிய நோக்க மாகக் கொண்டதாகும். இந்த தியான நூலின் சிந்தனையைப் படிப்பதோ, அந்தந்த நாளுக்கென்று தரப்பட்டுள்ள வேதப் பகுதியை மட்டுமே படிப்பதே உங்களின் வேத தியானத்திற்கு போது மானதல்ல. அதிகமாக வேதப்பகுதிகளைப் படித்து அதிகமான நேரங்களை தியானத்திற்கென்று செலவழியுங்கள்.
- இந்த தியான நூலின் ஒரு பக்கத்தை தினமும் படிப்பதால் மட்டும் உங்களுக்கு எந்த பிரயோஜனமும் ஏற்படாது. படியுங்கள், சிந்தி யுங்கள், பின்பற்றுங்கள். அப்போதுதான் ஆசீர்வாதமாயிருக்கும்.
- இந்த தியான நூலை காலையிலோ மாலையிலோதான் படிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. தினமும் ஏதாவது ஒரு நேரத்தில் படிக்கத் தவறாதிருந்தால் போதும்.
- நீங்கள் படித்து விசேஷமாக உள்ளத்தில் தொடப்பட்ட அனுபவங் களை, என்னோடு பகிர்ந்து கொண்டால் அது இந்த ஊழியத்தில் நல்ல உற்சாகமூட்டுதலாக இருக்கும்.
- இந்த தியான நூல் உங்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பதாக உணர்ந்தால் குறைந்த பட்சம் ஒருவருக்காவது தியான நூலை அறிமுகம் செய்து வையுங்கள்.

மனம் புதிதாகட்டும் தினமும்

வாக்குறுதி அல்ல விசுவாசம்

லேவியராகமம் - 26:1-13

நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே
ரோமர் 8:17

ரோமர் - 8:1-17

புதியதோர் ஆண்டிற்குள் பிரவேசிக்க செய்த தேவனுக்கு நன்றி செலுத்துவோம். புதிய ஆண்டினை புதியதோர் இருதயத்தோடும், புதியதோர் சிந்தையோடும், புதியதோர் பார்வையுடனும் வரவேற்போம். நம்முடைய இருதயம் எப்படியோ அப்படியே நம்முடைய வாழ்வும். புதிய ஆண்டின் முதல் பகுதியில் நம்பிக்கையூட்டுகின்ற ஒரு தேவவாக்குறுதி கிடைத்தால் நலமாயிருக்குமே என்று நாம் எண்ணுவது இயற்கையானது.

ஆனால் தேவனுடைய அனைத்து வாக்குறுதிகளும் இயேசு கிறிஸ்துவுக்குள் "ஆம்" என்றும் "ஆமென்" என்றும் இருக்கின்றது. இந்த இயேசு கிறிஸ்துவுக்குள் அல்லது இயேசு கிறிஸ்துவோடு வாழ்வதற்கே நாம் அழைக்கப்படுகின்றோம். இயேசு கிறிஸ்துவுக்குள் நம்மை நாம் காண வேண்டும். இயேசு கிறிஸ்துவுக்குள் நம்மைக் கொண்டு வருவது உண்மையாக நாம் மனந்திரும்பி பெற்றுக் கொண்ட இரட்சிப்பின் அனுபவமே. இந்த இரட்சிப்பின் அனுபவம் நமக்கு தேவனுடைய பிள்ளை என்று தெய்வீக அந்தஸ்தை பெற்றுத் தருகின்றது. இந்த தெய்வீக அந்தஸ்து தேவனை "அப்பா, பிதாவே" என்று கூப்பிடுகின்ற ஒப்பற்ற உயர்ந்த பாக்கியத்தை தருகின்றது.

இங்கேதான் நாம் இன்று எந்த நிலைமையில் உள்ளோம் என்று பார்க்க வேண்டும். நாம் கிறிஸ்துவோடிருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டால் தேவனுடைய பிள்ளை என்ற ஆவிக்குரிய நிலைமையும் உறுதிப்படுகிறது. தேவனுடைய பிள்ளை என்றால் நமக்கு பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்களைப் போல இன்னொரு புதிய ஆசீர்வாதக்குறுதி தேவை இல்லை. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்றால் தேவனுடைய சுதந்தரராமே என்று வேதம் சொல்லவில்லையா?

தேவன் நம்மைப் பார்தது "நீங்கள் என்னுடைய பிள்ளைகளாயிருந்தால், நீங்கள் என்னுடைய செல்வங்களுக்கு உரிமையுள்ள சுதந்திரவாளிகள்தானே என்று சொல்லுகின்றார். பின்னர் நாம் ஏன் அந்நியர்கள் போல ஒரு வாக்குறுதி தாரும் என்று கெஞ்ச வேண்டும். தகப்பனோடு சேர்ந்து வாழும் பிள்ளைகளுக்கு தகப்பன் வாக்குறுதி தர வேண்டிய தேவை என்ன? கர்த்தராகிய இயேசுவுக்குள் நமக்கு அமைதி, சந்தோஷம், நம்பிக்கை, ஆறுதல், வழிநடத்துதல், வாழ்க்கை சூழ்நிலைகளை சந்திக்க தேவையான இறை ஆற்றல் ஆகியவை எப்போதும் ஆயத்தமாக உள்ளன.

இப்போது தேவை இன்னொரு வாக்குறுதி அல்ல. கர்த்தர் சொன்னதை அப்படியே நம்பி சார்ந்து முன்னோக்கி செல்லுகின்ற விசுவாசமே தேவை. புதிய தோர் ஆண்டைக் காணச் செய்த தேவன் நிச்சயமாய் எல்லா சூழ்நிலைகளிலும் நம்மோடிருந்து நம்மை வழிநடத்திச் செல்வார். கர்த்தர் நம்மோடிருப்பார்.

தேவனுக்குரியவைகளைத் தேட இன்று நீ கவனமாயிரு உனக்குரியவைகளை தேடித்தர என்றும் தேவன் கரிசனையாயிருப்பார் .

நிச்சயம் தேவை

நியாயாதிபதிகள் - 6:1-40

எனக்கு ஒரு அடையாளத்தைக் காட்ட வேண்டும்... நியா 6:17

எபேசியர் - 1:13-23

கிதியோன் தேவ கட்டளையின்படி பெரிய ஒரு யுத்தத்திற்குச் செல்லும் முன்பு முதலாவதாக தன்னோடு கர்த்தர் இருக்கிறார் என்பதைக் குறித்த உறுதியான நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பினான். கர்த்தர் தன்னோடிருப்பதை சந்தேக மற்ற நிலையில் உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே, செயல்பட விரும்பிய அவனுடைய உணர்வை தேவனும் அங்கீகரித்தார். தகுந்த அடையாளத்தோடு தேவன் அதை நிச்சயப்படுத்தினார்.

கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்ற விசுவாசம் நல்லதே. அதே வேளையில் அது அஸ்திபாரமற்றதாக இருக்கக் கூடாது. சிம்சோனை விட்டு கர்த்தர் விலகிய பின்பும், அவர் தன்னோடிருப்பதாக எண்ணி அவன் செயல்பட்டான். அவனுடைய விசுவாசம் அங்கே தோல்வியையே தந்தது. நம்முடைய வாழ்க்கையில் சகல சூழ்நிலைகளிலும் கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்பது விசுவாசம். ஆனால் தேவன் நம்மோடிருப்பது எப்போதும் விசுவாசிக்கப்படுகின்ற ஒன்றாக மட்டும் இருக்கக்கூடாது. அது உண்மை யென்று உணரப்படுகின்ற ஒன்றாகவும் இருக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையில் தேவன் நம்மோடிருக்கிறார் என்பதைத் தெளிவான முறையில் அவ்வப்போது நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். தேவன் ஏதாவது விதங்களில் நம்முடைய இதயங்களில் தம்முடைய பிரசன்னத்தைக் குறித்த நிச்சயத்தை அவ்வப்போது தருகின்றவர் என்பது உண்மை.

தாவீது தன்னோடு தேவன் இருக்கிறார் என்பதை பொதுவான விசுவாசத்தின் படியல்ல. தனிப்பட்ட முறையில் அவன் தேவன் தன்னுடன் இருப்பதை உணர்ந்து உறுதியாகயிருந்தான். எனவே கோலியாத்தைச் சந்திக்கும் மிகப்பெரிய சவாலை ஏற்க அவனைத் தூண்டியது. ஆம். தேவன் தம்மை நம் ஒவ்வொருவருக்கும் உள்ளான ஆத்துமாவில் வெளிப்படுத்தி, அவருடைய ஐக்கியத்தை நாம் அறியும்படி செய்ய ஆயத்தமாயிருக்கின்றார். நாம் உண்மையான இருதயத்தோடு அவருடைய ஐக்கியத்தைத் தேடும் போது கண்டடைவது நிச்சயம்.

கர்த்தர் நம்மோடிருந்தால் கர்த்தருடைய சமாதானம் நம்முடைய இதயத்தில் ஆளுகை செய்வதை உணரமுடியும். கர்த்தர் நம்மோடிருந்தால் அவருக்கேற்ற நற்குண கனிகொடுக்கும் அனுபவம் நம்மிடம் சீராக இருக்கும். கர்த்தர் நம்மோடி ருந்தால் பாவ வெறுப்பும், பரிசுத்த வாஞ்சையும் நம்மிடம் அனலாயிருக்கும். கர்த்தர் நம்மோடிருந்தால் அவருக்குப் பிரியமானவைகளைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் பெருகிக் கொண்டேயிருக்கும்.

கர்த்தர் உன்னோடு இருப்பது உண்மையென்றால் அவர் விரும்பாத விஷயங்கள் உனக்குத் தூரமாகவே இருக்கும்.

இறைநட்பும் அமைதியும்

சங்கீதம்-4:1-8

உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று... மத்தேயு – 8:26

மத்தேயு-8 : 23 -34

தேவன் மட்டுமே அமைதியைத் தரமுடியும். தேவன் மட்டுமே சந்தோஷம் தரமுடியும். தேவன் மட்டுமே சவால்களைச் சந்திக்கும் மனபலத்தைத் தரமுடியும் என்பது போன்ற கருத்துக்களை பல தேவ ஊழியர்கள் சொல்வதுண்டு. ஆனால் அதையும் சற்று யோசிக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஏனென்றால் இறைபக்தி இல்லாத அநேகர் கூட அமைதி, ஆனந்தம்,மனதைரியம் ஆகியவற்றை தங்களின் சுயவழிகளிலும் பெறுவதை பார்க்க முடிகின்றது.

மனிதன் அமைதியைப் பெற இயன்றவன்தான். சந்தோஷத்தைப் பலவழிகளில் பெற இயன்றவன்தான். தன்னைத் தானே சவால்களை எதிர்கொள்ளும்படி பலப்படுத்திக் கொள்ள இயன்றவன்தான். ஆனால் அவற்றிற்கு ஒரு உத்தரவாதம் இல்லை. அவற்றில் ஒரு நிறைவு இல்லை. சில வேளை அமைதியைப் பெறுவது என்பது மனிதனுடைய சக்திக்கும், முயற்சிக்கும் அப்பாற்பட்டதாகிவிடுகிறது. சில வேளைகளில் தன்னைச் சந்தோஷமாக வைத்துக்கொள்வது என்பது அவனுடைய ஆற்றலுக்கு மிஞ்சினதாக உள்ளது. சில நேரங்களில் அவன் தன்னை தைரியப்படுத் திக் கொள்வது என்பது அவனுக்கு இயலாத விஷயமாகப் போய்விடுகிறது.

இங்குதான் இறைநம்பிக்கையின் அவசியமும், இறைத் தொடர்பின் தேவையும் வலிமையாக வற்புறுத்தப்படுகின்றன. இறைத்தொடர்பும், இறைநம்பிக்கையும், இறை ஐக்கியமும் உடைய மனிதன் எந்தச் சூழ்நிலையிலும் தனக்குத் தேவையான மனஅமைதியைப் பெற்றுக்கொள்ள இயன்றவன். ஏனென்றால் அமைதிக்கு வாய்ப்பே இல்லாத வேளைகளிலும் தேவன் நமக்கு அமைதியை அளிக்க வல்ல வராயிருக்கின்றார். எனென்றால் அமைதிக்கு எதிராக எழும்பும் எந்த ஒரு காற்றையும், புயலையும் கொந்தளிப்பையும் அவரால் அடக்கி அமைதியை ஏற்படுத்த முடியும்.

இங்கேதான் மனித முயற்சிகளின் விளைவான அமைதியின் வித்தியாசம் விளங்குகின்றது. சந்தோஷத்திற்கு வாய்ப்பில்லாத வேளைகளை வாழ்வில் நாம் சந்திக்க நேரிடும். மலைபோல் அசையாமலிருந்த இருதயம் கூட சில சூழல்களில் நாணலைப்போல அங்குமிங்குமாய் அலசடிப்பட நேரிடும். ஆனால் அதுபோன்ற சூழ்நிலைகளிலும் அமைதியையும், ஆனந்தத்தையும், இறைநட்பும், இறை ஆளுகையும் நமக்கு கொண்டுதரும். அது பலத்தினாலோ, பராக்கிரமத்தாலோ அல்ல, தேவ ஆவியின் ஆற்றலால் வந்தது.

தேவனுக்கு முற்றிலுமாக உன்னை இழந்துவிட்டால் சாத்தான் உன் சமாதானத்தைத் திருட முடியாது.

பொன்னான நேரம்

எசாயா-55:1-13

காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்... எபே – 5:16

லூக்கா-18 : 35 -43

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பது பழமொழி. வாழ்க்கையில் சில விஷயங்களில் கொஞ்சம் தாமதித்து விடுவோம் என்றால் அவைகளை என்றுமே பெறாமல் போய்விடுவோம். சில வாய்ப்புகள், சில காலங்கள் மிகவும் பொன்னானவை. அவை மீண்டும் வருவதில்லை. இன்று செய்ய வேண்டிய சில விஷயங்களை அப்புறம் பார்த்துக் கொள்வோம் என்று கொஞ்சம் தாமதித்தால் என்றுமே அவற்றைச் செய்ய இயலாமல் போகும்.

எரிகோ என்ற இடத்திற்கு வந்து கொண்டிருந்தார் இயேசு. கொஞ்ச தூரத்தில் அமர்ந்திருந்த தெருவோர குருட்டு பிச்சைக்காரனாகிய பர்திமேயு அதனை அறிந்து கொள்கிறான். கொஞ்சமும் தாமதம் செய்யாமல் உஷாராகி விடுகிறான். “தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்” என்று உரத்த சத்தமிட ஆரம்பிக்கின்றான். அவனுடைய கூச்சலைக் கேட்கப் பொறுக்காத சிலர் அவனை சத்தமிடாதிருக்கும்படி எச்சரிக்கின்றனர். ஆயினும் அவனோ அதனைக் கண்டு கொள்ளாமல் தொடர்ந்து சத்தமிட்டதால், அங்கே அவன் இயேசுவினால் பார்வை அடைந்தான். அந்தப் பொன்னான நேரத்தைப் பிரயோஜனப்படுத்த அவன் தாமதித்திருந்தால், என்றும் அவன் குருடனாகவே இருந்திருப்பான்.

இன்று நாம் செய்யத் தாமதிக்கின்ற ஒரு நற்செயலை ஒரு வேளை நாளை நாம் செய்ய முன்வந்தாலும், சம்பந்தப்பட்டவருக்கு அது பிரயோஜனமில்லாமல் போய்விடலாம். இன்று காண்பித்திருக்க வேண்டிய அன்பை, இன்னொரு நேரம் காண்பிக்க மனதை ஆயத்தப்படுத்திக் கொண்டாலும், அந்த அன்பிற்கு மரியாதை கிடைக்காமல் போகலாம். இன்று தவறை உணரத் தாமதித்து, இன்னொரு நாள் அந்த தவறுக்காக மனஸ்தாபப்பட முன்வந்தாலும், அதற்கு முன் காரியங்கள் கெட்டுப் போய்விடலாம். எனவே நலமானதைச் செய்ய இன்றே கடைசி நாளாக இருக்கக்கூடும் என்ற எச்சரிக்கை உணர்வோடு செயல்படவேண்டியது அவசியம்.

கர்த்தரைத் தேடுகின்ற உணர்வு, நன்மை செய்யும் உந்துவிசை, மனந்திரும்ப வேண்டும் என்ற உணர்வு, நலமானவைகளைப் பற்றிக்கொள்ளும் தூண்டுதல் ஆகியவை திரும்ப, திரும்ப வந்து கொண்டிருப்பதில்லை. அவை வருகின்ற போதே உஷாராகி விடவேண்டும். இல்லையேல் பின்னர் அவற்றை அடைய அதி கமாக விரும்பினால் கூட முடியாமல் போகும். சில காரியங்களை சரி, தவறு என்று புரிந்து கொள்கின்ற உணர்வு நாளைக்கும் வரமுடியும். ஆனாலும் அதன் அடிப்படையில் சரியானதைச் செய்யும் உணர்வும், சரியற்றதை விலக்கும் உந்து விசையும் நாளைக்கு இல்லாமல் போய்விடும். கர்த்தர் நல்ல உணர்வுகளையும், தூண்டுதல்களையும் தரும்போது செயல்பட முந்திக்கொள்வோம். இல்லையேல் ஏசாவைப் போல கண்ணீர்விட நேரிடும்,

தன் தவறினை ஒத்துக்கொள்ளுதல் என்ற கர்ப்ப வேதனையின்றி நற்பண்பு என்ற பிள்ளை பிறப்பதில்லை.

ஜீவ நீரோடை

பயணத்தின் பாதை

பிரசங்கி-1:1-18

எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது... பிரசங்கி – 1:14

எபிரேயர்-11 : 30 -40

மிக மிக அருமையான சாலை எந்த ஒரு அதிர்வையும் உணராமல் பயணம் செய்யலாம். மிக மிக அருமையான ஆடி சொகுசுக்கார். இந்த வாகனத்தில் ஒருவன் பயணம் செய்கின்றான். ஆனால் அவன் ஒரு பெரிய குற்றத்திற்காக சிறையிலடைக்கப்படவே கொண்டு போகப்படுகின்றான். அவனுக்கு இது சுக மான சௌகரியமான பயணமா? சொகுசான காரில் அவன் சோர்வுடனே பயணம் செய்வான். இன்னொருவன் மிகமிக பழமையான, மோசமான ஒரு வாகனத்தில் பயணம் செய்கின்றான். அந்த சாலை மிகவும் மோசமாக உடைந்து நொறுங்கி கிடக்கின்றது. மிகமிக மோசமான பயணம், ஆனால் அவன் சிறையிலிருந்து விடுதலையாகி தன் வீட்டுக்குப் போகிறான். இப்போது அவன் தன்னுடைய பயண நிலைமையை எண்ணி வருந்தமாட்டான். எப்படி பயணம் செய்கின்றோம் என்பதை விட எங்கே போகப்போகிறோம். என்பதே முக்கியம்.

ஆம், நாம் எந்த அளவிற்கு சுக சௌகரியமான சூழ்நிலையில் வாழ்கின்றோம் என்பதல்ல. நம்முடைய யாத்திரை எங்கே நம்மைக் கொண்டு போகிறது என்பதே முக்கியம். தாவீதின் வாழ்க்கைப் பயணம் பலவிதமான மேடுபள்ளங்கள் நிறைந்த போராட்டங்கள் என்ற பாதையிலேயே சென்றது. ஆயினும் அவன் உயர்ந்த இலக்கை நோக்கிச் சென்றதால் அவனால் விசுவாசத்தோடு நன்றாக இருக்க முடிந்தது. பலவிதமான நெருக்கடிகள் பலவிதமான மன பாதிப்புகள், பலவிதமான அச்சுறுத்தல்கள். ஆயினும் அவற்றின் நடுவிலும் அவனால் இளைப்பாறுதலோடும் விசுவாசத்தோடும் செயல்பட முடிந்தது. பயணத்தின் பாதை பாடுகள் நிறைந்திருந்த போதிலும் ஒரு நல்ல தரிசனத்தை நோக்கிச் சென்றதால், அவன் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ்ந்தான்.

ஆனால் சாலொமோனின் வாழ்க்கை வாகனம் சென்ற பாதை அதிக ஆடம் பரமும் அதிக வசதிகளும் நிறைந்தவை. வாழ்க்கையில் சிறு சிறு கஷ்டங்களின் வேதனைகூட இல்லாமல் அதி சௌகரியமாகப் பயணித்தான். ஆயினும் உயர்ந்ததோர் தரிசனமும், தேவன் குறித்த இலக்கும் இல்லாததால், இறுதியில் அவன் எல்லாவற்றையும் மாயை என்றும், மனசஞ்சலம் என்றும் கண்டு புலம் பினான். ஆம் உயர்ந்த நோக்கங்களை நோக்கிச் செல்லும் பாதைகள் கரடு முரடானவை. ஆனாலும் அவை நம்முடைய அமைதியையும், ஆனந்தத்தையும் எடுத்துப் போடாது.

**தோல்விகள் உணர்த்திய உண்மைகள்தான்
வெற்றிகளை தக்க வைக்கும் தடுப்புச் சுவர்களாகின்றன.**

ஜீவ நீரோடை பொருளாதார ஆசீர்வாதம்

சங்கீதம்-34:1-10 | **அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்... மத்தேயு – 6:33** | மத்தேயு-6 : 25 -34

நாம் வறிய நிலையிலேயே வாழ்ந்து வருந்த வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்க முடியாது. உண்ணும் உணவிற்கும், உடுக்கும் உடைக்கும் காலமெல்லாம் போராடிக்கொண்டேயிருப்பது கர்த்தரின் விருப்பமாயிருக்க முடியாது. காட்டுப் புஷ்பங்களை கச்சிதமாக உடுத்துவித்த தேவன் நம்மை அதைவிட அருமையாக உடுத்துவிப்பது நிச்சயம். அற்ப பிறவிகளாகிய பறவைகளுக்கு அனுதினமும் உணவளிக்கும் தேவன், விசேஷப் படைப்புகளாகிய நம்மை நிறைவாகப் போஷிப்பது நிச்சயம். (மத் - 6:26-34)

ஆவிக்குரிய நிலையில் மட்டுமன்றி, பொருளாதார நிலையிலும் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்பது உண்மை. ஆனால் பொருளாதார நன்மைகளுக்காக நாம் விசேஷ வேண்டுதலோ, பொருத்தனையோ, உபவாசமோ செய்யத் தேவையில்லை. அவைகள் மேல் அதிக வாஞ்சை வைத்து விசுவாசிக்கக் கற்றுக்கொள்ளவும் தேவையில்லை.

தேவனுடைய பார்வையில் சரீரப்பிரகாரமான குறைவுகளை விட ஆத்மீகரீதியான குறைவுகள்தான் மனிதனை அதிக துன்பத்திற்குள் ஆழ்த்துகின்றவைகளாக இருக்கின்றன. வெளிநிலைத் தேவைகளை அதிகமாக ஒருவன் பெற்றாலும், உள்நிலையில் குறைவுகளை நிறைவு செய்யாவிட்டால் பிரயோஜனமில்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு கடிதம் எழுதும்போது, நீதி, தேவபக்தி, அன்பு, சாந்தம், பொறுமை ஆகிய நற்குணங்களைத் தேடும்படி ஆலோசனை சொன்னான். (1 தீமோ - 6:11) ஏனென்றால் இது போன்ற குணங்கள் வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கும், ஆசிர்வாதத்திற்கும் மிகவும் தேவையானவை. ஆண்டவராகிய இயேசு ஆவியில் எளிமை, சாந்தம், சமாதானம், இதய சுத்தம், இரக்கம் ஆகிய குணங்களைக் கொண்டிருப்பது தான் பாக்கியமான வாழ்க்கை என்றார். ஆனால் நம்மில் அநேகர் இவைகளை முக்கியமாக எண்ணுவதில்லை. பணம், பொருள், சரீர சுகம், வாழ்க்கை சௌகரியங்கள் ஆகியவற்றையே மிகவும் விசேஷமாக எண்ணுகின்றோம். ஆனால் குண நிலைத் தேவைகள் உரிய முறையில் சந்திக்கப்படாதவரை, எவ்வளவு பொருளாதார ஆசீர்வாதங்கள் வந்தாலும் பெரிய பயனில்லை.

நாம் செய்ய வேண்டியதெல்லாம் தேவனுடைய ஆளுகையையும், அவருடைய நீதியையும் நம்முடைய வாழ்க்கையில் அதிகமாகக் காணப் பிரயாசப்படுவதுதான். அதாவது தேவனை முக்கியப்படுத்தி, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துவதையே பிரதான நோக்கமாக நாம் கொள்ளவேண்டும். அப்போது நமக்குத் தேவையான உலகப்பிரகார நன்மைகளை நாம் கேளாமலே அவர் தருவார். இது இயேசு சொன்ன வார்த்தை. அதுவே என்றும் நிலையான உண்மை.

பணம் இல்லாமல் வாழ்வது கடினம். நல்ல குணமில்லாமல் வாழ்க்கையில் மகிழ்ச்சியுடன் தொடர்வது கடினம்.

ஜீவ நீரோடை

முதலில் மருத்துவம்

ஆதியாகமம்-6:1-10

இயேசு கிறிஸ்துவுடன் ஐக்கியமாயிருப்பதற்கு... 1 கொரிந்தியர் – 1:9

1 கொரிந்தியர்-1 : 1-10

ஒரு மனிதன் நல்ல சத்தான உணவுவகைகளை உண்கின்றான். சரீர ஆரோக்கியத்திற்கு உதவுகின்ற நல்ல பழவகைகளையும், காய்கறிகளையும் சாப்பிடுகின்றான். போதுமான நேரங்கள் தூங்குகின்றான். முறையாக தினமும் உடற்பயிற்சி செய்கின்றான். சரீர நலனுக்கு உகந்ததல்லாத எந்த கெட்டபழக்கங்களும் கிடையாது. ஆயினும் அவனுக்கோ அவனுடைய சரீரத்தில் ஆரோக்கியமில்லை. எதையும் திடமாகச் செய்கின்ற வலிமை இல்லை. ஏன் இப்படி என்பதை அவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

இவன் பின்பற்றுகின்ற ஆரோக்கியம் தொடர்பான காரியங்கள் யாவும் மிகவும் அவசியமானவையே. ஆரோக்கியமாயிருக்க விரும்புகின்ற எவரும் இவற்றைக் கடைப்பிடிப்பது மிகவும் நல்லது. ஆயினும் ஒரு நல்ல சரீரத்தில்தான் இந்த விதமான நல்ல வாழ்க்கை முறைகள் உரிய பலன் தரும். சரீரத்தில் ஒரு வியாதி இருக்கையில் இதுபோன்ற நடவடிக்கைகளால் சில பலன்கள் உண்டென்றாலும் பூரணபலன்கள் இல்லை. முதலாவது நோயினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உகந்த முறையான மருத்துவம் பார்க்க வேண்டும்.

சிலர் பக்தி மிக்கவர்கள் என்பது உண்மை. பக்தி தொடர்பான பல காரியங்களைச் சரியாகச் செய்கின்றார்கள். ஜெபம், உபவாசம், வேதவாசிப்பு, ஆராதனை, காணிக்கை, ஊழியம் என அவசியமான அத்தனை காரியங்களையும் செய்கின்றனர். ஆயினும் பரிசுத்த வாழ்க்கையில் வெற்றியில்லை. மகிழ்ச்சியானதோர் ஆவிக்குரிய அனுபவம் இல்லை. காரணம் என்ன? பக்தியான பல காரியங்களைச் செய்தாலும் அடிப்படையில் பாவம் என்ற நோய்க்கு உரிய மருத்துவம் பார்க்கப்பட்டதா என்பது மிக முக்கியம்.

மனந்திரும்புதல், மறுபடியும் பிறத்தல் என்ற அனுபவத்தை விசுவாசித்து பெறுதல், தேவ உறவில் வாழ அர்ப்பணிப்பு, தேவனுடைய பிள்ளையாக மாறிவிட்ட ஆவிக்குரிய விழிப்புணர்வு ஆகியவற்றை மனத்தெளிவோடு கடந்து வந்தோமா என்பது முக்கியம். தேவ உறவுடன் அல்லது தேவநட்பின் ஐக்கியத்தில் வாழ்தல் என்ற அனுபவத்தை விரும்பி எற்றுக்கொண்டு வந்தால்தான் பாவத்திற்குத் தீர்வு எற்படும். அப்பொழுதுதான் நம்முடைய நல்ல ஆவிக்குரிய பக்திச் செயல்களெல்லாம் அதற்குரிய நல்ல விளைவுகளைத் தரும். எனவே மேலும், மேலும் ஆவிக்குரிய பக்திச் செயல்கள் என்னும் ஆரோக்கிய நடவடிக்கைகளை மட்டுமே நம்பாமல், அடிப்படையில் பாவத்தின் மேலாண்மையை மேற்கொள்ளத் தேவையான தேவ உறவிற்கு நம்மை அர்ப்பணித்தோமா என்பதை முதலாவது சிந்திக்க வேண்டும்.

பாவம் தேவஅன்பைத் தடுப்பதில்லை. நம்மைத்தான் அதனை ருசிக்கவிடாமல் தடுக்கிறது.

தேவனின் திட்டம்

லேவியராகமம் - 26:1-13

நீங்கள் தேவனுடைய ஆலயமாயி ருக்கிறீர்களென்றும்... 1 கொரி – 3:16

1 கொரிந்தியர் - 3 :11 -22

நம்முடைய வாழ்க்கையின் மேல் தேவன் வைத்துள்ள திட்டம் என்ன? இதனைச் சரியாக அறிந்துணர்ந்து, அதற்குள் நம்மை உட்படுத்துவதுதான் ஆவிக்குரிய வாழ்க்கையின் முக்கிய அம்சம் ஆகும். ஆனால் அநேகர் இவ்வித மான ஒரு சிந்தனைக்குள் ஒருபோதும் வருவதேயில்லை.

பல நேரங்களில் நாம் நம்முடைய திட்டங்களையும், நம்முடைய ஆலோசனை சார்ந்த செயல்களையும் தேவன் ஆசீர்வதித்து அவைகளை வாய்க்கச் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றோமேயன்றி, நம்மிடம் தேவனுடைய எதிர்பார்ப்பு என்னவென்பதை கவனித்து அறிய விரும்புவதில்லை. இதன் விளைவாகவே அநேகர் தேவனுடைய ஆசிர்வாதங்களை வாழ்க்கையில் கண்டடையாதவர்களாகப் போகின்றனர்.

முதலாவதாக நாம் தேவனுடைய ஆலயங்களாக விளங்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். அதாவது தேவன் தங்குமிடமாக நம்முடைய சரீரமும், சரீரப் பிரகாரமான வாழ்க்கையும் அமைந்திட வேண்டும். ஏனென்றால் தேவன் யாரை ஆசீர்வதிக்க விரும்புகிறாரோ அவரோடு தங்க விரும்புகிறார். அவரோடு தங்கியிருந்துதான் தேவன் அவரை ஆசீர்வதிக்க முடியும். இது தேவ நியமம்.

எனவே முதலாவது நம்மோடு தேவன் தங்கியிருப்பதற்கு ஏற்ற விதமாக நம்முடைய வாழ்க்கை பரிசுத்தமானதாக மாறுவதற்குத்தான் நாம் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். தேவன் தங்குகிற ஒரு ஆலயமாக நாம் மாறிட வேண்டும் என்ற தேவ திட்டத்திற்கு நாம் ஒத்துழைக்கும் போது, கர்த்தர் நம்முடைய காரியங்களை நிச்சயம் ஆசிர்வதிப்பார்.

அநேகர் எங்கோ போய் தரிசிக்க வேண்டிய ஒருவராக தேவனைப் பார்க்கின் றார்களேயன்றி, தங்களோடு தங்க விரும்பும் ஒருவராக அவரைப் பார்ப்பதில்லை. எனவே அவர்கள் தாங்கள் எப்படியிருக்கின்றோம் என்பதைக் குறித்து அதிகமாகச் சிந்தியாமல், ஜெபம், உபவாசம் வழியாக எப்படியாவது தேவனுடைய அருளையும், உதவியையும் பெற்றுவிட வேண்டும் என்பதிலேயே தீவிரமாயிருக்கின்றார்கள். அங்கே தேவனுடைய திட்டமாகிய நம்முடன் தங்குதல் என்பது நிறைவேறாததால், நம்முடைய திட்டங்களையும், வாஞ்சை, விருப்பங்களையும் தேவன் தந்தருளி ஆசீர்வதிக்கவில்லை. இன்று நாம் தேவன் தங்கத்தக்கவிதமான ஒரு ஆலயமா யிருக்கிறோமா என்பதை சிந்தித்துப் பார்ப்போமா.

ஊர் ஊராய் போய் இறைவனை நீ தேடினாலும் உனக்குள் அவரை நீ தேடாதவரை உன் தேடல்கள் யாவும் வீணே.

ஜனவரி 9

பயணத்தில் துணை

ஆதியாகமம் - 28:1-16

நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக்காத்து... ஆதி - 28:15

11 தீமோத்தேயு-4 :10 -22

2003-ம் ஆண்டு லேன்காஸ்டர் என்ற இடத்திலிருந்து சகோதரர் சிவா என்னை காரில் நியுயார்க் அழைத்து வந்தார். 2008-ம் ஆண்டு சகோதரர் ஜெப்தா, நிதர்சன் ஆகிய சகோதரர்கள் ஜெர்மனியிலிருந்து பாரிசுக்கு காரில் சென்ற போது துணையாக உடன் வந்தனர். 2013-ம் ஆண்டு சகோதரர் கண்ணன் டென்மார்க் கிலிருந்து நார்வேக்கு சென்ற கப்பல் பிரயாணத்தில் எனக்குத் துணையாக வந்தார். இந்தப் பயணங்களை மறக்க முடியாது. ஏனென்றால் நான் தனித்து நீண்ட தூரம் பிரயாணம் செய்ய சற்றுத் தயங்கிய வேளையில், எனக்காக அவர்கள் துணையாக வந்தனர். அந்த பயணங்கள் மகிழ்ச்சிகரமாக இருந்தன.

வாழ்க்கையில் சில நேரங்களில் நமக்குத் துணையாக யாராவது உடன் வந்தால் நலமாயிருக்குமே என்று எண்ணம் நேரிடுகின்றது. ஏனென்றால் புதிய சூழ்நிலை, அறியாத இடங்கள் போன்றவை நமக்கு தெம்பூட்ட யாராவது வந்தால் நன்றாயிருக்குமே என்று எண்ண வைக்கின்றது. ஆயினும் வாழ்க்கைப் பயணங் களில் சில நேரங்கள் நாம் எவ்வளவுதான் அங்கலாய்த்தாலும் அங்கே நமக்கு ஆதரவாக யாரும் வரமுடிவதில்லை.

ஒரு கால கட்டத்தில் யோசேப்பு தனித்து தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தை தொடர நேரிட்டது. புதிய இடம், புதிய சூழ்நிலை, புதிய அனுபவம் என பழக்கமில்லா பாதையிலே தனியனாக பயணம் செய்தான். தாயைவிட்டு பிரிந்திருந்து பழகியிராத யாக்கோபு தனித்து கானகபாதையில் பயணம் செய்ய நேரிட்டது. பல சகோதரர்கள் நடுவில் வாழ்ந்த தாவீது தனித்து விடப்பட்டு கசப்பான பாதைகளில் நடக்க நேரிட்டது.

ஆயினும் அவ்விதப் பயணங்களில்தான் அவர்கள், தாங்கள் ஒருபோதும் தனியாக இல்லை என்பதை உணர்ந்தார்கள். தங்களோடு நடக்க மனித உறவுகள் கிடைக்காத பாடுகள் நிறைந்த பாதையில், தங்களை அறிந்த தேவன் தங்களுக்குத் துணையாக வருவதை அவர்கள் உணர்ந்து உறுதிப்படுத்தினார்கள். தங்களின் தனிமைப் பயணங்களில் தங்களோடு வந்து கொண்டிருக்கும் தேவனை அவர்கள் கண்ட பின்னர், மனித உறவுகளுக்காக அவர்கள் மனச்சோர்வு அடையவில்லை.

ஆம், விசாலமான பாதைகளில் நாம் அழையாமலே நம்மோடு பயணம் செய்ய பலர் இருப்பார்கள். ஆனால் இடுக்கமான பாதைகளில் நாம் தேடினாலும் தகுந்த துணைகள் கிடைப்பது கடினம். ஆயினும் நம்முடைய அனைத்து சூழல் களிலும் நம்மோடு வந்து நமக்குத் தைரியமூட்டி ஐக்கியம் தர தேவன் ஆயத்தமா கவேயிருக்கின்றார்.

துன்பங்களின் துணையுடன்தான் இன்பங்கள் வாழ்க்கையில் பெருகுகின்றன.

உண்மையான கனம்

ஓசியா – 6:1–11 | ஆண்டவரே! ஆண்டவரே என்று சொல்லியும்... லூக்கா – 6 :46 | லூக்கா – 6 :27 –49

பக்தியுள்ள கிறிஸ்தவர் ஒருவர் எந்த ஒரு சிறு செயலைச் செய்யும் முன்பும் ஜெபிக்கத் தவறமாட்டார். எவ்வளவு குறைகள் இருந்தாலும், காணிக்கை விஷயத்தில் குறைவுபட மாட்டார். தேவ ஊழியர்களை உற்சாகமாக உபசரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவார். எந்தச் சூழ்நிலையிலும் ஞாயிற்றுக்கிழமை எந்த வேலையிலும் ஈடுபடமாட்டார். சுகவீனம் ஏற்பட்டால்கூட ஆராதனைகளில் கலந்து கொள்ளத் தவறமாட்டார். இவை யாவற்றிற்கும் முக்கியக் காரணம் கர்த்தரைக் கனப்படுத்தி வாழவேண்டும் என்ற அவரின் கொள்கையேயாகும்.

ஆனால் கொடுக்கல் வாங்கல்களில், வியாபார விஷயங்களில், பிறரோடுள்ள தொடர்பு நிலைகளில் அவர் உலக மனிதனைவிட மோசமாகச் செயல்படுவார். இந்த விதமான ஒரு வாழ்க்கை கர்த்தரைக் கனப்படுத்தும் வாழ்க்கையல்ல. சில செயல்கள் மூலம் நம்முடைய தேவ பக்தியையும், கர்த்தரைக் குறித்த கௌரவ உணர்வையும் காட்டிவிட்டு, பிற நிலைகளில் உலகத்திற்கேற்ப வாழ்தல் தேவனைக் கனப்படுத்துதல் ஆகாது.

முதலாவதாக தேவன் எப்படி, எதன் மூலம் கனப்படுவார் என்பதையும், எதனால் நாம் அவரைக் கனப்படுத்த முடியும் என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். மனிதர்களோடுள்ள தொடர்பு நிலைகளில் பொறுமை, தாழ்மை, தயவு, சாந்தம் அன்பு ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதுதான் கர்த்தருக்குக் கொடுக்கும் கனமாகும். சுய உணர்வுகளுக்கேற்ப சாய்ந்து போகாமல், கர்த்தரின் உணர்வுகளை அறிந்து செயல்படுதலே தேவனுக்குக் கொடுக்கும் மரியாதை ஆகும். பணம், பொருள், புகழ் போன்றவற்றின் இழுவைகளுக்கு இசைந்து போகாமல், தேவன் மேல் விசுவாசம் வைத்து வாழ்தலே அவரை மகிமைப்படுத்தும் அனுபவமாகும்.

ஒருவர் தன்னுடைய வீட்டின் சில பகுதிகளை மட்டும் நன்றாகச் சுத்தமாகப் பராமரித்துவிட்டு, வேறு சில பகுதிகள் எவ்வளவு அழுக்கடைந்திருந்தாலும் கண்டு கொள்ளாமலிருந்தால் அவரை சுத்தவான் என்று எடுத்துக்கொள்ள முடியாது. சுத்தவான் எல்லா இடங்களிலும் சுத்தத்தைக் காண்பிக்க வேண்டும். அதுபோலவே தேவ பக்தி என்பது உள்ளத்தின் ஒரு குணாதிசயமாயிருந்து வாழ்க்கையின் எந்த ஒரு செயலிலும் அது பிரதிபலிக்க வேண்டும். ஆம். இதயம் என்னும் அடித்தளத்தில் ஒரு உண்மையான வாழ்க்கை மாற்றம் ஏற்பட்டால்தான் அது பிற செயல்களிலும், குணங்களிலும் பிரதிபலிக்க முடியும். ஆம். சில செயல்களால் அல்ல. இதயத்திலிருந்து நல்ல குணாதிசயங்களைக் காண்பிப்பதாலேயே தேவனைக் கனப்படுத்த முடியும்.

ஒருவனுடைய இருதயத்தின் அழகை யாரும் பார்க்க இயலாது. ஆனாலும் அவனுடைய குணாதிசயங்களில் அதன் அழகு வெளிப்படாமல் இருப்பதில்லை.

ஜீவ நீரோடை

துன்ப வேளையில் 3 கேள்விகள்

சங்கீதம் - 102:1-28

எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும்... 11 கொரிந்தியர் – 1:4

11 கொரிந்தியர்-1:1-10

வேதனைக்குரிய ஒரு நிகழ்வு நிழ்ந்து விட்ட பிறகு மூன்று விதமான கேள்விகள் எழும்புகின்றது. ஏன் இப்படி நிகழ்ந்தது? இதனை எப்படி நான் தாங்கிக் கொள்ளப் போகின்றேன்? இனி என்னுடைய எதிர்காலம் எப்படி? இவைதான் அந்த கேள்விகள். ஒரு விதத்தில் பார்த்தால் ஏன் இப்படி நிகழ்ந்தது என்ற கேள்வி நியாயமற்றதுதான். ஏனென்றால் வியாதி, மரணம், விபத்து, தோல்வி, ஏமாற்றம் போன்றவை நேரிடுவதற்கு வாய்ப்புகள் நிறைந்த ஒரு பூமியில்தான் நாம் வாழ்கின்றோம். இந்த பூமிக்குரிய இயற்கையின்படி சில விஷயங்கள் நிகழும் போது அதற்குரிய காரணத்தைக் கூறும்படி கடவுளை கட்டாயப்படுத்த முடியாது. ஏனென்றால் பக்தி மிக்கவர்களாயினும் இப்படியெல்லாம் நிகழாது என்று தேவன் நமக்கு எந்த உத்தரவாதத்தையும் தரவில்லை.

எனவே ஏன்? ஏன்? என்ற கேள்விகளுக்கு விடை தெரிவது இயன்ற விஷயமல்ல. எனவே அடுத்த கேள்விக்கு வரவேண்டியதுதான். நடந்து விட்டதோர் சம்பவம் எற்படுத்தியிருக்கின்ற வேதனைகளை எப்படித் தாங்கிக்கொள்வது? இறை உறவு உடையோருக்கு இந்த உலகத்தில் தாங்கமுடியாத துயர் என்று எதுவும் வருவதில்லை. இது மிகப்பெரிய துன்பம்தான். இது மிகப்பெரிய துயர்தான். ஆனால் இதையும் தாங்கிட நமக்கு இறைபலம் தாராளமாகக் கிடைக்கும். வேதனையை உணராமலே கடந்து போய்விடமுடியாது என்பது உண்மையாயினும், இதனை ஏற்கவும், சகிக்கவும் தேவன் ஆற்றல் தராமலிருக்க மாட்டார். இன்று உணர்கின்ற வேதனை இனி ஒவ்வொரு நாளும் தொடர்கதையாய் இருக்கப் போவதில்லை. துன்பத்தை ஏன் அனுமதித்தார் என்ற கேள்வியால் நன்மை வராதென்பதால், துன்பத்தில் துணைநிற்க தயாராயுள்ள தேவனைத்தான் இந்த நிமிடத்தில் உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும்.

எதிர்காலம் எப்படியிருக்கும் என்ற கேள்வியும் நியாயமானதே. வாழ்வதற்கு தேவன் இன்னொரு நாளை தந்தால் அந்த நாளுக்குத் தேவையான ஆதரவுகளையும் நிச்சயம் தருவார். நேற்று துக்கத்தில் மூழ்கிய பலர் இன்று துக்கம் நீங்கி துணிவுடன் வாழ்கின்றார்கள். இன்று துக்கப்படும் நீங்கள் நாளைக்கு துயர்நீங்கித் துணிச்சலுடன் வாழ்ந்து காட்ட தேவன் வலிமை தருவார். இருளை ஏன் அனுமதித்தார் என்ற கேள்வியோடு இருளுக்குள்ளேயே வாழ வேண்டாம். இந்த இருளில் அவர் ஒளியாயிருந்து உதவுவார். எனவே நாளைய தினம் இன்று இருண்டது போல தோன்றினாலும் நாளைய தினத்தைக் காணும்போது அது வெளிச்சமாக மாறிவிடும்.

கசப்பான கடந்த காலத்தை மறந்துவிடு. ஆனாலும் அதன் மூலம் கற்ற பாடங்களை மறந்து விடாதே.

பாவத்தின் விளைவு

சங்கீதம் – 51:1-19

நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற
பாவத்தையும் தள்ளிவிட்டு... எபி – 12 :1

எபிரெயர்-12 :1 -14

பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த அழகான ஒரு பெண்ணை விரும்பி அவளோடு பழகி வந்தான். ஒருநாள் அந்தப் பெண் ஒரு குழந்தைக்கு தாயாகும் நிலை எற்பட்டது. அவன் அவளை திருமணம் செய்ய விரும்பியும், அவனுடைய பெற்றோர் தங்கள் குடும்ப அந்தஸ் திற்கு அந்தப் பெண் பொருத்தமானவள் அல்ல என்று கூறி பல காரியங்களைச் செய்தனர். இறுதியில் அவனை அந்தப் பெண்ணை விட்டுப் பிரித்து விட்டனர். அவனும் அதற்கு உடன்பட்டான்.

சிறிது காலம் சென்ற பின்பு அவன் நிம்மதியற்றவனாக மாறினான். அதன் விளைவாக குடிப்பழக்கத்திற்கு அடிமையானான். வேறொரு பெண்ணை திருமணம் செய்து வைக்க அவனுடைய பெற்றோர் முயற்சித்தும் அவன் சம்மதிக்கவில்லை. " நடந்ததையெல்லாம் நாங்கள் மறந்து விட்டோமே, முடிந்துபோன விஷயங்களை நீ ஏன் இப்படி நினைத்துக் கொண்டு உன்னை அழித்துக் கொண்டிருக்கிறாய்" என்று பெற்றோர் புலம்பினார்கள். அதற்கு அவன் நான் செய்த தவறை உங்களால் மறக்க முடிகிறது. என்னால் முடியவில்லையே என்று கூறினான்.

ஆம். பாவம் மனிதனைப் பலவிதங்களில் பாதிக்கும். நாம் செய்த தவறுகளை, குற்றங்களை பிறர் மறக்கலாம். அவற்றை அவர்கள் சாதாரண விஷயங்களாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் நாம் அவைகளை மறப்பதுதான் கடினம். நாம் அவைகளைச் சாதாரணமான விஷயங்களாக எடுத்துக்கொண்டு மனசாட்சியின் உறுத்துதல்களுக்குத் தப்புவதுதான் சிரமம்.

ஒருவர் இன்னொருவருக்குச் செய்த அநீதிகளை, அக்கிரமங்களை, துரோகங் களை, தவறுகளைக் குறித்த நினைவுகளை தற்காலிகமாக வேண்டுமானால் கண்டு கொள்ளாமல் போகலாம். ஆனாலும் அவை முட்கள் போன்றவை. அவை மீண்டும் மீண்டும் மனதைக் குத்திப் புண்ணாக்கவே செய்யும்.

எனவேதான் துன்மார்க்கனுக்கு சமாதானம் இல்லை என்று வேதம் சொல்லுகிறது. (ஏசா – 48:22) தாவீது தன் மனசாட்சிக்கு விரோதமாகப் பாவம் செய்தான். தான் செய்த தவறுகளை அவனால் மறைக்க முடிந்தது. ஆனால் அந்த தவறுகளினால் விளைந்த நிம்மதிக் கேடுகளோடும், மனசாட்சி ஏற்படுத்திய காயங்க ளோடும் அவனால் சாதாரணமாகத் தொடர முடியவில்லை. அந்த வேதனையின் விளைவாக வந்ததே 51-ம் சங்கீதம்.

ஆம். பாவம் இனிமையாகத் துவங்கும். ஆனால் கசப்பாகவே முடியும். எனவே பாவங்களையும், தவறுகளையும், தவிர்க்கவும், தள்ளிவிடவும் மிகவும் கவனமா யிருப்போமாக.

இன்று நீ விரட்ட மறுக்கும் தவறுகளை
நாளை நீ விரட்ட முயன்றாலும் விலகிப்போகாது.

குடும்ப வாழ்வு

சங்கீதம் – 128:1–6

ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்... ரோமர் – 15:7

ரோமர் – 15 :1 –9

குடும்ப வாழ்வை நன்றாக வாழ்வது தொடர்பாகவும், குடும்ப வாழ்வில் உள்ள பிரச்சினைகளை களைதல் தொடர்பாகவும் ஆன்மீகம் சாராத புத்தகங்கள் பல நல்ல நல்ல ஆலோசனைகளைத் தருவது உண்மை. அறிவுசார்ந்த பல நல்ல கட்டுரைகள் குடும்ப வாழ்வைக் குறித்த மிகநல்ல கருத்துக்களைத் தருகின்றன. ஆனால் பிரச்சினை என்னவென்றால், குடும்ப வாழ்வு தொடர்பான ஆலோசனைகள் நன்றாயிருக்கின்றன. ஆனால் குடும்பத்தில் அவரவர்களின் மன உணர்வுகள் மேலோங்கியிருக்கும் சூழ்நிலைகளில் நல்ல அறிவுரைகளையும், யோசனைகளையும் ஏற்றுச் செயல்பட இயலவில்லை. நல்ல ஆலோசனைகளுக்கேற்றபடி மனதை மாற்றியும் திருத்தியும் செயல்பட முடியவில்லை.

குடும்ப வாழ்க்கையில் உறவுகளைக் கட்டிக்காக்கவும், அவற்றால் மகிழ்ச்சியடையவும் பக்குவமான இருதயம் தேவை. சில மன இயல்புகள் மாற வேண்டும். சில மன உணர்வுகளின் கடினம் கரைய வேண்டும். மனதில் திருத்தங்கள் ஏற்படவேண்டும். உண்மையை ஏற்றுக் கொள்ளுதல், தவறை உணருதல், சிலவற்றை சகித்தல், சிலவற்றை விட்டுக்கொடுத்தல், போன்றவை அவசியம். இவற்றைச் செயல்படுத்த நல்ல ஆலோசனைகளும், புத்திமதிகளும் போதாது. இதற்கு அனுசரித்துச் செயல்படும் தன்மையுள்ள ஒரு இருதயம் தேவை.

எனவே கடவுளின் ஆளுகையை இருதயத்தில் ஏற்று, கடவுளின் மேலாண்மைக்கு இசைந்து போகும்படி பழக்குவிக்கப்பட்ட இருதயம் தேவை. இவ்விதமான இருதயம் இல்லாத நிலையில், எத்தனை அறிவுசார்ந்த அறிவுரைகளையும், அனுபவம் சார்ந்த ஆலோசனைகளையும், மனவியல் சார்ந்த விளக்கங்களையும், தத்துவ ரீதியான கருத்துக்களையும் கொடுத்தாலும் நல்ல விளைவுகள் ஏற்படாது.

ஏனென்றால் இயற்கையான மனிதனுடைய இருதயம் அவன் விரும்பினாலும் நன்றாக சரியாகச் செயல்பட்டு ஒத்துழைக்காது. கடவுள் மட்டுமே இருதயத்தை இசைந்து போகச் செய்யமுடியும். கர்த்தருக்கு நம்மை அர்ப்பணித்து, அவருடைய ஆவியின் ஆளுகைக்கு நம்மை உட்படுத்தினால்தான், நம்மை அவர் பக்குவப்படுத்த முடியும். நம்மையும் நம்முடைய மனநிலையையும் அவர் ஆளுகை செலுத்தி பக்குவப்படுத்தும் போதுதான் குடும்ப வாழ்வின் சந்தோஷத்திற்குத் தேவைப்படும் நற்குணங்களும், அனுசரிக்கும் ஆற்றல்களும் கிடைக்கும்.

இறை உறவை இழந்துவிட்டு மனித உறவில் மயங்காதே. மனித உறவை இழிவு செய்வோர் இறை உறவை அடைவதில்லை. ஏற்கத் தயங்காதே.

நேரடியாக ஜெபிப்போம்

சங்கீதம் – 62:1-12

நீங்கள் அந்நியரும் பரதேசிகளுமாயிராமல்... எபே – 2:19

எபிசியர்-2:11 -22

சிபாரிசுகள் மூலம் உயர் அதிகாரிகளையோ, அமைச்சர்களையோ அணுகி காரியங்களைச் சாதிப்பது சமுதாயத்தில் வழக்கமான விஷயம். தங்களுக்கு நேரடியாகப் போதிய பழக்கமில்லாத உயர்நிலைகளில் அவர்கள் இருப்பதால், அவர்களுக்கு நல்ல தொடர்புடையவர்களின் வழியாகக் காரியங்களைச் சாதிக்க வேண்டிய தேவை உள்ளது. இதுபோன்ற ஒரு நடைமுறை இன்றைய ஆவிக்குரிய வட்டாரங்களிலும் பின்பற்றப்படுகிறது. தேவனிடம் நேரடியாகத் தொடர்பு வைத்து, நன்மைகளைப் பெறுவதற்குப் பதிலாக, முக்கியமான தேவ ஊழியர்கள் வழியாக தேவ நன்மைகளைத் தேடுகின்ற பழக்கம் மிகுதியாக உள்ளன. ஆனால் இது ஒரு சரியான பழக்கம் அல்ல.

தேவன் ஒரு சிலரால் மட்டுமே அணுக முடிந்தவர் அல்ல. அவருக்கு சிபாரிசு தேவையில்லை. நம் ஒவ்வொருவரும் தேவனிடம் நேரடியாகத் தொடர்பு வைத்து, நம்முடைய நன்மைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் அவரிடம் நேரடியாக மன்றாட முடியும். நாம் தொடர்பு கொள்ள முடியாதபடி தேவன் தம்மை நமக்குத் தூரமாக்கிக் கொள்ளவில்லை. ஆண்டவராகிய இயேசுவை நாம் ஏற்றுக்கொள்வதின் மூலமாக தேவனுக்கு நாம் மிகவும் சமீபமாகிறோம். அவர் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்க அளவில் நமக்கு சமீபமாயிருக்கிறார். தேவனுக்கும் நமக்கும் இடையே இயேசு மட்டுமே அதிகரப்பூர்வ மத்தியஸ்தர். எனவே எதோ ஒரு மனிதரை அல்ல. நாம் இயேசுவின் மூலமாகவே நன்மைகளைத் தேட முன்வர வேண்டும். தேவ ஊழியர்கள் என்பவர்கள் தேவனை நோக்கி வழிநடத்தும் வழிகாட்டிகள் தானேயன்றி,நமக்கு ஆசீர்வாதங்களைத் தேடித் தவதற்கு முடிந்த ஒப்பந்தக்காரர்கள் அல்ல.

ஆண்டவர் நம் ஜெபத்தைக் கேட்க விருப்பமுள்ளவராகவும், நம்மோடு அப்பா – பிள்ளை என்ற உறவை வைத்துக்கொள்ள ஆயத்தமுள்ளவராகவும் இருக்கையில், அவரை நோக்கி விசுவாசத்தோடு நேரடியாக ஜெபிக்காமல், யார் மூலமாகவோ ஜெபித்தால்தான் நல்லது நடக்கும் என நினைப்பது, தேவன் நமக்காகச் செய்துள்ள ஏற்பாட்டை அலட்சியப்படுத்துவதாகும். உண்மையான மனந்திரும்புதலின் மூலம், தேவன் நம்மை நேசிக்கிற தந்தையாயிருக்கின்றார் என்ற உறுதி எற்படாததின் விளைவுதான், சொந்த ஜெபங்களைச் சாராமல், பிற தேவ ஊழியர்களின் ஜெபங்களை அதிகமாக நம்பி சார்ந்து போவதின் காரணமாகும்.

அறையில் இறைவனைத் தேட மனமில்லாதவன்
ஆலயத்தில் தேடினாலும் காணமாட்டான்.

கவனம் - திரும்புதல்

ஆதியாகமம் - 13:1-18

தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு... எபிரெயர் - 12:2

எபிரெயர் - 12:1 -17

நாம் முன்னோக்கிச் சென்றுகொண்டேயிருக்க விரும்புகின்றோம். ஆயினும் நாம் வாழ்கின்ற சூழ்நிலைகளில் நம்முடைய கவனத்தை திசை திருப்பத் தூண்டும் பல காரியங்கள் வருகின்றன. இதனால் முன்னோக்கிச் செல்லும் வேகம் குறைகிறது. இல்லையென்றால் பாதையை விட்டு விலகி வேறு திசை நோக்கி ஓட நேரிடுகின்றது. தேமா, மிகச் சிறந்த தேவ மனிதனாகிய பவுலோடு சேர்ந்து உன்னதமான இலக்கை நோக்கி ஓடியவன்தான். ஆனாலும் ஒரு நாள் அவனுடைய ஆவிக்குரிய பயணம் பவுலைவிட்டுப் பிரிந்து தெசலோனிக்கே நோக்கிச் சென்றது. ஏனென்றால் இப்பிரபஞ்ச ஆசைகள் அவனுடைய கவனத் தைத் திசை திரும்பச் செய்துவிட்டது. (11 திமோ - 4:10)

தேவனுடைய நோக்கம் சார்ந்த பாதையில் தீவிரமாக தேவ மனிதனாகிய ஆபிரகாமோடு நடந்தவன்தான் லோத்து. ஆனால் யோர்தான் நதிக்கரையோரச் செழிப்பான நிலப்பகுதிகள் அவனுடைய கவனத்தைத் திருப்பியது. அவன் தன்னுடைய பரிசுத்தமான ஓட்டத்தை இழந்து பாவசூழ்நிலைகளினால் திசை திரும்ப நேரிட்டது.

கவனத்திருப்பங்கள் அதிகமாக நேரிடுவதற்கு முக்கியமான காரணம் நாம் எதை நோக்கி ஓடுகின்றோமோ அது நமக்கு அதிகக் கவர்ச்சியின்றி இருப்பதாகும். கர்த்தர் நமக்கு முன்பாக வைத்துள்ள ஆவிக்குரிய இலக்கைவிட்டு நம்முடைய பார்வை விலகாதிருக்க வேண்டுமானால் கர்த்தரோடுள்ள ஐக்கிய அனுபவத்தில் நாம் ஆழமாகச் செல்ல வேண்டும். தேவ அன்பு ருசிக்கப்படும் அளவிற்கு தேவ உறவை அதிகமாகத் தேட வேண்டும். தேவ அமைதியை அடையாளம் காணும் அளவிற்கு தேவ சமுக வாஞ்சை அதிகமாக வேண்டும். மொத்தத்தில் பக்தியாகப் பல காரியங்களில் அதிக ஈடுபாடுகளோடு இருப்பதல்ல. தேவ உறவுடன் வாழ்வதை, வாழ்வில் உறுதிப்படுத்த வேண்டும். அப்போதுதான் தேவ இலக்கை நோக்கிய பயணத்தில் பணம், பொருள், அதிகாரம், பதவி, அந்தஸ்து, ஆடம்பரம், உலகக் கவர்ச்சி, இச்சை சார்ந்த இன்பங்கள் போன்றவற்றின் வாயிலாக பிசாசானவன் நம்முடைய கவனத்தைத் திருப்பமுடியாது.

ஆபிரகாம் தேவஉறவை வாழ்வில் உண்மையாக அனுபவித்தவன். தான் நம்புகின்ற தெய்வத்தை நிஜமானவராக அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றவன். அவரோடு எற்பட்ட நட்பின் விளைவான சந்தோஷத்தைத் தனக்குள் உணர்ந்தவன். எனவே எதுவும் அவனுடைய கவனத்தைத் திசைதிருப்ப இயலாமல் போயிற்று.

பரிசுத்தமானவைகளை உன் கண்கள் பார்த்துக் கொண்டிருந்தால் பாவமானவைகளில் உன் கால்கள் சிக்குவதில்லை.

ஜீவ நீரோடை

தேவன் அறியப்பட

1 சாமுவேல் - 17:33-58

இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் அறிந்து கொள்வார்கள்... 1 சாமுவேல் - 17:46

யோவான்-3:24-36

இந்த நாட்களில் கர்த்தரை மகிமைப்படுத்துகிறோம் என்று அடிக்கொரு முறை சொல்லிக்கொண்டே, மறைமுகமாக தங்களை உயர்த்தி மகிமைப்படுத்துகிற ஒரு மாய்மாலம் எங்கும் காணப்படுகிறது. தன்னைத்தானே உயர்த்திக் கொள்கின்றவன் எவ்வளவுதான் தன்னை உயர்ந்தவனாகக் காண்பித்தாலும், ஒரு நாள் அவன் தாழ்ந்து போகின்ற சூழ்நிலை வந்தே தீரும். தேவனை மகிமைப் படுத்தும் நோக்குடன் செயல்படுவோரை தேவன் ஒருநாள் பலர் நடுவில் உயர்த்தவே செய்வார். அந்த உயர்வை ஒருவரும் தடுக்கவும் முடியாது. தாழ்ந்து போகச் செய்யவும் முடியாது.

ராட்சதனாகிய கோலியாத்தை தாவீது வீழ்த்தினான். இது ஒரு மாபெரும் சாதனை. இந்த சாதனைக்கு முக்கியமான ஒரு காரணம் தாவீதின் உயர்ந்த ஒரு நோக்கம் ஆகும். இஸ்ரவேலில் தாவீது என்ற பராக்கிரமசாலி உண்டென்பதை உலகம் அறிய அவண்டும் என்பது அவனுடைய நோக்கம் அல்ல. இஸ்வேலில் வல்லமையான ஒரு தேவன் உண்டு என்பதை உலகம் அறிய வேண்டும் என்பதே அவனுடைய நோக்கமாயிருந்தது. அவன் தன்னை ஒரு மாவீரனாகக் காட்ட வேண்டும் என்றோ, தன்னை முன்னிலைப்படுத்தி பெருமையடைய வேண்டும் என்றோ எண்ணாமல், தேவனை முன்னிலைப்படுத்தி அவருடைய வல்லமையை வெளிப்படுத்தவே ஆசைப்பட்டான்.

பிறர் நம்மை அறிய வேண்டும் என்றும், நம்முடைய விசேஷங்களை பிறர் காணவேண்டும் என்றும் எண்ணுவது இயற்கையே. ஆனால் இந்த சிந்தனை தேவனால் நமக்கு வரவேண்டிய மகிமைக்கு இடையூறாக அமைகின்றது. வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் தேவன் பிறர் நடுவில் அறியப்பட வேண்டும் என்றும், தேவன் மகிமைப்பட வேண்டும் என்றும் எண்ணுவதே ஆவிக்குரிய உயர்ந்த நோக்கங்களாகும்.

தன்னைத் தாழ்த்தி, தேவனை உயர்த்திப் பிடித்த தாவீதை தேவன் உலகமறிய உயர்த்திக் காண்பித்து மகிமைப்படுத்தாமல் விடவில்லை. நான் சிறுகவும், அவர் பெருகவும் வேண்டும் என்றான் யோவான் ஸ்நானன். அந்த யோவான் ஸ்நானன் எவ்வளவாக கர்த்தரால் உயர்த்திக் காண்பிக்கப்பட்டான் என்பதை நாம் அறிவோம். நம்மை நாமே பிரபலப்படுத்தி உயர்த்திக் காண்பிக்க விரும்பும் ஆகாத சிந்தையை விட்டொழிவோம். பலவேளைகளில் நம்மை நாமே உயர்த்திக் காண்பித்து, பிறருடைய நல்ல அபிப்பிராயங்களைப் பெற விரும்புவதால்தான், தேவனால் உயர்த்தப்படும் வாய்ப்புகளை இழக்க நேரிடுகிறது. தேவன் மகிமைப்படுவதே வாழ்க்கையின் நோக்கமாகக் கொள்வோம். அப்போது அவர் நம்மை எல்லோரும் அறியச் செய்வார்.

தன்னைத்தானே ஒருவன் உயர்த்திக் கொள்ளமுடியும். ஆனால் விழுந்துவிடாமல் தன்னைத்தானே காப்பதுதான் கடினம்.

அன்பும் சுவையும்

1 நாளாகமம் – 15:11-29 | **அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்... கலாத்தியர் – 5:6** | கலாத்தியர்-5:6-26

என்னுடைய மனைவி ரொம்ப சூப்பரா சமைப்பாள் என்றான் ஒருவன். இவனுடைய வீட்டில் பலமுறை சாப்பிட்ட அவனுடைய நண்பன் அதைக் கேட்டதும் அப்படி ஒன்றும் சூப்பரா இருந்ததை நான் பார்த்ததில்லையே என்றான். இல்லை இல்லை, எனக்காக அவள் சமைத்தால் சுவையாயிராது. ஆனால் அவளுடைய அம்மா, அப்பா, சகோதரர்கள் வரும்போதுதான் அவளுடைய சமையலின் சுவையைப் பார்க்க முடியும் என்றான்.

அன்பின் விளைவாகத் தூண்டப்பட்டு செயல்படும்போது, எந்தச் செயலும் நல்ல சுவையாகவும் சிறப்பாகவுமே இருக்கும். சில கணவன்மார்கள் எல்லாவற்றையும் சரியாகத்தான் செய்கின்றார்கள். ஆனால் அவை அன்பின் விளைவாகயிராமல், வெறும் குடும்பக் கடமையாயிருப்பதால் அந்தச் செயல்கள் யாரையும் விசேஷமாக சந்தோஷப்படுத்தவில்லை. சில மனைவிமார்கள் ஒரு மனைவிக்குரிய எல்லாப் பொறுப்புகளையும் நன்றாகத்தான் செய்கின்றார்கள். ஆனால் அவை உண்மையான அன்பினால் அல்ல, வேறுவழியின்றி குடும்ப பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்திற்காகச் செய்யப்படுகின்றது. எனவே அவை யாருக்கும் ஒரு திருப்தியையோ, மகிழ்ச்சியையோ கொடுக்கவில்லை. ஆம், உண்மையான அன்பும், கரிசனையான நோக்கமும் எங்கே இல்லையோ அங்கே எத்தனைதான் மலையளவு செயல்பாடுகள் இருந்தாலும், துளிஅளவு மகிழ்ச்சியை அவை எற்படுத்துவது கடினமே.

பலருடைய ஆவிக்குரிய செயல்பாடுகளும் இப்படியாகவே உள்ளது. ஜெபம், வேத வாசிப்பு, காணிக்கை, உபவாசம், ஆராதனை, இறைப்பணி என பல விஷயங்களில் அவர்கள் தொடர்ந்து ஈடுபடுகின்றார்கள். ஆயினும் அவர்களுக்கும் அவற்றால் பெரிய மகிழ்ச்சி இல்லை. இவற்றையெல்லாம் செய்கின்ற இவர்களால் பிறருக்கும் விசேஷ மகிழ்ச்சி இல்லை. எனவே பக்தியாய் பல காரியங்கள் நடைபெற்றும் அவை தேவனையும் பிரியப்படுத்தவில்லை.

வெறும் மதபக்தியாக அல்ல. ஆன்மீகக் கடமையாக அல்ல. இறை பயத்தின் விளைவாகவும் அல்ல. தேவ அன்பின் விளைவாக எதையும் செய்ய வேண்டும். தேவ உறவின் அனுபவத்தை இறைவாழ்க்கையில் மிக முக்கியமாகத் தேடினால்தான் இறைஅன்பை ருசிக்க முடியும். ஏனென்றால் அன்பு என்பது நல்ல உறவின் விளைவே. அந்த அன்பு உள்ளத்தைத் தொடும்போது கர்த்தருக்காக எதையும் கடமைக்காகச் செய்யாமல் கரிசனையோடு செய்வோம். அங்கே நமக்கும் மகிழ்ச்சி, பிறருக்கும் மகிழ்ச்சி, தேவனுக்கும் மகிழ்ச்சி.

இது ஏற்கனவே நீங்கள் அறிந்த உண்மைதான். ஆனால் எற்கனவே அனுபவித்த உண்மையா?

தாழ்மையும், உயர்வும்

1 சாமு – 15:10–29

தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்... யாக் – 4:6

யாக் – 4:1–11

தாழ்மை என்பது தேவனால் வரும் உயர்வுகளுக்கு நம்மைக் கொண்டு செல்லும் ஏணியாகும். எந்த அற்ப நிலையில் உள்ளவர்களையும் தேவன் ஆச்சரியமான முறையில் உயர்ந்த தகுதி நிலைகளுக்குக் கொண்டு வரமுடியும். ஆனால் தாழ்மை இல்லையெனில் தேவன் விரும்பினால் கூட, அவர்களை உயர்நிலைகளில் நிறுத்த முடியாது. எப்பொழுது தாழ்மை பண்பை நாம் விட்டு விடுகிறோமோ, அப்போதே தேவனால் வரவிருக்கும் மகிமையான ஆசீர்வாதங்களுக்குத் தடை ஏற்பட்டு விடுகிறது.

சவுலை தேவன் மிகுந்த உயர்நிலையில்தான் வைத்தார். ஆயினும் தாழ்மையின்மையால் அந்த உயர்பதவியில் அவனால் ஜொலிக்க இயலவில்லை. சாதாரண நிலையிலிருந்துதான் தேவன் யெரெபெயாம் என்பவனை ராஜநிலைக்கு உயர்த்தினார். ஆனாலும் தாழ்மை அவனை விட்டுச் சென்ற போது, தேவ கிருபையும் அவனை விட்டு விலகிப் போனது.

தாழ்மையின்மை பெரும்பாலும் கீழ்ப்படியாமையைத்தான் முதலாவது ஏற்படுத்துகிறது. தாழ்மைக் குறைவுதான் தேவ ஆலோசனைகளுக்கு இசைந்து போகாத மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. அமலேக்கியர் மேல் யுத்தம் செய்ய தேவ கட்டளை பெற்றுச் சென்ற சவுல் தேவன் கொடுத்த எல்லா ஆலோசனைகளையும் அப்படியே பின்பற்றவில்லை. தேவன் சொன்ன விதமாக ஆடுகளையும், மாடுகளையும் அழிக்க அவன் விரும்பவில்லை. தேவ ஆலோசனையைவிட தன்னுடைய சுய ஆலோசனையை முக்கிய ஆலோசனையாக எண்ணிச் செயல்பட்டபோது, அங்கே வீழ்ச்சிக்கு வழி ஏற்பட்டுப் போனது.

சில நேரங்களில் நம்மில் அனேகர் தேவன் செய்யச் சொன்ன விதமாகச் செய்யாமலும், வாழச்சொன்ன விதமாக வாழாமலும், சொந்தப் புத்தி சார்ந்து செயல்படுவதால் தேவனுடைய கிருபை அங்கே தடைபட்டுவிடுகிறது.

தேவ ஆலோசனைகள் சில நேரங்களில் நமக்கு நடைமுறைக்கு ஒவ்வாதது போல் தோன்றும். அவைகளால் உடனடியான ஆசீர்வாதங்கள் இல்லாமல் இருக்கும். எனவே உலக ஆலோசனைகளையும், மனிதர்களால் பின்பற்றப்படும் உலகத்திற்கேற்ற நடைமுறைகளையும் பின்பற்ற ஆரம்பிப்போம். இங்குதான் தாழ்மையின்மை தேவ கிருபைகளையும், ஆசீர்வாதங்களையும் தடை செய்கிறது. கர்த்தருக்குக் காத்திருந்து அவருக்கேற்ற வாழ்க்கைப் பாதையில் நடக்கின்றவர்களிடம் தேவ கிருபை என்றும் தங்கியிருக்கும்.

தேவன் சத்தியமானவர் என்று நம்பினால், அவர் சொன்னபடி வாழ்வது சாத்தியமானது என்று நம்பு.

ஜீவ நீரோடை

அன்பின் ஐக்கியம்

உபாகமம் - 15:1-11

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்...
யோவான் - 17:21

யோவான்-17 :10-26

காலை நேரம் காபி பார் ஒன்றில் காபி அருந்திக் கொண்டிருந்தார் ஒருவர். அங்குவந்த ஒரு மனிதன் அவரைப் பார்த்து "ஐயா காலை வணக்கம். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்றான். முன்பின் தெரியாத ஒருவர் தனக்கு வாழ்த்து கூறுவதைக் கண்டு மற்றவர் குழம்பினார். அவர் "உன்னை எனக்குத் தெரியாதே. எனக்கு ஏன் வாழ்த்துக் கூறுகிறாய்?" என்று கேட்டார் அவர். அதற்கு அவன் நீங்கள் வாழ்கின்ற இதே உலகத்தில்தான் நானும் வாழ்கின்றேன், எனவேதான் வாழ்த்து கூறினேன் என்றான்.

சிலர் ஒரே குடும்பத்திற்குள் இருந்தாலும் ஒருவரையொருவர் அறியாதவர்கள் போலும், அன்னியர் போலவும் வாழ்வார்கள். சிலர் திருச்சபையில் ஒரு தலை முறை காலம் வாழ்ந்தாலும் சக உறுப்பினரை எங்கேயாவது பார்த்தால் அதுவரை, ஒருவரையொருவர் அறியாதவர்கள் போல நடந்து கொள்வார்கள். ஒவ்வொரு மனிதனும் என் நண்பன், ஒவ்வொரு மனிதனும் சகோதரன் என்றொரு அழகான பழைய தமிழ் பாடல் உண்டு.

கடவுளை நேசிப்பதாகக் கூறுகின்ற பலர் சக மனிதனையே விரோதியைப்போல பார்ப்பார்கள். தேவனுடைய அன்பை அனுபவிப்பதாகக் கூறுகின்ற பலர், மனிதர் களை வெறுப்பதிலோ பின்வாங்குவதில்லை. ஒவ்வொரு மனிதனும் நம்மைப் படைத்த தேவனால் படைக்கப்பட்ட இன்னொரு மனிதன். ஒவ்வொரு மனிதனும் நம்மை நேசிக்கும் தேவனால் நேசிக்கப்படும் இன்னொரு மனிதன். எனவே இங்கு யாரும் அந்நியர்கள் அல்ல, யாரும் பரதேசிகள் அல்ல. பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூறுகின்றவர்கள் பிறப்பிக்கப்பட்டவர்களிடமும் அன்பு கூர வேண்டும் என்றான் அப்போஸ்தலனாகிய யோவான்.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சபை என்ற இடத்திற்கு வந்தாலும், சபை எதற்காக என்ற நோக்கம் அறிந்து வரவில்லை. தேவனை ஆராதிக்க வந்தோம் என்ற சிந்தனை உண்டே தவிர, தேவனுடைய அன்பினால் ஒருவரோடொருவர் நட்பு வளர்க்கவும், நல்ல ஐக்கியம் காணவும் வந்தோம் என்ற சிந்தனை இல்லை. எனவே ஆராதனைக்காக சபைக்கு வந்தும், ஐக்கியம் என்ற ஆவிக்குரிய நோக்கம் நிறைவேறவில்லை. பாவத்தால் மாசுபட்ட உலகத்தில் கிடைக்காமல் போகும் நல்ல ஐக்கியத்தை சபையில் பெறவேண்டும். அதுதான் சபையின் நோக்கம், ஒருவரையொருவர் பார்த்தால் புன்னகைப்போம், அன்பின் வார்த்தை கூறி பரிசுத்த ஐக்கியம் வளர்க்க ஆயத்தமாயிருப்போம்.

இறைவனை நோக்கிய உன் அன்பில் முழுமையில்லையேல்
மனிதனை நோக்கிய உன்அன்பு அரைகுறையாகவேயிருக்கும்.

வீணான ஜெபம்

எரேமியா - 7:1-20

நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் செய்ய வேண்டாம்... எரேமியா - 7:16

1 யோவான்-5 :14-21

மதியீனத்தினாலோ, அறியாமையினாலோ, சூழ்நிலை சந்தர்ப்பங்களின் கட்டாயத்தினாலோ அல்லது உணர்வில்லாத ஒரு வாழ்க்கையினாலோ ஒருவர் தேவனுக்கு விரோதமான செயல்களில் ஈடுபடலாம். அப்படிப்பட்டவருக்காக நாம் தேவனிடத்தில் வேண்டுதல் செய்யலாம். அந்த நபருடைய மனந்திருந்துதலுக்காக கர்த்தரை நோக்கி நாம் விண்ணப்பிக்கலாம்.

அதே வேளையில் ஒருவர் கர்த்தருடைய வேதத்தின் உண்மைகளை நன்கு தெரிந்திருக்கிறார். தான் சென்று கொண்டிருக்கும் பாதை வேதத்திற்குப் புறம்பானது என்பதை அறிகின்ற அறிவு உள்ளது. ஆனால் தவறுகளைவிட்டுத் திரும்புவதற்கான வாய்ப்புகளை அவர் ஏற்காமல், தொடர்ந்து மாறுபாடான நிலையில் வாழ்கின்றார். அப்படிப்பட்டவருக்காக நாம் ஜெபிப்பது வீணானது. அந்த ஜெபம் தேவனுடைய பதிலைப்பெறாது. அங்கே ஜெபிப்பதற்குப் பதிலாக, உரிய முறையில் அந்த நபரின் தவறைச் சுட்டிக்காட்டி மனந்திரும்பத் தூண்டுவதே கர்த்தருடைய வழியாகும்.

முரட்டாட்டமாக வாழும் ஊழியர்களும், அவிசுவாசிகளும் ஏராளம் உண்டு. அவர்களின் தவறுகளைக் குறித்து பேசக்கூடாது. ஆனால் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று நம்மில் பலர் கூறுவதுண்டு. அது தேவனைவிட நம்மை மிஞ்சின நீதிமானாகக் காட்டும் செயலாகும். இஸ்ரவேல் ஜனங்களுக்காக ஜெபித்த எரேமியாவை தேவன் ஜெபிக்காதே என்று கட்டளையிட்டார்? ஏன்? அவர்கள் கர்த்தருடைய வழியை நன்கு அறிந்திருந்தும், மனக்கடினத்தால் தேவனுக்கு எதிராக முரட்டாட்டமாக வாழ்ந்தார்கள். அவர்களுக்காக ஜெபிப்பது வீணானது என்று தேவன் சுட்டிக் காட்டினார். எனவேதான் எசேக்கியல் தீர்க்கதரிசியிடம் தேவன் நீ இந்த ஜனங்களுக்காக வழக்காட மனதானால் அவர்களின் அருவருப்புகளை அவர்களுக்குத் தெரியக்காட்டு என்றார். (எசேக் - 20:4)

ஜெபம் என்பது மிக மிக வல்லமையான ஒரு தெய்வீகக் கருவி என்பது உண்மை. அதே வேளையில் அனைத்து விஷயங்களுக்கும் அதனை மட்டுமே உபயோகிப்பது பலன் தராது. உணர்த்த வேண்டிய விஷயங்கள் உண்டு. கண்டிக்க வேண்டிய நேரங்கள் உண்டு. சுட்டிக்காட்ட வேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டு. எச்சரிக்க வேண்டிய கட்டாயங்கள் உண்டு. அங்கே அவைகளைத்தான் உபயோகிக்க வேண்டும். தாவீதின் பொல்லாப்பான செயலைக் குறித்து நாத்தான் அவனைக் கண்டித்தான். அவன் அந்த நேரத்தில் அதைச் செய்யாமல் ஜெபம் செய்து கொண்டிருந்திருந்தால் தாவீது தன் தவறை உணர்ந்து மனந்திரும்ப வழி ஏற்பட்டிருக்காது.

தவறை தவறென்று பார்க்கத் தவறும் போது, தவறற்றதை தவறென்று எண்ணித் தவறிப்போக நேரிடும்.

தேவ உறவினால் வல்லமை

நியாயாதிபதிகள் - 15:1-20

நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்...
யோவான் – 15:15

யோவான் - 15 :14-16

சிம்சோனின் வாழ்க்கையில் தேவ வல்லமை அதிகமாகச் செயல்பட்டது. தேவ வல்லமையினால் அவன் தனி மனிதனாயிருந்தும் பல்லாயிரங்களை எதிர்த்து நின்று அவர்களை ஜெயித்தான். ஆயினும் தேவவல்லமையை மிகுதியாகக் கண்ட அவனுடைய வாழ்க்கைமுறை யாருக்கும் முன்மாதிரியானதல்ல. எவ்வளவோ தேவ வல்லமை செயல்பட்டும் அந்த வல்லமை அவனுடைய குணங்களிலோ, பண்புகளிலோ, நடத்தையிலோ, மன இயல்புகளிலோ துளி அளவு கூட நல்லதைச் செய்யவில்லை.

காரணம் என்ன? ஒரு மனிதன் தேவனுடைய இரண்டுவிதமான வல்லமை களைக் காணவேண்டும். ஒன்று தேவனுடைய சர்வவல்லமையின் விளைவான வல்லமை, இன்னொன்று தம்முடைய ஐக்கியத்தின் அல்லது நட்பு றவின் விளைவான வல்லமை. சர்வ வல்லமையால் அதிசயமான காரியங்கள் நடக்கலாம். அற்புத மான காரியங்கள் நிகழலாம். வியாதிகள் அகன்று பிசாசுகள் ஓடலாம். ஆனாலும் இந்த வல்லமை ஆத்துமாவைப் பாதிக்காது.

தேவனுடைய உறவில் வாழ வருகின்றவர்களும், தேவ நட்பினை அனுபவிக்கின் றவர்களும் அவருடைய ஐக்கியத்தின் விளைவான வல்லமையை ஆத்துமாவில் உணருவார்கள். அதுதான் அவர்களுடைய சுபாவங்களையும், பண்புகளையும், இயல்புகளையும், எண்ணங்களையும், யோசனைகளையும், நடத்தைகளையும் பாதித்து உயர்ந்தவிதமான மாற்றங்களை ஏற்படுத்தும்.

தேவனால் உயர்த்தப்பட்ட தாவீதின் வாழ்க்கை நமக்கு நல்ல முன்மாதிரி. ஆனால் தேவனால் மிகுதியாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்த சாலொமோன் எவ்வளவோ ஞானியாயிருந்தும், அவன் நமக்கு நல்ல முன்மாதிரியல்ல. ஏனென்றால் தேவ வல்லமையின் விளைவாக அவன் மிகுந்த நன்மைகளைக் கண்டான். ஆயினும் அவன் இறை உறவில் வாழ ஆர்வம் காட்டாத மனிதன். எனவே தேவ வல்லமை யினால் அவனுக்குள் நல்ல சுபாவங்களும், பண்புகளும் ஏற்படவில்லை.

சிலுவையின் மூலமாக தேவன் நமக்குக் கொண்டு வந்தது என்ன? அதுதான் தேவனோடு நாம் நல்லுறவில் வாழ்வதற்கான ஆவிக்குரிய பாக்கியம். அந்த இறை உறவினால்தான் நம்முடைய உள்ளான மனநிலை மாறும். அதனால்தான் நாம் நல்ல திராட்சைக் கொடியாக விளங்கி, நல்ல கனிகளைக் கொடுப்போம். ஆம் தனிப்பட்ட இறை ஐக்கியமே நம்மை கனிதரும் மரங்களாக்கும்.

தேவனோடு நிலைத்திருப்பவன்
சோதனைகளால் நிலைகுலையாதிருப்பான்.

ஜீவ நேரோடை

பரலோக ஆவி

சங்கீதம் – 21 | தேவனுடைய ஆவியேயன்றி... 1 கொரி – 2:11 | 1 கொரி –2 :1–16

நாம் மனிதர்கள். நமக்குள் இயங்குகின்ற ஆவி மனித ஆவி. இந்த ஆவியால் இந்த உலகத்திற்குரிய சந்தோஷங்களை அறிந்து கொள்ளவும், உணர்ந்து கொள்ளவும் இயலும். ஆனால் உலகத்திற்குரிய இந்த ஆவியினால் தேவனுக்குரிய சந்தோஷங்களை, உணர்ந்து அதன் மேன்மையை எண்ணி மகிழ முடியாது. ஏனென்றால் அந்த தன்மை அதற்குக் கிடையாது. எனவே ஒரு மனிதனுக்கு உலகத்திற்குரிய ஒரு செல்வத்தைக் குறித்த சந்தோஷத்தை விட, பரலோக செல்வத்தைக் குறித்த சந்தோஷம் அதிகமாக வரமுடியாது.

ஒரு பங்களா கிடைக்கும் என்று சொன்னால் அவன் அதிகமாக உற்சாகம் அடைவான். ஆனால் பரலோகம் கிடைக்கும் என்றால் அந்த அளவு உற்சாகத்தை அவனால் உணர முடியாது. ஏனென்றால், பரலோகத்தைக் குறித்தும், பரலோக மகிமையைக் குறித்தும் அவன் மகிழ வேண்டும் என்றால் அவ்விதம் உணரத்தக்க ஒரு ஆவி அவனுக்கு வேண்டும். பரிசுத்த ஆவியின் வழியாகவே ஒருவன் விண்ணுலக சந்தோஷங்களை உணரவும், உணர்ந்து பூரிப்படையவும் முடியும். இதற்காகவே இயேசுவை ஏற்றுக்கொள்ளும் போது பரிசுத்த ஆவி நமக்குக் கொடுக்கப்படுகின்றது.

இந்நாட்களில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய சந்தோஷம் என்பதை உலகரீதியான செல்வங்களின் வழியாகவே பெற விரும்புகின்றனர். கர்த்தரால் வரும் ஆசீர்வாதங்கள் என்றால் பணம், பொருள், நல்ல சௌகரிய மான வாழ்க்கை என்றே எண்ணுகின்றனர். நித்தியம் சார்ந்த பார்வை அநேகருக்கு மிகவும் மங்கலாகவே உள்ளது. ஆபிரகாம் செல்வச் சீமானாயிருந்தும், அவன் தேவ ஆசீர்வாதங்களை உலகத்திற்குள்ளேயே பார்த்துக் கொண்டிருக்கவில்லை. அவனுக்கு வரப்போகிற உலகத்தைக் குறித்தும், அதனுடைய மேன்மைகளைக் குறித்தும் ஒரு நல்ல வெளிப்பாடு கிட்டியிருந்தது. எனவே அவன் உலக ரீதியான ஆசீர்வாதங்களை அற்பமாக எண்ணி, தேவனால் வரப் போகிறவைகளிலேயே மனதைப் பதித்தான்.

பரிசுத்த ஆவியை ஒருவன் பெற்று ஆவிக்கேற்ற வாழ்க்கையில் ஆழ மாகச் செல்லும் போது, அவனுடைய எண்ணங்களும், சிந்தனைகளும் வேறுபடத் துவங்குகின்றன. அந்த ஆவியினால் அவன் விண்ணுலகின் மகிழ்ச்சியை அனுபவிக்கத் துவங்குகின்றான். அந்த அனுபவத்தில் வளரும் போதுதான், அவன் பரலோகத்தைக் குறித்தும், மறு உலக மகிமைகளைக் குறித்தும் சிந்திக்கும் போது, விசேஷமான சந்தோஷத்தை அனுபவிக்கிறான். இன்று உங்களால் உலகச் செல் வங்களைவிட அதிகமாக பரலோகச் செல்வங்களைக் குறித்து மகிழ முடிகின்றதா?

உலகச் செல்வங்களுக்கு நீ உரிமையாளன் அல்ல. வெறும் உக்கிராணக்காரனே. கணக்குக் கொடுக்கத் தயாராயிரு.

நல்லவைகள் இருந்தும்

நீதிமொழிகள் - 16:1:17

ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு வருவார்கள்... மத்தேயு – 7:15

மத்தேயு -7 :13-29

சில துணிக்கடைகளை எனக்குத் தெரியும். அங்கே தரமான துணிமணிகள் இருப்பதில்லை. ஆனால் குறிப்பிட்ட ஒரு துணிக்கடையில் தரமான துணிமணிகளை வாங்கியிருக்கின்றேன். ஆனால் அந்த நம்பிக்கை சார்ந்து இன்னொருமுறை அந்தக் கடையில் வாங்கின ஒரு துணி மிகமிகத் தரமற்றதாகவும், போலியானதாகவும் இருந்தது.

சிலருடைய செயல்கள், குணங்கள் மோசமானவை. அவை வெளிப்படையாகத் தெரியும். எனவே தூரத்திலிருந்து கொண்டே அந்த மனிதனைப் புரிந்து கொண்டு, அவனிடம் எந்த தொடர்புகளையும் வைக்காமல் ஜாக்கிரதையாயிருக்கமுடியும். ஆனால் சிலரிடம் சில நல்ல செயல்களும், நல்ல பண்புகளும் இருக்கும். ஆனால் அந்த நல்ல விஷயங்களே சில நேரங்களில் நமக்குத் தீங்காகி விடுவதுண்டு. ஏனென்றால் அவர்களில் கண்ட சில நல்ல விஷயங்கள் அவர்களிடம் உள்ள சில தீய விஷயங்களை நாம் காணவிடாமல் செய்துவிடுகிறது. நல்ல விஷயங்களால் நாம் நம்பிக்கைக்குத் தூண்டப்பட்டு, தவறானவைகளால் வஞ்சிக்கப்பட நேரிடுகின்றது.

கத்தோலிக்க திருச்சபைகள், புராதன புராட்டஸ்டண்ட் திருச்சபைகள், யெகோவா சாட்சிகள், சார்லஸ் ரசலின் வேதாகம மாணாக்கர்கள், செவன்த்டே அட்வென்டிஸ்ட் போன்ற கிறிஸ்தவ திருச்சபைகள் சரியா, தவறா என்று கண்டு கொள்ளும் அளவிற்குத் தெளிவான அடையாளங்களைக் கொண்டதாக உள்ளன. அந்த அடையாளங்கள் வேதத்தின் படி சரியான கிறிஸ்தவ அடையாளங்களா இல்லையா என்பதை எவரும் அறியமுடியும். சத்தியம் சார்ந்த சரியான செயல்பாடடுகளும் ஆவிக்கேற்ற நல்ல போதனைகளும் அங்கே இல்லை.

ஆனால் இன்றைய பெந்தெகொஸ்தே திருச்சபைகள்தான் எவராலும் எளிதாகக் கண்டுபிடிக்க இயலாதவை. ஏனென்றால் அவற்றைப் பார்த்ததும் வேதம் சார்ந்த சில நல்ல அடையாளங்கள் உள்ளன. ஆனால் அவற்றின் அடிப்படையில் அணுகினாலோ, அங்கே எளிதாக அடையாளம் காண முடியாத ஏராளமான வேத விரோத விஷயங்களும். தவறான உபதேசங்களும் உள்ளன. பல நம்பிக்கை வைக்கத் தூண்டும் சில நல்ல விஷயங்களோடு அங்கே ஒருவரை வஞ்சிக்கின்ற விதமான பல தவறான விஷயங்களும் உள்ளன. பெந்தெகொஸ்தே திருச்சபைகளின் சில செயல்பாடுகள் எவரையும் ஈர்க்கும் விதமான நல்ல ஆவிக் குரிய தேற்றமுடையவைதான். ஆனால் அவற்றால் உள்ளன ஆனால் ஈர்க்கப் பட்டு உள்ளே சென்றாலோ உண்மையான இறை அனுபவங்களை என்றுமே அடையவிடாமல் தடுக்கும் பல தவறான போதனைகளும், உபதேசங்களும் உள்ளன. எனவே இந்த நாட்களில்பெந்தெகொஸ்தே திருச்சபைகள் விஷயத்தில்தான் அதிகமான ஞானமும், பகுத்துணரும் ஆவிக்குரிய அறிவும் தேவை.

உன்னைச் சுற்றி நடக்கும் தவறுகள் உன்னை உறுத்தவில்லையெனில் நீயும் தவறுகளுக்குள் இருக்கிறாய் என்பதே உண்மை.

ஜனவரி 24

தேவ உறவின் நோக்கம்

ஜீவ நீரோடை

லேவியராகமம் - 26:1:13

உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன்... லேவியராகமம் – 26:11

1 பேதுரு -1 :8-16

நண்பர் ஒருவருடைய வீடு வழக்கமாக எப்போதும் போதிய தூய்மையின்றியும், பொருட்கள் எதுவும் சரியான ஒழுங்குகளில் வைக்கப்படாமலும் தாறுமாறாகக் காட்சியளிக்கும். ஆனால் ஒருமுறை அவருடைய இல்லம் செல்ல நேர்ந்த போது, வீடு முற்றிலும் வித்தியாசமாகக் காட்சியளித்தது. எப்போதுமே காண முடியாத சுத்தமும், ஒழுங்கும் அங்கே காணப்பட்டது. எப்படி இந்த மாறுதல் ஏற்பட்டது? முக்கியமான உறவினர் ஒருவர் வெளிநாட்டிலிருந்து வந்து சில வாரங்கள் தங்கியிருந்ததாலேயே அந்த மாறுதல்கள் ஏற்பட்டிருந்தது.

தேவன் பரலோகத்திலிருக்கிறவராக நமக்கு அறியப்பட்டிருந்தாலும், அவர் பூமியில் நம்முடன் தங்குவதையே விரும்புகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் லட்சக்கணக்கில் வனாந்திரத்தில் தங்கியிருந்தபோது, தேவன் அவர்கள் நடுவில் தமக்கும் ஒரு பரிசுத்தமான தங்குமிடத்தை நிறுவக் கூறினார். (யாத் - 25:8) பல இடங்களில், தேவன் நான் என் ஜனங்களின் நடுவில் உலாவி, அவர்களுக்குத் தேவனாயிருப்பேன். என்றார். (லேவி - 26:12)

எதற்காக தேவன் பூமியில் வந்து தங்க வேண்டும்? பரலோகத்தில் இல்லாத சௌகரியங்களா பூமியில் உள்ளது? தேவன் நம் நடுவில் தங்க விரும்பும் முக்கிய மான காரணம் நாம் பரிசுத்தமாவதற்கே, பரிசுத்தராகிய அவருடைய ஐக்கியம் நமக்குக் கிடைப்பதின் மூலம் நாம் பரிசுத்தம் அடையும் வாய்ப்பு கிட்டுகிறது. தேவன் நம் நடுவில் தங்குவதற்காக, ஒரு பரிசுத்தமான சூழ்நிலை கட்டாயத் தேவையாகிறது. அதன் விளைவாக நம் வாழ்க்கை பரிசுத்தமடைய முடிகிறது.

ஆம். தேவன் நம் நடுவில் தங்குவது எதோ சில நன்மைகளைச் செய்வதற்காக மட்டுமல்ல. அவர் தங்குகின்ற இடம் பரிசுத்தமான இடமாக மாறுகிறது. அதன் மூலம் நாம் பரிசுத்தர்களாக மாறவேண்டும் என்ற தேவ நோக்கம் நிறைவேறுகிறது. நம்மை நாமே பரிசுத்தமாக்கிவிட முடியாது. நம்முடைய சுய முயற்சிகளும், சுயநீதிச் செயல்களும் தேவனுக்கு உகந்த பரிசுத்தர்களாக நம்மை மாற்றாது. தேவ உறவும், ஐக்கியமும் மட்டுமே நம்மைத் தேவனுக்கேற்ற பரிசுத்தர்களாக மாற்றும்.

எனவேதான் தேவன் நம் நடுவில் தங்கியிருக்கவும், நம் நடுவில் உலாவவும் விரும்புகிறார். அவர் எங்கே இருப்பாரோ அங்கே பரிசுத்தமும் இருக்கும். தேவன் நம்மோடிருந்தால் அவரால் பல நன்மைகள் கிடைக்கும் என்ற எண்ணத்தை மட்டும் கொண்டிராமல், அவருடைய உறவே நம்மைப் பரிசுத்தமாக்கும் என்ற விழிப்புணர்வோடு அதனை நாம் நாடிட கருத்தாயிருக்க வேண்டும்.

நிலத்துடன் வேர் பிணைந்தால் மரம் நிமிர்ந்து நிற்கும்.
இறைவனோடு இதயம் இணைந்தால் நம்பிக்கை நிலைத்து நிற்கும்.

ஜீவ நீரோடை

தேவாலயம் எங்கே?

ஏசாயா – 66:1-10

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும்... 1 கொரிந்தியர் – 3:16

1 கொரிந்தியர் -3 :11-23

பிரபலமான தேவஊழியர் ஒருவர் ஒரு பெரிய தேவாலயம் ஒன்றை கட்டுவதற்கு தேவன் தனக்கு கட்டளையிட்டிருப்பதாக பெரிதாக விளம்பரம் செய்தார். அநேகர் அதற்காக பெரிய அளவில் காணிக்கைகளையும் நன்கொடைகளையும் வாரிவழங்கினார்கள் ஆனால் வேதம் என்ன சொல்கிறது? தேவன் கைகளினால் கட்டப்பட்ட இடங்களில் தங்குவதில்லை (அப்-7 : 48, 17 : 24) வானத்தை சிங்காசனமாகவும், பூமியை பாதபடியுமாகவும் கொண்ட எனக்கு, எப்படிப்பட்ட ஆலயத்தைக் கட்டுவீர்கள் என்று எசாயா தீர்க்கன் வழியாகத் தேவன் கேட்டார்.

தாம் தங்கியிருக்கப் போகாத ஒரு இடத்தைக் குறித்து தேவன் எப்படித் தரிசனம் கொடுக்க முடியும்? தாம் தங்கியிருக்கச் சித்தம் கொள்ளாத ஒரு ஆலயத்தைக் கட்டும்படி தேவன் எப்படிக் கட்டளையிட முடியும்? ஒரு கால கட்டம் வரை தேவாலயம் என்ற ஒன்றை தேவன் அனுமதித்தார். ஆனால் பரிசுத்த ஆவியின் மூலமாக தேவனை அறிகின்ற அறிவை மனிதன் சரியாக பெற இயலும் காலகட்டம் வந்தது. அப்போது கட்டிடம் அல்ல, நீங்களே தேவன் தங்குகின்ற ஆலயம் என்ற உண்மையை நாமறியச் செய்தார். (1 கொரி – 3:16, 6:19)

ஆலயம் தேவாலயம் போன்ற கட்டிடங்கள் சார்ந்த ஆன்மீக நடவடிக்கைகள் பழைய ஏற்பாட்டோடு முடிந்துவிட்டன. இனி நாம் கோயில் கட்டி அங்கே தேவனைக் காண்பதோ, தரிசிப்பதோ, வழிபடுவதோ அல்ல. நாம் தான் தேவாலயங்கள். நம்மிடம் தேவன் தங்கி, நம் வழியாக அவர் தம்மை வெளிப்படுத்தி, நாம் வாழ்கின்ற விதங்களால் தேவன் கனமும் மகிமையும் பெறுகின்ற காலம் இது.

தேவனுடைய வாசஸ்தலங்களாகவும் அல்லது கோயில்களாகவும் வாழ வேண்டியர்களே கிறிஸ்தவர்கள். அவர்கள் கோயில் கட்டி ஆராதிக்கும் பக்த கோடிகளாக அல்ல. அவர்கள் தேவனைத் தங்களிடம் தங்கச் செய்யும் கோயில்களாக வாழ்ந்து பிறருக்கு தேவனைக் காண்பிக்க வேண்டிய பரிசுத்தவான்கள். கிறிஸ்தவ நம்பிக்கையாளர்கள் சபை கூடி வருவதற்கும், சகோதர ஐக்கியத்தை வளர்ப்பதற்கும், கர்த்தருடைய பணிகளை நிறை வேற்றவும் கட்டிடங்கள் தேவை. ஆனால் அவை தேவாலயங்கள் அல்ல. அவை தேவனுடைய பிள்ளைகள் கூடி வந்து ஆவிக்குரிய காரியங்களைச் செய்வதற்கான சபைக் கட்டிடங்களே.

மறுபடியும் பழைய ஏற்பாட்டிற்கு நம்மைக் கொண்டு செல்லும் தேவாலயக் கோட்பாடுகளை விட்டுத் திரும்புவோம். தேவனுடைய ஆலயங்கள் நாங்களே. நாங்கள் தேவனைப் பிறருக்குக் காண்பிப்போம் என்ற புதிய முழக்கத்தோடு செயல்பட சத்தியத்தை நோக்கி திரும்புவோம்.

**கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன் என்று உன் வாய் சொல்லட்டும்.
கிறிஸ்து உன்னோடிருப்பதை பிறர் கண்கள் பார்க்கட்டும்.**

ஜீவ நீரோடை

மிகுந்த கனி

நீதி - 10:1-20

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால்... யோவான் - 15:8

யோவான் - 15:1-16

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தெய்வீக நற்குணங்கள் என்னும் கனிகளைக் கொடுக்கின்ற வாழ்க்கை ஆகும். நம்முடைய ஜெபம், தியானம், சபைகூடுதல்கள், பாடல்கள், பிரசங்கங்கள் இவைகளினால் தேவன் மகிமைப்பட்டுவிட்டார் என்று நாம் முழுமையாகக் கூற முடியாது. நாம் நம்முடைய ஜென்ம சுபாவ அனுபவங்களைக் களைந்து விட்டு கிறிஸ்துவுக்கேற்ற சுபாவங்களை நம்மில் வெளிப்படுத்தும் போதுதான் தேவன் பிறர் நடுவில் மகிமைப்படுகின்றார். அந்தக் கனி கொடுக்கும் அனுபவத்திற்காகவே தேவன் காத்திருக்கின்றார்.

கனி கொடுப்பதுகூட ஏதோ ஒரு கிறிஸ்தவ பக்திக்காக சில நற்குணங்களை மட்டும் கொண்டிருப்பதல்ல. நாம் மிகுதியான கனிகளைக் கொடுக்கும்போதுதான் தேவன் மகிமைப்படுகிறார் என்று இயேசு சொன்னார். ஆனால் மிகுதியான கனி கொடுக்கும் அனுபவம் யாருக்குமே எளிதில் விரைவாக வந்துவிடாது. முதலில் சாதாரண கனி கொடுக்கும் அனுபவத்திலேயே அது ஆரம்பிக்கும். நம்மை நாமே செழிப்புள்ள திராட்சைச் செடிகளாக மாற்றிவிட முடியாது. தேவன் பரிசுத்த ஆவியின் மூலம்தான் நம்மில் அந்தக் கனி கொடுக்கும் அனுபவத்தை உருவாக்குகின்றார்.

ஆனால் நமக்குக் கிடைத்த கொஞ்சம் செழிப்பில் அல்லது குறைவான வாய்ப்புகளுக்கு நடுவில் எந்த அளவு கனி கொடுக்கிறோம் என்பதை தேவன் கவனிக்கிறார். தேவனை மகிமைப்படுத்துவதற்கும், நம்முடைய பரிசுத்தத்தையும், உண்மையையும் வெளிப்படுத்துவதற்கும் கிடைத்த சின்னச் சின்ன வாய்ப்புகளையும், சூழ்நிலைகளையும் நாம் சரியாகப் பயன்படுத்த விழிப்பாயிருக்க வேண்டும். நமக்கு முன்புள்ள கொஞ்சம் சூழ்நிலையில், மன உண்மையுடன் நடந்து அதற்கேற்ப கொஞ்ச கனிகளாவது கொடுக்கும்போதுதான், தேவன் மென்மேலும் நம்மை செழிக்கச் செய்கிறார். கனி கொடுக்கும் வாய்ப்புகளில் பெருகச் செய்கின்றார். அப்போது நாம் அதிகக் கனிகளைக் கொடுப்போம். அப்போதுதான் தேவன் மகிமைப்படுவார்.

நமக்குக் கிடைக்கும் கொஞ்ச வாய்ப்புகளில் உண்மையாயிருந்து கனி கொடுத்தால்தான், நமக்கு விசாலமான வாய்ப்புகள் கிடைக்கும் போது அதற்கேற்ப கனி கொடுக்கும் இயல்பு செயல்படும். கொஞ்சத்தில் உண்மையாயிராதவர்களுக்கு, மிகுதியாக வந்தாலும் உண்மையாயிருக்க முடியாது. பிலதெல்பியா சபையின் ஒரு முக்கியமான விசேஷம் என்னவென்றால், அதற்கு கொஞ்சம் பெலன் இருந்தும் வசனத்தைக் கைக்கொள்வதில் உறுதியாயிருந்தது. எனவே உயிர்த்தெழுந்த இயேசு அந்தச் சபையைப் பாராட்டியதோடு, அதற்காக திறந்த வாசலையும் வைப்பதாக வாக்களித்தார். (வெளி - 3:8)

கடந்த கால வரலாறு அல்ல. நிகழ்கால நிஜமாக விளங்குவதே கிறிஸ்தவம்.

ஜீவ நீரோடை

இருதயமா, தாலந்தா

11 நாளாகமம் - 7:12-22

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால்...
யோவான் - 3:3

யோவான் -3 :1-16

திரைப்பட இசைத்துறையில் இசைக் கருவி வாசித்த ஒரு வாலிபன் தன்னுடைய இசை தாலந்தை கர்த்தருக்காக பயன்படுத்த முடிவு செய்தான். எனவே சினிமா துறையை விட்டு வெளியே வந்தான். சபைகளிலும், சபைகள் நடத்தும் கூட்டங்களிலும் தன்னுடைய இசை தாலந்தை பயன்படுத்தினான். ஆயினும் இந்தப் புதிய திருப்பத்தினால் தனக்குள் ஒரு உண்மையான சமாதானத்தையோ, சந்தோஷத்தையோ, தெளிவையோ, திருப்தியையோ அவன் காணவில்லை.

கர்த்தருக்காக சினிமாத் துறையை விட்டு வந்த தனக்கு கர்த்தரால் விசேஷ நன்மை ஒன்றும் இல்லாததைக் கண்டு குழப்பமடைந்தான். ஆனால் ஒருநாள் உண்மையை அவன் உணர்ந்தான். தான் தன்னுடைய தாலந்தை கர்த்தருக்காகப் பயன்படுத்திய போதிலும் தன்னுடைய இருதயம் கர்த்தருக்கு உண்மையாக அர்ப்பணிக்கப்படாமலிருந்ததை அவனால் அறிந்து கொள்ள முடிந்தது.

நம்முடைய நல்ல தாலந்துகளை தேவநாம மகிமைக்காகப் பயன்படுத்துவது மிக மிக பாக்கியமான விஷயம். ஆயினும் கர்த்தர் நம்முடைய தாலந்துகளால் அல்ல, முதலாவது நம்முடைய இருதயத்தால் மகிமைப்பட விரும்புகிறார். நம்முடைய இருதயம்தான் முதலாவது அவருக்குப் பயன்படவேண்டும்.

நம்முடைய இருதயம் ஆண்டவருக்காக அர்ப்பணிக்கப்பட்டால் அதனை அவர் நற்குணங்களையும், நற்பண்புகளையும் வெளிப்படுத்தும் ஒன்றாக மாற்றுவார். இருதயம் நற்குணங்களாகிய கனிகளை அதிகமாகக் கொடுக்கும் போது கர்த்தர் மகிமைப்படுவார். அவர் கனப்படும் போது அந்த இருதயம் சமாதானத்தாலும் சந்தோஷத்தாலும், நல்ல தெளிவினாலும் திருப்தியடையும்.

சிலர் தங்களின் நல்ல அறிவையோ, நிர்வாகத் திறனையோ, பொருளாதார வலிமையையோ, குரல்வளத்தையோ, பேச்சாற்றலையோ, இசைத் தாலந்தையோ கர்த்தருக்காக தியாகமாகப் பயன்படுத்துவது உண்மை. ஆயினும் அவர்களின் இருதயமோ தேவனுக்குப் பயன்படுவதில்லை. ஏனென்றால் உண்மையான மன மாற்றம் மறுபடியும் பிறத்தல், பரிசுத்தமாகுதல் ஆகியவற்றை அவர்கள் வாஞ்சை யோடு தேடிப் பெறவில்லை.

ஆம் தேவன் முதலாவது நம்முடைய இருதயத்தை அவர் விரும்புகின்றபடி பயன்படுத்த, நாம் நம்மை அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

வெளியில் காட்டும் தோற்றங்கள் அல்ல
உள்ளே ஏற்படும் மாற்றங்களே முதல் தேவை.

ஜனவரி 28

ஜீவ நீரோடை

பலப்படுத்தும் சோதனை

சங்கீதம் – 18:1-19

ஆவியானவராலே வனாந்திரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்... லூக்கா – 4:1

லூக்கா –4 :1-15

சில நேரங்களில் வனாந்திரம் போன்ற எதிர்மாறான, விரும்பக்கூடாத சூழ்நிலைகள் தற்செயலாக நமக்கு ஏற்பட்டு விடுவதில்லை என்பது உண்மை. நாம் விரும்பமுடியாத, நமக்கு மனச்சோர்வை ஏற்படுத்துவது போன்ற சில வறட்சியான வாழ்க்கை நிலைகளுக்கு நேராக தேவனே நம்மைக் கொண்டு போவதுண்டு. அவ்விதமான சூழ்நிலைகள் வழியாகக் கடந்து சென்று, அவைகளை வெற்றியாகச் சந்தித்து, பயனுள்ள அனுபவங்களை நாம் அடையவேண்டும் என்பது, தேவனுடைய வழிநடத்துதலின் ஒரு நோக்கமாக உள்ளது.

எனவே மகிழத்தக்கதான சூழ்நிலைகளையும், உற்சாகமடையத் தக்கதான ஆசீர்வாதப் பகுதிகளையும் மட்டுமே நாம் தேவனால் வந்ததாக அடையாளப்படுத்த முடியாது. வனாந்திர சூழ்நிலைகளும் அவரால் அனுமதிக்கப்பட்டு நமக்கு வர முடியும்.

வனாந்திரம் போன்ற ஒரு கஷ்டமான சூழ்நிலை, தற்செயலாக வந்ததா, நம்முடைய தவறுகளினால் வந்ததா, சரியான தேவ ஐக்கியமின்மையின் விளைவாக வந்ததா அல்லது தேவனே நல்லதை நோக்கமாகக் கொண்டு அனும தித்து வந்ததா எ ன்றெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். ஆனால் அவற்றை எப்படிக் கண்டறிவது என்ற கேள்வி எழலாம்.

தேவன் நம்முடைய நன்மையை நோக்கமாகக் கொண்டு அனுமதிக்கும் வனாந்திரம் போன்ற சூழ்நிலைகள் நமக்கு பல சிரமங்களைத் தந்தாலும், அவைகளின் நடுவே நம்மோடு தேவ ஐக்கியமும், தேவ சமாதானமும் இருப்பதை உணர முடியும். முக்கியமாக தேவனால் அனுமதிக்கப்பட்டு வந்த கஷ்டங்களின் முடிவில் நாம் முன்னரை விட பலப்பட்டு இருப்போமேயன்றி, பலவீனப்பட்டிருக்க மாட்டோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆவியானவரால் வனாந்திரத்திற்குக் கொண்டு போகப்பட்டார் என்று வேதாகமத்தில் படிக்கின்றோம். (மத் – 4:1) ஆனால் அந்த வனாந்திரச் சோதனையில் அவர் பலவீனப்பட்டுத் திரும்பாமல், பலப்பட்டவராகத் திரும்பினார். (லூக் – 4:14) யோசேப்பு, தாவீது, தானியேல் ஆகியோர் வனாந்திரம் போன்ற சோதனைக் காலங்களைச் சந்திக்க நேர்ந்தபோது, அவர்கள் பலவான்களாக மாறினார்களேயன்றி, பலவீனர்களாகப் போய்விடவில்லை. ஆம். தேவனால் அனுமதிக்கப்பட்ட சோதனைகளின் முடிவில் நாம் பலசாலியாகவே மாறுவோம். அவ்விதம் இல்லையேல் நமக்குத் தற்பரிசோதனை தேவை.

உன் வாழ்க்கை எதிர்ப்புகளற்றதாகிப் போனால்
உன் வாழ்க்கையே உனக்கு எதிரியாகிவிடும்.

பயன்படாத வேத அறிவு

உபாகமம் – 11:1-16

இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ... மத்தேயு – 7:26

மத்தேயு -7 :17-29

மெக்கானிக்கல் இன்ஜினியரிங் கற்ற ஒருவருக்கு ஒரு வாகனம் எப்படி இயங்குகிறது என்பதும். அது மிகச் சரியாக இயங்க எது எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதும் தெரியலாம். ஆனாலும் அவை யாவற்றையும் தெரிந்து வைத்துக் கொண்டு ஒரு வாகனத்தை ஓட்ட இயலாதவராக அவர் இருக்க முடியும். ஒரு வாகனத்தின் இயக்கங்களைக் குறித்த அறிவு மட்டும் போதாது. அதனை முறைப்படி இயக்குவதற்கு அறிவு உதவி செய்து விடாது. அதனை இயக்கிப் பழகவேண்டும்.

இறையியல் கற்ற ஒருவர் யார் ஒரு வேத சம்பந்தமான விஷயம் சொன்னாலும் அவர் இதெல்லாம் நான் ஏற்கெனவே அறிந்த விஷயம் என்பார். ஆனால் ஆவிக்குரிய ரீதியான ஒரு சிறந்த பண்பையோ, சிறந்த செயலையோ அவரிடம் பார்க்க முடியாது. இவருடைய அறிவு இவருக்கு பெருமையை கொடுத்திருந்தும் ஒரு நல்ல வாழ்க்கை வாழ்வதற்கு உதவி செய்யவில்லை.

அனுபவமாக்கப்படாத அறிவு பிரயோஜனமற்றது. வேத அறிவு என்பது நம்முடைய அறிவுத்திறனை அதிகரிப்பதற்காக அல்ல. நம்முடைய வாழ்க்கையை வேதவழியில் அழகாக வாழ்வதற்காக. சிலர் சாப்பாடு பரிமாறுவதற்காக அழகழகான தட்டுகளையும், கோப்பைகளையும், டம்ளர்களையும் வித விதமாக வாங்கி கண்ணாடி போட்ட அலமாரியில் காட்சிப் பொருளாகவே வைத்திருப்பார்கள். அதில் யாருக்கும் உணவு பரிமாறமாட்டார்கள்.

அதுபோலவே பலருக்கு வேத அறிவு என்பது வெறும் காட்சியாக உள்ள தேயன்றி, எந்த மாட்சியும் அதனால் ஏற்படவில்லை. ஏனென்றால் மனந்திரும் புதல், இரட்சிப்பு, பரிசுத்த ஆவியின் ஐக்கியம் ஆகிய அடிப்படை கிறிஸ்தவ அனுப வங்களை உடையவர்களால் மட்டுமே வேத அறிவைப் பயன்படுத்த முடியும். மற்ற வர்கள் அதனை பெருமையாக எண்ணினாலும், அதனைப் பயன்படுத்தும் ஆர்வமோ, தாகமோ அவர்களுக்கு ஏற்படாது. சிலர் போதனைகளை நன்றாகவே கேட்பார்கள். ஆவிக்குரிய வேத அறிவைப் பெற அதிகப் பிரயாசம் எடுப்பார்கள். ஆயினும் அதன்படி வாழ விரும்பவும் மாட்டார்கள். அப்படியே வாழ விரும்பினாலும் அவர்களால் கூடாது.

இரட்சிப்பின் அனுபவம் பெற்று, பரிசுத்த ஆவியினால் இருதயத்தில் சத்திய தாகமும் பசியும் ஏற்பட்டால்தான் தேவனுடைய வழிகளில் நடக்கவும், சத்தியத்தின்படி வாழவும் வலிமை கிடைக்கும்.

வேதாகமத்தை கையில் ஏந்துகிறவன் அல்ல. வேதத்தை இதயத்தில் ஏந்துகின்றவனே கிறிஸ்தவன்.

புதிய காரியம்

எசாயா - 43:1-20

இதோ நான் புதிய காரியத்தை செய்கிறேன்... எசாயா - 43:19

லூக்கா -5 :1-11

நான் பல விஷயங்களை மிகுந்த ஆர்வத்தோடு துவக்கியிருக்கிறேன். ஆனால் எதையும் வெற்றியாகத் தொடர்ந்து முடித்ததேயில்லை. வக்கீலுக்குப் படித்து பட்டம் பெற்றேன். ஆனால் வக்கீலாகவில்லை. தொழில் துவங்கினேன், தோல்வியில் முடித்தேன். அரசியலுக்குள் புகுந்தேன், தொடர இயலவில்லை. சமுதாய நாட்டங்களில் பங்கு பெற்றேன், எதிலும் வேர்விடவில்லை. பிற மொழி பயில, இசைக்கருவி பயிற்சி பெற, சண்டைக்கலை கற்க இப்படி எதில், எதிலெல்லாமோ நுழைந்தேன். ஒன்றிலும் வெற்றியாய் தொடரவில்லை. கர்த்தருடைய ஊழியத்திற்கு வருகிறவரை இதுவே என் வாழ்க்கை நிலையாக இருந்தது. கர்த்தருடைய ஊழியத்திலும் தொடர்ந்து செல்வேனா, இடையில் நின்று விடுவேனா என்ற லேசான அச்சம் துவக்கத்தில் இருந்தது.

கர்த்தருடைய கிருபையினால் இன்றுவரை கர்த்தருடைய பணியில் முன்னோக்கியே போய் கொண்டிருக்கின்றேன். ஏனென்றால் ஊழியம் என்பது கர்த்தர் காட்டிய ஒன்று. அவர் காட்டிய அந்தப் பாதையில் எனக்கு இன்றுவரை பின்னடைவு இல்லை. ஆம் நேற்றுவரை நமக்கு என்ன நடந்தது என்பது முக்கியம் அல்ல. இன்று கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்ற நிச்சயம் இருந்தால், இனி நிகழ்வதெல்லாம் வித்தியாசமாகவேயிருக்கும். கடந்தகால தோல்விகள் என்ற கண்ணாடி வழியாகவே தொடர்ந்து காரியங்களைப் பார்க்கத் தேவையில்லை.

இரவெல்லாம் மீன்பிடிக்க முயன்ற பேதுருவுக்கு கிடைத்ததெல்லாம் தோல்விதான். எனவேதான் மறுநாள் காலையில் மீண்டும் வலைகளை ஆழத்தில் போடு என்று இயேசு சொன்னபோது, முந்திய நாள் இரவின் தோல்வியைக் குறித்த நினைவுதான் முதலில் வந்தது, ஆனால் பேதுரு நேற்று என்ன நடந்தது என்ற தன் அனுபவத்தைச் சார்ந்து நிற்காமல், இப்போது என்ன நடக்கும் என்று இயேசு சொன்னாரோ அதையே சார்ந்து நின்று செயல்பட்டான். அங்கே ஆச்சரியமான முடிவுகள் காத்திருந்தன. ஆம் கர்த்தருடைய வழிகாட்டுதலோடு முயற்சித்தபோது, அங்கே தோல்வி அல்ல, வெற்றியே காத்திருந்தது.

கர்த்தரோடிருக்கின்றவர்கள் சந்திக்கும் ஒவ்வொருநாளும் ஒரு புதிய துவக்கமே. அவரோடு நடக்கின்றவர்களுக்கு ஒவ்வொரு சந்தர்ப்பமும் ஒரு புதிய ஆரம்பமே. நேற்றுவரை கசந்த ஒரு மாராவின் வாழ்வு இன்று மதுரமாக மாற முடியும். நேற்றுவரை கற்பாறையாக இருந்த ஒரு இருதயம் இன்று அநேகரின் தாகந்தீர்க்கும் ஆறாக மாற முடியும். நேற்றுவரை கரைபுரண்டோடியே யோர்தானில் இன்று ஒரு பாதை தோன்றலாம். நேற்றுவரை தடையாக நின்ற ஒரு எரிகோ, இன்று ஒரு வாசலாக மாற முடியும். ஆம் தேவனோடிருந்தால் அங்கே புதிய காரியங்கள் நடக்கும்.

துன்பத்தின் பாதையில் நடந்தவர்கள்தான்
இன்பங்களின் இலக்கணத்தை நன்கு அறிவார்கள்.

உட்புறம் எப்படி?

ஜீவ நீரோடை

சங்கீதம் – 26:1-12

பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்... லூக்கா – 11:39

லூக்கா –11 :37-54

குறிப்பிட்ட ஒருவர் மிகவும் பக்தியானவர். அவர் தான் செல்லும் தேவாலயத்திற்குள் யாரும் காலணி அணிந்து வருவதை அனுமதிக்கமாட்டார். ஆலயத்தின் உட்பகுதி மிக மிகச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் இருப்பதற்கு அதிக பிரயாசம் எடுப்பார். வேதாகமத்தை யாராவது தரையில் வைப்பதையோ, சுத்தமற்ற இடங்களில் வைப்பதையோ பார்த்து விட்டால் சகிக்க இயலாமல் கஷ்டப்படுவார். யாராவது வேதாகமத்தை சற்று அலட்சியமாகக் கையாளுவதை காணநேர்ந்தால் அதனை மிக மிகப் பெரிய பாவம் என்று கண்டித்துப் பேசுவார்.

ஆனால் அவருடைய வாழ்க்கையில் வேதவார்த்தைகளின் படியான செயல்பாடுகளையோ, சுபாவங்களையோ பார்க்கமுடியாது, அவருடைய இருதயத்தில் கோபங்களும், விரோதங்களும், பொறாமைகளும் பேராசைகளும் பெருமைகளும், ஏராளமாயிருப்பதை எவரும் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

சிலருடைய வெளிப்பிரகாரமான அதிக பக்தி உட்பிரகார நிலையை உணர முடியாமல் செய்துவிடுகின்றனது. வெளித்தோற்றத்தில் காண்பிக்கப்படும் அதிகமான பயபக்தி, இருதயத்தின் உட்பகுதியை பார்க்கவிடாமல் செய்துவிடுகின்றது. ஒரு தேவ செய்தியாளர் ஒரு மணி நேரம் இருதயத்தில் காண வேண்டிய தூய்மையைக் குறித்து பேசினார். அதனை கேட்டுக்கொண்டிருந்த முக்கியஸ்தர் ஒருவர் இவர் காலணியைக் கழற்றாமல் எப்படி பிரசங்கம் செய்யலாம், மகா பரிசுத்தமான இடத்தில் காலணிகளை கழற்றாமல் எப்படி பிரசங்கிக்கலாம் என்பதைக் குறித்தே பலநாட்கள் வாக்கு வாதம் செய்துகொண்டிருந்தார். இருதயத்தில் தூய்மையைக் குறித்த பிரசங்கமோ அவருக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை.

புறஜாதிகள் வாழும் பகுதிகளுக்குச் செல்ல நேரிட்டால், அன்றைய பரிசேயர்கள் தாங்கள் தீட்டுப்பட்டதாக உணர்ந்து, வீட்டிற்கு வந்ததும் கால்களைக் கழுவி விடுவார்கள். ஆனால் அவர்களுக்குள் ஏராளமான தவறான சுபாவங்களும், தவறான சிந்தனைகளும் அவர்களை தீட்டுப்படுத்தியிருப்பதை அவர்கள் உணரவில்லை.

பரிசுத்தம், தூய்மை, பயபக்தி, ஆகியவற்றை முதலாவது இருதயத்திற்குள் உற்றுக் கவனிக்க வேண்டும். வேத வார்த்தைகள் தங்கும் இருதயத்தில் தீய எண்ணங்களும், நினைவுகளும் சுபாவங்களும் தங்கக் கூடாது என்ற ஆசையே மிகவும் முக்கியமானது.

நோக்கங்களில் தூய்மையில்லாதவன் கடைப்பிடிக்கும் வழிகள் வாய்மையுடையதாக இராது.

வேலையாள் அல்ல, பிள்ளை

உபாகமம்-9:1-12

இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்... கலாத்தியர் – 4:7

கலாத்தியர்-4:1-19

வேலைக்காரர்கள் அல்லது சம்பளத்திற்காக வேலை செய்கின்றவர்கள் முதலாளி கொடுக்கும் வேலைகள் எதுவோ அவற்றையே செய்யமுடியும். ஆனால் முதலாளியின் பிள்ளைகளோ இதை இதைச் செய் என்று சொல்லுகின்ற வேலைகளை மட்டுமல்ல. அவர்களால் தந்தையின் மனதை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டு, தந்தை சொல்லாமலே தந்தையின் விருப்பங்களைச் செய்ய முடியும்.

நாம் எதை எதைச் செய்ய வேண்டும், எதை எந்த நேரம் எவ்விதம் செய்ய வேண்டும் என்பதைக் குறித்த அனைத்து விபரங்களும் நமக்கு வேதத்தில் சொல்லப்படவில்லை. பழைய ஏற்பாட்டுக் கால இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய வேலையாட்கள் போன்ற நிலையில் இருந்தனர். அவர்கள் எதை எதை எப்படிச் செய்ய வேண்டும் என்ற பல விஷயங்கள் சட்டதிட்டங்களாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஆயினும் தேவனுடைய விருப்பங்களை முழுமையாக அறிந்து செயல்படும் வாய்ப்பை அவர்கள் பெறவில்லை. அவர்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட கட்டளைகளைக் கூடச் செய்து நிறைவேற்ற முடியவில்லை.

ஆனால் புதிய ஏற்பாட்டில் நாம் வேலையாட்களாக அல்ல. தேவனுடைய பிள்ளைகள் என்ற நிலையில் அழைக்கப்படுகின்றோம். ஏனென்றால் தேவனுடைய பிள்ளைகளாக நாம் தேவனுடைய ஐக்கியத்தில் வாழ்ந்து தேவனுடைய விருப்பங்களைப் புரிந்துகொண்டு செயல்படவேண்டும். இதுவே தேவனுடைய விருப்பம். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற உயரிய நிலையை அடைவதற்குத் தடையாயிருந்ததே பாவம். அதாவது நாம் தேவனுடைய உறவில் வாழ முடியாதபடி பாவம் நம்மை வெகுதூரமாக்கிவிட்டது.

இந்தப் பாவத்தை நம்மை விட்டு அகற்றி, தேவ உறவில் வாழ்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தவே இயேசு இந்தப் பூமிக்கு வந்தார். அதற்காகவே சிலுவை சுமந்து இரத்தம் சிந்தி பாவ நிவாரணபலி செலுத்தினார். இதனை உணர்ந்தவர்களாக கர்த்தருக்கு நம்மை அர்ப்பணிக்கும் போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாகப் பிறக்கின்றவர்களாகின்றோம்.

இனிப் பிதாவாகிய தேவனுடைய உறவில் வாழ்வதே நமக்கு ஆவிக்குரிய வாழ்க்கை. அந்த உறவில் வாழ்ந்து தேவனுடைய சித்தம் அறிந்து செயல்படுதலே ஆவிக்குரிய வாழ்க்கையின் நோக்கம் தேவ உறவைத் தேடி தேவசித்தம் அறிதலே ஆவிக்குரிய வாழ்க்கையின் வெற்றி.

ஆயிரம் கோடி வைத்திருக்கிறவனைவிட ஆண்டவரை இருதயத்தில் வைத்திருப்பவனே அதிகச் செல்வந்தன்.

ஜீவ நீரோடை

நன்மைக்குச் சாட்சி

உபாகமம்–15:1–15

உன் சகோதரரில் எளியவனான ஒருவன் இருந்தால்... உபாகமம் – 15:7

கலாத்தியர்–1:6–10

மிக அற்பமான நிலையிலிருந்து ஒருவர், அநேகரைத் தனக்கு கீழ் வேலைக்கு அமர்த்தி, தொழில் செய்கின்ற நிலைக்கு வந்தார். இந்த உயர்வு தேவனால் தன் வாழ்வில் நடந்த திட்டவட்டமான அற்புதம் என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. இதைக் குறித்து அவர் பல கிறிஸ்தவப் பத்திரிகைகளில் சாட்சி எழுதியுள்ளார், எந்த ஒரு கிறிஸ்தவக் கூடுகைக்கு அவர் சென்றாலும், கர்த்தர் தனக்குச் செய்த இந்த பெரிய நன்மையைக் குறித்துச் சாட்சி சொல்லும் வாய்ப்பை அதிகமாக எதிர்பார்ப்பார்.

ஆனால் இவரைச் சுற்றிலும் மிக வறிய நிலையில் பல உறவினர்கள் உண்டு. பொருளாதாரப் பிரச்சினையால் திண்டாடும் பலர் இவருக்கு நன்கு தெரிந்தவர்களின் பட்டியலில் உண்டு, இவருடைய வசதியான நிலை கண்டு சிறு உதவி கேட்டு வந்த பலர் உண்டு. ஆனால் அவரால் உதவி பெற்றவர்கள் ஒருவருமில்லை, தனக்கு கீழ் பணிபுரிகின்றவர்களின் ஒரு கஷ்டத்திற்குக் கூட உதவமாட்டார்.

இப்படியிருக்க இவருடைய சாட்சியில் என்ன மாட்சி உள்ளது? கர்த்தரால் உதவிபெற்றதாக ஊரெல்லாம் போய்ச் சொல்லியும், அந்த கர்த்தருடைய அன்பில் ஒரு சிலரைக் கூடத் தாங்கவில்லையேல் என்ன பயன்? அநேகருக்குத் தாங்கள் பெற்றுக்கொண்டதைக் குறித்த சாட்சியிருக்கிறதேயன்றி, அவர்களிடமிருந்து பிறர் நன்மையாக எதையும் பெற்றுக்கொண்ட சாட்சி இல்லை. அநேகர் தொடர்ந்து சாட்சி சொல்வது, கர்த்தர் தந்த நன்மையை அவர் எடுத்து விடுவாரோ என்ற அச்சத்தின் விளைவாகக் கூட இருக்க முடியும்.

கர்த்தரால் நன்மை பெற்றதாக நம்பும் எவரும், சாட்சி கூறலோடு நில் லாமல், இயன்ற உதவிகளால் தங்களின் தயவான சிந்தைக்கு நற்சாட்சி பெற வேண்டும். இதுதான் கர்த்தரை மகிமைப்படுத்தும் மேன்மையான வழி. கர்த்தரால் உயர்த்தப்பட்டவர்கள் தங்கள் உயர்வைச் சாட்சியாகச் சொல்வதோடு நின்றுவிடாமல், தங்களால் ஒரு சிலராவது உயர்வதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும்.

ஒரு சிலர் தங்களுக்குக் கிடைத்த வருவாய்களிலிருந்து ஒருபகுதியை பக்தி யாகக் காணிக்கை கொடுத்த போதிலும், தேவையுடைய எவருக்கும் ஒரு சிறு உதவியைக் கூடத் தர முன்வருவதில்லை. காணிக்கை எந்த அளவு முக்கியமோ அந்த அளவிற்குப் பிறரைத் தாங்கும் மனமும் மிக முக்கியம் என்பதை நாம் உணரவேண்டும். கர்த்தர் செய்த நன்மைக்காக அடுத்த முறை சாட்சி சொல்லும் முன்பு, உங்களால் யாருக்கு என்ன நன்மை கிடைத்தது என்பதைச் சிந்தியுங்கள்.

கர்த்தரிடமிருந்து எவ்வளவு நன்மைகள் பெற்றோம் என்பதை மட்டுமல்ல. நம்மிடமிருந்து பிறர் எவ்வளவு பெற்றார்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

தேவன் எதையோ தந்திருக்கிறார்.

ஏசாயா–25:1–12

நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும்... 11 கொரிந்தியர் – 4:8

11 கொரிந்தியர்–4 :1 –18

ஒருவர் நல்ல கிறிஸ்தவ பக்தியுடையவர். ஆயினும் அவர் தான் கேட்ட எத்தனையோ நன்மைகள் தனக்குக் கிடைக்கவில்லையே என்ற சிந்தனையை விட்டுவிட இயலாதவராயிருந்தார். தன்னுடைய வாழ்க்கைப் பாதையில் தடுக்கப்பட வேண்டும் என்று தான் விரும்பிய சில வேதனைக்கேதுவான விஷயங்களை தேவன் தடுக்கவில்லையே என்ற சோர்வு அவருக்குள் இருந்தது. எனவே அதிகமாக ஜெபித்தும் விசேஷமாக ஒன்றும் சாதிக்கப்போவதில்லை என்ற எண்ணம் அவருக்கு அடிக்கடி ஏற்பட்டது.

ஆயினும் அவருக்குள் நீ கர்த்தரால் விசேஷமானதொன்றைப் பெற்று அனுபவிக்கின்றாய் என்ற ஒரு உணர்வும் இருந்து கொண்டிருந்தது. தேவன் தனக்கு விசேஷமாக எதைத் தந்திருக்கின்றார் என்று சிந்திக்க ஆரம்பித்தார். தான் கேட்ட சில விஷயங்கள் கேட்டபடி கிடைக்காவிட்டாலும், தனக்கு அவசியமான ஒன்று தனக்குள் தேவனால் வைக்கப்பட்டிருப்பதை அறிந்தார்.

மிகமிக வருத்தமான வாழ்க்கைச் சூழ்நிலைகளின் வழியாக நடக்க நேரிட்டாலும், தனக்குள் ஒரு விசேஷமான அமைதியும், நம்பிக்கையுணர்வும், தொடர்ந்து முன்னோக்கிச் செல்லத் தூண்டும் ஒரு விசையும், தன்னிடம் செயல்படுவதைக் கண்டு கொண்டார். தான் கடந்து வந்த பாதையில் சந்தித்தவைகளில் விரக்தியடைந்து நின்று விடாமல் தொடர்ந்து செல்ல வைத்துக்கொண்டிருப்பது தேவன் அளித்த ஒரு விசேஷமானதோர் நம்பிக்கையுணர்வே என்று புரிந்து கொண்டார்.

யோசேப்பு கடந்து வந்த பாதையிலும், தாவீது கடந்து வந்த பாதையிலும், யாக்கோபு கடந்து வந்த பாதையிலும் சோதனைகளும், சோகமான நிகழ்வுகளும் பல வந்தன. ஆயினும் அவர்கள் முன்னோக்கியே கொண்டு செல்லப்பட்டார்கள். சூழ்நிலைகள் பின்னிட்டுப் போகத்தக்தாக இருந்தும், தேவனுடைய கிருபை மௌனமாகவும், வெளித்தோற்றமின்றியும் செயல்பட்டு இறுதியில் தேவ நோக்கம் நிறைவேறுதலின் பகுதிக்குக் கொண்டு வந்து சேர்த்து விட்டது.

ஆம், தேவன் நமக்கு எதையும் செய்யவில்லை என நாம் சொல்லலாம். ஆயினும் நாம் அவரை உண்மையாகத் தேடியதுண்டென்றால், அவர் நமக்காக நமக்குள் எதோ ஒன்றை ஆதரவாகச் செய்திருக்கின்றார் என்பதே உண்மை. அதுதான் நம்மை இதுவரை நடத்தி வந்துள்ளது.

கண்ணீரின் காலங்கள் வரும்போதுதான் கண்ணீரைத் துடைக்கும் கர்த்தரைக் காண்கின்ற கண்கள் திறக்கும்.

ஜீவ நீரோடை

முந்திச் செல்லாதே

நீதிமொழிகள் -16:1-20

எவனாகிலும் முதன்மையான வனாயிருக்க விரும்பினால்... மாற்கு – 10:44

மாற்கு-10:35-45

முன்பெல்லாம் நான் என்னுடைய மோட்டார் சைக்கிளில் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் சென்று கொண்டிருக்கும் போது, யாராவது என்னை முந்திச் செல்ல வருவதை உணர்ந்ததும், உடனே வாகன வேகத்தை அதிகரித்து, அவர்களை முந்தவிடாமல் தடுக்க அதிக ஆர்வமாயிருப்பேன். காலப்போக்கில் இது ஒரு தவறான மனோபாவத்தின் வெளிப்பாடு என்பதை உணர்ந்து கொண்டேன். யாரும் என்னை முந்திப் போய்விடக்கூடாது, அல்லது எல்லோரும் எனக்குப் பின்னால்தான் வரவேண்டும் என்ற பெருமையான ஒரு எண்ணம் ஏதோ ஒரு வடிவத்தில் அந்தச் செயலின் பின்னால் இருப்பதை அறிந்து அந்தப் பழக்கத்தை விட்டு விட்டேன்.சில நேரங்களில் முந்திச் செல்ல விரும்புகிறவர் எளிதாக முந்துவதற்கு ஏதுவாக நான் என் வாகன வேகத்தை குறைத்து வழிவிடுவதுமுண்டு. அங்கே நான் கண்ட ஒரு விஷயம் என்னவென்றால் மற்றவர்களை முந்திப்போக அனுமதிக்கின்ற சில வேளைகளில், அவர்களே வேகத்தை குறைத்து நான் முந்தி போகட்டும் என்று விட்டுவிடுகிறார்கள்.

சில நேரங்களில் எங்கும், எதிலும் நாம் முன்னணியில் முதல் நபராக நிற்க வேண்டும் என்ற எண்ணமும், மற்றவர்களை முந்திப் போக விடக்கூடாது என்ற சிந்தையும்தான், நமக்கு மற்றவர்களின் தேவையற்ற போட்டியையும் பொறாமை யையும், எதிர்ப்பையும் கொண்டு வருகிறது. இது நம்முடைய இயற்கையான நல்ல கொள்கையின் பாதையை விட்டு விலகிப் போகச் செய்து விடுகிறது.

தாவீதின் முக்கிய தளபதியாகிய யோவாப்பிற்கு இப்படிப்பட்ட ஒரு குணம் இருந்தது. தன்னைவிடப் பெரியவன் என்ற நிலைமை வேறு யாருக்கும் வந்து விடக்கூடாது என்ற சிந்தை அவனுக்கிருந்தது. எனவே அவன் அப்னேர், அமாசா ஆகியோரைக் கொலை செய்தான். ஆனால் இவைகளாலேயே தன்னுடைய மகிமையை இழந்தான். நான்தான் எங்கும், எதிலும் முதல் ஆளாக நிற்க வேண்டும் என்ற பெருமையின் சிந்தை, அவனுடைய வேகமான அழிவுக்கு வழிவகுத்தது.

எப்போதும் முந்தியே போகவேண்டும், பிறரைப் பின்னால் வரச் செய்ய வேண்டும் என்ற தவறான சிந்தை, தேவனால் வரவிருக்கும் எல்லா உயர்வுகளுக்கும் நம்மைத் தகுதியற்றவர்கள் ஆக்குவதோடு, நம்மைப் பின் தள்ளுகின்ற காரியங்களை அனும திக்கும்படி தேவனைத் தூண்டவும் செய்து விடுகிறது. தாவீது அரசனாகும்படியான அபிஷேகம் பெற்றவனாயிருந்தும், அவன் ஒரு போதும் சவுலை முந்திப் போக விரும்பியதில்லை. அவன் தன்னைத் தாழ்த்தி, பின்னால் நிற்க ஆயத்தமாயிருந் தான். எனவே தேவன் எல்லாத் தடைகளையும் நீக்கி, அவனை ராஜா என்ற உயர் பதவிக்கு எல்லா மகிமையோடும் கொண்டு வந்தார்.

நான் என்ற மனநிலையில் வளைந்து கொடுக்காவிட்டால் நாளை உன் வாழ்க்கை தலை நிமிர்ந்து நிற்காது.

ஜீவ நீரோடை

வீண் விமர்சனம்

நீதிமொழிகள்-12:1-28

துன்மார்க்கனுக்கு அவன் உதடுகளின் துரோகமே கண்ணி... நீதிமொழிகள் – 12:13

மத்தேயு-22 : 15 -33

சில நேரம் என்னுடைய ஊழியம் தொடர்பாகவோ, நான் பேசின, எழுதிய ஆவிக்குரிய விஷயங்கள் தொடர்பாகவோ சிலர் தங்களின் விமர்சனங்களையும் கருத்துகளையும் கூறுவார்கள். அவை அன்பின் விளைவாகவும், அக்கறையின் விளைவாகவும் இருப்பதுண்டு. எனவே சில விஷயங்களை மீண்டும் சிந்திக்கவும், சரி செய்யவும், திருத்திக்கொள்ளவும் வாய்ப்பு எற்படும். சில நேரங்களில் சிலர் நான் எழுதியதையும், பேசினதையும் புரிந்து கொள்ள வேண்டிய விதமாகப் புரிந்து கொள்ளாமல் விமர்சனம் செய்வார்கள். அவர்களுக்குத் தாழ்மையோடு தகுந்த விளக்கங்களைக் கொடுத்து மன ஐயங்களைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை உண்டு.

ஆனால் சிலர் எழுதுகின்ற விமர்சனங்களுக்கும், சுட்டிக்காட்டுகின்ற குறைகளுக்கும் பதில் கொடுக்க விரும்புவதில்லை. ஏனென்றால் அவர்களின் விமர் சனங்களுக்குப் பின்னால் அன்போ, கரிசனையோ, சத்தியத்தைக் குறித்த தாகமோ இருப்பதில்லை. பொறாமை, பெருமை, காரணமற்ற கோபம், யாரையும் ஏற்க விரும்பாத அன்பின்மை, நல்லதைப் பாராட்ட விரும்பாத மனநிலை ஆகியவற்றை அவர்களின் வார்த்தைகளில் பார்க்க முடியும். அவர்கள் எப்படியாவது ஒரு குறையைக் கண்டுபிடித்து அந்தப் பின்னனியைக் கொண்டு மனக்கஷ்டம் கொடுக்க வாய்ப்பு கிட்டாதா என்று யோசிப்பவர்கள்.

அவர்களுக்கு எத்தனை விளக்கங்கள் கொடுத்தாலும் அவற்றை ஏற்கவும் மாட்டார்கள், புரிந்து கொள்ள விரும்பவும் மாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் சத்தியத்தின் மேல் கொண்ட பற்றினால் விமர் சிக்காமல், தங்களின் பொல்லாத இருதயத்தின் பொறாமையினாலும், பெருமையினாலும், எரிச்சலினாலுமே அப்படிச் செய்கின்றார்கள்.

சில நேரங்களில் அக்கால பரிசேய சதுசேய மதத்தலைவர்களின் கேள்விக்கு இயேசு பதில் சொன்னதில்லை. ஏனென்றால் அவர்கள் ஒரு விஷயம் சரியா, தவறா என்பதைக் குறித்த வாஞ்சையினால் அல்ல. அவரைக் குற்றஞ்சாட்டி மகிழ் வதற்காகவே அப்படிக் கேட்டார்கள். எனவே பதிலோ, விளக்கமோ அவர்களுக்குப் பலன் தராது என்பதை அவர் அறிந்திருந்தார். சிலர் சரி எது, தவறு எது என்று தாங்களே முடிவு செய்து அந்தத் தீர்மானத்தில் சற்றும் மாற விரும்பாத மனநிலையோடு இருப்பார்கள், அவர்களுக்கு எவ்வளவு விளக்கம் கொடுத்தாலும் பயனில்லை. அவர்களின் மனம் மாற வேண்டும். அப்போது அவர்களுக்கே எல்லாம் விளங்கி விடும்.

உன்னைக்குறித்துச் சரியான கணக்கீட்டைக் கொண்டிரு பிறருடைய சரியற்ற கணக்கீடு உன்னைப் பாதிக்காது.

தவறான பக்தி

நீதிமொழிகள்-31:10-31

உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள்... ரோமர் – 14:16

ரோமர்-14 :12 -23

அந்த சகோதரி மிகுந்த ஆவிக்குரிய வாஞ்சை உடையவர்கள். சுற்று வட்டாரங்களில் மட்டுமன்றி, பிறரோடு சேர்ந்து வெளி ஊழியங்கள் செய்வதிலும், ஜெபக்கூட்டங்கள், உபவாசக் கூட்டங்களில் கலந்து கொள்வதிலும் அதிக ஈடுபாடுடையவர். அவர் ஜெபக்கூட்டம், உபவாசக்கூட்டம், பெண்கள் கூட்டம், கைப்பிரதி ஊழியம் என்று செல்கின்ற பல வேளைகளில் அவர் வீடு திரும்பக் காலதாமதமாகி, பள்ளிக்கூடத்திலிருந்து வரும் பிள்ளைகள் பசியோடு பக்கத்து வீட்டில் காத்திருப்பார்கள். கணவன் வீடு திரும்பும் பல வேளைகளில் அந்த சகோதரி வீட்டில் இருப்பதில்லை. உழைத்து வீடு திரும்பும் கணவன், வீட்டில் எதுவும் சமைக்காதிருப்பதைக் கண்டு ஓட்டல்களுக்குப் போய்ச் சாப்பிட நேரிடும்.

அந்த சகோதரியின் கணவர் பக்தியுள்ளவராயிருந்தும், மனைவியின் அளவு மிஞ்சிய ஆவிக்குரிய நடவடிக்கைகளால், ஆவிக்குரிய வாழ்க்கையிலே சலிப்புற்றுப் பின்வாங்கிப் போனார். அந்த சகோதரியின் நியாயமோ எனக்குக் குடும்பத்தை விட கர்த்தர் முக்கியம், வீட்டு அலுவலை விட ஊழியமே முக்கியம் என்பதாயிருந்தது.

இது ஒரு தவறான சித்தாந்தமாகும். அறியாமையின் விளைவாக கர்த்தருடைய நாமத்தைத் தூஷிக்க இடம் கொடுப்பதாகும். குடும்பத்தை விட, கணவரை விட, கர்த்தரும், ஆவிக்குரிய வாழ்க்கையும் முக்கியம் என்பது உண்மை. அதே வேளையில் ஆவிக்குரிய வாழ்க்கையிலிருப்பவர்கள், கணவனைக் குறித்தும், பிள்ளைகளைக் குறித்தும், குடும்பத்தைக் குறித்தும் கர்த்தர் தந்துள்ள ஒழுங்குமுறைகளைப் பின்பற்றவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

கணவனுக்குக் கீழ்ப்பட்டிருக்கிற, பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்கிற, குடும்ப சமாதானத்தைக் காத்துக் கொள்கின்ற பொறுப்புகளை அலட்சியப்படுத்திவிட்டு, ஆவிக்குரிய விஷயங்களில் அதிக கவனம் செலுத்தினாலும் அது ஆரோக்கியமானதல்ல.

சம்பளத்திற்குப் பணி புரிகிற சிலர் அதிக பக்தியால், வேலை நேரங்களில் ஊழிய சம்பந்தமான வேலைகளைச் செய்வார்கள். சிலர் ஊழிய சம்பந்தமான காரியங்களுக்கு அலுவலக வாகனம், மற்றும் தொலைபேசியை அதிகமாக உபயோகிப்பதுண்டு. தேவன் எதையும் நாம் உண்மையோடும், ஒழுங்கோடும், ஞானத்தோடும் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். சில ஒழுங்குகளுக்கும், கடமைகளுக்கும், பொறுப்புகளுக்கும் சரியான முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருக்காகச் செய்வதாக எண்ணிப் பல நன்மையான காரியங்களைச் செய்தாலும், அதனால் கர்த்தரின் நாமம் மகிமைப்படாது.

உயர்ந்த கொள்கையில் உறுதியாயிருப்பவன்
தான் செய்யும் செயல்களில் சிறப்பாயிருப்பான்.

ஜீவ நீரோடை

நாம் யார்?

நெகேமியா-6:1-14

என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்... 1 கொரிந்தியர் – 4:4

1 கொரிந்தியர்- 4:1 -14

சில நேரம் என் சிறுவயது மகனுக்கும் அவனுடைய அக்காவிற்கும் திடீர் என்று சண்டை ஆரம்பித்துவிடும். அவனைக் கோபப்படுத்த அவளுக்கு வேறு வாய்ப்புக் கிட்டா விட்டால் நீ ஒரு முட்டாள் என்று சொல்லி விடுவாள். கடின மான வார்த்தைகளைத் தாங்குவதில் சற்று பலவீனமான அவன் அழுதுகொண்டே என்னிடம் வருவான். "அவள் என்னை முட்டாள் என்று சொல்கிறாள்" என்பான். நான் அவனிடம் "நீ ஒரு முட்டாளா இல்லையா?" என்று கேட்பேன். அவன் நான் முட்டாள் இல்லை என்பான். நான் உடனே நீ முட்டாள் இல்லையென்றால் அவள் சொன்னதை நம்பி ஏன் அழுகின்றாய், என்று கேட்பேன். அவன் அழுகையை நிறுத்திச் சிரித்து விடுவான்.

சுமார் 25 வருடங்களுக்கு முன்பு முக்கியமான பாஸ்டர் ஒருவர் என்னைப் பார்த்து புத்தகம் எழுதுவதற்கு உனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்டு விட்டார். அது ஊழியத்தின் துவக்க காலமாக இருந்ததால் எனக்கு அதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் மனப்பக்குவம் இல்லை. நான் இரவெல்லாம் ஒரு சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு, எனக்கு தகுதியில்லையா, தகுதி யில்லையா என்று புலம்பி அழுதுகொண்டு அப்படியே தூங்கிவிட்டேன். மறுநாள் சாயங்காலம் உன்னைத் தகுதிபடுத்தியது நான், அதில் உனக்கு ஏன் சந்தேகம் வந்தது என்ற தேவகுரலை ஆத்துமாவில் உணரும் வரை என் துக்கம் நீடித்தது.

பிறர் நம்மை அறியாமையின் விளைவாகவோ, ஆத்திரத்தின் விளை வாகவோ, நல்ல இருதயம் இல்லாமையின் விளைவாகவோ தவறாகக் கணக்கிடவோ, பேசவோ, விளம்பரப்படுத்தவோ செய்யலாம். ஆனால் அவர்கள் பேசின விதமாகவோ, கணக்கிட்ட விதமாகவோ நாம் இல்லை. அதனை நாம் அறிந்துகொண்டால், மற்றவர்களின் கூற்றைக் கேட்டு மனங் கசந்து போகத் தேவையில்லை.

தேவ சமுகத்தில் நாம் நம்மைச் சரியாக அடையாளங்கண்டுகொள்ள வேண்டும். அப்போது பிறர் நம்மை எப்படி அடையாளங்காட்டினாலும், நம்முடைய உண்மையான அடையாளத்தைக்குறித்த உறுதியோடிருக்க வேண்டும்.

எவ்வளவேனும் குறை குற்றம் இல்லாத மகாப் பரிசுத்தராகிய இயேசுவை அக்கால மதவாதிகள் சரியாகப் பார்க்கவில்லையே, அவர்கள் பிசாசுகளின் தலைவன் என்றும் அவரை பெயெல் செபூலினால் பிசாசுகளைத் துரத்துகிறவன் என்றும் ஜனங்களை வஞ்சிக்கின்றவன் என்றும் அவரை அடையாளம் காட்டினபோது, இயேசு அதற்காகக் கவலைப்படவில்லை ஏனென்றால் அவை இயேசுவின் அடையாளங்கள் அல்ல.

நல்லவனைப் பாராட்டு.
இன்னும் அவன் நல்லதைச் செய்வான்.

ஜீவ நீரோடை

இறையியல் அறிவு

சங்கீதம் - 119:57-72

நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு... மத் - 7:24

மத்தேயு -7 :14 -29

குறிப்பிட்ட ஒரு சகோதரருக்கு வேதாகம சம்பந்தமான விளக்கங்களை அறிவதென்றால் அலாதிப்பிரியம். வேதத்தை விளக்கும் பல புத்தகங்களை விரும்பி படிப்பார். வேதாகம ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் எங்கு நடந்தாலும் போய்விடுவார். பல்வேறு ஸ்தாபனங்கள் அளிக்கும் வேதாகமக் கல்வித் திட்டங்களில் ஆர்வமாய் பங்கேற்பார். வேதம் சம்பந்தமாக யாராவது சற்று வித்தியாசமாகப் பேசினாலோ, போதித்தாலோ, அவர்களது கருத்தைத் தவறு என வேதாகம ஆதாரங்களோடு சிறப்பாக நிரூபிப்பார். ஆனால் அவருடைய வாழ்க்கையிலோ, பிறரோடுள்ள தொடர்புகளிலோ, குணநிலை விஷயங்களிலோ, பிற பண்பு நிலைகளிலோ எந்த வித கிறிஸ்தவத் தன்மைகளையும் பார்க்க முடியாது.

இறையியலை அறிந்து கொள்வது என்பது வேறு. இறைவனை அறிந்து கொள்வது என்பது வேறு. வேதாகமம் சம்பந்தப்பட்ட காரியங்களைப் போதிக்கும் கல்லூரிகளுக்குச் சென்று, படித்து பலவிதப் பட்டங்களைப் பெற்று இறையியல் வல்லுனர்களாக விளங்க முடியும். விஞ்ஞானம், வரலாறு, பொருளாதாரம் போன்ற கல்வித் துறைகளைக் கற்றுத் தேறுவது போல், ஒருவர் இறையியல் கல்வியையும், தன்னுடைய மூளையின் மூலம் கற்றுத் தேற முடியும். ஆனால் அவை ஒருவரை ஆவிக்கேற்ற மனிதனாக மாற்ற இயலாது. இத்தகைய அறிவினில் தேர்ச்சி பெற்ற பலரிடம், ஒரு துளி அளவு கூட தெய்வீக குணாதிசயங்கள் காணப்படாமல் போவதுண்டு.

நாம் வேத அறிவு மிகுந்தவர்களாக மாற வேண்டும் என்பது அல்ல தேவ னுடைய பிரதான நோக்கம். வேதத்திற்கேற்றபடி நம் வாழ்க்கை பண்பட்டதாக மாறவேண்டும் என்பதே அவருடைய பிரதான நோக்கம். வேதாகமத்தைப் பல கோணங்களில் ஆராய்ந்து கிறிஸ்துவைப் பற்றி நாம் அதிகம் அறிந்து கொள்வதல்ல. கிறிஸ்துவைப் போல நாமும், தெய்வீகத் தன்மைகளுடன் மாறிக் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

பலர் வேத விளக்கங்களை மிகுந்த ஆர்வத்தோடு கேட்பார்கள். ஆனாலும் அவற்றை மூளையின் வழியாகக் கேட்டு, சிந்தனை நிலையில் மகிழ்வார்களேயன்றி இதயத்தில் அவைகளை ஏற்று, ஆத்துமாவில் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்க மாட்டார்கள். எனவே அவர்கள் வேத அறிவு மிகுந்தவர்களாக விளங்கினாலும், அனுதின நடைமுறை வாழ்க்கையில் தேவனுடைய வழிகளையும், விருப்பங்களையும் அறியாதவர்களாகவேயிருப்பார்கள். தேவனோடு தனிப்பட்ட ஐக்கியம் கொண்டு, அவரிடமிருந்து கேட்டவைகளைச் செயல்படுத்த முனையும்போதுதான், தேவனுடைய ஆவியின் துணையினால் தேவனுக்கேற்ற சுபாவங்களும், தெய்வீக இயல்புகளும் நம்மில் வெளிப்படும்.

வேதத்தை ஆராயந்து பார்த்தால் அறிவாளி ஆகலாம்.
வேதத்தால் நம்மை ஆராய்ந்து பார்த்தால் பரிசுத்தர்கள் ஆகலாம்.

சுவைக்கேற்ற போதனைகள்

ஏசாயா - 28:1-16

தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களை... 11 தீமோத்தேயு - 4 : 3

11 தீமோத்தேயு - 4 :1 -11

ஒருவர் எங்கு சென்றாலும் தனக்கு விருந்து உபசரணை செய்கின்றவர்கள் தான் விரும்புகின்ற விதமான அயிட்டங்களையே தனக்குச் சமைத்து தரவேண்டும் என்று எதிர்பார்ப்பார். சிலர் இவர் விஷயத்தில் மிகவும் அதிருப்தி அடைவார்கள். ஏனென்றால் இவர் விரும்புகின்ற விதமான உணவு அயிட்டங்களை அவர்களுக்கு நன்கு செய்யத் தெரியாது. அவர் விரும்பிய அளவிற்கு அவை சுவையாயிராவிட்டால் உடனையே, அதைக் குறித்துத் தன்னுடைய அதிருப்தியைக் காட்டிவிடுவார்.

நம்முடைய சுவைகளுக்கேற்றபடி விருப்பமான உணவைக் கேட்பது தவறல்ல. ஆயினும் விருந்து தருகின்றவர்களின் தேர்வுகளுக்கும், விருப்பங்களுக்கும் நாம் மதிப்புக் கொடுக்கவும் வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையிலும் சிலருடைய நிலை இதுதான். அவர்கள் தேவனுடைய வார்த்தைகள் என்பதும், ஆவிக்குரிய செய்தி கள் என்பதும் தாங்கள் எதிர்பார்க்கும் ரகமாகவும், தங்களின் மனச்சுவைகளுக்கு ஏற்றதாகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

தொடர்ந்து தேவ செய்தி கேட்கும் ஒருவர் வழக்கமாக ஒருவர் செய்திவேளை முடிந்ததும் சாதாரணமாகப் போய் விடுவார். ஒருநாள் வழக்கத்திற்கு மாறாக மிகவும் பிரியத்தோடு பிரசங்கம் கேட்டார். பிரசங்கம் முடிந்ததும் பிரசங்கியாரிடம் வந்து, இதுதான் நான் ரொம்ப நாளாய் எதிர்பார்த்த செய்தி. இன்றுதான் உங்களின் தேவசெய்தி என்னைத் தொட்டது என்றார்.

ஆம், அவருடைய உள்ளத்தைத் தொடுவதற்கும், திருப்தியை உணர்வதற்கும் ஒரு குறிப்பிட்டவிதமான ரகத்தையும் சுவையையும் குறித்திருக்கின்றார். ஆனால் உண்மையான தேவ செய்திகள் அப்படியிராது. அவை வேதத்திற்கேற்றதா, வேதத்தோடு ஒத்துப் போகிறதா, என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பயனுள் ளதா என்றுதான் பார்க்கவேண்டும். என்னுடைய சுவைக்கும் பிரியத்திறகும் ஏற்றதாக தேவ செய்தி அமைய வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமல்ல. தேவ செய்தி என்பது தேவ ஆவியானவர் நம்முடைய ஆவிக்குரிய தேவையின் அடிப்படையில் அருளுவதாகும். அதனை நம்முடைய மனதின் சுவை ஈடுபாடுகளின் அடிப்படையில் எதிர்பார்க்க முடியாது. மருத்துவர் தருகின்ற மருந்தை ஏற்கின்ற நோயாளியைப் போல நாம் இருக்கவேண்டும். அதற்குப் பதிலாக, உணவகத்தில் நமக்குப் பிரியமான அயிட்டத்தை ஆர்டர் செய்து சாப்பிடுவது போல அது இருக்கக்கூடாது. தேவசெய்தி என்பதை தேவ ஆவிக்கு இசைந்ததா என்றும், நம்முடைய பக்திவிருத்திக்குப் பியோஜனப்படுமா என்றுதான் பார்க்க வேண்டும்.

தன்னுடைய நியாயத்தை தலைமேல் வைக்க விரும்புகிறவன் தேவ நியாயத்தைக் காலின் கீழ் போட்டுவிடுகிறான்.

மனிதருக்கு அன்பு

ஆதியாகமம் - 14:11-16

இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்... யோ – 3 :16

மத்தேயு -5 :35 -48

ஒருவரிடத்தில் அன்புகாட்டவும், அவருக்கு மரியாதை கொடுக்கவும், அவரோடு சமாதானமாகப் போகவும், அவர் நாம் நம்புகிறதையெல்லாம் நம்பி, நம்முடைய கருத்துகளுக்கெல்லாம் உடன்பட்டவராயிருக்கத் தேவையில்லை. அவர் மனிதராக இருந்தால் மட்டுமே போதும். நாம் நல்லவர்களை நேசிக்க அழைக்கப்படவில்லை. மனிதர்களை நேசிக்கவே அழைக்கப்பட்டோம்.

சிலருக்கு அவர்களுடைய ஜாதியினரையோ, மாவட்டத்தினரையோ, அவர்கள் ஐக்கியம் கொண்டுள்ள சபைப்பிரிவினரையோ பார்த்தவுடன் ஒரு விசேஷ பாசம் பொங்கி வழிந்து விடுகிறது. ஆனால் அதே பாசத்தின் ஒரு சிறு பகுதியைக்கூட பிறர் விஷயத்தில் காண்பிப்பதில்லை. தேவன் யூதர்களிடம் அன்பு கூர்ந்தார் என்றோ, பக்திமான்களிடம் அன்பு கூர்ந்தார் என்றோ, தம்மை விசுவாசிக்கப் போகிறவர்களிடம் அன்பு கூர்ந்தார் என்றோ வேதம் சொல்லாமல், உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்றே சொல்லுகிறது. உலகத்தில் நல்லவர்களும் உண்டு, தீயவர்களும் உண்டு. தேவ அன்போ எல்லோருக்கும் வெளிப்பட்டது.

சில நேரங்களில் நம்மோடு உடன்படாதவர்களும், நம்முடைய கருத்துக்கு எதிரானவர்களும் அன்பிற்கும் மரியாதைக்கும் தகுதியற்றவர்கள் என எண்ணிவிடுகிறோம். லோத்து ஆபிரகாமின் ஆவிக்கு இசைந்திருக்கவில்லை. ஆபிரகாமின் வழிக்கு உடன்பட்டிருக்கவும் இல்லை. லோத்துவை வெறுக்கவும், விலக்கவும் அவனுக்கு நியாயங்கள் உண்டு. ஆயினும் ஆபிரகாம் லோத்துவின் விருப்பத்தின் பாதையில் போக அவனை விட்டு விட்ட போதிலும், அவன் மேல் வைத்திருந்த அன்பையும், கரிசனையையும் விட்டுவிடவில்லை. எனவேதான் லோத்துவிற்கு ஒரு ஆபத்தான நேரம் வந்தபோது, அவன் தன்னுடைய வழிக்கு உடன்படாதவன்தானே என்று சும்மாயிராமல், அவனுக்கு அன்பினால் உதவி செய்ய விரைந்தான்.

நம்மை நேசிக்கின்றவர்களை நேசிப்பதற்கும், நம்முடைய கருத்திலும், எண்ணத்திலும் இசைந்து நிற்கிறவர்கள் மேல் கரிசனை கொள்வதற்கும் விசேஷ அன்பின் ஆற்றல் அவசியமில்லை. ஆனால் நாம் நினைப்பது போல நினைக்காமல், நாம் நம்புவது போல் நம்பாமல், நம்முடைய உணர்வுகளுக்கு எதிராகச் செல்கின்றவர்களை நேசிக்க, ஒரு பெரிய அன்பின் ஆற்றல் வேண்டும்.

அவ்வித அன்பில் இருப்பவர்கள்தான், உண்மையான கிறிஸ்தவர்கள். ஏனென்றால், அவர்கள் சாதாரணமானவைகளைச் செய்ய அழைக்கப்படாமல், அசாதாரணமானவைகளைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆம். நம்முடைய உபதேசங்களுக்கு உடன்படாதவர்களையும், நம்முடைய சபைப்பிரிவைச் சாராதவர்களையும், நம்முடைய வழிகளுக்கு இசையாதவர்களையும் கூட நேசிக்கும் ஆற்றல் பெறுவோமாக.

நற்சிந்தனைகளுக்கு நெருங்கிய நண்பனாயிரு. தீய சிந்தனைகள் உன்னை விரோதித்து விலகிப் போகும்.

பரிபூரண நன்மை எங்கே?

சங்கீதம் – 1:1-6

அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்... ரோமர் – 8 :25

ரோமர் -8 :18 -32

மதியவேளை உணவுடன் நடைபெறும் சில கூட்டங்களில் செய்தி அளிக்க நான் செல்லும்போது, நான் மற்றவர்களோடு உட்கார்ந்து சாப்பிடுவேன். அப்போது நான் தேவ செய்தி அளிக்கும் நபர் என்பதால் மற்றவர்களை விட எனக்குச் சற்று விசேஷ கவனிப்பு கிடைக்கும். ஆயினும் இதுபோன்ற கூட்டத்தின் நடுவில் என்னை சுமாராகத்தான் கவனிக்க முடியும். எனவே சில கூடுகைகளில் சிலர் என்னைத் தனியாக அழைத்துச் சென்று, மிக நல்ல உணவு அயிட்டங்களால் என்னை மிக நன்றாக உபசரிப்பார்கள். (இப்படி உபசரிக்கப்படுவதில் எனக்கு எந்த விசேஷ மகிழ்ச்சியும் இல்லை) ஆனால் இதிலும் நான் ஒரு உண்மையைக் கற்றுக் கொண்டேன்.

இந்த பூமியில் நாம் எவ்வளவுதான் விசேஷமான தேவபக்தியும், தேவ அனுக்கிரகமும் பெற்று வாழ்ந்தாலும், தேவ ஆசீர்வாதங்களை முழுமையாகப் பெற்று திருப்தி கண்டு விட முடியாது. கர்த்தரால் வருகின்ற நன்மைகள் நம்மை அதிகமாகச் சந்தோஷப்படுத்தும் என்பது உண்மையாயினும், இந்த சபிக்கப்பட்ட பூமியில் நாம் நிறைவாக எதையும் அனுபவிக்கமுடியாது.

தேவன் நமக்கு அமைதியை அருளுவார். தேவன் நமக்குச் சந்தோஷத்தை அருளுவார். தேவன் நமக்குத் திருப்தியை அருளுவார். ஆயினும் இவை யாவும் வருடம் முழுவதும் 24 மணி வேளையும் முழுமையாக நம்மிடம் செயல்படும் என்று கூற மூடியாது. இந்தப் பாவ பூமியில் தேவனுடைய விசேஷ கிருபையை பெற்றவர்களும் நிரம்பி வழிகின்ற அமைதியோடும், சந்தோஷத்தோடும் வாழமுடியாது. இங்கே எதிலும் நிறைவு இராது. நிரம்பி வழியும் தன்மையும் இராது. நிரந்தரமாகவும் இராது.

தேவன் தம்முடைய இராஜ்யத்தில்தான் நம்மைப் பரிபூரண அமைதி யோடும், பரிபூரண ஆனந்தத்தோடும், பரிபூரண திருப்தியோடும், பரிபூரண நம்பிக்கையோடும், நிரந்தரமான குதூகலத்தோடும் ஆசீர்வதிக்க முடியும். எவ்வளவுதான் இந்த பூமியில் நம்மை தேவன் நன்கு கவனித்தாலும் இந்த சபிக்கப்பட்ட பாவ உலகத்தின் தன்மையின் விளைவாக, நாம் எதையும் பரிபூரணமாகவும், நிரந்தரமாகவும் அனுபவிக்க இயலாது. ஒரு நாள் தேவன் தம்முடையவர்களைத் தனியே பிரித்து அழைத்துச் சென்று, சகல பரிபூரண நன்மைகளினாலும் திருப்தியாக்குவார். அந்த நாளுக்காகக் காத்திருப்போம்.

வாழ்க்கையை முழுமையாக இயேசுவிடம் ஒப்படைத்துவிட்டால் துன்பங்கள் நம்மைத் துக்கப்படுத்துவதில்லை.

பெருமையின் வடிவம்

ஏசாயா - 29:13-24

மாயமான தாழ்மையிலும்...
கோலோசெயர் - 2 :19

கொலோசெயர்-2 :18 -23

பக்கத்து கிராமத்தில் நடக்கும் திருவிழாவிற்குச் செல்ல தகப்பனிடம் மகன் காசு கேட்டான். தகப்பன் அவனுக்கு முன்பாக ஒரு 10 ரூபாய் நாணயத்தையும், ஒரு 100 ரூபாய் தாளையும் வைத்து, இதில் ஏதாவது ஒன்றை நீ எடுத்துக்கொள்ளலாம் என்றார். மகன் "அப்பா இந்த 10 ரூபாய் நாணயம் எனக்கு போதும்" என்றான். அதோடு அவன் நின்றுவிடவில்லை. " அப்பா இந்த நாணயத்தை இந்த தாளில் (100 ரூபாய் தாளில்) மடித்து பத்திரமாக எடுத்துச் செல்கிறேன்" என்று சொல்லி 100 ரூபாய் தாளையும் எடுத்துச் சென்றான். பாருங்கள் இவன் ரொம்ப புத்தி சாலியான மகன்.

பிசாசானவன் இந்த புத்திசாலித்தனத்தை பல ஆவிக்குரியவர்களிடம் எப்படியாவது செயல்படவைக்கிறான். அவர்கள் தெரிந்து கொள்வது தாழ்மை என்னும் குணத்தை. ஆனால் அந்தத் தாழ்மையைப் பெருமை என்னும் தாளில் பொதிந்து வைக்கிறார்கள். அவர்கள் தெரிந்து கொள்வது எளிமை என்னும் உயர்ந்த குணத்தை. ஆனால் மனமேட்டிமையால் அதை மூடிக் கொள்கிறார்கள்.

சிலருடைய தாழ்மையான செயல்பாடுகளே அவர்களைப் பெருமைக்காரர்கள் ஆக்கிவிடுகிறது. அவர்கள் தங்களின் தாழ்மை நிலையை அதிகமாகப் பெரிதுபடுத் திக் காண்பிப்பதோடு தங்களின் தாழ்மையான செயல்களுக்காகவே பிறர் அதிக மாகத் தங்களைப் பாராட்ட வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றனர். சில வேளை களில், அவர்களின் பார்வையில் மற்றவர்கள் யாவரும் பெருமைக்காரர்களாகத் தோன்றி, தங்களுக்குள் தங்களை மிகச் சிறப்பானவர்களாக உணரச் செய்கின்றது.

ஆம். தாழ்மை ஒரு நல்ல குணம். ஆனால் அந்தத் தாழ்மையைப் பிறருக்குப் பெரிதாகக் காட்டி, தங்களை மேன்மைப்படுத்துவது ஒரு பெருமை ஆகும். எளிமை யாக வாழ்வதை தேவன் விரும்புகிறார். ஆனால் அந்த எளிமையை மற்றவர்கள் காண வேண்டுமென்றும், மற்றவர்கள் புகழ வேண்டும் என்றும் நினைப்பது ஒரு மனமேட்டிமை.

ஒருவன் தன்னைப் பெரியவன் என்றுக் காட்டிக்கொள்வது மட்டுமல்ல பெருமை. தன்னைப் பெரிய தாழ்மை நிறைந்தவனாகக் காண்பித்து அதில் ஒரு புகழ்ச்சியைத் தேடுவதும் பெருமைதான். ஏதாவது நம்மில் உள்ள ஒன்றைக் குறித்து மேன்மை பாராட்டுவது பெருமையின் விளைவே.

நல்ல ஒழுக்கங்கள் உனக்கு அலங்காரத்தைத் தரும். ஆயினும் அந்த அலங்காரம் உனக்கு அகங்காரத்தை தராதிருக்கப்பார்.

தேவ பக்தி எதற்காக?

ஏசாயா – 40:1-11

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே... பிலிப்பியர் – 4:13

பிலிப்பியர்-4 :1 -15

தேவபக்தி மிகுந்த மனிதன் ஒருவன் பலவிதமான துன்ப சூழ்நிலைகளில் வாழ நேர்ந்தது. நெருங்கினவர்களின் மரணம், நோய், பொருளாதார பெலவீனம், தோல்விகள் எனப் பலவிதமான கஷ்டங்களை வாழ்க்கையில் காண நேர்ந்தது. ஆயினும் தேவபக்தி சார்ந்த வாழ்க்கையில் ஒரு போதும் பின்வாங்கிப் போக வில்லை. அந்த மனிதனுடைய துன்ப சூழ்நிலைகளைக் கண்ட சிலர் கஷ்டங்களையும் துன்பங்களையும் தொடர்ந்து காண்கின்ற உனக்கு, தேவபக்தியால் என்ன பிரயோசனம் என்று கேட்டனர். அதற்கு அந்த மனிதன் சற்றும் தாமதியாமல் தேவபக்தி எனக்கு எதைத் தர வேண்டுமோ, அதைத் தந்து கொண்டிருக்கின்றது. எனவே அதனை விட்டுவிட எனக்குக் காரணம் எற்படவில்லை என்றான்.

தேவ நம்பிக்கையும் தேவபக்தியும் எதற்காக முக்கியமாகத் தேவைப்படுகின்றது? அநேகர் உடல் சார்ந்த தேவைகளைப் பெறுவதற்காகத்தான் என்று நினைக்கின்றனர். உடல் சார்ந்த தேவைகளுக்கு தேவன் உதவுகிறார் என்பது உண்மையே. ஆயினும் உடல் சார்ந்த தேவைகளை தனக்காகப் பெற்றுக் கொள்வதற்கு மனிதனுக்குள் தேவன் அறிவு, புத்தி, ஞானம், திறமை ஆகியவற்றை வைத்திருக்கின்றார். மேலும் உடல் சார்ந்த தேவைகளுக்கு இந்த பூமியில் நமக்கு முழுமையான உத்திரவாதங்கள் இல்லை.

எவ்வளவுதான் தேவ பக்தியின் நிறைவோடு வாழ்ந்தாலும் இந்த பூமியில் மரணம், வியாதி, இல்லாமை, இயலாமை, தோல்விகள், ஏமாற்றங்கள் என்பவை முற்றிலும் தடுக்கப்பட்டு விடுவதில்லை. அவை இயற்கையானவை. அதே வேளையில் தேவ பக்தி தேவநம்பிக்கை, தைரியம், சோதனைகளைச் சந்திக் கும் ஆற்றல், அமைதி, ஆறுதல், ஆகியவைகளை நமக்கு உத்திரவாதத்தோடு தருகின்றன. எந்தச் சூழ்நிலையிலும் இவை தேடப்படும் போது, அவை நமக்குக் கிட்டாமல் போவதில்லை.

எனவேதான், நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டாலும் ஒடுங்கிப் போவ தில்லை என்றும், எந்தச் சூழ்நிலையிலும் புத்திக்கெட்டாத தேவசமாதானத்தைப் பெறலாம் என்றும், அப்போஸ்தலனாகிய பவுல் கூறினான். வாழ்க்கையில் நாம் நினைத்தபடி நடக்காமல் போகலாம். ஆயினும் இறை நம்பிக்கையின் விளைவாகக் கிட்ட வேண்டிய நன்மைகள் கிட்டாமல் போவதில்லை.

அக்கினியைக் காணாத பொன் அழகு பெறாது
சோதனைகளைக் காணாத வாழ்வு சிறப்புப் பெறாது.

கசப்பை மறப்போம்

ஆதியாகமம் - 45:1-15

என் ஆத்துமாவே, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே... சங் - 103:2

பிலிப்பியர் - 4:4 -9

எனக்குப் பிறரால் ஏற்பட்ட அவமதிப்புகள், அநீதிகள், வேதனைகள், கசப்புகள், தீங்குகள் ஆகியவற்றை நினைவில் கொண்டுவந்து, அவைகளையெல்லாம் நினைவைவிட்டு நீங்காதபடி வைப்பதென்றால் என் இதயத்தில் வேறெதற்கும் இடமில்லாதபடி அவைகளே மிகுதியாயிருக்க முடியும். சிலர் பேசின வார்த்தைகளை, நடந்து கொண்ட விதங்களை, போட்ட பொய் வேடங்களையெல்லாம் நினைத்துக் கொண்டிருப்பதானால், வேறெதையும் சீரியஸாகச் சிந்திக்க நேரமின்றி அவைகளே ஏராளமாயிருக்க முடியும்.

ஆனால் நான் என் இதயத்தில் கர்த்தர் எனக்குக் காண்பித்த இரக்கம், அன்பு, கொடுத்த ஆதரவு, அளித்த ஆறுதல் வழங்கிய கிருபைகள், தந்த நல்ல அனுபவங்கள், உணர்த்திய உண்மைகள், நடத்தின நல்ல பாதைகள், ஏற்படுத்திய உயர்வுகள், உருவாக்கிய நித்திய நம்பிக்கைகள், ஆகியவற்றையே அடிக்கடி அதிகமாகச் சிந்திக்கிறேன். என்னை எத்தனைபேர் வெறுக்கின்றார்கள் என்பதை நான் எண்ணிப் பார்க்காமல், எத்தனையாய் கர்த்தர் என்னை நேசிக்கின்றார் என்பதையே எண்ணிப் பார்க்கின்றேன். எனக்கு யார் யார் உதவவில்லை, என்று பட்டியல் போடாமல், கரத்தர் செய்த உதவிகளையே நினைத்து நினைத்துப் பார்க்கின்றேன்.

எனவே எனக்குக் கசப்பைத் தள்ளி விட வேண்டிய பிரச்சனையோ, வெறுப்பை விரட்டிவிட வேண்டிய தேவையோ அதிகம் ஏற்படவில்லை. ஆம். கர்த்தரைக் குறித்தும், அவர் நமக்குச் செய்தவைகளைக் குறித்தும் நாம் சிந்திக்கவும், யோசிக்கவும் பழகிவிட்டால், யாரைக் குறித்த கசப்பும், வெறுப்பும், கோபமும், வைராக்கியமும், வேதனையும் நமச் குள் நிறைந்து நம்முடைய மன சமாதானத்தையும், சந்தோஷத்தையும் பாதிக்க முடியாது.

யோசேப்பு தன் சகோதரர்கள் செய்த அநீதிகளையும், போத்திபார் வீட்டில் தனக்குக் கிடைத்த அவமதிப்புகளையும் குறித்து எண்ணிக் கொண்டேயிருந்திருந்தால், அவன் நிச்சயம் முன்னுக்கு வந்து உயர்ந்த நிலைகளை அடைந்திருக்க முடியாது. அவனுடைய எண்ணமும், நினைவும், சிந்தனையும் தேவனைச் சுற்றியே இருந்ததால், யாரைக்குறித்த கசப்பும், எரிச்சலும், கோபமும் அவனை மனரீதியாகப் பாதிக்கவில்லை. எனவே அவனால் அமைதியோடும், நிதானத்தோடும், உயர்ந்த நிலைகளை நோக்கி தேவ கிருபையால் முன்னேறிச் செல்ல முடிந்தது.

ஆம். மனிதர்களால் ஏற்கெனவே பெற்ற பாதிப்புகளோடு, அவர்களைக் குறித்த கசப்புகளால் தொடர்ந்து நம்மை நாமே பாதிக்க இடங்கொடாதிருப்போமாக.

பிறரின் தவறான செயல்கள் நம்மை பலவீனப்படுத்தியிருக்கலாம். ஆனால் அதைக்குறித்த கசப்புகள் நம்மைப் பழுதடையச் செய்துவிடும்.

தோற்றங்களும் விளைவுகளும்

யோவேல் - 2:23-32

பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல...
அப்போஸ்தலர் – 2:2

அப்போஸ்தலர்-2 :1 -21

வேதவார்த்தைகளின்படி ஆவிக்குரிய விஷயங்களில் மிக நன்றாகப் பகுத்துப் போதிக்கும் திறனுடைய பாஸ்டர் ஒருவர் மிக நல்ல தேவ செய்தியாளராக அறியப்பட்டிருந்தார். ஆயினும் அவரிடம் எல்லாம் இருக்கின்றது, ஆனால் ஆவியில்லை என்று குறை சொல்கின்ற சிலரும் இருந்தனர். இதைக்குறித்து ஒருவர் உங்களிடம் ஆவியில்லையென்று சிலர் கூறுகின்றார்களே அதற்கு நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர் அவர்கள் சொல்வது சரிதான். அவர்கள் எதனை ஆவி என்று நம்புகின்றார்களோ அந்த ஆவி என்னிடம் இல்லை. அந்த ஆவி என்னிடம் இல்லாததால் நான் சந்தோஷப்படுகின்றேன். அவர்கள் கூறுகின்ற அந்த ஆவி என்னிடம் இருந்தால் நானும் தேவ வார்த்தைகளை விட்டு விலகி அவர்களைப் போலவே மாய் மாலக்காரன் ஆகியிருப்பேன் என்றார்.

சிலர் ஒருவரிடம் தேவ ஆவியாயிருப்பதை அவரிடமுள்ள தெளிவான தேவவார்த்தைகளை வைத்துக் கணக்கிடுவதில்லை. அவருடைய சாட்சியுள்ள வாழ்க்கையை வைத்தும் கணக்கிடுவதில்லை. அவருடைய ஊழியம் தேவ ஆவிக்கேற்றதாக இருப்பதை வைத்தும் கணக்கிடுவதில்லை. தாங்கள் எதிர்பார்க் கின்றபடி ஒரு ஆரவாரம், பரவசம், அதிக சத்தம், உணர்ச்சிவசப்படுத்தும் விதமான செயல்பாடுகள் போன்றவற்றை அவருடைய நடவடிக்கைகளில் பார்க்காவிட்டால், அவரிடமும் ஆவியில்லை என்று நிதானித்து விடுவார்கள்.

பரிசுத்த ஆவி ஆதியில் விசுவாசிகள்மேல் வந்திறங்கினபோது அக்கினி நாவு, அதிக சத்தம், அந்நிய பாஷை என சில வித்தியாசமான அடையாளங்களை அங்கே காண நேரிட்டது. ஆயினும் பரிசுத்தாவி பொழியப்படுவது தொடர்பாக இயேசு முன்னறிவித்தபோது அவற்றைக்குறித்து எதையும் சொல்லவில்லை. பரிசுத்த ஆவி வரும்போது நீங்கள் பெலனடைந்து எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். ஆம். சில தோற்றங்களில் அல்ல. விளைவுகளில்தான் பரிசுத்தாவியின் செயல்பாடுகளை உறுதிப்படுத்த முடியும். இன்றைய பல திருச்சபைகளில் ஆரவாரம், அதிக சத்தம், பரவசம் அந்நிய பாஷை என அரங்கம் அசையும் விதமான பல தோற்றங்கள் உண்டு. ஆனால் வாழ்க்கையிலோ ஆவிக்கேற்ற செயல்பாடும் இல்லை. கனி கொடுக்கும் அனுபவமும் இல்லை. அடையாளங்கள் வல்லமையாயிருந்தும், விளைவுகள் பெலவீனமாயிருந்தால் அது தூய ஆவி அல்ல. அது போலி ஆவியே.

நற்குணங்களோடு இணைந்திராதவனின் இதயம்
இறைவனை விட்டு வெகுதூரம் விலகியேயிருக்கிறது.

பொருளாசை

நீதிமொழிகள் - 30:1-9

பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்... லூக் - 12:15

லூக்கா -12 :13-32

பொருளாசை ஒரு விக்கிரக ஆராதனை. பொருளாசையுடையவன் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது. ஒரு விசுவாசி பொருளாசை யுடையவராய் இருந்தால், அவரோடு சேரவோ, அவரோடு விருந்து உண்ணவோ கூடாது. இவை பவுல் அப்போஸ்தலன் சபைகளுக்கு எழுதிய கடிதங்களில் வரும் செய்திகள். (எபே - 5:5, 1, கொரி - 6:10; 5:11) பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி இயேசு சீடர்களுக்குக் கட்டளையிட்டார். விபச்சாரம், வேசித்தனம், கொலை, களவு போன்ற கொடிய பாவங்களின் பட்டியலில் இயேசு பொருளாசையையும் சேர்த்துப் பேசினார். (லூக் - 12:15 மாற்கு - 7:21, 22)

சில பாவங்களை மிகவும் சீரியஸாக எடுத்துக் கொள்ளும் வேளையில் பொருளாசையைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் மனோபாவம் பலரிடம் உள்ளது. ஆனால் பொருளாசை என்பது தேவனால் வெறுக்கப்படும் கொடிய பாவம் ஆகும். இன்று பொருளாசையை அதிகமாகக் கொண்டிருக்கும் அனேகர், தங்களிடம் ஒரு கொடிய பாவம் உள்ளதை உணராமலே இருப்பதைக் காண முடிகிறது. சில ஊழியர்கள் பாலியல் போன்ற பாவங்களில் விழாமல் இருப்பதைத் தங்களின் மாபெரும் வெற்றிகளாக எடுத்துக் கொள்கிறார்கள். அதே வேளையில் பண ஆசையும், பொருளாசையும் தங்களின் வாழ்க்கையை மேலாண்மை செய்வதை அவரகள் பெரிய விஷயமாக எடுத்துக்கொள்வதில்லை.

பொருளாசை மிகுந்த மனிதன், பொருள் சேர்ப்பது தொடர்பான காரியங் களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைவிட, அதிக முக்கியத்துவத்தை தேவனுக்குக் கொடுக்க மாட்டான். பொருளாசை உடையவன் மகிழ்ச்சி, திருப்தி, ஆகியவற்றை தேவனிடம் தேடிப்பெறுவதற்குப், பதிலாகப் பணம், செல்வப்பெருக்கம் ஆகியவை களையே தேடிக் கொண்டிருப்பான். பொருளாசை உடைய மனிதனின் சார்பு தேவன் மேல் இராமல், பொருளின் மேலேயே இருக்கும். பொருளாசை உடைய மனிதன் தேவ உறவை தன் பாதுகாப்பாக எண்ணாமல், பணப் பெருக்கத்தையே தன் பாதுகாப்பாக எண்ணுவான். பொருளாசையுடைய மனிதன் அந்த ஆசை நிறைவேறுதலுக்காக தேவனுடைய நியாயங்களையும், தேவன் விரும்பும் நற்குணங்களையும் எளிதாக விட்டு விலகிப் போவான்.

வீடுகள் கட்ட வேண்டும். நிலங்கள் வாங்கிச் சேர்க்க வேண்டும். வங்கியில் ஏராளம் பணம் சேர்க்க வேண்டும். நவநாகரிகப் பொருட்களை வாங்கிக் குவிக்க வேண்டும் என்ற எண்ணங்களால் நிறைந்து வாழ்க்கையைப் பொருள்சேர்க்கும் ஒரு அனுபவமாக எண்ணிவிட்டால், அங்கே தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறாது. தேவனுடைய நோக்கங்களுக்கு உரிய நேரமும், கவனமும் கொடுத்தால், நமக்குத் தேவையானதை தேவன் தராமல் போகமாட்டார்.

பணத்தையும், பொருளையுமே அதிக முக்கியமாக எண்ணுகிறவன் ஏற்கெனவே இறை சந்தோஷத்தின் பாதையை அடைத்து விட்டிருக்கின்றான்.

நல்ல நாட்களில்

எரேமியா - 22:1-24

நீ சுகமாய் வாழ்ந்திருக்கையில் நான் உனக்குச் சொன்னேன்... எரேமியா - 22:21

மத்தேயு-25 :1-13

தீடீரென்று மின்சாரம் நின்றுவிட்டால் அதனால் உடனடியாகப் பாதிக்கப்படாமலிருக்க இன்வெர்ட்டர்களைப் பலர் உபயோகிக்கின்றனர். தீடீரென்று மின்சாரம் நின்றுவிட்டால் இருளில் தடுமாற நேரிடாதபடி பலர் எமர்ஜென்சி விளக்குகளை ஆயத்தமாக வைத்திருப்பார்கள். எல்லாம் சரியாக, பிரச்சினையின்றி இருக்கும் போதே சில முன்னேற்பாடுகள் மிகவும் அவசியமாயிருக்கின்றன.

தேவ உறவு இல்லாமலே நமக்கு அமைதியான வாழ்க்கைச் சூழல்கள் அமைந்திருக்கலாம். தேவனுக்குப் பிரியமாக வாழ்வதற்கு அதிக நாட்டம் காட்டாத போதே, நமக்குச் சந்தோஷமாக வாழ்வதற்கு சில நல்ல சூழல்கள் இயற்கையாகவே அமைந்திருக்கலாம். கடவுளுடைய விஷேச அனுக்கிரகம் தேடி மன்றாடாமலே நம்முடைய வாழ்க்கைத் தேவைகள் யாவையும் சந்திக்க, இயற்கையாகவே நமக்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கலாம். ஒரு விதத்தில் தேவபக்தியில் தீவிரமாகப் போகாமலே, அமைதியான நதியினிலே ஓடம் போல, நம்முடைய வாழ்க்கை சுமுகமாகக் குறை எதுவுமின்றிப் போய்க் கொண்டிருக்கலாம்.

ஆனால் இந்தச் சூழல், எதனால் எப்படி எப்பொழுது மாறும் என்று கூற இயலாது. இந்த அமைதியான, ஆனந்தமான, தன்னம்பிக்கை நிறைந்த காட்சி எப்போது மாறும் என்று கூற இயலாது. 2004-ம் ஆண்டு சுனாமி என்றழைக்கப்பட்ட ஆழிப் பேரலைகள் வந்த போது, சுமார் 5 நிமிடத்தில் சுவடுகள் தெரியாதபடி பெரிய அழிவுகள் நிகழ்ந்தன. 5 நிமிடத்திற்குள் ஒரு சந்தோஷச் சூழல் அடையாளம் தெரியாதபடி அகன்றது.

ஆம். அமைதி எப்போது அகலும், ஆனந்தம் எப்போது எட்டாதூரம் போகும், நம்பிக்கை எப்பொழுது கட்டில்கிடையாகும் என்று கூறஇயலாது. எனவே அமைதி, சந்தோஷம், நம்பிக்கை இவற்றை நாம் அனுபவித்து வாழும் காலத்திலேயே, தேவ உறவினால் வரும் அமைதியையும், சந்தோஷத்தையும் வாழ்வில் சொந்தமாக்க வேண்டும்.

விளக்குகள் அணைந்த பிறகு எண்ணெய் தேடி அலைந்த புத்தியற்ற கன்னிகைகள் போல அல்ல. நன்றாக எரியும் போதே அணைந்து போகும் நிலைவந்து விடக்கூடாது என்று போதுமான எண்ணெய்யை ஆயத்தமாக்கி வைத்த புத்தியுள்ள கன்னிகைகளைப் போல செயல்படவேண்டும். ஆம். நன்றாயிருக்கும் போதே தேவ உறவில் வாழவேண்டியதின் தேவையை உணர்ந்துகொள்ள வேண்டும்.

சோதனை ஒரு ஏணி சிலர் அதன் மூலம் மேலே போய்விடுவார்கள் சிலர் கீழே வந்துவிடுவார்கள்.

ஜீவ நீரோடை

கொடுப்பதில் சந்தோஷம்

பிரசங்கி - 11:1-10 | வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்... அப் - 20:35 | 11 கொரிந்தியர் -9 :1-10

மனிதன் இயற்கையாகவே வாங்குவதில் அதிக மகிழ்ச்சியைக் காண்கின்றவன். பிறரிடமிருந்து பெறுவதிலேயே அவன் அதிக ஆர்வமும், ஆனந்தமும் அடைகின்றவன். ஆனால் கொடுக்கின்ற விஷயத்திலோ அவன் மிகவும் பின்தங்கினவன். ஆனால் தேவனுடைய நியாயம் பெறுவதில் அல்ல. கொடுப்பதில் அதிக ஆனந்தம் அடையவேண்டும் என்பதாக இருக்கிறது.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளித்தான் உலகத்தில் அன்பு கூர்ந்தார். பிறருக்குக் கொடுப்பதில் ஒரு மகிழ்ச்சியான மன நிலையை உணருவது விசேஷமான அனுபவமாகும் . அநேகர் தேவன் தங்களுக்குத் தரவேண்டும், தேவனிடத்திலிருந்து பெறவேண்டும் என்பதில் அதிகக் கருத்துடையவர்களாக இருக்கின்றார்களேயன்றி. பிறருக்கு நம்மால் இயன்றதைக் கொடுக்கவேண்டும் என்ற உணர்வைப் பெறுவதில்லை. 'கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற வாக்குறுதியை அதிகமாக உரிமை கொண்டாடி ஜெபிப்பார்கள். ஆனால் கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் என்ற அன்பான தேவ கட்டளையைப் பொருட்படுத்துவதில்லை. அனேகர் தேவனிடம் எவ்வளவோ கேட்டும் பெறாமலிருப்பதற்கு, அவர்கள் தங்களிடம் கேட்கும் யாருக்கும் எதையும் செய்யாமலிருப்பது முக்கியமான காரணமாகும்.

பரிசுத்த வாழ்க்கை என்பது ஏதோ ஆராதிப்பதும், ஜெபிப்பதும், சில ஒழுங்குகளில் வாழ்வது மட்டுமல்ல. பரிசுத்த வாழ்க்கையின் முக்கியமான ஒரு பகுதி பிறருக்கு இயன்றதைச் செய்வதாகும். முழுவேதாகமமும் காணிக்கை கொடுத்தலைவிட பிறரைத் தாங்குவதைக் குறித்தும், பிறருடைய கஷ்டங்களில் உதவுவதைக் குறித்தும், தாராளமாக பிறருக்கு கொடுப்பதைக் குறித்தும் மிக அதிகமாகப் பேசுகிறது என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து காணிக்கை கொடுக்கத் தூண்டும் போதனைகளை அல்ல. பிருக்கு உதவி செய்யத் தூண்டும் போதனைகளைத்தான் அதிகமாகத் தந்தார். அப்போஸ்தலர்களும் அதனையே தங்கள் ஊழியக் காலங்களிலும் பின்பற்றினார்கள்.

தேவனால் பிறந்த எவருக்குள்ளும் பிறருக்கு உதவும் பண்பும், தங்களிடமுள்ளதில் கொஞ்சத்தை நஷ்டப்பட்டு, பிறருக்கு நன்மை செய்யும் உணர்வும் இல்லாமல் இருக்க முடியாது. தங்கள் குறைவுகளின் மத்தியிலும் தேவையான சில உதவிகளைப் பிறருக்குச் செய்வதில் அவர்கள் உண்மையாகவே ஒரு சந்தோஷத்தை உணர இதுவும் ஒரு வழி. கர்த்தருடைய அன்பினால் கொடுத்து சந்தோஷமடையும் அனுபவம் உங்களுக்கு உண்டா? இது ஒரு விசேஷ வரம் அல்ல. தேவனை அறிந்த ஒவ்வொருவரிடமும் சாதாரணமாகக் காணப்பட வேண்டிய தெய்வீகப் பண்பு.

இறைவனை எவ்வளவு நேசிக்கிறாய் என்பதை மனிதனை எவ்வளவு நேசிக்கிறாய் என்பதால் அறியலாம்.

முக்கியமான தேவை

சங்கீதம் – 81:1-16

மேலானவைகளையே நாடுங்கள்...
கொலோசெயர் – 3:2

கொலொசெயர்-3 :1-17

உணவு, உடை, உறைவிடம் போன்ற உடல் சார்ந்த தேவைகளைச் சந்திக்கும் ஆற்றலை மனிதன் பெற்றிருக்கின்றான். எனவே அவற்றிற்காக அவனுக்கு இறைநம்பிக்கை மிக அவசியம் என்று கூற இயலாது. மனிதனுக்குத் தேவையான அறிவையும், திறமையையும், ஞானத்தையும் பெற ஏராளமான கல்வி நிறுவனங்கள் உள்ளன. எனவே அறிவுத் தேவைக்கு ஆன்மீகம் மிகமிக முக்கியம் என கூற இயலாது. ஆனால் மனிதனுக்கு மிகப்பெரிய தேவை ஒன்று இருக்கின்றது. அது என்ன? அதுதான் தன்னை ஒழுங்காக, சரியாக, செவ்வையாக வைத்துக்கொள்ள வேண்டிய தேவை.

ஒரு இயந்திரத்தைச் சரியாக வைக்காவிட்டால் அது பழுதடைந்து பயனற்றுப் போகும், ஒரு நிலத்தைச் சரியாகப் பராமரித்துக் காக்காவிட்டால், அங்கே முட்புதர்கள் தோன்றிக் காடாகி விடும். அது போல மனிதன் தன்னுடைய செயல்கள், சுபாவங்கள், சிந்தனைகள், ஆசைகள், நினைவுகள் யாவற்றையும் சரியான விதிகளுக்குள் முறையாக வைக்காவிட்டால், மனிதன் மிருகங்களை விடத் தன்னை வேறுபடுத்த வாய்ப்பின்றிப் போவான்.

பரிதாபமாக, வாழ்வின் மிகப்பெரிய இந்தத் தேவையை அநேகர் சிந்திப்பதேயில்லை. செயல், சுபாவம், சிந்தனை, ஆசைகள் ஆகியவற்றைச் சரியாக ஒழுங்குபடுத்தி வைத்தால்தான், வாழ்வைச் சரியாக அனுபவிக்க முடியும் என்பதைப் பலர் உணர்வதேயில்லை. அப்படியே சிலர் உணர்ந்தால் கூட அவர்களால் அது சாத்தியமாகாது. ஒரு பெரிய நிறுவனத்தையோ, நாட்டையோ சரியாக வைக்க இயன்ற பலர், தங்களையோ சரியாக வைக்க முடிவதில்லை.

இங்குதான் மனிதனுக்கு இறைநம்பிக்கையும், இறைஉறவும், இறை அருளும் மிகமிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது. ஏனென்றால் கல்வி நிறுவனங்களோ, அறநெறி இயக்கங்களோ, ஆன்மீகப் போதனைகளோ மனிதனை மனிதனாக ஒழுங்குபடுத்தி நிறுத்த இயலாதவை. சுய முயற்சிகளோ, தத்துவங்களோ, யாகங்களோ, யோகாக்களோ மனிதனை மிகவும் சரியாக வைத்துவிட முடியாது. எனவே இங்குதான் நமக்கு தேவ உறவும், தேவ அனுக்கிரகமும் விசேஷமாகத் தேவை. இந்தத் தேவைகளை உணர்ந்து தேவனைத் தேடினால் உடல்சார்ந்த தேவைகளுக்காக விசேஷ விண்ணப்பங்கள் அதிகமாகத் தேவைப்படாது.

உயர்ந்த எண்ணங்களால் உள்ளத்தை நிரப்புவதே
தாழ்ந்த எண்ணங்களைத் தடுக்கும் வழி.

மருத்துவர் சோதிக்கட்டும்

சங்கீதம் – 139:1-24

என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும்... சங் – 139:23

1 கொரிந்தியர் – 4:1-6

நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து நம்முடைய குறைகளையும், குற்றங்களையும், தவறான போக்குகளையும் கண்டறிந்து சரி செய்ய வேண்டியது இறைவாழ்க்கையின் முக்கியமான ஒரு தேவையாகும். ஆனாலும் நம்முடைய ஆராய்ந்து பார்க்கும் கண்களுக்கு நம்முடைய வழிகளில், செயல்களில், எண்ணங்களில், யோசனைகளில் மறைந்திருக்கும் தவறான தன்மைகள் தெரியாமல் போகும் வேளைகள் உண்டு. நம்முடைய வழிகளிலும், யோசனைகளிலும் உள்ள சரியற்ற தன்மைகளை நாம் கண்டறிய முடியாமல் போவதால்தான், பலவேளைகளில் நமக்குப் பலவித வேதனைகளும், ஏமாற்றங்களும் வந்து சேருகின்றன.

எனவேதான் தாவீது தேவனே என்னை ஆராய்ந்து, என்னை அறிந்து கொள்ளும். என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும் என்று தேவனை நோக்கிச் ஜெபித்தான். எதற்காகத் தன்னை ஆராய்வதற்கு தேவனை அழைக்கின்றான்? வேதனை உண்டாக்கும் வழி அவனிடத்தில் உண்டா என்பதை தேவன் கண்டறிந்து, அதற்கேற்பத் தன்னைச் சரியான வழியில் நடத்துவதற்காகவே அவன் தேவனை அழைத்தான். (சங் – 139:24) தேவன்தான் தன்னைச் சரியாகச் சோதித்து, உண்மை நிலை அறியமுடியும் என்று அவன் நம்பினான்.

நம்முடைய சரீரத்தில் உள்ள கோளாறுகளையும், நாம் சாப்பிடும் உணவு வகைகளிலுள்ள சரீரத்திற்கு உகந்ததல்லாத தன்மைகளையும் நாமே ஆராய்ந்து, கண்டறிந்துவிட முடியாது. நம்முடைய சரீரத்தை ஆராய்ந்து பரிசோதித்துப் பார்க்க மருத்துவரிடம் நாம்போகவேண்டும். அப்பொழுதுதான் நம்முடைய சரீரத்தில் உள்ள பிரச்சினைகளை நாம் கண்டறிந்து, அதற்குத் தேவையானவைகளைச் செய்ய முடியும்.

அவ்விதமே நாம் நம்முடைய வாழ்க்கையையும், இதய நிலையையும் ஆராய்ந்து பார்த்து, அதனுடைய குறைபாடுகளைக் கண்டறியும் பொறுப்பை கர்த்தரிடம் ஒப்படைக்கும் போதுதான், அவர் நம்முடைய வழிகளின் தன்மைகளை நமக்கு வெளிப்படுத்திக் காட்டுவார். அநேகர் தங்களுக்குத் தாங்களே மருத்துவர்களாகி, தாங்கள் சரியாக இருப்பதாக எண்ணிவிடுவதால்தான், கர்த்தர் அவர்களின் உண்மை நிலையைக் காண்பித்து, அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை செய்ய முடியாமல் போகிறது.

என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன். ஆகிலும் அதனால் நான் நீதிமானாகிறதில்லை. என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான். (1 கொரி – 4:4) ஆம். நம்முடைய கண்களுக்கு நலமாகத் தோன்றுகின்ற பல விஷயங்கள். தேவனுடைய கண்களுக்கு வித்தியாசமாகத் தோன்ற முடியும். அவரின் கண்களுக்கு எது எப்படித் தோன்றுகிறதோ, அதுவே சரியான தோற்றமும் உண்மை நிலையுமாகும். எனவே தேவனுடைய பார்வையில் நாம் எப்படியிருக்கிறோம் என்பதை அறியவே நாம் ஆர்வமாயிருக்க வேண்டும்.

குற்றம் கூறுகின்றவர்களை என்ன செய்வது என்றல்ல.
முதலில் குற்றமில்லாதிருக்க என்ன செய்வது என்று பார்.

நஷ்டம் நமக்கே

எண்ணாகமம் - 14:13-21

அவர் வையப்படும்போது பதில் வையாலும்... 1 பேதுரு – 2:23

1 பேதுரு-2 :15-25

ஒரு வாலிபன் வேலைக்குச் சேர்ந்த இடத்தில் குறைவான சம்பளமே கிடைத்தது. எனவே அவன் இயன்றவரை அந்த சம்பளத்திற்குப் பொருந்துகின்ற அளவிற்குதான் வேலை செய்வான். நான் வாங்கும் சம்பளத்திற்கு இவ்வளவு செய்தால் போதும் என்பது அவனுடைய நியாயம். சில வருடங்களுக்குப் பின்பு அவனுக்கு இதைவிட மிக நல்ல சம்பளத்தில் இன்னொரு இடத்தில் வேலை கிடைத்தது. ஆனால் அவனுடைய பணியில் திருப்தி காணாத நிர்வாகம் விரைவில் அவனை வேலையிலிருந்து நீக்கிவிட்டது. ஏனென்றால் சம்பளம் அதிகம் கிடைத்த போதிலும் அவனால் அதற்கேற்ப சுறுசுறுப்பாக வேலை செய்ய இயலவில்லை. நீண்டகாலமாகக் குறைவாக வேலை செய்து பழகியதால் அதுவே பழக்க மாகிவிட்டது.

எப்பொழுதுமே நமக்கு என்ன கிடைக்கின்றது என்ற அடிப்படையில் அல்ல. நம்மால் எவ்வளவு செய்ய இயலும் என்ற அடிப்படையிலேயே சிந்திக்க வேண்டும். நமக்கு கிடைப்பதின் அடிப்படையில் நாம் குறைவாகச் செயல்பட்டால் நம்முடைய ஆற்றல்கள் குறைந்து போகும். சிலர் நற்குணங்களை பிறர் மதிக்காவிட்டால் அவற்றைக் காண்பிக்க விரும்பமாட்டார்கள். சிலர் நற்செயல்களை கௌர விக்காவிட்டால் அவற்றைச் செய்ய விரும்பமாட்டார்கள். சிலர் எதிர்பார்த்த பலன் கிட்டாவிட்டால் சிரமம் எடுக்கும் பழக்கத்தை விட்டுவிடுவார்கள்.

நல்லதை மதிக்கத் தெரியாதவர்கள் என்று எண்ணி எல்லோரைப் போல செயல் பட்டால் பின்னர் நல்லதைச் செய்ய வேண்டிய இடத்திலும் அதைச் செய்ய இயலாது. மற்றவர்களின் மனநிலைகளைப் பார்த்து நம்முடைய நல்ல மனநிலைகளை மாற்றிக்கொண்டால், பின்னர் நாம் விரும்பினாலும் நமக்கு நல்ல மனநிலை வராது. நம்முடைய நற்பண்புகளுக்கும் நற்பிரயாசங்களுக்கும்,நற்கருத்துகளுக்கும் மற்ற வர்கள் மிகக் குறைந்த விலையையேத் தரலாம். அதற்காக நம்முடைய தரத்தை நாமாகக் குறைத்துக்கொள்ளக்கூடாது.

இயேசு பாவிகள் நடுவில் உலாவி னார். பரிசேயர்கள் நடுவில் உலாவினார். அவருடைய உயர்ந்த நிலைமையை எல்லோரும் அங்கீகரிக்கவில்லை. அவரு டைய உயர்ந்த குணாதிசயங்களை எல்லோரும் மதிக்கவில்லை. ஆயினும் தாம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே இறுதிவரை இருந்தார். எப்படிச் செயல்பட வேண்டுமோ அப்படியே செயல்பட்டார். மற்றவர்களுக்காக நம் முடைய செயல்பாடுகளையும், குணங்களையும் நாம் மாற்றிக் கொள்வதால் மற்றவர்களுக்கு நஷ்டமில்லை, நமக்குத்தான் பெரிய நஷ்டம்.

தேவனுக்கு முன்பாக நம்பத் தக்கவனாயிரு
உலகத்தில் உன் நம்பிக்கைகள் வீண்போவதில்லை

கொஞ்சம் ஆற்றல்

நியா – 6:1-16 | **உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ... நியா – 6:14** | வெளி -3 :7-13

ஒரு பெரிய ஜவுளிக் கடையில் வேலை பார்த்த வாலிபன் ஒருவனுக்குத், தானும் ஒரு பெரிய ஜவுளிக்கடையை நடத்த வேண்டும் என்ற ஆசை வந்தது. ஆனால் அவனிடம் ஒரு சிறு பொருளாதார வலிமை கூட இருக்கவில்லை. ஆயினும் அவன் அந்த ஆசையை விட்டுவிடவில்லை. முதலாவது கொஞ்சம் பணம் சேமித்தான். அதைக்கொண்டு கொஞ்சம் துணிகளை வாங்கித் தலையில் வைத்து சுமந்து வீதிவீதியாகக் கூவி வியாபாரம் செய்தான். அதில் கொஞ்சம் பணம் ஈட்டிய பின்பு சைக்கிள் வாங்கி ஊர் ஊராய்ப் போய் வியாபாரம் செய்தான். அதில் சற்று வருமானம் ஏற்பட்டதும், ஒரு சிறு கடையை வாடகைக்கு எடுத்து வியாபாரம் செய்தான். ஒருநாள் அவன் பல கிளைகளைக் கொண்ட ஒரு பெரிய ஜவுளிக் கடைக்கு உரிமையாளனாக உயர்ந்தான்.

ஒரு பெரிய கடையை நடத்த ஒரேயடியாக முயற்சித்திருந்தால் அவன் ஆசை ஒரு போதும் நிறைவேறியிருக்காது. அவனுக்கு அந்தந்த நேரத்தில் இருந்த திராணியைச் சரியாக உபயோகித்துக் கொண்டதால் ஒருநாள் அவன் உயர்ந்த நிலைமைக்கு வந்து சேர்ந்தான். தற்போது நமக்கிருக்கும் ஆற்றல் சிறிய அளவில் இருந்தாலும் அதனை அற்பமாக எண்ணாமல், அதனைச் சரியாக உபயோகிக்க முன்வரவேண்டும். கிதியோனிடம் மீதியானியரை வெல்லும் அளவிற்குப் பலம் இருக்கவில்லை. ஆயினும் அவனுக்கு இருந்த அந்த பலத்தோடு புறப்பட்டுப் போக தேவன் சொன்னார். புறப்பட்டுச் செல்ல அந்த பலம் போதுமானது. தொடர்ந்து தேவைப்படும் பலத்தை தேவன் அளிப்பார். முழு பலமும் கிடைக்கும் வரை அவன் சும்மாயிருந்திருந்தால் விஷயங்கள் வேறுவிதமாக இருந்திருக்கும்.

வாழ்க்கையில் பலருடைய பெரிய பெலவீனங்களே, அவர்களிடம் உள்ள சிறு, சிறு ஆற்றல்களை அற்பமாக எண்ணி அவைகளை உபயோகிக்காமல் போவது தான். பெரிய ஒரு ஆற்றல் வரும் வரை, சிறு சிறு காரியங்களைச் செய்யாமல் சும்மா இருப்பது நல்லதல்ல.

நமக்கிருக்கும் சின்னஞ்சிறிய வாய்ப்புகளையும், வலிமைகளை யும் கர்த்தருடைய ஆளுகைக்கும், வழி நடத்துதலுக்கும் உட்படுத்தி, அவை களை விசு வாசத்தோடு உபயோகிக்க முன்வரும்போது, அவைகளே நம்மை உயர்வுகளுக்குக் கொண்டு செல்லும். ஐயாயிரம் பேருக்கு உணவ ளிக்க இயேசு விரும்பிய போது, அங்கே ஐந்து அப்பங்கள் மட்டுமே இருந்தது. ஆனால் அந்த ஐந்தை அவர் அற்பமாக எண்ணாமல், தேவனை நோக்கி ஜெபித்து உபயோகிக்க ஆரம்பித்தபோது, அங்கே அற்புதம் நிழ்ந்தது.

உன்னிடம் உள்ள சிறு சிறு ஆற்றல்களை அடையாளம் கண்டு செயல்பட இயலாவிடில், பேராற்றல் உனக்கு வந்தாலும் பலவீனனாகவேயிருப்பாய்

ஜீவ நீரோடை

அனுபவமும் சாட்சியும்

உபாகமம் – 13:1:11 | **ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே... 11 கொரி – 11:14** | 11 கொரிந்தியர் -11 :1-15

சிலர் தங்களுக்குள் எந்த விதமான ஆவிக்குரிய உணர்வுகளையோ, தேவ ஆவியின் செயல்பாடுகளையோ விசேஷமாக உணருவதில்லை. அதாவது கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதைத் தங்களுக்குள் உறுதிப்படுத்துகின்ற ஆவிக்குரிய அனுபவங்கள் இருப்பதில்லை. தேவன் தங்களுக்குள் கிரியை செய்கின்றார் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளும்படியாக எதையும் விசேஷமாகக் காண்பதில்லை. ஆனால் தேவனைப் பிரியப்படுத்தும் விதமாகச் சரியாக வாழவேண்டும் என்ற தீர்மானத்தோடு, அவர்கள் ஒழுங்கு மிகுந்த ஒரு பரிசுத்த வாழ்க்கையை வாழ்கின்றார்கள் அவர்கள் எதிலும் எங்கும் வேதவார்த்தைகளின் ஒழுங்குகளை முக்கியப்படுத்திக் குறைகூற இயலாத ஒரு வாழ்க்கையை வாழ்கின்றனர்.

தேவ அன்பை இருதயத்தில் ருசித்தல், தேவ பிரசன்னத்தை உணர்தல், தேவ சமாதானத்தை அடையாளங்காணுதல், தேவனால் சந்தோஷமாக்கப்படுதல், தெளிந்த நீரோடை போன்ற மனநிலை, பரிசுத்த ஆவியானவரின்உணர்த்துதல்கள், உந்துதல்கள் ஆகியவற்றை தேவ ஐக்கியத்தோடு வாழ்கின்றவர்கள் அனுபவிக்க முடியும். இவ்விதம் எதையும் அனுபவிக்காமல், வேதவார்த்தையின்படி வாழ்வதில் மட்டும் அதிகக் கவனம் செலுத்தினால் அதுதான் சுய நீதியின் வாழ்க்கை. இது நியாப்பிரமாண ரீதியான ஒரு பக்தி வாழ்க்கை. இது அன்பினாலும், ஆவியானாலும் ஏற்படாமல் சுயபக்தி ஆர்வத்தினால் ஏற்பட்டது. இது கிரியைகளினால் நீதிமானாக முயற்சிக்கும் அனுபவம். இது நல்ல வாழ்க்கை என்றாலும் கிறிஸ்தவ ரீதியான உண்மை வாழ்க்கை அல்ல.

சிலர் சொப்பனம், தரிசனம்,ஆவியின் ஏவுதல், ஆவியின் உணர்த்துதல், ஆவியின் வெளிப்பாடு, ரகசியம் அறிதல், வல்லமை பொங்குதல், தீர்க்கதரிசன ஏவுதல், என ஏராளமான ஆவிக்குரிய அனுபவங்களைப் பெற்றிருப்பதாகக் கூறுவார்கள். கர்த்தர் எப்போதும் அவர்களிடம் பேசுவதாகக் கூறுவார்கள். இவர்கள் எப்போதும் பரிசுத்த ஆவியின் விசேஷ அனுபவங்களோடு இருப்பதாகக் கூறுவார்கள்.

ஆனால் இவர்களின் குணங்கள், பண்புகள், மனநிலை, ஆசைகள், நடவடிக்கைகள் ஆகியவற்றில் சுயமே வெளிப்படும், பண ஆசையும், பொருளாசையும், மாய்மாலமும் இவர்களை விட்டுப் போகாது. சாட்சி ஜீவியம் இல்லாத இவர்களுக்குக் கிடைத்த அனுபவங்கள் தேவ ஆவியினால் வராமல், போலி ஆவியினால் வந்தது என்பதே உண்மை. இவர்கள் ஒளியின் தூதனுடைய வேஷம் பூண்ட தவறான ஆவியினால் நடத்தப்படுகின்றார்கள் என்பதே உண்மை.

*உன்னுடைய உள்ளத்தில் உள்ளதை நீ கண்டு கொண்டால்
இறைவனிடம் உனக்காக உள்ள நன்மைகளையும் கண்டு கொள்வாய்.*

தேடல் தேவை

ஏசாயா – 44:1–8

தேடுகிறவன் கண்டடைகிறான்...
மத்தேயு – 7:8

மத்தேயு –7 :7–29

இன்று விஞ்ஞான கண்டு பிடிப்புகளின் வளர்ச்சி, மனிதனுடைய கற்பனையின் வேகத்தைக் கடந்ததாக உள்ளது. புல்லரிக்கின்ற அளவிற்கு மனிதன் புதிது புதிதாக நவீன சாதனங்களைக் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்கின்றான். இதனுடைய முக்கிய காரணம் என்ன? மனிதனுடைய சளைப்படையாத தொடர்ந்த தேடல்கள்தான். முடியாதது போன்று தோற்றமளிக்கும் சில விஷயங்களை முடியும்படி செய்ய வேண்டும் என்ற மனித ஆர்வம், அதனைச் சாதித்து விட முடியும் என்ற நம்பிக்கை, அதனை நிஜமாகக் காண்பதற்கு அவன் எடுத்துகொள்ளுகின்ற முயற்சி ஆகியவைதான், அவனுடைய தேடலைப் பலனுள்ளதாக்குகின்றன.

ஆர்வம், நம்பிக்கை, முயற்சி ஆகியவை இணைகின்ற போது வருவதே உண்மையான தேடல், தேடுகின்றவன் கண்டடைகின்றான் என்றார் இயேசு. நாம் தேவனோடு இணைந்து இந்த உலகத்தில் தெய்வீகமான ஒரு உயர்ந்த வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும். இதுவே கிறிஸ்தவத்தின் முடிவான எதிர்பார்ப்பு. இதனை கிறிஸ்தவர்கள் என்று பெயர்பெற்ற பெரும்பான்மையான மக்கள் நிறைவேற்றவேயில்லை. காரணம் என்ன? உண்மையான தேடல் இல்லை. உயர்ந்த விதமாக வாழவேண்டும் என்ற ஆர்வமும், அதைக் குறித்த விசுவாசமும், போதிய முயற்சியும் இல்லாவிடில் கிறிஸ்தவம் பிரகாசிக்க முடியாது.

எதுவுமே தானாக நடந்து விடாது. ஒருவேளை நமக்கு ஆர்வமும், விருப்பமும் இருக்க முடியும். ஆனால் அதனைச் சார்ந்த ஒரு முயற்சிமிக்க பிரயாசம் இல்லையேல் அவை பிரயோஜனமற்றவை. தேடல் என்னும் அனுபவம் இல்லாவிடில் எதுவும் நிகழாது. கர்த்தருக்கு ஏற்ற பிரகாரம் வாழ வேண்டும் என்ற தாகமும், அது நம்மால் கூடும் என்ற விசுவாசமும், அதற்கேற்ற ஆவிக்குரிய பிரயாசங்களும் எங்கே உண்டோ, அங்கே கிறிஸ்தவம் பிரகாசிக்கும்.

அன்று கானானை வேவு பார்க்கச் சென்ற பத்துப் பேர், அந்த தேசம் கைப்பற்றப்பட முடியாதது என்றனர். ஆனால் தேவனை அறிந்த இரண்டு பேர் முடியும் என்றனர். அவர்கள் தேவபலத்தோடு முயற்சித்தபோது முடியாமல் போகவில்லை. இந்நாட்களில் அநேகர் தேவமகிமைக்கேதுவான காரியங்களில் போதுமான ஆர்வங்கொண்டு தேடாமல், தங்கள் சுய தேவைகள் தொடர்பான காரியங்களை மட்டுமே தேடுகிறார்கள். எனவே உண்மையான தெய்வீக இலக்குகளை அடைய முடியாத நிலை ஏற்படுகிறது.

இறை நம்பிக்கை என்பது இறைவனின் பாதையில் நடப்பதால் இதயத்தில் பெருகும் இறையாற்றலே.

ஜீவ நீரோடை

இறை உறவில்

யாத்திராகமம் - 34:1:11

கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்... எபேசியர் – 3:17

எபேசியர் -3 :12-21

என்னுடைய எந்த ஒரு புத்தகத்திலும் தேவ செய்தியிலும் தேவ உறவு, தேவ ஐக்கியம் ஆகிய வார்த்தைகள் அதிகமாக வராமல் போகாது. தேவனுக்கு முன்பாக பக்தியாக வாழவேண்டும் என்பதே ஆவிக்குரிய வாழ்க்கை என்று அநேகர் புரிந்து கொண்டிருப்பதால் தேவ உறவு என்பது சரியாக விளங்குவதில்லை. தேவனுடைய உறவில் வாழ்தல் என்றால் வேதத்தை வாசித்து, பின்பற்றி, ஜெபம் செய்து வாழ்வது தானே என்று ஒரு சகோதரி கேட்டார்கள்.

ஆனால் தேவ உறவு என்பது அது அல்ல. ஒரு கம்பெனி தலைமை அதிகாரி கொடுத்த வேலைகளைச் சரியாகச் செய்து, அவருக்கு நல்ல மரியாதை கொடுத்துச் செயல்படுகிறோம். இது உத்தமமாக வேலை பார்த்தல்தானேயன்றி, அந்த அதி காரியோடு ஐக்கியம் கொண்டிருப்பதல்ல, அவரோடு பேசுகின்ற, பழகுகின்ற, மனப் பகிர்வு செய்கின்ற, ஒருவரையொருவர் உண்மையோகக் கரிசனையோடுத் தேடுகின்ற, உதவுகின்ற ஒரு செயல்பாடு இருந்தால் அதுதான் ஐக்கியமாயிருத்தல்.

நீங்கள் ஜெபம் செய்து, வேதம் வாசித்து, ஆராதனை செய்து, வேத நெறி முறைகளை பின்பற்றி வாழ்ந்தால் நீங்கள் நல்ல பக்தர்கள். ஆனால் தேவன் நம்மை அழைத்திருப்பதோ நன்றாகச் செயல்படுகின்ற வேலைக்காரர்களாக அல்ல. நன்றாக அவரோடு பழகி வாழ்கின்ற பிள்ளைகளாக இருக்கவே நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

தேவ உறவில் அல்லது நட்பில் அல்லது நெருங்கிய ஐக்கியத்தில் வாழ்வது தொடர்பாக நம்முடைய மனதைச் செலுத்தி, அதற்கேற்றபடி செயல்படுவதுதான் தேவ உறவில் வாழும் வாழ்க்கை. ஜெப நேரங்கள் விண்ணப்ப வாசிப்பு நேரங் களாக அல்ல. இருதயத்தை தேவனுக்கு காண்பிக்கிற நேரமாக வேண்டும். வேத வாசிப்பைக் கடமையாக அல்ல. கர்த்தரின் குரலைக் கேட்பதற்கான வழியாக எண்ண வேண்டும். அவருடைய ஐக்கியத்தை நம்முடைய ஆத்துமாவில் நாம் அறியும்படியாக தேவனைத் தேட வேண்டும். தேவ உறவு நம்மில் நிலைத்திருக் கத்தக்கதாக எந்த ஒன்றிலும் ஜாக்கிரதையாக நடக்கும் பழக்கத்தை விரும்ப வேண்டும். தேவனை நமக்குள் இருக்கிறவராக ஆவியில் உணர்ந்து கொண்டு வாழ ஆசைப்பட வேண்டும். இன்னொரு நபரின் நல்ல உறவில் வாழ நாம் எப்படியெல்லாம் நடந்துகொள்கின்றோமோ, அது போல தேவ உறவிலும் பின் பற்ற வேண்டும்.

மனிதர்கள் உன்னிடம் தேவனைக் காணட்டும்
ஆனால் தேவனை மனிதரில் நீ தேடிப்போகாதே.

ஜீவ நீரோடை

வாஞ்சை

சங்கீதம் - 119:33:48

உம்முடைய கட்டளைகள் மேல் வாஞ்சையாயிருக்கிறேன்... சங் – 119 : 40

பிலிப்பியர் -3 :7-16

வேதாகமத்தில் வரும் சில கட்டளைகள் நாம் தேவனுக்குப் பிரியமான சில பண்புகளையும், குணங்களையும் கொள்கைகளாகக் கொண்டு வாழ வேண்டும் என்ற நோக்கத்திலேயே தரப்பட்டுள்ளன. அந்தக் கட்டளைகளைப் பூரணமாக நம்மால் கடைபிடித்துவிட முடியுமா என்பது முக்கியமல்ல. ஆனால் அந்தக் கட்டளைகள் வற்புறுத்தும் அந்த பண்புகளில் நாம் வளர்ந்து கொண்டிருக்கத் தொடர்ந்து பிரயாசப்பட வேண்டும்.

நம்மை நாம் நேசிப்பது போல பிறரை நேசிக்க முடியுமா? எப்போதுமே கோபப்படாமல் இருந்து விட முடியுமா? பொருளாசையை முற்றிலும் களைந்து விட முடியுமா? முடியுமா முடியாதா! என்பது முக்கியமல்ல. அவ்விதப் பண்பு நிலைகளும், குணநிலைகளும் தேவன் விரும்பும் பிரதான விஷயங்கள் ஆகும். எனவே அவற்றை அனுபவமாக்க நாம் தொடர்ந்து ஆர்வத்தோடு செயல்பட வேண்டும். அவ்விதப் பண்பு நிலைகளில் முன்னேறுவதை நாம் முக்கியமான ஆவிக்குரிய நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

என்றுமே, எதற்குமே கோபப்படாமல் இருத்தால்தான் வெற்றி என்பதல்ல. எதற்கெடுத்தாலும் கோபப்படுதல் என்ற நிலையை விட்டு விலகிச் செல்வதும் ஒரு வெற்றிதான். எந்த ஒரு பொருளையும் விரும்பாமல் இருக்க முடிந்தால்தான் பொருளாசையின் மேல் வெற்றி என்பதல்ல. பொருள்கள் மேல் உள்ள ஆசையின் இழுவைகளிலிருந்து தொடர்ந்து நம்மை விடுவித்துக் கொண்டேயிருப்பதும் வெற்றிதான். பிறரைக்குறித்த கசப்புகள், வெறுப்புகள் குறித்த சிந்தையை ஒரே நிமிடத்தில் மாற்றினால்தான் வெற்றி என்பதல்ல. அவைகளைத் தவறு என உணர்ந்து அவ்விதக் கசப்புகளிலிருந்து நம்முடைய மனதை விடுவித்துக்கொள்ள விரும்புவதும் ஒருவெற்றிதான். மலை உச்சிக்கு ஒரே நொடியில் போய்விட முடியாது. ஆனால் அதை இலக்காக வைத்து நாம் ஏறிச்செல்லுகின்ற ஒவ்வொரு அடியும் நம்மை வெற்றிக்கு நேராக நெருங்கிவரச் செய்கிறது என்பதே உண்மை.

கட்டளையை நிறைவேற்றி விட்டோமா என்பதல்ல. கட்டளைகள் வற்புறுத்தும் தெய்வீகப் பண்புகளில் வளர்ந்து கொண்டேயிருக்கப் பிரயாசப்படுகிறோமா என்பதே முக்கியம். கட்டளைகளின் கட்டாயத்தை அல்ல. அந்த கட்டளைகள் வற்புறுத்தும் பண்பு நிலைகளின் அவசியத்தை உணர்ந்து, அதில் முன்னேறுவதற்கே முயற்சி செய்ய வேண்டும்.

தோல்விகள் தொடர் முயற்சிக்கு முட்டுக் கட்டையல்ல. இன்னும் நீ அதிகமாய் பிரயாசப்பட அது அவசியமாய் இருக்கும்.

ஆபரணங்கள்

நீதிமொழிகள் – 31:10-31

பொன்னினாலாவது,
முத்துக்களினாலாவது... 1 தீமோத்தேயு –2:9

1 தீமோத்தேயு – 2:1-15

சமீபத்தில் ஒரு பிரபல நகைக் கடை விளம்பரத்திற்காக ஒரு பெண்ணின் படம் பத்திரிக்கையில் வந்தது. அந்தப் பெண் மிக, மிக அழகானவள். ஆனால் அவள் அணிந்திருந்த ஏராளம் நகைகள் அவளின் அழகை அதிகமாக மறைத்து, ஒரு பொம்மையின் தோற்றத்தைக் கொடுத்தது. "அழகாகத் தோன்றுங்கள்" என்ற அறிவிப்போடு விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்த விளம்பரப்படத்தை சரியாகக் கவனிக்கும் போது, அதிக நகை அணிதல் அழகை அழிக்கும் என்ற உண்மைதான் வெளிப்பட்டது.

நகை அணிதலே பாவம் என்ற கூற்றிற்கு வேதாகமத்தில் உரிய சான்றுகள் இல்லை. நன்றாகத் தோன்றவேண்டும் என்ற மனிதனுடைய இயற்கையான ஆசை உணர்வை பாவம் என்று கூற இயலாது. ஒரு பெண்ணின் உடலோடு ஆபரணங்கள் இணையும் போது அவளுக்கு ஒரு நல்ல தோற்றம் கிடைப்பது உண்மைதான். ஆனால் இந்த நகை அணிதல் பலருடைய அழகை அழிக்கிறது. நகைகளின் அளவு அதிகரிக்க, அதிகரிக்க அவர்களில் பெருமை, ஆடம்பரம், சுயமேன்மை, பிறர் கவனத்தை இழுத்தல் ஆகியவை வந்து விடுகிறது. அது விரும்பத்தக்கவை அல்ல. வெறுக்கத்தக்க தோற்றமே அது.

கிறிஸ்தவப் பெண்கள் அடக்கம், ஒழுக்கம், தாழ்மை, சாந்தம் ஆகிய குணங்களால் பிறர் மனதில் மதிப்பிற்குரிய இடத்தைப் பெற வேண்டும். ஆனால் இன்றைய திருச்சபைகளில் பரிசுத்தமான தேவனை கனப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு வருகின்ற பல பெண்கள் தேவனை கனவீனப்படுத்துகின்றார்கள். அவர்களின் விதவிதமான ஆபரண அலங்காரங்கள், அவர்களிடமுள்ள பெருமையையும், செல்வம் சார்ந்த மேன்மை பாராட்டலையும் வெளிப்படுத்துகின்றன. ஆனால் ஆவிக்குரிய அம்சங்களோ, அடையாளம் தெரியாமல் போய்விட்டன. உலகத்தின் பார்வைக்கு நம்மை மேன்மையாகக் காண்பிக்க நகைகளை வாங்கிக் குவிக்கும் நாம், தேவனுடைய பார்வையில் மேன்மையாய் தெரியும் விதமாக தாழ்மை, அடக்கம், நாணம், சாந்தம், பரிசுத்தம், ஒழுங்குகள் போன்ற விலையேறப்பெற்ற நகைகளை அணிந்திருக்கின்றோமா என்று சிந்திக்க வேண்டும்.

தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும் என்ற வேத நியமத்திற்கு நகைகளின் அளவுகள் எதிராகப் போகாதிருக்கட்டும்.

கண்ணாடியில் உன் முகத்தைப் பார்த்தால் அழகு தெரியும்
வேதவெளிச்சத்தில் உன் அகத்தைப் பார்த்தால் தவறு புரியும்.

ஜீவ நீரோடை

தேவன் மகிமைப்பட

சங்கீதம் - 144:1-15

உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி ...
மத்தேயு – 5:16

லூக்கா -5 :12-28

நாம் தினமும் ஜெபிக்கிறோம். நன்றாகத் துதிக்கிறோம். வேதத்தை தியானிக்கிறோம். சபை ஆராதனைகளில் ஒழுங்காகக் கலந்து கொள்கிறோம். நல்லது. ஆனால் இவை மட்டுமே ஆவிக்குரிய வாழ்க்கை என்ற பெயரைப் பெற்று விட முடியாது. ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்வதற்காக செய்யப்படும் வெறும் ஆயத்தங்கள் மட்டுமே இவைகள். ஜெபித்து வேதத்தைப் படித்து, ஆராதனைகளில் கலந்து கொண்டு வாழ்வதினால் தேவனை மகிமைப்படுத்தி விட்டோம் என்று நாம் சொல்ல முடியாது.

புதிய ஏற்பாட்டின்படி உண்மையான ஆராதனை என்பது தேவனுடைய நாமம் மகிமைப்படும் விதமாக நாம் வாழ்வதுதான். நம்மில் உள்ள தெய்வீகப் பண்புகள் பிறமக்கள் நடுவில் வெளிச்சம் போல பிரகாசிக்கும் போது, அங்கே தேவனுடைய நாமம் உயர்வாக எண்ணப்பட்டு மகிமைப்படுகிறது. அதைத்தான் தேவன் நாம் செய்ய வேண்டிய பிரதான ஆராதனையாக எதிர்பார்க்கின்றார். ஆராதனை என்றால் தேவன் கனப்படுவது என்பதுதான் ஆவிக்குரிய உண்மை யான அர்த்தம். நாம் ஒரு அறையில் கூடி வந்து நன்றாகத் துதித்து, ஸ்தோத்தரித்து, பாடி தேவனை உற்சாகமாகத் தொழுது கொண்டாலும் அவை தேவன் கனப் படத்தக்கவிதமான ஒரு வாழ்க்கைக்கான ஆயத்தம்தானேயன்றி, அவையே ஆராதனையின் அனைத்தும் அல்ல.

தேவன் எப்போது மகிமைப்படுகிறார்? ஜெபத்தில் அல்ல. வேத வாசிப்பில் அல்ல. ஆராதனையில் அல்ல, இவைகளில் தேவன் நமக்கு அவர் விரும்பும் பிரகாரமான வாழ்க்கையை வாழத் தேவையான வலுவையும், ஆயத்தத்தையும் தருகிறார். அதனைத் தொடர்ந்து நாம் எப்படிப் பேசுகிறோம், எப்படி பிறரோடு சம்பந்தப்படுகிறோம், அலுவலகங்களில் எப்படி நடந்து கொள்கிறோம், ஜனங் களின் மத்தியில் எந்த விதமாக இயங்குகிறோம் என்பதைப் பொறுத்தே அவர் மகிமைப்பட முடியும்.

ஜெபம், தியானம், ஆராதனை மூலம் நம்மைப் பெலப்படுத்தும் தேவன், அந்த பெலத்தைப் பெற்று நாம் தொடர்ந்து எப்படி வாழ்கிறோம் என்பதையே கவனிக்கிறார். அங்கே அவர் மகிமைப்பட விரும்புகிறார். அங்கே நாம் வித்தி யாசமான முறையில் கிறிஸ்து விரும்பும் சுபாவங்களோடு செயல்பட்டால் அதுவே உண்மையான ஆராதனை. அங்கேதான் தேவனின் எதிர்பார்ப்பு நிறைவேறுகிறது. நாம் கோபமடையும்படி பிறர் நடந்து கொள்ளும்போது நாம் பொறுமை காக்கின் றோமா? நமக்கு அநீதி இழைக்கப்படும் போது, சகித்துக் கௌ்கின்றோமா! ஆம். ஜெபித்த உடனோ, வேதம் படித்தவுடனோ தேவனுக்குரியதை செய்துவிட்டதாக நினையாமல், தொடர்ந்து தேவன் விரும்பியபடி வாழ முன்வருவோம்.

நற்குணங்களோடு இணைந்திராதவனின் இதயம்
இறைவனை விட்டு வெகுதூரம் விலகியேயிருக்கிறது.

ஆர்வம் எப்பொழுது

சங்கீதம்-42:1-11

ஒருவன் மறுபடியும் பிறக்காவிட்டால் ...
யோவான் 3:3

யோவான்-3:1-16

ஒருவர் கடலில் எப்படி வேகமாக நீச்சலடிப்பது என்பது தொடர்பான விஷயங்களைக் குறித்துப் பாடம் நடத்திக்கொண்டிருக்கின்றார். உண்மையாகவே கடலில் நீச்சலடிக்க விரும்பும் ஒருவர் அதனை அதிக நேரங்கள் ஆர்வமாகச் செவிகொடுத்துக் கவனிக்க முடியும். ஆனால் நீச்சயலடிப்பது தொடர்பான எந்த ஈடுபாடும் இல்லாத ஒருவர் சில தகவல்களை அறியும் ஆர்வத்தால் கொஞ்ச நேரம் அதனைக் கவனிக்க முடியும். நீண்ட நேரம் அதனை ஆர்வத்தோடு கேட்பது அவருக்குக் கூடாத காரியம்.

அதுபோலவே ஆவிக்குரிய விஷயங்களை எல்லாரும் மன ஈடுபாட்டோடு கவனிக்க முடியாது. சில நல்ல கருத்துக்களை அறியும் ஆர்வத்தினால் சற்று நேரம் ஆவிக்குரிய கருத்துக்களைக் கேட்க முடியும். ஆனாலும் ஆவிக்குரிய விஷயங்கள் மேல் அதிக ஆர்வமுடைய ஒரு ஆவிக்குரிய இருதயம் இல்லாவிட்டால் தேவசெய்திகளும், வேத ஆலோசனைகளும் அவர்களை அதிக நேரம் உற்சாகப்படுத்தாது.

எவ்வளவுதான் ஆழமான சத்தியங்களைப் பேசினாலும், எந்த ஆர்வமும் இல்லாமல் கடமைக்காகவே சிலர் கேட்பார்கள். ஏனென்றால் அவர்கள் ஆழமான கிறிஸ்தவ வாழ்வு வாழ்வது தொடர்பான எந்த வாஞ்சையோ தரிசனமோ இல்லாதவர்கள். தங்களுக்கு ஆர்வமில்லாத விஷயங்கள் மேல் மனதை வைப்பது மிகவும் கடினமான விஷயங்களே.

அநேகர் ஜெபம், வேதவாசிப்பு, ஆராதனை சபைகூடுதல் போன்ற ஆவிக்குரிய விஷயங்களைச் செய்கின்றனர். ஆயினும் அவற்றில் அவர்களுக்கு உண்மையான ஆர்வங்களோ, ஈடுபாடுகளோ இல்லை. இவற்றையெல்லாம் ஒரு மதக்கடமைக்காகச் செய்கின்றனர். அவை அவர்களுக்கு விருப்பமில்லாமல் சுமக்கும் சுமைகளே.

மனந்திருந்தி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் மறுபடியும் பிறத்தல் என்ற ஆவிக்குரிய அனுபவம் பெறவேண்டும். அந்த அனுபவம் உண்மையாக ஏற்பட்டால்தான், உண்மையான ஆவிக்குரிய விருப்பங்களும், ஈடுபாடுகளும் ஏற்படும். அப்போது தேவனுக்குரிய காரியங்களைச் சுமையாக அல்ல, அவற்றை விரும்பி ஏற்றுக்கொள்ள இயலும், அப்போது வேதவார்த்தைகளும், தேவ ஆலோசனைகளும் நமக்கு மிகவும் அவசியமானதாக மாறிப் போகும். அப்போது ஆவிக்குரிய தாகமும் பசியும் ஏற்பட்டு, தாவீதைப்போல தேவன்மேல் அதிக தாகங்கொண்டு வாழமுடியும்.

இல்லாத குணத்தை இருப்பது போல காண்பிப்பவன்
இருக்கின்ற குணத்தையும் இல்லாமல் போகப் பண்ணுகிறான்

ஜீவ நீரோடை

சுனாமி

உபாகமம்–15:1–11

தேசத்தில் எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை... உபா – 15:11

லூக்கா–10 :25 –37

2004 ஆண்டு டிசம்பர் 26–ம் தேதி சுனாமிப் பேரலைகளால் ஆயிரக் கணக்கானோர் கணநேரத்தில் அழிந்து போயினர். சுனாமியால் பெரிதும் பாதிக் கப்பட்ட சில பகுதிகளில் நான் சில நாட்கள் இருக்க நேரிட்டபோது, ஜனங்களின் சேவை உணர்வு மனதை அதிகமாகத் தொட்டது. அளவுக்கதிகமான உதவிகள் பல திசைகளிலிருந்தும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்தது. யார் யாரோ, எங்கெல்லாமிருந்தோ விரைவில் வந்து தாராளமாக உதவி செய்து, மனித நேயம் ஒவ்வொரு உள்ளத்திலும் இருப்பதைத் தெளிவாக வெளிப்படுத்தினார்கள்.

ஆனால் இதன் மத்தியிலும் வேதனையான ஒரு விஷயமும் உண்டு. பொதுவாக நம்மில் அநேகர் நம்முடைய மனித நேயத்தையும் இரக்க சிந்தையையும், பரிதாப உணர்வையும் சாதாரண சூழ்நிலைகளில் வெளிப்படுத்துவதில்லை. ஏதாவது ஒன்று மிக பயங்கரமாக நிகழ்ந்து ஒரு பெரிய கூக்குரல் எழும்பும் போதுதான், நம்முடைய மனம் பனிப்பாறையைப் போல உருக ஆரம்பிக்கின்றது. நம்முடைய இரக்கத்தையும், நேயத்தையும் வெளியே கொண்டு வர ஒரு பெரிய சுனாமி தேவைப்படுகிறது.

ஆனால் சாதாரணமான சூழ்நிலைகளிலேயே நம்மைச் சுற்றிலும் எத்தனை பேரை எதாவது ஒரு சுனாமி அலை தாக்குகிறது. வியாதி, பொருளாதாரக் குறைவு, ஆதரவின்மை, வாழ்க்கைப் போராட்டங்கள் எத்தனையோ குடும்பங்களைச் சுனாமிகளாகத் தாக்கிப் பெரிய பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

சில நேரங்களில் நம்மைச் சுற்றிலும் தனிப்பட்டவர்கள் படுகின்ற பலவித துன்பங்களைக் காண நேரிடுகின்ற நாம் நல்ல சமாரியன் உவமையில் வரும் ஆசாரியனைப் போலவும், லேவியனைப் போலவும் சம்பந்தமற்றவர்களாக விலகிப் போகவில்லையா? சுனாமி தாக்கியபோது இடங்கொள்ளாத அளவிற்கு ஜனங்கள் உடைகளையும், உணவுகளையும் தந்தனர். ஆனால் நம்மைச் சுற்றிலும் சாதாரண சூழ்நிலைகளிலேயே எத்தனையோ பேருக்கு உணவு, உடை இல்லை. அவர்களையும் எதோ ஒரு சுனாமி தாக்கியிருக்கின்றது என்பதை உணர்ந்து இயன்ற உதவியைச் செய்ய வேண்டாமா?

பெரிய சுனாமி வரும்போது மட்டுமல்ல. இந்தச் சாதாரண சுனாமிகளாலும் அநேகர் நொந்து போய்க் கிடக்கின்றனர். தேவனை அறிந்த நாம் நம்முடைய மனித நேய உணர்வை வெளியே கொண்டு வர அனுமதிப்போமா !

பிறருடைய தேவைகளை நீ சிந்திக்கும்போது
உன்னுடைய தேவையைச் சந்திக்க தேவன் தயாராகிறார்.

மாற்றம் எப்படி?

நியாயாதி-6:22-32

மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்... 11 கொரி – 3:18

11 கொரிந்தியர்-3 :1 -18

இயேசு கிறிஸ்து ஒரு மனிதனுக்குள் மாற்றங்களை ஏற்படுத்துகின்றார். மனமாற்றத்திற்கான செயல்களை அவர் ஒருவனுக்குள் செய்வதால் அந்த மனிதனின் செயல், சுபாவம், சிந்தனை, ஆசை, இலக்கு எல்லாமே மாற்றம் பெறு கின்றது. ஆனால் இந்த மாற்றங்கள் எப்படி நிகழ்கின்றன. அவனை அறியாமலே அவன் மாறிவிடுகிறானா? அவன் மாற்றங்களை காண முன்வராமலே அவனுக்குள் மாற்றங்கள் நிகழ்ந்து விடுகின்றதா?

இல்லை. ஒவ்வொரு மாற்றமும் அந்த மனிதனின் அறிவோடும், அவனு டைய விருப்பத்தோடும் அவனுடைய ஈடுபாட்டோடும்தான் நடக்கின்றன. தேவ னுடைய ஆவியானவர் ஒரு மனிதனுக்குள் செயல்படும்போது அந்த மனிதன் தொடர்ந்து தனக்குள் ஏற்படவேண்டிய மாற்றங்களைக் குறித்து அறிந்து கொண்டே யிருக்கின்றான். தேவனுடைய வெளிச்சத்தை அவனுக்குள் அவன் காண இன்னும் மாற்றங்கள் அவசியமாவதை அவன் அறிகின்றான். அந்த மாற்றங்களின் தேவை தேவ ஆவியினால் அவனுக்குள் உணர்த்தப்படுவதோடு அவன் மாற்றங்களைக் காணத் தூண்டப்படுகின்றான். தேவ ஐக்கியத்தில் வாழ்கின்ற மனிதனுக்கு தேவன் உணர்த்துகின்ற மாற்றங்களை தன்னிடம் காணவிரும்பும் ஒரு ஆவிக்குரிய ஆசை ஏற்படும்.

அவன் தனக்குள் மாற்றம் தேவை என்று உணர்ந்து செயல்படமுன்வரும் போது, தேவ ஆவியினால் அதனைச் செயல்படுத்தும் ஆற்றலும் வல்லமை யும் அவனுக்குக் கிடைக்கின்றன. தேவ அன்பையும், அமைதியையும் அனுப விக்கின்ற இருதயத்தில் மாற்றங்களை காணவிரும்பும் தாகமும் அவற்றை நடை முறைப்படுத்த உதவும் வலிமையும் செயல்படுவது உண்மை.

தேவன் நமக்குள் செய்ய விரும்பும் எதையும் நம்முடைய அறிவோடும், ஆர்வத்தோடும்தான் செய்வார். எனவே ஒவ்வொருநாளும் நமக்குள் நடைபெற வேண்டிய எந்த ஒரு மாற்றத்தையும், தேவ ஆவியினால் உணர்த்தப்படும் போது, அதனை உணரும் நுண்ணுணர்வு உடையவர்களாக நாம் இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கும் போதும், வேத உபதேசங்களைக் கற்றுக் கொள்ளும்போதும், தேவசமுகத்தை தேடிச் செயல்படும் போதும், நமக்குள் ஏற்பட வேண்டிய மாற்றங்களைக் குறித்து நாம் அறிந்து கொள்ள தேவன் எப்படிச் செயல்படுகின்றார் என்பதைக் கவனிக்க வேண்டும். விழிப்புணர்வு, மனவிருப்பம், செயல்படும் ஆர்வம், விசுவாசம் இவற்றின் இணைந்த செயல்பாடுகளோடுதான் மாற்றங்கள் நிகழ்கின்றன.

மலருக்கு அதன் மணமே விளம்பரம்
நல்ல மனிதனுக்கு அவன் குணமே விளம்பரம்

ஜெபம் எதற்கு

தானியே - 6:6 -23

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்...
1 தெச - 5 : 17

1 தெசலோனிக்கேயர் - 5:1-25

நம்முடைய வாழ்க்கையின் தேவைகளைப் பெறவும் அல்லது நாம் எதிர் பார்க்கும் காரியங்கள் நிறைவேறவும், தேவனை நோக்கி மன்றாடுவதுதான் ஜெபம் என்ற பாரம்பரிய சிந்தனை நம்மை விட்டுப் போகவேண்டும். இது உண்மைதான். ஆனாலும் ஜெபத்தின் நோக்கம் அதுவல்ல. ஜெபம் என்பதின் வழியாக நாம் தேவனோடு தொடர்பு கொள்கிறோம். அந்தத் தொடர்பின் வழியாகத்தான் தேவனுடைய வல்லமை அல்லது தெய்வீக சக்தி நம்மிடம் வருகின்றது. அந்த சக்தியின் மூலம்தான் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை உயிரோடு செயல்பட முடியும். எனவே நம்மிடம் நிறைவுகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், கேட்டவைகள் கிடைத்தாலும், கிடைக்காமல் போனாலும் ஜெபம் என்பது நம்முடைய அனுதினத் தேவையாக உள்ளன.

நம்முடைய நிறைவுகளுக்கு மத்தியில் தேவனைவிட்டு தூரம் போய் விடாமல் நம்மைக் காக்க ஜெபம் தேவை. நம்முடைய குறைவுகளுக்கு மத்தியில் மனம் சலித்து தேவனைவிட்டு விலகிவிடாமல் தடுக்க ஜெபம் தேவை. நாம் வேத அறிவில் பெருகி, ஊழியம் செய்வதில் தீவிரமாகி, காணிக்கை கொடுப்பதில் தாராளமாயிருந்து, இயேசுவுக்காக உயிர் கொடுக்கவும் தயார் என்பது போல நின்று கொண்டு இருக்கலாம். ஆனாலும் ஒரு உண்மையான அனல்மிகுந்த ஜெபவாழ்க்கை போதுமான அளவு இல்லாமலிருந்தால், கண நேரத்தில் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை இருந்த இடம் தெரியாமல் போகும் அபாயமுண்டு, அவ்விதம் வீழ்ந்து போனவர்கள் ஏராளம்.

பாபிலோனில் நேபுகாத்நேச்சார் அமைத்த சிலையை வணங்குவதற்கு மறுத்து அக்கினியில் அழியவும் தயாராக இருந்தனர் சாத்ராத், மேஷாக், ஆபேத்நேகோ என்ற இளைஞர்கள். பாபிலோனின் உயர்ந்த பதவியை உயர்வாக எண்ணாமல், சிங்கெபிக்குள் விழவும் தயாராகயிருந்தான் தானியேல். இவைகள் வெறும் வைராக்கியங்கள் அல்ல. அவர்களுடைய ஜெப வாழ்க்கையினால் உருவாகிய மனவலிமைகள்.

நம்மை கர்த்தரண்டை நிறுத்துவதும், அவருடைய ஐக்கியத்தை விட்டு விலகாமல் காப்பதும் ஜெபம்தான், போதிய ஜெபங்கள் இல்லாமலே நாம் பெரிய ஊழியங்களையும், பெரிய சாதனைகளையும் செய்ய முடியும். ஆனால் கர்த்தருக்கேற்ற சாட்சியாகவோ நிற்க முடியாது. கர்த்தருடைய வழியில் நடக்கவும் முடியாது. ஆண்டவராகிற இயேசு தேவ குமாரன் என்ற உயர்ந்த நிலைமையிலிருந்த போதிலும், இரவும் பகலும் ஜெபிக்கிறவராயிருந்தார். பிதாவாகிய தேவனுடைய ஐக்கியத்தை உணரவும், அவருடைய சித்தப்படி செய்யவும் அவர் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டியதாயிருந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் ஒவ்வொரு நிருபத்திலும் ஜெபத்தின் அவசியத்தை வற்புறுத்தாமல் இருந்ததில்லை. ஆம். தேவ அன்பையும், ஐக்கியத்தையும், வல்லமையையும் நமக்குள் உணரவே ஜெபத்தின் தேவை வற்புறுத்துப்படுகிறது.

உன்னைக் காண்கின்ற இறைவனை நீயும் காண்பதற்கு
ஜெபத்தை தவிர வேறு வழியில்லை.

அமைதி, ஆனந்தம்

சங்கீதம்–16:1–11

இலக்கை நோக்கித் தொடருகிறேன்...
பிலிப்பியர் – 3 : 14

பிலிப்பியர்–3:1–15

அமைதி என்பது நம்முடைய ஆசையாக இருக்க வேண்டும். ஆனந்தம் என்பது நம்முடைய எதிர்பார்ப்பாக இருக்க வேண்டும். ஆனால் அவைகளே வாழ்க்கையின் இலக்குகள் அல்ல. இவ்வித இலக்குகள் மேலும் மேலும் அமைதிக் குறைவையும், சந்தோஷக்குறைவையும் எற்படுத்தும். அமைதி ஆனந்தம் என்பதெல்லாம் ஒரு உயர்ந்த இலக்கை நோக்கிய பயணத்தில் ஏற்படும் பிரதி விளைவுகளே, ஒரு பரிசுத்தமான வாழ்வே நம்முடைய வாழ்வின் இலக்காக இருக்க வேண்டும். பரிசுத்தமான வாழ்வு என்றால் தேவசித்தம் செய்கின்ற வாழ்வு ஆகும். பரிசுத்தமான வாழ்வின் இலக்கை நோக்கி நடக்கும் பாதையில் கிட்டுவதுதான் உண்மையான அமைதியும் ஆனந்தமும்.

பரிசுத்தமான வாழ்க்கை என்றால் துறவற வாழ்வு அல்ல. அது காவிநிற வாழ்வோ, கடுந்தவம் புரியும் வாழ்வோ அல்ல. நமக்கு தேவன் அனுமதிக்கும் வாழ்க்கைச் சூழ்நிலையில், நாம் எப்படி வாழ்வது தேவனுக்குப் பிரியமாயிருக்குமோ அப்படி வாழ்வதுதான் பரிசுத்த வாழ்க்கை. அப்பாவின் செல்லப் பிள்ளையாக யோசேப்பு வாழ்ந்த காலம் இருந்தது. அரண்மனை அதிகாரியின் அதிசௌகரிய சூழ்நிலையில் வாழ்ந்த காலம் இருந்தது. சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடந்த காலம் இருந்தது. வாழ்க்கைச் சூழல்கள் மாறிக் கொண்டே வந்தது. ஆனால் அவனுடைய இலக்கோ தேவன் பிரியப்படும் விதமாக வாழவேண்டும் என்பதாகவே இருந்தது. அதுதான் பரிசுத்தமான இலக்கு நோக்கிச் செல்லும் வாழ்க்கை.

எனவே எல்லாச் சூழ்நிலைகளிலும் அவனிடம் அமைதியும் ஆனந்தமும் இருந்தது.தேவனை நம்மிடம் நெருங்கி வாழ்கின்றவராகக் காண ஜெபம், ஆராதனை, வேத தியானம் எனப் பல விஷயங்கள் உதவி செய்யலாம். ஆனால் தேவனை நம்மிடம் நெருங்கி வரச் செய்யும் பிரதானமான விஷயம் ஒரு நல்ல இலக்குதான்.

தேவனைப் பிரியப்படுத்தி வாழ்தல் தொடர்பான ஒரு இலக்கு இருக்கும் இருதயத்தில் தேவ உறவு வந்துவிடுகிறது. ஏனென்றால் தேவ உறவு இல்லாத இடத்தில் தேவ தரிசனம் அல்லது தேவனுக்குப் பிரியமான இலக்கு நிறைவேறாது. தேவ ஐக்கியத்தின் பின்பலத்தைக் கொண்டுதான். பரிசுத்தமான வாழ்க்கை இலக்கை எட்ட முடியும். தேவ உறவு எங்கே உண்டோ, அங்கே தெய்வீக அமைதியும், ஆனந்தமும் இல்லாமல் இராது.

ஆனந்தமான வாழ்வை இலக்காக வைத்துச் செயல்பட்ட சாலொமோன் சஞ்சலத்தையே இறுதி விளைவாகக் கண்டான். தேவனுக்காக வாழ்வதை இலக்காகக் கொண்டிருந்த தாவீதோ போராட்டங்களின் நடுவிலும் பேரானந்தம் கண்டான்.

கவலைகள் உன்னைவிட்டு ஓட வேண்டுமானால்
நீ கர்த்தரை நோக்கி ஓட முதலில் கற்றுக்கொள்.

ஜீவ நீரோடை

ஆசீர்வாதத்தடை

சங்கீதம் -106:1-40

அவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாமல்...
எபிரேயர் – 3:19

எபிரேயர்-3 :1 -19

ஆசீர்வாதக் கானானுக்குச் செல்ல எகிப்தில் அடிமைகளாயிருந்த இஸ்ர வேல் மக்கள் புறப்பட்டபோது, எகிப்திய ராஜா குறுக்கிட்டுத் தடை ஏற்படுத்தினான். ஆனால் தேவன் தடையை உடைத்தார். யோர்தான் நதி, எரிகோ கோட்டை போன்றவை தடையாக வந்த போதும், தேவன் அவற்றைக் கடந்து போக உதவி செய்தார். ஆனாலும் தேவனால் உடைக்க முடியாத ஒரு தடை ஏற்பட்டது. எனவேதான் எகிப்தைவிட்டுப் புறப்பட்ட ஜனங்கள் கானானுக்குப்போய்ச் சேராமல் போனார்கள்.

அந்தத் தடை அவர்களே ஏற்படுத்திக் கொண்ட தடை. தவறான குணங் களையும், மோசமான இயல்புகளையும், அதிகமான இச்சைகளையும் விட்டு விட விரும்பாமல் போன, அவர்களின் போக்குதான் அந்தத் தடை. பிறர் ஏற்படுத் திய எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்த தேவன், தங்களின் கீழ்ப்படிய மனமில்லாத இயல்பினால் தாங்களே ஏற்படுத்திக் கொண்ட தடைக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை.

சவுல் ராஜாவாய கால கட்டத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு பெலிஸ்தியர் கள் மிகப்பெரிய சவாலாக இருந்தார்கள். பெலிஸ்தியர்களை மேற்கொள்ள இஸ்ரவேலர்கள் எந்த விதத்திலும் இயலாதவர்களாயிருந்தனர். ஆயினும் தேவன் சவுலை பலப்படுத்தி, பெலிஸ்தியர்கள் என்ற தடையை எளிதாக உடைத்து அவனை ராஜாவாக்கினார். ஆனால் அந்த சவுலின் கீழ்ப்படியாமை ஒரு நாள் அவனுக்காகச் செயல்பட முடியாமல், தேவனுக்கு முன்பாக ஒரு பெரிய தடையாக மாறியது. அந்தத் தடையின் விளைவாக ஒரு நாள் சவுல் தன்னையும் அழித்து தன்னுடைய நாட்டையும் பலவீனப்படுத்தினான்.

தேவனுடைய ஆசீர்வாதங்களையும், உயர்வுகளையும் அடையவிடாதபடி எந்த மனிதனோ, எந்த சக்தியோ நம்மைத் தடுக்க முடியாது. மனிதனாயினும் சரி, சூழ்நிலைகளாயினும் சரி, நம்முடைய ஆசிர்வாதங்களுக்குக் குறிக்கிடும் எந்தத் தடைகளையும் உடைத்தெறிய தேவன் வல்லவர். ஆனால் நம்முடைய தவறான சுபாவ நிலைகளையும், தேவனுக்குப் பிரியமற்ற குணாதிசயங்களையும் நாம் வெறுத்து விரட்டாவிட்டால், அவைகளே பெரிய ஆசீர்வாதத் தடைகள் ஆகிவிடும். அங்கே தேவன் ஒன்றும் செய்ய முடியாது. அநேகர் தங்களின் முன்னேற்றப் பாதைகளில், சில மனிதர்கள்தான் பெரிய தடைகளாக இருப்பதாகச் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். ஆனால் உண்மையில் அவர்களின் குணப்படாத இருதயமும், செவ்வை செய்யப்படாத இயல்புகளும் அங்கே பெருந்தடைகளாக நின்று கொண்டிருக்கும். நம்முடைய ஆசிர்வாதங்களுக்குத் தடையாக நிற்கும் நம்முடைய தீய குணங்களை விரட்டத் தீவிரமாவோம்.

தோல்வியின் காரணத்தை உன்னிடம் தேடிப் பார். வெற்றியின் இரகசியத்திற்காக தேவனை நாடிச்செல்.

இன்னும் இன்னும் வளர வேண்டும்

பிரசங்கி– 11:1–10

பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிற படியினாலே... எபிரேயர் – 5 : 13

எபிரெயர்– 5:7 –14

இன்றைய சமுதாய பொருளாதார சூழ்நிலையில், ஒருவர் வியாபாரம் செய்து கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவர் அந்த வியாபாரத்தில் முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும். இல்லையென்றால் விரைவில் அவர் வியாபாரத்தை இழக்க நேரிடும். எந்த ஒரு துறையாயினும், அடுத்து ஒரு படி நிலைக்கு செல்ல வேண்டும் என்ற முனைப்போடு செயல்படாவிட்டால், அங்கே தாக்குப் பிடிப்பது கடினம்.

ஆவிக்குரிய வாழ்க்கையிலும் நாம் நம்முடைய நிலையை தக்கவைத்துக் கொண்ருந்தால் மட்டும் போதாது. நாம் வளர்ந்து அடுத்தபடிக்குச் செல்ல வேண்டும். ஆற்றுவெள்ளம் போல் இன்னும் அடுத்த பகுதிக்குச் செல்ல வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட வேண்டும். இல்லையென்றால் குட்டை போல நாம் எங்கேயோ தேங்கி நின்று விடுவோம்.

பலருடைய ஆவிக்குரிய வாழ்க்கை, வெறுமனே தக்கவைத்தலும், பராம ரித்தலுமாகவே உள்ளது. அவர்கள் தங்களுக்கென்று ஒரு வட்டத்தை வரைந்து கொண்டு, அங்கேயே நிற்கின்றார்கள்.

செக்குமாடு ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே சுற்றி வரமுடியும். எபி ரெயருக்கு நிருபம் எழுதிய தேவ மனிதன்"காலத்தைப் பார்த்தால் நீங்கள் போத கராயிருக்க வேண்டும்" என்று எழுதினான். ஆனால் அவர்களோ பாலுண்கின்ற குழந்தைகளைப் போல வளராமலேயே இருந்தார்கள். சிலர் எத்தனை ஆண்டுகள் கிறிஸ்தவர்களாயிருந்தாலும் எந்த வளர்ச்சியும் இராது. தேவனைக் குறித்த அறிவிலோ, வேத விஷயங்களைப் புரிந்துகொள்வதிலோ, தேவனுக்கேற்ற வாழ்க்கை அனுபவங்களிலோ, குணாதிசயங்களிலோ என்றும் ஒரே விதமாக வேயிருப்பார்கள்.

அவர்கள் குறிப்பிட்ட ஒரு அளவு அனுபவத்தை இழக்காமல், அதனை தற்காத்துக் கொள்கின்றார்கள். ஜெபம், வேத வாசிப்பு, ஆராதனை என ஒரு டைம் டேபிள் போட்டு அங்கேயே நின்று விடுகிறார்கள். தாங்கள் ஏற்றுக்கொண்ட பக்தி அனுபவத்தை தற்காத்துக் கொண்ட போதிலும், அவர்களிடம் குறிப்பிடத்தக்க ஆவிக்குரிய மகிமை எதுவும் இல்லை.

இன்னும் இன்னும் நாம் தேவனை அறிய வேண்டும். இன்னும் இன்னும் நாம் மாற வேண்டும். இன்னும் இன்னும் நாம் வளர வேண்டும், இன்னும் இன்னும் நாம் பிரகாசிக்க வேண்டும். இன்னும் இன்னும் விதித்த இலக்கை நோக்கி வேக வேக மாக முன்னேற வேண்டும்.

உன்னிடமிருந்து கற்றுக்கொள்ள பிறருக்கு ஏதாவது கிடைக்காவிட்டால் இறைவனிடமிருந்து எதை நீ பெற்றுக்கொண்டால் என்பதை சிந்தித்துப் பார்

ஆராதனையும் வாழ்க்கையும்

சங்கீதம் - 96:1-13

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்... சங் – 96 : 9

1 பேதுரு- 2 :1 -12

கர்த்தருக்கு முன்பாகவும், மனிதர்களுக்கு முன்பாகவும் நாம் எப்படி வாழ்கிறோம் என்பதைக் குறித்து கவனிக்காமல், சபை கூடி வரும் இடங்களில் நாம் எப்படி உற்சாகமாக பாடி துதித்து ஆராதிக்கிறோம் என்பதை மட்டும் பார்த்து, அதன் அடிப்படையில் நம்முடைய ஆவிக்குரிய நிலைமையை கணக்கிடுவது. இந்நாட்களில் நிலவும் ஒரு வேதனையான விஷயமாகும். இது நம்முடைய உண்மையான ஆவிக்குரிய நிலையை நாம் கண்டறிய முடியாதபடி, சாத்தான் செய்யும் ஒரு தந்திரமாகவே இருக்க முடியும்.

நாம் தினமும் எத்தனை முறை உண்கிறோம். எவ்வளவு உண்கின்றோம், எவ்வளவு சுவையாக உண்கின்றோம் என்பதைப் பார்த்து நாம் நல்ல ஆரோக்கிய மாயிருப்பதாக முடிவு செய்து விட முடியாது. நம்முடைய சரீர ஆரோக்கியத்தைக் கண்டறியும் இடம் சாப்பாட்டு மேசைக்கு அருகில் அல்ல. நம்மால் எப்படி நட மாட முடிகிறது. எந்த அளவு நன்றாக இயங்க முடிகிறது. நம்முடைய சரீரம் எந்த அளவிற்கு சுகமாக இருக்கிறது என்பதைப் பார்த்து தான் நம்முடைய ஆரோக்கிய நிலையைக் கண்டறிய முடியும்.

நாம் எப்படிப் பாடினோம், எப்படித் துதித்தோம். எப்படிச் ஜெபித்தோம், எப்படிப் பரவசப்பட்டோம் என்பதைவிட, எப்படிப்பட்ட ஒரு இருதயத்தோடு அவற்றைச் செய்தோம் என்பது முக்கியம். நம்மால் எவ்வளவு ஆனந்தமாக, ஆரவாரமாக ஆராதிக்க முடிகிறது என்பதைவிட, எப்படிப்பட்ட குணநிலைகளோடும், பண்பு நிலைகளோடும் மனிதர்களின் நடுவில் வாழ முடிகிறது என்பதே மிக முக்கியம். ஏனென்றால் தேவனோடு எந்த அளவிற்கு நெருங்கி வாழ்கின்றோம் என்பதைச் சரியாகக் காட்டும் கண்ணாடி நம்முடைய ஆராதனைகள் அல்ல. அது நம்முடைய வாழ்க்கையும், வாழ்க்கையில் பிரதிபலிக்கும் குணாதிசய நிலைகளுமே.

இப்படிக் கூறுவதால் ஒரு மனரம்மியமான ஆராதனை வேளையின் மகிமையை அற்பப்படுத்திக் காட்டுவதாக அர்த்தமல்ல. ஒரு சரியான அனுபவமும், உண்மையான பரிசுத்த மனிநிலையும் இல்லாத போதே ஒரு உற்சாகமான ஆராதனை வேளையைக் காணவும், ஒரு பரவசமான மனஉணர்வைப் பெறவும் வாய்ப்புகள் ஏராளமாக உள்ளதால், விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதே இங்கு சொல்லப்படும் செய்தி.

ஆராதனை வேளையோடு நமக்கு ஏற்படும் நல்ல ஈடுபாட்டை மிகப்பெரிய அனுபவமாகக் காட்டி, சாட்சி வாழ்க்கையைக் குறித்த நம் நிலையை காண விடாமல், நம் கண்களை குருடாக்கிவிட முயற்சிக்கும் சாத்தானின் வஞ்சகத் திற்கு, நாம் தப்பிக் கொள்ள வேண்டும் என்பதே இந்தச் செய்தியின் நோக்கம்.

நீ வாழ்கின்ற விதம் தேவனைக் கனப்படுத்தாத போது நீ ஆராதிக்கும் விதம் தேவனை விசனப்படுத்தும்.

ஜீவ நீரோடை

யார் யூதாஸ்?

யோசுவா - 24:13-24

கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்... *தீத்து - 1:16*

தீத்து - 1:5-16

குடிப்பழக்கத்தினை ஒழிப்பதற்காகப் பாடுபடும் சங்கம் ஒன்று மது அருந்தும் பழக்கத்தின் தீமையான விளைவுகளை விளக்கி விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்கின்றது. அந்த சங்கத்தின் முக்கியமான கூட்டம் ஒன்றிற்கு வந்த சிலர் மது அருந்தித் தள்ளாடி தள்ளாடி வந்தால் அது எப்படியிருக்கும்? அவர்கள்தான் அந்த சங்கத்தின் யூதாசுகள். அவர்களின் முரண்பட்ட செயல்பாடுகள், அந்த சங்கத்திற்கு அவமானத்தையும் அவகீர்த்தியையும் கொண்டுவரும். அவர்களின் கொள்கை சாராத நடத்தைகளால் அந்த சங்கம் தூஷிக்கப்படுவது இயற்கை.

கிறிஸ்தவம் ஒரு அதி உன்னத மகிமையான மார்க்கம். கிறிஸ்தவம் மனிதனை மாற்றியமைத்து மகிமை விளங்கச் செய்யும் வல்லமையுள்ளது. கிறிஸ்தவம் பரிசுத்தமான வாழ்க்கை என்ற உயர்ந்த அடையாளத்தை மனிதனுக்குக் கொடுக்கின்றது. கிறிஸ்தவம் மனிதனுடைய பாவம் செய்யும் சுபாவத்தை மாற்றுவதோடு, செயல்களாலும், சுபாவங்களாலும், சிந்தனைகளாலும் பரிசுத்தத்தை பிரிதிபலிக்கச் செய்கின்றது.

ஆனால் இத்தனை மகத்தான ஒரு மகிமையான மார்க்கம் இன்று எத்தனை பேரால் அதிக மேன்மையாக எண்ணப்படுகின்றது? கிறிஸ்தவ மார்க்கம் மிக விசேஷமானது என்றும், மிகவும் அவசியமானது என்றும் எத்தனை பேரால் எண்ண முடிகிறது. பிரசங்க மேடைகள் வாயிலாகவும், தொலைக்காட்சிப் பிரச்சாரங்கள் வழியாகவும் அதி உன்னத மார்க்க மாக விவரிக்கப்படுகின்ற கிறிஸ்தவத்தை, எத்தனை பேரால் சரி என்று ஆமோதிக்க முடிகிறது.

கிறிஸ்தவர்கள் பேதுருக்களாக வாழாமல் யூதாசுகளாக வாழ்வதால் கிறிஸ்து அவமதிக்கப்படுகிறார். பவுலைப் போல பிரமாதமாகப் பிரசங்கம் செய்துவிட்டு யூதாசைப் போல அற்ப மேன்மைகளுக்காகவும், சுய ஆசைகளுக்காகவும் இயேசுவைக் காட்டிக் கொடுக்கின்றவர்கள் இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் ஏராளம் ஏராளம். எங்கள் தெய்வமே உண்மையான தெய்வம். எங்கள் வேதமே சத்திய வேதம் என்ற வாதம் சரியானது தான். ஆனால் அந்த தெய்வத்தின் மகிமையைப் பாடிக்கொண்டே, எல்லோரையும் போல வாழ்ந்தால் யார் கிறிஸ்தவத்தை மதிப்பார்கள்? ஆம். மனந்திரும்புதலைக் காணாதவர்களும், இயேசுவின் ஐக்கியத்தில் வாழாதவர்களும், பரிசுத்த வாஞ்சை இல்லாதவர்களும் கிறிஸ்தவத்தைக் காட்டிக்கொடுக்கத்தான் முடியும். நம்மால் கிறிஸ்தவம் மதிக்கப்படுகிறதா, அவமதிக்கப்படுகிறதா? யோசிப்போம்.

தன்னை அதிகமாக மதிப்பிடுகிறவன் வீழ்ச்சிக்கு அருகிலிருக்கின்றான்
குறைத்து மதிப்பிடுகிறவனோ எழுச்சிக்குத் தூரமாயிருக்கிறான்.

ஜீவ நீரோடை

வெறும் வைராக்கியம்

2 சாமுவேல் - 3:20-39

கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று...
எபே - 5 :10

1 யோவான் - 3 :1 -24

தாவீதுக்காக வைராக்கியமாக செயல்பட்டவன் தளபதியாகிய யோவாப். பல யுத்தங்களை நடத்தி தாவீதுக்காக பல வெற்றிகளை தேடித் தந்தவன் யோவாப். தாவீதின் விஷயத்தில் அவன் ஒரு வைராக்கியமான வீரன் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் மற்றவர்கள் விஷயத்தில் யோவாப் நடந்து கொண்ட விதங்கள் தாவீதின் அதிருப்தியையும், கோபத்தையுமே அவனுக்குச் சம்பாதித்துக் கொடுத்தது. சமாதானம் தேடி வந்த அப்னேர் என்பவனைக் கொன்று அவன் பழிக்குப் பழி வாங்கினான். அந்தச் செயல் தாவீதுக்கு எதிரான ஒன்றல்ல. ஆனால் தாவீதின் மன உணர்வுகளுக்கு எதிரான ஒன்றாகும். தாவீதை அவன் பகைத்ததில்லை. ஆனால் அவன் மற்றவர்கள் மேல் கொண்ட கடுமையான பகையை தாவீது வெறுத்தான். எனவே யோவாபின் முடிவு பரிதாபமாக அமைந்தது.

இது போலவே நாமும் கிறிஸ்துவுக்காக அதிக வைராக்கியம் கொண்டவர்களாக இருக்கலாம். பக்தி வைராக்கியத்துடன் பல சுகங்களைத் துறந்தவர்களாக இருக்கலாம். ஆனால் மற்றவர்கள் விஷயத்தில் உண்மையான அன்பு, மனத்தாழ்மை, பொறுமை ஆகியவை இல்லாமல் செயல்பட்டால் தேவன் அதனை வெறுக்கின்றார். நம்முடைய செயல்படும் விதங்கள், சுபாவ நிலைகள் ஆகியவை தேவனுடைய இதய உணர்வுகளுக்கு இசைந்து இராமல் போனால், நம்முடைய பக்தி வைராக்கியங்கள் தேவனுடைய பிரியத்தை நமக்குக் கொண்டு வர முடியாது. தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான்? என்று வேதம் வினா எழுப்புகிறது. (1 யோ - 4:20) ஆம். தேவனை நேசிக்கும் நம்முடைய நிலைகளை, பிறரை நேசிக்க இயன்ற அளவுகளை வைத்துத் தான் கணக்கிட முடியும். தேவனுடைய இதயத்துக்கேற்ற தெய்வீக சுபாவங்களை வெளிப்படுத்துவதே உண்மையான ஆவிக்குரிய வைராக்கியமாகும்.

சிலர் தேவனிடம் மிகுந்த அன்பையும், பக்தி வைராக்கியத்தையும் வைத்திருப்பது உண்மைதான். ஆனால் பிறரிடமோ அன்பற்றவர்களாகவும், கரிசனை அற்றவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் தேவனோ ஒருவருடைய உண்மையான அன்பைத் தம்மிடம் அவர் காண்பிக்கும் அன்பின் அளவை வைத்துக் கவனிக்காமல், தம்முடைய அன்பினால் பிறரை அவர் எந்த அளவு நேசிக்கிறார் என்ற அடிப்படையிலேயே பார்க்கின்றார். ஏனென்றால் தேவனை நேசிப்பது என்பது ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதும், தன்னை நேசிப்பது போலப் பிறரை நேசிப்பதும் ஆகும். ஆம். நம்முடைய அன்பைப் பரலோகத்திற்கே அனுப்பிக் கொண்டிராமல், நமக்கு அக்கம் பக்கத்தில் யாருக்கு அது அவசியம் என்பதை அறிந்து அனுப்புவோமாக.

இறை அன்பிற்கு இதயத்தில் முதலிடம் கிடைக்காதவரை,
மனித அன்பிற்கு உரிய இடம் கொடுக்க முடியாது.

பரிசுத்தமில்லாத பக்தி

எரேமியா – 6:10-30 | **தூரதேசத்தினுடைய சுகந்தப்பட்டை எனக்கு என்னத்திற்கு... எரேமியா – 6 :20** | லூக்கா -19 :28 -40

குறிப்பிட்ட ஒருவருடைய வீடு ஒரு போதும் சுத்தமாகவோ, ஒழுங்குள்ளதாகவோ இராது. அந்த வீட்டிற்குச் செல்லுகின்ற எவரும் அங்குள்ள அழுக்கான, ஒழுங்கற்ற சூழ்நிலைகளைச் சகித்துக் கொள்ள, மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் அந்த வீட்டார் தங்களிடம் வருகின்றவர்களை நன்கு உபசரிக்கும் நல்ல பழக்கம் உடையவர்கள். ஆனால் இவர்களின் அன்பு ததும்பும் உபசரிப்பு தான் வருகின்றவர்களை மிக அதிகமாக வருத்தப்படுத்தும். சுத்தமற்ற சூழ்நிலைகளில் சுத்தமற்ற பாத்திரங்களில் வழங்கப்படும் பலகாரங்களையும் பானங்களையும் ஏற்றுக்கொள்வதற்கு அதிக சுய வெறுப்பும் எதையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் அவசியம்.

தேவனுடைய வழிகளில் நடவாமல், தேவனுடைய வார்த்தைகளை மதியாமல், தேவனுடைய நீதி நெறிகளுக்கு உடன்படாமல் வாழ்வது ஒரு அசுத்தமான வாழ்க்கை. இந்த சுத்தமற்ற பாவ வாழ்க்கை தேவனை விசனப்படுத்தும். இவ்விதமான வாழ்க்கையாளர்கள் தேவனை துக்கப்படுத்துகின்றனர். ஆனால் இவ்விதம் வாழ்ந்து கொண்டே, பக்தி ஆர்வத்தால் தேவனைக் கனப்படுத்தும் பல காரியங்களைச் செய்கின்றவர்கள் இன்னும் அதிகமாக தேவனை விசனப்படுத்துகின்றனர். ஏனென்றால் பரிசுத்தமாக வாழாத பாவத்தை விட, பாவத்தில் வாழ்ந்து கொண்டே பக்தி செயல்களால் தேவனைக் கனப்படுத்த விரும்புவது அதிகப் பாவமாகிறது.

வாய்திறந்தால் துர்நாற்றம் வருகின்ற ஒருவர். உங்களை புகழ்ந்து கொட்டும்போது அது உங்களுக்குச் சந்தோஷம் தருமா! சங்கடத்தைத் தருமா? அழுக்கான பாத்திரத்தில் வைக்கப்பட்ட அதிக சுவையான பலகாரத்தை உங்கள் மனம் விரும்புமா? வெறுக்குமா? ஆம். ஜெபம், வேதவாசிப்பு, ஆராதனை, துதி ஸ்தோத்திரங்கள், காணிக்கை, உபவாசம், ஊழியம் ஆகிய யாவும் அருமையானவைகளே. ஆனால் வாழ்க்கை பரிசுத்தமாயிராவிட்டால் இவற்றை தேவன் விரும்ப இயலாது. ஏனென்றால் அவர் பரிசுத்தமான தேவன். வேறு எல்லாவற்றையும் விட அவர் பரிசுத்தத்தையே அதிகமாக விரும்புகிறவர். பரிசுத்தமில்லாதவர்களின் பக்தியான செயல்கள் அவருடைய மனதைப் பிரியப்படுத்தாது. பரிசுத்தமற்ற தரமில்லாத எதையும் கொண்டு அவரைக் கனப்படுத்த முடியாது. எனவேதான் முதலாவது நாம் பரிசுத்தமாக வேண்டிய தேவையை வேதம் வற்புறுத்துகின்றது. நல்ல இருதயமும் நல்ல செயல்களும் வேண்டும்.

பாவிக்கு தேவன் வாசலை திறந்தே வைக்கிறார். பரிசுத்தவான்கள் போல வேடமிடுகிறவனுக்கோ அது அடைபட்டுப் போகிறது.

உறவும் விசுவாசமும்

ஆதியாகமம் - 15:1-7

அவன் கர்த்தரை விசுவாசித்தான்...
ஆதி - 15 :6

ரோமர் - 1 : 14 -28

ஒரு குறிப்பிட்ட தொழிலதிபர் தேவ ஊழியர்களுக்குத் தாராளமாக நிதி உதவி செய்யும் பழக்கமுடையவர். இதனைக் கேள்விப்பட்ட வெளியூர் தேவ ஊழியர் ஒருவர் அவரைச் சந்தித்து ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு நிதி உதவி கேட்டார். ஆனாலும் அவரால் நிதி உதவி பெற முடியவில்லை. "உங்களை எனக்கு யார் என்று தெரியாத நிலையில் நான் எப்படி உதவி செய்ய முடியும்?" என்று அவர் கூறிவிட்டார். பெருத்த ஏமாற்றத்தோடு, அந்த ஊழியர் ஊர் திரும்பினார்.

அந்தத் தொழிலதிபரின் தாராள குணத்தைக் குறித்த விசுவாசம் சரியானதே. ஆயினும் இருவருக்கும் இடையில் ஒரு தொடர்பு நிலை இல்லாததால், அந்த விசுவாசம் பலன் தரவில்லை. இதுபோலவே நமக்குப் பெரிய நன்மைகள் செய் வார் தேவன் என்ற நம்முடைய விசுவாசம் சரியானதே. அதே வேளையில் நமக்கும் தேவனுக்கும் இடையில் ஒரு உறவு ஏற்பட வேண்டியது அவசியமாகின்றது.

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அந்த விசுவாசம் தேவஉறவைச் சார்ந்ததாக இருந்தது. ஆபிரகாமுக்கும் தேவனுக்குமிடையில் ஒரு தொடர்ந்த நெருக்கமான உறவும், ஐக்கியமும் இருந்தது. அந்த உறவின் பின்னணியில்தான் ஆபிரகாமின் விசுவாசம் மிகுந்த பலன்களைத் தந்தது.

அநேகர் தேவன் வல்லவர். அற்புதம் செய்கின்றவர், மனதுருகின்றவர் என்ற பொதுவான அறிவின் அடிப்படையை மட்டும் சார்ந்து, அதிகமாக நம்புவதற்கு முன் வருகின்றனர். ஆயினும் தேவனோடு ஒரு தொடர்பு ஏற்பட வேண்டியது தேவை என்றும், அந்தத் தொடர்பு ஏற்பட அதற்குரிய வழியில் வரவேண்டும் என்பதையும் சரியாக உணராதிருக்கின்றார்கள்.

தேவனுடைய நன்மைகளைப் பெற, முதலாவது தேவனோடு ஒரு உறவை நாம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். உண்மையான மனந்திரும்புதல் என்ற ஒரு ஆவிக்குரிய அனுபவத்திற்கு நாம் வரவேண்டும். ஆண்டவராகிய இயேசுவை நன்மை செய்கிறவராக மட்டுமே நாம் பாராமல், நம் பாவங்களிலிருந்து நம்மை மீட்க வந்த இரட்சகராக அவரைப் பார்த்து, அவரால் வரும் பாவ மன்னிப்பையும், இரட்சிப்பின் அனுபவத்தையும் பெற வேண்டும். இவ்வித அனுபவத்தின் வாயிலாகவே பரலோக தேவன் நமக்குப் பரலோகத் தகப்பனாக மாறுகிறார்.

இந்த உறவு என்னும் அஸ்திபாரத்தின் மேல் நின்று, நாம் தேவனைப் பெரிய காரியங்களுக்காக விசுவாசித்தால், அந்த விசுவாசம் தேவனால் கனப்படுத்தப் படும். வெறும் விசுவாசமும், ஜெபமும் போதாது. உறவு வேண்டும்.

சந்தோஷத்தை நீ தேடிச் சென்றால், அது தூரமாகும்
இறைவனைத் தேடிச் சென்றாலோ, அது உன் அருகே வரும்.

காணிக்கையா, லஞ்சமா?

ஜீவ நீரோடை

ஏசாயா-1:10-16

தேவனுடைய வரத்தைப் பணத்தினால் சம்பாதித்துக் கொள்ளலாமென்று... அப்போஸ்தலர் - 8:20

அப்போஸ்தலர்-8:1-24

அரசாங்க சட்ட திட்டங்களின்படி எந்த ஒன்றையும் அடைந்திட, அதற்கென்று நியமிக்கப்பட்ட ஒழுங்கு முறைகளைப் பின்பற்ற வேண்டும். ஆனால் அநேகர் சட்ட ரீதியான ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடித்து ஒன்றைச் சாதிக்காமல், குறுக்கு வழிகளில் அதனை அடைந்திட விரும்புவார்கள். எனவே லஞ்சம் கொடுக்கும் தவறான முறை சமுதாயத்தில் பெருகிக் கொண்டிருக்கிறது. சட்டப் பூர்வமாக காரியங்களைச் செய்யாமலே பணம் கொடுத்துச் சாதிக்கும் பழக்கம் நாட்டினைச் சீரழிக்கிறது.

தேவனும் நாம் அவருடைய நன்மைகளைப் பெறுவதற்கும், அவரால் ஆசீர்வதிக்கப்பட்டு நன்றாயிருக்கவும், சில ஆவிக்குரிய ஒழுங்குமுறைகளை வைத்திருக்கின்றார். மத்தேயு 6-33-ல் இதனை மிகச் சுருக்கமாகப் பார்க்கின்றோம். முதலாவது தேவனுடைய ஆளுகையை நாம் நம்மிடம் ஏற்றுக்கொள்ள வேண்டும்

இரண்டாவது அவர் விரும்புகின்ற விதமான பரிசுத்த வாழ்க்கை நம்மிடம் ஏற்படப் பிரசயாசப்பட வேண்டும். தேவன் நம்மை அரசாட்சி செய்வதினால், நம்மிடம் நீதியின் கனிகள் உடைய ஒரு பரிசுத்தமான வாழ்க்கை தோன்றும். இவற்றின் விளைவாக நமக்குத் தேவன் நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் தருகிறார்.

ஆனால் அநேகர் தேவ உறவுடன் ஒரு நல்ல வாழ்க்கை வாழ்ந்து, தேவ நன்மையைத் தேடும் கடினமான பாதையைத் தெரிந்துகொள்வதில்லை. அதற்குப் பதிலாகக் காணிக்கை அளித்து அதன் மூலமாக நன்மை பெற விரும்புவார்கள். சபைகளுக்கும், மிஷனரி ஸ்தாபனங்களுக்கும், சுவிசேஷ இயக்கங்களுக்கும் காணிக்கை கொடுத்தால், கர்த்தர் மிகுந்த நன்மை செய்வார் என்று பலர் நம்புகின்றனர்.

ஆனால் இது ஒரு விதமான லஞ்சம் கொடுக்கும் செயலாகும். தேவ னுக்குப் பிரியமாக வாழ்ந்து பெற வேண்டிய நன்மையைப், பணத்தால் சாதிக்க விரும்புவது, தேவனுக்கு உகந்ததாக இராது. காணிக்கை கொடுத்தலை வேதாகமம் மிக அவசியம் என்று காண்பித்தாலும் காணிக்கையை ஆசீர்வாதத்தின் பிரதான வழியாகக் காட்டவில்லை.

ஆனால் பல கிறிஸ்தவ நம்பிக்கையாளர்கள், காணிக்கை என்ற வழியில் நன்மை பெறுதலையே, மிக முக்கியமான முறையாகக் கொண்டுள்ளனர். ஆனால் அது தேவனால் அங்கீகரிக்கப்பட வாய்ப்பில்லை.

**உண்மைக்கு உன் இதயத்தில் உரிய இடம் கொடு
இல்லையென்றால் பொய்க்கு உன் வாழ்வு புகலிடமாகிவிடும்**

ஜீவ நீரோடை

கொஞ்சத்தை

1 இராஜாக்கள் - 17:8-18

அவன் கையில் ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் உண்டு... யோவான் 6:9

யோவான் - 6:1-13

அந்தச் சிறுவன் தன்னுடைய பசிக்காக ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் வைத்திருந்தான். அந்த அற்பமான ஆகாரம் பல்லாயிரங் களின் பசியைப் போக்கும் அற்புத உணவாக மாறப் போகிறது என்பது அந்தச் சிறுவனுக்குத் தெரியாது. அந்த ஒருவேளை ஆகாரம் இயேசுவின் கரங்களால் தொடப்படும் போது, பல்லாயிரங்களைக் காப்பாற்றப் போகிற உண்மையை அவன் அறியவில்லை. ஆனால் அவனுடைய விசுவாசமும், தாராள மனப்பான்மையும் மற்றவர்களின் பிரயோஜனத்திற்காக, அந்தச் சிறு உணவை இயேசுவிடம் கொடுக்க அவனை ஏவினது, அது ஒரு பெரிய அற்புத நிகழ்வுக்குக் காரணமாகியது.

நம்மிடம் உள்ளது அற்பமானதாக இருக்கலாம். ஒரு திறமை, உழைக்கும் திறன், சிந்தனை ஆற்றல், பணவசதி, வேலை, தொழில் போன்றவை ஒரு சிறிய அளவில் நம்மிடம் இருந்தாலும், அவற்றை விசுவாசத்தோடு ஆண்டவரின் ஆளுகைக்கும், சித்தத்தின் செயல்பாட்டிற்கும் ஒப்புவிக்கும்போது அவை கர்த்தரின் கரத்தால் மிகுந்த ஆசீர்வாதத்திற்கு ஏதுவாக அமைய முடியும். தாவீதின் கரத்திலிருந்த ஒரு சாதாரணக் கூழாங்கல்லைக் கொண்டு, தேவன் ஒரு மாபெரும் அரக்கனாகிய கோலியாத்தை வீழ்த்தி, ஒரு தேசத்தையே காக்கவில்லையா? கொஞ்சம் எண்ணெய்யை ஆசீர்வதித்து ஒரு குடும்பத்தின் கடன் சுமையே நீங்கும் அளவிற்கு தேவன் அதனைப் பெருகச் செய்யவில்லையா?

நம்மிடம் இருக்கும் கொஞ்ச ஆற்றலையோ, கொஞ்ச வசதியையோ, கொஞ்ச அறிவையோ நமக்காகவே வைத்துக் கொண்டிருந்தால், நமக்கு அவை பெரிய ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்துவிட முடியாது. பிறருக்கும் அவைகளால் எந்த நன்மையும் வராது. ஆனால் அந்தச் சிறுவனைப் போல விசுவாசத்தோடு அதனை ஆண்டவரிடம் அர்ப்பணிக்கும்போது, அவை கர்த்தரால் அனேகருக்குப் பயனேற்படுத்தும் ஆசீர்வாதங்களாக மாறுகின்றன.

சில நேரங்கள் நாம் நம்மிடம் உள்ள கொஞ்சத்தை ஆசீர்வதிக்கும்படி கர்த்தரிடம் கேட்கிறோம். ஆயினும் நம்முடைய சொந்த ஆசீர்வாதத்திற்காகவே அவ்விதம் கேட்கிறோம். கர்த்தர் அவற்றை அநேகருக்கு ஆசீர்வாதமாக்கும் திட்டத்தை நாம் ஏற்காமல் போகிறோம். எனவே அவை நமக்கு உண்மையான ஆசீர்வாதங்களாக மாறவில்லை.

நம்முடைய கொஞ்சத்தை கர்த்தர் ஆசீர்வதித்து அநேகருக்குப் பயனுண்டாக்குவதே நோக்கமாயிருக்க வேண்டும். அப்போது நம்மிடம் உள்ள கொஞ்சம் கர்த்தரால் நமக்கும் அநேகருக்கும் நன்மையுண்டாக்கும் விதமாக ஆசீர்வதிக்கப்படும்.

இல்லாருக்கு "இல்லை" எனச் சொல்வதற்கு இல்லாமை அல்ல முக்கிய காரணம், இதயத்தில் இரக்க குணம் இல்லாமையே முதல் காரணம்

அழகான முகம் அழகற்ற வாழ்க்கை

நீதிமொழிகள்-31:10-31

சௌந்தரியம் வஞ்சனையுள்ளது அழகும் வீண்... நீதிமொழிகள் – 31:30

1 தீமோத்தேயு-2 :1 -15

அழகான தோற்றம் கொண்ட பெண் ஒருத்தி ஒழுக்கக்கேடான பல தவறுகளைச் செய்து பலவிதக் குற்றங்களுக்காக நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டாள். அவளைப் பார்த்து நீதிபதி" நீ இவ்வளவு அழகான பெண்ணாயிருந்தும் உன்னுடைய வாழ்க்கை ஏன் இவ்வளவு அசிங்கமாக இருக்கிறது? என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண் என்னுடைய அழகான தோற்றம்தான் மிகப் பெரிய காரணம் என்றாள். ஆம். அவளுடைய அழகு பலரைக் கவர்ச்சிக்க இயன்றதாகவும் பலரை மயக்க இயன்றதாகவும் இருந்ததால் அதனை அவள் மிகவும் தவறாக உபயோகிக்கத் தூண்டப்பட்டாள். ஆம். அழகு கர்வத்தையும் பெருமையையும் ஏற்படுத்தியதால், அதனை அவள் சுயலாபத்திற்காகத் தவறாகப் பயன்படுத்தி வாழ்க்கையை அழகற்றதாக்கிக் கொண்டாள்.

பல சினிமா நடிகைகளும் மாடலிங் பெண்களும், தங்களுக்கு இலவசமாகக் கிடைத்த அழகை வியாபாரப் பொருளாக்கி, தங்களின் வாழ்க்கையை அருவருப்பாக்குவதோடு, அநேகருடைய இருதயத்தையும் அழகிழக்கச் செய்துவிடுகின்றார்கள்.

தோற்றங்கள் மட்டுமல்ல. செல்வம்மும் அழகானதுதான். அறிவும் அழகானதுதான். அதிகாரமும் அழகானதுதான். வசதிகளும் அழகானவைதான். ஆனால் இந்த அழகு அவற்றை உடையவருக்கு எளிதாகக் கர்வத்தையும், பெருமையையும், அலட்சிய உணர்வையும், கொடுத்து வாழ்க்கையை அழகற்றதாக்கக் கூடும். எனவே அவற்றைக் கையாளுவதில் அதிக கவனமும் கட்டுப்பாடும் அவசியம்.

பணம், பொருள், அதிகாரம், பதவி, சமுதாய அந்தஸ்து, அழகு, திறமை போன்றவை அநேகரை எளிதாகக் கௌரவும், மயக்கவும் செய்யும். ஆனால் அவற்றால் ஏற்படும் அகந்தையும் பெருமையும் அந்த அழகை, அழகற்ற முடிவுகளுக்குக் காரணமாக்கும். சாலொமோன் ராஜா எல்லா நிலையிலும் அழகான வற்றையே பெற்றிருந்தான். அநேகரைக் கவர்சிக்க இயன்ற ஞானம், அறிவு, புத்தி, ஐசுவரியம் யாவும் அவனிடமிருந்தது. ஆயினும் அவன் வாழ்ந்த வாழ்க்கை அழகற்றது. தேவனோடு நெருங்கி வாழ்ந்து பரிசுத்தம் என்னும் அழகைப் பெற்று அணியாவிட்டால், பிற அழகு யாவும் நம்மை வஞ்சிக்க முடியும். அன்பு, தாழ்மை, உண்மை, நேர்மை, பொறுமை, இரக்கம், மனத்தூய்மை போன்றவையே மனிதனை மனிதன் என்று காட்டும் உண்மையான அழகின் அம்சங்களாகும்.

தவறுகளைக் கண்டு கொள்ளாதவனிடம் கவனமாயிரு
கண்டித்து உணர்த்துகின்றவனுக்கோ கடனாளியாயிரு

நல்ல செயலும், குணமும்

11 நாளாகமம் - 26:1-20 | **தங்களை நீதிமான்களென்று நம்பி...... லூக்கா – 18:9** | லூக்கா-18 :9-14

நம்மிடம் பல நல்ல விஷயங்கள் இருக்கலாம். நம்மிடம் பக்திமிக்க பல நல்ல செயல்கள் இருக்கலாம். ஆனாலும் அவைகள் நாம் மிகவும் நல்லவர்களாயிருக்கிறோம் என்பதற்கான இறுதியான அடையாளங்கள் என எண்ணிவிடக் கூடாது. நம்மிடம் உள்ள பல நல்ல செயல்களை நாமும் பிறரும் பார்த்து மெச்சுகின்ற அதே வேளையில், நம்முடைய உள்ளான நிலையில் நாம் தேவனுக்கேற்ற நல்லவர்கள் அல்லாதவர்களாக இருக்க முடியும்.

லூக் - 18:10ல் வரும் பரிசேயன் - ஆயரக்காரன் உவமையைப் பாருங்கள். அந்தப் பரிசேயனிடம் பக்திமிக்க பல மெச்சத்தகுந்த விஷயங்கள் இருந்தன. ஆயினும் அவன் உள்ளான நிலையில் தேவனுடைய பார்வையில் நல்லவனாயிருக்கவில்லை. அவனுக்குள் தாழ்மைக்குப் பதில் மேட்டிமை இருந்தது. தன்னை அதிகமாக மதிப்பிட்டு, பிறரை மட்டமாக எண்ணும் மனோபாவமிருந்தது. பிறரோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்துப் பெருமை பாராட்டும் இழிகுணம் இருந்தது. தேவனுக்கு முன்பாகத் தன்னுடைய பரிசுத்த நிலை போதுமானதா என்பதைக் கண்டறிய முடியாத குருட்டுத்தன்மை இருந்தது. எனவேதான் தேவனால் அவன் நீதிமான் என்ற அங்கீகரிப்பைப் பெற முடியவில்லை.

ஆம். சில நல்ல செயல்கள் நம்மிடம் இருக்கும்போது, அவை நம்மைக் குறித்து அதிக மதிப்பீட்டைக் கொடுத்துவிட முடியும். அவை நம்முடைய உள்ளான குண, சுபாவ, இயல்பு நிலைகளில் தேவனுக்கு முன்பாக எப்படியிருக்கிறோம் என்பதை அறியவிடாமல் செய்துவிட முடியும். பல பக்திமான்களிடம் உள்ள பிரச்சினை இதுதான். அவர்கள் தங்களிடமுள்ள நல்ல அம்சங்களை மட்டுமே பார்க்கவும், அதைப் பிறருக்குக் காண்பிக்கவும் அதிகக் கவனமாயிருப்பதால், தங்களின் குறைவுபட்ட பகுதிகளைக் கண்டு கொள்ளாமல் போய்விடுகிறார்கள். சில விஷயங்களில் நாம் மேம்பட்டிருப்பது மட்டுமல்ல. இன்னும் சீர் அடையாமல் இருக்கும் பிற பகுதிகைளைக் குறித்தும் கவலைப்படுகிறோமா என்பதே முக்கியம். நல்ல செயல்களின் நடுவிலும், நம்முடைய உள் நிலையைக் கவனிக்கக் கருத்தாயிருப்போம்.

மனித புகழ்ச்சிகள் நம் கண்ணை மறைத்து விடாமல், உண்மையில் புகழத்தக்க அளவிற்கு நாம் சிறந்தவர்களா, என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய உள்நிலையைச் சோதித்தறியும் தேவனுக்கு முன்பாக நாம் எப்படியிருக்கிறோம் என்பதே முக்கியம். சில நல்ல செயல்களைக் கவனித்து நமக்கு ஏற்படும் பெருமிதமும், பிறருடைய புகழ்ச்சியால் வருகின்ற அதிக மதிப்பீடும் நம்மைக் குருடாக்கி, நாம் இன்னும் அடைய வேண்டியவைகள் எவ்வளவு உள்ளது என்பதை அறியாதிருக்கச் செய்துவிடக்கூடாது.

நாம் என்ன செய்கிறோம் என்பதை உலகம் பார்க்கிறது.
நாம் எப்படி இருக்கிறோம் என்பதை இறைவன் பார்க்கிறார்.

ஜீவ நீரோடை

யார் வழி?

சங்கீதம் – 29:1-11

ஒருவனும் மனுஷரைக்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக ... 1 கொரிந்தியர் – 3:21

1 கொரிந்தியர்-3 :5-23

பல்வேறு மதங்களில் ஸ்வாமிஜிகள், சாதுஜிக்கள், குருதேவர்கள், யோகிகள் போன்றோர் உண்டு. இவர்களில் பெரும்பாலானோர்கள் ஜனங்கள் கடவுளைக் காணவும், கடவுளின் அருள் பெறவும் தங்களையே வழிகளாகக் காட்டுகின்றனர்.

தங்களிடம் கேட்பதை கடவுளிடம் கேட்பது போலவும், தங்களைக் கனப்படுத் துவதை கடவுளைக் கனப்படுத்துதலாகவும் அவர்கள் நம்ப வைக்கின்றனர். எனவே ஜனங்கள் மனித வடிவில் வாழும் கடவுள்களாகவோ அல்லது கடவுளின் அருளுக்காக விசேஷமாக நியமிக்கப்பட்ட ஏஜண்டுகளாகவோ அவர் களைக் கருதுகின்றார்கள்.

ஆனால் எவ்வளவு பெரிய இறையருள் பெற்ற நபராயினும், ஒருவர் கடவுளின் வழி எது என்று காண்பிக்கும் பணியாளரேயன்றி அவரே வழி அல்ல. கடவுளை அடைய எது வழி, கடவுளின் அருளைப்பெற எது வழி என்று சொல்லிக் கொடுக்கத்தான் அவர்களால் முடியுமேயன்றி, அவர்களே கடவுளின் வழி ஆகிவிட முடியாது.

ஆனால் இன்று கிறிஸ்தவ சுவிசேஷகர்கள் பலரும், பாஸ்டர்கள் பலரும் தங்களையே இறையருள் பெறுவதற்கான வழிகளாகக் காண்பிக்கின்றனர். நேரடியாக 'நான் வழி' என்று சொல்லாவிட்டாலும் அவர்கள் ஊழியக் களத்தில் செயல்படும் விதங்களால் ஜனங்களுக்கு அவர்களே வழி போலத் தோன்றுகின் றார்கள்.

எனவே தேவனிடத்தில் போக வழி எது? தேவ நன்மை பெற வழி எது? என்றெல்லாம் ஜனங்கள் சிந்திக்காமல், ஊழியக்காரர்களிடம் போனால் இறை நன்மைகள் வந்துவிடும் என்ற, மூட நம்பிக்கையில் அவர்கள் மூழ்குகின்றனர்.

இன்று பக்தியுள்ள அநேகர் கூட தேவ சமுகம் தேடி, தேவநன்மை பெறும் வழியை அறியவில்லை. அவர்கள் ஜெபக்கோபுரங்களையும், திறப்பின் வாசல் களையும், பங்காளர் திட்டங்களையும், காணிக்கை கொடுத்து ஜெபிக்கக் கேட்கும் முறைகளையும் நோக்கி ஓடுகின்றனர்.

என்னையல்லாமல் ஒருவனும் பிதாவி னிடத்தில் வரமாட்டான் என்று அன்று இயேசு சொன்னார். இன்றோ அநேகர் என்னையல்லாமல் ஒருவனும் இயேசு விடத்தில் வரான் என்று சொல்லும் விதமாகச் செயல்படுகின்றனர். ஊழியர்கள் காட்டும் நல்ல வழிகளைக் கவனியுங்கள், ஆயினும் அவர்களையே வழியாக்கிவிடா திருங்கள்.

தேவனைச் சார்ந்து நிற்கப் பழகிக்கொண்டவனைச் சூழ்நிலைகள் சோர்ந்துபோகச் செய்யமுடியாது

ஜீவ நீரோடை

இது முடியுமா?

மத்தேயு – 5:1-16

இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்... கலா – 2:20

கலாத்தியர் -2 :15-21

ஒருமுறை தேவ ஊழியர் ஒருவர் மலைப்பிரசங்கத்தில் இயேசு கூறிய விதமான உயர் பண்புகளை உடையவர்களாக வாழ்வதே கிறிஸ்த வாழ்க்கை என்ற கருத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். ஒருவர் பிரசங்கம் முடிந்த பின்பு அவரிடம் வந்தார். நீங்கள் கிறிஸ்தவம் என்ற பெயரில் அளவுக்கு அதிகமான சுமையை விசுவாசிகளின் மேல் சுமத்துகிறீர்கள் என்றதோடு, மலைப்பிரசங்கம் கூறும் விதமான அளவிற்கு, யாரும் அவ்வளவு பரிசுத்தவான்களாக மாறமுடியாது என்றார்.

அநேகருக்கு கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்த சரியான ஒரு வெளிப்பாடோ, புரிந்து கொள்ளுதலோ இல்லை. அவர்கள் கர்த்தருக்காக நாமாக அதிகப் பிரயாசப்பட்டு, உயர்ந்த நெறிகளின்படி வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை என நினைக்கின்றனர். ஆனால் நாம் நம்முடைய சொந்தப் பொறுப்பிலும், சிரமத்திலும் கடவுளுக்காக வாழ்வது அல்ல கிறிஸ்தவ வாழ்க்கை. கிறிஸ்து நமக்காகவும், நமக்கு பதிலாகவும் நமக்குள்ளிருந்து ஒரு உயர்ந்த விதமான பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை. “இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார், என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதின் பொருள் என்ன? (கலா - 2:20) நாம் அல்ல. நமக்குள் கிறிஸ்துவே நாம் வாழ வேண்டிய வாழ்க்கையை வாழ்கின்றார் என்பதாகும்.

மலைப்பிரசங்கத்தில் வற்புறுத்தப்படுகின்ற ஒவ்வொரு உயர்ந்த நெறிகளையும் ஐம்பது கிலோ, 100 கிலோ கனமுள்ள பொருட்களாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். எல்லா நெறிகளையும் சேர்க்கும் போது சுமார் இரண்டு டன் எடை வருகிறது என்று நினைத்துக் கொள்ளுங்கள். இத்தனை பாரத்தை உங்கள் மேல் சுமத்தினால் உங்களால் சுமக்க முடியுமா? ஐய்யய்யோ... ஒரு போதும் முடியவே முடியாது. ஆனால் ஒரு லாரியில் வைத்து இவைகளை எடுத்து செல்வது கடினமான காரியமா? இல்லை, லாரியில் வைத்து எளிதாக எடுத்துச் செல்லலாம்.

அதுபோலவே ஆவிக்குரிய வாழ்க்கை என்பது தேவனுடைய விசேஷ வல்லமையில் ஓடுகின்ற ஒரு லாரி போன்றது. அந்த லாரியின் மூலமாக எல்லாத் தேவ கட்டளை, சுமைகளையும் நம்மால் எளிதாகக் கொண்டு செல்ல முடியும்.

மலைப்பிரசங்கத்தின் மூலம் இயேசு சொல்ல வந்த உண்மை என்ன? நீங்கள் தேவனோடு இணைந்திருந்தால், உங்கள் வாழ்க்கையில் இதபோன்ற உயர்ந்த தெய்வீகக் குணாதிசயங்கள் வெளிப்படும் என்பதே. சத்துருவை நேசிப்பதா! பகைப்போருக்கு உதவி செய்வதா! விட்டுக் கொடுப்பதா! சகித்துப்போவதா! ஏமாற்றுகிறவனை எதிர்க்காமலிருப்பதா? தாழ்மையாயிருப்பதா? துன்பத்தைச் சகிப்பதா? இருதயத்தில் சுத்தமாயிருப்பதா? என்று ஒவ்வொரு உயர் குணாதிசயத்தையும் ஒரு பெரிய பாரமாக எண்ணித் திகைக்க வேண்டாம். இவையாவும் நாமே நம் சொந்தப் பொறுப்பில் சிரமப்பட்டு உருவாக்குவது அல்ல. நாம் இயேசுவோடு ஐக்கியமாயிருத்தல், என்ற ஒரு அனுபவத்தின் விளைவாக நம்மிடம் தோன்றுபவை.

வேதவார்த்தையை இதயத்தில் நீ சுமந்தால், இறைவன் உன்னைச் சுமப்பதை அதனால் உணர முடியும்.

சரியாகக் கவனியுங்கள்

11 சாமுவேல் - 15:1-12

எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து...
1 தெச - 5:21

1 தெசலோனிக்கேயர்-5:12-28

சிலர் மற்றவரிடமுள்ள குறைவுகளை மட்டுமே உற்று நோக்கி அடையாளம் காண இயன்றவர்கள். எனவே இவர்கள் மற்றவர்களிடமுள்ள நல்ல விஷயங்களால் ஒருபோதும் பயனடைவதில்லை. சிலர் மற்றவர்களிடமுள்ள நல்லவற்றை மட்டுமே கவனிக்கின்றவர்கள். எனவே இவர்கள் எப்பொழுது மற்றவர்களிடம் பார்க்கத் தவறிய தவறான அம்சங்களால் பாதிப்புகளைக் காணப்போகின்றார்கள் என்று கூற இயலாது. நமக்குப் பாரபட்சமற்ற சமநிலைக் கண்ணோட்டம் அவசியம். எதையும் அது எவ்விதம் இருக்கிறது என்ற நடுநிலையோடு கவனிக்கும் பார்வை அவசியம்.

எந்த நல்ல விஷயத்திலும் சிறுகுறை இல்லாமலிருப்பதில்லை. எந்த மோசமான விஷயத்திலும் சிறிய அளவு நல்லது இல்லாமல் இருப்பதில்லை. எனவே சிறு குறைவைக் கண்டு புறக்கணிப்பதும், சிறு நல்லதைக் கண்டு அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளுதலும் நல்ல விளைவுகளைத் தராது. ஒரு விஷயத்தில் மேலோங்கியிருப்பது என்ன? ஒரு விஷயத்தில் விஞ்சி நிற்பது என்ன என்பதையே நாம் கவனிக்க வேண்டும்.

மிக நல்ல விஷயத்தில் உள்ள ஒரு குறைவைக் கண்டு அதனைப் புறக்கணிப்பதை விட, ஒரு சிறு நல்லதைப் பார்த்து மிக மோசமான ஒன்றை ஆராயாமல் ஏற்றுக்கொள்வது அதிக ஆபத்தானது. பக்தியுள்ள வாலிபன் ஒருவன், தனக்கு வாழ்க்கைத் துணையாக வருகின்றவள் முழுகி ஞானஸ்தானம் பெற்று ஆவிக்குரிய திருச்சபை ஐக்கியம் உடையவளாக இருக்க வேண்டும் என்பதையே முன்னிறுத்தியிருந்தான். பெண் தேடிய போதோ அந்த விதமே பெண் கிடைத்தது.

ஆனால் ஞானஸ்நானம், சபை ஐக்கியம் ஆகிய நல்ல அம்சங்களோடு இணைந்திருந்த ஏராளமான உலகப்பிரகாரமான வாழ்க்கை முறைகளை அவன் விசாரித்து அறிய வில்லை. அதன் விளைவாக அவனுடைய வாழ்க்கையே திரும்பி வர முடியாத ஒரு புதை மணலில் சிக்கியது போல் ஆகிவிட்டது. அப்சலோமிடம் காணப்பட்ட சில நல்ல விஷயங்கள் நாட்டு மக்களைக் கவர்ந்து அவன் பின்னால் அணிதிரள வைத்தது. ஆனால் அவனுடைய மோசமான பக்கங்களைக் கவனியாததால் பல தீங்குகள் ஏற்பட்டது.

இந்நாட்களில் குறைவானவைகளைக் கண்டுகொள்ளக் கூடாது. யாருடைய குறைவுகளையும் விமர்சிக்கக்கூடாது என்ற தவறான உபதேசம் கிறிஸ்தவ மக்களின் நடுவில் விதைக்கப்பட்டுள்ளது. எனவே அநேகர் வெளுத்ததெல்லாம் பால் என்றும், மின்னுவதெல்லாம் பொன் என்றும் நம்பி இடறிப்போக நேரிடுகின்றது.

இல்லாத குணத்தை இருப்பதுபோலக் காண்பிப்பவன்
இருக்கின்ற குணத்தையும் இல்லாமல் போகப்பண்ணுகிறான்.

அதிக ஆசையினால்

பிரசங்கி - 2:1-11

பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்... லூக் - 12:15

லூக்கா - 12:13-34

பொருளாசை பிடித்த ஒரு புலவன் சிறப்பு மிக்க ஒரு பாட்டு எழுதினான். அதனைப் பார்த்த அரசனும், அவைப் புலவர்களும் வெகுவாகப் பாராட்டினார்கள். அந்தப் புலவனால் எவ்வளவு வெள்ளிக்கட்டிகளைச் சுமந்து செல்ல இயலுமோ அவ்வளவு வெள்ளிக் கட்டிகளைப் பரிசாகக் கொடுக்க அரசன் கட்டளையிட்டான். பேராசை மிக்க அந்தப் புலவன், இதுதான் சரியான வேளை என்று எண்ணி, தன்னால் சுமக்க முடியாத அளவிற்கு அதிகமான வெள்ளிக்கட்டிகளைக் கேட்டு வாங்கிச் சுமந்து சென்றான். கொஞ்ச தூரம் நடந்து சென்ற பின்பு அந்தச் சுமையைச் சுமக்க இயலாமல் அவன் மிகவும் சிரமப்பட்டான். ஆனாலும் பாரத்தை குறைக்க அவனுக்கு மனமில்லை. இறுதியில் சுமை தாங்காமல் விழுந்ததால் அவனுடைய முதுகுதண்டும் முறிந்து போனது.

பொருளாசையின் முடிவு இவ்வண்ணமாகவே இருக்கின்றது. ஆசைகளின் பெருக்கம் நம்மையே இறுக நெருக்கி நம்மை விழுந்துவிடச் செய்கின்றது. பொருள் பெருகப் பெருக ஆசைகளும் பெருகிக் கொண்டேயிருக்கும். சிலர் செல்வநிலைகளில் பெருகும்போதுதான், இன்னும் அதிகமாக வேண்டும் என்ற பேராசைகளில் சிக்கி, தங்கள் மன அமைதியை இழந்து போகிறார்கள். திருப்தி யாயிருக்கும் ஒரு மனநிலை பக்குவத்தை நாம் பெறாவிட்டால், சேர்க்கும் செல் வங்களே நம்மை நாசமாக்கும் நாசகாரிகளாக மாறிவிடுகின்றன.

விசுவாசமும், பக்தியும் உடைய ஒருவர் கடுமையாக உழைத்து உயர்ந்த நிலைக்கு வந்தார். ஆனால் செல்வம் பெருக ஆரம்பித்ததும் வேறு சிலரைப் போல அபரிமிதமான உயர்வுகளை அடைய மனம் நாடியது. அதன் விளைவாக அவரது முழு கவனமும் நிலம் வாங்குவதிலும், வீடு கட்டுவதிலும், புதிய தொழில்களைத் துவங்குவதிலுமே சென்றது. காலப்போக்கில் அதிக அலுவலும், சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சனைகளும் அவருடைய நல்ல பக்தியையும் அழித்து, நல்ல பண்புகளையும் அழித்து, இறுதியில் அவரிடம் தெரிந்ததெல்லாம் பண ஆசையும், பொருளாசையும்தான்.

சாலொமோன் கேளாத பெருஞ்செல்வத்தை தேவன் அவனுக்குக் கொடுத் தார். ஆனாலும் அவனுடைய ஆசை எல்லைகளைக் கடந்ததாக இருந்தது. அதன் விளைவாக அவன் அதிக வரி விதித்து நாட்டு மக்களைக் கசக்கிப் பிழிந்தான். அதன் விளைவாக மக்கள் அவன்மேல் அதிருப்தியுற்றனர். (1 இராஜா - 12:4) இறுதியாக இஸ்ரவேல் சாம்ராஜ்யமே இரண்டாக உடைந்தது. ஆம். பொருளாசை ஒரு விக்கிரக ஆராதனை. அதில் விழுந்தவர்கள் தப்புவது கடினம். நாம் பொரு ளாசை என்ற நிலையில் எப்படி இருக்கிறோம்?

பணம், பொருள்தான் இறைவனின் ஆசீர்வாதம் என எண்ணுகின்ற வனை, சாத்தான் ஏற்கெனவே ஏமாற்றியிருக்கிறான்.

அர்த்தம் தெரியாதா?

எண்ணாகமம் - 9:1-14

எந்த மனிதனும் தன்னைத்தானே சோதித்தறிந்து... 1 கொரி – 11:28

1 கொரிந்தியர்-11:20-34

ஒரு விஷயத்தின் அர்த்தத்தை உள்ளபடியே அறிந்து கொள்ள ஆயிரம் வாய்ப்புகள் உள்ளன. ஆயினும் ஒரு முறை கூட அந்த விஷயத்தை அர்த்தம் உணர்ந்து செய்யாமல் போகும் பழக்கம் கிறிஸ்தவர்களிடம் அதிகமாக உள்ளது. இதற்கு திருவிருந்து ஆசரிப்பை எடுத்துக் கொள்ளலாம். திருவிருந்து ஆசரிப்பு என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காகச் செய்தது இன்னதென்பதை நாம் நினைவுகூர்ந்து அதற்கேற்ப நடந்துகொள்வதற்காகவே.

கிறிஸ்து நாம் நித்திய ஜீவனை அடைவதற்கான உணவாக நமக்குக் கொடுக்கப்பட்டதை நினைவுகூர வேண்டும். அவரோடு நமக்கு ஏற்பட வேண்டிய ஐக்கியத்தைத் திருவிருந்து நினைவுபடுத்துகிறது. அவரோடு ஏற்பட்ட ஐக்கியத்தின் விளைவாக ஏற்பட்ட ஆவிக்குரிய பண்பினால், மற்றவர்களோடு நல்ல ஐக்கியம் கொள்ள வேண்டும். இவற்றை நினைத்துச் செயல்படுவதற்கான நினைவூட்டும் சடங்கே திருவிருந்து.

அநேகர் இந்தச் சடங்கிற்கு அதிகமான முக்கியத்துவம் தருகின்றனர். ஆனால் அந்தச் சடங்கின் நோக்கத்தையோ மறந்து விடுகின்றனர். எந்த ஆராதனைக்கு வராவிட்டாலும் திருவிருந்து ஆராதனைக்குச் சிலர் வராமல் போவதில்லை. எவ்வளவு வியாதிப்பட்டாலும் மாதத்தில் முதல்நாள் அப்பம் பிட்குதலை விட்டு விடுவதேயில்லை.

ஆனால் இதனை ஒரு உயர்ந்த நோக்கம் சார்ந்து செய்யவில்லை. இது ஒரு பழகிப் போன பக்தி. இது விட்டுவிட இயலாத ஒரு பழக்கத்தின் விளைவு. இதனைச் செய்யாவிட்டால் அது மனதுக்கு ஒரு குறைவாகத் தோன்றும். ஆனால் இதுபோன்ற ஆசரிப்புகள் தேவனை மகிமைப்படுத்தாது என்றும், அது தேவனைக் கோபப்படுத்தும் என்றும், உணர்ந்து கொள்ள வேதாகமம் எவ்வளவோ வாய்ப்புகளைத் தந்துள்ளது.

பழைய ஏற்பாட்டுக் கால பக்திமிக்க யூதர்கள், தங்களின் முன்னோர் பின்பற்றி வந்த பல சமய ஆசரிப்பு முறைகளைப் பின்பற்ற மறக்கவில்லை. ஆனால் அதன் பின்னால் உள்ள தேவனுடைய நோக்கங்களையும், எதிர் பார்ப்புகளையும் மறந்து போனார்கள். தங்களுடைய பழகிப் போன பழக்கங் களுக்காக அவற்றைப் பின்பற்றிய அவர்களை அவர் பாராட்டாமல் கடிந்து கொண்டார். பாவ மன்னிப்பின் நிச்சயம், பாவவிடுதலையின் அனுபவம், பரிசுத்த வாழ்வு வாழும் தாகம், தேவ உறவு, பிறரோடு நல்ல ஐக்கியம் பாராட்டும் மனப் பாங்கு போன்றவை இல்லாதவர்களின் திருவிருந்து ஆசரிப்பினால் தேவன் மகிமைப்படாமல், விசனப்படுகின்றார்.

உன்னோடு இறைவன் இருப்பதை இறைவனுடைய குணங்கள் உன்னோடிருப்பதை வைத்து அறியலாம்.

ஜீவ நீரோடை

இன்றே செயல்படு

பிரசங்கி – 11:1-10

இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன?...
அப் – 22:16

அப்போஸ்தலர் -22:1-21

நாளைக்குச் செய்ய வேண்டிய சில விஷயங்கள் உண்டு. அவைகளை முந்திக்கொண்டு இன்றே செய்ய விரும்புதல் நல்லதல்ல. அதே வேளையில் பல விஷயங்கள் இன்றே செய்ய வேண்டியவை. இவைகளை நாளைக்கு எனத் தள்ளிப் போடுவது நலமாகயிராது. பல நேரங்களில் இன்று சில சிரமங்களுக்குள் செல்ல மனம் விரும்பாமல், அவைகளை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என முடிவு செய்து, இன்றைய தினத்தை விடுதலையாக்கிக் கொள்வது இயற்கையான இயல்பு. ஆனால் நாளைக்குச் செய்யலாம் எனப் பல வேலை களைத் தள்ளிப் போடுவதை விட, இன்றே அதனை ஏன் செய்யக் கூடாது என்று நமக்குள் கேட்டுச் செயல்படுவது மிகச் சிறந்த பழக்கம்.

வாழ்க்கையிலே சில முக்கிய விஷயங்கள் காலதாமதமாகிச் செய்யப்படு வதும், சில விஷயங்கள் செய்ய முடியாதபடி காலங் கடந்து விடுவதும் நாளை செய்யலாம் என்ற மனநிலையின் விளைவாகும். வாழ்க்கையில் முன்னுக்கு வந்து உயர் நிலையை அடைகின்ற அநேகரிடம் காணப்படும் முக்கியமான ஒரு பண்பு, அவர்கள் எதையும் நாளைக்கு எனத் தள்ளிப்போடாமல், இன்றே செய்து விடுவோம் எனத் துணிந்து விட்டமையே.

கோலியாத்தின் சவாலை ஏற்க முடியாதபடி சவுல்ராஜாவும், சேனையும் பரிதவித்த வேளையில், தாவீது அவனை வீழ்த்த விரும்பினான். அதைக்குறித்துச் சில நாட்கள் யோசிப்போம் என அவன் காலதாமதமாக்கவில்லை. அவன் உடனேயே தன்னை ஆயத்தம் செய்து அவனை வீழ்த்த விரைந்தான். தேவன் அவனுக்குத் துணை நின்றார். இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் பரிமளத்தைலத்தை ஊற்றின பெண்மணி நேரத்தைச் சரியாக உபயோகித்துக் கொண்டாள். இப்போது என்ன அவசரம்? எனப் பொறுமையாக இருந்திருந்தால். ஒரு நல்ல பங்கைத் தவற விட்டிருப்பாள்.

நான் சில காரியங்களை செய்து முடித்திருக்கிறேன். ஆயினும் அவைகளைச் சற்று முன்னரே செய்திருந்தால் அது அதிக பிரயோஜனங்களைக் கொண்டு வந்திருக்க முடியும். நாளை பார்த்துக் கொள்ளலாம் என்ற ஒரு மனநிலை பலவீனத்தால், கடந்த காலங்களில் சில நல்ல விஷயங்களைக் காலந்தாழ்ந்து செய்து விட்ட ஒரு வருத்த உணர்வு இன்றும் என்னைப் பாதிப்பதுண்டு.

எந்த ஒரு நற்செயலையும், நற்பழக்கத்தையும், நற்குணத்தையும், நல் முயற்சியையும், இன்றே செயல்படுத்தும் மனநிலையையும், பழக்கத்தையும் உருவாக்கிக் கொள்வோம். நாளைய தினம் எது எப்படி மாறும், எது எப்படி நிகழும், நாம் எந்த நிலையில் இருப்போம் என்பதற்கு எந்த நிச்சயமுமில்லை. எனவே நல்ல விஷயங்களைச் செய்ய நாளைவரை காத்திராமல் இன்றே செய்திட முன்வருவோம்.

ஆறிப்போன உணவு சுவையிழக்கின்றது
காலங்கடந்து செய்த நன்மை பயனை இழக்கின்றது.

ஜீவ நீரோடை

நல்ல பழக்கம்

தானியேல் – 6:1:11

அங்கே தான் முன் செய்து வந்தபடியே...
தானியேல் – 6:10

லூக்கா –5 :12–16

ஒருவர் காலதாமதமாகப் படுக்கைக்குச் சென்று காலதாமதமாகக் காலையில் எழும்ப வேண்டிய ஒரு விதமான வேலையில் இருந்தார். ஆனால் பின்னால் அவருடைய வேலை நேரம் மாறிவிட்டது. ஆனால் தாமதமாகத் தூங்கச் செல்லும் பழக்கமும், தாமதமாக எழும்பும் பழக்கமும் மாறவில்லை. கடையில் ஆட்கள் இல்லாததால் ஒருவர் மாலை நான்கு மணிக்கு மதிய உணவை உண்ண நேர்ந்தது. பின்னர் கடையைக் கவனிக்க அவருக்கு ஆட்கள் கிடைத்தது. ஆனால் காலதாமதமாகிச் சாப்பிடும் பழக்கத்தை மாற்ற இயலவில்லை.

ஆனால் ஒரு விந்தை என்னவென்றால் தவறான பழக்கவழக்கங்கள் ஏதாவது ஒரு காரணத்தினால் வந்து விடுகிறது. ஆனால் பெரும்பாலும் அது நிரந்தரமாகிவிடுகிறது. ஆனால் நல்ல பழக்கங்கள் வந்து சேர்ந்தால் காரணமில்லாமலே விரைந்து வெளியேறிவிடுகிறது. ஏனென்றால் தவறான பழக்கங்களையும் தவறான சுபாவங்களையும், தவறான மன இயல்புகளையும் எங்கும் போய்விடாமல் தங்க வைப்பதற்கு மனிதனுடைய ஜென்ம சுபாவமே போதுமானது. மனிதன் தவறானவைகளைத் தங்க வைப்பதில் தாராளமானவனாகவும், அவற்றைத் துரத்தி விடவோ பலவீனமானவனாகவும் இருக்கின்றான்.

சில நல்ல பழக்கங்களைத் தங்களோடு தங்க வைப்பதில் அநேகர் எளிதாகத் தோல்வியடைகின்றனர். ஏனென்றால் மனித சுபாவம் என்பது நல்லவற்றைத் தங்க வைப்பதிலும், ஓடி விடாமல் அதனைத் தடுப்பதிலும் மிகவும் பலவீனமானது. எனவேதான் தேவபலத்தினால் மனித சுபாவம் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் உள்ளது. தேவனோடு ஐக்கியமாயிருக்க நாடுகின்ற ஒரு ஆவிக்குரிய பழக்கம்தான் தேவ பலத்தையும் தெய்வீகத் தன்மையையும் நமக்குள் கொண்டு வருகின்றது. அவற்றால்தான் பாவத்தினால் இயற்கையாகப் பழுதுபட்ட மனுஷீகத்தினை மேற்கொண்டு நல்ல சிந்தனைகளையும், நல்ல சுபாவங்களையும், நல்ல பழக்கங்களையும் நம்மிடம் தக்க வைக்க முடியும்.

இறை உறவுடன் வாழ்ந்த தானியேலுக்கு உயிருக்கு அச்சுறுத்தல் வந்தால் கூட, கவலைப்படாமல் வழக்கம் போல ஜெபிக்கும் ஒரு நல்ல பழக்கம் இருந்தது. தாவீதுக்கு அலுவல்கள் பல இருந்தாலும் தினமும் மூன்று வேளை தேவ வார்த்தைகளை தியானித்து, தேவனைத் தேடும் நல்ல பழக்கம் இருந்தது. இயேசுவிற்கு எவ்வளவு ஜனங்கள் தம்மைச் சூழ்ந்திருந்தாலும், தனித்துப் போய் பிதாவாகிய தேவனோடு ஜெபத்தில் உறவாடும் நல்ல பழக்கம் இருந்தது. இது போன்ற நல்ல பழக்கங்களில் நாம் வலிமையாயிருக்கின்றோமா?

தீய பழக்கத்தை விட்டுவிட மீண்டும் மீண்டும் போராடு
நற்பழக்கத்தை விடாதிருக்க இறுதிவரை போராடு.

உதவியும் சந்தோஷமும்

1 இராஜா – 17:8-16

கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்... லூக்கா – 6:38

லூக்கா – 6 :30-38

சென்னையிலிருந்து பாண்டிச்சேரிக்கு இரவில் பேருந்தில் வந்து கொண்டிருந்தேன். சிலர் அமர இருக்கை கிடைக்காமல் நின்று கொண்டே பயணம் செய்தனர். பேருந்து செங்கல்பட்டு என்ற இடத்தை அடைந்தபோது, அதுவரையிலும் சுமார் இரண்டு மணி நேரம் நின்று கொண்டே வந்த பயணி ஒருவரைப் பார்த்தபோது, மனதிற்கு கஷ்டமாயிருந்தது. எனவே நான் எழுந்து நின்று கொண்டு, அவருக்கு அமர இடம் கொடுத்தேன். அதன் பின்னர் இரவு நேரம் நின்றுகொண்டே பயணம் செய்வது சரீரீதியாக எனக்கு கஷ்டமாயிருந்தது. ஆனால் ஒரு நற்செயலைச் செய்கிறோம் என்ற திருப்தி அந்தச் சிரமத்தைச் சாதாரண மாக எடுத்துக்கொள்ள உதவியதோடு, மனதிற்கு ஒரு பெரிய சந்தோஷத்தையும் கொடுத்தது.

ஒரு நற்சிந்தையுடன் பிறருக்கு நாம் சில தேவையான உதவிகளைச் செய்ய முன்வரும்போது, அது நமக்கு சுலபமான, எளிதான ஒன்றாக இருப்பதில்லை. அதனால் நமக்குச் சில சிரமங்களும், சுமை சுமப்பது போன்ற அனுபவங்களும் ஏற்படவே செய்யும். ஆனால் நம்முடைய உதவி இன்னொருவரை இளைப்பாற்று கின்றது, தேற்றுகின்றது, தாங்குகிறது என்பதை அறியும்போது அதனால் நமக்குக் கிடைக்கும் மன சந்தோஷம் கொஞ்சமல்ல. அந்த மன சந்தோஷத்திற்கு முன்னால் நாம் உணரும் சிரமமும், கஷ்டமும் ஒன்றுமேயில்லை.

அநேகர் பிறர் துன்பங்களுக்கும், சிரமங்களுக்கும் கண்ணை மூடிக் கொண்டு, தங்கள் சௌகரியத்தில் நிலைத்திருப்பதிலேயே அதிகக் கரிசனையா யிருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் ஒரு பெரிய சந்தோஷத்தை இழக்கின் றார்கள் என்பது உண்மை. அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தங்களைத் தவிர, வேறு யாருக்கும் பிரயோஜனமாக வாழ்வதில்லை. அது ஒரு அர்த்தமற்ற வாழ்க்கை.

சாறிபாத் விதவையிடம் இருந்தது கொஞ்சம் மாவுதான். ஆனால் அந்த மாவில் கொஞ்சத்தைப் பசித்து வந்த எலியாவுக்காக உபயோகித்த போது அவளுக்கு அது பெரிய ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது. பாவியான ஸ்திரீ முன்னூறு பணம் பெறுமான வாசனைத் தைலத்தை இயேசுவுக்காகச் செலவழித்தாள். அதைக் கொண்டு அவள் பல மாதம் சௌகரியமாக வாழ முடியும். ஆனால் இயேசுவைச் சந்தோஷப்படுத்தி, அதனால் வரும் மன சந்தோஷத்தை அவள் அடைவதைப் பெரிதும் விரும்பினாள். எனவே இயேசுவால் அவள் புகழப்பட்டாள்.

நம்மிடம் அதிகமாக இருப்பதால் பிறருக்கு உதவுவது ஒரு சந்தோஷமே. ஆனால் நாம் குறைவாக வைத்திருக்கும்போதே பிறருக்காக ஒரு உதவியைச் செய்வது நமக்கு மிகப்பெரிய சந்தோஷத்தைக் கொண்டு வருவதோடு, தேவ ஆசீர்வாதங்களையும் திரளாக வரவழைக்கும்.

உன் துக்கம் இன்னொருவனுடைய மகிழ்ச்சிக்கு வழி வகுத்தால் அதை நினைத்து மகிழ்ச்சியாயிரு.

ஜீவ நீரோடை

அன்பை அறியச் செய்தல்

1 சாமுவேல் - 18:1:6

பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக...
லூக்கா - 10:27

லூக்கா -10:25-37

தேவன் விரும்புகின்றவைகளை மனிதன் செய்ய வேண்டுமானால் பயபக்தி மட்டும் போதாது. அவனுக்குள் அன்பு வேண்டும். அன்பு அவனிடம் இருந்தால் தேவனுடைய சித்தங்களை நிறைவேற்றுவது அவனுக்கு எளிதாகிவிடும். ஆனால் இயற்கையில் மனிதன் உண்மையான அன்பு இல்லாதவனே, எனவேதான் அவனுடைய சிந்தை, செயல், குணம், இயல்பு யாவுமே தேவனுடைய சித்தத்திற்கு எதிரானவையாகவே உள்ளது. அன்பின் வலிமையின்றி வாழும் அவனை தேவன் எவ்வளவு கட்டாயப்படுத்தினாலும், தேவசித்தம் நிறைவேற்றுவதில் அவனை வெற்றியுடையவனாக்க முடியாது.

எனவே தேவன் தம்மை நேசித்து தம்முடைய சித்தத்தைச் செய்ய மனிதனை அழைக்கும் முன்பு, அவருடைய அன்பை நமக்குள் அடையாளம் காண அவனை அழைக்கின்றார். முதலாவது நான் உன்னை எவ்வளவாய் நேசிக்கின்றேன் என்பதை நீ அறிந்து கொள் என்று கூறுகின்றார். மனிதன் முதலாவது தேவ அன்பை அறிந்து கொள்ள அழைக்கப்படுகின்றான். அந்த அன்பை அனுப வித்துக் கொண்டு பின்னர் தம்முடைய சித்தம் செய்ய அழைக்கின்றார். ஏனென் றால் மனிதன் தேவ அன்பை அனுபவித்து உணராத வரை, தேவசித்தம் செய்யும் பலத்தை பெறமுடியாது.

இந்த அன்பின் விதி வாழ்க்கையில் பெரிய உதவியாக உள்ளது. சில நேரங் களில் மற்றவர்கள் நம்மை நேசிக்கவில்லை, மற்றவர்கள் நம்மை நேசித்துச் செயல்படவில்லை என்று வருந்துகின்றோம். எவ்வளவோ மற்றவர்களின் நல்ல அன்பினை எதிர்பார்த்தும் கிடைக்காமல் போகிறது. இங்கே முக்கிய காரணம் அவர்கள் நேசிக்கவில்லை என்பதல்ல. அவர்கள் நம்மை நேசிப்பதற்குத் தேவையான தூண்டுதல்கள் அவர்களுக்குக் கிட்டவில்லை.

எனவே முதலாவது நாம் அவர்களை அதிகமாக நேசித்து, நாம் அவர்களை நேசிப்பதை அவர்கள் அறியச் செய்ய வேண்டும். நாம் அவர்கள் மேல் கரிசனை கொண்டிருப்பதை அவர்கள் உறுதிப்பட செய்ய வேண்டும். அப்போது அது அவர்களுக்குள் நம்மை நேசிக்கும் தூண்டுதல்களை ஏற்படுத்தும். நாம் நேசிக்கப்படுவதிலேயே குறியாயிருந்தால், மேலும் மேலும் அவர்கள் இருதயம் கடினமாகிவிடும். நாம் பிறரை நேசிக்கும் விஷயத்தில் விசேஷ பலம் காண்பித்தால், அந்த அன்பின் விளைவினால் நம்மை நேசிக்கும்படி அவர்கள் அதிகமாகத் தூண்டப்படுவார்கள். ஆம், அன்பைத் தர இயலாதவர்களுக்கு நம்முடைய அன்பின் உண்மையைக் காண்பிப்போம். அப்போது அவர்களின் அன்பற்ற கடின மனம் கரைந்திட வாய்ப்புண்டு.

இன்னொருவரை நேசிக்க உன் இதயம் விரும்பாதபோது இயேசுவை நீ நேசிக்கிறாய் என்பது வெறும் கற்பனையே!!

ஜீவ நீரோடை

முறுமுறுக்காமல்

ஆதியாகமம் - 26:1-13

எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க... பில் - 4 : 11

பிலிப்பியர் -4 :4-13

கர்த்தர் நம்மை எந்தச் சூழ்நிலையில் வைத்திருக்கிறாரோ அந்தச் சூழ் நிலையும் தேவனை அதிகமாக மகிமைப்படுத்த ஒரு நல்ல வாய்ப்புதான் என்ற ஒரு சிந்தைதான் ஆவிக்கேற்ற சிந்தை ஆகும். கர்த்தர் நமக்கு அனுமதித்த சூழ்நிலை மகிழ்ச்சிக்குரியது என்று கூறுவதற்கேற்ற நிலையில் இல்லாவிட்டாலும், அதையும் மனநிறைவோடு ஏற்றுக்கொள்ளும் ஒரு மனப்பக்குவத்தை உருவாக் கிக்கொள்வதுதான் வெற்றி வாழ்க்கையின் ரகசியமாகும்.

பொருளாதாரக்குறைவு, நோய், விரும்பியபடி வாழ்க்கைத் துணை அமை யாமை, திருப்திதர இயலாத ஒரு வேலை, குன்றிப் போன வியாபாரம், கனவுகள் நிறைவேறாமை போன்ற சூழ்நிலைகள் ஏற்படும் போது அங்கே அதிருப்திக்கும், சலிப்புக்கும் ஏராளம் வாய்ப்புகள் உண்டு. ஆயினும் இவைகளை அனுமதித்தது தேவனே என்று நம்பினால், இவைகளை தேவன் ஒரு ஆசீர்வாத உயர்வின் படிகளாக மாற்ற இயலும், என்ற நம்பிக்கையை நாம் உருவாக்கிக் கொள்ள முடியும்.

இவைகளைப் பார்த்து சலிப்பதாலோ, சங்கடப்பட்டுக் கொண்டிருப்பதாலோ, முறுமுறுத்துக் கொண்டிருப்பதாலோ அவைகள் ஆசீர்வாதங்களாக மாறிவிடுதில் லை. இதனை தேவன் அனுமதித்தால் இது எனக்குத் திருப்தியைத் தராவிட்டாலும், உம்முடைய மகிமை விளங்குவதற்கான வாய்ப்பு ஏற்படும்படியாக, இதனை மனதார ஏற்றுக் கொள்கிறேன், என்று விசுவாசத்தால் தூண்டப்பட்டுச் சொல்வோ மானால், அங்கே அற்புதத்திற்கு நாம் பாதை அமைக்கிறோம்.

இஸ்ரவேல் மக்கள் கானக யாத்திரையின் போது கடைசி வரை இளைப்பாறு தலைக் காணவில்லை. ஏனென்றால் அவர்கள் தங்களுக்காக நியமிக்கப்பட்ட பாதையை எப்போதும் வெறுப்புடனும், விரக்தியுடனும் பார்த்து முறுமுறுத்துக் கொண்டேயிருந்தார்கள். இதை தேவன் அனுமதித்து விட்டாரே, இப்படியொரு வாழ்க்கையை எனக்குத் தந்து விட்டாரே, என்பது போல அதிருப்தியோடு நாம் அறிக்கையிட்டுக் கொண்டும், முறுமுறுத்துக்கொண்டுமிருந்தால், தேவனுடைய செயல்பாட்டை அது தடை செய்யும். அது தினமும் தேவனைக் குறை கூறுகின்ற, குற்றஞ்சாட்டுகின்ற செயல்.

விரும்ப முடியாததையும் தேவன் அனுமதித்தார் என்ற ஒரே ஒரு விசுவாசக் காரணத்திற்காக விரும்பி ஏற்றுக் கொள்ளும்போது, நாம் விரும்பியதற்கும் அதி கமாக தேவனால் ஒரு நாள் ஆசீர்வாதம் வரும் என்பது ஒரு ஆவிக்குரிய உண்மை யாகும். அம். மாரா போன்ற கசப்பிற்கு முன்பாக நாம் வர நேரிட்டாலும், அதை மதுரமாக்க வல்ல தேவனை நோக்கிக் கூப்பிட வேண்டுமேயன்றி, அதிருப்தியோடு புலம்பக்கூடாது. ஏனென்றால் அதனால் நமக்கு எந்த நன்மையும் வராது.

இல்லாத பொருட்களின் மேல் கொண்ட அதிக ஆசையினால் இருக்கின்ற பொருட்களையும் அனுபவியாமல் போகிறோம்

ஜீவ நீரோடை

உள்ளான அழகு

உபாகமம் - 34:1-12

உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது... 11 கொரிந்தியர் - 4:16

11 கொரிந்தியர் -4 :1-18

இன்றைய சமுதாயத்தில் அழகு, ஆரோக்கியம், ஆகியவற்றைக்குறித்து எழுதப்பட்ட புத்தகங்களுக்கு அளவேயில்லை, உடலை ஆராக்கியமாக வைப்பது தொடர்பான புத்தகங்களையும், அழகுக் குறிப்புகள் கொண்ட புத்தகங்களையும், மக்கள் அதிக ஆர்வத்தோடு வாங்கிப் படிக்கின்றனர். அனேகர் ஆகாரத்திற்காகச் செலவழிப்பதை விட அழகிற்காகவே அதிகம் செலவழிக்கின்றனர், “எங்க அம்மா சனிக்கிழமை பியுட்டி பார்லருக்குப் போனால்தான்,ஞாயிற்றுக்கிழமை சர்ச்சுக்கு போவாங்க” என்றானாம் ஒரு குறும்புக்காரச் சிறுவன்.

ஆம். அழகு, ஆரோக்கியம் இவற்றை குறித்த அளவு கடந்த கரிசனையோடு மக்கள் வாழும் காலம் இது. ஆனால் எவ்வளவுதான் அழகுக் குறிப்புகளை பின்பற்றி வாழ்ந்தாலும், வயதுகள் போகப் போக அழகும் போய்க்கொண்டுதானிருக்கும். எவ்வளவுதான் பார்த்துப் பார்த்து ஆரோக்கிய நடவடிக்கைகள் எடுத்தாலும், வயதுகளின் ஏற்றம் ஆரோக்கியத்தை வீழ்த்தத்தான் செய்யும். அழகும் நிலை யானதல்ல. ஆரோக்கியமும் நிலையானதல்ல.

ஆனால் அதிக அழகாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டிய இடம் இருதயம் ஆகும். நமக்குள் நம்மை அழகாக்கும் அனுபவமும், ஆரோக்கியத்தை அதிகமாக்கும் அனுபவமும் வேண்டும். நம்முடைய உட்புற நிலைமையை ஆரோக்கியமாகவும், அழகாகவும் வைக்காவிட்டால், நம்முடைய வாழ்க்கை நமக்கோ மற்றவர்களுக்கோ அழகாகவும் ஆரோக்கியமாகவும் இராது.

வயதுகள் செல்லச் செல்ல வெளிப்புற அழகைத் தக்க வைப்பது இயலாதது. ஆனால் வயது போகப் போக உட்புற அழகையும் ஆரோக்கியத்தையும் அதி கமாக்கலாம். தோற்றங்களால் பிறரைக் கவர்ச்சிக்கவோ, பிறர் மனதில் நல்ல அபிப்பிராயங்களை ஏற்படுத்தவோ விரும்புவது இயற்கை. ஆனால் நம்முடைய வாழ்க்கை அழகுதான் மற்றவர்களுக்குப் பயனையும், தேவனுக்கு மகிமை யையும், நமக்கு மனநிறைவையும் கொண்டு வரும்.

மோசே வயது சென்ற மனிதனாயிருந்தும் குணங்களால், கொள்கைகளால், செயல்களால் மிகவும் அழகாகிக் கொண்டேயிருந்தான். அதுதான் இலட்சக்கணக் கான மக்கள் நடுவில் தேவையானதாக இருந்தது. அந்த அழகிற்கு ஊற்றாயிருந் தவர் தேவனே.

பிறர் சொன்னதற்காக உண்மையை மறுக்காதே
பிறருக்காக உண்மையை மறைக்கவும் செய்யாதே.

எது பாவம்?

ஆகாய் - 1:1-15

உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள்... ஆகாய் - 1:7

லூக்கா -13:1-9

வேதாகமத்தில் பல இடங்களில் வரும் பாவம் என்ற சொல்லின் சரியான அர்த்தம் இலக்கை விட்டுத் தவறுதல் என்பதாகும். அம்பை எய்கின்றவன் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி எய்கின்றான். ஆனால் அம்பு அந்த இலக்கை அடையாமல் விலகிச் சென்றால் அவனுடைய எதிர்பார்ப்பு அங்கே தோல்வியடைகின்றது. அதுபோலவே தேவன் நம்மை ஒரு குறிப்பிட்ட நோக்கத்தினை அல்லது இலக்கினை அடைவதற்காகவே அழைக்கின்றார். அந்த இலக்கை நாம் அடையாமல் வேறுவிதமாக நாம் சென்றால், அதுவே தேவனுடைய எதிர் பார்ப்பைத் தோல்வியடையச் செய்கிறது. அதுவே தேவனுடைய பார்வையில் பாவம்.

நாம் உலகம் வெறுக்கத்தக்கதான தவறுகளையும், பொல்லாத காரியங்களையும் செய்யாமல் நல்ல தோற்றமுடைய ஒரு வாழ்க்கை வாழலாம். ஆயினும் தேவனை முதன்மைப்படுத்தி, அவரை இந்த உலகத்தில் கனப்படுத்தி வாழ்கின்றோம், என்று வெளியரங்கமாகத் தெரிகின்ற விதத்தில் வாழாவிடில் அது பாவமே. கர்த்தருடைய விருப்பங்களை முக்கியப்படுத்தி, அவைகளை நிறைவேற்ற ஆர்வம் காட்டாவிடில் அது பாவமே.

ஆகாய் தீர்க்கதரிசியின் காலத்தில், பாபிலோன் சிறையிருப்பிலிருந்து எருசேலம் திரும்பிய மக்கள், எவ்வளவோ முயன்றும் ஆசீர்வாதத்தை அடையவில்லை. என்ன பாவம் செய்தார்கள்? அவர்களை மீட்ட தேவனுடைய நோக்கமாகிய "ஆலயத்தைக் கட்டுதல்" என்ற விஷயத்தில் அவர்கள் அதிக அக்கறையின்றித், தாங்கள் வாழ்க்கை வளங்களைப் பெருக்குவதில் தீவிரமாயிருந்தார்கள். அதுவே அவர்கள் விஷயத்தில் முக்கியப் பாவமாகியது. ஆம். கர்த்தரின் நோக்கத்தை நிறைவேற்றுகின்றோம் என்ற நிச்சயமில்லாத வாழ்க்கையே பாவ வாழ்க்கைதான். நாம் பலவிதங்களில் சிறப்பாகயிருந்தாலும், நம்மை அழைத்த தேவன் நமக்காகக் குறித்துள்ள இலக்கை நாம் எட்டும் விதமாகச் செயல்படுகின்றோமோ என்பதே முக்கியம். நாம் பாவமான செயல்களைச் செய்யாவிட்டாலும், நாம் பரிசுத்த நிலையில் பிரகாசிக்கின்ற ஒரு நிலையை அடையாவிடில் அங்கே நாம் தோல்வியடைகின்றோம்.

ஆவிக்குரிய வாழ்க்கை என்பது எதோ ஜெபிக்கிறோம், வேதம் வாசிக்கிறோம், ஆராதிக்கின்றோம், ஊழியம் செய்கின்றோம் என்ற நிலைகளோடு நின்று விடக்கூடாது. நமக்கு தேவன் குறித்த இலக்கு என்ன என்பதைக் குறித்த தெளிவும், அதை நோக்கி ஓடுகின்ற ஒரு செயலார்வமும் தேவை. எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ, அதை நான் பிடித்துக் கொள்ள ஆசையாய்த் தொடர்கிறேன் என்றான். (பிலி - 3:12)

உயர்ந்த இலக்கு உடையவனுடைய வாழ்க்கை ஒருபோதும் தரம் குறைந்ததாக இருப்பதில்லை.

ஜீவ நீரோடை

கொண்டாட்டக் கிறிஸ்தவம்

11 சாமுவேல் - 6:1-10

மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்... லூக்கா - 19:38

லூக்கா - 19:28-48

இயேசு கழுதையின்மேல் இராஜா போல அமர்ந்து பவனியாகச் சென்றார். அந்த நாட்களில் இராஜாக்களும் கனத்திற்குரியவர்களும் கழுதையை வாகன மாகப் பயன்படுத்துவது பழக்கம். இந்த மதிப்பிற்குரிய பவனியில் ஏராளமானோர் வந்து இணைந்து கொண்டனர். ஆயிரக்கணக்கில் திரண்ட மக்கள் கூட்டம் மகிழ்ச்சி யும் உத்வேகமும் பொங்க, பலவிதங்களில் வாழ்த்திக் கோஷமிட்டனர். ஆனால் இவர்களெல்லாரும் தங்களுக்கு தாவீதைப் போல பொற்காலம் தருகின்ற ஒருவரை எதிர்பார்த்து வந்தவர்கள். இவர்கள் இயேசுவை உண்மையாகப் பின்பற்றி வாழ வந்த அர்ப்பணிப்பின் மனிதர்கள் அல்ல. இவர்கள் சந்தோஷமான ஒன்றோடு தங்களை இணைத்துத் தங்களுக்குச் சந்தோஷத்தை தேடியவர்கள், இவர்கள் இயேசுவின் பாதையில் நடக்கத் தங்களை ஒப்புவித்து வந்தவர்கள் அல்ல.

இதுபோன்ற சந்தோஷ பவனிகளில் கோஷமிடவும் கொண்டாடவும் விரும்பு கின்ற மக்கள் கூட்டம் ஏராளம். ஆனால் இயேசுவோ ஒருவன் தம்மைப் பின்பற்றி வருவதற்குக் கோஷமிடுகின்றவர்களையும், கொண்டாட்டக்காரர்களையும், வாய் வாழ்த்துக்காரர்களையும் அல்ல. சுயத்தை வெறுக்கவும், சிலுவை சுமக்கவும் ஆயத்தமானவர்களைத்தான் அவர் அழைத்தார்.

இன்று இயேசுவை இராஜாவாக எண்ணிக் கோஷமிடவும், ஆடிப்பாடி மகிழவும் அநேகர் உள்ளனர். ஆனால் சுயத்தை வெறுத்து சிலுவை சுமக்க வருகின்றவர்கள்தான் மிகவும் குறைவு. இன்று கோஷமிடுகின்ற கொண்டாடுகின்ற கிறிஸ்தவத்தில்தான் அநேகர் ஆர்வமாயிருக்கின்றனர். ஆனால் சிலுவை சுமத்தல் இல்லாமலும் சுய வெறுப்பு இல்லாமலும், வெறும் ஆரவார கோஷங் களோடு வாழ்கிறவர்களிடம் கர்த்தர் மகிமைப்படவில்லை. அவர்கள் கர்த்தருக்காகச் சாட்சிகளாக இல்லை.

உண்மையான பக்தியையும், உண்மையான கிறிஸ்தவ அடையாளங் களையும் வெறும் ஆரவாரக் கொண்டாட்ட ஆராதனைகளில் பார்ப்பது சரியல்ல. நாம் எந்த அளவிற்கு நம்மைத் தாழ்த்தி தேவனுக்கு அர்ப்பணித்து, கிறிஸ்துவின் வழிகளில் நடக்கிறோமோ அதுதான் நம்முடைய கிறிஸ்தவ நிலை மையை அளவிடுகிறது. உண்மையாக சுயத்தை வெறுத்து, இயேசுவைப் பின் பற்றுவதற்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள், கொண்டாட்ட கிறிஸ்தவர்களை விட அதிகமான மகிழ்ச்சியைத் தங்களிடம் காண்கின்றார்கள்.

ஆவிக்குரிய வாழ்க்கை என்பது எவ்வளவு பரவசப்பட்டோம் என்பதிலல்ல. எவ்வளவு பரிசுத்தமானோம் என்பதிலேயே விளங்குகிறது.

ஜீவ நீரோடை

எது பக்தி?

ஆமோஸ் - 5:21-27

உங்கள் ஆசரிப்புகளில் எனக்குப் பிரியமில்லை... ஆமோஸ் – 5 :21

யோவான் - 4:10-26

கணவர்மேல் பக்தியுடைய மனைவி நன்றாகச் சமைத்து, நன்றாகக் கணவனுக்காக பல அலுவல்களை செய்யலாம். ஆனாலும் கணவனுக்கு உரிய கனம் கொடுத்து, சிறந்த ஒழுக்க நிலைகளோடு வாழ்வதுதான் உண்மையான பக்தி, மனைவிமேல் கொண்ட அன்பினால் மனைவி கேட்டதையெல்லாம் கணவன் வாங்கி கொடுக்கலாம். ஆனாலும் மனைவியின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, மனைவிக்கு உண்மையுள்ள கணவனாக வாழ்வதுதான் உண்மையான அன்பு. தகப்பன்மேல் கொண்ட பக்தியினால் பிள்ளைகள் தகப்பனுக்காக மிகுதியாகச் செலவு செய்யலாம். ஆனாலும் தகப்பனுடைய விருப்பம் உணர்ந்து நல்வழிகளில் நடப்பதுதான் உண்மையான பக்தி.

அதுபோல தேவன்மேல் கொண்ட பக்தியினால் நாம் பல நல்ல பக்திச் செயல்களைச் செய்யலாம். ஆனாலும் நாம் பக்தியோடு பல செயல்களைச் செய்வதில் அல்ல. எந்த அளவிற்கு அவர் விரும்புவதைச் செய்கின்றோம் என்பதில்தான் பக்தி விளங்கும். சிலர் மற்றவர்களைப் பிரியப்படுத்த எதையாவது கொடுப்பார்கள். ஆனால் அவர்களைப் பிரியப்படுத்த, அவர்கள் எதை விரும்புவார்கள் என்று அறிந்து அதற்கேற்ப செய்ய வேண்டியது அவசியம்.

சிலருடைய பக்தி தேவனுடைய பாராட்டிற்கு வழிவகுக்காமல், அவருடைய கோபத்திற்கே வழிவகுக்கிறது. ஏனென்றால் அவர்கள் தாங்கள் பக்தியின் பெயரில் விரும்பிச் செய்வதை தேவன் விரும்பி ஏற்க வேண்டும் என எண்ணுகின்றனர். ஆனால் எதனை தேவன் விரும்புவாரோ அதனைச் செய்து அவரைப் பிரியப்படுத்த விரும்பவில்லை. சூடாக எதையாவது குடிக்க விரும்புகின்ற ஒருவருக்கு, விதவிதமான குளிர்பானங்களைக்கொடுத்து அவருடைய பாராட்டைப் பெறமுடியாது.

தேவ பக்தி என்பதை உயர்ந்த சுபாவங்களாலும், சிறந்த செயல்களாலும், நல்ல மனப்பாங்குகளாலும் காண்பிக்க கர்த்தர் விரும்புகின்றார். நாம் அவற்றிற்கு முக்கியத்துவம் தராமல், ஆராதனை, காணிக்கை பாடல்கள், பிரார்த்தனைகள், உண்ணாநோன்புகள், போன்றவற்றால் மட்டுமே பக்தியைக் காண்பிக்க விரும்பினால், அங்கே தேவனுடைய பாராட்டு அல்ல. அவருடைய கோபமே அங்கு வெளிப்படும். ஆம். தேவனுக்குப் பிரியமானதோர் வாழ்க்கை வாழ்வதால் பக்தியைப் பிரதிபலிக்க முன்வருவோம்.

தேவனுக்காக என்ன செய்யலாம் என்று யோசிக்கும் முன்பு அவர் உனக்கு என்ன சொல்கிறார் என்பதைக் கவனி.

ஜீவ நீரோடை

40 நாள் டிராமா

ஏசாயா -58:1-11

நாங்கள் எங்கள் ஆத்துமாக்களை ஒடுக்கும் போது – ஏசாயா 58:3

ரோமர்-10:1-13

சிலர் குறிப்பிட்ட சில இடங்களில் தங்களுக்கு ஏராளமான பக்தி தோற்றங்களை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். சிலர் குறிப்பிட்ட சில காலங்களில் தங்களுக்கு அதிகமாக பக்தி காட்சிகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். ஆனால் உண்மையான பக்தி என்பது குறிப்பிட்ட இடங்களிலோ, அல்லது குறிப்பிட்ட காலங்களிலோ அல்ல. நாம் எங்கும் எப்போதும் உண்மையான இறைபக்தி தோற்றத்தோடு வாழ வேண்டும்.

சிலர் சபைச் சூழல்களிலும், ஆராதனைச் சூழல்களிலும் மிக நல்ல பக்தியாளர்களாகப் பலருடைய பார்வைக்குத் தோன்றுகின்றனர். ஆனால் அந்த பக்தி தோற்றம் பிற இடங்களிலோ தெரியாமல் போவதால் அவர்கள் இடறிப்போக நேரிடுகிறது. சிலர் சில குறிப்பிட்ட காலங்களில் பக்தியின் மறுபதிப்புகளாகத் தோன்றுகின்றார்கள். ஆனால் பிற காலங்களிலோ எந்த விசேஷ பக்தியும் இல்லாமல் போய் விடுகின்றார்கள்.

சிலருடைய பக்தி வாழ்க்கை ஒரு டிராமா போல அமைந்து விடுகிறது. சில கிறிஸ்தவர்கள் சாம்பல் புதனில் ஒரு அதிக பக்தி டிராமாவைத் துவங்கி, உயிர்த்தெழுந்த நாளோடு முடித்து விடுகின்றார்கள். பரிசுத்த வேடம் கலைக்கப்பட்டு மறுபடியும் பாவ வாழ்வு ஆரம்பித்து விடுகிறது. இப்படிப்பட்ட பக்தி, தேவனால் விரும்பப்பட இயலாத ஒரு போலியான பக்தியாகும்.

பக்தியாய்ச் செயல்படுவதற்கு ஒரு இடத்தையோ, காலத்தையோ சார்ந்திருக்கக் கூடாது. தேவன் எங்கும் இருக்கின்றார். எக்காலமும் இருக்கின்றார். எனவே எங்கிருந்தாலும், எந்த வேளையிலும் நாம் அவருக்கேற்றவிதமாகவும், அவருடைய பிரியத்திற்கு உகந்த விதமாகவும் வாழ வேண்டும்.

40 நாட்கள் மட்டும் ஆலயம், வழிபாடு, ஜெபம், ஆராதனை, வேத தியானம், இறை வார்த்தை கேட்டல், சுய சௌகரிய கட்டுப்பாடு, தாழ்மை, ருசியுணவு தவிர்த்தல், என்று நாம் அதிக கவனம் செலுத்திவிட்டு மீண்டும் பழைய விதமாகச் செல்வது நல்ல அனுபவம் அல்ல. 40 நாட்கள் நான் கறிமீன் சாப்பிடமாட்டேன், தப்பு தவறு செய்யமாட்டேன், சந்தோஷ நிகழ்வுகளுக்கு போகமாட்டேன், ஸ்டைலாக உடுக்கமாட்டேன், முகச் சவரம் செய்யமாட்டேன் என்பது போன்ற பாரம்பரிய பயனற்ற பக்திகளில் வைராக்கியமாயிராமல், உண்மையான பக்தியுடன் என்றும் வாழ முன்வரவேண்டும். எல்லா காலங்களிலும் தேவன் மகிமைப்படத்தக்கதான வாழ்க்கையை வாழ்வதே உண்மையான பக்தி.

இருதயத்தில் இறைவன் விரும்பும் குணமில்லாதவர்கள் வாயினால் துதிப்பதெல்லாம் வீண் வேலையே.

ஜீவ நீரோடை

வீண் பக்தி

செப்பனியா–2:1–7

அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டார் – 1 யோவான் – 3:5

1 யோவான்–3 :1 –10

அவர் ஒரு அப்பா பக்தர். தகப்பனார் மறைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இன்றும் தந்தையை நினைத்தால் கண்ணீர் வந்துவிடும். தன்னுடைய தந்தையைக் குறித்து எப்போதும் புகழ்ந்து பேசுவார். தன்னுடைய தந்தை உபயோகித்து வந்த பழைய சைக்கிள் ஒன்றை மிகப்பெரிய பொக்கிஷமாக எண்ணிப் பராமரித்துவருகின்றார். தன்னுடைய தந்தை எவ்வளவாய் கஷ்டங்களையும் துன்பத்தையும் ஏற்றுக்கொண்டு தங்களை வளர்த்தார் என்பதை கதைகதையாய்ச் சொல்லுவார்.

ஆனால் இவர் வேலை வெட்டி எதுவுமின்றி தந்தை கஷ்டப்பட்டுச் சம்பாதித்ததை கரைத்துக்கொண்டு வாழ்கின்றவர். மதுப்பழக்கம், புகைப் பழக்கம், சூதாட்டப் பழக்கம் என இவரிடம் ஏராளமான தவறான பழக்கங்கள் உண்டு. தந்தை மிகவும் கஷ்டப்பட்டு தங்களை வளர்த்ததை இன்றளவும் மறவாத இவர் தந்தையிடமிருந்த எந்த நல்ல பழக்கத்தையோ, குணத்தையோ கொண்டிருக்கவில்லை. தந்தையின் கஷ்டங்கள் நிறைந்த வாழ்க்கையை பக்தியோடு நினைவுகூறும் இவர், அவ்விதம் கஷ்டப்பட்டு வளர்த்தது எதற்காக என்பதை நினைக்கவில்லை.

பல கிறிஸ்தவ பக்தர்களின் நிலைமையும் இதுதானே. ஆண்டவராகிய இயேசுவின் பாடு மரணங்களை அவர்கள் அதிகமாக நினைத்து மனதுருகி பாடுகின்றனர். கண்ணீர் சிந்திக் கொண்டே பிரசங்கம் கேட்கின்றனர். லெந்து காலத்தில், இயேசு பட்ட கஸ்திகளையெல்லாம் கதைகதையாய் பேசுவதிலும், கவலை தோய்ந்த முகத்தோடு கேட்பதிலும் அதிக கவனம் செலுத்துகின்றனர். சிலுவை அடையாளங்கள் இந்த நாட்களில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

ஆனால் இயேசு எதற்காகப் பாடு அனுபவித்தார்? எதற்காக அவர் சிலுவையில் அறையப்பட்டார்? எதற்காக அவர் அவமானங்களைச் சகித்தார். நாம் அவற்றை எண்ணி எண்ணி மனவியாகுலத்தோடு பக்தியை வெளிப் படுத்தவா? நாம் பாவமன்னிப்பை அடைவதற்காகவும், பாவவிடுதலை பெற்று வாழ்வதற்காகவும்தானே இயேசு கஸ்தியடைந்தார். நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறி, பரிசுத்தமாக வாழ்வதற்காகத்தானே அவர் இரத்தம் சிந்தினார். நாம் நற்பழக்கங்களோடும், நற்செயல்களோடும், நற்பண்புகளோடும் வாழ்ந்து தேவனை மகிமைப்படுத்தத்தானே இயேசு தாங்கொணாத வேதனை களைச் சகித்தார். அவற்றை நாம் சீரியஸாகச் சிந்தித்து, உண்மையான மனந்திரும்பு தலைக்கண்டு, உயர்ந்ததோர் வாழ்க்கையை வாழாவிட்டால், லெந்துகால பக்தி வீண்பக்திதானே.

**தேவன் வகுத்த பாதையில் நடவாதவனின்
இறை வழிபாடுகள் தேவனை வேதனைப்படுத்துகின்றன.**

சிலுவை புனிதமா?

ஏசாயா 53:1-12

நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து...
எபிரேயர் - 13:13

எபிரேயர் 13 : 8 -21

கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு பக்தியுணர்வினால் சிலுவையைப் புனித சின்னம் என்றும், தெய்வீக அடையாளம் என்றும் கூறுகின்றோம். ஆனால் உண்மையின்படி பார்த்தால் சிலுவை ஒரு அவமானச் சின்னம். அது ஒரு கொடுமையான வேதனையின் சின்னம். இயேசுவின் கால யூதர்கள் அதனை சாபத்தின் அடையாளமாகப் பார்த்தார்கள் (கலா-3:13). ஏனென்றால் மரத்தில் தொங்கி மரணம் அடைவது மிகப்பெரிய சாபமானது என்பதை மோசேயின் நியாயப் பிரமாணங்களில் பார்க்கின்றோம் (உபா. 21:23). ரோமர்களும், கிரேக்கர்களும், அதனை ஒரு அவமானத்தின் அடையாளமாகவும், வேதனையின் அடையாளமாகவும் பார்த்தார்கள்.

அப்படிப்பட்ட சிலுவை அடையாளம் புனிதத்தின் அடையாளம் அல்ல. அது புனிதமானதாயிருந்தால், இயேசு சிலுவை சுமக்க நேர்ந்ததை அவமான மாக எண்ணாமல், புனிதமான விஷயமாகவே எண்ண நேரிட்டிருக்கும். சிலுவை என்பது இயேசுவிற்கு முன்பும் பின்பும் அவமானம், சாபம், வேதனை, ஆகியவற்றை நினைவுப்படுத்துகின்ற சின்னமே. ஆனால் புனிதத்தை உருவாக்கவும், புனிதர்களை உருவாக்கவும், இயேசு அவமானத்தையும், சாபத்தையும், வேதனையையும் ஏற்றுக் கொண்டார். புனித அனுபவத்தை நாம் அடைவதற்காக, இயேசு அவமானம்,சாபம், வேதனை ஆகிய கசப்பான அனுபவங்களை அனுபவிக்க நேர்ந்தது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக எப்படிப்பட்ட அவமானங்களையும், வேதனையையும் சகிக்க நேர்ந்தது என்பதை நினைவு படுத்த சிலுவை அடையாளம் நல்லதே. பாவம் என்பது அவமானம், சாபம், வேதனை இவற்றை விளைவுகளாகக் கொண்டுவரும் என்ற விழிப்புணர்வைப் பெற சிலுவை அடையாளம் நல்லதே. நம்முடைய பாவங்களுக்காக இயேசு சிலுவையின் மூலம் மிகப்பெரியதோர் விலையைக் கொடுத்திருக்கிறார் என்ற உண்மையை நாம் உணர்ந்து வாழ்ந்திட சிலுவையின் அடையாளம் நல்லதே. ஆனால் சிலுவையைப் புனிதம் என்று எண்ணி அதனை நம்முடன் வைத்தி ருப்பதாலோ, நெற்றியிலே சிலுவையை வரைவதாலோ, ஆபரணங்களில் அந்த அடையாளங்களைப் பொறிப்பதாலோ, சிலுவை அடையாளங்களை தொடுவதாலோ, முத்தமிடுவதாலோ எந்த விசேஷ நன்மையும் இல்லை. சிலுவையில் இயேசு அறையப்பட்டதின் பின்னணிகளை உணர்ந்து, நாம் மனந்தி ரும்பி வாழ்வதற்குப் பதிலாக, சிலுவை அடையாளங்களை அதிகமாக மதிப்பது ஒருவிதமான விக்கிரக ஆராதனையே.

இயேசுவின் வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவதைத் தவிர அவரைக் காண்பிக்க மேன்மையான வழி இல்லை.

ஜீவ நீரோடை போதனையும், வாழ்க்கையும்

மத்தேயு 18:21-35

பிதாவே, இவர்களுக்கு மன்னியும்...
லூக்கா – 23:34

லூக்கா 23:26 -43

தாங்கள் போதிக்கின்றவைகளை யாராவது பின்பற்ற வேண்டும் என்ற எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் போதிக்கும் போதகர்கள் உண்டு. தாங்கள் பின்பற்றாதவைகளையும், பின்பற்ற விரும்பாதவைகளையும் பிறர் பின்பற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் போதிக்கும் மாய்மால போதகர்கள் உண்டு. தாங்கள் பின்பற்றும் விஷயங்களை, மற்றவர்களும் பின்பற்றி வாழ்ந்தால் நலமாயிருக்குமே என்ற ஆத்ம வாஞ்சையோடு போதிக்கும் உண்மை போதகர்களும் உண்டு.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அக்கால வேதபாரகர்களைப் போலவும், பரிசேயர்களைப்போலவும் சம்பிரதாயமாகப் போதனை செய்தவர் அல்ல. அவர் அதிகாரத்தோடு போதித்தவர். அவர் கடைப்பிடிக்காத விஷயங்களையும், வாழ இயலாதவைகளையும், மதக்கடமைக்காகப் போதித்தவர் அல்ல. அவர் எதையெல்லாம் போதித்தாரோ, அவற்றை அவருடைய வாழ்க்கையில் பார்க்க முடிந்தது. அவருடைய வாழ்க்கையில் பார்க்க இயலாதவைகளை அவர் போதிக்கவில்லை.

சில விஷயங்கள் போதிப்பதற்கும், கேட்டு ரசிப்பதற்கும் மிகவும் எளிதானவைகள். ஆனால் அதுபோன்ற சூழ்நிலைகளில் வரும்போது பின்பற்றுவதுதான் கடினம். ஆனால் ஆண்டவராகிய இயேசு கடினமான வேளைகளிலும் தாம் போதித்த சத்தியங்களைப் பின்பற்றத் தவறவில்லை. அவர் தம்முடைய ஊழிய நாட்களிலே மன்னித்தல், ஏற்றுக்கொள்ளுதல், அன்பு கூறுதல் ஆகிய உயர்ந்த சுபாவங்களையே முன்னிலைப்படுத்திப் போதித்தார். அவற்றை அவரிடம் சாதாரண சூழ்நிலைகளிலும் பிறர் பார்க்க முடிந்தது. கடினமான சூழ்நிலைகளிலும் பார்க்க முடிந்தது. சிலுவையில் தாங்கொணா வேதனைகளின் நடுவிலே தொங்கும் போதும், தாம் போதித்தவைகளைச் செயலாக்கிக் காண்பித்தார். பகைவர்களுக்காக அவர் பரிந்து பேசினார்.

நல்லதோர் சூழ்நிலையில் கூட மன்னிப்பதும், அன்பு காட்டுவதும் பலருக்கு கடினமான விஷயம். ஆனால் இயேசுவோ மிகுந்த துன்ப வேளையில் அவற்றை வாழ்ந்து காட்டினார். இயேசுவால் முடிந்த இந்த விஷயம் நமக்கு முடியுமா? இயேசுவின் மன்னிக்கும் மாண்பை புகழுகின்ற நம்மால் இப்படி பிறரை மன்னிக்க முடியுமா? முடியும். கிறிஸ்துவின் ஆவி நமக்குள் இருந்தால் இதுமுடியும். முடியாததை கிறிஸ்துவின் ஆவியினால் முடியும்படி செய்வதே கிறிஸ்தவம்.

தேவன் போதுமானவர் என்ற விசுவாசமுடையவர்களுக்கு அவர் தருகின்ற நன்மைகள் எதுவும் குறைவானதாயிராது.

சிலுவைகள் ஏன்?

நியா-15:1-20 | **பாடுகள் பெருகுகிறது போல ஆறுதலும் பெருகுகிறது... 11 கொரிந்தியர் 1:5** | 11 கொரி-1:1-11

நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதாலோ, கிறிஸ்தவ பக்தியில் வாழ்வதாலோ நமக்கு முன்பாக வருகின்ற பாடுகளையெல்லாம் கிறிஸ்து நமக்காக தந்த சிலுவைகள் என்று எண்ணிவிடக் கூடாது. அரசு அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் ஒரு கிறிஸ்தவரை, அந்த அலுவலகத்தில் உள்ள யாவரும் வெறுத்து, அவருக்கு எதிராக பல காரியங்களைச் செய்தனர். நான் கிறிஸ்தவராயிருக்கின்ற ஒரே காரணத்தினால் என்னை இங்கே எல்லாரும் வெறுத்து, எனக்குப் பல கஷ்டங்களைத் தருகிறார்கள் என்று அவர் புலம்பினார். ஆனால் அதே அலுவலகத்தை சேர்ந்த ஒருவர் அவரைக் குறித்துக் கூறும்போது, அவர் கிறிஸ்தவராயிருப்பதினால் இங்கு யாரும் அவரை வெறுப்பதில்லை. ஆனால் ஒரு கிறிஸ்தவர் போயும், போயும் இப்படி நடந்து கொள்கிறாரே என்ற வருத்தம்தான் அவருக்கு இங்கே வெறுப்பை சம்பாதித்துக் கொடுக்கிறது என்றார்.

சிலர் கிறிஸ்தவர்களாயிருப்பதினால் அவர்களுக்கு சிலுவைகள் வரவில்லை. கிறிஸ்தவர்களாயிருந்தும் கிறிஸ்தவப் பண்பற்ற வாழ்க்கை முறையின் விளைவாகவே, அவர்கள் பல சிலுவைகளைச் சுமக்க நேரிடுகிறது. அவைகள் ஆண்டவர் அவர்களுக்காக கொண்டு வந்தவை அல்ல. ஆண்டவருடைய ஐக்கியமின்மையினாலும், ஆண்டவருக்கேற்ற குணாதிசய நிலைகள் இல்லாமையினாலும், அவர்களே ஏற்படுத்திக்கொண்ட சிலுவைகளே அவை. எனவேதான் அங்கே நம்பிக்கையுணர்வோ பரிசுத்த சந்தோஷ உணர்வோ இல்லை.

அநேகர் தங்களின் தவறான மனநிலைகளினாலும், குணாதிசயக் குறைபாடுகளினாலும், கடின இருதயத்தினாலும், பிறருடைய வெறுப்பையும், கசப்பையும், எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொள்கின்றனர். ஆனால் அதனால் உருவாகும் கஷ்டங்களை கர்த்தர் அனுமதித்த சிலுவைகள் என அறிக்கையிடுகின்றனர். இதன் விளைவாகவே அந்த சிலுவைகள் நீங்க வழியின்றிப் போகிறது. ஏனென்றால் அவர்கள் தங்களின் தவறான அணுகுமுறைகளாலும், பண்பு நிலைகளாலும்தான் அவ்விதப் பாடுகளைச் சந்திக்க நேரிட்டது என்று உணராமல் போகிறார்கள். எனவே தேவன் அவர்களுக்கு உதவி செய்ய முடியவில்லை. கிறிஸ்துவினால் அனுமதிக்கப்பட்ட பாடுகள் என்றால், அங்கே கிறிஸ்துவினால் வரும் நம்பிக்கையும், ஆறுதலும், சமாதானமும் நிச்சயமாய் இருக்கும் என்பதை நாம் அறியவேண்டும். நம்முடைய பாடுகள் தேவனைக் குறித்த அதிருப்தி உணர்வையும், வருத்த உணர்வையும் ஏற்படுத்தியிருந்தால், அங்கே அந்தப் பாடுகள் சிலுவைகளாக நமக்கு அனுமதிக்கப்பட்டவை அல்ல என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

பாடுகள் உன்னை புண்படுத்தும் போதுதான்
பண்புகளால் உன் மனம் பக்குவமடைகிறது.

நீங்களும் தரிசிக்கலாம்

மத்தேயு 28:1-20 | **அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்... அப்போஸ்தலர் – 1 : 3** | அப்போஸ்தலர் 1:1-14

இயேசு உயிரோடெழுந்தார் என்ற செய்தி சீடர்கள் வாயிலாகக் காட்டுத் தீ போல பரவிய வேளையில் அநேகர் அவர் மெய்யாகவே உயிரோடெழுந்திருப்பார் என்று நம்பியிருக்கக் கூடும். ஆனாலும் அவர்கள் யாவரும் அவரை உயிரோடெழுந்தவராகக் காணவில்லை. அவரைக் கண்டவர்கள் இயேசுவின் சீடர்கள் மட்டுமே. மிகவும் நேசிக்கப்பட்ட ஒருவர் மரித்துப் போனபின், மறுபடியும் உயிரோடெழுந்து வந்தால் அவரைக் காண்பவர்கள் எப்படி ஆனந்தம் அடைவார்கள் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அவ்விதம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு, உயிரோடெழுந்து வந்த இயேசுவைப் பார்த்து, ஆனந்தக் கூத்தாடினவர்கள் இயேசுவின் சீடர்கள் மட்டுமே.

ஏனென்றால் இயேசு தம்மை உயிரோடெழுந்தவராகக் காண்பித்தது தம்மை விரும்பியவர்களுக்கும், தம்மை நம்பியவர்களுக்கும் அல்ல. தம்மைப் பின்பற்றி வாழ்ந்தவர்களுக்கே அவர் தம்மை வெளிப்படுத்தினார். அவர்கள் தான் மகிழ்ந்தார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையின் முக்கியஅனுபவம் எது தெரியுமா? ஒருவரை உண்மையான கிறிஸ்தவராக்குவது எது தெரியுமா? ஒருவருடைய வாழ்க்கையை மாற்றுவது எது தெரியுமா! இயேசுவை ஏற்றுக்கொண்டதல்ல. இயேசுவை விசுவாசித்தது அல்ல. இயேசுவை ஆராதித்தது அல்ல. இயேசுவின் போதனைகளைக் கடைப்பிடித்தது அல்ல. உயிரோடெழுந்த இயேசுவை அவருக்குள் தரிசிப்பதும், காண்பதுமே முக்கிய அனுபவமும், அவரை மாற்றும் அனுபவமுமாக இருக்கிறது.

இதனை எழுதுகிற நான் இயேசுவை ஒரு கனவிலோ, தரிசனத்திலோ ஒரு போதும் கண்டதில்லை. ஆனால் இந்த உலகத்தில் வேறெதையும் விட, எனக்குள் இயேசுவை நான் அதிக உறுதியுடன் உணர்ந்திருக்கிறேன். அது ஒரு நடந்து முடிந்த சம்பவம் அல்ல. அது ஒரு தொடர் நிகழ்வு. என் ஆத்துமாவில், என் ஆவியில், என் உணர்வில், என் உள்ளத்தில் நான் இயேசுவை அறிந்து, உணர்ந்து, அனுபவித்து நிச்சயித்ததின் விளைவுதான் என் ஊழியம். ஏனென்றால் இயேசு தம்மை எனக்குள் நான் தரிசிக்கவும், அறியவும் செய்தார்.

இந்த இயேசுவைக் காணும் அனுபவம் இல்லாமல் நாம் உயிருள்ள கிறிஸ்தவ அனுபவமுடையவர்களாக வாழ முடியாது. அவரைப் பின்பற்றுகிறவன் அவரைக் காண்கின்றான். அவரைக் கண்டவன் அவரை உத்தமமாய்ப் பின்பற்றுகிறான். உயிர்தெழுதலின் பண்டிகையை இன்று கொண்டாடுகிறோம். இந்தக் கொண்டாட்டம் ஒரு சரித்திர நிகழ்வைக் குறித்த அறிவினால் மட்டும் அல்ல, நமக்குள் அவரை உயிரோடெழுந்தவராகக் காணும் அனுபவத்தோடும் கொண்டாடப்பட வேண்டும். அது எளியது. நீங்கள் அவரைப் பின்பற்றி வாழ உங்களை அர்ப்பணிக்கும் போது, உங்களுக்குள் அவரை நீங்கள் காண்பீர்கள்.

தனக்குள் இயேசுவைக் காணாதவனின் வாழ்வில்
பிறர் இயேசுவின் மகிமையைக் காண முடியாது.

சோதனையின் நடுவில்

தானியேல் 6:20-28

கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று....
11 தீமோத்தேயு 4:17

11 தீமோத்தேயு 4:14-22

தேவன் தம்மை உண்மையாய் விசுவாசிக்கின்றவர்களுக்கு எதிராக, விரோத மனப்பான்மையுடையவர்கள் செய்கின்ற எல்லா காரியங்களையும் தடுத்து விடுவதில்லை. அவர்களை அவர்கள் போக்கில் செயல்பட அனுமதிக் கின்றார். ஆனால் அந்த சந்தர்ப்பங்களில் தம்மை விசுவாசிப்பவர்களின் வழியாக, தம்முடைய மகிமையை வெளிப்படச் செய்கின்றார்.

ஆம். சோதனையான கால கட்டங்களில்தான் தேவன் நம்மோடிருப்பதை அவர் பிறர் அறியச் செய்கின்றார். கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்று நமக்கு மட்டுமே தெரிந்திருந்த உண்மை, இப்போது ஏதாவது ஒரு வடிவத்தில் நம்மை எதிர்ப்பவர்களுக்கும் தெரியும்படியான வாய்ப்பு ஏற்படுகிறது.

யோசேப்பின் சுகமான காலங்களில், கர்த்தர் அவனோடிருந்தது அவனுக்கு மட்டுமே தெரிந்த உண்மையாயிருந்தது. ஆனால் அந்நிய நாட்டில் அடிமை யாகிப் போன நிலையில்தான், தேவன் அவனோடிருந்ததை நாம் அறியும் நிலை ஏற்பட்டது. (ஆதி-39:2)

தானியேலோடு தேவன் இருந்தார். ஆயினும் சிங்கக்கெபிக்குள் போடப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் தேவன் அவனோடிருந்த உண்மை மறுக்க முடியாத அளவிற்கு எல்லோருக்கும் தெரிய வந்தது.

பிரச்சினைகள் இல்லாத ஒரு நிலையைத்தான் தேவன் நம்மோடிருப் பதற்கான அடையாளமாகப் பலரும் எண்ணுவதுண்டு. ஆனால் பெரும்பாலும் சோதனையான நேரங்களில்தான் தேவன் நம்மோடிருப்பதைப் பலர் நடுவில் அடையாளப்படுத்துகின்றார். சிங்கம் வந்ததும், கரடி வந்ததும் ஒரு ஆபத்தான நேரம்தான். ஆயினும் அந்தச் சோதனையான வேளைகள்தான் கர்த்தர் தாவீதோடு இருப்பதை மிக அழுத்தமாக உறுதிப்படுத்தும் நேரங்களாக மாறின.

சோதனைகளும், கஷ்டங்களும் நாம் விரும்பாதவைகள் என்றாலும், அவை நம்மோடிருக்கும் கர்த்தரை மிக நெருக்கமானவராக நாம் காணச் செய்கிறது. நாம் தனித்திருக்கவில்லை, தேவனோடிருக்கிறோம் என்பதைப் பிறர் காணும் படியாகச் செய்யச் சோதனைகள் காரணமாயிருப்பதால், அவைகளும் ஒரு விதத்தில் நன்மையாகவே மாறுகின்றன. ஆம். சோதனைகளின் இருளையல்ல. அதன் நடுவில் நமக்காகப் பிரகாசிக்கும் தேவனையே நோக்கிப் பார்ப்போம்.

அமைதியான நேரத்தில் ஆழ்ந்து சிந்தி. குழப்பமான நேரங்களில் நிதானமாய்ச் சிந்திக்கும் தெளிவு அதனால் வரும்.

துன்பங்களின் காரணம்

ஜீவ நீரோடை

ஆகாய் 1:1-15

உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள்
ஆகாய்-1:7

1 யோவான் 1:1-10

மோட்டர் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவர் திடீரென்று தூசி கண்ணில் விழுந்ததை உணர்ந்தார். அது கண்ணை உறுத்தியதால் கைக் குட்டையால் கண்ணைத் துடைத்து தூசியை எடுக்க முயற்சித்தார். ஆனால் தூசியும் சிக்கவில்லை. உறுத்தலும் நிற்கவில்லை. சமாளித்துக் கொண்டு வீட்டிற்கு வந்த அவர், வீட்டிலுள்ள மனைவி பிள்ளைகள் ஒவ்வொருவராய் அழைத்து, தூசியை எடுக்கச் சொன்னார். யாருடைய கண்களுக்கும் தூசி தெரியவுமில்லை. அதை எடுக்கவும் முடியவில்லை. இறுதியில் கண் டாக்கடரிடம் சென்றார். அவர் கண்ணைப் பரிசோதித்த போது, தூசி எதுவும் விழவில்லை என்பதும், அது கண்ணில் ஏற்பட்ட ஒருவிதமான அலர்ஜியின் விளைவு என்பதும் தெரியவந்தது.

சில நேரங்களில் ஏதோ ஒன்று நம்மை வருத்தப்படுத்துகின்றது. ஏதோ ஒன்று வாழ்வை விசனப்படுத்துகின்றது. ஏதோ ஒன்று வாழ்வை கண் கலங்கச் செய்கின்றது. அதற்கான காரணங்களை யோசிக்கும் போது, அதற்கு பல விஷயங்களை காரணங்களாகக் காண்கின்றோம். ஆயினும் உண்மையில் அந்த விசனத்திற்கு காரணம் அவை அல்ல. சில மனிதர்களும், சில சூழ்நிலைகளும், நம்முடைய வாழ்வில் நிகழ்ந்த சில நிகழ்வுகளும்தான் துன்பங்களுக்குக் காரணம் போல நமக்குத் தோன்றுவது இயற்கை. ஆயினும் உண்மையான காரணங்கள் அவை அல்ல என்பதை நன்கு சிந்தித்தாலே உணர முடியும்.

இஸ்ரவேல் ஜனங்கள் பல்வேறு விதங்களில் பாதிக்கப்பட்டார்கள். தொடர்ந்து நெருக்கடிகளின் மத்தியிலேயே வாழ்ந்தார்கள். அதனுடைய காரணம் சுற்றிலும் சூழ்ந்திருந்த வலிமை வாய்ந்த பல எதிரி நாடுகளே என்று கூறுவதற்கு நியாயமுண்டு. ஆயினும் வேத வெளிச்சத்தில் பார்க்கும் போது நிஜமான காரணங்கள் வேறு. அவர்கள் தேவனுடைய வழியில் நடக்கவில்லை. அவர்கள் தேவனுடைய கட்டளைகளை மீறி வாழ்ந்தார்கள். தேவனுக்குப் பிரியமாக வாழ்வதற்கு அவர்கள் முதற்கவனம் செலுத்தவில்லை. அவர்கள் இருதய உணர்வுகளின் பாதையில் சென்றதின் விளைவாகவே தேவனுடைய பாதுகாப்பையும், பராமரிப்பையும் அவர்கள் இழந்தார்கள். அதுவே அவர்கள் தோல்விகளின் காரணம். அதுவே அவர்கள் தொடர்ந்து துன்பப்படக் காரணம்.

ஆம். நாம் நமக்குள் சரியாக இல்லாமலிருப்பதே பெரும்பாலான துன்பங்களின் காரணம். நாம் தேவனை மையமாக வைத்து வாழாததும், தேவனுடைய வழிகளில் நடவாததுமே பிரச்சினைகளின் பிரதான காரணம். நாம் நமக்குள் சரியாக இருக்க, தேவ கிருபையை நாடினால், காரணம் தெரியாத கஷ்டங்கள் பல பறந்து போய்விடும்.

பரீட்சைகள் உன்னை அழித்து விடாது. ஆனால்
உன்னை யார் என்று அடையாளம் காண்பித்து விடும்.

ஏப்ரல் 8

பிரிக்க இயலாதது

தானியேல் 6:6-28

அவனோ, முழங்காற்படியிட்டு...
அப்போஸ்தலர் 7:60

அப்போஸ்தலர் 7:51-60

இயேசு கிறிஸ்து கை கால்கள் ஆணி அடிக்கப்பட்டவராய், உடலெல்லாம் கடுமையாக காயப்படுத்தப்பட்டவராக, சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார். ஆனால் தாங்கொணா வேதனையிலும் ஜெபித்துக் கொண்டே அவர் உயிரைவிட்டார். உடலெல்லாம் கற்களால் காயப்படுத்தப்பட்டு மரணத்தின் வாயிலை நெருங்கிக் கொண்டிருந்தான் ஸ்தேவான். ஆனாலும் முழங்காற்படியிட்டு ஜெபித்துக்கொண்டே அவன் மரித்தான்.

உண்மையான தேவனுடைய பிள்ளைகளுடைய ஓர் ஒப்பற்ற அடையாளம், அவர்களை விட்டுப் பிரிக்க முடியாத ஜெப அனுபவம்தான். எத்தனை பாடுகள் அவர்களைச் சூழ்ந்து கொண்டாலும், எத்தனை சோதனைகள் அவர்களை நெருக்கினாலும், அவர்களை விட்டு ஜெபிக்கிற அனுபவத்தை பிரிக்கவே முடியாது. அதுதான் அவர்கள் தேவனால் பிறந்து, தேவனுடைய ஆவியைப் பெற்ற பிள்ளைகள் என்பதின் நிச்சயமான ஒரு அடையாளம்.

கெர்ஜிக்கும் அனேகம் சிங்கங்களுக்கு நடுவில் விழுந்து சாகப் போகிறாயா? அல்லது உன்னுடைய ஜெப அனுபவத்தை விட்டு விலகி சுகமாக வாழப் போகிறாயா? என்ற கேள்விகள் தானியேலுக்கு முன்பாக வந்தது. ஆனால் தானியேலோ சிங்கத்தின் கெபிக்கு போக முடிவு செய்தான். பயங்கரமான அந்த சூழ்நிலைகூட அவனுடைய ஜெபப் பழக்கத்தை அவனை விட்டுப் பிரிக்க இயலவில்லை. ஏனென்றால் அவனுக்குள் தேவனுடைய ஆவி இருந்தது. அவன் தேவனுக்குரியவன். சோதனைகள், சோர்வுகள், ஏமாற்றங்கள் பெருகும் போது ஜெப ஈடுபாடுகளின் மேல் உள்ள ஆர்வங்கள் சற்று பலமிழக்கும் என்பது உண்மைதான். ஆனாலும் அந்தச் சோர்வினைச் சார்ந்து நில்லாமல், விசுவாசத்தைச் சார்ந்து நின்று, ஜெபத்தில் நம்மை ஈடுபடுத்தும் போது, விசேஷமான ஒரு தெய்வீக வல்லமை நமக்குள் செயல்பட்டு நம்மை பலப்படுத்தும் என்பது உண்மை.

தன்னுடைய துன்பக் காலங்களில் தேவனை நோக்கிப் புலம்பித் தீர்த்தவைகள்தான் தாவீதின் சங்கீதங்கள். சங்கீதங்களை தாவீதின் ஜெபங்கள் என்றாலும் பொருத்தமாகவேயிருக்கும். வாழ்க்கையின் துயர் மிகு நிலைகளில், தன் மனதில் இருந்த உணர்வுகள் யாவற்றையும் தேவனுடைய பாதத்தில் கொட்டித் தீர்க்கும் பழக்கம் அவனுக்கிருந்ததால்தான், அவன் எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவனால் ஆறுதலையும், சமாதானத்தையும், தைரியத்தையும் பெற்று வெற்றியாக நிற்க முடிந்தது.

சிலரால் மனிதர்களோடு தங்கள் கஷ்டங்களை பல மணி நேரம் பேச முடியும் ஆனால் தேவனிடமோ அவைகளை சில நிமிடங்கள் கூடச் சொல்ல இயலாது. ஏனென்றால் மனிதர்களோடு உறவு இருக்கிறது. தேவனோடே உறவு இல்லை. எனவே பேச இயலவில்லை. இறை உறவு இல்லாமை அல்லது இறை உறவின் குறைவுதான் ஜெபிக்க இயலாமையின் முக்கியக் காரணம்

இறைவனின் நேசத்தை இழப்பது நிரந்தர நஷ்டம். இறைவனுக்காக பிறரின் நேசத்தை இழப்பது தற்காலிகக் கஷ்டம்.

நல்ல இருதயம் வேண்டும்

எசேக்கியல் 11:14–25

அவர்களுக்கு ஏக இருதயத்தைத் தந்து
எசேக்கியல்–11:19

பிலிப்பியர் 2:1–16

நம்மைக் குறிப்பிட்ட விதமாகச் செயல்படத் தூண்டுவதும், குறிப்பிட்ட விதமாக நடந்து கொள்ள வைப்பதும் நம்முடைய இருதயமே. குறிப்பிட்ட விதமாகச் சிந்திக்கவும், யோசிக்கவும், உணரவும், விருப்பங்கொள்ளவும் நம்மை ஏவுவது இருதயமே. நம்முடைய எல்லா நடவடிக்கைகளையும் குறிப்பிட்ட விதமாக இருக்கச் செய்வது இருதயம் என்னப்படும் உள்ளான ஓர் இயக்கமே. எனவே நம்முடைய இருதயம் எப்படிப்பட்ட தன்மையோடு இருக்கின்றதோ, அதற்கேற்பவே அதனுடைய இயக்கங்களும் இருக்கும். நம்முடைய இருதயம் சரியான விதமாகச் செயல்படுவதற்கு ஏற்றபடியாக இல்லாவிட்டால், நாம் எவ்வளவுதான் கற்றாலும், அறிந்தாலும், நாம் பண்பட்டவர்களாகச் செயல்பட முடியாது.

எந்த ஒரு மனிதனாயினும் சரி, அந்த மனிதனுக்குள் இருக்கும் இயற்கையான இருதயம் கேடானதும், சரியாகச் செயல்பட இயலாததுமே. எனவேதான் மனிதனிடம் இயற்கையாகவே தவறான செயல்களும், மோசமான குணங்களும், கேடான சிந்தனைகளும், பொல்லாத ஆசைகளும் தோன்றுகின்றன.

அவன் அறிவாளியாக மாறலாம். ஆன்மீகவாதியாக மாறலாம். அறநெறிகள் கற்றுணர்ந்த ஞானி ஆகலாம். ஆயினும் அவற்றால் இருதயத்தின் தன்மையில் பெரிய மாற்றங்கள் இராது. எனவேதான் சிலர் எவ்வளவுதான் போதனை கேட்டாலும், வாழும் விதமோ விரும்பத்தகாததாக உள்ளது. சிலர் எவ்வளவுதான் பிறருக்குப் போதிக்கும் திறன் கொண்டிருந்தாலும், தங்களிலோ எந்த நல்ல மாற்றத்தையும் காண்பதில்லை. உள்ளான இருதயம் சரிசெய்யப்படாத வரையிலும், வாழ்க்கை முறைகளில் பிரகாசமான மாற்றங்களைக் காண்பது கடினம்.

கிறிஸ்தவம் மனிதனுக்குத் தருகின்ற மிகப்பெரிய கொடை என்னவென்றால், அவன் தேவனால் நல்லதோர் இருதயத்தைப் பெறுகின்ற வாய்ப்பே ஆகும். தேவனிடத்திலிருந்து பெற்று அனுபவிக்கப் பல நன்மைகள் இருக்கலாம். ஆயினும் அவர் நமக்கு மிக முக்கியமாக முதலாவது தர விரும்புவது, ஒரு நல்ல இருதயமே. ஆண்டவராகிய இயேசுவால் நாம் பெறுகின்ற இந்தப் புதியதோர் இருதயம்தான் நம்முடைய வாழ்க்கையை மாற்றுகின்றது. அதனுடைய விளைவே நற்சுபாவங்கள். அதனுடைய விளைவே அமைதியும், ஆனந்தமும் பரிசுத்தமும் நிறைந்த ஓர் மேன்மையான வாழ்க்கை.

உன் வேத அறிவை உலகம் பாராட்டும். வேதத்திற்கேற்ற வாழ்க்கையைத்தான் இறைவன் பாராட்டுகிறார்.

ஜீவ நீரோடை

உள்ளே கிரியை

எசேக்கியல் 11:17-25

உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர்...
பிலிப்பியர் 1:5

பிலிப்பியர் 1:1-11

நீண்ட காலமாக என் கண்கள் எனக்கு வெளியே உள்ள சூழ்நிலைகளையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. குடும்ப சூழ்நிலை, கடன் சுமை, தொழிலில் தோல்வி, வாழ வழி தெரியாத நிலை, பிறர் முன் குன்றிப்போன நிலைமை, எதிர் காலம், பிரச்சினைகள் ஆகியவற்றைக் குறித்தே நான் அதிகமாகக் கவலையுற்று, பாரத்தோடு இரவும் பகலும் ஜெபித்தேன். என்னைச் சுற்றியுள்ள வேதனையான சூழ்நிலைகளை மாற்றும்படி கெஞ்சினேன்.

ஒரு கால கட்டத்தில் “உனக்கு வெளியே உள்ளவைகளுக்காக இரவும், பகலும் ஜெபிக்கிறாய். உனக்கு உள்ளே எல்லாம் சரியாயிருக்கிறதா? அங்கே எதையும் செய்ய வேண்டிய தேவை இல்லையா?” என்று ஆண்டவர் கேட்பது போல நான் ஆவியில் உணர்ந்தேன். நானோ வெளியே உடனேயே சூழ்நிலை மாறவேண்டும் என்று வாஞ்சித்தேன். தேவனோ முதலில் எனக்கு உள்ளே போதிய மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதில் அதிகக் கரிசனையாயிருந்தார். எனக்கு உள்ளே உள்ளவைகளைக் குறித்து நான் அதிகமாகச் சிந்திக்கவும், உணரவும் தக்கதாகவே ஆண்டவரின் ஏவுதல்களும், வேதவசன வழியான வழிநடத்துதல்களும் இருந்தது.

“ஆண்டவரே என்னை ஏற்றுக்கொள்ளும்” என்று நான் கெஞ்சிய நாளிலே கர்த்தர் ஒரு நிமிடம் கூடத் தாமதம் செய்யாமல் என்னை அப்படியே ஏற்றுக் கொண்டார். ஆனால் என்னைப் பரிசுத்தமாக்கி அவர் விரும்பும் வடிவத்தில் கொண்டு வரவோ என் வாழ்க்கையின் பெரும்பகுதியை எடுத்துக்கொண்டார். இன்னும் அது தொடர்ந்து கொண்டேதானிருக்கிறது. இந்தக் காலங்களிலெல் லாம் நான் கற்றுணர்ந்து நிச்சயித்த ஒரு பாடம், கர்த்தர் எனக்கு வெளியே உள்ளவைகளை விட, எனக்கு உள்ளே உள்ளவைகளைக் குறித்தே அதிகக் கவனமாயிருக்கிறார் என்பதாகும். ஆனால் அவர் உள்ளே சரி செய்யச் செய்ய, வெளியில் ஆச்சரியமான திருப்பங்களும், மாற்றங்களும் நிகழ்கின்றன.

ஏனென்றால் உள்நிலை போதுமான அளவு சரியாகாதவரை, வெளி யில் எவ்வளவுதான் விஷயங்கள் சரிசெய்யப்பட்டாலும், நல்ல பலன்கள் வராது. சாலொமோனுக்கும் வெளியே எல்லாம் அமைதியும், செழிப்பும், நிறைவுமாகயிருந்தது. ஆனால் அவனுக்குள்ளேயோ பெரும் போராட்டம். உள்நிலை சரியில்லாதவனுக்குக் கிடைத்த வெளிப்புற ஆசீர்வாத நிறைவுகள் இறுதியில் மனசஞ்சலத்திற்கே வழிவகுத்தன. நம்முடைய மனநிலைகள் மாறவேண்டும். குணநிலைகள் மாறவேண்டும். உணர்வுகளின் தன்மைகள் மாறவேண்டும். நினைவுகளின் தோற்றங்கள் மாற வேண்டும். எண்ணங்களும், சிந்தனைகளும் மாறவேண்டும். இல்லையேல் உள்ளத்தில் போராட்டம் ஓயாது.

அகத்தில் சரியாக இருக்க விரும்பிச் செயல்படுகிறவன் புறத்தில் சரியற்றவனாகத் தோன்ற முடியாது.

குப்பைக் கூடையில்

ஓசியா 8:1-14

இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் – யோவான் 6:60

யோவான் 6:48-71

ஒருவர் புத்தகங்களை வாசிப்பதில் அதிக ஈடுபாடு உடையவர். பல்வேறு சிறந்த புத்தகாசிரியர்களின் புத்தகங்களால் அவருடைய அலமாரிகள் நிறைந்திருக்கும். அவரிடம் இரவலாக புத்தகம் வாங்கிப் படிக்கும் பழக்கமுடைய நண்பர் ஒருவர் உண்டு. ஒருநாள் ஏதாவது புத்தகம் இரவலாக வாங்கிப் படிக்க விரும்பி அவரிடம் வந்தார். அங்கே. ஆகாத குப்பைகளை போடும் குப்பைப் பெட்டியில், ஒரு புத்தகம் கிடப்பதைப் பார்த்தார். ஏன் இந்தப் புத்தகத்தை குப்பைப்பெட்டியில் போட்டு விட்டீர்கள் என்று கேட்டார். அதற்கு அந்த அறிவுத்திறன் மிக்க புத்தகப் பிரியர் நல்ல கருத்துக்கள் இல்லாத புத்தகத்தை அலமாரியில் வைக்கும் பழக்கம் எனக்கு இல்லை என்றார். சரி எதற்கும் நான் இதை எடுத்துச் சென்று படித்துப் பார்க்கின்றேன் என்று கூறி அவர் அதை எடுத்துச் சென்றார்.

ஒரு நாள் இந்த புத்தகப் பிரியர் அந்த நண்பர் வீட்டிற்குச் சென்றார். அங்கே தான் குப்பைப் பெட்டியில் போட்ட புத்தகம் அலமாரியில் அழகாக வைக்கப் பட்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். இதை ஏன் அலமாரியில் வைத்திருக்கின்றாய் என்று கேட்டார். அதற்கு அவர் நான் உங்களிடமிருந்து வாங்கிய புத்தகங்களிலேயே மிகச் சிறந்த புத்தகம் இதுதான். இது என் வாழ்க்கையை மாற்றிவிட்டது என்றார்.

ஆம். சில நேரங்களில் சிலருடைய அலமாரிகளுக்கு தகுதியற்றதாக எண்ணப்படுகின்றவை, வேறு சிலருடைய அதி மேன்மைக்குரிய இடங்களை பிடித்து விடுகிறது. சிலரால் அற்பமாய் எண்ணப்படுகின்றவை, வேறு சிலரால் தலையில் வைத்து சுமக்கப்படுகிறது. ஒரு முறை நான் எழுதிய புத்தகத்தை படித்து விட்டு அறிவுமிக்க கிறிஸ்தவ இலக்கிய மேதை ஒருவர் இது ஒரு சாக்கடை. இனி இதை எனக்கு அனுப்பாதே என்றார். இன்னொரு பிரபல பாஸ்டர் இது ஜீவநீரோடை அல்ல, இது மரண நீரோடை என்று சபை மக்களுக்கு விளம்பரம் செய்தார். ஆயினும் ஆயிரக்கணக்கானவர்கள் மிகுந்த விருப்பத்துடன் தேவனால் கிடைக்கப்பெற்ற ஒரு நல்ல ஆசீர்வாதமாக இதனை எண்ணுகின்றார்கள் என்பது உண்மை

ஒரு சிலர், சிலவற்றின் உண்மையான மேன்மைகளைக் காணும் கண்களை உடையவர்கள் அல்ல. சில நேரங்களில், தேவன் அற்பமானவைகளாக எண்ணப்படுகின்றவைகளைத்தான், அநேகருக்கு ஆசீர்வாதமாக்குகின்றார். இது கடின உபதேசம், இதை யார் கேட்பார்கள் என்று கூறி ஆயிரக்கணக்கானவர் இயேசுவின் போதனைகளை அலட்சியப்படுத்தி சென்றனர். ஆனால் உண்மை உணர்ந்த பேதுருவோ, நித்திய ஜீவ வார்த்தைகளாக அவற்றைப் பார்த்து இயேசுவையே பற்றிக் கொண்டிருந்தான்.

எந்த ஒன்றையும் அது இருக்கும் இடத்தின் அடிப்படையில் யோசிக்காதே. அதற்குள் இருப்பது என்ன என்பதை பார்.

ஏப்ரல் 12

தவறைக் உணர்த்து

கலாத்தியர் 2:11-21

நீ அவனை எச்சரிக்காதபடியினாலே, அவன் தன் பாவத்தினாலே சாவான்... எசேக்கியேல் 3:20

எசேக்கியேல் 3:17-27

இன்னொருவரோடு கொண்டுள்ள நல்ல நட்பும், ஐக்கியமும் நஷ்டமாகிப் போகாதிருக்கும்படி, அவர்களிடம் காணப்படும் சில குறைகளையும், தவறுகளையும் பொறுத்துக் கொள்வது அவசியமானதே. அதே வேளையில் இன்னொருவர் மேல் நமக்கு உண்மையான அன்பும், கரிசனையும் இருந்தால், அவர்களிடமுள்ள குற்றங்களையும், தவறுகளையும் கண்டு கொள்ளாமல் போவது நல்ல பண்பல்ல.

நம்மைத் தவறாக நினைத்துவிடக் கூடாது என்பதற்காகவும், வீணான மனத்தாங்கல் ஏற்படக் கூடாது என்பதற்காகவும், மற்றவர்களின் தவறுகளையும் குற்றங்களையும் பெரிதாக எண்ணாமல் போவது, அவர்களுக்கு வரப்போகும் தீங்குகளை நாம் தடுக்க விரும்பாத ஒரு செயலாகும்.

தாவீதின் மனம் புண்படக் கூடாது என நாத்தான் தீர்க்கதரிசி நினைத்திருந்தால், தாவீது ஒரு பெரிய பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டுக் கண்ணீர்விட வாய்ப்பில்லாமல் போயிருக்கும். பேதுரு மாய்மாலமாக நடந்து கொள்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோது, பவுல் அதனை எதிர்க்காதிருந்திருந்தால், பேதுரு தன்னுடைய தவறை உணர வாய்ப்பு கிடைக்காமல் போயிருக்கும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களை மிகுதியாக நேசித்த அதே வேளையில், அவர்களிடம் தவறான காரியங்களை காண நேரிட்ட வேளையிலெல்லாம், அதனைச் சுட்டிக்காட்டி கண்டிக்க தவறவில்லை. ஏனென்றால் அவர்களின் நலனில் அவர் அதிக அக்கறையாயிருந்தார்.

நண்பர்கள் மட்டும், தவறை துவக்கத்திலேயே சுட்டிக்காட்டியிருந்தால். எத்தனையோ பேர் கொடிய தவறுகளில் விழுந்து பழுதடையாமல் தடுக்கப்பட்டிருக்க முடியும், எத்தனையோ தேவ ஊழியர்கள் மிகப்பெரிய குற்றங்களுக்குள் விழ நேர்ந்தது, எப்படி? அவர்களோடிருந்தவர்களும், அவர்களுக்கு நன்கு தெரிந்தவர்களும் துவக்க நிலையிலிருந்தே அவர்களுடைய தவறுகளை அறிந்திருந்தும், அதனைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டதால்தான் என்பது உண்மை.

தவறுகளையும், பாவங்களையும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளாமல் எச்சரிப்பது என்பது, தேவனை அறிந்த ஒவ்வொருவரின் கடமையாகும். தவறுகளை எச்சரிக்காததின் விளைவாக ஒருவருக்கு கேடு நேரிட்டால் அந்த இரத்தப்பழி நம்மேல் இருக்கும். இது தேவனுடைய நீதி (எசேக்-3:18) உங்கள் தவறுகளை, குறைவுகளை, குற்றங்களை துவக்கத்திலேயே கண்டித்தவர்களுக்காக நன்றி சொல்லுங்கள். அவர்கள் உங்களை பெரிய தீங்கில் விழ விடாமல் தடுத்திருக்கிறார்கள். உங்கள் தவறுகளை எளிதாக எடுத்துக் கொள்கிற உங்கள் நண்பர்கள் விஷயத்தில் எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் உங்களுக்கு நல்லதைச் செய்யத் தவறியிருக்கிறார்கள்.

உண்மையற்றவர்களின் புகழோசைகள் சாத்தான் உன்னை வீழ்த்த உபயோகிக்கும் ஆயுதங்கள்.

ஜீவ நீரோடை

நேரடியாக

11 சாமுவேல் 12:1-14 | நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன் கலாத்தியர் 2:11 | கலாத்தியர் 2:6-21

என்னையும் என்னுடைய ஊழியங்களையும் நேசிக்கின்றவர்கள் என்ற வட்டத்தில் சிலர் உள்ளனர். அவர்களில் சிலருடன் நான் உரையாட நேரிடும் போது, நான் பேசின எழுதிய சில கருத்துக்களைக் குறித்து, சிலர் இப்படியெல் லாம் சொல்கின்றார்களே என்று அவர்கள் என்னிடம் கூறுவதுண்டு. யாரோ என்னையும், என்னுடைய ஊழியங்களையும் விமர்சிக்கின்றார்கள் என்று நான் நினைக்க வேண்டும் என்பது அவர்களின் எண்ணம். ஆனால் உண்மையில் யாரோ சொன்னதாகக் கூறியது. வேறு யாரும் அல்ல அவர்களேதான், தங்களுக் குள் எழுந்த எண்ணங்களை, கருத்துக்களை, விமர்சனங்களை யாரோ ஒருவரு டைய பெயரில் சொல்வது அவர்களின் பழக்கம். தங்களின் அதிருப்தியை, விமர் சனத்தை, கருத்தை வேறு யாரோ ஒருவருடைய பெயரில் மறைமுகமாகச் சொல் வது சரியான வழி அல்ல.

ஒருவர் மேல் நமக்கொரு எதிர் கருத்தும், மாறுப்பட்ட அபிப்பிராயமும் இருந்தால் அதனை நேரடியாகச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். எரிச்சலை, கோபத்தை, அதிருப்தியை, கருத்தை "யாரோ சிலர் சொல்வதாகச் சொல்வது நேர்மையல்ல". சிலர் சில கருத்துக்களில் அவர்களோடு உடன்பாடு இல்லாவிட்டால் அதனைச் சகிக்க மாட்டார்கள்.

பேதுருவின் மேல் பவுலுக்கு ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஆனால் சிலர் இப்படிச் சொல்வதாக அவன் கூறாமல், நேரடியாக அதைக் கேட்டான். அதனால் தான் வெறுக்கப்பட்டாலும் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்தான். அன்றைய மதத்தலைவர்களின் மாய்மாலங்களை இயேசு நேரடியாகக் கண்டித் தார். யாரோ ஒருவருடைய பெயரில் கருத்துச் சொல்லுகின்றவர்களும், எழுதியது யார் என்று குறிப்பிடாமல் கடிதங்கள் எழுதுகின்றவர்களும் நேர்மையானவர்கள் அல்ல. அவர்கள் வித்தியாசமான ஒரு வழியில் தங்களின் கோபங்களையும், எரிச்சல்களையும் வெளிப்படுத்துகின்றவர்கள்.

தாவீதின் பாவத்தை நாத்தான் நேரடியாகச் சுட்டிக்காட்டினான். ஆம், நாம் சொல்ல விரும்பியதை நம்முடைய பெயரிலே சொல்ல வேண்டும். இல்லையேல் அவற்றை மனதில் வைத்துச் சிந்தித்துத் தகுதியான முறையில் சுட்டிக்கட்டக் காத்தி ருக்க வேண்டும்.

தவறைப் பிறிரிடம் கண்டால் முதலில் அதுபோன்ற தவறுகள் உன்னிடம் பிறர் காணாதிருக்க விழிப்பாயிரு.

ஜீவ நீரோடை

சிந்தையில் அன்பு

11 சாமுவேல் 1:17-27 | **உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக... ரோமர் 12:9** | ரோமர் 12:6-21

அன்பு என்பதற்கு மூன்று படிகள் உண்டு. ஒருவரை நாம் நேசிக்கிறோம் என்றால் முதலாவது அதற்கொரு சரியான பிறப்பிடம் வேண்டும். பலருடைய அன்பு உதடுகளில்தான் பிறக்கிறது. எனவே அது விரைவில் மடிந்து போய் விடுகிறது. அன்பு இருதயத்தில் பிறக்க வேண்டும். அந்த அன்பை வாயின் வார்த்தைகள் பிரதிபலிக்க வேண்டும். அவ்விதம் பிரதிபலிக்கப்பட்ட அன்பு உரிய அன்பின் செயல்களால் உண்மை என்று உறுதி செய்யப்படவேண்டும்.

இன்னொருவர் மேல் உள்ள அன்பு நிலைத்திருக்க வேண்டுமென்றால், அதற்கு வாயின் வார்த்தையும், செயலும் போதாது. முதலாவது அந்த நபரைக் குறித்த ஒரு நல்ல சித்திரம் உள்ளத்தில் உருவாக வேண்டும். அநேகர் உள்ளத்தில் ஒருவரைக் கசந்து கொண்டே உதடுகளாலும், செயல்களாலும் அன்பை வெளிப்படுத்துவார்கள். இதன் பெயர்தான் மாயையான அன்பு.

அன்பின் செயலுக்கு முன்னால், அன்பின் வார்த்தை வேண்டும். அன்பின் வார்த்தைக்கு முன்னால், அன்பின் சிந்தை வேண்டும். கணவனையோ, மனைவியையோ ஒரு உடன் பணியாளரையோ, ஒரு உறவினரையோ அல்லது யாராவது ஒருவரை நேசிக்க வேண்டிய தேவையை நாம் உணருகிறோம். கர்த்தர் அதை விரும்புகிறார் என்பதற்காகவோ, அவ்விதம் அன்பாக நடந்து கொள்ளுதல் நல்லது என்பதற்காகவோ, அதை நாம் செய்ய விரும்புகிறோம்.

எனவே அன்பாகப் பேசுகிறோம். அவர்களுக்காக ஜெபிக்கின்றோம். அவர்களுக்குச் சில நல்ல செயல்களைச் செய்யவும் விரும்புகிறோம். ஆனாலும் உள்ளத்திலே அவர்களைக் குறித்த சித்திரம் அன்பானது அல்ல. அவர்களைக் குறித்து மனதில் சிந்திக்கும் போது வெறுப்பிற்குரிய, கசப்பிற்குரிய, வருத்தத்திற்குரிய, மோசமான ஒரு சித்திரத்தையே உணர்கிறோம். ஆம். இங்கே வார்த்தையிலும், செயலிலும் அன்பை வெளிப்படுத்தினாலும் அது சிந்தையிலிருந்து தோன்றி வரவில்லை. எனவே இது பிரயோஜனமற்ற ஒரு அன்புகாட்டுதலாக மாறிப் போகும்.

எனவே வாயையும், செயலையும் அன்பிற்காகச் செயல்படுத்தும் அதே வேளையில், அவர்களைக் குறித்த அன்பான தோற்றங்களையும், எண்ணங்களையும், சிந்தைகளையும் உள்ளத்திற்குள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அது நம்முடைய விழிப்புணர்வாலும், வாஞ்சையாலும், தேவனைச் சார்ந்த விசுவாசப் பார்வையாலும் சாத்தியமாகும். உள்ளத்திற்குள் முதலாவது நேசிக்கும் பண்பை கர்த்தரோடு சேர்ந்து உருவாக்க முடியும்.

தன்னிடத்தில் இல்லாததை இன்னொருவருக்கு வாக்களிப்பவனும், இதயத்தில் இல்லாத அன்பை வாயினால் பேசுகிறவனும் பிரயோஜனமற்றவர்கள்.

ஜீவ நீரோடை

கோபம் மட்டுமல்ல

எண்ணாகமம் 20:1-13

நீங்கள் கோபங்கொண்டாலும்...
எபேசியர் 4:26

எபேசியர் 4:17-32

நான் தொடர்ந்து கர்த்தருடைய வார்த்தைகளைப் பிரசங்கித்த ஒரு சிறு கூட்டம் விசுவாசிகள் உண்டு. ஒரு நாள் அவர்களிடம் "இதுவரையிலும் நீங்கள் கேட்ட போதனையினால் உங்களிடம் ஏற்பட்ட மாற்றங்கள் என்னவென்று சொல்ல முடியுமா?" என்று கேட்டேன். சிலர் எழுந்து தங்களிடம் ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்துச் சாட்சியாகச் சொன்னார்கள். அந்த சாட்சிகள் மிக நல்ல சாட்சிகள். ஆனாலும் எனக்குப் பெரிய திருப்தி வரவில்லை. ஏனென்றால் அவர்களில் பலரும் கோபம் என்ற விஷயத்தில் ஏற்பட்ட மாற்றங்களையே அதிகமாகச் சொன்னார்கள். கோபம் என்ற சுபாவம் பல தீமைகளுக்குக் காரணமாயிருப்பது உண்மை. ஆயினும் பெரும்பாலும் கோபம் மட்டுமே பெரிய பாவமாக அநேகரால் அடையாளங் காணப்படுகிறது.

கோபம் என்பது மனிதனுக்கு மிகவும் அவசியமான ஒரு குணமே. கோபம் இல்லாதவன் நல்லது கெட்டதுகளைக் குறித்த உணர்ச்சியற்றுப் போய்விடுவான். ஆனால் கோபம் எல்லைகளைத் தாண்டினால் பலதீமைகளை விளைவாகக் கொடுக்கும்.

சிலர் எளிதாகக் கோபமடையமாட்டார்கள். தங்கள் வாயினாலோ, வார்த்தையினாலோ கோபத்தை வெளிப்படுத்தமாட்டார்கள். ஆனால் அந்தக் கோபத்தை மறைமுகமாக வேறு பல வழிகளில் மௌனமாக வெளிப்படுத்தி, மற்றவர்களை வித்தியாசமான விதங்களில் விசனப்படுத்துவார்கள். கோபம் மட்டுமே பாவம் என எண்ணக் கூடாது. தாழ்மையின்மை பாவம்தான். பண ஆசை பாவம்தான். பொருளாசை பாவம்தான். ஆடம்பரம் பாவம்தான். தீமைக்கு எதிரான சிந்தனை இல்லாமை பாவம்தான். சத்தியத்திற்கு உரிய முக்கியத்துவம் தராமை பாவம்தான். பிறருக்குச் சில உதவிகளைச் செய்யாமை பாவம்தான். கோபப்படாவிட்டாலும் மனதிற்குள் அடக்கி, மௌனமாகக் கசந்து கொண்டிருப்பது பாவம்தான். பிறர் எளிதாகக் கோபமடையும் விதமாகப் பேசுவதும், செயல்படுவதும் பாவம்தான்.

ஆம். கிறிஸ்தவ வாழ்க்கையின் வல்லமையை, கோபத்தை மேற்கொள்வதற்காக மட்டுமே பார்க்கக் கூடாது. கோபத்தினால் கன்மலையை அடித்தான் மோசே. அதை தேவன் விரும்பவில்லை. ஆனால் சாந்த குணத்திற்காகப் பாராட்டப்பட்ட ஒருவனை, கோபமடைய வைத்த இஸ்ரவேல் ஜனங்கள் செய்ததும் பெரிய பாவமே. கோபத்தை மட்டுமே ஆவிக்குரிய வாழ்க்கையின் அளவு கோலாக எண்ணாமல், உண்மை, நேர்மை, நியாயம், மனப்பக்குவம், நன்மை செய்தல் ஆகிய எல்லாப் பக்கங்களையும் பார்க்க வேண்டும்.

வேதமும் தியானமும் உனக்குத் தூரமாயிருந்தால்
பயமும் கவலையும் உன் பக்கத்தில் இருக்கும்.

ஏப்ரல் 16

ஜீவ நீரோடை

அது என்ன?

எரேமியா 8:4-12

நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்... யோவான் 4:22

யோவான் 4:19-26

புண்ணியஸ்தலம் என்று கருதப்படும் ஒரு கோயிலுக்கு ஒரு கூட்டம் யாத்திரிகர்கள் வந்தார்கள். அந்தக் கோயில் இருக்கும் பகுதியில் எப்படி நடந்து கொள்வது என்று அவர்களுக்குத் தெரியாது. எனவே விஷயம் தெரிந்த யாராவது முன்னே செல்லும்போது, தாங்களும் பின்தொடர்ந்து அவ்விதம் செல்லலாம் என்பது பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது ஒருவன் அந்தப் பாதை வழியாகச் சென்றான். எல்லோரும் அவனைப் பின் தொடர்ந்தனர். திடீரென்று அவன் தலையிலிருந்த தொப்பியை கழற்றி முகத்திற்கு முன்பாக அசைத்தான். உடனே அந்தக் கூட்டத்தார் யாவரும் அப்படியே செய்தனர். இன்னும் கொஞ்ச தூரம் போன பின்பு அவன் தன்னுடைய தொப்பியை வீசி எறிந்தான். உடனே அவர்களும் அப்படியே செய்தனர். ஆனால் புழுக்கம் தாங்காமல் காற்றிற்காக அவன் தொப்பியை கழற்றி அசைத்ததும், காற்று வராத கோபத்தால் தொப்பியை வீசி எறிந்ததும் அவர்களுக்குக் தெரியாது.

இன்றும் பல கிறிஸ்தவர்கள் அப்படியே இருக்கிறார்கள். ஆலயத்திற்கு செல்கிறார்கள். ஏன்? எதற்கு? என்று தெரியாது. பெற்றோர்கள் செல்கிறார்கள். மற்றவர்கள் செல்கிறார்கள். அவர்களும் செல்கிறார்கள். அவ்வளவுதான். தி ருவிருந்தில் கலந்து கொள்ளுகிறார்கள். ஆனால் அதனுடைய உண்மை அனுபவம் என்ன? தெரியாது. மற்றவர்கள் செய்வதை அவர்களும் செய்கிறார்கள். ஆனால் அதன் உண்மை அர்த்தம் தெரியவில்லை.

இந்நாட்களில் ஆவிக்குரிய பல செயல்கள், விழிப்புணர்வில்லாமல் இயந்திரத்தனமாகப் பின்பற்றப்படும் சில உயிரற்ற வழிபாட்டுச் சடங்குகளாகவே உள்ளன. சரியான மனந்திரும்புதலுக்கு நேராக வராமல், ஞானஸ்நானம் என்ற சடங்கே தங்களை தேவனுடைய பிள்ளைகளாக்கும் என்று நம்புவோர் எத்தனையோ பேர். கர்த்தரோடும், கர்த்தருடைய வழிகளோடும் எந்த ஐக்கியமும் இல்லாமல், திருவிருந்தின் அப்பமும், ரசமும் தங்களுக்கு தேவ நன்மையைத் தரும் என நினைத்து, அறியாமையோடு செயல்படுவோர் எத்தனையோ பேர். வாழ்க்கையாலும், குணாதிசயங்களாலும், தெய்வீகப் பண்புகளினாலும், அன்பினாலும் தேவ நாமத்திற்கு மகிமையையும், கனத்தையும் சேர்க்க எந்த உணர்வுமில்லாமலே, அநேக துதிகளாலும், ஸ்தோத்திர வார்த்தைகளினாலும், அதிக சத்தங்களினாலும், ஆரவாரங்களாலும் தேவனை மகிமைப்படுத்தி விட்டதாக மூடத்தனமாக நம்புவோர் எத்தனையோ பேர்.

ஆவிக்குரிய விஷயங்கள் ஒவ்வொன்றிற்கும் வலிமையான நியாயங்கள் உண்டு. அவைகளை உணர்ந்து கொள்ளாமலும், அதனால் என்ன ஏற்படுகிறது என்ற விழிப்புணர்வு இல்லாமலும் நாம் செயல்பட்டால், அவை வெறும் வழிபாட்டுச் சடங்காக இருக்குமேயன்றி, அவைகளால் நமக்கு எந்த நன்மையும் இல்லை.

இறைவழியில் நடக்காதவனின் இறைவழிபாடுகளுக்கும் இறைவனுக்கும் சம்பந்தமில்லை.

ஜீவ நீரோடை

தேவனின் பாராட்டு

யோசுவா 14:6-15

உத்தமமும், உண்மையும் உள்ள ஊழியக்காரனே – மத்தேயு 25:21

மத்தேயு 25:14-30

கல்வியில் மிக உயர்ந்த சாதனைகளைப் படைத்த ஒருவர், தன்னுடைய சாதனைகளுக்குத் தூண்டு விசையாக இருந்ததெல்லாம், தன்னுடைய தந்தையின் பாராட்டுதல்கள்தான் என்றாராம். சின்ன வயதிலிருந்தே தந்தையின் பாராட்டைப் பெறுவது என்பது அவருக்கு வேறெல்லாவற்றையும் விட மிகப் பிரிய மான விஷயமாயிருந்ததாம்.

ஆவிக்குரிய வாழ்க்கையில் இன்னும் இன்னும் அதிக ஆழமாகச் செல்லத் தூண்டுவது எது என்று யோசித்தேன். இன்னும் இன்னும் மிகமிக நல்லதோர் வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற ஆசை எப்படி வரும் என்று சிந்தித்தேன். வெறும் பக்தி ஆர்வம் அதற்குப் போதாது என்றும், மனிதர்களின் நற்சாட்சியைப் பெற வேண்டும் என்ற ஆசையும் போதாது என்றும் கண்டுணர்ந் தேன். தேவனுடைய பாராட்டைப் பெற வேண்டும், தேவனுடைய பிரியத்தை அதிக மாகச் சம்பாதிக்க வேண்டும் என்பது போன்ற ஆர்வங்கள்தான் தேவை என அறிந்தேன்.

தேவனுடைய அன்பை அனுபவிக்கும் ஆவிக்குரிய அனுபவம் வேண்டும். கர்த்தர் நம்மை நேசிக்கின்றார் என்பதை வாழ்வில் அனுபவித்து உறுதிப்படுத்த வேண்டும். தேவ அன்பை ருசித்து உறுதிப்படுத்திவிட்டால், அவருக்காக இன்னும் இன்னும் மிக நல்லதோர் வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற ஆவிக்குரிய தாகம் வந்துவிடும்.

தேவன் என்னை இன்னும் இன்னும் நல்லதோர் பரிசுத்த அழகுடன் பார்க்க வேண்டும் என்ற உந்துதல் வந்துவிட்டால், அதற்காக நாம் கடுமை யான பல விஷயங்களை எளிதாகச் செய்யும் ஆற்றலைப் பெற்று விட முடியும். தேவனுக்கு முன்பாக தன்னுடைய வாழ்க்கை கறையற்ற பரிசுத்தமான ஒன்றாகக் காணப்பட வேண்டும் என்ற ஆசையும், தரிசனமும் இருந்ததால்தான், போத்திபார் மனைவியின் பாவக்கண்ணிக்குள் சிக்காமல், யோசேப்பு தன்னைக் காத்துக் கொண்டான். பிதாவுக்குப் பிரியமானவைகளைச் செய்வதைக் குறியாகக் கொண்டிருந்த ஆண்டவராகிய இயேசு, எப்போதும் பிதாவின் ஐக்கியத்தில் இருந்ததை உணர்ந்தார். (யோவான்-8:29) தேவனுக்காக நாம் உண்மையிலும், உத்தமத்திலும் சிறந்து விளங்கும் போது, தேவனால் வருகின்ற அமைதியும், ஆனந்தமும், அவர் வெளிப்படுத்தும் வார்த்தைகளும் அவர் நம்மைப் பாராட்டுவதை நாம் அறியச் செய்யும்.

மனிதர்களுக்கு முன்னால் உன் பலம் விளங்க வேண்டுமானால் இறைவனுக்கு முன்னால் உன் பலவீனங்களை உணர்ந்துகொள்.

மனதை ஈடுபடுத்தி

சங்கீதம் 1:1-6 | **வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன்...** **சங்கீதம் 1:2** | யோவான் 7:14-27

ஓவியக் கண்காட்சி நடக்கும் போது பலர் அதனைப் பார்க்க வருவார்கள். அவர்களில் சிலர் நடந்து கொண்டே மேலோட்டமாக ஓவியங்களைப் பார்த்துவிட்டுக் கடந்து போய் விடுவார்கள். ஆனால் சிலர் அப்படியல்ல. ஒவ்வொரு ஓவியத்தையும் நன்கு கவனித்துப் பார்ப்பார்கள். அந்த ஓவியத்தை வரைந்தவனுடைய கலைத்திறன், கற்பனை வளம், சொல்ல வந்த கருத்து, வர்ணங்களைக் கையாண்டிருக்கிற விதம் ஆகியவற்றை ரசித்துப் பார்ப்பார்கள். அங்கே அவர்கள் ஓவியங்களில் தங்கள் மனதை ஈடுபடுத்தி மகிழ்வார்கள்.

அதுபோலவே வேத வாசிப்பிலும் நாம் பொறுமையாக மனதை ஈடுபடுத்தி தியானித்தால்தான் அதிலிருந்து நாம் நிறைவான மகிழ்ச்சியையும், ஆவிக்குரிய புத்துணர்வையும் பெற முடியும். நாம் எத்தனை அத்தியாயங்கள் தினமும் படிக்கிறோம் என்பது அல்ல. எத்தனை முறை முழுவேதாகமத்தையும் படித்து முடித்துவிட்டோம் என்பதும்அல்ல. எந்த அளவிற்கு நாம் வேதாகமத்தின் செய்திகளில் நம்மை ஈடுபடுத்தி, அதிலிருந்து வெளிப்படும் உண்மைகளை அறிந்து கொள்கிறோம் என்பதே முக்கியமாகும். வேதாகமகால சம்பவங்களையும், தேவன் பேசிய வார்த்தைகளையும் அறிந்து கொள்ளுதல் மட்டும் அல்ல. அவைகள் வழியாக தேவன் நமக்குச் சில காரியங்களை வெளிப்படுத்தவும், உணர்த்தவும், கற்றுத்தரவும், தெளிவுபடுத்தவும் விரும்புகிறார். அதனை நாம் அறிந்து கொண்டு செயல்படுவதற்கேதுவாகவே நம்முடைய வேத வாசிப்பு அமையவேண்டும்.

ஏதோ ஒரு பக்திக்காகவோ, கடமைக்காகவோ வேதத்தைப் படிப்பதில் பிரயோஜனமில்லை. சில அத்தியாயங்களைப் படித்து விட்டால், ஒருவேளை நாம் மனசாட்சியில் ஒரு திருப்தியைப் பெற்று விட முடியும். ஆனால் அது போதாது. நாம் எவைகளை அதன் மூலம் அறிகின்றோம்? அதனால் நாம் வாழ்க்கையில் காணும் பிரதிபலிப்புகள் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்குத் திருப்தியான விடை வேண்டும். அந்த தாகம் பெருகினால்தான் வேதம் நமக்கு விளங்கத் துவங்கும்.

வேதாகமம் என்பது தேவன் நமக்கு எழுதிய அன்பின் கடிதம் என்று சொல்லலாம். எனவே அதனைப் படிக்கும் போது, எழுதினவர் நமக்கு என்ன சொல்லுகிறார் என்ற ஆர்வமான தேடலும், அந்தக் கடிதம் வழியாக தேவ அன்பு, கரிசனை, வழி நடத்துதல், ஆலோசனை, எச்சரிக்கை ஆகியவை வெளிப்படுவதை உணரும் தாகமும் வேண்டும். பெரும்பாலும் கர்த்தர் நமக்குத் தந்த வேதாகம சத்தியங்களின் வழியாகவே, அனுதின வாழ்க்கையில் நமக்குத் தம்முடைய வழிநடத்துதல்களையும், தம்மைக் குறித்த வெளிப்பாடுகளையும் தருகிறார் என்பதை நாம் அறிய வேண்டும். மற்றபடி மந்திரம் படிப்பது போல படிப்பதால் எந்தப் பயனும் இல்லை.

வேதாகமத்தை வாசிக்கின்றவன் பக்திமானாகலாம்.
வேதத்தை நேசிக்கிறவன்தான் பரிசுத்தவானாகிறான்.

ஜீவ நீரோடை

வாழ்க்கை பேசணும்

உபாகமம் 6:1-14

என்னிடத்தில் கற்றும், அடைந்தும் கேட்டும் கண்டும் – பிலிப்பியர் 4:9

பிலிப்பியர் 4:1-9

தேவ பக்தியுடைய ஒரு குடும்பத்தார், தினமும் குடும்ப ஜெபம் நடத்தி, தங்களின் பிள்ளைகளுக்கு வேத நெறிகளை கற்றுக் கொடுப்பார்கள். அந்தப் பிள்ளைகள் பெற்றோரால் வேதாகம விஷயங்களை மிக நன்றாகக் கற்றுக் கொண்டார்கள். ஆயினும் அந்த பிள்ளைகளின் வாழ்க்கையில் அவர்கள் கற்றுக் கொண்ட வேத நெறிகள் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. வேதமறிந்தி ருந்தும் வேத நெறிகளை விட்டு விலகியே வாழ்ந்தனர். அதற்கு முக்கியமானதோர் காரணம் அந்தப் பெற்றோர்தான் என்று கூற நியாயங்கள் உண்டு. ஏனென்றால் அவர்கள் மதபக்தியின் ஒரு பகுதியாக வேதாகம விஷயங்களைக் கருத்துடன் கற்றுக் கொடுத்தார்கள். ஆனால் அவர்களின் வாழ்க்கையிலே கற்றுக் கொள்ள எந்த விசேஷ விஷயமும் இருக்கவில்லை.

மற்றவர்களுக்கு மிக நன்றாகப் போதிக்கச் சில நேரங்களில் சில வார்த்தை களும் தேவைப்படலாம் என்றார் ஒருவர். அதனுடைய அர்த்தம் வார்த்தைகளைவிட அதிகமாக நாம் வாழும் விதம்தான் பிறருக்கு நல்ல போதனைகளைக் கொடுக் கின்றது என்பதாகும். ஒரு போதகர் குறைந்த பட்சம் 50 சதவிகிதம் உண்மை களையாவது தான் வாழ்கின்ற விதத்தால் கற்றுக் கொடுக்க வேண்டும். நாம் பேசுவதை விட, நம்முடைய வாழ்க்கை முறைதான் பிறருக்கு அதிகமான காரியங் களைப் பேசும்.

நம்முடைய குணங்கள், சுபாவங்கள், நடத்தைகள், செயல்கள் ஆகியவை மற்றவர்களின் இருதயத்தில் பல நல்ல விஷயங்களை ஆழமாகப் பதிக்க வேண்டும். நம்மிடம் கேட்கின்றவைகளை விட நம்மிடம் பார்க்கின்றவைகள்தான் பிறரிடம் அதிகமான தாக்கங்களை ஏற்படுத்தும். ஆண்டவராகிய இயேசு வாயினால் போதித்ததைவிட அதிகமாக வாழ்ந்த விதத்தின் மூலம்தான் போதித் தார். அதே நடைமுறையைத்தான் அப்போஸ்தலனாகிய பவுலும் பின்பற்றினான். எனவேதான் பிலிப்பி சபை மக்களுக்கு நிருபம் எழுதும் போது என்னிடத்தில் கற்றும், அடைந்தும், கேட்டும், கண்டு இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள் என்று பவுல் எழுதினான்.

ஆம். பிள்ளைகள் பெற்றோரின் வார்த்தைகள் மூலமாக அறிவதைவிட, நல்ல பல விஷயங்களை அவர்களின் வாழ்க்கையால் கற்க வேண்டும். சபை விசுவாசிகள் போதகரின் பிரசங்கத்தைவிட அவருடைய நல்ல வாழ்க்கையின் மூலம் அதிகமாகக் கற்க வேண்டும்.

ஜனங்கள் காதுகளால் கேட்பதை மறக்கலாம்
கண்களால் காண்பவற்றையோ மறுக்க முடியாது.

அன்புத் தாகம்

உபாகமம் 6:1-12

பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல...
யோவான் 15:9

யோவான் 15:9-27

பொதுவாக மனிதர்கள் பணம், பொருள், நல்ல வாய்ப்பு, வசதி, சுகபோகங்கள் இவைகளைத்தான் விரும்பித் தேடுவதைப்போல காணப்படுகின் றார்கள். ஆனால் எல்லா மனிதர்களுக்குள்ளும் அன்பைத் தேடுகின்ற ஒரு உணர்வுதான் அதிகமாகப் புதைந்து கிடக்கிறது. அன்பைக் குறித்த ஒரு ஏக்கம் மனிதனின் அடி மனதில் மறைந்து கிடக்கின்றது. தான் உண்மையாகவும், போது மான அளவிலும் நேசிக்கப்படவில்லை என்ற உணர்வு அநேகரை மிகுதியாகப் பாதிக்கின்றது.

சிலர் தங்கள் கணவன்மார்களாலோ, மனைவிமார்களாலோ, பெற்றோர் களாலோ, நண்பர்களாலோ மிகுதியாக நேசிக்கப்பட்ட போதிலும் அவர்கள் அந்த அளவிற்கு நேசிக்கப்பட்டதாக உணர்வதில்லை. இது மற்றவர்களின் அன்பைக் குறித்து அறியாத நிலை என்று கூற முடியாது. இது ஒருவர் அன்பு விஷயத்தில் எளிதாகத் திருப்தி அடையாத நிலையின் பிரதிபலிப்பாகும். ஏனென்றால் அன்பைக் குறித்த ஏக்கமும், எதிர்பார்ப்பும் மிக அதிகமாக உள்ளத்தில் காணப்படுவதால், மற்றவர்களின் மிகுதியான அன்பாலும் அங்கு திருப்தி ஏற்பட முடியவில்லை.

தேவனுடைய அன்பு நம்முடைய இருதயத்தில் பாயும் வரை, எவ்வளவு பெரிய மனுஷீக அன்பினாலும் இருதயம் நிறைவடைய முடியாது. தேவனுடைய அன்பு மட்டுமே நம்முடைய இருதயங்களைத் திருப்தி செய்கின்ற அளவிற்கு வலிமையுடையதாகவும், உண்மை நிறைந்ததாகவும், நிறைவுடையதாகவும் இருக்கிறது. ஏனென்றால் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார். இந்த தேவ அன்புதான் பரிசுத்த ஆவியின் மூலமாக விசுவாசிக்கின்றவர்களின் இருதயத்தில் ஊற்றப்படுகின்றது.

நம்முடைய ஏக்கத்திற்கும், எதிர்பார்ப்பிற்கும் தேவ அன்பு மட்டுமே ஈடுகொடுக்க முடியும். எனவே நாம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு அன்பைத் தேட வேண்டிய இடம் தேவ சமுகம்தானேயன்றி, மனிதர்களிடமிருந்து அல்ல. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களை முடிவு பரியந்தம் நேசித்தார் என்று வேதத்தில் பார்க்கின்றோம். (யோவ-13:1) ஏனென்றால் அவருடைய கவனம் அவர்களுடைய அன்பைப் பெறுவதில் இராமல், அவர்களை உண்மையாக நேசிப்பதிலேயே இருந்தது. அவர் பிதாவாகிய தேவனுடைய அன்பை எப்போதும் இதயத்தில் ருசித்துக் கொண்டிருந்தபடியால், அவர் அன்பைத் தேடுகிறவராகயிராமல், அன்பைத் தேடுகிறவர்களுக்கு அதனை வழங்குகிறவராக இருந்தார். தேவ அன்பை நாம் முதலாவது ருசிக்க அதிக கவனம் செலுத்த வேண்டும். அப்போது நம்முடைய அன்புத் தாகம் தணிவதோடு, பிறருடைய அன்புத் தாகத்தைத் தணிக்கவும் முடியும்.

இறைவனை நோக்கிய உன் அன்பில் முழுமையில்லையேல்
மனிதனை நோக்கிய உன் அன்பு அரைகுறையாகவேயிருக்கும்.

அன்பினால் விருப்பம்

11 சாமுவேல் 23:14-21

எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு – பிலிப்பியர் 4:13

பிலிப்பியர் 4:8-23

அன்பு என்பது பலத்திற்கும், வாய்ப்புக்கும் மிஞ்சிப்போய்ச் செயல்பட நமக்கு நல்ல தூண்டுதலைத் தரும். தாவீதிற்காக ஒரு முறை அவனுடைய சேவகர்கள் மிகமிக ஆபத்தான ஒரு பிரயாணம் மேற்கொண்டு, பகைவனின் எல்லைக்குள் புகுந்து குறிப்பிட்ட கிணற்றிலிருந்து அவனுக்குக் குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்தார்கள். ஆம். அன்பு என்பது மிகப் பெரிய செயல்களைச் செய்வதற்கு நமக்கு வலிமையான தூண்டுதல்களைத் தர முடியும்.

தேவனுடைய சித்தம் செய்தல் அல்லது அவருடைய விருப்பங்களின்படி வாழ்தல் என்பது மிகமிகக் கடுமையான விஷயங்கள்தான். நாம் பணம், பொருள், அறிவு, ஞானம், உழைப்பு போன்றவற்றை தேவன்மேல் கொண்ட பயபக்தியினால் தாராளமாகக் கொடுக்க முடியும். தேவனுக்காக ஒரு சிரமமான வேலையை நம்மால் பக்தி ஆர்வத்தால் செய்ய முடியும். ஆனால் தேவன் விரும்புகின்ற விதமான நினைவுகளோடும், சிந்தைகளோடும், செயல்களோடும், சுபாவங்களோடும், வாழ்வது என்பதுதான் மிகவும் கடினமான விஷயங்கள்.

அவற்றிற்குத் தேவை தேவ அன்பு, தேவ அன்பின் பின்பலம் இருந்தால் சுயபலத்தின் எல்லைகளைக் கடந்து செயல்படும் ஆர்வம் வந்து விடும். அன்பு ஆர்வத்தின் அடிப்படையாக உள்ளது. ஒரு விஷயத்தைச் செய்ய முடியுமா என்பதை விட, அதனை நாம் செய்ய விரும்புகின்றோமா என்பதே முக்கியம். கர்த்தருடைய மிக மேன்மையான வழிகள் இடுக்கமான பாதைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. அந்த இடுக்கமான பாதையில் நம்மால் நடக்க முடிகிறதா இல்லையா என்பதல்ல. தேவன் காட்டிய அந்த நற்பாதையில் நடந்திட நம்முடைய இருதயம் விரும்புகின்றதா இல்லையா என்பதே முக்கியம். தேவ அன்பு நமக்குள் இருந்தால் இதைக்குறித்த ஆர்வமும் விருப்பமும் வந்து விடும்.

தன் சொந்த மகனைப் பலியிடச் சம்மதிப்பது யாருக்குத்தான் எளிதா யிருக்கும். ஆனால் தேவ மனிதனாகிய ஆபிரகாம் சம்மதித்தான். ஏனென்றால் தேவன் சொன்னபடி செயல்படுவதில் அவன் அவ்வளவு விருப்பமாயிருந்தான். அதற்குக் காரணம் தேவ உறவில் வாழ்ந்ததின் விளைவான தேவ அன்பு அவனுக்குள்ளிருந்ததே. இவ்விதமான தேவ அன்பை நமக்குள் ஊற்றி, நம்மையும் வல்லமையான செயல்கள் செய்திடும் விருப்பம் நிறைந்தவர்களாக மாற்றிடவே இயேசு சிலுவையில் ஜீவன் தந்தார். ஆம், தேவ உறவில் வாழ்ந்து தேவ அன்பினால் இருதயத்தைப் பலப்படுத்துவோம்.

கசப்பான மருந்து உடலைச் சீர்செய்கிறது.
கசப்பான கஷ்டங்கள் வாழ்க்கையைச் சீர் செய்கிறது.

ஜீவ நீரோடை

விழிப்புணர்வு

ஏசாயா 1:10-18

எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு... II தீமோத்தேயு 4:5

ரோமர் 6:1-13

குறிப்பிட்ட ஒருவர் கிறிஸ்தவ பக்திக் காரியங்களைக் கடைப்பிடிப்பதில் மிகவும் கரிசனையாயிருப்பார். மாதத்தின் முதல் நாள் அவர் ஐக்கியமாயிருக்கிற சபையில் நடைபெறும் திருவிருந்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் தவிர்க்க மாட்டார். வியாதிப்பட்டால் கூட திருவிருந்தைப் பெற எப்படியாவது ஆலயத்திற்குப் போய்விடுவார். அதே வேளையில் அவருக்கும், சாதாரண உலகப்பிரகார மனிதனுக்கும் இடையே எந்த வேறுபாடும் இருப்பதில்லை. கிறிஸ்தவர் என்று சொல்லிக் கொள்வதற்கேற்ற எந்த நற்குணங்களும், சுபாவங்களும் அவரிடம் இருப்பதில்லை.

பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் இந்நாட்களில் கடைப்பிடிக்கும் பல காரியங்கள் சில காலங்களுக்கு முன்பு உண்மையான அனுபவங்களில் ஆரம்பமானதே. ஆனால் தொடர்ந்து அதனைக் கடைப்பிடித்தவர்கள் உண்மையான அனுபவத்தின்படி உணராமல் அதனைச் செய்ததால், இன்று அவை செத்த பாரம்பரியச் சடங்காச்சாரங்களாக மாறிவிட்டன. பொதுவாக எந்த ஒரு நல்ல செயலாயினும் அதனுடைய உண்மை நிலையைக் கவனிக்காமல், அதாவது விழிப்புணர்வின்றி அதனை தொடர்ந்து கடைப்பிடிக்கும்போது, அவை வெறும் உயிரற்ற ஆச்சாரங்களாகவும், சடங்குகளாகவும் மாறிவிடுகின்றன.

நாம் எதைச் செய்தாலும் அதனுடைய அர்த்தத்தை உணர்ந்து, விழிப்புணர்வுடன் அல்லது எதைச் செய்கிறோம் என்ற தெளிவுடன் செய்ய வேண்டும். ஞானஸ்நானத்தைப் பெறும்போது அந்த உணர்வு வேண்டும். ஞானஸ்நானம் நம்மில் ஒரு இரசாயனக்கிரியை செய்து, நம்மைப் புது சிருஷ்டியாக மாற்றுவதில்லை. உள்ளான மனநிலையில் அல்லது ஆவியில் அந்த அனுபவத்தை உணர்ந்து அல்லது வாஞ்சித்துச் செல்லும் போதே, அது உருவாகிறது. உள்ளான அனுபவத்தை வெளிப்படுத்தும் ஒரு வெளி அடையாளமாகவே அது இருக்கிறது. திருவிருந்தின் அப்பத்தைப் புசிப்பதால் ஒரு இரசாயனக்கிரியை ஏற்பட்டு நாம் கர்த்தரோடு இணைந்து விடுவதில்லை. நாம் உள்ளான மனிதனில், ஆவியானவருடன் ஒன்றாகிவிட்ட அந்த அனுபவத்தை உணரவேண்டும். ஸ்தோத்திரம் என்ற சொல்லைப் பலமுறை உச்சரிப்பது ஆராதனையாகி விடாது. அவற்றை உண்மையான உள்ளத்தில் உணர்ந்து துதிக்கும் விழிப்புணர்வு வேண்டும். அதுவே உண்மையான ஆராதனை.

எந்த ஒன்றையும் அதற்குரிய விழிப்புணர்வோடு செய்யாமல், ஏதோ ஒரு இறைக்கட்டளை என்ற அடிப்படையில் மட்டும் அதனைச் செய்யும்போது, அது நம்முடைய ஆவிக்குரிய நிலைக்கு எந்த உதவியும் செய்யாது. அவை செத்த செயல்களாகவே இருக்கும். உள்ளார்ந்த ஒரு அனுபவத்தைக் குறித்த விழிப்புணர்வின்றி, எந்த ஒன்றில் நாம் ஈடுபட்டாலும், அவை வெறும் உயிரற்ற மத சம்பிரதாயங்களாகவே இருக்கும்.

உள்ளான இதயத்தில் தேவன் விரும்பும் விளைவுகளை ஏற்படுத்தாத எல்லா ஆன்மீகச் செயல்களும் பிரயோஜனமற்ற பாரம்பரிய வழிபாடுகளே.

தேவனுடைய கருவி

யாத்திராகமம் 3:1-17

நற்கிரியைகளைச் செய்கிறதற்கு...
எபேசியர் 2:10

எபேசியர் 2:1-10

மனிதன் இயற்கையிலே சாத்தானால் பயன்படுத்துவதற்கு ஏற்ற கருவியாயிருக்கின்றான். மனிதனுடைய இயற்கையான இருதயம் பிசாசானவனுடைய நோக்கங்களுக்கு இசைந்து செயல்படுவதற்கு ஏற்றதாக உள்ளது. எனவேதான் பிசாசானவன், மனிதனின் வாழ்க்கையை எப்படியாவது தனக்கேற்ற விதமாகவும், தன்னுடைய தவறான நோக்கங்கள் நிறைவேறும் விதமாகவும் உபயோகப்படுத்தி விடுகிறவனானான்.

ஆனால் மனிதன் தேவனால் பயன்படுத்தப்படுவதற்கோ, தேவ நோக்கம் நிறைவேற்றுவதற்கு ஏதுவாகச் செயல்படுத்தப்படுவதற்கோ தகுதியற்றவன். ஏனென்றால் பிசாசின் சிந்தைக்கேற்றபடி செயல்பட இயன்ற மனிதன், தேவ சிந்தைக்கேற்றபடி செயல்பட இயன்றவன் அல்ல. எனவேதான் அன்றைய பரிசேயர்களைப் பார்த்து, நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்கிறீர்கள் என்றார். (யோவான்-8:41) நீங்கள் உங்கள் பிதாவாகிய சாத்தானின் இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள் என்றார். (யோவான்-8:44)

ஆனால் மனிதன் உண்மையான தேவ நன்மைகளினால் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால், அவன் அவரை ஆராதித்தால் மட்டும் போதாது. ஏனென்றால் பாவிகள் கூட தேவனை ஆராதிக்க இயலும். தேவன் வெறும் ஆராதனையை அல்ல. அவர் நம்முடைய செயல்பாடுகளை எதிர்பார்க்கின்றார். நாம் அவருடைய நோக்கங்களை நிறைவேற்றும் கருவிகளாக விளங்க வேண்டும். நாம் அவருடைய கரங்களால் பயன்படுத்தப்பட வேண்டும்.

அவரால் நாம் பயன்படுத்தப்பட முதலாவது அவரால் நாம் பரிசுத்தப்படவும், பலமடையவும் வேண்டும். தேவனால் நாம் பரிசுத்தமாக்கப்படும்போதுதான், அவர் நம்மை உபயோகிக்கும் தகுதியைப் பெறுகின்றோம்.

நம்மைப் பரிசுத்தமாக்கி, பலப்படுத்தி தேவசித்தம் செய்வதற்கு ஏற்றவர்களாகவும், இயன்றவர்களாகவும் மாற்றிடவே இயேசு இந்தப் பூமிக்கு வந்தார். எனவே இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட எவரும் நான் அவருக்காக என்ன செய்கிறேன் என்பதையல்ல. அவர் என்னை எந்த அளவிற்குக் கருவியாக உபயோகித்துத் தம்முடைய நோக்கத்தை நிறை வேற்றுகின்றார் என்பதையே பார்க்க வேண்டும்.

இயேசுவின் கருத்துக்களைக் கடைபிடிப்பதல்ல.
இயேசுவின் கரங்களைப் பிடித்து நடப்பதே கிறிஸ்தவம்.

காணிக்கையும் அர்ப்பணிப்பும்

மல்கியா 1:1-14

உங்கள் கைகளிலுள்ள காணிக்கை எனக்கு உகந்ததல்ல... மல்கியா 1:10

மத்தேயு 5:20-26

மிஷனரி ஸ்தாபனத்தைக் காணிக்கைகளினால் தாங்குகின்ற ஆதரவாளர்களின் கூடுகை ஒன்று நடந்தது. ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒருவர் பணித்தளச் செய்திகளையும், பணித்தளத் தேவைகளையும் விளக்கமாக எடுத்துக் கூறி, அதற்கு மாதந்தோறும் கணிசமான ஒரு தொகையை வழங்க வாக்குக் கொடுப்போர் முன்வரும்படி அழைப்பு விடுத்தார். உடனேயே கூட்டத்திற்கு வந்த பெரும் பகுதியினர் அதற்குரிய படிவங்களை நிரப்பித் தங்களின் தியாகமான ஈடுபாட்டை வெளிப்படுத்தினார்கள். அதற்குப் பின்னர் தேவ செய்தியாளர் ஒருவர் அர்ப்பணிப்பு சம்பந்தமான ஒரு ஆவிக்குரிய செய்தியை மிக எழுப்புதலாகக் கொடுத்தார். இறுதியில் தங்களை தேவசித்தம் செய்வதற்குப் பரிபூரணமாக ஒப்புக் கொடுக்கின்றவர்களின் கைகளை உயர்த்த சொன்னார். ஆனால் ஒரு சில கைகள் மட்டுமே உயர்ந்தன.

அங்கே வெளிப்பட்ட உண்மை என்னவென்றால் தேவனுடைய ஊழியங்களுக்குத் தாராளமாகக் கொடுத்துத் தாங்க தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்கின்ற அநேகர், தேவனுடைய சித்தத்தின் படியான ஒரு வாழ்க்கைக்குத் தங்களை அர்ப்பணிக்கத் தயாராக இல்லை என்பதாகும்.

இன்று ஒரு கூட்டம் கிறிஸ்தவ மக்கள் ஊழியங்களுக்கும், மிஷனரி ஸ்தாபனங்களுக்கும் காணிக்கை வழங்கும் ஒரு அனுபவத்தைத் தங்களின் தேவ பக்தியாகவும், விசுவாச வாழ்க்கையாகவும் எண்ணிக் கொள்கிற நிலை உள்ளது. காணிக்கைகள் தங்கள் குடும்பத்திற்கும், கையின் பிரயாசங்களுக்கும் மிகுந்த பிரதிபலனைக் கொண்டு வரும் என்பது அவர்களின் நம்பிக்கை.

அதே வேளையில் நாம் எப்படி வாழ்கிறோம், எப்படிநடந்து கொள்கின்றோம், வியாபாரங்களை எப்படிச் செய்கின்றோம், குடும்பத்தை எப்படி நடத்துகின்றோம், நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையின் குணாதிசயங்கள் எப்படி உள்ளது? தங்களிடம் பணிபுரிகின்றவர்களை எப்படி நடத்துகின்றோம் என்பதையெல்லாம் கரிசனையாகச் சிந்திப்பதில்லை.

ஆனால் ஒன்றை நாம் உணர வேண்டும். காணிக்கை கொடுத்து ஆசீர்வாதமடைந்தோரின் சாட்சிகளைக் கேட்கும் போது, நமக்கும் காணிக்கை கொடுக்க அதிகத் தூண்டுதல் ஏற்படலாம். ஆனால் சாட்சியாக வாழ வாஞ்சையில்லாதோரின் காணிக்கை கர்த்தருக்கு உகந்ததல்ல என்பதை நாம் அறிய வேண்டும். ஒருவேளை ஊழிய ஸ்தாபனங்களும், மிஷனரி இயக்கங்களும் நம்முடைய தாராள உதவிகளுக்காக நம்மை மிகுதியாகப் பாராட்டலாம். ஆனால் தேவன் நம்முடைய வாழ்க்கையை அங்கீகரிக்க இயலாத போது, நம்முடைய காணிக்கைகளை அங்கீகரிக்க முடியாது. நாம் கொடுக்கும் காணிக்கை தேவ சமுகத்தில் அங்கீகரிக்கப்பட, ஒரு அர்ப்பணிப்பு சார்ந்த பரிசுத்த வாழ்வு மிகவும் தேவை.

எவ்வளவு காணிக்கை கொடுக்கிறாய் என்பதைவிட, எந்த அளவிற்கு இதயத்தின் ஆளுகையை இறைவனுக்குக் கொடுத்தாய் என்பதைக் கவனி.

ஏப்ரல் 25

பரலோக சந்தோஷம்

சங்கீதம் 16:1-11

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல... மத்தேயு 6:10

மத்தேயு 6:1-10

பரலோகம் மிகவும் சந்தோஷமான இடம். பரலோகம் விவரிக்க இயலாத பேரின்பம் நிறைந்த இடமாக இருப்பதற்கு முக்கியமானதோர் காரணம் உண்டு. பரலோகத்தில் தேவன் என்ன நினைக்கின்றாரோ, அங்கே அது அப்படியே பரிபூரணமாக நிறைவேறும். பரலோகத்தில் தேவசித்தம் சற்றும் குறைவில்லாமல் முழு நிறைவோடு செய்யப்படும். எனவே அங்கு சந்தோஷத்திற்குக் குறைவேயில்லை.

இந்தப் பரலோக சந்தோஷத்தின் ஒரு மாதிரிச் சுவையை, இந்த பூமியிலும் நாம் உணர முடியும். எனவேதான் ஜெபிப்பது எப்படி என்று கற்றுக்கொடுத்த இயேசு, பரலோகத்தில் உம் சித்தம் செய்யப்படுவது போல, பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று ஜெபிப்பதையும் ஜெபத்தின் ஒரு முக்கியமான அம்சமாகக் கற்றுக் கொடுத்தார்.

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் எந்த அளவிற்கு நாம் முன்னேறிச் செல்லுகின்றோமோ, அந்த அளவிற்குப் பரலோக சந்தோஷத்தை நாம் நமக்குள் அனுபவிக்க முடியும். இன்றைய கிறிஸ்தவர்கள் பாடல்கள், துதிகள், ஆராதனைகள் போன்றவற்றால் தங்களுக்குள் ஒரு சந்தோஷத்தை வரவழைத்துக் கொள்ளப் பழகியிருக்கின்றார்கள். ஆனால் அந்த சந்தோஷம் நீர்க்குமிழி போல விரைவில் மறைந்து போகிறது.

ஏனென்றால் தேவனால் வருகின்ற மகிழ்ச்சி என்பது தேவசித்தம் செய்வதின் விளைவாகவே மிகுதியாக வருகின்றது. தேவசித்தம் செய்கின்றபோது அங்கே தேவனுடைய பிரசன்னம் வெளிப்படுகின்றது. தேவசித்தம் செய்யும் போது தேவனுடைய பரிசுத்தம் வெளிப்படுகின்றது. தேவசித்தம் செய்கின்ற போது அங்கே தேவனுடைய ஆளுகை செயல்படுகின்றது. இதனுடைய விளைவாக தேவசித்தம் செய்கின்றவரின் இருதயம் சந்தோஷத்தின் நிறைவைக் காண்கின்றது. தேவ பிரசன்னம், தேவஆளுகை, தேவபரிசுத்தம் எங்கே வெளிப்படுமோ அங்கே உண்மையான மகிழ்ச்சியும் வெளிப்படும். அதுதான் பரலோக சந்தோஷம்.

நான் பிதாவிற்குப் பிரியமானவைகளைச் செய்கின்றபடியால், அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார் இயேசு (யோவான்-8:29) ஆம். தேவன் பிரியப்படும் விதமாக வாழ வேண்டும் என்ற ஆசையுடன் செயல்படுகின்றவர்களுக்குள், பரலோக சந்தோஷத்தின் காற்று நிச்சயம் வீசும். அங்கே சஞ்சலங்கள் வலுவிழக்கும்.

இறைவன் இருக்க வேண்டிய இடத்தில் சுயம் இருந்தால்
அமைதி இருக்க வேண்டிய இடத்தில் ஆர்ப்பாட்டமே இருக்கும்.

ஏப்ரல் 26

சுத்த இதயம் வேண்டும்

சங்கீதம் 35:1-22

அசுத்தமுள்ளவர்களுக்கு ஒன்றும் சுத்தமாயிராது... *தீத்து 1:15*

ரோமர் 14:1-14

சிற்பி ஒருவன் மிகச் சிறப்பாகச் சிலை ஒன்றைச் செய்து மக்களின் பார்வைக்காக வைத்தான். அதன் அருகில் ஒரு கரும்பலகையை வைத்துப் பார்வையாளர்களின் கருத்தை எழுதும்படி குறித்திருந்தான். பார்த்தவர்கள் எல்லோரும் அந்தச் சிலையின் மிக உயர்ந்த கலை நுணுக்கத்தை வியந்து பாராட்டி, சிற்பியைப் புகழ்ந்து எழுதினார்கள். ஆனால் அங்கே இன்னொரு சிற்பி ஒருவன் வந்தான். மனதின் பொறாமை அவனுடைய கண்களைக் குறை கண்டுபிடிக்க ஏவியது. எனவே பலமணி நேரங்கள் சிலையை மிகக் கவனமாக சோதித்தான். இறுதியாக அதில் ஒரு குறையைக் கண்டுபிடித்தான். அதன் குறையைப் பெரிய எழுத்துக்களில் கரும்பலகையில் எழுதினான். அதன் பின்னர் அங்கே வந்தவர்களெல்லாம் அந்தக் குறையையே கவனமாகப் பார்த்தனர். அங்கே குறை இருந்தது. பின்பு எவரும் சிற்பியைப் புகழவில்லை.

பிறருடைய நல்ல செயல்களில், நல்ல வாழ்க்கையில் குற்றம் கண்டுபிடிக்க நினைத்தால் அதனை எளிதாகக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் அதில் மேன்மை பாராட்ட எதுவும் இல்லை. பிறருடைய செயல்களில், வழிகளில் பெரும்பகுதி நல்லதாகவும், நன்மையானதாகவும், இருந்தால் அதனைப் பார்த்து பிரயோஜனப்படப் பழக வேண்டும். ஒருவரிடம் பாராட்டத்தக்க ஏராளமான காரியங்கள் இருக்கும்போது ஒரு சிறு குறையைக் கண்டுபிடித்து பெரிதுபடுத்தி மட்டம் தட்ட நினைப்பது வேதனையானது. எவ்வளவு நீதியும், நேர்மையும், சுத்தமுமாய் வாழ விரும்புகின்றவர்களிடமும் சில குறைவுகள் இருப்பதுண்டு. குறை தேடும் விருப்போடு கூர்ந்து கவனிப்பவர்களுக்கு அது தெரிவதும் உண்மை. ஆனால் நிறைவுகளைப் பார்க்கத் துவங்கிவிட்டால், உண்மையில் அங்கே குறைவுகள் காணப்படுவதேயில்லை.

இப்படிக் கூறுவதால், குறைகளைக் கண்டுகொள்ளக் கூடாது என்றோ, எந்த ஒன்றிலும் நல்ல பகுதிகளை மட்டுமே பார்க்க வேண்டும் என்றோ அர்த்தம் அல்ல. குறைகளைக் காண்பது என்பது வேறு. குறைகளைக் காணும்படியாகத் தேடுவது என்பது வேறு. குறைதேடும் சிந்தை நம்மிடம் இருந்தால் எந்த நல்ல காரியத்திலும் குறைகளை மட்டுமே நம் கண்கள் காணும். அது நல்ல விஷயங்களில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டுவதும், விளம்பரம் செய்வதும் குறைகள் மேல் கொண்ட பாரத்தினாலோ, குறை தவிர்க்கப்பட வேண்டும் என்ற உயர் குணத்தினாலோ அல்ல. சம்பந்தப்பட்ட நபரைத் தாழ்வாகப் பார்க்கவும், பிறருக்குக் காண்பிக்கவும் ஒரு வாய்ப்புக் கிட்டிய குஷியினாலேயே அப்படிச் செய்கிறார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையில் நமக்கு இதய சுத்தம் வேண்டும். நல்ல எண்ணங்கள் வேண்டும். அப்போது பிறரால் நமக்கு அனேகம் ஆதாயங்கள் உண்டு. மறைவான பொறாமையுணர்வும், சுத்தமற்ற இதயமும் இருந்தால், பிறரின் எல்லாச் செயல்களும் நமக்குத் தவறாகவே தெரியும். அதனால் நஷ்டம் நமக்குத்தான்.

குறைகூறாமல் வாழ்வதும், குறையில்லாமல் வாழ்வதும் மனிதனுக்கு கடினமான காரியங்கள்.

அதிகநேர பிரசங்கம்

சங்கீதம் 119:25-40

உம்முடைய கட்டளைகள் மேல் வாஞ்சையாயிருக்கிறேன் – சங்கீதம் 119:40

அப்போஸ்தலர் 20:1-12

போதகர் ஒருவர் திருச்சபை ஒன்றில் ஆராதனை வேளையில் மிக சிறப்பாக நாற்பது நிமிடங்கள் பிரசங்கித்தார். சபை மக்களுக்கு மிக நல்ல சத்திய அறிவுரைகளை அளித்த திருப்தியுடன் வெளியே வந்தார். சபையின் முக்கிய பிரமுகர் ஒருவர் அவரை நோக்கி வேகமாக வந்தார். பிரசங்கத்தைக் குறித்த நல்ல அபிப்பிராயத்தைச் சொல்லப் போகிறார் என்று போதகர் நினைத்தார். ஆனால் அவரோ நீங்கள் மிக அதிகமான நேரங்கள் பிரசங்கித்துவீட்டீர்கள். வழக்கமாக பிரசங்க நேரம் 20 நிமிடம்தானே என்று முகத்தை சிவப்பாக வைத்துக் கொண்டு சொன்னார்.

சிலர் மணிக்கணக்கில் டி.வி. நிகழ்ச்சிகளை அலுப்பு தட்டாமல் பார்ப்பார்கள். நேரம் போவதே தெரியாமல் தொலைபேசியில் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆனால் கர்த்தருடைய வார்த்தைகளை கேட்கும் விஷயத்தில் மட்டும் 15 நிமிடம் தாக்கு பிடிக்கமாட்டார்கள். மனவியல் விதிகளைச் சுட்டிக்காட்டி 15 நிமிடத்திற்கு அதிகம் பேசுவதை யாரும் கவனித்து கேட்க மாட்டார்கள் என்பார்கள்.

நாள் முழுவதும் பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் மாணவர்கள் எப்படி மணிக்கணக்கில் வாலிப துறுதுறுப்புகளை அடக்கி வைத்துக் கொண்டு பாடம் கற்கின்றார்கள்? தேவையென்று எதையாகிலும் உணர்ந்தால், அதற்காக நீண்ட நேரம் கவனம் செலுத்துவது கடினமான காரியங்கள் அல்ல. இன்றைய பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு சத்தியத்தை விரும்புகின்ற ஒரு ஆவிக்குரிய இருதயம் இல்லை. தேவ வார்த்தைகளைக் கேட்கும் தாகம் இல்லை. தேவனுடைய சமுகத்திலிருந்து புறப்படும் அருள் உணவாகிய ஆவிக்குரிய வார்த்தைகளைத் தேடுகின்ற பசி இல்லை. ஏனென்றால் உட்புறத்தில் அவர்கள் ஆவிக்குரியவர்களே அல்ல.

உலகத்தின் கேளிக்கை சத்தங்களுக்கும், உணர்ச்சிகளை உற்சாகப்படுத்தும் வார்த்தைகளுக்கும் மனித இருதயம் தாகத்தோடு காத்திருக்கின்றது. ஏனென்றால் மனுஷ இருதயம் இயற்கையாகவே உலகத்திற்கேற்றதாயிருக்கிறது. ஆனால் அந்த இருதயம் தேவனுடைய நல்லவார்த்தைகளைக் கேட்கும் தாகம் கொண்டால்தான். வாழ்விற்கு அவசியமான நற்சிந்தனைகளையும், நற்செயல்களுக்கான தூண்டுதல் களையும் பெறமுடியும். ஆனால் அவ்வித தாகம் ஏற்பட வெறும் மத நம்பிக்கை போதாது. கர்த்தராகிய இயேசு இருதயத்திற்குள் அழைக்கப்பட்டு, இருதயம் ஆவிக் கேற்றதாக மாறினால்தான் தாகம் ஏற்படும்.

உலக அறிவு மூளையைக் கூர்மையாக்கும்
இறை அறிவோ இதயத்தைப் பண்படுத்தும்.

உண்மையின் உயர்வு

ஆதியாகமம் 39:1-6

கொஞ்சத்திலே உண்மையுள்ளவன்...
லூக்கா 16:10

லூக்கா 16:1-15

அரசு அலுவலகத்தில் பொறுப்புள்ள பதவி வகித்த ஒருவர் தன்னுடைய அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அடிக்கடி அலுவலக நேரத்தில் தன் வேலையாகப் போய்விடுவார். அலுவலக வாகனம் மற்றும் பணியாளர்களை தன்னுடைய சொந்த வேலைக்குப் பயன்படுத்திக் கொள்வார். தன்னுடைய சொந்த விஷயங்களுக்காக யாரோடு பேச வேண்டுமானாலும், அலுவலக தொலைபேசியையே பயன்படுத்திக் கொள்வார். ஆனால் இவருக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் நல்ல வாஞ்சை இருப்பதோடு, ஊழியராக மாற வேண்டும் என்ற ஆசையும் உண்டு. தனக்கு கொடுக்கப்பட்ட உலகப்பணியில் உத்தமமாகச் செயல் படும் பழக்கமில்லாத ஒருவரிடம், தேவன் எப்படி உன்னதத்தோடு தொடர்புடைய பணியைக் கொடுக்க முடியும்?

நாம் நீண்ட நேரம் தினமும் ஜெபிக்கலாம். அவ்வப்போது கடுமையான உபவாசங்களைக் கடைப்பிடிக்கலாம். பல பொருத்தனைகளைச் செய்து ஆண்டவரின் தயவைத் தேடலாம். ஆயினும் நம்முடைய வாழ்க்கை தேவன் விரும்பும் உண்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தால் மட்டுமே உயர்வு வரும்.

யோசேப்பு, தாவீது, தானியேல் போன்றோர் அற்ப நிலைகளிலிருந்து அபரிதமான உயர்வுகளுக்கு வந்தார்கள். அவர்களைத் தேவன் ஒரேயடியாக உயர்த்திவிடவில்லை. படிப்படியாகத்தான் உயர்த்தினார். கொஞ்சத்தில் உண்மை என்ற தேவனின் கொள்கையில் அவர்கள் நிலைத்திருந்ததால்தான் ஆச்சரிய மான உயர்வுகளை அவர்கள் அடைய முடிந்தது. யோசேப்பினை தேவன் உயர்ந்த ஒரு நிலமைக்குக் கொண்டு வர விரும்பினார். ஆனாலும் அந்த உயர்வினை உடனேயே கொடுத்துவிடவில்லை. முதலாவது அவன் தன்னுடைய உண்மையை சிறு, சிறு பொறுப்புகளின் மத்தியில் நிரூபிக்கும்படியான சூழ் நிலை களை ஏற்படுத்தி னார். அந்தப் பொறுப்புகளிலே அவன் தன்னுடைய உண்மையை சோதனைகளின் நடுவிலும் நிருபித்தான். அதன் பின்னரே உயர்வு வந்தது.

நம்மை தேவன், அற்பமான நிலைகளில் நிறுத்தி அங்கே நம்முடைய உண்மையையும், உத்தமத்தையும் பரீட்சித்துப் பார்க்கிறார் என்பதை நாம் அறிய வேண்டும். அந்த கொஞ்சம் என்பது நாம் செய்யும் சிறிய வேலையாகவோ, சிறு தொழிலாகவோ, சிறிய பொறுப்பாகவோ அல்லது சிறிய கொடுக்கல், வாங்கலா கவோ இருக்கலாம். அங்கே நாம் தேவனுக்கேற்ற உண்மையைப் பற்றிக் கொள்ள சிரமப்பட்டோமா என்பதே முக்கியம். அங்கே நாம் உண்மையை நிரூபித்தால், அதன் பின்னர் வருவதே தேவனுடைய ஆசீர்வாத உயர்வுகள். வெறும் ஜெபம், உபவாசம் என்பவைகளோடு நிற்காமல், உண்மையாகச் சொல்லிலும், செயலிலும் வாழ்ந்திட கவனமாயிருப்போம்.

இன்று உன் தவறுகளை நீ சாதாரணமாக நினைத்தால் நாளை அவைகளை பிறர் பெரிதுபடுத்த வழிவகுப்பாய்.

ஏப்ரல் 29

நமக்கு நல்லது

நீதிமொழிகள் 13:1-25

நீதிமான்களின் வெளிச்சம் சந்தோஷிப்பிக்கும்
நீதிமொழிகள் 13:9

மத்தேயு 5:1-16

குறிப்பிட்ட ஒருவர் எங்கு சென்றாலும் மிக மிக நேர்த்தியாக உடையலங்காரம் செய்து கொண்டுதான் செல்வார். தன்னைப் பார்ப்பதற்கு யாரும் இல்லாத இடமாயினும் சரி, இரவு வேளையாயினும் சரி, அவர் ஏதோ ஆயிரக்கணக்கானோருக்கு முன்பாக மேடையில் தோன்றப்போவது போலவே, தன்னை அலங்கரித்துக் கொள்வார். உங்களை யார் பார்க்கப் போகிறார்கள். யார் உங்களின் அலங்காரத்தைக் கவனிக்கப் போகிறார்கள் என்று அவருடைய மனைவி கிண்டல் செய்வார்கள். அவருடைய கருத்து வித்தியாசமானது. மற்றவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நான் கண்ணாடியில் என்னைப் பார்த்தால், அங்கே என்னுடைய தோற்றம் எனக்கு வெறுப்பைத் தரக் கூடாது. இதுவே அவரின் நிலைப்பாடு.

இது மிக நல்ல நிலைப்பாடா என்பது கேள்விக்குரிய ஒன்று. ஆயினும் ஒரு விதத்தில் இது ஒரு நல்ல சிந்தனை போலத் தோன்றுகிறது. சில நேரங்களில் நாம் எப்படியிருந்தால் அது சரியாயிருக்கும் என்று நாம் சிந்திப்பதில்லை. மற்றவர்களுக்கு முன்பாக நாம் நன்றாகக் காணப்பட வேண்டும் என்ற சிந்தனைதான், சிலரை சற்று நல்ல செயல்களைச் செய்யத் தூண்டுகிறது.

சிலர் தங்களிடம் காணப்பட வேண்டிய நற்குணங்கள் தங்களுடைய அழகிற்காக என்று எண்ணுவதில்லை. தேவன் பிரியப்பட வேண்டும், தேவன் கோபம் கொள்ளக் கூடாது என்பதற்காக மட்டுமே நன்றாக வாழ்வார்கள். எந்த நல்லதைச் செய்தாலும் தேவனுக்காகவே அதைச் செய்வார்களேயன்றி, தங்களுடைய நல்ல வாழ்க்கைக்கு அவை அவசியம் என்று சிந்திப்பதில்லை.

நற்குணம், நற்சிந்தை, நற்செயல் ஆகிய யாவுமே நமக்கு அழகும், திருப்தியும், சந்தோஷமும், சமாதானமும், நம்பிக்கையும் தருகின்ற விஷயங்கள். இவற்றைப் பிறர் பார்க்கின்றார்களோ, இல்லையோ நாம் அவற்றை நமக்குள் பார்க்க வேண்டும். அப்போது அங்கே ஒரு பெரிய திருப்தியை உணர முடியும். ஆசிரியரின் கட்டாயத்திற்காக நன்றாகப் படிக்கின்ற மாணவனைப் போல அல்ல. நாம் படிப்பது நமக்கு நல்லது என்ற உணர்வு வந்தால்தான் உயர்வை அடைய முடியும். மிக நல்ல பரிசுத்த வாழ்க்கை என்பதை தேவனுக்காகவே என்ற பார்வை நீங்கி, நமக்காக, நம்முடைய நன்மைக்காக அப்படி வாழ்வது நல்லது என்று நாம் உணர வேண்டும்.

உன்னை உற்றுநோக்கும் உணர்வு வரும் வரை இறைவனை உற்று நோக்கும் கண்கள் தெளிவடையவில்லை.

ஜீவ நீரோடை

தேவ ஆலோசனைகள்

ஆதியாகமம் 2:1-25

நன்மை தீமை அறியதக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்... ஆதியாகமம் 2:17

யோவான் 15:1-11

சிருஷ்டிப்பின் செய்திகளைப் பார்க்கும் போது, தேவன் மனிதனுக்காக வளமையான, மகிழ்ச்சிமிகு ஒரு சூழ்நிலையை உருவாக்கிய பின்பே அவனைப் படைத்தார் என்பது தெரிய வருகிறது. மனிதன் நிறைவாகவும், சந்தோஷமாகவும் வாழவேண்டும் என்பதுதான் தேவனுடைய விருப்பம் என்பது அதன் மூலம் தெளிவாக்கப்படுகின்றது. ஆயினும் அந்த சந்தோஷத்தை அவன் நிறைவாக அனுபவிக்க வேண்டுமானால், அவர் தரும் ஆலோசனைகளைக் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

குறைவேதும் இல்லாத செழிப்பான ஒரு வாழ்க்கைச் சூழ்நிலையை ஆதாமுக்கு அளித்த தேவன், குறிப்பிட்ட ஒரு மரத்தின் பழத்தைப் புசிப்பது அவனுக்குத் தீங்கை வருவிக்கும் என்ற உண்மையையும் சொல்லி வைத்தார். ஆதாம் அந்த எச்சரிக்கை கலந்த ஆலோசனையைக் கருத்தாய் கைக்கொள்ளத் தவறினான். அதன் விளைவாக அவன் மேன்மையான ஒரு மகிழ்ச்சியின் வாழ்க்கையையும் இழந்தான்.

நாம் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதற்காகத்தான் வேதத்தில் தேவன் நமக்கு ஆலோசனைகளை எழுதி வைத்திருக்கின்றார். அவைகளைக் கடைப் பிடிப்பதின் வழியாகத்தான், அவருடைய சந்தோஷங்களை நாம் அனுபவிக்க முடியும். சில நேரங்களில் தேவனிடமிருந்து, சந்தோஷத்தை எதிர்பார்க்கின்றோம். ஆனால் அவர் தந்த ஆலோசனைகளின்படி நடக்க போதிய கவனம் செலுத்துவதில்லை. தேனும், பாலும் ஓடுகின்ற கானானுக்குள் சென்றும் கூட, இஸ்ரவேலர் கஷ்டத்தையே கண்டனர். ஏனென்றால் அவர்கள் தேவ ஆலோசனையின்படி வாழவில்லை.

நம்முடைய நிலைமை எப்படி? தேவன் அருளிய கட்டளைகளின் சாராம்சங்களை நன்கு கவனிக்கும் போது, அவைகள் எந்த அளவிற்கு நமக்கு நலத்தையும், நன்மையையும் கொண்டு வருகின்ற தன்மையுடையதாக இருக்கிறது என்பதை நாம் கண்டுணர முடியும். ஒரு மருத்துவரின் ஆலோசனை நம்மைச் சிரமப்படுத்தும் கட்டளை அல்ல. அது நம்மை ஆரோக்கியத்திற்கு அழைத்து செல்லும் நல்வழியே.

வேதாகமத்தை நாம் ஏன் திரும்பத் திரும்ப வாசித்து தியானிக்க வேண்டும்? ஒரு மதக் கடமைக்காகவோ, பக்திக் கடமைக்காகவோ அல்ல. வேத வார்த்தைகளின் வழியாக அனுதின வாழ்க்கையை ஆசீர்வாதமாக்கும் தேவ ஆலோசனைகளை நாம் பெறுகின்றோம். தேவ ஆலோசனைகளின் பாதையில்தான் நன்மைகளை நாம் கண்டடைகிறோம்.

கர்த்தரின் கட்டளைகள் உன்னைக் கட்டிப்போட அல்ல. உன்னைக் கட்டி எழுப்பவே அவை உள்ளன.

மே 1

போராட்டங்கள் சகஜம்

சங்கீதம் 44:1-26

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு.
யோவான் 16:33

யோவான் 16:33

தேவனால் மிகுதியாக ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும், தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டவர்களாகவும் விளங்கின வேதாகமக்கால தேவ மனிதர்களைக் கவனித்துப் பாருங்கள். அவர்களுடைய வெற்றிகளின் அடையாளங்களும், விசேஷ ஆசீர்வாத அடையாளங்களும் துன்பமின்மை, துயரமின்மை, போராட்டமின்மை என்பவைகளாக இருக்கவில்லை. அவர்கள் மிகவும் சௌகரியமாக வாழ்ந்தார்கள் என்பதே அவர்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டதின் அத்தாட்சிகளாக இருக்கவில்லை.

ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே, தாவீது, பவுல் என எந்த ஒரு தேவமனிதரும் போராட்டங்கள் நிறைந்த ஒரு வாழ்வின் பின்னணிகளோடுதான் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக விளங்கியுள்ளனர். ஒரே ஒரு மனிதன் போராட்டங்களில்லாத சுக சௌகரிய சூழ்நிலைகளில் வாழ்வதற்கு அருள் பெற்றிருந்தான். அந்த மனிதன் சாலொமோன் இராஜா. ஆனால் போராட்டங்கள் இல்லாத சௌகரியங்களின் நடுவில் வாழ்ந்த அவனுக்கு வாழ்வு என்பது திருப்தி கொடுப்பதாக இருக்கவில்லை. எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமே என்று புலம்புகின்ற ஒரு விரக்திமிக்க மனிதனாகவே அவன் வாழ்ந்து முடித்தான்.

போராட்டங்களற்றதும், துன்பங்களற்றதுமான ஒரு சௌகரியமான வாழ்க்கை நிலையை யாரும் இந்த பூமியில் பெற முடியாது. ஏனென்றால் இது சபிக்கப்பட்ட பூமி. இது துன்பங்களையும், துயரங்களையும், போராட்டங்களையும் சந்தித்தே ஆக வேண்டிய நிர்ப்பந்தமான பூமி. தேவகுமாரனாகிய இயேசு, இந்தப் பூமியில் வந்து வாழ்ந்தபோது, அவரும் துன்ப, துக்கங்களுக்கு விதிவிலக்காக இருக்க இயலவில்லை.

காற்றின் வேகங்களையும், அலைகளின் மோதியடித்தலையும் சந்திக்க தேவையில்லாத ஒரு சமுத்திரம் இருக்க முடியாது. அவை அங்கே சகஜமானவை. ஆனால் போராட்டங்களில் நாம் ஜெயிக்கலாம். துன்பங்களை நாம் வெற்றியாக கடந்து செல்லலாம். சோதனைகளால் சோர்ந்து போய் நின்று விடாமல், சாதனைகள் படைக்கலாம். ஆண்டவரோடு பயணம் செய்த சீடர்களும் அலைகளையும், காற்றையும் கண்டு பதட்டமடையும் வேளைகள் வரவே செய்தது. ஆனால் அவற்றால் கலங்கி திகைத்துச் செயலற்றுப் போகாமலிருக்க கர்த்தர் உதவி செய்தார்.

ஜெபம் மனிதர்களை தேவனிடத்திற்கும்,
தேவனை மனிதனிடத்திற்கும் அழைத்துச் செல்கிறது.

தேவனால் வராத உயர்வு

ஆதியாகமம் 14:1-24

ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு... ஆதியாகமம் 14:22

எரேமியா 17:5-10

இந்த உலக வாழ்க்கையில் ஒருவருடைய தயவும், உதவியும் இன்னொருவருக்கு ஏதாவது ஒரு விதத்தில் அவசியமாயிருக்கிறது. யாருடைய தயவும், உதவியும் எனக்குத் தேவையில்லை என்று ஒருவரும் கூற முடியாது. ஆயினும் மற்றவர்களின் தயவையோ, உதவியையோ சார்ந்திருக்கின்ற ஒரு அனுபவம் நல்லதல்ல. ஆபிரகாமுடைய வாழ்க்கையில் ஒரு விசேஷமான ஆசை அவனுக்கிருந்தது. தன்னுடைய வாழ்க்கையில் உயர்வு வருகின்ற போது, அதற்கு எந்த ஒரு மனிதனும் உரிமை பாராட்டிவிடக் கூடாது. தனக்கு வரும் உயர்வுகள் தேவனால் மட்டுமே வந்தது என்று சொல்லத்தக்கதாக அவை இருக்க வேண்டும். இதுவே அவனுடைய விசேஷ ஆசை. அவன் வாழ்க்கைப் பாதையில் அந்த மேலான ஆசையின் அடிப்படையிலேயே வாழ்ந்தான்.

சோதோமின் ராஜா அவனுடைய வீர தீரமான செயல்களைக் கண்டு, பெரும் பொருளைக் கொடுக்க முன்வந்தான். ஆயினும் ஆபிராம் அதனை வேண்டாம் என்றான். சோதோமின் ராஜாவின் தயவில்தான் ஆபிராம் மிகுந்த செல்வந்தன் ஆனான் என்று கூறப்படும் நிலை உருவாவதை அவன் விரும்பவில்லை. தனக்கு வரும் ஒவ்வொரு உயர்வும் "இது தேவனால் வந்தது" என்ற முத்திரையை உடையதாயிருக்க அவன் விரும்பினான்.

தேவனுடைய பிள்ளைகளுக்கு உயர்ந்த கொள்கை சார்ந்த ஆசை தேவை. தேவனால் வராத உயர்வு ஏதும் வேண்டாம் என்ற ஒரு மனநிலை வேண்டும். தேவனால் வருகின்ற உயர்வுகள் நீதியையும், உண்மையையும் சார்ந்ததாகவும், பிற்காலத்தில் எண்ணி மகிழத்தக்கதாகவும் இருக்கும். எப்படியாவது சாதித்து விட வேண்டும் என்ற சிந்தை, பலர் நடுவில் நமக்கு சில உயர்வுகளைத் தரமுடியும். ஆனாலும் விசுவாசத்தைச் சார்ந்து நிற்காத அவைகளால் உண்மையான மன நிறைவை நாம் அடைய முடியாது. சில மனிதர்களைச் சார்ந்து பெறும் உயர்வோ, உலகப்பிரகார யோசனையின்படி பெறும் உயர்வோ, பின்னர் மகிழத்தக்கதாக இராது. தேவனால் வந்தது என்று சொல்லத்தக்க உயர்வுகளே என்றும் நிமிர்ந்து நிற்கச் செய்யும்.

யோசேப்பு தான் அடைந்த உயர்வுகளைக் கவனித்துப் பார்த்திருந்தால், அது சுய முயற்சியாலோ, புத்திசாலித்தனத்தாலோ, வந்ததல்ல என்றும், அது முற்றிலுமாக தேவனுக்குப் பிரியமாக வாழ்ந்து, அவரைச் சார்ந்திருந்ததாலேயே வந்தது என்றும் கண்டிருக்க முடியும். தேவன், தம்மை விசுவாசிக்கிறவர்கள் தம்மால் வரும் உயர்வுகளையே நம்பி, அவைகளுக்காகக் காத்திருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கின்றார். ஏனென்றால் அவரால் வந்த உயர்வுகளில் பரிசுத்த முத்திரையும், தேவ பாதுகாப்பின் உத்தரவாதமும், தேவ சமாதானமும், அநேகர் பயன்படத்தக்க ஆசீர்வாதமும் சேர்ந்தே இருக்கும்.

தேவனால் வந்த உயர்வுகள் உனக்கு அலங்காரத்தைத் தரும்.
நீ உருவாக்கிய உயர்வுகளோ அகங்காரத்தைத் தரும்.

ஜெபம் மட்டும் போதுமா?

எரேமியா 11:1-15

நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன் – ஏசாயா 1:15

1 யோவான் 5:12-21

ஜெபம், உபவாசம் போன்ற ஆவிக்குரிய கருவிகளை நாம் நன்றாகப் பயன்படுத்த வேண்டும். அவற்றின் முக்கியத்துவத்தை நாம் ஒரு போதும் அலட்சியம் செய்துவிடக் கூடாது. ஒரு உண்மையான ஆவிக்குரிய மனிதனின் முதுகெலும்பும், உயிர் மூச்சும் ஜெபத்தின் வாயிலாகவே மிகச் சரியாக இருக்கும் என்று நான் சொல்வேன்.

அதே வேளையில் ஜெபம் என்பதை ஒரு தானியங்கி இயந்திரம் போல புரிந்து கொள்ளக் கூடாது. குறிப்பிட்ட பாஸ்வேர்டை காண்பித்தால் இயந்திரம் திறந்து விடுவதைப் போல, ஜெபித்தவுடன் தேவன் செயல்பட ஆரம்பித்துவிடுவார் என்று எண்ணி விடக் கூடாது. தேவனுடைய வல்லமையான செயல்பாடுகளுக்காக, தேவன் நம்முடைய அதிகமான ஜெபங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என நினைக்கக் கூடாது.

நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கை களம், தேவன் வந்து வல்லமையாகச் செயல்படுவதற்கு ஏற்றதாயிருக்காவிட்டால், நம்முடைய அதிக ஜெபங்கள் பயனற்ற அதிக சத்தங்கள்தான். இந்த நாட்களில் பெரும்பாலான சபைகளும், நற்செய்தி இயக்கங்களும் 12 மணிநேர ஜெபம், 24 மணிநேர ஜெபம், 72 மணிநேர ஜெபம், சங்கிலி ஜெபம், இரவு ஜெபம், உபவாச ஜெபம் என அதிக ஜெபங்களை அதிகமாக முக்கியப்படுத்துகின்றன. ஆனால் ஜனங்கள் அதிகமாக ஜெபிக்க அழைக்கப்பட்ட போதிலும், சரியானதோர் ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ அழைக்கப்படவில்லை. தேவனை நோக்கிச் சத்தமிட்டு ஜெபிக்க ஜனங்கள் அதிகமாகப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். ஆனால் தேவனுக்கு முன்பாக எப்படி அவர்கள் நிற்க வேண்டும் என்பதைப் போதுமான அளவு கரிசனையோடு சொல்லிக் கொடுப்பதில்லை.

கதவைப் பூட்டி வைத்துக் கொண்டு, உதவி உதவி என்று எவ்வளவுதான் கூச்சலிட்டாலும் பயனில்லை. அதிக ஜெபம் என்ற தோற்றத்தின் பின்னால், சாதாரண பரிசுத்த வாழ்வு கூட இல்லாத பரிதாப நிலைமை இப்போது எங்கும் காணப்படுகிறது. எனவே ஜெபம் என்பது கூட இப்போது விக்கிரகம் போல மாறிவிட்டது. ஒரு சரியான பரிசுத்த வாழ்வின் பின்னனியுடன் கர்த்தரோடு ஒத்துழைக்காமல், வெறும் ஜெபங்களையே அதிவிசேஷமாக எண்ணுவது நல்ல விளைவுகளைத் தராது.

உரத்தசத்தமிட்டு ஜெபிப்பதற்கு முன்பு
அமைதியாய் அமர்ந்து உன்னை அறிந்து கொள்ள பழகு.

மனதுருக்கம் எப்போது?

ஏசாயா 55:1-13 | **தகப்பன் அவனைக் கண்டு மனதுருகி, ஓடி...** லூக்கா 15:20 | லூக்கா 15:11-24

கெட்ட குமாரன் உவமையில் வருகின்ற தந்தை மிகுந்த மனதுருக்க முள்ளவராகவே இருந்தார். ஆயினும் அந்த அன்பையும், மனதுருக்கத்தையும் கெட்டுப்போன இளைய மைந்தன் எப்போது அனுபவிக்க முடிந்தது? அவன் தகப்பனுக்குத் தூரமாக இருந்தபோதல்ல. அவன் ஒருவேளை உணவுக்காக அங்கலாய்த்து, பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்த போதும் அல்ல.

என்றைக்கு அவன் தன் தவறையும், குற்றத்தையும் உணர்ந்து, தந்தையிடம் மன்னிப்புக் கேட்க விரும்பி, மனந்திரும்பும் தீர்மானத்தோடு வந்தானோ, அப்போதுதான், அன்றைக்குத்தான் அதனைக் கண்டான். தவறை உணர்ந்து மனந்திரும்பி வந்த பாதையில்தான் தகப்பனுடைய பொங்குகின்ற அன்பையும், மனதுருக்கத்தையும் கண்டு பரவசப்பட முடிந்தது. தேவன் எப்போதும் அன்பும், மனதுருக்கமும் உடையவரே. நமக்காக ஒரு பெரிய அன்பையும், மனதுருகும் உள்ளத்தையும் அவர் வைத்திருக்கின்றார். ஆனால் அந்த மனதுருக்க ஆசீர்வாதத்தை, நம்முடைய கஷ்டங்களையும், வியாகுல சூழ்நிலைகளையும் மனவேதனையோடு அழுது சொல்வதினால் மட்டும் நாம் பெற்றுவிட முடியாது.

இளையகுமாரன், நான் தகப்பனிடம் போய் என் கஷ்டங்களையும், வேதனைகளையும் வியாகுலங்களையும் விவரித்துச் சொல்லி, அவருடைய இரக்கத்தைத் தேடுவேன் என்று முடிவு செய்து வரவில்லை. அவன் "நான் பரத்திற்கு விரோதமாகவும், உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன்" என்று சொல்லுவேன் என தீர்மானம் செய்து வந்தான். ஆம். அவன் தன் பாவத்தை உணர்ந்து மனஸ்தாபப்பட்டு வந்தான். அப்போதுதான் தகப்பனுடைய மனதுருக்க ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான்.

சில நேரங்களில் நாம் நம்முடைய கஷ்டங்களையும், வியாகுலங்களையும் கர்த்தரிடம் உருகிச் சொல்வதால் மட்டுமே, தேவன் நமக்காக மனதுருகி நன்மை செய்வார் என எண்ணிவிடுகிறோம். இல்லை. முதலாவது நாம் வாழ்கின்ற வாழ்க்கை தேவனுக்கு உகந்த ஒரு வாழ்க்கைதானா என்பதைச் சிந்தித்து, மனநிலை, குணநிலை, செயல்நிலை ஆகியவற்றில் ஒரு பரிசுத்தமான மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற ஒரு வாஞ்சையோடு தேவனிடம் வரவேண்டும். மனந்திரும்பும் வாஞ்சையோடும், வாழ்க்கை மாற்றத்தின் அவசியத்தை உணருகின்ற உணர்வோடும் தேவனிடம் வரும்போது, அவருடைய அளவற்ற மனதுருக்கத்தையும், அன்பையும் நாம் பெற முடியும்.

மனந்திரும்புதல் என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவரை தேவனுடைய மனதுருக்கத்தை நாம் காண முடியாது.

ஜீவ நீரோடை

சத்தியம் வற்புறுத்தும்

உபாகமம் 8:1-11

இதை அவர்கள் கேட்ட பொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி – அப்போஸ்தலர் 2:37

அப்போஸ்தலர் 2:32-47

சத்தியம் தேவனிடத்திலிருந்து புறப்படுகின்றது. தேவனுடைய ஆவியினால் சத்தியம் பிரசங்கிக்கப்படுவது உண்மையானால், அதைக் கேட்கின்ற மனிதன் தனக்குள் தான் இதுவரை அறியாத, உணராத, உற்றுக் கவனிக்காத ஒரு உண்மையைக் கண்டு கொள்ள உந்தப்படுவான். அதுதான் சத்தியத்தின் ஆவிக்குரிய கிரியை.

உலகத்தில் பேசப்படும் பல அறிவுரைகள், நெறி உரைகள், மறவுரைகள் போன்றவற்றால் மனிதன் தனக்குள் அதுவரை உணராமலிருந்த உண்மை களை உணர முடியும். ஆயினும் அந்த உண்மைகளை அறிந்ததால் அவன் தனக்குள் பெரிய மாற்றங்களைக் கண்டு விடுவதில்லை. சில உண்மைகளை அறிந்ததோடு நின்று விடும். ஆனால் தேவ ஆவியினால் சத்திய வார்த்தைகள் பிரசங்கிக்கப்படும் போது, அந்த சத்தியம் சில உண்மைகளை உணர வைப்பதோடு நிற்பதில்லை. அந்த உண்மைகளின் அடிப்படையில் மாற்றங்களைச் செய்யும் தூண்டுதல்களும் கொடுக்கப்படுகின்றன. உண்மைகள் சில மாற்றங்களையும். திருப்பங்களையும் ஏற்படுத்தும்படியாக வற்புறுத்த ஆரம்பிக்கின்றன. கோடை கால வெயில் ஒரு மனிதனை சுடுவதோடு நில்லாமல், நிழல் தேடி ஓடுவதற்கான ஆழமான தூண்டுதல்களையும் கொடுக்கின்றன.

யோவான் பிரசங்கம் செய்தபோது அதனைக் கேட்ட பலர் “நாங்கள் என்ன செய்ய வேண்டும்” என்று கேட்டனர். பேதுரு பிரசங்கித்த போது அதனைக் கேட்ட ஜனங்கள் இருதயத்தில் குத்தப்பட்டார்கள். இயேசுவானவர் பேசின போது அவர் பேசிய வார்த்தைகள், வழக்கமான வேதபாரகர்கள் பேசுவது போல பொதுவான அறிவுரைகளாக அல்ல. அவை கேட்டவர்களுக்குள் அதிகாரமிக்க வார்த்தை களாகத் தொனித்தன. ஏனென்றால் அந்த உண்மைகள் ஒரு மாறுதலின் தேவையை அவர்களுக்குள் வற்புறுத்தியது.

இன்றைய திருச்சபைகளிலே ஜனங்கள் வேதம் தொடர்பான, இயேசுவின் போதனை தொடர்பான பல வார்த்தைகளைக் கேட்கின்றனர். ஆனால் அவை அவர்களை மாற்றுவதற்கு இயலவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, பேசுகின்ற வார்த்தைகள் தேவனால் பேசப்படுகின்ற ஆவியில் நிறைந்த சத்திய வார்த்தைகளாக இல்லை. அவை கேட்கின்றவர்களை தொந்தரவு செய்யவில்லை. இரண்டு, கேட்கின்றவர்கள் கேட்கின்ற வார்த்தைகளினால் உணர்வடையாத அளவிற்கு மனம் கடினமாகிப் போன நிலமை. சத்தியத்தைக் கேட்கின்றோமா? சத்தியத்தால் மாறுகின்றோமா? சிந்திப்போம்.

தவறைச் செய்வது சாதாரணமானது. அதனை உணர்த்தும் போது உணர மறுப்பதே பயங்கரமானது.

முகஸ்துதி

நீதிமொழிகள் 28:18-28

முகஸ்துதி பேசுகிறவனைப் பார்க்கிலும்...
நீதிமொழிகள் 28:23

கலாத்தியர் 2:11-21

நான் மும்பாயில் இருந்தபோது, வசதியான ஒருவரைக் குறித்து எனக்கு நன்கு தெரியும். அவர் யார் கிடைத்தாலும், தன்னுடைய குடும்பம் மற்றும் கொடுக்கல், வாங்கல் நியாயங்களை மணிக்கணக்கில் பேசுவார். அவர் சொல்வதையெல்லாம் "சரிதான்" என்று ஆமோதித்து பொறுமையாக கேட்டுக் கொண்டிருக்கின்றவர்களின் மீது அதிகமாகப் பிரியப்படுவார். அவர்களுக்கு காபி, டிபன் வாங்கி கொடுத்து, தன்னுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்துவார்.

ஆம். சிலருக்கு தாங்கள் செய்வது, சொல்வதையெல்லாம் சரியென்று சொல்லுகின்றவர்கள் மேல்தான் அதிகப் பிரியம். ஆனால் இது ஒரு தவறான சுபாவம் ஆகும். நாம் நல்லதைச் செய்யும் போதும், சொல்லும் போதும் அதனைப் பாராட்டி உற்சாகப்படுத்தும் நபர்கள் தேவை. அதே வேளையில் நம்முடைய செயல் களில், நியாயங்களில், முடிவுகளில் உள்ள குறைபாடுகளைச் சரியான விதத்தில் சுட்டிக்காட்டுகின்றவர்களும் தேவை. இல்லையேல் நாம் தவறுகளைச் சரியென்றும், நியாயமற்றவைகளை நியாயமென்றும் எண்ணி, ஒரு நாள் மிகுந்த கேடுகளுக்குள் விழும் அபாயம் நேரிடும்.

பேதுருவிடம் ஒரு தவறான போக்கைக் கண்ட பவுல் அங்கே அதனை தவறு என்று சுட்டிக்காட்ட தயங்கவில்லை. அதன் மூலம் பேதுரு தன்னுடைய தவறான போக்கை சிந்தித்து சரி செய்திருப்பான். தாவீதிடம் தகாத விஷயத்தைக் கண்டபோது நாத்தான் தீர்க்கத்தரிசி அதனைக் கண்டு கொள்ளாமல் இருக்கவில்லை. அவன் நேருக்கு நேர் தாவீதை குற்றம் சாட்டினான். எனவேதான் தாவீதால் தன் தவறை உணர்ந்து மனஸ்தாபப்பட்டு தேவ இரக்கத்திற்காக கெஞ்ச முடிந்தது. நம்முடைய கருத்துக்களையும், செயல்களையும் ஆமோதிக்கின்றவர்களையெல்லாம் நண்பர் களாகவும், எதிர் கருத்து கூறுகின்றவர்களையெல்லாம் எதிரிகளாகவும் எண்ணாதி ருப்போம். சரியானதை சரி என்றும், சரியற்றதை சரியற்றது என்றும் தயங்காமல் கூறுகின்ற சிலர் நமக்கு அவசியம் தேவை.

ஒரு வேளை இன்றும் நாம் சில தவறுகளைச் சுட்டிக்காட்டும் போது சம்பந்தப் பட்டவர்களுக்கு அது ஒரு காயமாகவும், கசப்பாகவும் இருக்க முடியும். ஆனால் ஒரு நாள் அவர்கள் அது நல்லது என்றும், அவசியமான ஒன்றாக இருந்தது என்றும் அறியும் நாட்கள் வரும். நாம் சுட்டிக்காட்டத் தயங்கிய, தவறு என்று உணர்த்தத் தவறிய சில காரியங்கள், ஒருவரை தவறான பாதைகளில் நடக்கத்தூண்டும் ஊக்குவிப்பாக மாறி, சீர்கேடுகளுக்கு வழிவகுக்க முடியும். நாளைக்கு ஏதோ ஒன்று நடந்த பிற்பாடு, நான் அதை சொல்லத் தவறிவிட்டேனே, அதைக் கண்டிக்காமல் போய் விட்டேனே என்று வருந்த நேரிடும்.

இறைவனுக்காக எவ்வளவு செய்கிறாய் என்பதல்ல.
அவர் எதிர்பார்ப்பதை செய்கிறாயா என்பதே முக்கியம்.

பரிசுத்தமாகுதல்

லேவியராகமம் 20:1-27

பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன் – ரோமர் 6:22

ரோமர் 6:1-23

ஒரு மனிதன் எவ்வளவு கொடிய பாவியாகவும் இருக்கலாம். ஆனால் அவன் பாவத்தை நீக்கி இரட்சிக்கும் இரட்சகராகிய இயேசுவை ஏற்றுக் கொண்ட உடனேயே தேவனுடைய பார்வையில் பாவியாக அல்ல, அவன் பரிசுத்தவானாகவே தோன்றுவான். ஏனென்றால் தேவன் அவனை இயேசுவோடு இணைத்தே பார்க்கின்றார். பாவியாகிய அவன் தனித்துப் பார்க்கப்படாமல், இயேசுவோடு இணைத்துப் பார்க்கப்படுவதால், இயேசுவின் பரிசுத்தம் அனுடைய பரிசுத்தமாகப் பார்க்கப்படுகிறது.

அதே வேளையில் மனிதப் பார்வை வேறு. மனிதன் அவனை இயேசு என்ற கண்ணாடி வழியாகப் பார்க்கமாட்டான். அவனைத் தனியாகவே பார்ப்பான். அப்போது அவனிடம் பரிசுத்தமான விஷயங்களைப் பார்க்க இயன்றால் மட்டுமே அவன் பரிசுத்தவானாக எண்ணப்படுவான்.

எனவே அவன் தன்னிடம் பரிசுத்தத்தின் அடையாளங்களையும், சான்று களையும் காண்பிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. எனவே ஒரு மனிதனுக்கு இரண்டு விதமான பரிசுத்தமாகுதல்கள் அவசியமாகிறது. ஒன்று, தேவன் தம்முடைய தெய்வீக கோட்பாட்டின்படி, ஒரு மனிதனை இயேசுவோடு இணைப்பதால் அவனை பரிசுத்தவானாக ஏற்றுக்கொள்ளுதல். இரண்டாவது, இயேசுவோடு இணைக்கப்பட்டதால் ஏற்படுகின்ற தெய்வீக ஐக்கியத்தின் விளைவாக அவனை பரிசுத்தவானாக நிறுத்துதல்.

பரலோகம் செல்ல நமக்குத் தகுதி ஏற்படுத்துவது இயேசுவின் பரிசுத்தமே. (1 கொரி-1:31) அவருடன் இணைந்தால் அவருடைய பரிசுத்தம் நம்முடைய பரிசுத்தமாக எண்ணப்படும். ஆனால் பூமியில் வாழும் போது இயேசுவின் ஐக்கியத்தி னால் நம்மிடம் பரிசுத்தமாகுதல் நடைபெற்று, மனிதர்களின் நடுவில் பரிசுத்த அடையாளங்களைக் காண்பிக்க வேண்டிய தேவையும் உள்ளது.

எனவே இந்தப் பூமியில் வாழ்கின்ற காலமெல்லாம், இயேசுவோடுள்ள ஐக்கியத்தினை அதிகமதிகமாக அனுபவித்து, அவருடைய பரிசுத்தம் நம்மிடம் பிரதிபலிக்கும் விதமாக வாழ வேண்டும். அப்போது நம்மில் ஏற்பட்டுள்ள பரிசுத்த அடையாளங்களைப் பிறர் கண்டு ஆச்சரியப்பட முடியும். அதுதான் பரிசுத்தத்திற்கு சாட்சியாக வாழுதல்.

தேவனுடைய கட்டளைகளைச் சுமக்கத் தயங்காதவனுக்கு வாழ்க்கையின் சுமைகள் இலகுவாகி விடுகின்றன.

ஜீவ நீரோடை

நண்பர்களாய் பிரிவோம்

ஆதியாகமம் 13:1-11

எனக்கும் உனக்கும், வாக்குவாதம் வேண்டாம்... ஆதியாகமம் 13:8

1 கொரிந்தியர் 3:1-15

எவ்வளவுதான் ஒத்தகருத்தும். ஒருமனப்பாடும் இருந்தாலும், பிரிவினைகள் சில வேளைகளில் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. ஆபிரகாமும், லோத்தும் பிரியும் வேளை வந்தது. பவுலும் – பர்ணபாவும் பிரிந்து போகும் சூழ்நிலை ஏற்பட்டது. நண்பர்களாக இணைந்திருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. நண்பர்களாக இணைந்திருக்க முடியாத சூழ்நிலை வரும்போது, விரோதிகளாகப் பிரிந்து நின்று போராட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நண்பர்களாகவே பிரிவோம் என்ற ஒரு பொன்மொழி உண்டு.

இணைந்து ஊழியம் செய்த இருவர் நடுவில் பிரிவினை வந்தது. ஒரே ஊரில் இரண்டு சபைகளாக பிரிந்தனர். ஒருவரையொருவர் பின்தள்ளுவதிலும், ஒருவரையொருவர் முந்திப் போவதிலும் அதிக தீவிரமாயிருந்தனர். ஒருவருக்கெதிராக ஒருவர் குறை கூறுவதிலும், அவதூறு பேசுவதிலும் சளைக்காமலிருந்தனர். விசுவாசிகளை தங்கள் பக்கம் இழுப்பதில் இருவரும் சண்டை யிட்டனர். ஆனால் இருவருமே அன்பைக் குறித்தும், சமாதானத்தைக் குறித்தும், தாழ்மையைக் குறித்தும் அழகாகப் பிரசங்கித்துப் பழகியவர்கள். இதுதான் இன்றைய கிறிஸ்தவம்.

லோத்துவின் விஷயத்தில் ஆபிரகாமின் அணுகுமுறையைப் பாருங்கள். வாக்குவாதம் செய்யவில்லை. நியாயம் பேசவில்லை. குற்றச்சாட்டுச் சொல்ல வில்லை. பிடிவாதம் பிடிக்கவில்லை. அவன் இறங்கி வருகிறான். தாழ்ந்து போகிறான். விட்டுக்கொடுக்கிறான். சுய கௌரவம் பார்க்காதிருக்கிறான். வலிமைதான் நியாயம் என்றிருந்த அந்த நாட்களில் அவன் நமக்குள் வாக்குவாதம் வேண்டாம் என்று சொல்லி, நீ வலதுபுறம் போனால், நான் இடது புறம் போகிறேன் எனக் கூறுகிறான். இந்த ஆபிரகாமின் மனநிலைக்கும், சற்று முன்னர் பார்த்த பாஸ்டர்களின் மனநிலைக்கும் இடையில் ஏன் இந்த முரண்பாடு? ஆபிரகாம் தேவனைச் சார்ந்த மனிதன். தன்னுடைய நன்மைகளை யாரும் கொண்டு போய்விட முடியாது என்ற நம்பிக்கை உடையவன். போராடிப் பெறும் உரிமையையும், நியாயத்தையும் விட, தாழ்மையாகி தேவனைச் சார்ந்திருந்து பெறும் நன்மையே விசேஷமானது என அவன் விசுவாசித்தான். அந்த விசுவாசம் வீண் போகவில்லையே.

இன்று சபைகளுக்கிடையே மோதல், மிஷனரி ஸ்தாபனங்களுக்கிடையே மோதல், ஊழிய அமைப்புகளுக்கிடையே மோதல், காரணமென்ன? தேவ சார்பும் இல்லை, தேவனால் வரும் உயர்வுகளில் நம்பிக்கையுமில்லை. நாம் உஷாராயிருந்து புத்தியாய் செயல்பட்டால்தான் நன்மைகளைத் தக்கவைக்க முடியும் என்ற எண்ணம். எனவே ஆவிக்குரிய பெயரில் மாம்சீகப் போராட்டங்கள் எங்கும் பெருகிவிட்டன. பிரிவினைகளையும், கருத்து வேறுபாடுகளையும், கொள்கை வித்தியாசங்களையும் ஆபிரகாமைப் போல அணுக நம்மை ஆயத்தமாக்குவோம்.

உறவு இருக்கும் இடமெல்லாம் உனக்குப் பிரச்சினை என்றால் இறைவனோடு உனக்கு உறவு சரியாயிருக்கிறதா என்று பார்.

வார்த்தை தரும் நம்பிக்கை

சங்கீதம் 119:41-56

நீர் என்னை நம்பப் பண்ணின வசனத்தை
சங்கீதம் 119:49

லூக்கா 6:39-42

கர்த்தருடைய வார்த்தைகளால் மனிதன் வாழ முடியும். (உபாகமம்-8:3) கர்த்தருடைய வார்த்தைகளினால் மனிதன் விடுதலை அடைய முடியும். (யோவான் - 8:32) ஆனால் சத்தியத்தைத் தொடர்ந்து கேட்கும் வாய்ப்புப் பெற்றுள்ளதாக எண்ணுகின்ற பலர், அந்த சத்தியத்தால் வாழவும் இல்லை. அவர்களுக்குள் சத்தியத்தால் விடுதலையும் இல்லை.

ஏனென்றால், அநேகர் தேவ ஆவியினால் ஏவப்பட்டுப் பேசப்படுகின்ற உண்மையான சத்திய வார்த்தைகளைக் கேட்கவில்லை. அந்த வார்த்தைகள் அவர்களை உணர்த்தவுமில்லை, உண்மை சார்ந்து செயல்பட வலிமையான வற்புறுத்தலை அவை கொடுக்கவுமில்லை. ஆனால் தேவ ஆவியினால் ஏவப்பட்டுப் பேசப்படும் தேவ வார்த்தைகளுக்கு மூன்று முக்கியமான அடையாளங்கள் அல்லது செயல்பாடுகள் உண்டு.

ஒன்று, சத்தியம் ஒரு மனிதனுக்குள் அவன் தன்னைக் கண்டு கொள்ளும் விதமான ஒரு உண்மையை அறிவிக்கும். **இரண்டாவது,** அந்த உண்மையைக் குறித்த அறிவு அவன் தன்னை சரி செய்யும் படியான ஒரு ஆழமான வற்புறுத்தலைக் கொடுக்கும். **மூன்றாவதாக** சத்திய வார்த்தை அந்த மனிதன் தனக்குள் மாறுவதற்குத் தேவையான நம்பிக்கையையும், ஊக்கத்தையும் கொடுக்கும்.

சத்திய வார்த்தைகள் ஒரு மனிதன் தன்னிடமுள்ள தகாதவைகளைக் கண்டுகொள்ளக் கண்களை திறப்பதோடு, தன்னைச் சரி செய்வதற்கான ஒரு விருப்பத்தையும், வலிமையையும் கொடுக்கின்றன. சிலர் தங்களை அறிவார்கள். தங்களிடம் மாற்றங்கள் அவசியம் என்பதை உணர்வார்கள். ஆனால் அது சாத்தியமற்ற விஷயம் என்ற சிந்தையோடு வாழ்வார்கள். எனவேதான் அநேகர் பிரசங்கங்கள் கேட்கும் போதும், நல்ல புத்தகங்களைப் படிக்கும் போதும், கர்த்தர் பேசினார். கர்த்தர் உணர்த்தினார், என்றெல்லாம் சொல்வார்கள். அதே வேளையில் அவ்விதம் மாறுதல்கள் செய்வதோ முடியாத காரியம் என எண்ணுவார்கள். ஆனால் சத்திய வார்த்தைகளில் சத்தியம் மட்டும் அல்ல, சத்துவமும், வல்லமையும் உள்ளது.

ஆனால் மனந்திரும்பித் தன்னிடத்தில் மறுபிறப்பின் அனுபவத்தைக் கண்ட மனிதன் மட்டுமே அந்த சத்துவத்தையும் வல்லமையையும் பயன்படுத்த முடியும். ஏனென்றால் எல்லோரும் கேட்கவும், அறியவும் முடியும். மனந்திரும்புதலின் அனுபவத்திற்கு வந்தவர்கள்தான் வார்த்தைகளின்படி வாழ்ந்து காட்ட முடியும்.

தேவனுடைய சத்தத்திற்கு இணங்காத இருதயத்திற்கு இறைச்சித்தம் ஒரு போதும் தெரிவதில்லை.

ஜீவ நீரோடை

வாடகை வீடு

1 நாளாகமம் 17:15-27

நித்திய வீடு... நமக்கு உண்டென்று..
11 கொரிந்தியர் 5:1

11 கொரிந்தியர் 5:1-17

நண்பர் ஒருவர் மாதந்தோறும் அனேகம் சிரமங்களுக்கிடையே ஒரு தொகையை வங்கியில் சேமித்துக் கொண்டிருந்தார். "எனக்கென்று சொந்தமாக ஒரு வீடு கட்டி, என்றைக்குக் குடியிருக்கிறேனோ அன்றைக்குத்தான் எனக்கு நிம்மதி வரும். எனவேதான் இவ்வளவு சிரமங்களுக்கிடையிலும் பணம் சேகரிக்கிறேன்" என்று கூறினார் அவர். வாடகை வீடு என்றைக்குமே நிலையில்லாதது. அங்கே பல சிரமங்கள் உண்டு. எனவே சொந்த வீடு நமக்குத் தேவை. ஆனால் இந்த உலகமும் நமக்கொரு வாடகை வீடுதான். இது நமக்கு நிலையானதல்ல. நம்முடைய உடல் நாம் தங்கும் வாடகை வீடுதான். இந்த உடலிலிருந்து ஒரு நாள் ஆத்துமா வெளியேற்றப்படும். இந்த வாடகை வீடு நமக்குச் சுகமானதல்ல. நமக்கென்று சொந்த வீடு வேண்டும். இதை நாம் அனுதின வாழ்வில் உணருகிறோமோ? இதற்காக நம்முடைய வாழ்க்கையில் நாம் ஏற்கும் சிரமங்கள் எவ்வளவு? இதற்காக நாம் எவ்வளவு பரலோக வங்கியில் சேமிக்கிறோம்?

மண்ணுலகம் நமக்கு நிலையானதுமல்ல, சொந்தமானதுமல்ல. இந்த சரீரமும் அப்படியே. விண்ணுலகம் மட்டுமே நிலையானது, சுகமானது, என்றும் நமக்குச் சொந்தமானது. ஆனால் இந்த மண்ணுலக வாடகை வீட்டில் நாம் இருக்கும் போதே சிரமங்களுக்கிடையிலும், பரலோகத்திலுள்ள சொந்த வீட்டிற்காகச் சேமிக்க வேண்டும். பூமியில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்க்க வேண்டாம். பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷத்தைச் சேர்த்துவையுங்கள் என்றார் இயேசு (மத். - 6:20). வாழ்க்கையில் நிலையாமையைக் குறித்து ஒவ்வொரு நாளும் நாம் கண்டு கொண்டுதானிருக்கின்றோம். ஆனாலும் இவ்வுலக செல்வங்களிலும், ஆஸ்தி, அந்தஸ்துகளிலுமே முழு மனதையும் புதைய விட்டுக் கொண்டிருக்கின்றோம். கிறிஸ்துவுக்காக உண்மையான சாட்சியாக வாழ்வதும், கிறிஸ்துவைப் போன்று நற்குணங்களை உடையவர்களாக வாழ்வதும், கிறிஸ்துவோடு நெருங்கிய உறவோடு வாழ்வதுமே நமக்குத் தேவையான பரலோக சேமிப்பு.

ஆபிரகாம் தேவனால் கட்டி எழுப்பப்பட்ட அஸ்திபாரங்களுள்ள நகரத்திற்காகக் காத்திருந்தான் என்று வேதம் சொல்லுகின்றது. (எபி-11:10) அதாவது அவன் தேவனுடைய வீட்டிற்குச் செல்ல எப்போதும் ஆயத்தமாயிருந்தான் என்று அர்த்தம். இரயிலுக்காக, பேருந்துக்காகக் காத்திருக்கின்றவர்கள் எதிர்பார்த்த வாகனம் வருகின்றபோது உடனே ஏறிச் செல்வதற்கேற்ற தயார் நிலையோடு இருக்க வேண்டும். நாம் வேறு அலுவல்களிலே மூழ்கிக் கொண்டிருந்தால் எப்படி ஏறிச் செல்ல முடியும்? அதுபோல உலக வாழ்க்கைக் காரியங்களிலேயே மனம் மூழ்கிப்போய், மறு உலக வீட்டைக் குறித்த ஒரு விழிப்புணர்வு இல்லாவிடில் நம்முடைய நம்பிக்கைகளுக்குப் பயன் இன்றிப் போய்விடும்.

இறைவனின் ஐக்கியத்தை இதயத்தில் நேசிக்கும் அளவிற்குதான்
உலகத்தின் பாவத்தை வெறுக்கும் பலம் வரும்

ஜீவ நீரோடை

அழகு அவசியம்

ஆதியாகமம் 6:1–7 | **திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு – II பேதுரு 1:4** | II பேதுரு 1:1–11

தேவன் ஒரு மனிதனுடைய உண்மையான தோற்றத்தை அவனுடைய முகத்தில் அல்ல, அவனுடைய இருதயத்திலேயே அதனைப் பார்க்கின்றார். முகம் எவ்வளவு அழகற்றதாகவும் இருந்தாலும் இருதயம் அழகாயிருந்தால் அந்த மனிதனை தேவன் விரும்பி ஏற்றுக் கொண்டு அவனோடு தங்குவார். அவன் முகத்தில் தேவ தூதன் போல அழகாய்த் தோன்றினாலும், இருதயத்தில் அழகற்று தோன்றினால் அவனோடு தங்கமாட்டார்.

தேவன் அழகை ரசிப்பவர்தான். தேவன் தம்முடைய படைப்புகளிலெல்லாம் அழகு வெளிப்படச் செய்தார். எனவே தேவன் ஒரு மனிதனுடைய இருதயமும் அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார். ஆனால் மனித இருதயம் இயற்கையில் அழகற்றதும் அருவருப்பானதுமாகும். எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றுப் போனார்கள் என்று வேதம் சொல்கிறது. (ரோமர் - 3:23) மனிதனிடம் தேவ சாயல் இல்லாததால் அவர் அழகற்ற அவனோடு தங்குவதில்லை.

ஆயினும் தேவன் மனிதனுடைய இருதயத்தைத் தமக்கேற்ற உயர்ந்த நிலையில் அழகாக்கி அவனோடு தங்கியிருக்கவே விரும்புகின்றார். அவனைப் பரிசுத்த அழகுடையவனாக்கி, அவனோடு தேவன் தங்கியிருப்பதற்கான நிலை மையை ஏற்படுத்தவே, இயேசு இந்தப் பூமிக்கு வந்தார்.

ஆவிக்குரிய வாழ்க்கை என்பது ஆராதிக்கின்ற ஒரு வாழ்க்கை மட்டுமல்ல. அது தேவன் தங்குவதற்கேற்ற விதமாக அழகாக்கப்பட வேண்டும். எவ்வளவு தேவனை ஆராதிக்கின்றோம் என்பதைவிட, எந்த அளவிற்கு தேவன் விரும்பும் விதமாகப் பரிசுத்த அழகுடையவர்களாக இருக்கின்றோம் என்பதே முக்கியமானது.

நாம் மகிமை மேல் மகிமை அடைய வேண்டும். அதாவது இன்னும் இன்னும் பரிசுத்த அழகுடையவர்களாக மாற வேண்டும். ஒவ்வொரு நாளும் நம்முடைய இருதயம் தேவனுக்கு முன்பாக அவர் விரும்பும் விதமாக அழகாக இருக்கின்றதா என்ற சுயப்பரிசோதனை அவசியம். நல்ல குணங்களும், பண்புகளும், நல்ல மனோபாவங்களும், நல்ல சிந்தனைகளும், நல்ல எண்ணங்களும், நல்ல விருப்பங்களும்தான் பரிசுத்த அழகைப் பிரதிபலிக்கின்றவை. நான் பாவிதான், நான் குறைவுடையவன்தான் என்று ஒத்துக்கொண்டு, பரிசுத்த அழகற்றவர்களாக வாழ்வதில் திருப்தியடைந்து விடக்கூடாது.

எவ்வளவு அறிந்துகொண்டோம் என்பதல்ல.
எவ்வளவு அனுபவத்தில் கண்டோம் என்பதே முக்கியம்.

ஜீவ நீரோடை

அற்புதம் எப்போது?

1 இராஜாக்கள் 17:8-24

ஆழத்திலே... உங்கள் வலைகளைப் போடுங்கள்... லூக்கா 5:4

லூக்கா 5:1-11

நம்முடைய வாழ்க்கையில் இயேசு அதிரடியான அதிசயங்களையும், அற்புதங்களையும் செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். நம்மால் சாதிக்க இயலாதவைகளை தேவன் சாதித்துத் தர வேண்டும் என்று நாம் வாஞ்சிக்கின்றோம். அதே வேளையில் தேவன் அற்புதம் செய்கிறவர் மட்டுமன்றி, அற்புதங்களைப் பெறுவதற்கு நேராக நம்மை வழிநடத்துகின்றவர் என்பதையும் நாம் அறிய வேண்டும். அற்புதங்களை எதிர்பார்க்கின்றவர்களாக மட்டுமன்றி, அதனைப் பெறுவதற்கேற்ற தேவ வழிநடத்துதல்களை ஏற்று நாம் செயல்படவேண்டியது அவசியமாகின்றது.

இரவு முழுவதும் முயற்சித்தும் மீன்கள் எதையும் பிடிக்க இயலாமல் போன பேதுருவை, இயேசு அற்புதத்திற்கு நேராக வழிநடத்தினார். ஆழத்தில் ஏராளம் மீன்கள் உள்ளதை அவர் கண்டு, அந்தப் பகுதியை அவனுக்குக் காண்பித்தார். அந்த வழிகாட்டுதலை அவன் ஏற்று, சிரமப்பட்ட பின்புதான் ஏராளமான மீன்களைப் பிடித்த அற்புதம் நடந்தது. அற்புதங்களைப் பெற்றிட விசுவாசம் மட்டும் போதாது. விசுவாசத்தோடு தேவனுடைய வழி நடத்துதல்களையும் ஏற்றுச் செயல்பட வேண்டும். தேவன் காண்பிக்கின்ற திசை நோக்கி நாம் விசுவாசத்தோடு நடக்கும் போதுதான் அற்புதமான காரியங்களை வாழ்க்கையில் காணமுடியும்.

அநேகர் அற்புதமான காரியங்களை எதிர்பார்த்து ஜெபிக்கின்ற அளவிற்கு, தேவன் தங்களுடைய வாழ்க்கையில் வந்து வல்லமையாகச் செயல்படுவதற் கேற்றபடி வாழ்க்கையைச் செவ்வை செய்யத் தீவிரம் காட்டுவதில்லை. ஜெபமும் விசுவாசமும் மட்டுமே தேவனுடைய அற்புத நன்மைகளை நமக்குக் கொண்டு வந்து விடாது. முதலில் பரிசுத்தமான தேவன் நம்மிடம் தங்கிச் செயல்படத் தக்கவிதமாக, ஒரு பரிசுத்த வாழ்வை நம்மிடம் உருவாக்க அதிக விழிப்பாயிருக்க வேண்டும். ஏனென்றால் தேவன் நம்மோடு தங்கியிருந்துதான் நம்மை ஆசீர்வாதங்களையும், அற்புதங்களையும் காணச்செய்ய முடியும்.

இயேசு நம்மை ஆழ்ந்த ஜெப வாழ்க்கைக்கு நேராகப் போகச் சொல்கின்றார். ஆர்வம் மிகுந்த வேத தியானத்திற்கு நேராகப் போக நம்மைத் தூண்டுகின்றார். உண்மையான, வலிமையான ஒரு பரிசுத்த வாழ்க்கைக்கு நேராகப் போக நம்மை ஏவுகின்றார். எதற்காக? இந்த ஆழமான அனுபவங்களின் பின்னணியில்தான் நாம் தேடும் சமாதானமும், சந்தோஷமும், நன்மைகளும், ஆசீர்வாதங்களும் மிகுதியாக உள்ளன. இந்த வழிகாட்டுதலை ஏற்காமல், அற்புதங்களை மட்டும் எதிர்பார்ப்பது பயன் தராது. அவரின் திசைகாட்டுதலை ஏற்று முன்சென்றால், அங்கே அற்புதங்கள் அனேகம்.

எலியாவின் தேவன் எங்கே என்று கூப்பிடும் முன்பு
நீ தேவனுக்கேற்ற எலியாதானா என்பதைச் சிந்தி.

தேவன் தங்குமிடம்

எரேமியா 17:1-14

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனால் பெற்றதும் – 1 கொரிந்தியர் 6:19

1 கொரிந்தியர் 6:1-20

பாழடைந்து கிடக்கிறது ஒரு பழைய கட்டிடம். இந்தக் கட்டடத்தில் குற்றங்கள் புரிகின்றவர்களும், தகாத நடத்தைக்காரர்களும் வந்து தங்கியிருப்பதற்குத் தயக்கம் காட்டமாட்டார்கள். இந்த மோசமான கட்டிடத்தில் பாம்பு, பல்லி, பூரான், சிலந்தி வௌவ்வால் போன்ற பிராணிகள் தானாக வந்து சௌகரியமாகத் தங்கியிருக்கும். ஆனால் ஒரு சராசரி நல்ல மனிதனால், இந்தக் கட்டிடத்தில் ஒரு நாள் கூட விரும்பித் தங்கியிருக்க முடியாது.

அதுபோலவே ஒரு மனிதனின் இயற்கையான இருதயம், பரிசுத்தமான தேவன் தங்குவதற்கு ஏற்றதல்ல. தேவனுக்கேற்ற தெய்வீக அழகோ, நல்ல ஒழுங்குகளோ, இல்லாத மனித இருதயம் தேவன் தங்குவதற்குத் தகுதியானதல்ல. இந்த இருதயம் பிசாசுக்கு ஏற்றது. பிசாசானவன் இங்கே விரும்பி வந்து தங்கியிருப்பான். ஏனென் றால் பிசாசானவன் பாவத்தின் நடுவிலும், பரிசுத்தமற்றவைகளின் நடுவிலும் பிரச்சினையில்லாமல் தங்கக்கூடியவன். எந்த ஒரு அழைப்புமில்லாமல், அவன் தானாக வந்து அங்கு தங்கியிருப்பான்.

ஆனால் தேவனுக்கு அது முடியாதது. அதே வேளையில் மனிதன் தேவன் தங்குவதற்காகப் படைக்கப்பட்டவன். எனவேதான், அவன் தேவசாயலாகப் படைக்கப்பட்டான். ஆனால், பாவம் தேவனை விட்டு மனிதனை வெகுதூரம் போக வைத்ததால், மனிதன் தேவ சாயலற்று, பாவத்தின் உறைவிடமாக மாறிப் போனான். ஆயினும் தேவன் மனிதனிடம் தங்கவே விரும்புகின்றார். அதற்காகவே தேவன் மனு உருவில் பூமிக்கு வந்தார். மனிதனிடம் தங்குவதற்குத் தடையாக இருந்த பாவத்தை, அவனை விட்டு நீக்குவதற்குப் பாவ நிவாரணம் செய்தார். இதன் மூலமாக ஒரு மனிதன் தன்னை தேவன் தங்குமிடமாக மாற்றுவதற்கான மேன்மையான வாய்ப்பைப் பெற்றான்.

ஒரு மனிதன் இரட்சகராக இயேசுவை மனதார விரும்பி, தன்னிடம் வர அழைக்கும்போது அவர் வருகின்றார். அங்கே இயேசு வந்து அவனுடைய இருதயத்தை தேவன் தங்குவதற்கேற்ற விதமாக மாற்றுகின்றார். இதுதான் இயேசு ஒரு மனிதனிடம் செய்ய விரும்பும் முதலாவது நற்கிரியை.

நாம் நல்ல ஆராதனைக்காரர்களாகவும், ஜெபவீரர்களாகவும், ஊழியச் செயல்பாடுகள் நிறைந்தவர்களாவும், காணிக்கை வாரி வழங்குகின்றவர்களாகவும், இருக்கலாம். ஆனால் நாம் தேவன் தங்குவதற்கேற்றவர்களாக உள்ளோமா என்பதே முக்கியம். தேவன் தங்குவதற்கான ஆலயமாக, நாம் கிறிஸ்துவினால் மாற்றப்பட்டிருக்கின்றோமா என்பதே மிக முக்கியம்.

கோயில் கட்டினால் அது பக்தி
அவருக்கு உன்னைக் கோயிலாக்கினால் அதுதான் புத்தி.

வேகத்தைக் குறைக்கும் பாரம்

ஆதியாகமம் 50:14-26

இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தை வைத்தீர்களானால் – யாக்கோபு 3:14

யாக்கோபு 3:12-18

சமீபத்தில் பாண்டிச்சேரியிலிருந்து சென்னை செல்வதற்காக ஒரு பேருந்தில் பயணம் செய்தேன். அந்தப் பேருந்துக்குப் பின்னால் வந்த பேருந்துகள் யாவும் முந்திப் போய்க் கொண்டேயிருந்தது. நான் பயணம் செய்த பேருந்தோ ஆமை போல நகர்ந்து கொண்டிருந்தது. ஏனென்றால், அந்தப் பேருந்து அளவுக்கதிகமான பயணிகளால் நிரம்பியிருந்தது. ஆம், அதிகபாரம் வேகத்தைக் குறைக்கும்.

அதுபோலவே நம்முடைய வாழ்க்கைப் பயணங்களும், அளவுக்கதிகமாக நம்முடைய மனதைப் பாரப்படுத்திக் கொண்டிருந்தால், நம்முடைய முன்னேற்றங்களின் வேகம் மிகவும் குறைவாகவேயிருக்கும். ஏராளமான மக்கள் தங்கள் மனதைப் பிறரைக் குறித்த கசப்புகளாலும், கோபங்களினாலும், எரிச்சல்களினாலும் மிகுதியாகப் பாரப்படுத்திக் கொள்கின்றார்கள். எனவே அவர்களால் வெற்றியின் திசையை நோக்கி விரைந்து செல்ல முடியவில்லை. பிறரை மனதால் மன்னிக்கும் இயல்பு குறைவாயிருப்பதால்தான், அவர்கள் தங்கள் மனதை நோகச் செய்த ஒவ்வொருவரையும், ஒவ்வொரு செயலையும் மனதில் வைத்துச் சிந்தித்து, தங்களின் பயணங்களில் பின்தங்கி விடுகிறார்கள்.

யோசேப்பின் வாழ்க்கையில் எத்தனையோ தடைக்கற்கள் அவனுடைய முன்னேற்றப் பாதையில் வந்தபோதும், அவன் முன்னேறிப் போய்க் கொண்டேயிருந்தான். ஏனெனில் அவனுக்கெதிராக இழைக்கப்பட்ட அநீதிகளைக் குறித்தும், நம்பிக்கைத் துரோகங்களைக் குறித்தும், அவன் அதிகமாகச் சிந்தித்து தன் மனதைக் கசப்புகளால் பாரப்படுத்திக் கொள்ளவேயில்லை. யார் எதைச் செய்தாலும், அவை யாவும் தேவனுடைய பாதையில் நன்மைக்கேதுவாகவே மாறும் என்ற விசுவாசத்தோடே அவன் செயல்பட்டான். மன்னிக்கும் மனப்பான்மை அவனுக்கு அதிகமிருந்தது. எனவே ஒவ்வொரு தடைக்கல்லும், ஒரு புதிய ஆசீர்வாதத்திற்கு நேராக அவனை அழைத்துச் சென்றது.

மன்னிக்கும் மன உணர்வுகள் தினமும் நம்மிடம் செயல்படாவிட்டால், நம்முடைய மனதை ஏதாவது ஒரு விதத்தில் கசப்புகளும், கோப உணர்வுகளும் பாரப்படுத்தி, அமைதியையும், விடுதலையின் உணர்வுகளையும் அரித்துக் கொண்டேயிருக்கும். அதன் விளைவாக நம்முடைய கண்கள் வரப்போகிற நலமானவைகளைப் பார்க்காமல், நடந்துவிட்ட வருத்தமான விஷயங்களையே பார்த்துக் கொண்டிருக்கும். கண்கள் பின்னால் இருக்கும்போது கால்கள் ஒருபோதும் முன்னோக்கி வேகமாகச் செல்லாது. அநேகர் எவ்வளவோ மன சமாதானம் தேடியும் அதனை அடைவதில்லை. ஏனென்றால் சமாதானம் உள்ளே பிரவேசிக்க முடியாதபடி கவலைகளும், பலவித ஆசைகளும் அங்கே இதயத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறது.

இன்னொருவரைக் குறித்த வெறுப்பை வைத்திருக்கும் இருதயம் தேவ அன்பையும், சமாதானத்தையும் தனக்குள் தங்க வைக்க இயலாது.

ஜீவ நீரோடை

எது சரி ?

ஏசாயா 55:1-13

உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்
1 யோவான் 4:5

1 யோவான் 4:1-13

சில விஷயங்கள் அநேகரால் நல்லதாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வெகு சிலரே அவற்றைத் தவறானதாகக் காண்கின்றார்கள். ஆயினும் இச்செயலை நல்லது என்று முடிவு செய்து விட முடியாது. ஏனென்றால் இந்த பூமியில் நல்லவர்கள் மிகக் குறைவே. நலமற்றதை நலம் என்று காணும் கண்களுடைய நல்லவரல்லாதவர்களே அநேகர். எனவே அநேகர் சரி என்று எண்ணுவதெல்லாம் சரியாகவேயிருக்கும் என்று எண்ணிவிடக் கூடாது. எனவே எவ்வளவு பேரால் ஒரு விஷயம் சரி என்று எண்ணப்படுகிறது என்பதை விட, எப்படிப்பட்டவர்களால் சரி என்று எண்ணப்படுகிறது என்பதே முக்கியம்.

அவர்கள் உலகத்திற்குரியவைகளைப் பேசுகின்றார்கள், உலகமும் அவர்களுக்குச் செவி கொடுக்கும் என்றான் அப்போஸ்தலனாகிய யோவான். (1 யோவான் 4:5) உலகம் பெரும்பாலும் உண்மையற்ற ஓசைகளுக்குத்தான் அதிக மாகச் செவிகொடுத்திருக்கிறது என்பதே வரலாறுகள் கூறும் செய்தி. ஏனென்றால் உலகம் உண்மையற்றதாயிருப்பதால், அதனால் உண்மையானதைச் சரியாக அடையாளங்காண இயலாது.

எனவே எது சரி, எது தவறு என்பதை இந்த உலகத்தில் அநேகர் அடை யாளங் காட்டுவதை வைத்து உறுதிப்படுத்த முடியாது. இந்நாட்களில் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும், கள்ளப் போதகர்களுக்கும் கூடுகின்ற கூட்டம் வேறு யாருக்கும் கூடவில்லை. தேவனுடைய பெயரை பொய்யாய்ச் சொல்லுகின்றவர் களுக்குப் பின்னாலும், சத்திய அடிப்படையற்றவைகளைப் பேசுகின்றவர்களுக்குப் பின்னாலும்தான் பெருங்கூட்டம் செல்கிறது. பெருங்கூட்டத்தை வைத்துதான் அநேகர் தங்களுடைய செயல்களுக்கு அங்கீகாரம் தேடுகின்றார்கள்.

நானும் ஒரு காலத்தில் அநேகரால் நலமாக நம்பப்பட்டவைகள் யாவும் நலமா கவே இருக்கும் என்று எண்ணினேன். சத்திய ஆவியாகிய தேவ ஆவியானவரோடு என்னுடைய பழக்கங்களும், ஐக்கியங்களும் பெருகப் பெருக, கூட்டத்தின் அடிப்படையில் எது சரி என்று கணக்கிடாமல், தேவனுடைய சத்தியத்தின்படி எது சரி, எது தவறு என நிதானிக்கப் பழகிக் கொண்டேன். எது சரியானது என்று கண்டறியப்பட்டவைகளின் பின்னால் அநேகர் வராவிட்டாலும், சரியானவைகளோடு நிற்கிறோம் என்பது நல்ல திருப்தியைத் தருகிறது. ஏனென்றால் தேவன் பெரிய கூட்டத்தோடு அல்ல. சரியானதோர் சத்தியத்தோடு மட்டுமே இணைந்து நிற்கிறார்.

இதுதான் உண்மை என்றால் அதைக் கேட்க ஒருவரும் இல்லாவிட்டாலும் அதையே தொடர்ந்து சொல்.

மே 16

உள்ளே ஆசீர்வாதம்

சங்கீதம் 36:1-12

பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல... 3 யோவான் -2

3 யோவான் 1-14

சில வருடங்களுக்கு முன்பு முதல் முறையாக என்னை நேரில் சந்தித்த ஒருவர், என்னுடைய சூழ்நிலைகளை மிகுந்த ஆச்சரிய உணர்வோடு பார்த்தார். எனக்குச் சொந்த வீடு, நல்ல கார், நல்ல பர்னிச்சர் வசதிகள், வசதியான பொருளாதார நிலை ஆகிய எதுவும் இல்லாததைக் கண்டபோது, அவருக்கு என்மேல் ஒரு பச்சாதாபமே ஏற்பட்டுவிட்டது. நான் ஏதோ ஆசீர்வாதமற்ற வறட்சியான ஒரு வாழ்க்கை சூழ்நிலையில், குறைவுகளினால் வருந்திக் கொண்டிருப்பது போல எண்ணி, மிக மிக உருக்கமாக ஜெபித்தார். நான் விரைவில் சொந்த வீடு வாங்கவும், உயர்ந்த பொருளாதார நிலை அடையவும் அவர் போராடி ஜெபித்தார்.

அவருடைய கரிசனை எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால் அவர் என்னிடம் இல்லாத வசதி நிலைகளுக்காக அவ்வளவு உருகி, பாரத்தோடு ஜெபித்திருக்கத் தேவையில்லை என்பதே என் கருத்து. ஏனென்றால் சொந்த வீடும், காரும், வசதியும் எனக்கில்லையே என்று நான் வருந்திக் கொண்டிருக்கவில்லை. அவை எப்போதுமே குறைவுகளாக எனக்குத் தோன்றியதில்லை. நான் ஆசீர்வாதமற்ற சூழ்நிலையில் இருப்பதாக நான் எண்ணவில்லை. கர்த்தர் தந்த சமாதானம், சந்தோஷம், விசுவாசம், தேவ ஐக்கியம், நற்குணங்களில் வாழவேண்டும் என்ற வாஞ்சை, நித்திய வாழ்வின் நம்பிக்கை, எதிர்காலம் குறித்த பயமின்மை, இருப்பவைகளில் நிறைவு ஆகிய பல உள்ளான ஆசீர்வாதங்களை தேவன் கிருபையினால் தந்துள்ளார். அவை ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட நிறைவான மனமகிழ்ச்சியை அனுபவிக்கப் போதுமானவையாக உள்ளன.

தேவ ஆசீர்வாதங்கள் என்பவை வெளியில் நாம் பசுமையாக மிகுதியாகக் பார்க்கக் கூடியவைகள் அல்ல. உள்ளான மனநிலையில் பசுமையாக, செழிப்பாக உணருகின்றவைகளே தேவ ஆசீர்வாதங்களில் முதன்மையானவை. உள்ளான நிலையில் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு உணர்வைப் பெறுவதுதான் மிக முக்கியம். உள்ளத்தில் தேவ ஐக்கியம், அன்பு, உண்மை, நேர்மை, நம்பிக்கை, நற்குணங்கள், சமாதானம், சந்தோஷம் போதும் என்ற திருப்தி, விசுவாசம், எதிர்கால பயமின்மை போன்ற தெய்வீக ஆசீர்வாதங்கள் வந்து சேர்வதுதான் பெரிய விஷயம். அதற்காகத்தான் தேவன் முதலாவது கிரியை செய்கிறார். உள்ளுக்குள் பசுமையும், செழிப்பும், நிறைவும்தான் தேவனுடைய முக்கிய நோக்கங்கள். இவைகளை அடைந்துவிட்டால், வெளிப்புறக் குறைவுகள் மனதைப் பாதிப்பதில்லை. பொன்னையும், பொருளையும், வசதிகளையும், உயர்வுகளையும் ஒரே நாளில் தேவன் தரமுடியும். ஆனால் உள்ளத்திற்குள் ஒரு செழிப்பான நிலையை உணர, அவர் நமக்குள் நீண்ட காலம் கிரியை செய்ய வேண்டியுள்ளது. அது நடந்துவிட்டால் அதுவே ஆவிக்குரிய வாழ்க்கையின் வெற்றி.

இதயத்தில் எளிமையாயிராத எவரும், இறைவனின் ஐசுவரியத்தை அனுபவிக்கவேயில்லை.

வெறும் மரியாதை

ஆமோஸ் 5:21–27

உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை – ஆமோஸ் 5:21

ரோமர் 12:1–21

ஒரு முதலாளி தன்னுடைய வேலை ஒன்றிற்காக ஒருவனை நியமிக்கின்றான். இந்த வேலையாள் தன்னுடைய முதலாளிக்கு வணக்கம் சொல்ல வேண்டும். முதலாளியைப் பார்க்கும் இடங்களில் மிகவும் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும். அதே வேளையில் இவ்விதமான வணக்கத்தைப் பெறுவதற்காகவும், மரியாதையைப் பெறுவதற்காகவும் முதலாளி அவனை வேலைக்கு அமர்த்தவில்லை. அவன் முதலாளியின் வேலை தொடர்பான காரியங்களைச் சரியாகச் செய்ய வேண்டும். அவன் முதலாளி திருப்திப்படும் படியாக வேலைகளைச் செய்யாமல், வெறும் மரியாதை கொடுப்பதில் மட்டும் சரியாகயிருந்தால் முதலாளி விரும்பமாட்டார்.

அது போல தேவனுக்கு நாம் எல்லாவிதத்திலும் உரிய வணக்கத்தையும், மரியாதையையும், மகிமையையும், செலுத்த வேண்டும். சர்வ மகிமையும் மகத்துவமும் நிறைந்த தேவனுக்கு நாம் சரியான ஆராதனை மூலம் முழுமை யான மரியாதையையும் கனத்தையும் செலுத்த வேண்டும். அதே வேளை யில் நாம் ஆராதிப்பதற்காகவும், தொழுகை நடத்துவதற்காகவுமே அழைக் கப்படவில்லை. தேவனுடைய நோக்கம் நிறைவேறும் விதமாக நாம் செயல்பட வேண்டும். நாம் தேவனுடைய திட்டம் நிறைவேறும் விதமான ஒரு உண்மையான பரிசுத்தம் நிறைந்த வாழ்க்கையை வாழ வேண்டும்.

நாம் அவர் சொன்னபடி செயல்பட வில்லை. அவர் விரும்பிய விதமாக வாழவில்லை. அவர் பிரியப்படும் விதமான குணங்களாலும், நற்பண்புகளாலும் சாட்சிகளாக வாழவில்லை. அப்படியிருக்கும் போது நாம் அவரைத் துதித்து, ஸ்தோத்தரித்து, பாடிப் பரவசமடைந்து எப்படித்தான் சிறப்பாக ஆராதித்தாலும் அது அவருக்குப் பிரியமாயிருக்குமோ !

தங்கள் விருப்பப்படி வாழ்ந்துவிட்டு தேவனைப் பலவித பக்திச் செயல் களோடு. ஆராதனை செய்த யூதர்களை தேவன் விரும்பவில்லை. தேவனுடைய பரிசுத்தமான நோக்கங்கள் நிறைவேறும் விதமாக வாழாமலே மிகச் சிறப்பாகத் தொழுகை நடத்தி மரியாதை செலுத்திய யூதர்களின் பக்தியை தேவன் வெறுத்தார். இன்றைய கிறிஸ்தவர்கள் பலர் தாங்கள் சிறப்பாக தேவனுக்கு மரியாதை செலுத்திச் செய்யும் ஆராதனையிலேயே தங்களின் ஆவிக்குரிய தரத்தைப் பார்க்கின்றார்கள். ஆனால் தேவன் சொன்னபடி சாட்சிகளாய் வாழாமல், நாம் கொடுக்கும் மரியாதையெல்லாம் தேவனைக் கோபப்படுத்தவே செய்யும்.

மனம் திரும்பாத இருதயத்தில் உருவாகும் விசுவாசம் மலையளவாக இருந்தாலும் கடுகளவும் பயன் இல்லை.

அன்பின் வேடம்

பிரசங்கி 1:1-18

சுபாவ அன்பில்லாதவர்களாயும்...
11 தீமோத்தேயு 3:3

11 தீமோத்தேயு 3:1-17

விசுவாசி ஒருவர் ஏதாவது ஒரு சபையில் ஐக்கியமாகிட விரும்பினார். ஆனால் அவர் சென்ற சில சபைகளில் அவரை ஏன் என்று கேட்கவோ, கரிசனையாய் விசாரிக்கவோ யாரும் இருக்கவில்லை. தன்னை சம்பந்தம் இல்லாத ஒரு இடத்தில் அந்நியர் போல உணர்ந்து அங்கிருந்தெல்லாம் விலகினார். இறுதியில் வேறெதாவது சபையில் சேர விரும்பினார். எதேச்சையாக ஒரு ஞாயிறு ஆராதனை வேளையில் ஒரு சபையில் கலந்து கொண்ட அவர் சரியான இடத்திற்கு வந்துவிட்டதாக உணர்ந்தார். சபை பாஸ்டர் முதல் சாதாரண விசுவாசி வரை அவரை ஒரு பெரிய வி.ஐ.பி. போல ஏற்றுக்கொண்டு, அன்பான வார்த்தைகளைப் பேசினபோது மனங்குளிர்ந்து போய் அங்கேயே தன்னை இணைத்து கொண்டார். ஆனால் குதூகலமாக ஆரம்பித்த அவர் சில மாதங்களிலேயே அந்த பாஸ்டர் முதல் விசுவாசி வரை யாரிடமும் உண்மையான அன்பு இல்லையென்றும், எல்லோரும் போலித்தனமாக இருப்பதாகவும் உணர்ந்து, இனி எந்தச் சபையோடும் உறவு வைத்துக் கொள்ளக் கூடாது என்று முடிவெடுத்துவிட்டார்.

இந்நாட்களில் சில சபையினருக்கு அன்பாகப் பழகவும் தெரியவில்லை. அன்பாகப் பேசவும் தெரியவில்லை. இது அநேகரை வருத்தப்படுத்துகிறது. ஆனால் வேறு சில சபையினருக்கோ அன்பு என்றால் என்னவென்று தெரியவில்லை. அவர்களின் அன்பான சில வார்த்தைகளும், நடைமுறைகளும் அன்பைக் காணாமல் வருகின்றவர்களைப் பரவசப்படுத்தி விடுகிறது. ஆனால் அவர்களின் அருகில் சென்று பழக நேரிடுகிற போது, அவர்களின் அன்பற்ற செயல்பாடுகளைக் கண்டு விசனப்பட்டுப் போகிறார்கள். ஏனென்றால் அன்பைக் காண்பிக்கத் தெரியாதவர்களைவிட, வாயில் மட்டுமே அன்பை வைத்திருப்பவர்களால் அதிக துக்கம் உண்டு.

அன்பைக் காண்பிக்காதவர்களை விட, போலியான அன்பு காண்பிக்கின்றவர்கள் அநேகருடைய இடறுதலுக்குக் காரணமாகின்றார்கள். உள்ளேயும் அன்பில்லை, வெளியிலும் அன்பில்லை என்றால், அவர்களை நாம் எளிதாக அடையாளங்கண்டு விலகிப்போகலாம். ஆனால் உள்ளத்தில் அன்பின்றி, உதட்டில் மட்டும் அன்பை வைத்திருப்பவர்களின் உண்மை நிலையைக் காண வாய்ப்பில்லாததால் ஏமாற்றங்களுக்கும், வஞ்சகங்களுக்கும் அவை வழி உண்டாக்குகின்றன.

ஆம். நம்முடைய அன்பு மாயமற்றதாக இருக்கவேண்டும். பாலைவனப் பயணியை ஏமாற்றும் கானல் நீரைப் போல நம் அன்பு இராமல், பிறர் நம்மை அன்பானவர்கள் என்று நம்பியது தவறல்ல என்று விளக்குவதாக நம்முடைய அன்பு வாழ்க்கையில் வெளிப்பட வேண்டும்.

பிறரின் அன்பை அதிகமாகத் தேடினால் பிறர் மேலுள்ள உன் அன்பை விரைவில் இழந்துவிடுவாய்.

ஜீவ நீரோடை

நற்சிந்தனைகள்

சங்கீதம் 1:1-6 | **அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் – சங்கீதம் 1:2** | எபிரெயர் 4:1-16

ஒரு மனிதன் நன்றாக உண்டு சரீரத்தில் பலம் அடைந்தால்தான், அவனால் கடினமான வேலைகளைச் செய்ய இயலும். உழைக்கும் ஆர்வமும். செயல்படும் விருப்பமும் இருப்பதால் மட்டும் அவனால் கடினவேலைகளைச் செய்துவிட முடியாது. அது போல நாம் நம்முடைய இருதயத்தில் ஆவிக்குரிய பலம் பெற்றால்தான், கர்த்தரின் விருப்பங்களின்படி செயல்பட இயலும்.

நற்குணங்களோடு வாழ்வதும், நற்சிந்தை சார்ந்து செயல்படுவதும், நற்செயல்களில் ஈடுபடுவதும் எளிதானவையல்ல. நாம் நல்லவர்களாக வாழ விரும்புவதால் மட்டும், நல்லவர்களாக வாழ்ந்து விட முடியாது. நமக்கு நல்ல ஆகாரம் வேண்டும். சரீரம் நல்ல ஆகாரங்களால் பலமடைகின்றது. இருதயம் நல்ல சிந்தனைகளாலும், நல்ல எண்ணங்களாலும், நல்ல ஆலோசனைகளாலும், நல்ல கருத்துக்களாலும், உண்மைகளினாலும் பலமடைகிறது. எனவே நமக்குள் நற்சிந்தனைகளையும் உண்மைகளையும், நற்போதனைகளையும் கொண்டுவர வேண்டும். அவை எந்த அளவிற்கு உள்ளே வருகின்றதோ, அதனுடைய அடிப்படையில்தான் நல்ல வாழ்க்கையை வாழ முடியும்.

வேதம் வாசித்து வேத உண்மைகளை உள்வாங்க வேண்டும். தேவனோடு சம்பந்தப்பட்ட உண்மைகளை உள்ளம் அறியச் செய்ய வேண்டும். நல்ல கருத்துக்களையும், நல்ல அறிவுரைகளையும் உட்கொள்ள வேண்டும். வேத சத்தியங்களும், தெய்வீக சிந்தனைத் தூண்டுதல்களும் இருதயத்திற்குள் வரும் போது, உள்ளத்திற்குள் நல்லெண்ணங்களும், நல்ல நினைவுகளும், நல்ல உணர்வுகளும் ஏற்படும். அதனுடைய விளைவாக நற்குணங்களுடன் வாழவும், நற்சிந்தை சார்ந்து செயல்படவும் தேவையான ஆத்தும பலம் கிடைக்கும்.

எனவேதான் மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று வேதம் கூறுகின்றது. (உபாகமம்-8:3) தேவன் தம்முடைய வேத வார்த்தைகளின் வாயிலாகவும் நமக்குள் சிறந்த சிந்தனைகளை ஏற்படுத்துகின்றார். நமக்குள் அவர் நல்ல வார்த்தைகளைப் பேசியும் சிறந்த சிந்தனைகளை ஏற்படுத்துகின்றார். எனவே நாம் கவனித்து வேதத்தைப் படிக்கவும், கருத்துடன் கர்த்தரின் வார்த்தைகளைக் கேட்கவும், அமைதியாய் அமர்ந்திருந்து அவருடைய காரியங்களைச் சிந்திக்கவும் பழக வேண்டும்.

வேத வார்த்தைகள் வாழ்க்கையின் சுவாசமாகட்டும். எந்தத் துன்பப் புயலுக்கும் அசையாத விசுவாசம் அதனால் வரும்.

போதனையும், போதகரும்

மத்தேயு 11:25-30 | **என்னிடத்தில் வந்து என் வார்த்தைகளைக் கேட்டு... லூக்கா 6:47** | லூக்கா 6:39-47

அனேகர் இரட்சிக்கப்பட்டேன் என்பார்கள். ஆனாலும் அவர்கள் இயேசுவின் போதனைகளோடு தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டார்களேயன்றி, இயேசுவோடு ஐக்கியம் கொள்ளவில்லை. இயேசுவின் உயர்ந்த கட்டளைகளை கடைப்பிடித்தார்களேயன்றி, இயேசு என்ற நபரோடு உறவு கொண்டு அவருடைய கரத்தைப் பிடித்துக் கொள்ளவில்லை. எனவே இயேசுவின் போதனைகளின்படி நீண்டகாலம் வாழ முடியாமல் இடையில் பின்வாங்கிப் போகிறார்கள். இறை வாழ்க்கை என்பது இறைவன் அருளிய இறை நெறிகளை மட்டும் ஏற்றுக் கொள்வதல்ல. இறைவனோடு நாம் ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்தி, அந்த ஐக்கியத்தில் வளர்வதே இறை வாழ்க்கை. அப்போதுதான் இறை நெறிகளை நம்மால் வாழ்க்கையில் செயல்படுத்த முடியும்.

போதனைகளோடு அல்ல. போதகரோடு நாம் முதலில் உறவையும், ஐக்கியத்தையும் கொள்ள வேண்டும். அதன் விளைவாக நம்மில் நிறைவேறுவதே இரட்சிப்பு. முதலாவது நம் பாவங்களை உணர்ந்து இயேசுவிடம் வரும்போது அவர் நம்மை ஏற்றுக் கொள்கின்றார். அன்றிலிருந்து நம்முடன் ஒருவர் சேர்ந்து வாழ்கிறார், வருகிறார் என்ற உண்மையான விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். நாம் எதைச் செய்தாலும், பேசினாலும் நம்முடன் வாழ்கின்றவருக்கு அது பிரியமாயிருக்குமா என்ற கேள்வியோடு வாழவேண்டும். அப்போது நமக்குள்ளிருந்து ஒருவர் நம்மை நடத்துவதையும், போதிப்பதையும், தடுப்பதையும், செயல்பட உந்துவதையும் நாம் நமக்குள் உணர முடியும். அதுவே ஐக்கியம். அந்த அனுபவம் தொடரும்போது இரட்சிப்பு நம்மில் செயல்படும் உண்மையாக மாறும். அங்கே அவர் நம்மை மாற்றுவதை அறிய முடியும்.

அநேகர் கிறிஸ்து நாதர் போதித்த பல போதனைகளைத் தங்களின் வாழ்க்கையில் கடைபிடிக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் அவர்களிடம் ஒரு கணிசமான மாற்றம் வாழ்க்கையில் இல்லை. சில விஷயங்களில் நல்ல ஒழுங்குடையவர்களாகயிருந்த போதிலும், அன்பு, தாழ்மை, ஏற்றுக்கொள்ளுதல், பிறரைத் தாங்குதல், பிறரின் பலவீனங்களைச் சகித்தல், போன்ற நற்பண்புகளில் அவர்கள் மிகவும் பின் தங்கியிருப்பார்கள். ஏனென்றால் கிறிஸ்துவின் ஐக்கியத்தினால் மட்டுமே பிறரை நேசிக்கவும், பிறருக்கு உதவவும், தாழ்மையுடனிருக்கவும் ஒரு நல்ல தாகத்தையும், தூண்டுதலையும் பெற முடியும். நியாயப் பிரமாணத்தால் நாம் நீதிமானாக முடியாததால்தான், தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனுடைய ஐக்கியத்தை நமக்கு அளித்து, அதன் மூலம் நாம் நீதிமானாக வழி ஏற்படுத்தினார். ஆம். கிறிஸ்துதான் நம்முடைய நீதியும் பரிசுத்தமுமாயிருக்கிறார். (1 கொரி - 1:31)

உன் இதயத்தை இறைவனோடு பிணைத்துக் கொள்ளாதவரை, உன் வாழ்க்கையில் இறை நெறிகளைப் பின்பற்றுவது இயலாத காரியமே.

ஜீவ நேரம்

வாழ்வது யாருக்காக?

சங்கீதம் 27:1-14

சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் – 1 கொரிந்தியர் 6:20

1 கொரிந்தியர் 6:1-20

ஒருவர் தனியாகச் சமைத்து சாப்பிடுவாரென்றால் மிகச் சாதாரணமாக சமைத்துச் சாப்பிடுவார். அதே வேளையில் சில விருந்தினர்கள் வந்தால் மிக விசேஷமாகச் சமைப்பார். ஒருவர் தான் தங்குகின்ற அறையைத் தனக்குத்தானே என்ற எண்ணத்தில் மிக மோசமாகக் கூட ஒழுங்கின்றி வைத்திருப்பார். அதே வேளையில் முக்கியமான ஒருவர் அந்த அறையில் தங்கப் போவதாக இருந்தால், அதனை மிகச் சுத்தமாகவும், மிக அழகாகவும் வைத்துக் கொள்ள அதிகக் கரிசனையாயிருப்பார். ஒருவர் வீட்டில் இருக்கும் போது மிக, மிகச் சாதாரணமான உடையில் இருப்பார். நாலு பேருக்கு முன்பாகச் செல்லும் போதோ, மிக நன்றாக உடுத்துவார். ஆம். இன்னொருவருக்காக என்றால் நாம் எதையும் விசேஷமாகச் சிந்திக்க ஆரம்பித்து விடுகின்றோம்.

அது போலவே இறை வாழ்க்கையும், நாம் நம்மைப் பிரியப்படுத்தி வாழ்ந்த காலத்தில், எப்படியெல்லாமோ வாழ்ந்தோம். ஆனால் தேவனைப் பிரியப்படுத்தி வாழ அழைக்கப்பட்ட நாம், நம்முடைய மனதிற்குப் பிரியமாக அல்ல. தேவனுக்குப் பிரியமாக வாழப் பழக வேண்டும். நாம் நமக்காக வாழாமல், இந்த வாழ்க்கையை தேவனுக்காக, தேவனுடைய பிரியங்களுக்காக வாழ வேண்டும்.

இனி நாம் எதையாவது சிந்தித்தாலும், பேசினாலும், செய்தாலும், அவை தேவனைப் பிரியப்படுத்தும் விதமாக இருக்க வேண்டும். ஏனென்றால் இந்த வாழ்க்கையில் கர்த்தருக்காகச் சிலவற்றைச் செய்வதல்ல. இந்த வாழ்க்கையை இனி ஆண்டவருக்காக அவருடைய சுவைக்கேற்ப வாழ வேண்டும். ஏனென்றால் “இனி நான் அல்ல, கிறிஸ்துவே என்னில் வாழ்கின்றார்” என்பதே கிறிஸ்தவம். அதாவது இப்போது என் வாழ்க்கை சாதாரண மனித ரகமானது அல்ல. அது தெய்வீக ரகமானது.

உங்களுடைய மிக முக்கிய அந்தஸ்தான உறவினர் உங்கள் இல்லத்தில் தங்கும் போது எல்லாம் மாறுகிறதே. வீடு சுத்தமும் ஒழுங்குமாக இருக்கிறது. சாப்பாடு மிக சுவையாக இருக்கிறது. உடைகள் மிக நன்றாகத் தோன்றுகின்றன. பேசப்படும் விஷயங்களும் நல்ல தரமாக இருக்கின்றன. ஏனென்றால் இப்போது எல்லாம் அந்த உறவினருக்காகவே செய்யப்படுகிறது. கிரயத்திற்குக் கொள்ளப்பட்ட நாம், எல்லா விதத்திலும் தேவன் மகிமைப்படும் விதமாகவே செயல்பட வேண்டும். ஏனென்றால் இனி நம் வாழ்க்கை நமக்காக அல்ல, தேவனுக்காக.

நிகழ்காலத்தில் செய்ய வேண்டியது என்ன என்று சிந்தி எதிர்காலத்தில் என்ன செய்வேன் என்ற பயம் வராது.

பரிசுத்த சூழ்நிலை

ஏசாயா 1:10-20

தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது. - ஏசாயா 1:13

1 கொரிந்தியர் 6:11-20

ஊழியத்திற்காக ஒரு குறிப்பிட்ட பட்டணத்திற்குச் சென்றிருந்த தேவ ஊழியர் ஒருவரை, அந்தப் பட்டிணத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தார் மிகுந்த அன்போடு தங்களின் வீட்டில் தங்க வைத்து, உபசரித்தனர். அவர்களின் அன்பும், கரிசனையும், உபசரிக்கும் பண்பும் மிக அதிகமாக இருந்தது. ஆயினும் அந்த தேவ ஊழியர் அந்த வீட்டில் தங்கியிருந்த நாட்களில் மிகவும் அதிருப்தியாகவே காணப்பட்டார்.

ஏனென்றால் அந்த வீட்டார் அன்பு, பண்பு, உபசரிப்பு ஆகியவற்றில், மிகுந்த கரிசனையாயிருந்த போதிலும், சுத்தம், ஒழுங்கு ஆகிய விஷயங்களில் மிகவும் பின் தங்கியிருந்தனர். அழுக்கேறிய படுக்கை விரிப்புகள், பல நாட்களாய்க் கழுவப்படாத வாஷ்பேசின், நாற்றம் வீசும் குளியலறை என ஒரு சுத்தமற்ற சூழ்நிலை அந்த ஊழியருக்கு மனக்கஷ்டத்தையே கொடுத்தது.

இதுபோல தேவன் மேல் நாம் காண்பிக்கும் அன்பு, பக்தி ஆகியவையும், அவருக்கு நாம் செய்கிற ஆராதனை, கொடுக்கின்ற காணிக்கை ஆகியவையும் நம்முடைய உள்ளத்தின் அன்பை வெளிப்படுத்துகின்றவையாக இருக்க முடியும். தேவனுடைய அன்பையும், ஐக்கியத்தையும், உறவையும் அதிகமாகத் தேடுகிறவர்களாகவும் நாம் இருக்க முடியும்.

அதே வேளையில் இவை யாவும் இருந்தாலும், தேவன் நம்மோடு தங்கத்தக்கதான ஒரு பரிசுத்தமான சூழ்நிலை நம்மிடம் காணப்படாவிட்டால், தேவன் நம்மிடம் விருப்பத்தோடு தங்கியிருக்க முடியாது. தவறான சுபாவ நிலைகள், விரும்பத்தகாத குணநிலைகள், அசுத்தமான மனநிலைகள் ஆகியவற்றை வைத்துக் கொண்டே, நாம் தேவனைப் பிரியப்படுத்தி, அவரை ஆராதித்து கனப்படுத்த விரும்பலாம். ஆனால் தேவன் நம்மோடு தங்குவது என்பது, நாம் என்ன செய்கின்றோம், என்ற அடிப்படையில் அல்லாமல், நாம் எப்படி இருக்கிறோம் என்ற அடிப்படையிலேயே இருக்கிறது.

ஏசாயா தீர்க்கனின் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் பலவித ஆராதனை களினாலும், பக்திச் செயல்களினாலும், தேவனைக் கனப்படுத்திட விரும்பிய போது, தேவனோ அவைகள் தமக்கு அரோசிகமாகவும், அருவருப்பாகவும் இருப்பதாகக் கூறினார். (ஏசாயா - 1:11, 13) ஏனென்றால் அவர்களின் வழிபாடுகள் நல்லதே. ஆனால் அவர்களின் இதயநிலைகளோ அழுக்கடைந்ததாக இருந்தன. எனவே தேவன் அவர்களின் ஆன்மீகத்தை விரும்பி ஏற்று அவர்களை ஆசீர்வதிக்க முடியவில்லை.

அழுக்கான பாத்திரத்தில் உள்ள அருமையான உணவும் பரிசுத்தமில்லா மனிதனுடைய பக்தி வழிபாடுகளும் விரும்பப்பட இயலாதவையே.

ஜீவ நீரோடை

காரணம் யார் ?

நெகேமியா 1:1-11

பாவங்களை அறிக்கையிடுகிற அடியேனுடைய ஜெபத்தை – நெகேமியா 1:6

1 யோவான் 1:1-10

தோல்வியின் காரணங்களை மனிதன் பெரும்பாலும் பிறரிடமே தேடுகிறான். இல்லையென்றால் சூழ்நிலைகளைக் காரணம் காட்ட விரும்புகின்றான். இவ்விதம் பார்ப்பதினால் இந்த விஷயத்தில் தோல்விகளின் காரணம். நம்முடைய பக்கத்தில் இல்லை, என்று காட்டி விட்டால் அற்பமானதோர் திருப்தி கிடைக்கலாம்.

ஆனால் இதனால் நமக்கு நஷ்டமேயன்றி, லாபமொன்றுமில்லை. ஏனென்றால் இந்த விதமான அணுகுமுறை இன்னும் நாம் திரும்பத் திரும்பத் தோல்வியடைவதற்கு எளிதாக காரணங்களை உருவாக்கும். ஏதோ ஒரு விதத்தில் தோல்வியின் காரணம் என் பக்கத்திலும் உள்ளது என்று ஒத்துக் கொள்ளும் மனம் இருந்தால், எதிர்காலத் தோல்விகளைத் தவிர்க்க வழி ஏற்படும்.

குடும்பப் பிரச்சினைகள் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து இறுதியில் மொத்தக் குடும்ப வாழ்க்கையும் தோல்வி அடைவது ஏன்? குடும்பத்தில் ஏற்பட்ட அமைதிக் குறைவுகள், சந்தோஷக் குறைவுகள், உறவுப் பிரச்சினைகள், சண்டை சச்சரவுகள் யாவற்றிக்கும் நானல்ல மற்றவர்தான் காரணம் என்று சிந்திப்பதுதான். மற்றவரிடம் குறைகளும் தவறுகளும் இருந்தது உண்மைதான். ஆயினும் என்னுடைய தவறுகளும் குறைவுகளும் அங்கே இணைந்துதான் பிரச்சினைகளைப் பெரிதாக்கியிருக்கிறது என்ற சிந்தனை வேண்டும்.

நாம் நன்றாக நடந்து கொண்டிருந்தால் தோல்விகளைத் தவிர்த்திருக்கலாம். நம்மிடம் நல்லெண்ணமும், சாந்தமும், பொறுமையும், நல்ல நோக்கங்களும், தேவனைக் கனப்படுத்தும் சிந்தையும் இருந்திருந்தால், பிரச்சினை இந்த அளவிற்கு உச்சத்திற்குப் போயிருக்காது. மற்றவர்களின் தவறான குணாதிசயங்கள் மட்டுமே மோசமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை. அவற்றை சற்று தாங்கவும், சகிக்கவும், பொறுக்கவும் இயலாத மன நிலைகளிலும் வேதனையான விளைவுகள் ஏற்படுகிறது.

நெகேமியா குற்றமற்றவனாயிருந்தும், எருசலேமில் ஏற்பட்ட தோல்வி களுக்குத் தன்னையும் ஒரு காரணமாக்கத் தயங்கவில்லை. எனவே தோல்வியின் விளைவுகளால் ஏற்பட்ட சூழ்நிலைகளைச் சரிசெய்ய அவனால் நல்ல சில காரியங் களைச் செய்ய முடிந்தது. ஆம். தோல்வியின் காரணங்களை முதலாவது நமக்குள் நாம் தேடுவோம்.

இன்று நீ மறைக்கும் தவறுகள் என்றாவது ஒரு நாள் பிறர் பார்வைக்கு வரவே செய்யும்.

சிகிட்சையின் வேதனை

புலம்பல் 3:1-31

கசப்பினாலும், வருத்தத்தினாலும் என்னை வளைந்து கொண்டார்... புலம்பல் 3:5

1 பேதுரு 5:1-14

ஒரு நல்ல மருத்துவர் தன்னிடம் வருகின்ற நோயாளி நோயினால் பாதிக்கப்படக் கூடாது என்ற குறிக்கோளைக் கொண்டிருக்கலாம். ஆயினும் தன்னுடைய சிகிட்சை நோயாளிக்குக் கொஞ்சங்கூட வேதனையாக இருக்கக் கூடாது என்ற குறிக்கோளைக் கொண்டிருக்க முடியாது. வியாதியஸ்தர்கள் சற்று கூட வலி உணரக்கூடாது என அவர் விரும்பினால், அவர் ஒரு சரியான, முறையான சிகிட்சையை கொடுக்க முடியாது.

தேவன் நமக்குச் சந்தோஷத்தையோ, சமாதானத்தையோ தர விரும்பினால், அதனை நம்மை எந்த விதத்திலும் தொந்தரவு செய்யாமல் வைத்துக் கொண்டே தந்துவிட முடியாது. நம்முடைய இதயத்தை விட்டும், வாழ்க்கையை விட்டும், சில ஆகாத சுபாவங்களையும், குணங்களையும் விலக்காமலே சமாதானமும், சந்தோஷமும் வந்துவிடாது. எனவே சில தீய குணங்களையும், பழக்கங்களையும், செயல்களையும் அவர் நம்மைவிட்டு அகற்றும்படி கிரியை செய்கின்றார்.

சில வேளைகளில் அவை நமக்கு சற்று மனவிசனத்தையும், கஷ்டத்தையும் தர முடியும். ஆரோக்கியத்திற்கு ஊறுவிளைவிக்கும் ஒரு கட்டி சரீரத்தில் இருந்தால், அதனை அறுவை சிகிட்சை மூலம் வெட்டி எடுக்க வேண்டியது அவசியம். ஆனால் அது சற்று வேதனை தரும் விஷயம்தானே. பிறரைக் குறித்த கசப்பு, வெறுப்பு, வைராக்கியம், பழிவாங்கும் உணர்வு ஆகியவற்றை வைத்துக் கொண்டு மன அமைதியுடன் வாழ முடியாது. தவறான ஆசைகளையும், பொருளாசை சார்ந்த சிந்தனைகளையும், தாழ்மையற்ற மனநிலைகளையும் இதயத்தில் வைத்துக் கொண்டு, சந்தோஷமாக வாழ முடியாது.

எனவே நமக்கு மன மகிழ்ச்சியையும், ஆறுதலையும், சமாதானத்தையும் தேவன் தர விரும்பும் போது, ஆகாத சுபாவங்களாகிய நோய்க் கட்டிகளை அகற்ற, சில வேதனையான சிகிட்சை முறைகளை மேற்கொள்வது தவிர்க்க முடியாதவை. சில சோதனையான சூழ்நிலைகள் வழியாக நடத்தித்தான், தேவன் இந்த சிகிட்சைகளைத் தருகிறார். துவக்கத்தில் அவை அதிருப்திக்கும், மனக்கஷ்டத்திற்கும் ஏதுவானவைகளாயிருந்தாலும், முடிவோ மிகவும் ஆசீர்வாதமாயிருக்கும். இந்தச் சிறிய வேதனையின் பாதையைக் கடந்து போகாமல், உண்மையான தேவாசீர் வாதங்களை அடைய முடியாது.

கசந்த மாரா வழியாக இறைவன் உன்னை நடத்தினால், அங்கே மதுரமாக்கும் மரமும் நிச்சயம் உண்டு என்பதை மறவாதே.

வாயின் வார்த்தைகள்

சங்கீதம் 12:1-8

நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது.
யாக்கோபு 3:8

யாக்கோபு 3:1-18

மற்றவர்களின் ஏதாவது ஒரு செயலோ, சுபாவமோ, நடத்தையோ, வார்த்தையோ நமக்குள் தூங்கிக் கொண்டிருந்த கோப மிருகத்தை எழுப்பி விட்டுவிடுகிறது. நாம் அந்த மிருகத்தை உடனடியாக அடக்கி வைக்க விரும்பாமல் கொஞ்ச நேரம் அதன் வழிக்கு விட்டு விடுகின்றோம். என்ன நிகழுகின்றது? கோப மான வார்த்தைகள், கோபமான உடல் மொழிகள், எரிச்சலின் பிரதிபலிப்புகள் யாவும் மேடைக்கு வந்து விடுகின்றன.

பல நேரங்களில் இதனால் நமக்கு என்ன நடக்கின்றது. நாம் எப்படி நமக்குள் மோசமாகச் சிந்திக்கவில்லையோ அப்படிச் சிந்திப்பது போல பிறருக்கு நம்மை காட்டுகின்றோம். மற்றவரைக் குறித்து நாம் எப்படி தவறாக நினைக்கவில்லையோ அப்படி நினைப்பது போல காட்டிக் கொள்கின்றோம். நாம் உண்மையில் எப்படி மோசமாகச் செயல்பட எண்ணவில்லையோ அப்படி எண்ணுவது போல காண்பிக் கின்றோம். அதாவது நம்மைக் குறித்து நாமே மற்றவருக்கு மோசமான சித்திரத்தைக் கொடுக்கிறோம்.

நம்முடைய கோப வார்த்தைகள் சூடாக வெளிவருகிறது. அந்த வார்த்தைகளின் படி நாம் நமக்குள் இல்லை. ஆனாலும் மற்றவரைக் குறித்த கோபம் நாம் நினையாத மோசமான நினைவுகளை நாம் நினைப்பது போல பிறரை நம்ப வைக்கிறது.

தாய் ஒருத்தி கோபத்தால் தன் பிள்ளையைப் பார்த்து நீ செத்தொழிந்தால்தான் நான் நிம்மதியாயிருப்பேன் என்கிறாள். மனைவி ஒருத்தி உன்னைப் போல மோசமான ஆளை உலகத்தில் பார்க்க முடியாது என்கிறாள். கணவன் ஒருவன் நான் செத்தால் நீ சந்தோஷமாயிருப்பாய் என்கிறான். இவையெல்லாம் இருதயத்தில் உணர்ந்து சொன்ன உண்மையான வார்த்தைகள் அல்ல. இவை கோப உணர்வைக் காண்பிக்கப் பயன்படுத்தப்பட்ட அர்த்தம் உணராத வார்த்தைகள். ஆனால் வாயிலிருந்து வெளிவந்துவிட்ட வார்த்தைகளின் அடிப்படையிலேயே அந்த நபர் புரிந்து கொள்ளப்படுவார்.

எல்லாவற்றையும் விட நம்முடைய வாயின் வார்த்தைகளின் மேல் மிக அதிகமான ஆளுகை வேண்டும். அவைதான் நம்மைப் பிறருக்கு மிகத் தவறாகக் காட்டும் நமது எதிரிகள். கிறிஸ்துவின் ஆளுகைக்குள் வாழ அழைக்கப்பட்ட நாம், என்ன பேசுகிறோம் என்ற விழிப்புணர்வை விடாமல் தக்க வைத்து, ஞானமாக நடந்து கொள்ள வேண்டும்.

நாவைச் சரியாகப் பயன்படுத்தத் தெரியாதவனின்
வாழ்க்கை ஒருவருக்கும் நல்ல பலனைத் தராது.

மே 26

பலவிதக் கண்ணாடிகள்

II கொரிந்தியர் 10:7-18

தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்... லூக்கா 16:15

ஏசாயா 6:1-7

பொருட்காட்சி ஒன்றிற்குச் சென்றிருந்தபோது அங்கே பலவிதக் கண்ணாடிகளைப் பார்வைக்காக வைத்திருந்தனர். ஒரு கண்ணாடிக்கு முன் சென்றால் அது ஒருவரை மிகப் பருமனாகக் காண்பிக்கும். இன்னொரு கண்ணாடி அவரை மிகவும் நோஞ்சானைப் போன்று காண்பிக்கும். வேறொரு கண்ணாடி மிக உயரமான ஆளாகக் காண்பிக்கும். இன்னொரு கண்ணாடி மிகவும் குட்டையாகக் காண்பிக்கும். ஒரு மனிதன் ஒரு விதமாக இருக்க, அந்தக் கண்ணாடிகள் ஒவ்வொன்றும் அவனை ஒவ்வொரு விதமாகக் காண்பித்தன.

நாம் எப்படியிருக்கிறோம்? நம்முடைய சரியான உருவம் எப்படி? இவைகளை நாம் அறிந்திருக்க வேண்டும். மனிதர்கள் பலவிதக் கண்ணாடிகளைப் போன்றவர்கள். சிலர் நாம் சாதாரணமானவர்களாக இருக்கும் போது, மிகவும் நல்லவர்கள் என்று நம்மைப் பார்த்துச் செல்வார்கள். சிலர் நாம் நல்லவர்களாக வாழும்போது மிகவும் மோசமானவர்கள் என்று சொல்வார்கள். சிலருடைய பார்வையில் நாம் எதற்கும் தகுதியற்றவர்களாளவும் இருப்போம். இவர்களின் அறிக்கைகளும், பார்வைகளும் நம்மைப்பற்றிய சரியான தகவலை நமக்குத் தருவதில்லை.

சில நேரங்களில் பிறர் நம்மை அளவுகளைக் கடந்து மெச்சும் போது, அதிகமாக மகிழ்ந்து விடுகின்றோம். அதுபோல யாராவது குறைத்துப் பேசிவிட்டால், மிகவும் துக்கமடைகின்றோம். ஏனென்றால் நம்முடைய சரியான நிலையை நாம் அறிந்திருக்கவில்லை. இந்த உலகம் எவ்வளவோ தவறான மனிதர்களைத் தலைசிறந்தவர்களாகப் பார்த்து, பாராட்டி அவர்களை உயர்ந்த ஸ்தானங்களிலே வைத்திருக்கிறது. பாராட்டுக்குரிய எத்தனையோ நல்லவர்களைத் தகுதியற்றவர்களாகப் பார்த்து, அவர்களை மிகச் சாதாரணமாக ஒதுக்கியிருக்கிறது.

நம்மைக் குறித்த மற்றவர்களின் அபிப்பிராயங்களை அசட்டை செய்துவிடக் கூடாது. அதே வேளையில் அவர்களுடைய மதிப்பீடுகளையே சரி என நினைத்து, நம்முடைய உண்மை நிலைக்கு மேல் உயர்வாக நம்மை பார்த்து விடாமலும், தாழ்வாகப் பார்த்துவிடாமலும் சரியாக நம்மைப் பார்த்தறிந்து, நிச்சயித்துக் கொள்ள விழிப்பாயிருக்க வேண்டும். நாம் எப்படியிருக்கிறோம் என்பதை நமக்குச் சரியாகச் சொல்பவர் தேவன் ஒருவரே. அவருடைய சமுகத்தில் நாம் அனுதினம் போய் நிற்கும்போது நம்மை நாம் இருக்கிறபடியே கண்டுகொள்ளும் ஒரு பெரிய பாக்கியம் கிடைக்கிறது. அவருடைய வெளிச்சத்தில் நம்மை நாம் சரியாகக் கண்டு நிச்சயித்துவிட்டால், பிறருடைய முகஸ்துதிகளாலோ, பொய்யான பாராட்டுகளாலோ மதிமயங்க மாட்டோம். அதுபோல பிறரது குற்றச்சாட்டுகளாலோ, இகழ்ச்சிகளாலோ சோர்ந்து போகவும் மாட்டோம்.

நம்மை இகழ்கிறவர்களை விட, புகழ்கிறவர்களால்தான் அதிக கேடு வருகிறது.

ஜீவ நீரோடை

தேவையும் ஆசையும்

சங்கீதம் 49:1-20

நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து – எபிரெயர் 13:5

எபிரெயர் 13:5-25

நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வயிறு நிரம்ப சாப்பிட வேண்டியதில்லை. வயிற்றின் அளவிற்கு அல்ல. உடலின் தேவையின் அளவிற்குச் சாப்பிட்டால் போதும். ஆனால் அநேகர் தேவையின் அடிப்படையில் அல்ல. தங்களுக்குள் இருக்கின்ற ஆசைகளின் அடிப்படையிலேயே சாப்பிடுகின்றார்கள். எனவே ஆரோக்கியக் குறைவுகளுக்கும் உடல் அசௌகரியங்களுக்கும் சாப்பாட்டு ஆசையே காரணமாகி விடுகிறது.

பணம் மனிதனுடைய தேவைகளைச் சந்திப்பதற்காகவே. பணம் ஒரு அளவிற்குத்தான் மனிதனுக்கு அவசியம். அளவுக்கதிகமாகச் சேர்க்க முடிந்த பணத்தால், அளவுக்கதிகமான சுகமும், சௌக்கியமும் கிடைக்கும் என்பது உண்மையல்ல. ஆனால் அநேகர், தங்களுடைய தேவைகளின் அடிப்படையில் அல்ல, தங்களுக்குள் இருக்கின்ற ஆசைகளின் அடிப்படையிலேயே பணம் சம்பாதிப்பதில் இடைவிடாமல் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். சிலர் சம்பாதிக்கும் பணத்தின் சிறுபகுதி கூட அவர்களுக்குத் தேவையாயிருக்கவில்லை. ஆனால் ஆசையோ கடைசி மூச்சிருக்கும் வரை இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றது. அநேகர் இரவும் பகலும் ஓய்வின்றி உழைத்துப் பணம் தேடுவது செலவிடுவதற்காக அல்ல. சேர்த்து வைக்கும் ஒரு ஆசையின் விளைவாகவே அவ்விதம் செயல்படுகின்றனர்.

சமீபத்தில் குறிப்பிட்ட ஒரு திருச்சபையில் நடந்த மூன்று நாட்கள் கூட்டங்களில், அந்தச் சபையின் செயலர் ஒரு நாள் கூட வரவில்லை. ஏனென்றால் அவர் பணம் சம்பாதிக்கும் அதிகமான அலுவல்களில் ஈடுபட்டு வேறெதற்கும் அவருக்கு நேரம் கிடைப்பதில்லை. கணிசமான நேரங்கள் நாம் உழைத்துச் சம்பாதிக்க வேண்டும். அதே வேளையில் நம்முடைய நேரங்கள் யாவும் அதிலேயே கரைந்து போகிறதென்றால், அது ஓர் ஆரோக்கியமற்ற வாழ்க்கை. நேரங்கள் முழுவதும் பணம் சம்பாதிப்பதற்காக அல்ல. வாழ்க்கையில் இன்னும் எவ்வளவோ பகுதிகள் இருக்கின்றன. தேவஉறவை சம்பாதிக்க வேண்டும், அன்பை சம்பாதிக்க வேண்டும், நற்பெயரை சம்பாதிக்க வேண்டும், நல்ல குணங்களை சம்பாதிக்க வேண்டும், நல்ல ஐக்கியங்களை சம்பாதிக்க வேண்டும், நல்ல சிந்தனைகளை சம்பாதிக்க வேண்டும், நல்ல ஓய்வு நேரங்களை சம்பாதிக்க வேண்டும், இவற்றிற்கு நேரங்கள் வேண்டும். நேரங்கள் யாவும் பணத்தேடலிலேயே கரைந்து போய்விட்டால் மனித வாழ்வு என்பது அர்த்தமற்றதாகிவிடும். பணம் சம்பாதிக்கும் இயந்திரமாக வாழ்வு மாறிவிடக் கூடாது என்ற எச்சரிக்கை அவசியம்.

பணத்தைக் கொண்டு பல பொருட்களை வாங்கலாம் ஆயினும்
உனக்குத் தேவையான எல்லாவற்றையும் அதனால் வாங்க முடியாது.

ஜீவ நீரோடை

சோதனைகள்

மத்தேயு 4:1-11 | **இயேசு பிசாசினால் சோதிப்படுவதற்கு... மத்தேயு 4:1** | 1 பேதுரு 1:1-9

வனாந்திரத்தில் இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்டார் என்பதை வேதத்தில் காண்கின்றோம். இந்தச் சம்பவம் மூன்று முக்கியமான காரியங்களை நமக்கு அறிவிக்கின்றது **ஒன்று** : தேவனுடைய பரிசுத்தப் பாதையில் நடக்க விரும்புகின்ற ஒவ்வொருவரும், சாத்தானுடைய பல விதமான சோதனைகளைச் சந்திக்க நேரிடும். இது நமக்கு ஒரு முன்னெச்சரிப்பாக இருக்கின்றது. பரிசுத்தப்பாதை சுமுகமான தொந்தரவற்ற பாதை அல்ல. அங்கே நாம் மனரீதியான உணர்ச்சி ரீதியான பலவித சோதனைகளைக் கடந்து செல்ல வேண்டியது கட்டாயமானது என்பதை அறிந்து அதற்கேற்ற முன்னறிவுடனும், தயார் நிலையுடனும் செல்லவேண்டும்.

இரண்டு : அவ்விதமாக சாத்தானால் நாம் சோதிக்கப்படுவது தேவனுடைய சித்தத்திற்கு அப்பாற்பட்டதல்ல. நாம் அவ்விதமான சோதனைகளை தேவ பலத்தால் சந்தித்து, ஜெயம் பெற வேண்டும் என்பது அவருடைய சித்தமாக யிருக்கிறது. சாத்தானால் சோதிக்கபடுவதற்காக ஆவியானவர்தான் இயேசுவை வனாந்திரத்திற்குக் கொண்டு போனார் என்று நாம் வேதத்தில் பார்க்கிறோம்.

மூன்று : அவ்விதமாகப் பிசாசானவனால் நாம் பலவிதமாகச் சோதிக்கப் பட்டால் கூட, நாம் நிச்சயம் வெற்றி பெற இயலும். இயேசு வேறுபட்ட நிலைகளில் சோதிக்கப்பட்ட போதிலும் அவர் தோல்வியுறவில்லை. அவர் பிசாசை மேற்கொண்டு விலகிப்போகச் செய்தார். இது நமக்கு மிகுந்த நம்பிக்கையை உருவாக்குகின்றது. மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனைகள் உங்களுக்கு நேரிடுவதில்லை என்று வேதம் நமக்கு உறுதி தருகிறது. (1 கோரி - 10:13) நாம் மேற்கொள்ள முடியாத அல்லது ஜெயிக்க முடியாத சோதனை என்று எந்த சோதனையும் இல்லை. முதலாவதாக சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் வேண்டும். இரண்டாவதாக சோதனைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக தேவனோடும், தேவ வார்த்தைகளோடும் நாம் பழகி ஆயத்தமாயிருக்க வேண்டும். சோதனை வந்தால் ஜெயம் பெற முடியும் என்ற விசுவாசத்திலும் உறுதி யாயிருப்போம்.

சோதனையான உணர்வுகள், எண்ணங்கள், ஆசைகள் ஆகியவற்றை அனுதினம் சாத்தான் விதைத்துக்கொண்டிருப்பான். சாத்தனுக்கு சோதனைக்காரன் என்ற பெயர் உள்ளதே. நாம் பாவத்திற்கேதுவாக, தவறுவதற்கு ஏதுவாக, தகாத விதமாகச் சிந்திப்பதற்கேதுவாக சாத்தான் சோதனைகளை நமக்குள் அனுப்புவான். அது பாவமல்ல, அவை பாவத்தூண்டடல்கள் மட்டுமே. அந்தத் தூண்டுதல்களுக்கு இசைந்து போவதுதான் பாவத்தை விளைவிக்கும். பாவத்தூண்டுதல்களையே பாவங்களாக எண்ணி நாம் வருந்தத் தேவையில்லை. தூண்டுதல்களை இனங் கண்டு கொண்டு, தேவ கிருபையை நாடினால் போதும்.

சோதனைகள் உன்னை உனக்குச் சரியாகக் காண்பிக்கும் கண்ணாடி. கண்டு கொள்ளாமல் போகாதே.

மாற்றத்தை விரும்பணும்

ஏசாயா 28:9-20

நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல்... மத்தேயு 18:3

மத்தேயு 18:1-20

தேவ ஊழியர் ஒருவரின் பிரசங்கங்கள் சிலவற்றை சிலகாலம் கேட்ட ஒருவர் பின்னர் கேட்பதை நிறுத்திவிட்டார். அவருடைய பிரசங்கங்களை இப்பொழுது நீங்கள் ஏன் கேட்பதில்லை, என விசாரித்த போது அவர் எப்பொழுது பிரசங்கம் செய்தாலும் இன்னும் ஒரு மாற்றம் அவசியம் என்ற ரீதியிலேயே பிரசங்கிக்கின்றார். அது கேட்க நன்றாயில்லை என்று அவர் பதிலளித்தார்.

சிலர் தங்களிடம் இன்னும் மாற்றங்கள் தேவை என்று சிந்திக்கத் தூண்டும் வார்த்தைகளைக் கேட்க விரும்புவதில்லை. ஏனென்றால் தங்களிடம் உள்ள குறைவுகளை உணருவதும், அவைகளைச் சரிசெய்வதும் அவர்களுக்குக் கடினமான காரியங்கள். அவர்கள் நல்ல கருத்துக்களைக் கவனித்துக் கேட்க விரும்புவார்கள். ஆனால் தங்களிடம் உள்ள நல்லதல்லாதவைகளை உணரவும், அவற்றைச் சரிசெய்யவும் விரும்பமாட்டார்கள்.

கிறிஸ்தவம் ஆன்மீக வாழ்விற்கு, ஆவிக்குரிய மறுபடியும் பிறத்தல் என்று அனுபவத்தை மிக முக்கியமாகக் காண்பிக்கின்றது. இந்த அனுபவம் ஒருவரிடம் ஏற்படும்போது, அவருக்கு மாற்றங்களை விரும்பும் ஆவிக்குரிய மனோபாவம் வந்துவிடுகிறது. எந்த வார்த்தை அல்லது எந்த சிந்தனை தனக்குள் ஒரு மாற்றத்தின் தேவையை வற்புறுத்துகிறதோ அதனை அவர் விரும்பி ஏற்கின்றார். ஏனென்றால் மறுபடியும் பிறத்தல் என்ற அனுபவம், தேவனுடைய பிள்ளையாக ஒருவரை மாற்றுகின்றது. தேவனுடைய பிள்ளையாக, தன்னை அடையாளம் காண இயன்றவர், இன்னும் இன்னும் தான் தேவனுடைய பிள்ளைக்கேற்ற அழகைப் பெற வேண்டும் என்ற ஆசையைப் பெறுகின்றார்.

ஆவிக்குரிய மறுபிறப்பின் அனுபவம் பெற்றவன், தனக்குள் இன்னும் ஓர் மாற்றம் அல்லது திருத்தம் அவசியம் என்று உணரும்விதமாக எதையாவது கேட்டால் மகிழ்ச்சியடைவான். ஏனென்றால் அது ஒரு ஆவிக்குரிய இயற்கைத் தன்மை, இயேசு கிறிஸ்துவின் ஐக்கியத்துடன் வாழ்கின்றவர்களை மனந்திரும்புதலுக்கேற்ற பிரசங்கங்கள் ஊக்குவிக்குமேயன்றி உற்சாகமிழக்கச் செய்யாது.

நாம் வாழும் வீட்டை இன்னும் நாம் அழகாக வைக்க விரும்பமாட்டோமா? நாம் அணியும் உடைகளை இன்னும் அழகாக அணிய வேண்டும் என்று விரும்ப மாட்டோமா? அப்படியானால் நம்முடைய தேவன் வாழ்கின்ற வீடாகிய நம்மை, இன்னும் அதிகமதிகமாக அழகாக்க விரும்ப வேண்டுமே. மாற்றங்களை மனதார ஏற்று உணர்கின்ற வாழ்வுதான் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை.

நீரில்லாத நிலத்தில் விழுந்த விதைகள் பலனற்றவை
இதய சுத்தமில்லாதவனின் இறை நம்பிக்கைகள் பயனற்றவை.

ஜீவ நீரோடை

நல்லதை ஏற்போம்

நீதிமொழிகள் 15:1-15

மூடன் தன் தகப்பன் புத்தியை அலட்சியம் பண்ணுகிறான்... நீதிமொழிகள் 15:5

மத்தேயு 21:23-32

ஒரு குறிப்பிட்ட தேவ ஊழியர், உத்தமமும் உண்மையுமாக வாழ்வதைக் குறித்து, மிக ஆழமான போதனைகளை வழங்கி வந்தார். இவைகளைக் கேட்க நேர்ந்த ஒருவர், இவர் இவ்வளவு சிறப்பாக ஒரு உயர்ந்த வாழ்க்கையைக் குறித்து பிரமாதமாகப் போதிக்கிறாரே, முதலாவது இவர் அந்த அளவிற்கு வாழ்கின்றாரா என்று கண்டறிய விரும்பினார். அதற்காக ஒரு நீண்ட காலம் அவரைப் பின் தொடர்ந்தார். அவருடைய செயல்பாடுகளையெல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்தார். இறுதியில் அவரிடம் சில குறைபாடுகளை தேடிக் கண்டுபிடித்தார். பின்னர் தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் போய், சம்பந்தப்பட்ட ஊழியரிடமும் பல குறைகளைக் கண்டு கொண்டேன் என்று விளம்பரம் செய்ய ஆரம்பித்தார்.

இந்த பூமியில் எந்தப் பெரிய பரிசுத்தவானையும் மிக உன்னிப்பாகக் கவனித்தால் அங்கே சில குறைபாடுகள் வெளிப்படுவது நிச்சயம். அதனால்தான் இந்த உலகத்தில் மிக மிக எளிய ஒரு வேலை, பிறரிடம் குற்றங்கண்டு பிடிக்கிற வேலை என்றனர் அறிவாளிகள். யாரிடமும் குறைகளைக் கூர்ந்து தேடினால் தென்படாமல் போகாது.

ஆனால் நல்ல கருத்துக்களையும், நல்ல போதனைகளையும், நல்ல சிந்தனைகளையும் நாம் கேட்க நேரிடும் போது, அவைகளைச் சொன்னவர் அந்த அளவிற்கு வாழ்கிறாரா என்று சோதிக்க விரைவது, ஒரு முட்டாளின் செயலாகும். சொல்லப்பட்டவைகள் நல்லவைகள், என்றும் பயனுள்ளவைகள் என்று நம்பினால், அவைகளின் வெளிச்சத்தில் நம் குறைவுகளைக் கண்டுணர்ந்து, நிறைவாக்க வழி தேட வேண்டும். அதற்குப் பதிலாக, அவைகளைச் சொன்னவருடைய வாழ்க்கையைப் பரிசோதிக்க விரைவது, நல்ல விஷயங்களின் மேல் நமக்கு தாகமோ, வாஞ்சையோ இல்லை என்பதையே வெளிப்படுத்தும். அது மட்டுமல்ல, நல்ல விஷயங்களைச் சொன்னவர் மேல் நமக்கிருக்கிற ஒரு வெறுப்புணர்வையும், கோப உணர்வையுமே அது காட்டுகிறது.

ஒருவர் நல்ல ஒரு வழியைப் பிறருக்குக் காட்டிவிட்டு, தவறான வழியில் அவர் பயணம் செய்ய முடியும். வெளிச்சத்தை பிறருக்குக் காட்டிவிட்டு, அவரோ இருளில் நடக்கிறவராக இருக்க முடியும். அது அவரைச் சார்ந்த விஷயம். அதனுடைய நல்லது கெட்டதுகளை அவர் அனுபவிப்பார். ஆயினும் நமக்குக் காட்டப்பட்டது நல்வழியாக இருப்பதால், நாம் அந்த வழியில் நடக்கப் பிரயாசப்பட வேண்டும். இந்நாட்களில் அநேகர் பிரசங்கிக்கப்படுகிற சத்தியங்களைக் கொண்டு தங்களைச் சோதித்தறியாமல், பிரசங்கிக்கிறவரைச் சோதிப்பதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்துகிறார்கள். அது தவறான ஒரு குணாதிசயமாகும்.

நல்ல கருத்தை பகைவன் சொன்னாலும் ஏற்றுக்கொள்
தவறான கருத்தை நண்பன் சொன்னாலும் நிராகரித்துவிடு.

ஜீவ நீரோடை

அன்பும் - பரிதாப உணர்வும்

1 சாமுவேல் - 18:1-11

இவன் தச்சன் அல்லவா?
மாற்கு 6:3

மாற்கு 6:1-6

சிலர் இரக்கமுள்ளவர்கள். ஆனால் அன்புள்ளவர்கள் அல்ல. அன்பு உடையவர்களிடம் நிச்சயம் இரக்கமும் இருக்கும். ஆனாலும் அன்பில்லாத இருதயத்திலும் இரக்கம் இருக்க இயலும். சற்று வசதியான ஒருவர் யாராவது மிக மிகப் பரிதாபமாகக் காட்சியளித்தால், உடனேயே மனதுருகி ஏதாவது நன்மை செய்வார். அதே வேளையில் தோற்றத்தில் நன்றாக இருந்தும், மறுபுறத்தில் மிகுந்த தேவையோடிருக்கும் யாருக்கும் எந்த ஒரு சிறு உதவியும் செய்யமாட்டார். தன்னால் முன்பு உதவி பெற்ற யாராவது இப்போது நன்றாயிருந்தால், அதனை அவரால் பொறுத்துக் கொள்ளவும் இயலாது. ஆம். மற்றவர்களைப் பிச்சைக்காரர்களாகவே பார்த்துக் கொண்டிருக்க விரும்பும் மனநிலையே பலரிடம் உள்ளது.

சிலர் நல்ல வீட்டில்தான் வாழ்வார்கள். நல்ல தோற்றத்தோடுதான் காணப்படுவார்கள். ஆனால் அவர்களுக்குப் பின்னே மிகவும் பரிதாபமான ஏதாவது ஒன்றிருக்கும். அவர்கள் நம்முடைய இரக்க உணர்வை தூண்ட இயலாது. ஆனால் நம்முடைய அன்பு அவர்களுக்கு தேவைப்படுகிறது. யோனத்தான் தாவீதுக்குக் காண்பித்தது இரக்கம் அல்ல. அது அன்பு, தாவீதின் மன வேதனையான சூழ்நிலை யோனத்தானுக்கு அவன் மேல் அதிகமான அன்பை காட்டுவதற்கான தூண்டுதலாக இருந்தது.

சிலர் வறுமையானதோர் சூழ்நிலையில் வாழும் போது, சிலரால் அவர்களுக்காகப் பரிதாப்பப்பட முடிகிறது. அவர்கள் சற்று நல்ல நிலைக்கு வந்துவிட்டாலோ, அவர்களின் பழைய பரிதாப நிலையை அவர்கள் நினைவு கூர்ந்து, அவர்கள்மேல் பொறாமைப்பட ஆரம்பித்து விடுகிறார்கள். அன்பின் முக்கியமான தோர் அம்சம் இரக்க உணர்வு. அதே வேளையில் அன்பின் முக்கியமானதோர் இன்னொரு அம்சம் மற்றவர்கள் நன்றாகயிருப்பதைப் பார்க்க ஆசைப்படுவதாகும்.

தச்சுத் தொழில் செய்த குடும்பத்திலிருந்து வந்து ஜனங்களின் நடுவில் இயேசு மிகவும் கவனிக்கத்தக்கவராக மாறினார். ஒரு சாதாரணக் குடும்பத்திலிருந்து வந்த ஒருவர் இவ்வளவு பிரமாதமாகச் செயல்படுகிறாரே என்று பரிசேயர்களும் சதுசேயர்களும் அவரைப் பாராட்டவில்லை. அவர்கள் அவர்மேல் பொறாமைப்பட்டு "இவன் தச்சன் அல்லவா" என்றார்கள். யாருக்கு வேண்டுமானாலும் பரிதாப உணர்வு வரும். ஆனால் தேவ அன்பை ருசித்தவர்களுக்குத்தான் மற்றவர்களின் நல்ல நிலையைப் பார்த்து அன்பினால் சந்தோஷப்பட முடியும்.

மனிதர்களுக்காக இரங்கும் மனம் பலருக்குண்டு மனிதனை மனிதனாய் மதிக்கும் குணமோ வெகுசிலருக்கே உண்டு.

ஜீவ நீரோடை

அவர் ஏன் வீழ்ந்தார்?

11 சாமுவேல் 11:1-12

தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன்
1 கொரிந்தியர் 10:12

1 கொரிந்தியர் 10:1-13

ஒழுக்கநிலை சீரழிவுகள் மிகுந்த காலம் இது. மரியாதைக்குரிய சிலரும், மிக நல்லவர்களாக அறியப்பட்ட சிலரும் கூட ஒழுக்கம் என்ற பகுதியில் திடீரென்று விழுந்து போய் விடுவதை அடிக்கடி கேள்விப்படுகின்றோம். மிக உயர்வாக எண்ணப்பட்ட ஒருவர் திடீரென்று ஒரு பாவத்தில் விழுந்து விட்டதைக் கேள்விப்படும் போது அதிர்ச்சி அடைகின்றோம். இவர் இவ்வளவு மோசமானவராக இருந்திருக்கிறாரே என்று எண்ணுகின்றோம். அவரை உயர்ந்த நிலையில் வைத்து மதித்ததைத் தவறு என்று நினைக்கின்றோம்.

ஆனால் அவர் மிகவும் மோசமாயிருந்ததினால் அல்ல. மிக மோசமான உலக சூழ்நிலைகளில் மிகவும் கவனமாயிருக்க வேண்டிய ஜாக்கிரதையில் குறைவுப்பட்டதாலேயே அவர் விழ நேரிட்டது. கடந்து போன காலங்களில் உயர் நிலைகளிலிருந்து வீழ்ந்து விட்ட சிலர் உண்மையில் மோசமானவர்களும் அல்ல. தவறு செய்ய விரும்பியவர்களும் அல்ல. எங்காவது, ஏதாவது ஒன்றினால் தாங்கள் மோசம் போகும்படியான ஒன்று நேரிடலாம் என்ற விழிப்புணர்வு இல்லாமையாலேயே அவர்கள் வீழ்ந்தார்கள்.

நல்லவர்கள் என்று நம்பப்பட்டவர்களின் விழுதலைக் குறித்துக் கேள்விப்படும் போது அவர்களை விட நாம் மிகவும் நன்றாயிருக்கிறோம் என்று எண்ணிவிடக் கூடாது. எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் "நிற்கிறேன் என்று எண்ணுகின்றவன் விழாதிருக்க எச்சரிக்கையாயிருக்கக் கடவன்" என்று எழுதினான். தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன் என்று தேவ அத்தாட்சி பெற்றிருந்தவன். தீமையுண்டாக்கும் வழி என்னிலுண்டோ என்று என்னை ஆராய்ந்து அறிந்து கொள்ளும் என்று ஜெபம் செய்தவன். அவன் மோசமான ஒரு மனதுடன் வாழ்ந்து திடீரென்று அவனுடைய வேஷம் கலையவில்லை. அவன் மோசமான சூழ்நிலைகளில் நல்லவன் ஒருவன் எவ்வளவு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்ற விஷயத்தில் சற்று கண் அயர்ந்து விட்டான். எனவே திடீர் என்று எங்கிருந்தோ எழுந்து வந்து, பெருங்காற்று போல வீசிய பாலியல் தொடர்பான மோக இச்சையை எதிர்கொள்ள இயலாமல் வீழ்ந்து போனான்.

எங்கே ஒருவர் வீழ்ந்து விட்டார் என்ற செய்தி கேட்க நேரிடும் போது இவரா இப்படி? என்று சிந்திப்பது இயற்கையானது. அதே வேளையில் இது போன்ற ஒன்று நமக்கு நிகழ்ந்து விடாமல் இன்னும் நம்முடைய பாதுகாப்பு அரண்களை பலப்படுத்திக் கொள்ள அவசரம் காட்ட வேண்டும். அவரைத் தாக்கியது போன்ற ஒரு பாவப் புயல் நம்மை இதுவரை தாக்காததால் நாம் தப்பியிருக்கலாம். எனவே அது போன்று ஏதாவது வந்தாலும் யோசேப்பைப் போல வேண்டாம் என்று விலகி ஓடும் அளவிற்கு, நாம் நம்மை கர்த்தருக்குள் பலப்படுத்த உஷாராகுவோம்.

உன்னிடமுள்ள நல்லதைப் பிறர் பார்க்கும் வரை பொறுமையாயிரு
தீயதையோ பிறர் பார்க்குமுன் அகற்றிட அவசரமாயிரு.

அன்பிற்குத் தகுதி

ஆதியாகமம் 18:19-33

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே – ரோமர் 5:8

ரோமர் 5:1-11

நாம் சொல்வதற்கெல்லாம் தலை அசைத்து, நாம் செய்யும் சிறு உதவிக்கெல்லாம் மிகுந்த நன்றி உணர்வைக் காட்டி, நம் உள்ளம் குளிரும் விதமாகப் பிறரிடம் நம்மைக் குறித்து நன்றாகப் பேசி, நம் பிரியம் அறிந்து செயல்பட்டால் அவருக்காக உயிரையும் கொடுக்கக்கூட நாம் தயாராகி விடுவோம். அவருக்காக நம்முடைய அன்பு எப்பொழுதும் மழைபோல பொழிய முடியும்.

ஆனால் ஒருவர் உதவிபெறும் நிலையில் உள்ளார். நல்லதை அவர் பெற வேண்டிய அவசியத்தில் உள்ளார். ஆனால் அவர் தன் வழியிலேயே செயல்படுகிறார். நன்றி காட்டும் பண்பு இல்லை. சில நேரம் நல்லதைப் பெற்றுவிட்டுத் தீமையாகச் சிந்திக்கின்ற பழக்கமும் உண்டு. இப்படிப்பட்ட ஒருவருக்காக நாம் அன்பு காட்டுவது என்பது எளிதான விஷயமல்ல. இப்படிப்பட்ட தவறான மனநிலை உள்ள ஒருவருக்கு அன்பு காட்டுவது வீண் என்ற எண்ணமும் நமக்கு ஏற்பட முடியும். ஒரு நன்றி கூட சொல்லச் தெரியாத முரட்டுத் ஜென்மத்திற்கு எதற்காக நல்லதைச் செய்யவேண்டும் என்ற சோர்வுணர்வும் ஏற்படும்.

ஆனல் **அன்பு என்பது இன்னொருவர் எப்படியிருக்கிறார் என்பதைச் சார்ந்து செயல்படுவதல்ல. நாம் எப்படியிருக்க வேண்டும் என்பதைச் சார்ந்து செயல்பட வேண்டியதே அது**. அன்பைப் பெறும் தேவையில் யார் உள்ளார் என்பதுதான் நம்முடைய கரிசனையாயிருக்க வேண்டுமே ஒழிய, அன்பு பெறுகின்ற தகுதி அவருக்கு உண்டா என்பது முக்கியமல்ல. தகுதி பார்த்து நேசிக்கவும், உதவி செய்யவும் நாம் விரும்பினால் அன்பு காட்டும் வாய்ப்பும், நன்மை செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படாமலே போய்விடும். அன்பு என்பது சூரிய வெளிச்சம் போன்றது. அது யார், எவர் என்று பார்த்துப் பிரகாசிப்பதில்லை. தன்னுடைய வெளிச்சம் கொடுக்கும் இயற்கையின்படி அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார். நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கும் போது, தேவன் தம் அன்பைப் பொழிந்து தம்முடைய ஒரே பேரான குமாரன் மூலம் நாம் இரட்சிப்படையச் செய்தார். இது தான் தேவனுடைய பார்வையில் அன்பின் இலக்கணம். தகுதியற்றவர்களுக்கு அன்பு, சத்துருக்களுக்கு உதவி.

இவ்விதமான ஒரு அன்புதான் நம்மில் வெளிப்பட வேண்டும் என ஆண்டவர் விரும்புகிறார். சத்துருக்களையும் நேசிப்போம், அதனால் கர்த்தருக்கு நாம் நெருங்கின நண்பர்களாயிருப்போம். தகுதியற்றவர்களுக்கும் அன்பினால் நன்மை செய்வோம். அதனால் கர்த்தருக்கு முன்பாக நிற்க அதிகத் தகுதியாகிவிடுவோம். மனிதர்களுக்காகக் காண்பித்த அன்பிற்கு, கர்த்தரால் மிகுந்த பலன் கிட்டும் என்பது உண்மை.

அன்பு எனக்கு என்ன கிடைக்கும் என்று கேளாது. என்னால் பிறருக்கு ஏதாவது கிடைக்குமா என்றே கேட்கும்.

பணம் அவசியம்... ஆனால்

11 இராஜாக்கள் 5:15-27

பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது – 1 தீமோத்தேயு 6:10

1 தீமோத்தேயு 6:1-12

பணம் சம்பாதிக்க நமக்குப் போதுமான கரிசனையும், சரியான முயற்சிகளும் அவசியம் என்பதை நான் பலமுறை சொல்வேன். பணத்தைக் குப்பையென்றோ, தூசி என்றோ எண்ணுகின்ற மனோபாவம் சரியானதல்ல. பணம் எல்லாவற்றையும் தந்துவிடாது என்பது உண்மை. ஆனால் நமக்குத் தேவையான பல விஷயங்களுக்குப் பணம் மிகவும் அவசியம். அதே வேளையில் பணத்தைக் குறித்த அளவுக்கதிகமான மதிப்பீடும். பணத்தையே மகிழ்ச்சியின் மிக முக்கியக் காரணியாகவும் எண்ணுவது தவறு.

தேவைக்காக பணம் சம்பாதிக்க வேண்டும். ஆசைக்காக அதனைச் சம்பாதித்தால் அதற்கு எல்லையே இராது. சிலர் எவ்வளவோ சம்பாதித்தாலும் செலவு செய்வதில்லை. ஏனென்றால் அவர்கள் பணத்தின் மேல் கொண்ட அதிகமான ஆசையினால் சம்பாதிக் கின்றார்களேயன்றி தேவைகளைச் சந்திக்க அல்ல.

வேறெந்த ஒன்றைவிடப் பணத்தைக் குறித்துத்தான் இயேசு ஏராளமான எச்சரிப்புகள் தந்தார். பணம் தொடர்பான மனித மனோபாவங்களைக் குறித்து அதிகமாகப் பேசினார். பணத்தைக் குறித்த ஆசைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள விரும்பாதவன், நித்திய வாழ்விற்காக ஆசைப்பட்டாலும் அடையமாட்டான். இதனைத்தான் பணக்கார வாலிபனிடம் இயேசு சொன்ன ஆலோசனை தெளிவுப்படுத்தியது. பண ஆசை தொடர்பான ஆதிக்கத்திற்குள் விழுந்து விடாதிருக்க அதிக எச்சரிக்கை வேண்டும். பண ஆசையின் பிடியிலிருந்து வெளியே வர அதிக ஆர்வமும் வேண்டும்.

எதிர்த்து நின்று ஜெயிக்கக் கடினமானது பாலியல் இச்சைப் போராட்டம். ஆனால் அதைவிட அதிகக் கடினமானது பணம் தொடர்பான கவர்ச்சிக்கு எதிர்த்து நின்று ஜெயிப்பது.

பாலியல் இச்சைகளின் ஆதிக்கங்களுக்கு அடிபணியாமல், வெற்றிக் கொடி நாட்டும் பல யோசேப்புகள் கூட, பணம் தொடர்பான இச்சைகளின் விஷயத்தில் கேயாசிகளாகி விடுகின்றார்கள். பண ஆசை தொடர்பான கண்ணிகளில் சிக்காமல் சுதாரித்துக் கொள்வதில்தான், நல்லவர்கள் பலர் கூட எளிதாகத் தோற்றுப் போய் விடுகின்றார்கள். பணம் சம்பாதிக்கக் கரிசனையாயிருப்போம். ஆனால் உண்மை, உத்தமம், நேர்மை, நியாயம், தேவஉறவு, தேவசார்பு ஆகிய எதையும் அதற்காக இழந்து விடாதிருக்க மிக அதிகமான கரிசனை வேண்டும்.

பணம் ஒரு பலம் அந்த பலத்தால் பிறரைத் தாங்கு அப்போது பணத்துடன் பண்பையும் சம்பாதிப்பாய்.

ஜீவ நீரோடை

போனால் வராது

ஆதியாகமம் 27:30-38

அவன் கண்ணீர் விட்டு கவலையோடே தேடியும் – எபிரேயர் 12:17

எபிரேயர் 12:1-17

மனிதன் ஒரு ஆகாத பழக்கத்தை வேண்டாம் என்று விலக்கிவிட்டால், திரும்ப, திரும்ப அது அவனோடு வந்து சேர்ந்து கொள்ள விரும்பும். ஒரு தீய சுபாவத்தை மனிதன் தன்னை விட்டுத் தள்ளிவிட்டால், மீண்டும் அது அவனைப் பற்றிக் கொள்ள வெகு தீவிரமாயிருக்கும். ஆனால் ஒரு நல்ல சுபாவத்தையோ, நல்ல பழக்கத்தையோ, நல்ல செயலையோ மனிதன் தன்னைவிட்டு நீங்க விட்டுவிட்டால், மீண்டும் அவைகளை அவன் தன்னிடம் வரவழைக்க அதிகமாக விரும்பினால் கூட அவைகள் தூரமாகவேயிருக்கும். இதனைப் பெரும்பாலும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையில் பார்க்க முடியும். ஏனென்றால் தீயவைகளும், தீங்கானவைகளும் நாம் இருக்கும் இடம் தேடித் திரும்பத், திரும்ப வருகின்ற தன்மையுடையவை. ஆனால் நலமானவைகளை நாம் மிகுந்த பிரயாசப்பட்டுத் தேடிச் சென்றுதான் பெற முடியும். அதற்காக வலிமையான தீர்மான மும், தீவிர வாஞ்சையும் மிகவும் தேவை.

எனவே தீய குணங்களையும், செயல்களையும், பழக்கங்களையும் வேண்டாம் என்று தள்ளிவிடுவதோடு மீண்டும் அவை நம்மிடம் வந்து ஒட்டிவிடாதபடி தடுக்க அதிகக் கவனமாயிருக்க வேண்டும். அதுபோலவே ஒரு முறை நல்ல குணத்தையும், நல்ல செயலையும் இழந்துவிட்டால், அவைகளை மீண்டும் நம்மிடம் கொண்டு வருதல் மிகக் கடினமானது. அதனை உணர்ந்து, அவை நம்மைவிட்டு விலகாதி ருக்க மிகத்தீவிரமாகப் பிரயாசப்பட வேண்டும்.

ஏனென்றால் நம்முடைய இயற்கையான மனுஷநிலை எல்லாத் தவறு களையும், தகாத விஷயங்களையும் இறுக அணைத்துக் கொள்ளும் தன்மை யுடையது. ஆனால் நற்குணங்களையும், நற்பண்புகளையும் எளிதாக விட்டு விடுகின்ற தன்மையுடையது. இந்த மாமிசத்தில் நன்மை தங்குவதில்லை என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினான். எனவே தேவனோடு நாம் போதுமான அளவிற்கு ஐக்கியம் கொண்டு, ஆவிக்குரிய பலத்தால் நற்குணாதிசயங்களைப் பாதுகாக்க ஒரு நல்ல போராட்டத்தைப் போராட வேண்டிய தேவை உள்ளது. பெரும்பாலும் ஆவிக்குரிய வாழ்க்கையில் நற்பண்புகளைப் பெறுவது எளிதானது. ஆனால் ஒரு விசை இழந்துவிட்டால், அதனைத் திரும்ப அடைவது மிக மிகக் கடினம். பல நல்ல விசுவாசிகளும், தேவ ஊழியர்ளும் தங்களிடமிருந்த மேன்மையான சில தெய்வீக அனுபவங்களை ஒரு முறை இழந்த பின், எவ்வளவோ வாஞ்சித்தும் திரும்பப் பெறாமல் போன சாட்சிகள் ஏராளம் உண்டு. ஆம். தீயது போனால் திரும்ப வர முயற்சிக்கும் என்பதை உணர்ந்து எச்சரிக்கையாயிருப்போம் அதுபோல நல்லது போய்விட்டால் திரும்பப் பெறுதல் மிகக் கடினம் என்பதை உணர்ந்து தகுந்த விழிப்புடனிருப்போம்.

உன்னிடம் உள்ள தீயவைகளை உன் கண்கள் காணட்டும்.
இல்லையேல் உன்னிடம் உள்ள நல்லதைப் பிறர் கண்கள் காணாது.

ஜீவ நீரோடை

தேவையா, ஆசையா?

நீதிமொழிகள் 30:7-23

எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்
நீதிமொழிகள் 30:9

மத்தேயு 6:25-34

தங்களுக்கு உண்மையில் தேவையில்லாத பொருட்களின் மேலும் ஆசையை உருவாக்கி அவற்றை வாங்கத் தூண்டுவது இக்கால வியாபார நிறுவனங்களின் வியாபார யுக்தி, ஆயிரம் ரூபாய் விலையுள்ள ஆக்ஸ்போர்டு டிக்ஷனரி 500 ரூபாய்க்கு விற்பதைப் பார்த்த ஒருவர் உடனேயே அதனை வாங்கினார். ஆனால் அவருக்கு டிக்ஷனரி உபயோகிக்கும் பழக்கம் முன்பும் இல்லை பின்பும் இல்லை. இவர் தனக்குத் தேவைப்படாத ஒரு பொருளை அதிகத் தள்ளுபடி கிடைக்கிறதே என்ற காரணத்திற்காகவே வாங்கினார்.

இன்று மனிதன் ஆசைப்படும் பல விஷயங்கள் அவனுக்குத் தேவையானவையும் அல்ல. அவற்றால் அவனுக்கு எந்தப் பயனும் இல்லை. உலகமும் பிசாசும் மனிதனுக்குள் பலவழிகளில் ஆசைகளைத் தூண்டி விடுகின்றன. அந்த ஆசைகளின் விளைவாக மனிதன் தனக்குத் தேவையற்ற, பயன்தராமல் போகின்றவையான பலவற்றிற்காக அதிகமாகப் பிரயாசப்படுகின்றான்.

இருச்சக்கர வாகனத்தையே எதற்கும் பயன்படுத்துகின்ற ஒருவர் விலை உயர்ந்த கார் ஒன்றை வாங்கினார். ஆனால் அது காட்சிப் பொருளாக வீட்டிற்கு முன்பாக நிற்கின்றதேயன்றி, அதனை அவர் பயன்படுத்துவதேயில்லை. பல விஷயங்கள் நமக்குள் ஆசையை உருவாக்கும். ஆனால் அவை நமக்கு மிக அவசியமானவையல்ல. தேவைகளுக்காக மனிதன் ஓடுவதைவிட, ஆசைகளுக்காகவே இரவும் பகலும் அதிகமாக ஓடுகின்றான்.

எல்லாப் பொருட்களுக்கும் ஒரு பயன்பாடு நிச்சயம் உண்டு. ஆனால் எல்லா பயன்பாடுகளும் நமக்கு மிக அவசியமானவையல்ல. தேவன் நம்முடைய தேவைகளைத் தருவதற்குப் போதுமானவரே. ஆனால் நாம் ஆசைகளையெல்லாம் அடைவதிலேயே குறியாயிருந்தால், தேவன் நமக்கு நன்மை செய்தாலும் நாம் திருப்தியடைய மாட்டோம். தேவனே நான் ஆசைப்படுகின்றவைகளை அல்ல தேவையானவைகளையே எனக்குத் தாரும் என்ற விண்ணப்பம் அவசியம். சில நேரங்களில் தேவன் நமக்கு அளவில்லாமல் தருவதில் அல்ல. அளந்து அவசியமானவற்றைத் தருவதில்தான் அதிக ஆசீர்வாதமும் நன்மையும் உள்ளன. நமக்கு எவை எவை மிகவும் தேவை என அறிந்து கொண்டால், அவசியமற்ற ஆசைகளின் சுமையை நாம் சுமக்கத் தேவையில்லை.

மனதில் மறைந்திருக்கும் மலையளவு அன்பை விட வாயினால் வெளிப்படும் கடுகளவு அன்பே இன்னொருவருக்குப் பயன் தரும்.

ஜீவ நீரோடை

அரைகுறை மாற்றம்

1 சாமுவேல் 15:9-25

பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின – 11 கொரிந்தியர் 5:17

11 கொரிந்தியர் 5:1-17

தன்னுடைய வீட்டில் தேவையில்லாமல் இடத்தை அடைத்துக் கொண்டிருந்த ஏராளமான பழைய பொருட்களை, பழைய பொருள் வாங்குகிறவனிடம் ஒருவர் விற்க முன்வந்தார். பழைய பொருள் வாங்குகிறவன் வந்து ஒவ்வொரு பொருளாக எடை போட ஆரம்பித்தான். ஆனால் அந்த மனிதர் சில பொருட்களை விற்க மனமின்றி அது ஏதாவது உபயோகத்திற்கு ஆகும் என எண்ணி அவைகளை ஒதுக்கி வைத்தார். விற்பதாகச் சொன்ன பொருட்களில் பாதிக்கு மேற்பட்ட பொருட்களை அவர் தனக்காகவே வைத்துக் கொள்ள விரும்பியதைக் கண்ட, பழைய பொருள் வியாபாரி கோபமடைந்து "ஐயா... எல்லா பொருட்களையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு எதற்காவது உதவும்" என கூறிவிட்டுப் போய்விட்டான்.

சிலருடைய இரட்சிப்பின் அனுபவமும் இப்படியே உள்ளது. அவர்கள் தங்களிடம் உள்ள எல்லாப் பாவ சாயலான குணங்களையும், சுபாவங்களையும் அகற்றிட இயேசுவை அழைக்கின்றனர். ஆனால் பரிசுத்த ஆவியானவர் உள்ளான ஆத்துமாவில் உள்ள ஆகாத குணங்கள், பண்புகள், தன்மைகள், எண்ணங்கள் இவற்றை அகற்றும்படி செயல்படும் போது முற்றிலுமாக அவைகளைக் களைய அவர்கள் விரும்புவதில்லை. சில குணங்களும், பழக்கங்களும், சிந்தைகளும் தங்களை விட்டு விலகாமல் இருப்பதையே அவர்கள் தெரிந்து கொள்கிறார்கள்.

ஜாதியுணர்வு, பண மோகம், அந்தஸ்து மிக்கவர்களாக அறியப்பட விரும்புதல், தாழ்ந்து போக விரும்பாமை, வைராக்கியமாக இருத்தல், கசப்பை விட மறுத்தல் போன்ற பல ஆகாத சுபாவங்களைத் தங்களிடம் வைத்துக் கொண்டே, வேறு பல தீங்கான குணாதிசயங்களை விட்டுவிட வாஞ்சிப்பவர்கள் உண்டு.

ஆனால் பரிசுத்த ஆவியானவர் ஒரு ஒட்டுமொத்த மாறுதலுக்கு ஏதுவாகவே நமக்குள் கிரியை செய்ய விரும்புகின்றார். சில விஷயங்களில் நாம் ஆவிக்கேற்றவர்களாக மாற விரும்பியும், வேறு சில விஷயங்களில் பழைய ஜென்ம சுபாவ நிலையில் நாம் நீடிக்க விரும்பும்போது, ஆவியானவர் நம்மிடம் தொடர்ந்து செயல்பட வாய்ப்பில்லை. ஏனென்றால் அது ஒரு உண்மையான பரிசுத்த ஜீவியத் திற்கான வாஞ்சை அல்ல.

ஆவியானவர் நம்மிடம் வல்லமையாகக் கிரியை செய்து நம்மை முற்றிலும் பரிசுத்தமான ஒரு நிலைக்குக் கொண்டு வர விரும்புகிறார். அவர் கிரியை செய்ய வேண்டுமானால் நாம் விரும்புகிற, ஏதாவது தேவனுக்குப் பிரியமற்றிருந்தால், அவற்றை அப்புறப்படுத்த ஆவியானவரை அனுமதித்து, ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

நீ இருக்கும் இடம் தேடித் தீயவை வரும். நல்லதை அது இருக்கும் இடம் தேடி நீ தான் செல்ல வேண்டும்.

ஜீவ நீரோடை

வலிமையான சாட்சி

சங்கீதம் 15:1-5

இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது
லூக்கா 19:9

லூக்கா 19:1-10

நீங்கள் ஒரு கிறிஸ்தவர். உங்களின் செயல்கள் பல மிகவும் நல்லவை. அந்த நல்ல செயல்கள் உங்களை நல்ல கிறிஸ்தவராகப் பார்ப்பதற்குப் பிறருக்கு உதவும். ஆனால் ஒரு கேள்வி. கிறிஸ்துவினால் ஏற்படும் மாற்றங்களுக்குச் சாட்சி பகர இந்தச் செயல்கள் போதுமானவையா? இது போன்ற நல்ல செயல்களை எத்தனையோ பிறமதத்தவர்களும், ஏன் கிறிஸ்துவை நம்பாதவர்கள் கூடச் செய்கின்றார்களே. எத்தனையோ பேர் தங்களின் ஆர்வத்தாலும் விருப்பத்தாலும் கூட இதுபோன்ற நல்ல விஷயங்களைச் செய்கின்றார்களே. மனித அறிவுரைகளும், சில இயக்கங்களின் போதனைகளும் கூட இது போன்ற நல்ல மாற்றங்களைப் பலரிடம் ஏற்படுத்தியுள்ளதே.

வேறு எந்த வழியிலும் ஏற்பட இயலாத வலிமையான மாற்றங்களை நாம் நம்முடைய வாழ்வில் காண்பிக்காவிட்டால். அவை கிறிஸ்துவினால் வந்த மாற்றங்கள் எனக் கூறிடப் போதுமானவையல்ல. கிறிஸ்துவின் உறவினால் ஏற்படும் மனமாற்றம், ஒரு மனிதனைப் பிரகாசிக்கச் செய்யும். ஒரு தெய்வீக ஆற்றலின் செயல்பாடில்லாமல் இது போன்ற மாற்றங்களைக் காண இயலாது என்று எவரும் எண்ணும் விதமாகவே அவை இருக்கும்.

இயேசுவினால் சந்திக்கப்பட்ட சகேயுவின் உள்ளே பெரிய மனமாற்றம் நிகழ்ந்தது. எனவே அவன் தான் அநியாயமாய்ப் பெற்ற எதையும் நாலத்தனையாகத் திருப்பிக் கொடுக்க முன் வந்தான். எனவேதான் தன்னுடைய சொத்துக்களில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்க முன்வந்தான். வன்முறைத்தனமான வழிகளில் நடந்த பவுல் கர்த்தரால் சந்திக்கப்பட்ட பின் செயல்களிலும், சுபாவங்களிலும், சிந்தனைகளிலும் நோக்கங்களிலும் மாபெரும் மாற்றங்களைக் கண்டான்.

அநேகர் பக்தியினாலும், ஒரு மாற்றத்தின் மேல் கொண்ட ஆசையாலும் தங்களிடம் தாங்களாகவே சில மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அவை பக்தி மாற்றங்களேயன்றி, பரிசுத்த மாற்றங்கள் அல்ல. தேவ உறவு தேடப்பட வேண்டும். தேவ ஐக்கியம் மிகுதியாக நாடப்பட வேண்டும். தேவ ஆவியினால் நடத்தப்படுவதை அதிகமாக வாஞ்சிக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான மாற்றங்கள் நேரிடும். அவைதான் கிறிஸ்துவின் வல்லமைக்குச் சாட்சி.

பக்தி என்பது இறைவனின் புகழைப் பாடுவதில் அல்ல
இறைவன் புகழும்படி வாழ்வதிலேயே அது விளங்கும்.

ஆசீர்வாதமும் தடைகள்

ஆதியாகமம் 21:1-13

அந்த வாலிபன்... துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான் – மத்தேயு 19:22

மத்தேயு 19:16-26

சில நேரங்களில் நாம் மேலானவைகளை தேவனிடம் நாடுகிறோம். அது தேவனுடைய பார்வையில் மிகவும் பாராட்டுக்குரியதே. சில நேரங்கள் நம்முடைய வாஞ்சையும், விருப்பமும் ஆவிக்கேற்றதாகவும், தேவன் விரும்பத் தக்கதாகவுமே உள்ளன. ஆனால் அந்த வாஞ்சை நிறைவேறத்தக்கதாக தேவன் சில ஆலோசனைகளைக் கொடுக்கும் போதோ, அவை நமக்கு மிகுந்த பாரமான வையாகத் தோன்றி விடுகிறது. நம்முடைய மேலான வாஞ்சைகள் நிறைவேறத் தடையாக உள்ளவைகளை விலக்க தேவன் ஏவும் போது, நம்முடைய வாஞ்சைகளை விட்டு விடவும் தயாராகி விடுகிறோம்.

வேதாகமத்தில் பணக்கார வாலிபன் ஒருவன் பக்தி மிக்கவனாயிருந்தான். தேவனுடைய சட்ட திட்டங்களைக் கடைப்பிடிக்கும் பழக்கமுடையவனாயிருந்தான். அவனுக்கு நித்திய வாழ்வில் பங்குபெற வேண்டும் என்ற மிகப் பெரிய வாஞ்சையும் இருந்தது. அதற்காக அவன் இயேசுவிடம் ஓடோடி வரவும் செய்தான். ஆனால் அந்த நித்திய வாழ்வைப் பெற, அவனுக்குத் தடையாயிருந்த செல்வத்தின் மேலுள்ள பற்றை உதறச் சொன்ன போதோ, அவன் வாஞ்சையை விட்டு விட்டுப் போய்விட்டான்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு உண்மையைத் தெளிவாக வெளிப்படுத் தியுள்ளார். நித்திய வாழ்வு என்னும் தேவனுடைய மிகப்பெரிய ஆசீர்வாதத்தை நாம் பெறுவதற்காக, இந்த அநித்திய உலகு சார்ந்த எந்த ஒன்றையும் உதற நாம் தயாராகயிருக்க வேண்டும் என்பதே அது. உலகு சார்ந்த சில மேன்மைகள், நித்திய மேன்மையைப் பெறத் தடைகளாக மாறும்போது, அவை அகற்றப்பட வேண்டியது அவசியம்.

ஆபிரகாமின் வாழ்க்கையிலே தேவன் அவனுக்குச் சில உச்சிதமான ஆசீர் வாதங்களை அளிக்கச் சித்தமானார். ஆனால் அவற்றை அடையும் பாதையில் சில தடைகள் இருப்பதை தேவன் கண்டபோது அவற்றை அகற்ற அவர் ஏவினார். உணர்வுப்பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் அவை மனவிசனம் தருகிறவை. தேவன் அவனுடைய சொந்த தேசத்தைப் பிரிந்து வரச் சொன்னார். தன் மறு மனையாட்டியாகிய ஆகாரையும் அவள் தனக்காக பெற்றெடுத்த மகனையும் பிரித்துவிடச் சொன்னார். இவைகள் யாவும் தேவனுடைய பார்வையில் விலக்க வேண்டிய தடைகளாகத் தோன்றினாலும், ஆபிரகாமிற்கோ அந்தப் பிரிவுகள் மிகுந்த மனவிசனத்திற்குரியவை.

ஆயினும் அவன் தன் சுய உணர்வுகளுக்காக நிற்காமல், தேவனுக்காக நிற்க விரும்பினான். எனவே தேவன் அவனுக்கு மேன்மையான நிலைகளைக் கொடுப்பதற்கு எதுவுமே தடையாயிருக்கவில்லை. ஆம். நம்முடைய பார்வையில் மேன்மையாகத் தோன்றுகின்றவைகள் தேவதிட்டம் நிறைவேறுதலுக்குத் தடைகளாக இருக்க முடியும். தேவ ஆலோசனையை ஏற்பதால் நித்தியமான ஆசீர்வாதங்கள் உண்டு.

தேவன் செய்யச் சொன்னதை நீ செயல்படுத்தாதவரை
தேவன் செய்வார் என்ற உன் நம்பிக்கை செயலற்றதே.

ஆராய்தல் அவசியம்

நீதிமொழிகள் 8:1-21

தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே – எபேசியர் 4:14

எபேசியர் 4:11-24

கண்ணை மூடிக்கொண்டு ஒரு கருத்தின் உண்மையை ஆராயாமல் அப்படியே ஏற்றுக் கொள்வதும் தவறு. ஒரு கருத்து சொல்லப்படும் போது அதனைக் குறித்த சரியான புரிந்து கொள்ளுதலுக்கு மனதைச் சற்றும் சாய்க்கு முன்னரே கண்ணை மூடிக்கொண்டு அதை எதிர்ப்பதும் தவறு. ஒரு பொய் சொல்லப்படும் போது அது எளிதாக நம்புவதற்கு ஏற்றதாயிருக்கும். ஒரு உண்மை சொல்லப்படும் போது அதனை நம்புவதற்கு மிகவும் சிரமமாயிருக்கும். எனவேதான் ஒரு உண்மை சொல்லப்படும் போது சிலர் அப்படியா, நிஜமாகவா என்று மிகுந்த ஆச்சரியத்தோடு கேட்பார்கள்.

ஒரு பொய்யை ஒரே ஒரு முறை சொல்லி ஆயிரம் பேரை நம்ப வைக்க முடியும். ஆனால் ஒரு உண்மையை ஆயிரம் முறை சொன்னால்தான் ஒருவரையாவது நம்ப வைக்க முடியும். அதனால்தான் பெரும்பாலும் மனிதர்கள் உண்மையைப் பேசுவதை விட, பொய்களையே அதிகமாகப் பேசுகின்றனர். சரித்திரத்தைப் பார்க்கும் போது சில நேரங்களில், சிலர் கண்டு பிடித்த உண்மைகளை ஜனங்கள் உண்மை என்று ஏற்றுக் கொள்வதற்குள் நூற்றுக் கணக்கான ஆண்டுகள் கடந்து போயிருக்கிறது. விஞ்ஞான ரீதியாக பூமியைக் குறித்து கலிலேயா சொன்னதும் உண்மை. கோப்பர் நிக்கஸ் சொன்னதும் உண்மை. ஆனால் அவர்கள் கண்டறிந்த உண்மையை உலகம் சரிதான் என்று ஏற்றுக் கொள்ள நீண்ட காலம் தேவைப்பட்டது.

கவர்ச்சிகரமாக ஒரு பொய்யை ஒருவர் உண்மைபோல பேசி விட்டு மேடையிலிருந்து இறங்கும் முன்பு, அதனை அப்படியே கண்ணை மூடிக் கொண்டு நம்புகின்ற ஒரு கூட்டம் உருவாகிவிடுகிறது. ஆனால் உண்மையை உண்மை யாகப் பேசுகின்ற ஒருவர், சொன்னது உண்மைதான் என உலகம் உணர்ந்து கொள்வதற்குள் ஒரு தலைமுறையே கடந்து போய்விடுகிறது.

இன்றைய கிறிஸ்தவர்கள் நடுவில் அறிவாளிகளும், ஞானம் மிக்கவர்களும், சிந்தனையாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் ஏராளம் உண்டு. ஆயினும் இறை நம்பிக்கை அல்லது ஆன்மீகம் என்ற பகுதியில் வரும்போது அவர்களில் அநேகர் எதையும் கண்மூடித்தனமாக நம்புகின்றவர்களாகவே உள்ளனர். கள்ளத் தீர்க்கதரிசிகளும், கள்ளப் போதகர்களும், பெருகிப் போன இந்த நாட்களில் அவர்கள் சொல்லும் பொய்யான விஷயங்களை சிலர் சற்றும் ஆய்வு செய்வதில்லை. சில பொய்களைக் கண்டறிய ஆவிக்குரிய ஞானம் அல்ல. சிறிய அளவு காமன் சென்ஸ் இருந்தாலே போதும். அது கூட அநேகரிடம் இல்லை. கண்களை மூடிக் கொண்டு ஒன்றை ஏற்பதையும் அல்லது எதிர்ப்பதையும் ஆன்மீக, பக்தியின் அடையாளமாக எண்ணுவது தவறு.

விசுவாசத்தைப் பற்றி பேசுகிறவனையல்ல
விசுவாசத்தில் வாழ்பவனையே நோக்கிப்பார்.

பரிசுத்தவான் யார் ?

உபாகமம் 10:8-22

நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்... 1 பேதுரு 1:16

1 பேதுரு 1:7-25

சகோதரர் ஆத்ம சீலனை அநேகர் உண்மையான பரிசுத்தவான் என்று நற்சாட்சி தருகின்றனர். அவ்வாறு நற்சாட்சி தரும் ஒருவரிடம் "அவரை எப்படி நீங்கள் பரிசுத்தவான் என்று கூறுகிறீர்கள்?" என்று கேட்டபோது, அவர் சொன்ன பதில் "சகோ ஆத்மசீலன் தவறாக எதையாவது பேசியதையோ, தவறான காரியங்களைச் செய்ததையோ நான் எப்போதுமே பார்த்ததில்லை" என்பதாகும். இவரைப் பொறுத்தவரைக்கும் தவறாக எதையும் பேசாமலும், தவறாக எதையும் செய்யாமலும் இருப்பதுதான் பரிசுத்தம். ஆனால் ஒருவரிடம் தவறுகள் எதையும் பார்க்க முடியாத நிலையை பரிசுத்தம் எனக் கூற முடியாது. தவறுகளற்ற வாழ்க்கை நிலை பரிசுத்தத்தின் முக்கியமான ஒரு பகுதிதானேயன்றி, அதுவே முழுப் பகுதியும் அல்ல. பரிசுத்தம் என்பதற்கு ஏதோ சுத்தமாயிருப்பது என்ற குறைவான அர்த்தத்தைக் கொடுக்கக்கூடாது.

பரிசுத்தம் என்பதை தெய்வீகம் என அர்த்தம் கொள்ளலாம். பரிசுத்தமான வாழ்க்கை என்பதை தெய்வீக வாழ்க்கை எனப் பொருள் கொடுக்கலாம். அதாவது மனுஷீக நிலையைக் கடந்து தெய்வீக அம்சங்கள் கொண்ட ஒரு வாழ்க்கையை வாழ்கின்றவரே பரிசுத்தவான். ஒரு சுத்தமான துணி என்பதற்கும், அழகான துணி என்பதற்கும் இடையிலுள்ள வேற்றுமை என்ன? சுத்தமான துணியில் அழுக்குகள் ஏதும் இல்லை. அவ்வளவுதான். அழகான துணியிலோ, சுத்தமும் இருக்கும். அத்துடன் காண்போரைக் கவரும் விதமான நல்ல வேலைப்பாடுகளோ அல்லது விசேஷ நிறங்களோ அதில் இருக்கும்.

அதுபோலவே சுத்தமான வாழ்க்கையில் தவறுகள் இராமல் இருக்கும். ஆனால் பரிசுத்தமான வாழ்க்கை என்ற தெய்வீக வாழ்க்கையில், அநேகரைக் கவரத்தக்க தெய்வீகத் தன்மைகள் இருக்கும். ஏனென்றால் தேவனோடு நல்ல ஐக்கியம் கொண்டு வாழும் வாழ்க்கைதான் தெய்வீக வாழ்க்கை. அந்த வாழ்க்கையில் தேவனோடு சம்பந்தப்படுவதின் விளைவாகப் பல தெய்வீகக் குணாதிசயங்களும், விசேஷ நற்பண்புகளும் பிரகாசமான சுபாவங்களும் வெளிப்படும்.

பாலியல் தவறுகள், பொருளாசை சார்ந்த தவறுகள், பொய், புரட்டு, சண்டையிடுதல், புறங்கூறுதல், இது போன்ற பல தவறுகளை ஒருவரிடம் காண முடியாவிட்டால் உலகம் அவரை பரிசுத்தவான் என்று சொல்லும். அது தவறு அல்ல. ஆனால் இவைகளோடு உண்மையான அன்பு, தாழ்மை, பொறுமை, பிறர் மேல் பரிவு, விட்டுக் கொடுத்தல், விசுவாசம், கசப்பின்மை, பொறாமையின்மை, விரோதங்களால் எரிச்சலடையாமை போன்ற பல தெய்வீகப் பண்புகள் இணையும் போதுதான், தேவனுடைய பார்வையில் அவர் பரிசுத்தவானாயிருப்பார். ஏனென்றால் தேவனிடம் உள்ள உயர் குணாதிசயங்கள், மனிதனிடம் காணப்படுகின்ற ஒரு மேன்மை நிலையின் பெயர்தான் பரிசுத்த வாழ்க்கை.

சிறந்த சிந்தனைகள் என்ற உரம் இல்லையேல், வாழ்வில் உயர்ந்த செயல்கள் என்ற கனிகள் இருப்பதில்லை.

ஜீவ நீரோடை

மாற்றங்கள் போதுமா?

ஏசாயா 5:1-6

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால்
யோவான் 15:8

யோவான் 15:1-11

தேவனுக்காக அல்லது தேவ பக்திக்காக நாம் சில மாற்றங்களை நம்மிடம் ஏற்படுத்திக் கொள்வது என்பது ஒன்று. தேவனே நம்மிடம் சில மாற்றங்களை ஏற்படுத்துவது என்பது வேறு. தேவனைப் பிரியப்படுத்துவதற்காகவும், தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்காகவும், நாம் நம்முடைய செயல்களிலும், குணங்களிலும் சில மாற்றங்களைச் செய்ய இயலும். ஆனாலும் அவை கிறிஸ்தவத்திற்குச் சாட்சிபகரப் போதுமானவை அல்ல.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கிறிஸ்துவினால் நமக்குள் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட வாழ்க்கை ஆகும். கிறிஸ்துவின் உறவும், ஐக்கியமும் அதிகமாகத் தேடப்படுகிற இருதயத்தில், கிறிஸ்துவுக்கேற்ற ஆவிக்குரிய மாற்றங்கள் நிகழ்கின்றன. அந்த மாற்றங்கள் கிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்தும் வலிமையுள்ளவை. சிலர் தாங்களாக மதபக்தியின் விளைவாக ஏற்படுத்திய மாற்றங்களை கிறிஸ்தவ சாட்சியாகச் சொல்லுவார்கள். மாற்றங்கள் சிறிதோ, பெரிதோ அவை பாராட்டுக்குரியவை. ஆயினும் ஒரு கிறிஸ்தவரின் செயல்களில் ஏற்பட்ட நல்ல மாற்றங்கள், இவை தேவனால் வந்தவை என்று சொல்லுவதற்குப் போதுமானவையாக இருக்க வேண்டும்.

அதாவது தேவ கிருபையும் வல்லமையும் ஒருவரிடம் செயல்படாமல், இதுபோன்ற நல்ல மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்று கூறத்தக்கதாக அவை இருக்க வேண்டும். தனி மனித பக்தி முயற்சிகளால் கூடச் செயல்களிலும், சுபாவங்களிலும் சில மாற்றங்களை ஏற்படுத்த இயலும். அவற்றையே கிறிஸ்து ஏற்படுத்த இயலும். அவற்றையே கிறிஸ்து ஏற்படுத்தின மாற்றங்களுக்குச் சான்றாகக் காண்பித்தால் அது கிறிஸ்துவின் வல்லமையை குறைத்து மதிப்பிட வழி வகுக்கும்.

எனவேதான் நற்குணங்களாகிய கனி கொடுத்தலைக் குறித்து இயேசு பேசும் போது "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுக்கும் போது" என்றார். சாதாரண மனித முயற்சிகளுக்கு அப்பால் இறைபலத்தால் மட்டுமே சாத்தியம் ஆவதுதான் மிகுந்த கனி கொடுக்கும் அனுபவம். அதைத்தான் ஒரு உண்மை கிறிஸ்தவன் தன்னுடைய அனுபவமாகக் காண்கின்றான். குடிபழக்கம் போய்விட்டது. சிகரெட் பழக்கம் போய்விட்டது. சண்டை போடும் பழக்கம் போய் விட்டது என்பது போன்ற சாட்சிகள் போதுமானவை அல்ல. தாழ்மை, உண்மை, அன்பு, பொறுமை, இரக்கம், தவறான வழிகளில் சமரசமாகாமை போன்ற நற்குண அடையாளங்களால் மாற்றங்களுக்குச் சாட்சிகளாக வேண்டும்.

தனக்குள் இயேசுவைக் காணாதவனின் வாழ்வில்
பிறர் இயேசுவின் மகிமையைக் காண முடியாது.

ஜீவ நீரோடை

இசைந்து நடப்போம்

சங்கீதம் 128:1-6

கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ... ***சங்கீதம் 128:1***

மத்தேயு 6:25-34

ஆபிரகாமை தேவன் ஆசீர்வதிக்க முடிந்தது. ஏனென்றால் இலக்கு, கொள்கை, நோக்கம், விருப்பம், அணுகுமுறை, செயல்பாடு, பாதை ஆகிய எல்லா நிலைகளிலும் அவனால் தேவனோடு இசைந்து போக முடிந்தது. அவன் தன் மனதிற் கேற்ற ஒரு ஆன்மீகத்தை மையமாகக் கொள்ளாமல், தேவனுடைய விருப்பம் சார்ந்த ஒரு ஆன்மீகத்தையே தெரிந்து கொண்டான். எனவே தேவன் அவனை உயர்வான ஒரு நிலைக்குக் கொண்டு வர முடிந்தது.

ஆனால் லோத்து வித்தியாசமானவன். அவனுடைய இலக்கும், தேவ இலக்கும் ஒன்றல்ல, அவனுடைய கொள்கையும், தேவ கொள்கையும் ஒரே விதமானவையல்ல. அவனுடைய தரிசனமும், தேவ தரிசனமும் ஒன்றல்ல. அவனுடைய பாதையும், தேவனுடைய பாதையும் இசைந்தவை அல்ல. எனவே தேவன் அவனுக்கு நன்மை செய்தும், அந்த நன்மை லோத்துவுக்கு உதவவில்லை. அவனைக் காப்பாற்ற விரும்பியும் தேவனால் அது கூடவில்லை. ஏனென்றால் அவனுடைய இருதயம் தேவனோடிருக்கவில்லை.

வாழ்க்கையில் வெற்றி எங்கே இருக்கிறது என்றால் தேவசித்தமும், நம் சித்தமும் இசைந்து போகிற பாதையில்தான் உள்ளது. நமக்கு வேறுவிதமான நோக்கங்களும், ஆசைகளும், சுவைகளும், தரிசனங்களும், விருப்பங்களும் இருக்க முடியும். ஆயினும் அவற்றை நிறைவு செய்வதற்கு நாம் தேவ நோக்கங்களோடும், இலக்குகளோடும், கொள்கைகளோடும், வழிகளோடும் முதலாவது இசைந்து செல்ல ஆயத்தமாக வேண்டும். தேவனுடைய சித்தத்தின் பாதையில் வராத வரைக்கும் தேவ நன்மைகள் நம் வாழ்வில் வந்து சேர வாய்ப்பில்லை.

அன்றன்றுள்ள ஆகாரத்தை எங்களுக்குத் தாரும் என்று கேட்கும் முன்னதாக, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாக வேண்டும். ஏனென்றால் தேவனுடைய வல்லமையும், கிருபையும் நம்முடைய வாழ்க்கையில் செயல்பட வேண்டும் என்றால், தேவனுடைய பாதையில் அவருடைய இலக்கை நோக்கி, அவருடைய கொள்கையின்படி நடக்க வேண்டும். அதுதான் தேவனை நம் வாழ்வில் செயல்படச் செய்வதற்கான வழி.

நம்முடைய விருப்பங்களை அடைவது என்பதைவிட, தேவ விருப்பங்களை ஏற்று நடத்தல் என்பது தேவனுடைய பார்வையில் மிக முக்கிய காரியமாக உள்ளது. பலருடைய வாழ்க்கையில் தங்கள் விருப்பங்களுக்கு முன்னுரிமை அதிகமாகக் கொடுக்கப்பட்டு, தேவ விருப்பம் அசட்டை செய்யப்படுவதால்தான் தேவன் நன்மைக் கேதுவாகக் கிரியை செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆம். அவரோடு இசைந்து நடக்க ஆரம்பித்துவிட்டால், நன்மைகள் தானாக வரும்.

தேவனுக்கு இசைவாக இருக்கும் இருதயம்
எந்தத் துன்பப் புயலிலும் அசையாமல் இருக்கும்.

பரிசுத்தவான்கள் எங்கே?

சங்கீதம் 92:1-15

பரிசுத்தவான்களாகும் படி அழைக்கப்பட்டவர்கள் - 1 கொரிந்தியர் 1:2

1 கொரிந்தியர் 1:1-18

ஒரு பெரிய சபையின் செயலர் தன்னுடைய சபை மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட சபை என்று பெருமையடித்துக் கொள்வார். அவர் சபையில் எதையாவது அறிவிக்கும் போதெல்லாம் நம்முடைய சபையை கர்த்தர் நன்கு படித்த பட்டதாரிகளாலும், செல்வந்தர்களாலும், மருத்துவர்களாலும், அரசியல் தலைவர்களாலும் மிகுதியாக ஆசீர்வதித்திருக்கின்றார் என்று சொல்லத் தவறமாட்டார். ஆனால் உங்கள் சபையில் மற்றவர்கள் பார்த்துப் பின்பற்றத்தக்க நல்ல பரிசுத்தவான்கள் எத்தனை பேர் என்று கேட்ட போது அவருக்கு எதையும் பதிலாகச் சொல்ல இயலவில்லை.

சபை என்பது கற்றவர்கள் கூட்டமாகவும், செல்வந்தர்கள் கூட்டமாகவும், அறிஞர்கள் கூட்டமாகவும் இருப்பது நல்லதே. ஆனால் சபை என்பது பரிசுத்தவான்களின் கூட்டமாக இருக்க வேண்டும். அந்தஸ்தும், அறிவும், அதிகாரமும், ஐசுவரியமும் கொண்ட பலர் இருப்பதல்ல ஒரு சபையின் உண்மையான ஆசீர்வாதம். அங்கே பரிசுத்தவான்கள் இருக்க வேண்டும். அங்கே நல்ல பண்புகளாலும், நல்ல குணங்களாலும் மற்றவர்களுக்கு நல்ல முன்மாதிரியாக வாழ்கின்ற பலர் இருக்க வேண்டும்.

ஆசீர்வாதம் என்பதைப் பணத்தின் வடிவிலும், அந்தஸ்தின் வடிவிலும், திறமையின் வடிவிலும் அல்ல. தெய்வீக குணாதிசயங்களின் வடிவத்தில் அது பார்க்கப்பட வேண்டும். ஏனென்றால் மனித வாழ்விற்கு மிக முக்கியமான தேவை நல்ல பண்புகள். பிறருக்கு நம்மால் அதிக நன்மை ஏற்படுத்துவது எல்லாம் நல்ல குணங்கள்தான். நல்ல பண்புகளாலும் நல்ல குணங்களாலும், நல்ல செயல்களாலும் நாம் ஆசீர்வதிக்கப்படாத நிலையில், பணமிகுதியும், அறிவு மிகுதியும், அதிகார வலிமையும் உண்மையான நன்மைகளாயிராது.

தேவன் நம்மைப் பரிசுத்தவான்களாகும்படிதான் அழைத்தார். நமக்குப் பரிசுத்தம் என்னும் உயர்ந்த தெய்வீக அந்தஸ்தைச் சம்பாதித்துத் தருவதற்காகவே இயேசு சிலுவையில் ஜீவன் தந்தார். எனவே தனிப்பட்ட வாழ்க்கையாயினும், சபையாயினும் அங்கே தேவன் முதலிடத்தில் வைத்து மதிக்கும் பரிசுத்தம் என்ற செல்வம் மிகுதியாயிருக்க வேண்டும்.

கிறிஸ்துவோடு நமக்கு ஏற்படும் ஆழ்ந்த பிணைப்பு நம்முடைய தேவைகள் யாவற்றையும் தந்து விடாவிட்டாலும், பரிசுத்த நற்குணங்களை நிச்சயம் தரும். அதுதான் ஆசீர்வாதம்.

இறை ஐக்கியம் என்னும் ஆசீர்வாத வேரைக் குறித்துக் கவலைப்படாதோர் இறைவனின் நன்மைகள் என்னும் கனிகளைக் காணமுடியாது.

ஜீவ நீரோடை

தேவனிடத்திலிருந்து பலன்

ஆதியாகமம் 39:1-6

உத்தமமும் உண்மையுள்ள ஊழியக்காரனே.
மத்தேயு 25:21

மத்தேயு 25:14-30

குறிப்பிட்ட கம்பெனி ஒன்றில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு மிகக்குறைவான சம்பளமே வழங்கப்பட்டு வந்தது. அதிக சம்பளம் வழங்கினாலும் அதற்கேற்ப நேர்மையாக யாரும் உழைப்பதில்லை என்பதே அந்த கம்பெனி முதலாளியின் நியாயம். ஒரு முறை அங்கே சாதாரண சம்பளத்திற்கு வேலைக்குச் சேர்ந்த ஒருவன், குறைவான சம்பளத்தைக் குறித்து கவலைப்படமல் தன்னுடைய முழு பலத்தையும், உழைப்பையும் பயன்படுத்திக் கடுமையாக வேலை செய்தான். அவனுடைய கடுமையான உழைப்பைக் கண்டு, பிற வேலையாட்கள்... "நீ வீணாக இப்படிக் கடுமையாக உழைக்காதே. நீ எப்படி உழைத்தாலும் இந்த கம்பெனி முதலாளி அதைப் பார்த்து நல்ல சம்பளம் தரமாட்டார்" எனக் கூறினார்கள். அதற்கு அந்த மனிதன் "நான் இந்த முதலாளியிடம் நல்ல சம்பளத்தை எதிர்பார்த்து நேர்மை யாக உழைக்கவில்லை. இந்த முதலாளி எனக்குச் சம்பளம் குறைவாகத் தந்தாலும், என்னுடைய பெரிய முதலாளியாகிய தேவன் நியாயமான சம்பளம் தருவார் என்பதே என் நம்பிக்கை. நான் அவரை திருப்திப்படுத்தவே கடுமையாக உழைக்கின்றேன்" என்றான்.

மனிதர்கள் நம்முடைய நற்செயல்களுக்கும், நேர்மைக்கும், உண்மைக்கும் உரிய மரியாதையைத் தருவார்கள் எனக் கூற முடியாது. நாம் எப்படி நேர்மையாகச் செயல்பட்டாலும் அதற்கேற்ற பலனை மனிதர்களிடமிருந்து பெற முடியும் என நம்ப முடியாது. ஆயினும் உண்மைக்கும், நேர்மைக்கும், நீதிக்கும், நியாயத்திற்கும், உத்தமத்திற்கும் உலகம் உரிய பலனைத் தராமல் போனால் கூட, நாம் பலன் பெறாதவர்களாகப் போய்விடுவதில்லை. நீதியையும், நேர்மையையும், உண்மை யையும் மதித்து அதற்குரிய நற்பலன்களைத் தருகின்ற தேவன் ஒருவர் உண்டு. அவர் பலன் தராமல் போகமாட்டார்.

சில நேரங்களில் உண்மையை மதிக்கத் தெரியாதவர்களுக்கு முன்பும், நற்குணங்களை கனப்படுத்தத் தெரியாதவர்களுக்கு முன்பும் நாம் மட்டும் ஏன் வீணாக நேர்மையும், உண்மையுமாக நடந்து சிரமப்பட வேண்டும் என்ற எண்ணம் வருவது இயற்கை. ஆனால் நற்குணமும், நற்செயலும் மனிதர்களைப் பிரியப்படுத்த அல்ல. அவரிகளிடம் நற்பலன் பெறுவதற்காகவும் அல்ல. அவை தேவனைப் பிரியப்படுத்தவும், அவரிடம் நற்பலன்கள் பெறவுமே. யோசேப்பும், தானியேலும் உண்மையும், உத்தமமும் நிறைந்தவர்களாக இருந்தனர். அந்த உண்மையும், உத்தமமும் தங்கள் எஜமானர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அல்ல. அவர்கள் எங்கே இருந்தாலும், யாருக்குப் பணி செய்தாலும், தேவனுக்கு முன்பாக உண்மையும் உத்தமமுமாக வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டை உடையவர்களாக இருந்தனர். அந்த மேன்மையான நிலைப்பாட்டை தேவன் பார்த்ததோடு மட்டுமல் லாமல், அதனை அவர்களின் எஜமா னர்கள் பார்க்கும்படியும் செய்தார்.

பொய்யைவிட்டுப் பிரிந்து வர விரும்பாதவன், உண்மையை உரிய முறையில் புரிந்து கொள்ளமாட்டான்.

ஜீவ நீரோடை

சத்திய ஆர்வம்

உபாகமம் 6:1-14 | யோவான் 8:30-47

சத்தியத்தையும் அறிவீர்கள்
யோவான் 8:32

ஒருவர் எந்த ஒரு ஆவிக்குரிய தாக்கத்தையும் ஏற்படுத்தும் ஆவிக்குரிய சத்திய போதனைகள் இல்லாத. சபையில் அங்கத்தினராக உள்ளார். நல்ல ஆவிக்குரிய புத்தகங்களைப் படிக்கும் பழக்கமும் இல்லை. நல்ல சத்திய அடிப்படையிலான போதனைகளைக் கேட்க எங்கும் போவதுமில்லை. ஆனால் தான் சத்தியத்தின் படி வாழ்வதாகவும், சத்தியம் தவறாமல் செயல்படுவதாகவும் பெருமைப்பட்டுக் கொள்வார்.

நல்ல போதனைகளை வாசித்தும் அறியாமல், கேட்டும் அறியாமல் எப்படி அவர் சத்தியத்தை அறிய முடியும். சத்தியத்தை அறிய வேண்டிய வழிகளில் அதனை அறிய எந்த முயற்சியும் இல்லாதபோது அவரால் எப்படிச் சத்தியத்தின் படி வாழ முடியும். எது சத்தியம் என்று அறியாமலே அவ்விதம் வாழ்வதாக எண்ணுவது தவறானது.

சத்தியத்தை அறிந்தால்தான் அதனால் விடுதலை ஏற்படும் என்று இயேசு சொன்னார். தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற சத்திய வார்த்தைகளால்தான் மனிதன் பிழைப்பான் என்று மோசே தெரிவித்தான். (உபாகமம்-8:3) இன்று பல சபைகளிலும் சுவிசேஷ மேடைகளிலும் இயேசு நன்மை செய்கிறார் என்ற விளம்பரங்களையே சத்தியம் என்று எண்ணிப் போதிக்கின்றனர். தங்களுக்கு நன்மை கிடைப்பதாக வாக்குறுதி தரும் பிரசங்கங்களையே அநேகர் சத்தியம் என எண்ணுகின்றனர்.

அநேகர் தங்களின் மனசாட்சிக்கு நல்லதாகப் பட்டபடியே வாழ்வதை, சத்தியத்தின்படி வாழ்வதாக எண்ணுகின்றனர். மனசாட்சிக்கு எது எது சரி என்பது முழுமையாகத் தெரியாது. தேவனுடைய ஆவியினால் புறப்படுகின்ற வார்த்தைகள்தான் எது சரி, எது தவறு என்பதை நாம் சரியாக அறிந்து கொள்ளச் செய்யும். மனந்திரும்பி மறுபடியும் பிறத்தல் என்ற ஆவிக்குரிய அனுபவம் பெற்றவர்கள்தான் தேவ வார்த்தைகளைச் சரியாக உள்வாங்கி உணர முடியும். அந்த இருதயம் தேவனுடைய பார்வையில் எது சரி, எது தவறு என்பதை அறிந்திட ஆவலாயிருக்கும், அந்த இருதயம் வார்த்தைக்கேற்றபடி தனக்குள் மாற்றம் காண ஆவல் கொண்டதாகவும் அதனைச் சாத்தியமாக்க வலிமை கொண்டதாயுமிருக்கும்.

வெறும் ஆராதனை, பக்தி செயல்கள் எனப் பழகிக் கொண்டவர்கள் சத்தியத்தை வாஞ்சையுடன் தேடமாட்டார்கள். அது அவர்கள் இன்னும் மனந்திரும்பிச் சரியான அனுபவத்தில் வரவில்லை என்பதற்கு அத்தாட்சியாக உள்ளது.

உன் உபதேசம் சிறந்தது என்பதைப் பிறர் அறிய வேண்டுமானால்
உன் வாழ்க்கை சிறந்தது என்பதைப் பிறர் அறியச் செய்.

ஜீவ நீரோடை

மனதுருக்கமும், மன இறுக்கமும்

யோனா 3:1-10

தேவன் மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார்... யோனா 3:10

லூக்கா 15:11-32

யோனா புத்தகம் தேவனுடைய மனதுருக்கத்தை ஒருபுறம் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. மறுபுறம் யோனா என்ற மனிதனின் மன இறுக்கத்தைத் தெளிவாகச் சித்தரிக்கின்றது. மனிதன் எவ்வளவுதான் அக்கிரமம், அநியாயம் செய்திருந்தாலும் அவன் தன் தவறை உணர்ந்து, திருந்துவதையே தேவன் விரும்புகிறார். ஆனால் மனிதனோ இன்னொருவன் செய்த தவறுக்காக, அவன் தண்டனை அனுபவிப்பதையே விரும்புகிறான். யோனா புத்தகம் இதனைத் தெளிவாகக் காண்பிக்கின்றது.

கடந்த காலத்தில் அசீரியர்கள் இஸ்ரவேல் தேசத்திற்குப் புரிந்த அநியாயமும், அக்கிரமும் கொஞ்சமல்ல. எனவே அவர்கள் மேல் தேவ கோபம் பாய வேண்டும் என்பதே யோனாவின் எதிர்பார்ப்பு. அக்கிரமக்காரர்களாகிய அவர்கள் தேவ கோபத்தினால் அழிவதற்குப் பதிலாக, மன்னிப்புக் கேட்கும் வாய்ப்பைப் பெற்று தேவ ஆசீர்வாதத்தைப் பெறுவதை அவனால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஆனால் தேவனோ அவனுடைய விருப்பத்திற்கெதிராக இயங்கினார். அவருடைய விருப்பத்தினை ஏற்றுக்கொள்ள இயலாத மனிதனாகவே கடைசி வரை யோனா இயங்கினான்.

இன்று ஒருவேளை அக்கிரமம், அநியாயம் செய்த சிலர் நமக்கு முன்பாக எந்தத் தீங்குகளையும் காணாமல் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கலாம். அத்தனை தீங்கு தீவினை செய்தவர்கள் எந்தக் குறைவுமின்றி நன்றாயிருக்கிறார்களே என்ற எண்ணம் சாதாரணமாக எல்லோருக்கும் தோன்றுவது போல, நமக்கும் தோன்றலாம். இது இயற்கைதான். ஆனால் ஒருவேளை தேவன் அன்று அசீரியர்களின் அழிவை விரும்பாமல், அவர்களின் மனந்திரும்புதலுக்காக பொறுமையாகக் காத்திருந்தது போல, இவர்களின் விஷயத்திலும் பொறுமையாயிருக்க முடியும். அங்கே யோனாவைப் போன்ற விசனம் நமக்கு கூடாது. நம்மையும் கூட இதே கண்ணோட்டத்தில் தேவன் பார்த்து நம்மேல் இரக்கம் வைத்ததினால்தான், நாமும் அழிவைக் காணாமல் தப்பினோம். இல்லையெனில் தேவனுக்கு முன்பாக நாம் செய்த பாவங்கள் கூட, நமக்குப் பெரிய தண்டனையைப் பெற்றுத் தந்திருக்க முடியும்.

கெட்ட குமாரன் உவமையில் கூட அந்த மூத்த குமாரன், பாவம் செய்த தன்னுடைய சகோதரன் அதற்குரிய தண்டனையை அடையாமல், தகப்பனால் கௌரவிக்கப்பட்டதை முழுமையாக வெறுத்ததைக் காண்கிறோம். இன்று நாம் யோனாவின் வழியில் போக விரும்புகின்றோமா? தேவனுடைய வழியில் போக விரும்புகின்றோமா! இன்னொருவர் எத்தனைதான் நமக்குத் தீங்கு செய்திருந்தாலும், அந்த நபருடைய அழிவை அல்லது வீழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்ப்பது தேவனுடைய விருப்பத்திற்கு எதிரானதே.

தாமரை இலை மேல் தண்ணீர் தங்காது. கசப்பான இருதயத்தில் கர்த்தரின் அமைதி தங்காது.

ஜீவ நீரோடை

நான் பாவியா?

சங்கீதம் 139:1-24

நமக்குப் பாவமில்லையென்போமானால்...
1 யோவான் 1:8

ரோமர் 1:1-10

தேவனுடைய நன்மைகளை அடைய முடியாதபடி செய்யும் மிகப்பெரிய தடை பாவமே. தேவனுடைய நன்மைகளைக் கண்டு திருப்தியடைய வேண்டுமானால் ஒரு மனிதன் தன்னை முதலாவது பாவி என்று உணர வேண்டிய மிகப்பெரிய தேவை உள்ளது. இதுதான் தேவபக்தி உடைய பலருக்கு மிகவும் கடினமான விஷயமாக உள்ளது. ஏனென்றால் அவர்களிடமுள்ள சில நல்ல விஷயங்கள் அவர்களுக்குத் தேவையான மிக நல்ல விஷயங்களுக்குத் தடையாக உள்ளன.

தேவபக்தியுடையவர்கள் நல்ல ஆராதனையாளர்களாவும், இறைபக்தி விஷயங்களில் அதிக ஈடுபாடுடையவர்களாகவும் இருக்கமுடியும். எனவே அவர்களுக்கு தங்களைப் பாவிகள் என்று பார்ப்பது கடினமாக இருக்கும். தேவபக்தியுடையவர்கள் நல்ல பல செயல்களைச் செய்கின்றவர்களாக இருக்க முடியும். எனவே நற்செயல்புரிகின்ற தங்களைப் பாவிகளாகப் பார்ப்பது மிகவும் சிரமமான விஷயம். தேவபக்தியுடையவர்கள் தாங்கள் கேட்ட, அறிந்த நல்ல போதனைகளின் அடிப்படையில் தங்களிடம் நல்ல சில நற்பண்புகளை உருவாக்கியிருக்கமுடியும். அவ்வித நற்பண்புகளை உடையவர்கள் தங்களைப் பாவிகள் என்று பார்ப்பது மிக மிக அரிதான விஷயம்.

நிக்கொதேமு நல்ல இறைபக்திமான். அவன் பல நற்செயல்கள் புரிந்தவன். அவனிடம் இறைபக்தி சார்ந்த நல்ல சில பண்புகள் இருந்தன. மேலும் அவன் பலரைப் போதித்து நடத்துகின்றவன். எனவே அவன் தன்னைப் பாவி என்ற நிலையில் பார்த்திருக்க வாய்ப்பே இல்லை. ஆனால் அவன் இயேசுவிடம் வந்தபோது, இயேசு அவனிடம் சொன்ன முதல் விஷயமே, மறுபடியும் பிறத்தலைக் குறித்ததாக இருந்தது. அப்படியானால் இவ்வளவு நல்ல விஷயங்கள் இருந்தாலும் அதற்கப்பாலும் தன்னை ஒரு பாவி என்று அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருந்தது.

தேவபக்தியில்லாதவர்களையும், நற்செயல்கள் இல்லாதவர்களையும், நற்பண்பற்றவர்களையும் பாவிகளாகக் காண்பித்து ஒத்துக்கொள்ள வைப்பது எளிது, ஆனால் தேவபக்தியோடு செயல்படுகின்றவர்களிடம் உள்ள பாவநிலைமையை அவர்களுக்குத் தெரிய வைப்பதுதான் கடினம்.

பாவம் என்பது தேவனை நமக்குள் அறிந்து அவருடைய ஐக்கியத்தை அனுபவிக்க முடியாத ஓர் நிலை, பாவம் என்பது தேவ உறவை நமக்குள் ஆழ்ந்த தாகத்தோடு தேடவிரும்பும் விருப்பம் போதியஅளவு இல்லாத ஒரு நிலை, பாவம் என்பது தேவனுடைய பூரணமான ஆளுகைக்கு இசைந்து வாழ இயலாத ஓர் நிலை, பாவம் என்பது தெய்வீக சமாதானத்தையும், சந்தோஷத்தையும் அடையாளங்காண இயலாத ஓர் நிலை, இவற்றின் அடிப்படையில்தான் ஒருவர் பாவியா இல்லையா என்பதைப் பகுத்தறிய முடியும்.

உன்னுடைய உள்ளத்தில் உள்ளதை நீ கண்டுகொண்டால்
இறைவனிடம் உனக்காக உள்ள நன்மையையும் கண்டுகொள்வாய்

ஜீவ நீரோடை

முதலாவது பரிசுத்தம்

ஏசாயா 1:10-20

வீண் காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டாம்... ஏசாயா 1:13

1 தெசலோனிக்கேயர் 4:1-12

ஒரு பொதுத் தொலைப்பேசி பெட்டியில் ஒரு, ரூபாய் நாணயத்தைப் போட்டால் உடனேயே அது உங்களுக்காக இயங்க ஆரம்பித்துவிடும். ஒரு எடை பார்க்கும் இயந்திரத்தில் ஒரு நாணயத்தைப் போட்டால் உடனேயே அது உங்கள் எடையைக் காண்பித்துவிடும். இவ்விதமான தானியங்கி இயந்திரங்கள் தங்களை இயக்க வருகின்றவர்கள் நல்லவர்களா, கெட்டவர்களா என்றெல்லாம் பார்க்காமல், நாணயம் விழுந்த மாத்திரத்தில் செயல்பட ஆரம்பித்துவிடும். ஆனால் தேவனை நாம் ஒரு எந்திரம் போல எண்ணிவிடக்கூடாது. ஏதோ ஒன்றை நாம் செய்த உடனே, நமக்காக அவர் செயல்பட வந்துவிடுவார் என்று நினைக்கக்கூடாது. தேவன் நமக்கு நன்மை செய்யவே விரும்புகின்றார். அதே வேளையில் தேவனை தேவன் என்ற சரியான நிலையில் நாம் பார்த்து விளங்கிக் கொள்ள வேண்டும். இன்று அனேகர் தேவனை ஒரு இயந்திரம் போல பார்த்துச் செயல்படுகிறார்கள் என்றால் ஆச்சரியமல்ல.

காணிக்கை கொடுத்தால் தேவனுடைய நன்மைகளைப் பெற்றுவிடலாம் என்று அவர்கள் எண்ணுகின்றார்கள். அதிமாக ஜெபித்துவிட்டால் தேவன் தங்கள் காரியத்தை வாய்க்கச் செய்திடுவார் என்று நினைக்கின்றனர். உபவாசம் இருந்து அல்லது பொருத்தனை செய்து ஜெபித்தால் தாங்கள் விரும்பியதைப் பெற்றுவிடலாம் என்று அவர்கள் நம்புகின்றனர்.

ஆனால் நாம் எதைச் செய்கிறோம் என்பதைவிட நாம் எப்படியிருக்கின்றோம் என்பதைத்தான் தேவன் முதலாவது கவனிக்கிறார் என்பதை அறியாமலிருக் கின்றார்கள். ஏசாயா தீர்க்கனின் காலத்தில் தேவன் நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன் என்றார். ஏசாயா - 58-ம் அதிகாரத்தில் அக்கால ஜனங்களின் உபவாச முறையை தேவன் குறை கூறினார். மல்கியா தீர்க்கதரிசியின் வழியாக தேவன் அக்கால இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து உங்கள் கைகளிலுள்ள காணிக்கை எனக்கு உகந்ததல்ல என்றார். (மல்கியா - 1:10)

ஏன் அவ்விதம் கூறினார்? அவர்கள் கர்த்தருக்கு முன்பாக எப்படி வாழ வேண்டும் என்பதற்குப் போதிய கவனம் செலுத்தாமல், ஜெபம், உபவாசம், காணிக்கை வழியாக தேவ ஆசீர்வாதங்களைப் பெற வாஞ்சித்தார்கள். அந்த அணுகுமுறையை தேவன் விரும்பவில்லை. தேவன் பிரதானமாக நம்மிடம் எதை எதிர்பார்க்கின்றார் என்ற விழிப்புணர்வின்றிச் செய்யும் எல்லாச் செயல்களுமே வீணானவையே. உங்கள் காணிக்கை ஜெபம், உபவாசம் யாவையும் தேவன் விரும்புகின்றார் என்பது உண்மைதான். ஆனால் முதலாவது உங்கள் வாழ்க்கை அவர் விரும்பத்தக்க நிலையில் இருந்தாக வேண்டும். உங்கள் இதயம் தேவன் தங்குவதற்கேற்ற தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

கண்ணாடியில் உன் முகத்தைப் பார்த்தால் அழகு தெரியும்
வேதவெளிச்சத்தில் உன் அகத்தைப் பார்த்தால் தவறு புரியும்.

ஜீவ நீரோடை

தேவ உறவின் வாழ்க்கை

எரேமியா 29:1-14 | **கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்** எபேசியர் 2:13 | எபேசியர் 2:11-22

எவ்வளவுதான் எழுதினாலும், பேசினாலும் ஆவிக்குரிய உண்மைகளை அநேகரால் சரியாகப் புரிந்துகொள்ள இயலவில்லை. ஆன்மீக வாழ்க்கை அல்லது ஆவிக்குரிய வாழ்க்கை என்பது நாம் தேவனோடு நேரடியாகப் பேசிப் பழகி ஐக்கியம் கொண்டாடி வாழ்வது என்ற வேத உண்மை பலருக்கு விளங்கவில்லை. பக்தியாக வாழ்வதிலும் பயபக்தியோடு செயல்படுவதிலும் அவர்கள் கவனம் செலுத்திய போதிலும், தேவஉறவுடன் வாழ்வது என்ற உண்மை அவர்களுக்கு அவ்வளவாக விளங்கவில்லை.

இதனுடைய விளைவாகத்தான் அவர்கள் தேவனைச் சார்ந்து வாழ்வதற்குப் பழகாமல், தேவ ஊழியர்களைச் சார்ந்தே வாழப் பழகுகின்றார்கள். தங்களுடைய நன்மைகளுக்காகத் தாங்களே நேரடியாக தேவசமுகத்தில் ஜெபித்துப் பெறுகின்ற விசுவாசம் இல்லை. அவர்கள் எவ்வளவுதான் ஜெபித்தால்கூட, தேவ ஊழியர்களாலேயே இறையருள் பெற்றிட விரும்புகின்றார்கள்.

எனவேதான் பொருளாதாய சிந்தை கொண்ட பலர், தங்களை அதிக இறை வல்லமையுடையவர்களாகக் காண்பித்து, ஜனங்களைத் தங்களை நோக்கி வர வைக்கின்றார்கள். தேவ ஊழியர்களின் வழியாகத்தான் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என பலர் நம்புகின்றனர். ஆனால் தாங்கள் தேவனைத் தேடி மன்றாடி நல்விளைவுகளைக் காண இயலும் என்று நம்பவில்லை, ஏனென்றால் நேரடியான இறைத் தொடர்பின் அனுபவம்தான் கிறிஸ்தவம் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. தேவனை, இறைப்பணியாளர்களுக்கு நெருக்கமானவர்களாக எண்ணி, அவர்கள் மூலமாக இறையருள் தேடுவதுப் பக்தி. தேவனை நமக்கு நெருக்கமானவராக பார்த்து அந்த ஐக்கியத்தின் மூலமாக இறையருள் பெறுவதே ஆவிக்குரிய சரியான புத்தி.

நாம் அன்னியர்களும் பரதேசிகளும் அல்ல. நாம் தேவனுடைய பிள்ளைகள், நாம் தேவன் தந்த அந்த நல்ல உறவின் பாக்கியத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேவ உறவிற்குள் நாம் வரவேண்டும். தேவ உறவில் வளர வேண்டும். தேவ உறவினால் வாழ்க்கையில் மாற்றம் பெற வேண்டும். அப்போது நம்முடைய தேவைகளுக்கு தேவன், போதுமானவராயிருப்பதை நாம் காணமுடியும். தேவ ஊழியர்களின் ஜெபத்திட்டங்கள் மூலமாக அல்ல. தேவன் நமக்கு அளித்த இறை உறவுத் திட்டத்தின் வாயிலாக நன்மைகள் பெறவேண்டும்.

நாம் நம்பிய ஆதாரங்கள் அசையும் போதுதான் நம் நம்பிக்கையை வைக்க வேண்டிய ஆதாரம் எதுவென்பது தெரியும்.

அவருக்கு அக்கறையில்லையா?

சங்கீதம் 22:1-24 | **உமக்குக் கவலையில்லையா என்றார்கள்...** மாற்கு 4:38 | மாற்கு 4:35-41

நான் கிறிஸ்துவுக்கு என் வாழ்க்கையை அர்ப்பணித்து அநேக ஆண்டுகள் ஆகியும் கூட என் வாழ்க்கைப் பிரச்சினைகள் சிலவற்றிற்கு அவர் எந்தப் பதிலையும் தரவில்லை. அந்தப் பிரச்சினைகளால் அவ்வப்போது நான் மிகுந்த வியாகுலங்களையும், வேதனைகளையும் அடைந்ததுண்டு. இயேசு பரிசுத்த வாழ்க்கையைக் குறித்து மட்டும்தான் அக்கரையாயிருப்பாரோ, என்னுடைய வாழ்க்கைப் பிரச்சனைகளைக் குறித்துக் கவலைப்படமாட்டாரோ என்று எண்ணத் தூண்டப்பட்ட வேளைகளும் உண்டு. ஆனால் அவர் என்னுடைய வாழ்க்கைப் படகில் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் சில கொந்தளிப்புகள் தொடர்ந்தாலும் கூட, நான் பயமின்றி விசுவாசத்தோடு நிற்கப் பழகிக் கொள்ளவேண்டும், என்று அவர் எதிர் பார்த்ததை பின்னர் புரிந்து கொண்டேன்.

சீடர்களின் படகில் இயேசு இருந்தார். கடல் கொந்தளித்துப் படகு அலசடிப்பட்ட போதும், சீடர்கள் அதைக்கண்டு பயந்து கூக்குரலிட்ட போதும் அவர் உடனே எழுந்து வரவில்லை. அவருடைய செயல்படா நிலையைக் கண்ட சீடர்கள் நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா? என்றனர்.

தாம் சீடர்களின் படகில் இருக்கையில், கொந்தளிப்புகள் ஏற்பட்டாலும் அவர்கள் பயப்படாமல் இருக்கப்பழக வேண்டும் என்பது அவருடைய எதிர்பார்ப்பாயிருந்தது. அந்த எதிர்பார்ப்பு பின்னாட்களில் சீடர்களின் வாழ்க்கையில் முழுமையாக நிறை வேறியது. தங்களோடு இயேசுகிறிஸ்து இருக்கிறார் என்ற நிச்சயத்தைப் பெற்ற அவர்கள், தங்களுக்கு முன்னால் வந்த அனைத்துச் சோதனையான சூழ்நிலைகளையும் பயப்படாமல் தைரியமாகச் சந்தித்தார்கள். ஆம். அவருடைய அமைதி அல்லது மௌனம் நம்முடைய பிரச்சினைகளில் அவர் கரிசனையாயிருக்கவில்லை என்பதின் அடையாளமல்ல. அவரை மீறி எந்தப் கொந்தளிப்பும் நம்மை பாதிக்க முடியாது என்ற விசுவாசத்தில் நாம் தேறிடவே அந்த மௌனம்.

தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தேவ ஐக்கியத்தைப் பெற்றிருந்த தாவீதுக்கு சுமுகமான சூழ்நிலை உடனே அமையவில்லை. தேவன் அவனோடிருக்கும் போதே, பலவித உபத்திரவங்களின் காற்று அவனுக்கு எதிராக வீசியது. தேவன் உன்னோடிருந்தால் உனக்கு ஏன் இவ்விதமாகக் காரியங்கள் நடைபெறுகிறது? என்று கேட்கத்தக்கவிதமான சோதனைகள் அவனுக்கு வந்தது. ஆனால் அந்த சோதனை அனுபவங்கள் தேவன் தன்னோடு இருந்து தனக்காக வல்லமையாகக் கிரியை செய்வதைக் கண்டுகொள்ளவே உதவியது. அங்கே தேவனோடுள்ள உறவும் அதைச்சார்ந்த தைரியமும் பெருகியதேயன்றிக் குன்றிப்போகவில்லை.

பிரச்சினைகள் உங்கள் கட்டுப்பாட்டைக் கடந்திருக்கலாம். ஆனாலும் இறைவனின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளது.

ஜீவ நீரோடை

இனிமையும் தரமும்

சங்கீதம் 34:1-22

ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள் – 1 தெசலோனிக்கேயர் 5:11

1 தெசலோனிக்கேயர் 5:11-28

சில உணவு வகைகள் நாவிற்குச் சுவையாயிருக்கும். எனவே அதனை எவரும் அனுபவித்துச் சாப்பிடுவார்கள். ஆனால் நாவில் சுவைக்கின்ற அளவிற்கு அவை சரீரத்திற்கு ஏற்றதாயிருப்பதில்லை. சில உணவு வகைகள் சரீரத்திற்கு மிகவும் நல்லவை. ஆனால் நாவிற்கு அவை சுவையாயிருப்பதில்லை. எனவே அவற்றை நல்லவை என்று எண்ணிச் சாப்பிட்டாலும் அதனை விரும்பி அனுபவித்துச் சாப்பிடுவதில்லை. ஆனால் சில உணவு வகைகள் நாவிற்கும் சுவையாயிருக்கும். சரீரத்திற்கும் மிகவும் ஏற்றதாயிருக்கும். இவ்வித உணவு வகைகளை விருப்பத்திற்குரிய உணவு வகைகள் என்று சொல்லலாம்.

சிலர் மிகவும் நல்லவர்கள். அவர்களின் உறவு எந்தத் தீங்கையும் தராது. சிலருடைய உறவு மிக மிக இனிக்கும் தன்மையுடையவை, ஆனால் அந்த உறவுகள் அவ்வளவு நலமாயிருப்பதில்லை. சிலருடைய உறவு இனிக்கவும் செய்யும், அவர்களின் உறவு நல்ல பயனுள்ளதாகவும் இருக்கும். அதுதான் சரியான வாழ்க்கை.

நாம் மிக மிக நல்லவர்களாக இருக்கலாம். ஆனால் நம்முடைய வார்த்தைகளிலும், செயல்களிலும், நடத்தைகளிலும் மற்றவர்களை மகிழச் செய்யும் தன்மையில்லாவிட்டால் பிரயோஜனம் என்ன? நாம் இனிக்க இனிக்கப் பிறரோடு பேசிப் பழகலாம். மற்றவர்களை மகிழச் செய்யும் பல நல்ல செயல்களைச் செய்யலாம். ஆயினும் நம்மிடம் நேர்மை, உண்மை, தாழ்மை, உயர்ந்த ஒழுங்குகள், சிறந்த பழக்கவழக்கங்கள் இல்லாவிட்டால் மற்றவர்களுக்கு நம்முடைய உறவு நல்லதல்ல.

நாம் சரியானவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் சந்தோஷம் தரத்தக்கவர்களாகவும் இருக்க வேண்டும். சிலர் மிகவும் நல்லவர்கள். அவர்களைப் பார்க்கும் போது யோவான் ஸ்நானன், எலியா, நாத்தான் போன்றோர் நினைவிற்கு வருவார்கள். ஆனால் அவர்களிடத்தில் இயேசுவிடம் ஜனங்கள் கண்ட அன்பான வார்த்தைகளையோ, இனியவிதமான அணுகுமுறைகளையோ பார்க்க முடியாது.

நாம் சர்க்கரை போடாத தேனீர் போலவும் இருக்கக் கூடாது. வெறும் ஐஸ்கீரிம் போலவும் இருக்கக் கூடாது. அன்பின் இனிமையைப் பிறர் நம்முடைய வார்த்தைகளிலும், வாழும் விதங்களிலும் பார்க்க வேண்டும். தவறுகள் சற்றும் நம்மிடத்தில் காணப்படாமல் இருக்கலாம். ஆனால் அன்பை எந்த அளவிற்கு நம்மிடம் காணமுடிகிறது என்பதையும் யோசிக்க வேண்டும். ஆம். நல்லவர்களாகவும் வாழ்வோம். இனியவர்களாகவும் வாழ்வோம். அதுதான் உண்மையான ஆவிக்குரிய அனுபவம்.

வாழ்க்கையை முழுமையாக இயேசுவிடம் ஒப்படைத்து விட்டால் துன்பங்கள் நம்மைத் துக்கப்படுத்துவதில்லை.

யார் கெட்டவர்கள்?

ஓசியா 6:1-11 | மனுஷ குமாரன் கெட்டுப் போனதை இரட்சிக்க வந்தார்... மத்தேயு 18:11 | மத்தேயு 18:1-13

கெட்டுப்போனவர்களை இரட்சிக்கவே தாம் வந்ததாக இயேசு கூறினார். சிலரைப் போல நாம் தவறாக வாழாமலும், பொல்லாப்புச் செய்யாமாலும், ஆகாத பழக்கவழக்கங்களில் மூழ்காமலும் இருக்கும் போது, நம்மை நாம் கெட்டவர்களாகப் பார்ப்பது சுலபமானதல்ல. ஆனால் தேவனை நம்முடைய வாழ்க்கையின் மைய மாகக் கொண்டு செயல்படாத நிலையில், நாம் யாவரும் அவருடைய பார்வையில் கெட்டுப் போனவர்களே.

அன்றைய பரிசேயர்கள் சமுதாயத்தில் ஒரு சிலரைப் பாவிகள் என்று முத் திரை குத்திவிட்டுத் தங்களையோ நீதிமான்கள் என எண்ணிப் பெருமையடைவார்கள். அவர்களின் பல இறைவழிபாடுகளும், சமயப்பற்றும், சில நற்செயல்களுமே அவர்களை அவ்விதம் எண்ண வைத்தது. அவைகளே, தங்களைப் பாவிகள் என்ற நிலையில் பார்க்கவிடாமல் அவர்களைத் தடுத்தது. நம்மிடம் சுய நீதியின் அடிப்படையில், அதாவது நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்கின்ற சில பக்தி ஒழுங்குகளால் நல்ல சில விஷயங்கள் நம்மிடம் இருக்க முடியும். அவைகளே நாம் உண்மையில் அடைய வேண்டிய உயர்நிலைகளை அடையவிடாமல் நம்மைத் தடுத்து விட முடியும். அவை நம்முடைய குறைவுகளைக் காணவிடாமல் கண்களைக் குருடாக்கிவிடக்கூடும்.

ஆவிக்குரிய வாழ்க்கையின் மிக முக்கியமான அனுபவம் தேவனோடு உறவாடுவதும், அவருடைய அன்பை நமக்குள் உணருவதாகும். தேவ ஐக்கியத் தின் விளைவாக நமக்குள் நாம் உணர இயன்ற சந்தோஷமும் சமாதானமுமே ஆவிக்குரிய சந்தோஷமும், சமாதானமும் ஆகும். சில நற்கிரியைகளைச் செய்வதாலும், சில நல்ல ஒழுங்குகளோடு வாழ்வதாலும் கூட நமக்குள் ஒரு சந்தோஷ மனநிலையை உணர முடியும். ஆனால் தேவஐக்கியம் கொண்டு வரும் சந்தோஷம் என்பது வித்தியாசமான ஒன்று. சுய நீதி சார்ந்த வாழ்க்கையில் அது இல்லை. நம்முடைய நற்செயல்களை மட்டும் கவனியாமல், நமக்குள் நாம் எந்த அளவிற்கு தேவ அன்பையும், உறவையும் அவருடைய நடத்துதல்களையும், தொடுதல்களையும் உணர முடிகிறது என்பதையும் கவனித்துப் பார்க்க வேண்டும்.

நாம் சிலரைப் போல மோசமானவர்களாக இல்லை. யாருக்கும் நம்மால் தொந்தரவு இல்லை. நமக்கு கிறிஸ்தவ மதபக்தியும், பல ஒழுங்குகளும் உண்டு. ஏன் ? ஊழிய ஈடுபாடுகள் கூட உண்டு. ஆயினும் தேவ ஐக்கியத்தை நாம் உணர முடியாவிட்டால், தேவனுக்கேற்ற முழுமையான சுபாவநிலை இல்லாவிட்டால், இரட்சிப்பின் விசேஷ சந்தோஷம் இல்லாவிட்டால், நாம் தேவனுடைய பார்வையில் கெட்டுப்போனவர்களே. அங்கே இயேசுவால் நால் இரட்சிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. நம்மை நாம் ஆராய்ந்து இயேசுவால் வரும் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுவோம்.

இப்போது நீ இருக்கும் இடத்தை அறிய விரும்பினால் முதலில் உன் இருதயம் இப்போது எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடி.

ஜீவ நீரோடை

அவர் மிக நல்லவர் - ஆனால்

யாத்திராகமம் 33:9-23

உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக
ரோமர் 12:9

ரோமர் 12:5-21

அவர் பண ஆசை சார்ந்து செயல்பட்டதில்லை. பொருளாசைக்காரர் என்று யாரும் அவரைச் சொல்ல முடியாது. வார்த்தைகளிலோ, வாழ்கின்ற விதங்களிலோ அவரிடம் யாரும் ஒழுக்கக் குறைகளைப் பார்க்க இயலாது. யாரோடும் என்றும் கொள்கையின்றிச் சமரசமாகிப் போனதாக யாரும் அவரைக் கூற இயலாது. யாருடைய வாழ்விற்கும் அவர் ஒரு இடறலாக இருந்ததில்லை. திருவாளர் பரிசுத்தம் என்று அவரை யாரும் தைரியமாக நம்பலாம். எனவே அவரைப் பலர் புகழ்கின்றனர். இந்தக் கடைசி காலத்தில் இப்படியொரு பரிசுத்தவானை எங்கே காண இயலும் என்று கேட்கின்றனர். கண்ணை மூடிக்கொண்டு அவரைப் பின்பற்றுவதில் எந்தத் தவறும் இல்லை என்று சாதிக்கின்றனர்.

ஆனால், அவர் அன்புடன் பழகுவதையோ, இன்னொருவரை உயர்வு தாழ்வு பாராமல் மனதார மதிக்கின்றதையோ, இன்னொருவரின் நல்ல கருத்துக்களை மனமுவந்து பாராட்டுவதையோ, தனக்கு அப்பாலும் சரியான கொள்கையாளர்களும், நம்பிக்கையாளர்களும் இருக்க முடியும் என்று எண்ணுகின்ற விதமாகப் பேசு வதையோ யாரும் பார்க்க முடியாது. தாழ்மையைக் குறித்து அவர் பேசுவதை அதி கமாகக் கேட்கலாம். ஆனால் அந்தத் தாழ்மை அவருடைய சிந்தையிலிருப்பதை உறுதிப்படுத்த எதுவும் இல்லை. பிறரை நேசிக்க வேண்டும் என்பதே அவருடைய பிரதான போதனை. ஆனால் அவரிடம் பழகுகின்றவர்கள் அவரின் பேச்சிலோ, பார்வையிலோ, குணத்திலோ அன்பின் வாசனையை முகர்ந்து மகிழ முடியாது.

பரிசுத்தம் என்பது மிகவும் சரியாயிருப்பதும் சரியாகத் தோன்றுவதும் மட்டுமே அல்ல. அதற்கொரு அழகு உண்டு. அதற்கு மனதைக் கவரும் பல நிறங்கள் உண்டு. அதற்கு மற்றவர்களைக் கவருகின்ற அன்பின் வாசனை உண்டு. சில தவறுகளையோ, குறை குற்றங்களையே நம்மிடம் பார்க்க இயலாத அளவிற்கு நாம் எதிலும் சரியாயிருக்கலாம். ஆனால் அதுவே பரிசுத்தம் அல்ல. தாழ்மை என்பதை எளிமையானதோர் வாழ்க்கை முறையில் மட்டுமல்ல. எளிமையானதோர் மனநிலையிலும் பிரதிபலித்துக் காட்ட வேண்டும். எதையும் மற்றவர்களைப் போல ஆசைப்பட்டு விரும்பாமையே பரிசுத்தம் ஆகிவிடாது. மற்றவர்களையும் அவர்களின் நல்ல பண்புகளையும், நல்ல கருத்துக்களையும் நாம் விரும்ப வேண்டும். இன்னொருவரைத் தன்னைப் போல நேசிக்க இயலாதவர்களின் பரிசுத்தம் எல்லாம், உண்மையான இறை அன்பிற்குச் சாட்சியான பரிசுத்தம் அல்ல.

ஆன்மீகம் என்பதைப் பொல்லாத இதயத்தின் குறைகளை மறைப்பதற்காக அல்ல அவற்றை மாற்றுவதற்காக உபயோகி.

ஜீவ நீரோடை

மன இயல்புகளில்

11 நாளாகமம் 32:22-33

வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்...
லூக்கா 11:39

லூக்கா 11:37-54

விசுவாசி அல்லது இரட்சிக்கப்பட்டவர் என்று சொல்லப்படுகின்ற ஒருவரிடம் மதுவாசனை வீசுகிறது. ஒருவர் சிகரெட் புகைக்கின்றார். இன்னொருவர் திரை அரங்கு போய் வருகிறார். இப்படிப்பட்டவர்களைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம், "சே..... இவர்களெல்லாரும் விசுவாசிகளா?..... ரொம்ப மோசமானவர்கள்.. துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள்" இப்படித்தான் பேசுவோம். அப்படித்தானே? அது சரி தான்.

ஆனால் ஒருவர் பொருளாசை மிக்கவர். தாழ்ந்து போகும் தன்மை இல்லாதவர். சுயநலத்தில் பேர்போனவர். தலைமை இடத்திற்கு வரத் துடிப்பவர். இன்னொருவரின் உயர்வைப் பொறுக்காதவர். இப்படிப்பட்டவரைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? இவரை ஒரு பாவியாக நாம் பார்க்க மாட்டோம். ஏனென்றால் இவருடைய பாவங்கள் அவருடைய மன இயல்புகளில் மறைந்து நிற்கின்றன. மற்றவர்களுடைய பாவங்களோ மாம்சத்தில் வெளியரங்கமாகத் தெரிகின்றன.

ஆனால் மாம்சத்தில் வெளியரங்கமாய்த் தெரியும் பாவங்களைவிட, மன இயல்புகளில் மறைந்திருக்கும் பாவங்களே மிகவும் கடுமையானவை. மாம்சத்தில் தெரிகின்ற பாவங்களை ஒரே நாளில் கூட ஒரு மனிதன் முழுமையாக விட்டு விலகி வரமுடியும். ஆனால் மனநிலைகளிலுள்ள மோசமான இயல்புகளை முழுமை யாக விட்டு விலக நெடுநாள் போராட வேண்டிவரும். தேவனுடைய கண்கள் ஒரு மனிதனுடைய உள்ளான நிலையில் மறைந்து நிற்கும் மோசமான தன்மைகளை உற்று நோக்குகின்றன. எனவே நாம் விழிப்புணர்வுள்ளவர்களாக மாறி, நம்முடைய வெளிப்புறமான நிலையின் சுத்தத்தை மட்டும் பார்த்து மேன்மை பாராட்டாமல், உள்ளான நிலையில் எப்படி இருக்கிறோம் என்பதையும் சோதித்துப் பார்க்க வேண்டும்.

அநேகர் உள்ளான நிலையில் உள்ள தவறான குணங்களையும், ஆகாத பண்புகளையும், தீய தன்மைகளையும் நீக்குவதற்கு தேவ கிருபையைத் தேடாமல், சில நற்செயல்களைக் கொண்டும், ஒழுங்குகளைக் கொண்டும் அவைகளைப் பிறருக்குத் தெரியாவண்ணம் மறைக்கவே முயற்சிக்கின்றார்கள். ஆனாலும் எதை மறைக்கின்றார்களோ அது அவ்வப்போது வெளிப்படவே செய்யும். ஆம். உள்நிலையைச் சரி செய்வதற்கு ஆவிக்கேற்ற பிரகாரமாய் எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய முதலில் நாம் கரிசனையாக இருக்க வேண்டும்.

அக்காலப் பரிசேயர்கள் பலவித ஆன்மீகச் செயல்களால் தங்களை மூடிக்கொண்டு, மற்றவர்களின் சிறு தவறுகளையெல்லாம் மிகப் பெரிதாகக் காண்பித்துக் குற்றஞ்சாட்டுவார்கள். ஆனால் இயேசுவின் பார்வையில் அவர்கள் யாவருடைய மனங்களும் பலவித தவறான சுபாவங்களாலும் அக்கிரமச் சிந்தைகளாலும் நிறைந்தவைகளாக இருந்தன.

இறைவார்த்தைகளை மதித்து வாழாதவனின் துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் இறைவன் மதிப்பதில்லை.

செயற்கை உரம்

சங்கீதம் 119:33-48

நீயோ ஆரோக்கியமான உபதேசத்திற் கேற்றவைகளைப் பேசு – தீத்து 2:1

தீத்து 2:1-15

சமீபத்தில் காய்கறி வாங்கச் சென்றிருந்த போது அங்கே இருந்த கத்தரிக்காய்கள் மிகப் பெரியதாகவும், மிக அழகியதாகவும் இருந்ததைக் கண்டேன். அதை உடனே வாங்கிவிட வேண்டும் என்ற ஆசை வந்தது. ஆனால் அவை செயற்கை உரமிடப்பட்டு, நவீன தொழில் நுட்பத்தினால் சாகுபடி செய்யப்பட்டவை என்பதை நான் அறிந்திருந்ததால் அதனை வாங்கவில்லை.

சில காய்கறி வகைகள் மிக விரைவாகவும், மிக அதிகமாகவும் சாகுபடி ஆகிறது. ஆனால் அவற்றால் உடலுக்கு ஆரோக்கியமில்லை. அதினால் சரீரத்தில் வியாதிகள் தோன்றும். இக்காலத் திருச்சபைகளின் நிலைமையும் இதுதான். இன்றைய திருச்சபைகளில் கொடுக்கப்படும் போதனைகள் நவீன தொழில் நுட்பம் சார்ந்தவை. அவற்றை உட்கொண்டு உருவாகின்ற விசுவாசிகளின் ஆவிக்குரிய நிலை கவர்ச்சியாகவும், மிக வேகமான விளைவுகள் ஏற்படுத்துகின்றவையாகவும் உள்ளன.

சில போதகர்களின் போதனைகள் குறுகிய காலத்தில் பெரிய சபைகளை உருவாக்கி விடுகிறது. அவர்களின் போதனைகளும், ஆராதனை முறைகளும் ஆயிரக்கணக்கானோரை விரைந்து சேர்த்து விடுகிறது. ஆனால் அவ்விதம் உருவாகிய விசுவாசிகள் ஆராதனை, பொது இட ஜெபங்கள், பாடல்கள், காணிக்கை கள், பரவசச் செயல்பாடுகள் போன்றவற்றால் சிறந்த ஆன்மீகவாதிகள் போன்ற தோற்றத்தைப் பெறுகின்றார்கள். ஆனால் அவர்களிடம் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை உயர வழி வகுத்த போதிலும், கிறிஸ்தவத்தின் மகிமை விளங்க எதையும் செய்ய இயலவில்லை. அவர்களால் பாஸ்டர்களின் கனவுகள் நிறைவேறுகின்றன. ஆனாலும் கர்த்தரின் திட்டம் நிறைவேறவில்லை.

அவர்களின் பாடல்கள் பலரைப் பாட வைக்கும். அவர்களின் சினிமா நடன ரகமான ஆராதனை அநேகரைக் கவர்ந்திழுக்கும். ஆனால் அவர்களின் வாழ்க்கை முறையோ, அநேகரை இடற வைக்கும். அவர்களின் குண நலன்களில் தெய்வீகம் அல்ல, மாய்மாலமே மிகுந்திருக்கும். இவர்கள் சேருகின்ற இடங்களில் யாருக்கும் ஆவிக்குரிய ஆரோக்கியம் ஏற்படாது. ஆனால் மாய்மாலத் தொற்று பிறருக்கும் ஏற்பட்டு விடும். ஏனென்றால் இவர்கள் பரவச உணர்ச்சித் தூண்டல்களால் உருவானவர்கள். இவர்கள் உண்மையான உபதேசங்களால் உருவானவர்கள் அல்ல. இவர்களுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

மனிதர்களின் மாய்மாலங்கள் உன் மனதை வருத்தாவிடில்
இறைவனின் உண்மைகள் உன்னைத் திருத்தவில்லை என்பதே பொருள்.

தவறு எங்கிருந்தாலும்

11 சாமுவேல் 12:1-14

அவன் மேல் குற்றஞ்சுமந்ததினால்...
கலாத்தியர் 2:11

கலாத்தியர் 2:11-21

தேவ ஊழியர் என்ற போர்வையில் ஒருவர் வீடு வீடாகப் போய்க் கள்ளத்தனமாகக் காணிக்கை வசூல் செய்வார். பிழைப்பிற்காக ஊழியம் என்ற பெயரில் தவறாகச் செயல்படும் அவரை ஒரு சகோதரர் கடுமையாகக் கண்டித்தார். பலரிடம் அவரைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்கும்படி சொன்னார். அதே வேளையில் சுய ஆதாயத்திற்காகத் தந்திரமான முறைகளில் லட்சக்கணக்காக ரூபாய்களை காணிக்கை வசூல் செய்யும் ஒரு பெரிய ஊழியரை இவர் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கின்றார்.

சாதாரணமான ஒருவரின் தப்பிதமான செயலைத் தவறு என்று கண்டு கொண்டது நல்லதுதான். ஆனால் அதே கண்களைக் கொண்டு ஒரு பெரிய ஊழியரின் தவறைக் கண்டு கொள்ளாமல் போனது வேதனையானது. சில வேளைகளில் சாதாரணமான நபர்களின் தவறுகளைக் கண்டு நாம் குமுறுகின்றோம் நேரடியாகக் கண்டிக்கவும் செய்கின்றோம். ஆனால் அதுபோன்ற தவறுகள் பெரிய அளவில் உள்ளவர்களிடம் காணப்பட்டால் மௌனமாகி விடுகிறோம். பெரும்பாலும் அவர்களின் தவறுகளைத் தவறு என்ற நிலையில் பார்க்கவும் மறுக்கின்றோம்.

சாதாரணமானவர்களிடமும், நமக்குப் பிரியமில்லாதவர்களிடமும், சிறு தவறைக் கண்டாலே, கொதித்தெழும்பும் நாம், பெரியவர்களிடமும், நமக்கு வேண்டியவர்களிடமும் எத்தனை பெரிய தவறுகளைக் கண்டாலும் சாதாரணமாக எடுத்துக் கொண்டால், நம்முடைய மனம் உண்மையில் தவறை வெறுக்கவில்லை, சில மனிதர்களைத்தான் வெறுக்கின்றது என்பது உண்மை.

தவறுகளின் விஷயத்தில் சிறியவர், பெரியவர், வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாரபட்சமான அணுகுமுறையைக் கொண்டிருந்தால், அது ஒரு மாய்மாலமே. உண்மையில் தவறுகளை நாம் வெறுக்கவில்லை என்பதே அதனுடைய பொருள். ஆனால் உண்மையான கிறிஸ்தவன் பெரியவர் சிறியவர் என்ற பாகுபாடின்றி தவறை யாரிடம் கண்டாலும் சுட்டிக் காட்டும் பக்குவத்தைப் பெற வேண்டும். நாத்தான் தீர்க்கதரிசியைப் பாருங்கள். சாதாரண ஜனங்களின் தவறுகளை மட்டுமல்ல. ராஜாவாகிய தாவீதின் தவறையும் சுட்டிக்காட்டத் தயங்கவில்லை. யோவான் ஸ்நானன் சாதாரண ஆயக்காரர்களையும் கண்டித்தான். அதுபோல மிகப்பெரியவனாகிய ஏரோது ராஜாவையும் கண்டித்தான். ஒரு தவறைப் பார்த்தபோது பவுல் அப்போஸ்தலன் பிரதான சீடன் பேதுருவையே கண்டிக்கத் தயங்கவில்லை.

தவறைச் சுட்டிக்காட்ட மட்டும் அல்ல. சரியானதைச் செய்து காட்டவும் தெரிந்தவனே நல்லவன்.

அறிவு அலட்சியம் செய்யப்படுகிறது

ஜீவ நீரோடை

எரேமியா 10:1-16

கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று...
எபேசியர் 5:10

எபேசியர் 5:1-17

தேவன் பரிசுத்தர். அவர் நீதிமிகுந்தவர். அவர் உண்மையும் உத்தமமும் உடையவர். அவர் நியாயமும் நேர்மையும் மிக்கவர். தேவனைக் குறித்த இவ்வித மான அறிவு மனிதனுக்கு இல்லையா? தேவன் எப்படிப்பட்டவராக இருப்பார் என்பதை நான் அறியவில்லை என்று யாரும் கூற இயலாது. அப்படியானால் பலவிதமான பக்தியான செயல்களைச் செய்யும் மனிதன், ஏன் அவருக்குப் பிரிய மான நல்ல குணங்களோடு வாழ்வதற்கு முன்வரவில்லை?

அறிவை அவன் அலட்சியம் செய்கின்றான். தேவனைக் குறித்த அறிவை அவன் பெற்றிருந்தும், அந்த அறிவு சார்ந்து செயல்பட அவன் கவனம் செலுத்த வில்லை. அங்கே அவன் அறிவை அவமதிக்கின்றான். மனிதன் தான் தேவன்மேல் பக்திகொண்டு அவரைக் கனப்படுத்துவதாக எண்ணுகின்றான். ஆனால் தேவனைக் குறித்த அறிவின் அடிப்படையில் செயல்படாமல், தன்னுடைய மனப்பிரியம் சார்ந்து பக்தியைக் காட்டுவதால் தேவன் அங்கே அவமதிக்கப்படுகின்றார் என்பதே உண்மை.

உண்மை, உத்தமம், நேர்மை, நியாயம், அன்பு, நீதி, தாழ்மை, தயவு, பொறுமை, சாந்தம் போன்ற நற்குணங்கள்தான் தேவனுக்குப் பிரியம் என்று நாம் அறிந்து கொள்ளவில்லயோ? ஆனால் அறிந்து கொண்டும் அவற்றைக் குறித்துக் கவலைப்படாமல், வேறு சில பக்தியான ஆராதனை முறைகள் மூலம் அவரைக் கனப்படுத்த விரும்பினால் அவர் அதனை ஏற்பாரோ?

இஸ்ரவேல் மக்களின் பக்திச் செயல்களுக்காக தேவ பாராட்டுக் கிடைத்ததைவிட, அதிகமாக தேவ கோபமே கிடைத்தது. அவர்கள் துன்மார்க்க செயல்களால் மட்டுமல்ல, தேவனைக் குறித்த சரியான அறிவைச் சாராத தங்களின் பக்திச் செயல் களால்தான் அதிகமாக தேவனைக் கோபப்படுத்தினார்கள். எனவேதான் தேவன் உங்களின் பலிகளின் திரள் எனக்கு என்னத்திற்கு என்றும், உங்கள் சர்வாங்க பலிகளை வெறுக்கின்றேன் என்றும் கூறினார்.

ஆனால் தேவனைக் குறித்த அறிவைச் சார்ந்து செயல்பட தேவ வல்லமை வேண்டும். வெறும் மனவாஞ்சை போதாது. ஏனென்றால் நற்செயல்களுக்கு முயற்சிகள் போதுமானவை. நற்குணம் சார்ந்த வாழ்க்கைக்கு நல்ல ஒரு வலிமை யான இருதயம் தேவை. அந்த நல்ல இருதயத்தை முதலாவது தேவனிடமிருந்து பெறுவதுதான் உண்மையான பக்தி. ஆம். நம்முடைய மனதைத் திருப்திப்படுத்தும் விதமான பக்தி முறைகளில் அல்ல. தேவன் திருப்திப்படும்படியான பக்தியில் நாம் வளர வேண்டும்.

பேசுகின்றபடி வாழாதவர்களின் போதனைகள்
கேட்டதின்படி வாழாத ஒரு கூட்டத்தை உருவாக்குகிறது.

ஜீவ நீரோடை

அவர் சுமப்பார்

ஏசாயா 41:8-20

நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்... ஏசாயா 41:10

லூக்கா 10:25-37

அவன் ஒரு தேவ பக்தன். பல ஆண்டுகளாக அவனுடைய குதிரை அவனைச் சௌகரியமாகச் சுமந்து சென்றிருக்கிறது. ஒரு நாள் அவன் குதிரையில் சென்று கொண்டிருந்தபோது, அந்தக் குதிரை முரண்டு பிடித்தது. அவன் செல்ல விரும்பிய பாதையில் போகாமல் அதற்குப் பிரியமான பாதைகளில் தாறு மாறாக ஓடியது. அவனால் அதனைக் கட்டுப்படுத்த இயலவில்லை. இந்தக் குதிரை எங்கே தன்னை தூக்கி வீசிக் காயப்படுத்தப் போகிறது என்பதை உணர்ந்த அவன் இறைவனை நோக்கிக் கூப்பிட்டான். ஆனால் இறைவன் உடனே வரவில்லை. குதிரை தாறுமாறாக ஓடி இறுதியில் அவனை எங்கோ தூக்கி வீசியது. மிகுந்த காயங்கள் அவனுக்கு ஏற்பட்டன. சற்று நேரத்திற்குப் பிறகு இறை வன் அங்கே வந்தார். ஆனால் அவனுக்கோ அவர் மேல் கடுமையான கோபம். குதிரை தன்னை எங்கோ தூக்கி வீசும் முன்பு வந்து காப்பாற்றாமல், எல்லாம் முடிந்து போன பிறகு வந்து நிற்கின்றாரே என்ற கோபம் அவனுக்கு. தேவையான நேரத்தில் வராமல் தான் காயப்பட்டு விழுந்து கிடக்கும் போது இறைவன் வந்து என்ன பயன் என்று கேட்டான்.

இறைவன் பொறுமையாகச் சொன்னார். "பக்தனே குதிரையிலிருந்து விழாமல் உன்னை காப்பாற்றியிருந்தால் எனக்கு ஒரு நன்றி சொல்லிவிட்டு போயிருப்பாய், இப்போதோ என்னை விட்டுப் போக முடியாத நிலைமை உனக்கு. உன்னை இதுவரை சுமந்த குதிரை உன்னை தூக்கி வீசிவிட்டுப் போய்விட்டது. இப்போது உன்னிடம் எனக்கு ஏராளம் வேலை உள்ளது. நான் உனக்கு அதிக மாகத் தேவைப்படுகிறேன். உன்னை நான் தூக்கிவிட வேண்டும். உன் காயங்களை ஆற்ற வேண்டும். உன்னைச் சுமந்து செல்ல வேண்டும். பயப்படாதே, இனி நானே உனக்குக் குதிரையாயிருந்து சுமந்து செல்கின்றேன். உனக்கு நடந்தவைகளுக்காகக் கவலைப்படாதே. இனி உன்னோடு நான் அதிகமாக இருக்க வேண்டியதிருக்கிறது. அதனை எண்ணி உற்சாகமாயிரு.

ஆம். சிலவேளை வாழ்க்கை என்னும் குதிரையில் நீங்கள் யோபுவைப் போல சுகமாகப் பயணம் செய்து வந்திருக்கலாம். சில உறவுகள், சில ஐக்கியங்கள் உங்களைச் சௌகரிமாக சுமந்து வந்திருக்கலாம். ஆனால் எதுவுமே நிலையில் லாததுதானே. வாழ்க்கையோ, உறவுகளோ, மனிதர்களோ, சில நல்ல சூழ்நிலைகளோ நம்மை திடீரென எங்கோ தூக்கி வீசிவிட்டுப் போயிருக்கலாம்.

ஆனால் கலங்காதீர்கள். உங்களைத் தள்ளி விட்டுப் போன குதிரைகளை எண்ணித் துக்கப்படாதீர்கள். தேவன் உரிய நேரத்தில் வந்து ஆபத்தைத் தடுக்க வில்லையே என அங்கலாய்க்காதீர்கள். கர்த்தர் உங்களிடம் வருகிறார். அவர் உங்களைத் தூக்குவார். உங்கள் காயங்கட்டுவார். அவரே உங்களைச் சுமந்து செல்வார். இதுவரை சுமந்த குதிரைகளை எண்ணி வியாகுலப்பட்டது போதும். இதோ இப்போது உங்களைச் சுமக்க வருகிறவரோடு ஆழமாக இணைந்து கொள்ளுங்கள். அவரே என்றும் உங்களை நிரந்தரமாகச் சுமக்க வல்லவர்.

நீ இறைவனோடிருந்தால் பாடுகள் உன்னைப் பாழாக்க அல்ல உன்னைப் பலப்படுத்தவே வருகிறது.

நல்லவரிடம் கண்டகுறை

எண்ணாகமம் 12:1-16

அவரிடத்தில் குற்றம் பிடிக்கும்படி
லூக்கா 6:7

லூக்கா 6:1-11

சிலர் சிலரைக் குறித்த நல்ல கருத்துடையவர்களாக இருப்பார்கள். ஆயினும் அவர்களைத் தீவிரமாகக் கவனிப்பார்கள். எங்காவது அவர்களிடம் ஒரு குறைகாண நேர்ந்துவிட்டாலோ அல்லது யாராவது அவர்களைக் குறித்து ஒரு எதிரான கருத்தைச் சொன்னாலோ, ஏதோ ஒன்றைக் கண்டு பிடித்துவிட்ட திருப்தியை உணர்வார்கள். ஏனென்றால் அவர்களைக் குறித்து மோசமாக நினைக்கவோ பேசவோ அவர்களுக்குக் காரணமும் வாய்ப்பும் இதுவரை கிடைக்கவில்லை. இப்பொழுது அவர்களைக் குறைவாகவும், தாழ்வாகவும் பார்ப்பதற்குக் காரணம் கிடைத்து விட்டது. எனவே அவர்களையும் மோசமானவர்களின் பட்டியலில் சேர்த்துக் குஷியடைய முடிகிறது.

இது ஒரு மோசமான மனநிலை. இது யாரையும் நல்லவர்களாகப் பார்க்க விரும்பாத தவறான மனநிலை. இது ஒருவரை நல்லவராக ஏற்றுக்கொள்வதை விரும்ப முடியாத பொறாமையின் விளைவு. இன்னொருவரை நல்லவராகப் பார்க்கப் போதிய காரணம் கிடைக்காதா என்றுதான் நல்ல மனம் யோசிக்கும். இன்னொருவரை மட்டமாகவும், மோசமாகவும் பார்க்க ஒரு வாய்ப்புக் கிட்டாதா என்றுதான் மோசமான மனம் சிந்திக்கும்.

மோசேயின் நல்ல மனநிலையும், நல்ல செயல் நிலையும் தேவனால் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்று. ஜனங்கள் அவனிடத்தில் குறைகாண வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆயினும் எங்கே ஒரு குறையைக் கண்டு அவனை மோசமாகக் காண்பிக்க வாய்ப்புக் கிட்டாதா என்று நாதாப், அபியூ போன்றோர் சுற்றிச் சுற்றி வந்தனர். இயேசுவிடம் யாராலும் குற்றஞ்சாட்டத்தக்க குறை எதையும் காண இயலவில்லை. ஆயினும் அவரை நல்லவர் என்று பார்க்கவும், ஒத்துக் கொள்ளவும் பரிசேயர்களின் பெருமையான மனநிலை இடந்தரவில்லை. எனவே ஏதாவது ஒரு வார்த்தையிலோ அல்லது செயலிலோ குறைவைக் கண்டு பிடித்து, இயேசுவைத் தவறாகக் காண்பிக்க வாய்ப்புத் தேடி அலைந்தார்கள்.

உண்மையிலேயே ஒருவர் தனக்குள் நல்லவராகயிருந்தால், நல்லவன் ஒருவரைக் காணும் போது மிகவும் மகிழ்ச்சியடைவார். அவரை மோசமானவராகப் பார்க்க வாய்ப்பு ஏற்பட்டு விடக் கூடாதே என்று ஆதங்கப்படுவார். நல்லவராக எண்ணப்பட்ட ஒருரைக் குறித்து மோசமாகக் கேள்விப்பட நேரிடும் போது, மனம் துக்கப்படுகிறதா? அது நல்ல மனம், அவ்விதம் கேள்விப்பட்டதும் மனம் குஷியடைகிறதா? அது மோசமான மனம், உங்கள் மனம் எப்படி?

தீயவர்களை வெறுத்துவிட எவராலும் முடியும்
நல்லவர்களை விரும்புவதற்கு சிலராலேயே முடியும்.

உண்மையான ஆன்மீகம்

11 சாமுவேல் 17:24-29 | **சமாரியன்.. அவனைக் கண்டு மனதுருகி... லூக்கா 10:33** | லூக்கா 10:25-37

நல்ல பக்தியான ஒருவர் உண்டு. அவர் பக்திக்கேற்ற நல்ல ஒழுங்களுடன் வாழ்வதில் மிகவும் கவனமாயிருப்பார். யாரும் அவரை எளிதாகக் குறைகண்டு பிடிக்க முடியாது. பக்தியாய் வாழ்வது பற்றியும், இயேசுவின் வழி நடப்பது பற்றியும் அவர் யாரைக் கண்டாலும் பேசுவார். ஆனால் அவர் ஒரு ரூபாய் உதவி யாருக்கும் செய்யமாட்டர். பாவிகளுக்கு சுவிசேஷம் சொல்வது தன்னுடைய மிகப்பெரிய பொறுப்பாக எண்ணும் அவர், தேவையிலுள்ள சிலருக்கு இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டியது அவசியம் என்பதை எண்ணியே பார்ப்பதில்லை.

தேவனைக் குறித்தும், தேவன் விரும்பும் நீதி நியாயங்களைக் குறித்தும் நாம் அதிகமாக அறிந்திருக்கலாம். தேவபக்திக்காகப் பலவித ஒழுங்குகளை வாழ்க்கையில் கடைப்பிடித்துக் கட்டுகோப்புடன் வாழலாம். ஆயினும் மற்றவர்களுக்கு எந்த அளவிற்கு ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுடன் நாம் பிரயோஜனமா யிருக்கின்றோம்? என்பதே முக்கியமான கேள்வி. அதற்குச் சாதகமான ஒரு பதில் நம்முடைய பக்கத்தில் இல்லையேல், நம்முடைய ஆன்மீக வாழ்க்கை அல்லது ஆவிக்குரிய வாழ்க்கை முழுமையானது அல்ல. அது தேவனுடைய பார்வையில் சரியான இறை வாழ்க்கையும் அல்ல.

நல்ல சமாரியன் உவமையில் காயம் அடைந்து உயிருக்குப் போராடும் மனிதனைக் கண்ட ஆசாரியனும், லேவியனும் பக்கமாக விலகிப் போய் விடுகிறார்கள். அவர்கள் பாவிகள் அல்ல. மிகுந்த பக்தி ஒழுங்குடன் வாழ்கின்றவர்கள். ஆனால் சுயநலனை மட்டுமே நோக்கமாகக் கொண்டவர்கள். தங்களைத் தங்களுக்கு மாத்திரமே பிரயோஜனமாகச் செயல்படுத்துகின்றவர்கள். செயல் பூர்வமான ஒரு அன்பினைப் பிறருக்காகக் காண்பிக்க இயலாத குறுகிய இதயமுடையவர்கள். பிறருக்கு உதவாத அவர்களின் ஆன்மீக வாழ்க்கை ஆவிக்குரியது. அல்ல என்பதை அந்த உவமை மூலம் இயேசு தெளிவாகக் காட்டினா.

ஆன்மீகத்தோடு சம்பந்தப்படாத ஒரு சமாரியனிடம் தேவன் எதிர்பார்க்கும் மேன்மையான குணங்கள் இருந்தது. ஆனால் எதற்கெடுத்தாலும் ஆன்மீகம் பேசுகின்ற ஆசாரியனிடத்திலும், லேவியனிடத்திலும் அவைகள் இல்லை. நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை எத்தன்மையது என்பதை ஆராய்வோம். வெறும் ஒழுங்கும் கட்டுப்பாடும்தான் ஆன்மீகம் என்றால் அது தேவனுக்கேற்றதல்ல. தேவன் விரும்பும் ஆன்மீக நிலை அடைவோம்.

பிறர் தயவை நாடி வாழ்கிறவன் உயர்வதில்லை
பிறருக்குத் தயவு செய்கிறவன் தாழ்வதில்லை.

பரிசுத்தம் தரும் தாழ்மை

ஏசாயா - 6:1-10

நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்
ஏசாயா—6:5

எபிரெயர் - 12:1-16

ஒரு மனிதன் பரிசுத்தத்தில் வளர, வளர தாழ்மையிலும் வளர்ந்து கொண்டேயிருப்பான். நான் எவ்வளவு நல்ல பரிசுத்தவானாக இருக்கின்றேன் என்ற எண்ணம் அல்ல. நான் இன்னும் எவ்வளவோ பரிசுத்தவானாக மாற வேண்டியிருக்கிறது என்ற எண்ணமே அவனிடம் மேலோங்கி நிற்கும். சிலர் தங்களின் பரிசுத்தம் வளர, வளர பெருமையடைந்து கொண்டேயிருப்பார்கள். நான் எவ்வளவோ நன்றாயிருக்கின்றேன், மற்றவர்களெல்லாரும் மிகவும் மோசமாயிருக்கின்றார்களே என்ற எண்ணம் அவர்களை ஆளுகை செய்யும்.

தேவனால் நமக்குள் உருவாகும் பரிசுத்தம் என்பது வேறு. தேவனுக்காக நமக்குள் நாம் பரிசுத்தத்தை உருவாக்கிக் கொள்வது என்பது வேறு. தேவனோடு நாம் நல்ல ஐக்கியம் கொள்ள வாஞ்சிப்பதாலும், அவரோடு நல்ல நட்புநிலையில் வாழ ஆசைப்படுவதாலும் தேவனால் நமக்குள் பரிசுத்தம் ஏற்படும். அதாவது தேவனோடு நெருங்கி வாழும் போதும் அல்லது தேவ பிரசன்னத்தை விரும்பித் தேடும் போதும் தேவனுடைய உயர்ந்த பரிசுத்த நிலைமையை நம்முடைய ஆத்துமா கண்டு கொள்ளும். அப்போது அதனுடைய பிரதி விளைவுகளால் நமக்குள் பரிசுத்த வாஞ்சையும், பரிசுத்தமாகுதலும் அதிகமாகும்.

ஆனால் அவ்விதம் பரிசுத்தமாக, பரிசுத்தமாக நமக்குள் இன்னும், இன்னும் பரிசுத்தமாக வேண்டிய ஒரு அவசியத்தை உணருவோம். தேவன் தம்முடைய ஒவ்வொரு அசைவிலும் எவ்வளவு பெரிய பரிசுத்தத்தை உடையவராயிருக்கின்றார் என்பதை அறிந்து கொள்வோம். அப்போது இவ்வளவு பரிசுத்தமான ஒரு தேவனுக்கு முன்பாக நம்முடைய பரிசுத்தம் மிக, மிகக் குறைந்ததே என்பதை நாம் அறிவோம்.

ஏசாயா தீர்க்கன் நல்ல நீதிமான்தான். ஆயினும் பரிசுத்தம் நிறைந்த தேவமகிமையைக் காண நேர்ந்ததும், தன்னை தேவனுக்கு முன்பாக நிற்கத் தகுதியற்ற ஒரு பாவியாகக் கண்டான். தேவனுக்கு முன்பாக நிற்க இன்னும் எவ்வளவாய்ப் பரிசுத்தம் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்தான். ஆம். உண்மையான பரிசுத்தவான்கள் தேவனுக்கு முன்பாகத் தங்களின் பரிசுத்தம் ஒன்றுமேயில்லை என்பதை உணர்வார்கள். சுயநீதி பரிசுத்தவான்கள் மனிதர்களுக்கு முன்பாக தங்களின் பரிசுத்தத்திற்கு இணையாக எதையும் பார்க்க முடியாமல் பெருமைப்படுவார்கள்.

பரிசுத்தவான்கள் பெறும் பந்தயப் பொருள் அல்ல பரிசுத்த ஆவி, பாவத்தை உணர்ந்தவர்கள் பெறும் பரிசுப் பொருளே அது.

ஜீவ நீரோடை

மாற்று வழி

நெகேமியா-4:1-23 | **வீட்டின் மேற்கூரையைப் பிரித்து.....** மாற்கு-2:4 | மாற்கு-2:1-12

சிறகுகள் இருப்பதால் பறவைகள் நாடு விட்டு நாடு பறந்து செல்கின்றன. மனிதனுக்குச் சிறகுகள் கிடையாது. ஆனால் நாடுவிட்டு நாடு பறக்காமலா இருக்கின்றான்? சிறகு இல்லையே என்று அவன் முனகிக் கொண்டிருக்கவில்லை. பறப்பதற்கு ஒரு மாற்று வழியைக் கண்டு பிடித்துப் பறவைகளை விட வேகமாகப் பறந்து கொண்டுதான் இருக்கின்றான். மனமிருந்தால் மார்க்கமும் உண்டு.

ஆம். நம்முடைய ஆர்வங்களுக்கு ஏற்ற சுமுகமான சூழ்நிலைகள் இல்லையென்பதற்காக, ஆர்வங்களை விட்டு அமைதியாகிவிடத் தேவையில்லை. உண்மையான வாஞ்சையும், விருப்பமும் இருக்குமென்றால் ஒரு மாற்றுவழி கிடைக்காமல் போய்விடுவதில்லை. திமிர்வாதக்காரனைச் சுமந்து, இயேசுவிடம் கொண்டு போக விரும்பிய நால்வருக்கு, எளிதாக அவரிடம் போக வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனாலும் அவர்கள் பின்வாங்கவில்லை. மேற்கூரையைப் பிரித்துக் கொண்டு திமிர்வாதக்காரனை இயேசுவிடம் சேர்க்கவே செய்தார்கள். உண்மையான ஆர்வம் ஒரு மாற்றுவழியைக் காண உதவி செய்தது.

எப்படியும் இயேசுவைப் பார்க்க வேண்டும் என்று விரும்பிய சகேயுவுக்கு அது கூடாத காரியமாகயிருந்தது. ஆனாலும் தன் குள்ளமான நிலையை நினைத்து நொந்து போய் திரும்பி விடவில்லை. உண்மையான அவனுடைய ஆர்வம் ஒரு காட்டத்தி மரத்தில் அவனை ஏற வைத்தது. மாற்று வழியில் இயேசுவை அவனால் பார்க்க முடிந்தது. சில நேரங்களில் மேன்மையான விஷயங்களின் மேல் நமக்கு உண்மையான ஒரு ஆர்வமில்லாத காரணத்தினால்தான் சிறு சிறு தடைகளைக் கூட நம்மால் கடந்து செல்ல முடியாமல் போகிறது. ஆம். விருப்பங்களின் மேல் நாம் காண்பிக்கின்ற வலிமையைப் பொறுத்துத் தான் வாய்ப்புகளை உருவாக்க முடியும். ஜெபிக்கவோ, வேதம் படிக்கவோ நல்ல சூழ்நிலையில்லை. ஆவிக்குரிய காரியங்களில் கலந்து கொள்ள நேரமில்லை. இவ்விதமாகச் சொல்லாதிருப்போமாக. நமக்கு உண்மையான ஆர்வம் இருந்தால் நிச்சயம் ஒரு மாற்றுவழி ஏற்படும் என்பதை உறுதியாய் நம்புவோம்.

பர்திமேயுவுக்கு பார்வை வேண்டும். ஆனால் அவன் இயேசுவை நோக்கிச் சத்தமிடுவதையோ மற்றவர்கள் தடை செய்கிறார்கள். ஆயினும் அவன் நின்று விடவில்லை. தன்னுடைய தேவை மிக முக்கியமானதாக அவனுக்கிருந்ததால், அவன் சூழ்நிலை சாதகக் குறைகளைச் சார்ந்து சும்மாயிருந்துவிடவில்லை. அவன் ஓயாமல் கூப்பிட்டுத் தன் தேவையை நிறைவேற்றிக்கொண்டான். பலவந்தம் செய்கிறவர்கள்தான் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கின்றார்கள் என்று இயேசு சொன்னார். நாம் எதையும் மேன்மையாக எண்ணி அதற்காக ஒரு தீவிர முயற்சி செய்தால்தான் சாதிக்க முடியும்.

சின்ன விஷயங்களில் நீ காண்பிக்கும் அசட்டை, பெரிய நன்மைகளைப் பெறவிடாமல் தடுக்கும் முட்டுக்கட்டை.

மன உறுத்தல் இருந்தும்

ஆதியாகமம்-13:7-16

தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய– 11 பேதுரு–2:8

11 பேதுரு-2:1-12

கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து வாழ்ந்து வந்த ஒருவர், நல்ல சம்பளத்திற்கு ஆசைப்பட்டு மதுபானங்கள் பரிமாறப்படும் நவநாகரீக ஓட்டல் ஒன்றில் வேலை செய்தார். அங்கே வருகின்றவர்களின் மிக மோசமான வாழ்க்கை முறைகளையும், அந்த ஓட்டலில் நடைபெறும் ஒழுக்கக் கேடான செயல்களையும் கண்டு தினமும் விசனப்படுவார். யாரைச் சந்தித்தாலும் தான் பணிபுரியும் சூழ்நிலையில் நடைபெறும் மிக மோசமான காரியங்கள், தன்னை மிகவும் விசனப்படுத்துவதைக் குறித்துப் பேசுவார். ஆயினும் அவர் அந்த இடத்தை விட்டு விலகுவதற்கு யோசிக்கவேயில்லை.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது மிக உயர்ந்தரகமான ஒரு வாழ்க்கை வாழ்வதைத் தரிசனமாகக் கொண்டதாகவே இருக்க வேண்டும். அந்தத் தரிசனத்தை விட்டு விலகுவதற்கு உலகப் பிரகாரமான ஆசைகள் வலிமையான தூண்டுதல்களைக் கொடுக்கும். பணம், அந்தஸ்து, வசதிகள், செல்வாக்குகள், சரியற்ற உறவுகள் என ஏதாவது ஒன்று மிக முக்கியமாக எண்ணப்படும் போது, தரிசனப்பாதையை விட்டு விலக நேரிடும். அதற்குப் பின்பு சில விஷயங்கள் மனதை உறுத்தினாலும், மனதை அவற்றைவிட்டு வெளியே கொண்டு செல்வது கடினம்.

ஆபிரகாமோடு மிக உயர்ந்த ஓர் உன்னத தரிசனத்தில் இணைந்து நடந்த வன் லோத்து. மிகச் சரியாக வாழ்ந்த ஒரு தேவ மனிதனோடு ஏற்பட்ட ஐக்கியம் மிகச் சிறந்த ஒரு வாழ்க்கையைக் குறித்த நல்ல அறிவினைக் கொடுத்தது. ஆயினும் செல்வம், அதிகாரம் தலைமைத்துவம் ஆகியவை அவனுடைய கவனத்தை திரும்ப வைத்தது. எனவே தரிசனத்தை நோக்கிச் சென்ற பாதையை விட்டு விலக நேர்ந்தது. தேவ மனிதனாகிய ஆபிரகாமின் ஐக்கியத்தை விட்டுப் பிரிந்து பாவிகளாகிய சோதோம் ஊர் ஜனங்களின் நடுவில் வாழ நேர்ந்தது. அவர்களின் மிக மோசமான ஒழுக்கம் தவறிய வாழ்க்கை, அவன் மனதை மிகவும் பாதித்தது. ஆகிலும் அதனை ஏற்றுக் கொண்டு, அந்தப் பாவச் சூழ்நிலையோடு இசைந்து போய் வாழப் பழகிக்கொண்டான்.

உயர்ந்தவிதமான ஒரு வாழ்க்கை வாழ்வதினால் வருகின்ற திருப்தியை அசட்டை செய்துவிட்டு, பணம், பொருள், அந்தஸ்து, ஆடம்பரம் ஆகியவற்றால் திருப்தியடையச் சென்றால் தவறானவைகளைச் சகிக்க வேண்டிய கட்டாயம் நேரிடும். மன உறுத்தல்கள் ஏற்பட்டாலும் மனமாற்றங்களுக்கு வாய்ப்புகள் குறைவு. எனவே எந்த நிலையிலும், தேவன் தந்த தரிசனத்தை விட்டு விலகா திருக்க, விடாப்பிடித்தனம் தேவை.

எப்படி வாழ வேண்டும் என்பதை உணராததால்தான் ஏன்தான் வாழ்கின்றோம் என்ற சலிப்பு பின் தொடர்கிறது.

சந்தோஷம்

சங்கீதம்-51:1-19

நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும்... சங்கீதம்-51:8

யோவான்-15:1-11

மிகுந்த செல்வங்களை, உடையவர்களுக்கு கிடைக்க முடியாத ஒரு மிகப் பெரிய சந்தோஷத்தை கர்த்தர் தன்னுடைய இருதயத்தில் தந்துள்ளதாக சங்கீதம்-4:7-ல் தாவீது சாட்சி பகர்ந்தான். ஆனால் பத்சேபாள் விஷயத்தில் அவன் பாவம் செய்தபோது அந்தச் சந்தோஷம் அவனை விட்டு விலகிச் சென்றது.

ஆனால் தன்னைச் சந்தோஷப்படுத்திக் கொள்வதற்கு அவனுக்குப் பல நல்ல சௌகரியமான சூழ்நிலைகள் இருந்தது. அவன் ஒரு ராஜா. செல்வத்திற்கோ, செல்வாக்கிற்கோ, சுகபோகங்களுக்கோ அவனுக்கு எந்தக் குறைவும் இருக்க வில்லை. ஆயினும் அவனால் தன்னை மகிழ்ச்சியாக்கிக் கொள்ள இயலவில்லை.

அவன் ஒரு நாள் தேவனை நோக்கிக் கதறினான். நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும் என்று தேவனை நோக்கிக் கெஞ்சினான். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தாரும் என்று அவன் மன்றாடினான். (சங்-51:12)

ஆம். கர்த்தரோடு ஐக்கியமாயிருந்து அதனால் வரும் சந்தோஷத்தை அனுபவித்துப் பழகியவர்கள், அந்த அன்பை ருசிக்காமல் வாழ்வது எளிதானதல்ல. அந்தச் சந்தோஷத்திற்குப் பதிலாக ஆயிரந்தான் உலக சந்தோஷங்கள் கிடைத் தாலும், அவைகளால் அவர்கள் திருப்தியைக் காண இயலாது. தேவனால் வரும் சந்தோஷத்தால் உற்சாகமடைந்த இருதயம், எவ்வளவு பெரிய உலக சந்தோஷங் களைப் பெற முடிந்தாலும் உற்சாகமடையாது. எனவேதான் பாடுகளின் காலத்தில் (சங்-4) சந்தோஷத்தையும், சமாதானத்தையும் காண முடிந்த தாவீதால், சௌகரியான வாழ்க்கைச் சூழ்நிலைகளில் அதனைக் காண முடியவில்லை. அவன் தனக்குள் வெறுமையுடையவனாகப் பரிதவித்தான்.

ஆனால் தன்னுடைய இருதயத்தைச் சந்தோஷிப்பிக்க தேவனால் மட்டுமே முடியும் என உணர்ந்தவனாக, அவரை நோக்கி மன்றாடி வேண்டினான். அந்தச் சந்தோஷத்தை அவன் திரும்பவும் பெற்றுக்கொண்டான். ஆனால் தேவனால் வரும் சந்தோஷத்தினை அனுபவித்த பலர் இழந்து போக நேரிடும் போது, அதனை ஈடுகட்ட உலக சந்தோஷங்களை நாடிச்செல்கின்றனர்.

எனவே பணம், புகழ், அந்தஸ்து வசதி எனத் தங்களைச் சுற்றிலும் சௌகரிய சூழ்நிலைகளைப் பெருக்கிக் கொள்ள அதிக கவனம் செலுத்துகின்றனர். ஆனால் பணமும், புகழும், வசதியும் பெருகப் பெருக அவற்றை இன்னும் மிகுதியாக்க வேண்டும் என்ற பசி வளருகிறதேயன்றி, ஆத்துமாவோ வெறுமையோடேயே இருக்கின்றது. சில விசுவாசிகளும், தேவ ஊழியர்களும் பண ஆசை பிடித்தவர் களாகவும், பொருளாசைப் பித்தர்களாகவும் இருப்பதின் காரணமே தேவனால் வரும் சந்தோஷத்தை இழந்து போனதுதான். ஆம். கர்த்தரால் வராத சந்தோஷம் ஒருபோதும் நம்முடைய தாகங்களைத் தீர்க்காது.

பண மிகுதியால் சந்தோஷப்பட்டவர்களைவிட,
சஞ்சலப் பட்டவர்கள்தான் வரலாற்றில் அதிகம்.

ஜூலை 5

தேவன் அன்பானவரா ?

சங்கீதம்–63:1–11

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள – எபேசியர் – 3:19

எபேசியர்–3:1–21

தேவன் அன்பானவர் என்று வேதம் கூறுகின்றது. தேவன் நம்மை நேசிக்கின்றார் என்ற உண்மையை நம்புவதற்கு நமக்குக் கடினம் ஒன்றும் இல்லை. வேதாகமம் மூலமாகவும், பொதுவான ஆன்மீக அறிவு மூலமாகவும் தேவன் அன்பானவர் என்று நாம் அறிந்திருப்பதால் தேவன் அன்பாயிருக்கின்றார் என்று நாம் உரத்த குரலில் சந்தேகமின்றிக் கூறலாம்.

ஆனால் தேவன் அன்பானவர் என்பது உனக்கு எப்படி தெரியும் என்ற கேள்விக்கு 'வேதாகமம் அப்படி சொல்கிறது' என்ற பதில் போதுமானதல்ல. உலகம் உருண்டை என்று விஞ்ஞானிகள் கூறுவதால் நாமும் கூறுகின்றோம். நாம் நேரடியாகப் பார்க்கவில்லை. ஆனால் தேவன் அன்பானவர் என்பது அப்படியாக அல்ல. அதனை நாம் நேரடியாக அறிய முடியும். நாம் நமக்குள் அதனை அறிந்தால்தான் நம்முடைய விசுவாசம் உண்மையானது.

அப்போஸ்தலனாகிய பவுலும், யோவானும் பொதுவான ஆன்மீக அறிவின் அடிப்படையில் மட்டும் தேவனுடைய அன்பைக் குறித்து அதிகமாக எழுதவில்லை. அவர்கள் தங்களுக்குள் அதனை உண்மையெனக் கண்டுணர்ந்து உறுதிப்படுத்தி னார்கள். எனவேதான் கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது என்றும், கிறிஸ்துவின் அன்பை விட்டுத் தங்களைப் பிரிப்பவன் யார் என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினான்.

வேதாகமத் தகவல்கள் நம்முடைய விசுவாசத்திற்கு உதவுகின்றன. ஆனால் அந்தத் தகவல்களை விசுவாசிப்பதோடு, அவற்றை நாம் உண்மை என்று நமக்குள் அனுபவித்து உறுதிப்படுத்த வேண்டும். தேவன் அன்பானவர் என்ற விசு வாசத்தோடு நின்று விடாமல், அதனை நம்முடைய தனிப்பட்ட அனுபவமாக நாம் காண வேண்டும்.

கர்த்தரை நாம் உண்மையாகத் தேட வேண்டும். அதாவது அவரை நாம் நமக்குள் காண வாஞ்சிக்க வேண்டும். அவருடன் நாம் மனந்திறந்து பேச வேண்டும். நம்முடைய தேவைகளுக்காக மன்றாடுவதோடு நில்லாமல், நம்முடைய வாழ்க்கைச் சூழல்களில் நாம் காண்பதையும், நாம் உணருவதையும் கர்த்தரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். நாம் நண்பரைப் போல அவரிடம் மனம் விட்டுப் பேசி வாழும் போது, கர்த்தர் தம்மை நமக்குள் வெளிப்படுத்தி அவர் நம்மோடி ருப்பதை நாம் அறியச் செய்வார். அந்த மாபெரும் தேவன் தம்மை நாம் அறியச் செய்யும் போது, நம்முடைய ஆத்துமா அவருடைய அன்பை அடையாளங்கண்டு உறுதிப்படுத்தும்.

கிறிஸ்து வாழ்கிறார் என்பதை வாயினால் சொல், அவர் உன்னிடம் வாழ்கிறார் என்பதை வாழ்க்கையினால் சொல்.

கர்த்தர் நல்லவர்

யோபு-2:1-10

யோபு தன் உதடுகளினால் பாவஞ் செய்யவில்லை.... யோபு-2:10

மத்தேயு-7:7-14

குடும்பத்தில் சில துன்பமான நிகழ்வுகளைக் காண நேர்ந்த, ஒரு கிறிஸ்தவக் குடும்பத் தலைவர் "கடவுள் அக்கிரமக்காரனையும், அநியாயக்காரனையும் தான் வாழவைப்பார். என் வாழ்க்கையில் அவர் நல்லவர் என்றும் அன்புள்ளவர் என்றும் அவர் தம்மை நிரூபித்ததில்லை" என்று சற்று கோபத்தோடும், விரக்தியோடும் பேசினார். அநேகர் தேவனைப் பரிசோதனை ரீதியாக அணுகி அவரிடமிருந்து நன்மைகளைத் தேடுகிறார்களேயன்றி, விசுவாச ரீதியாகத் தேடவில்லை. இதுவே அவர்கள் கால முழுவதும் கர்த்தரைத் தேடியும், பலனடைய முடியாமல் போவதற்கு முக்கியக் காரணமாகி விடுகிறது. ஏதாவது ஒரு நன்மையைத் தந்து அல்லது பிரச்சனையை நீக்கி கர்த்தர் தமது அன்பையும், நல்லவர் என்ற நிலையையும் நிரூபிக்க வேண்டும் என்ற மனநிலையோடு நாம் ஜெபித்தால் நமக்கு நல்லது நடக்க வாய்ப்பில்லை.

கர்த்தர் ஒருபோதும் ஏதாவது நன்மையைச் செய்து தம்மை நல்லவராக நிரூபிப்பதில்லை. நிரூபிக்கும் நிலைகளைக் கடந்து அவர் நல்லவராயிருக்கிறார். நாம் நல்லதை எதிர்பார்த்து தேவனிடம் செல்லும் முன்பு, அவர் நல்லவர் என்றும் அன்புள்ளவர் என்றும் நமக்குச் சந்தேகமற்ற நம்பிக்கையும், விசுவாசமும் வேண்டும். "தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் என்று வேதம் சொல்கிறது" (எபி-11:6)

தேவனைக் குறித்த ஒரு சரியான அறிவும், நல்லெண்ணம் சார்ந்த நிச்சயமும், அவரைக் குறித்த சந்தேகமற்ற ஒரு சித்திரமும் இல்லாமல் ஜெபிக்கும் போது, அது விசுவாசமில்லாத ஒரு ஜெபமாக மாறிவிடுகிறது. இந்த நிச்சயம் வந்து விட்டால் நாம் நினைத்தபடி காரியங்கள் சாதகமாக நடவாத சூழ்நிலையிலும் கூட, நம்முடைய இதயம் தேவனைக் குறித்த உயர்ந்த உணர்வுடனேயே இருக்கும். கானானை நோக்கிப் பயணம் செய்த இஸ்ரவேல் மக்கள் நடுவில், தேவனுடைய அன்பு சார்ந்த பல அற்புதங்கள் நிகழ்ந்தும் கூட அவர்கள் தேவனைக் குறித்த சரியான நிச்சயமும், நல்லெண்ணமும் இல்லாதிருந்தார்கள். எனவே அவர்களால் சில குறைவுகளையும், சிரமங்களையும் கடந்து கர்த்தர் காட்டிய திசை நோக்கித் தொடர முடியவில்லை.

தேவன் நல்லவர் என்பதும் அன்பானவர் என்பதும் நம் வாழ்வில் நடைபெறும் நல்லது, தீயதுகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. மேகங்கள் சூழ்ந்து சூரிய வெளிச்சத்தை நாம் காணாத வேளையிலும் கூட, சூரியன் வெளிச்சம் தருகிறது என்ற எண்ணத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது. அதுபோலவே நன்மை நடக்கும் போதும் நடவாத போதும், தேவன் நல்லவரே. அந்த அறிவு நிச்சயமாகிவிட்டால் வருகின்ற ஆறுதல் கொஞ்சமல்ல.

நீ தேவனுடைய பிள்ளையானால் எதிர்ப்புகள் உன்னை உருக்குலைக்க அல்ல, உறுதிப்படுத்தவே வருகிறது.

தேவ நட்பு

அதியாகமம்-17:1-14

நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு – அதியாகமம்–17:1

எபேசியர்-1:13-23

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தீமை என்பது இயற்கையாகவே இருக்கின்றது. அவனுக்குத் தீமை செய்வதற்கு யாரும் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை. மனிதன் நற்பண்புகளை வெளிக் கொணரும் நல்ல இயற்கையோடு பிறக்கவில்லை. எனவே அவனுக்குள் நற்பண்புகளை உருவாக்கு வதற்கு யாராவது தேவைப்படுகின்றனர்.

சில நட்புகள் ஒருவருக்குள் இருக்கும் தீமை மிகுதியாகச் செயல்படுவதற்கு வாய்ப்புக் கொடுக்கின்றன. சில நட்புகள் அந்தத் தீமையை எடுத்துப் போடுவதற்கான தூண்டுதலைக் கொடுக்கின்றன. உலக நட்புகள் நமக்குள் இயற்கையாய் வந்து வளர்ந்து கொண்டிருக்கும் தீமைக்கு, அதிக ஊக்கமும் உந்து விசையும் கொடுக் கின்றன.

எனவே மனிதனுக்கு இறைபக்தி அல்ல, இறை நட்பு அவசியம். மனிதனுக்கு மாற்றத்திற்கான அறிவுரைகள் அல்ல. மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை தேவை. எப்படி வாழ வேண்டும் என்று சொல்லுகின்ற ஒரு மதம் அல்ல. எப்படி வாழ வேண்டுமோ அப்படியாக வாழ வைக்கும் ஒரு வல்லவரே தேவை.

எனவே ஏராளமான இறைப் போதனைகளை இருதயத்திற்குள் கொண்டு வருவதல்ல. இறை வழியில் நடக்க வைக்கும் நல்லவராகிய கர்த்தரை, உள்ளே கொண்டு வர வேண்டும்.

நியாயப்பிரமாணங்களையும், சட்ட திட்டங்களையும், இறைவழி நியாயங் களையும் ஏராளமாகப் பெற்ற இஸ்ரவேல் மக்களால் கடவுளுக்குப் பிரியமாக வாழ இயலவில்லை. ஆனால் நியாயப் பிரமாணம் தரப்படாத காலத்தில் வாழ்ந்த நோவாவும், ஆபிரகாமும், யோசேப்பும் கடவுளின் வழிகளில் நடந்ததோடு, கடவுளின் பிரியத்திற்குரிய மனிதர்களாகவும் விளங்கினர். ஏனென்றால் அவர்கள் நியாயப்பிரமாணம் அறியவில்லை. ஆனால் நியாயங்களின்படி நடக்க வைக்கும் கடவுளோடு இணைந்து நடக்கும் அளவிற்கு தெய்வீக உறவுடன் வாழ்ந்தனர்.

ஆம். இறை வாழ்க்கை என்பது இறைப் போதனைகளைக் கேட்டு அதன்படி நடக்க முடிவு செய்வதல்ல. தேவனோடு நடந்து, அவருடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு ஆவிக்குரிய ஐக்கியத்தின் அனுபவமே அது.

உயிரற்ற மரத்தின் இலைகள் உதிர்வதைப் போல இறைவனோடு நெருக்கமற்றவனின் நம்பிக்கைகள் உதிர்ந்துவிடும்.

தொடரும் பலவீனம்

சங்கீதம்-139:1-24

வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று... சங்கீதம்-139:24

எபிரேயர்-12:1-12

மிகச் சிறப்பாகக் கல்வி நிறுவனம் நடத்தி வந்தார் ஒருவர். பல நிலைகளில் நல்ல திறமைகளும், ஞானமாகப் பல காரியங்களைச் செய்கின்ற ஆற்றலும் உடையவர் அவர். ஆனால் பாலுணர்வு சம்பந்தப்பட்ட விஷயத்தில், சற்று பலவீன மான மனநிலை மட்டும் ஒரு நிழல் போல அவரைத் தொடர்ந்து கொண்டிருந்தது. ஆனால் அது நீண்ட காலமாக அவருடைய முன்னேற்றங்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் சாதனையின் உச்சியை எட்டுவது போன்ற, ஒரு வெற்றியான சூழ்நிலையை வந்தடைந்த வேளையில், தன் ஸ்தாபனத்தில் பணிபுரிகின்ற ஒரு சிலரோடு தகாத தொடர்புகள் இருப்பதாக அரசல் புரசலாக பேசப்படும் நிலை வந்தது. எளிதாக அவைகளை அவர் சமாளித்தார். ஆனால் விரைவிலேயே குற்றத்தை மறுக்க முடியாத ஒரு சிக்கலான சூழ்நிலையைச் சந்திக்க நேர்ந்து தனது மதிப்பையும் மரியாதையையும் கண நேரத்தில் இழந்தார்.

அமெரிக்க வரலாற்றில் பில்கிளிண்டன் மிகவும் முக்கியமான ஒரு மனிதர். மிகப்பெரிய சாதனையாளர். ஆனால் அவரை நிழலைப் போல தொடர்ந்த பாலியல் பலவீனம் அவருடைய நல்ல பெயருக்கு மிகப்பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தியது. சில பலவீனங்கள், சில குறைவான பண்பு நிலைகள், தவறான பழக்க வழக்கங்கள், தப்பிதமான மனநிலை சார்ந்த குணங்கள் நீண்ட காலத்திற்கு எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தாமலும், முன்னேற்றங்களில் குறுக்கிடாமலும் இருக்க முடியும். அவைகள் அமைதியாக நம்மைப் பின்தொடரும். பலவீனங்களும், குறைவுகளும் கண்டறியப்பட்டு அவைகள் களையப்பட உரிய கரிசனை செலுத்தப்படாவிடில், அது நம்மை அழிக்கும் ஒரு வெடிகுண்டை நம் மடியில்கட்டிக்கொண்டு நடக்கும் செயலாகும். அந்தக் குண்டு எப்போது வெடிக்கும் என கூற முடியாது.

தாவீது வெற்றி, முன்னேற்றம், சாதனை, உயர்வு ஆகியவைகளுக்காக அறியப்பட்டவன். ஆயினும் வாலிப நாட்களிலிருந்தே அவனைப் பாலுணர்வு சார்ந்த ஒரு பலவீனம் தொடர்ந்து கொண்டேயிருந்தது. மீகாளைக் கண்டதும் அவளை விரும்பினான். அபிகாயிலைக் கண்டதும் அவளை விரும்பினான். அந்நிய தேசப் பெண்கள் மேலும் வேத சட்டங்களுக்கு விரோதமாக அவன் மோகம் பாய்ந்தது. ஏற்கெனவே சில பெண்களைத் திருமணம் செய்திருந்தும், எருசலேமில் ராஜா ஆனதும் இன்னும் அதிகப் பெண்களைத் திருமணம் செய்தான். முன்னேற்றத் திற்குத் தடை ஏற்படுத்தாமல் தொடர்ந்து நிழல் போல வந்த இந்தப் பலவீனம், ஒரு நாள் பத்சேபாள் விஷயத்தில் அவனுக்குப் பெரிய வீழ்ச்சிகளைக் கொண்டு வந்தது. நம்முடைய வெற்றிகளை மட்டும் கவனியாமல், நம்மைத் தொடரும் பாலியல், பொருளாசை, புகழ், கசப்பு போன்றவை சார்ந்த பலவீன சிந்தைகளை தேவ கிருபையினால் மேற்கொள்ளக் கவனமாயிருக்க வேண்டும்.

சின்னச் சின்னப் பாவங்களே பெரிய, பெரிய வீழ்ச்சிகளை வரவழைக்கின்றன.

பயன்தராத நியாயங்கள்

ஆதியாகமம் - 21:1-13

நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை – 1 கொரிந்தியர்–6:7

1 கொரிந்தியர் - 6:1-12

ஒருவர் தன்னுடைய மனைவியோடு சேர்ந்து வாழ்வதில் இருக்கின்ற சிரமங்களைக் குறித்து இறைப்பணியாளர் ஒருவரிடம் கூறினார். அந்த மனைவியின் குணநிலைகள், செயல்கள், நடத்தைகள் யாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்ட அந்த இறைப்பணியாளர், அந்த கணவருடைய பக்கத்தில் நியாயங்கள் மிகுதியாக இருப்பதைக் கண்டார். உங்கள் மனைவியை விட்டுப் பிரிந்து செல்வதற்கு உங்களுக்கு ஏராளம் நல்ல நியாயங்கள் இருக்கிறது. ஆனால் இந்த நியாயங்களைச் சார்ந்து நீங்கள் செயல்பட்டால் உங்கள் மனைவிக்கு நஷ்டங்களும் கஷ்டங்களும் ஏற்படும். ஆனால் உங்களுக்கு எந்த லாபமும் கிடைக்கப் போவதில்லை என்றார்.

சில நேரங்களில் நம்முடைய பக்கத்தில் எவ்வளவு நியாயங்கள் இருக்கிறது என்பதையே நாம் பார்க்கின்றோம். ஆனால் அந்த நியாயங்களின் அடிப்படையில் செயல்பட்டால் நமக்கு நன்மையா தீமையா என்று பார்ப்பதில்லை. சில வேளை நியாயங்கள் நன்றாக இருக்கின்றது. ஆனால் அந்த நியாயங்களால் நமக்கு நஷ்டங்களேயன்றி லாபமில்லை. அவற்றால் நம்முடைய மன உணர்வுகளைச் சற்று நேரம் திருப்திப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவற்றால் நம்முடைய வாழ்விற்குத் தீமையே அன்றி நன்மை இல்லை.

எனவே நியாயங்கள் என்பதை விட அவற்றால் நமக்கு நன்மை கிட்டுமா என்பதே முக்கியம். நம்முடைய நல்ல நியாயங்களால் நமக்கு நன்மை வர வாய்ப்பில்லையென்றால், அந்த நியாயங்களை விட்டுக் கொடுத்து சில கஷ்டங்களைச் சகிப்பதுதான் நல்லது. அநீதிமானாகிய சவுலுக்கெதிராக தேவ பக்திமானாகிய தாவீதுக்கு நியாயங்கள் பல இருந்தன. சவுலைக் கொல்வதற்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தியிருந்தால், அது அந்தச் சூழ்நிலையில் அநியாயம் அல்ல. ஆனாலும் தன்னுடைய நியாயங்களுக்காகப் போராடிச் செயல்படுவது தேவனுடைய பார்வையில் நலமாயிராது என்று அவன் எண்ணினான். எனவே சவுலினால் வந்த அநீதிகளைச் சகித்துக் கொண்டு பொறுமையாயிருந்தான். எனவே தேவன் அவனுக்கு ஆதரவாக நின்று, தம்முடைய நேரத்தில் தம்முடைய நீதியின்படி செயல்பட்டு, அவனுக்கு உயர்வுகளைக் கொடுத்தார்.

எத்தனையோ குடும்ப வாழ்க்கைகள் உடைந்து போயின. எத்தனையோ விவாகரத்துக்கள், அந்தக் குடும்பத்துப் பிள்ளைகளை அனாதைகளாக்கியிருக்கின்றன. அவர்களுக்கு நியாயங்கள் இருந்தது உண்மை. சில கஷ்டங்களைச் சகிப்பதற்குப் பதிலாக பலர் நியாயங்களுக்காகப் போராடி ஜெயித்தார்கள். அந்த வெற்றி, வாழ்க்கைக்குத் தோல்வியாகிப்போனது.

புதிய கருத்தை மனிதன் காலம் கடந்தே ஏற்றுக்கொள்கிறான்
அதற்குள் அவன் பழமையாகி விடுகிறான்.

எல்லாம் பாவமே

சங்கீதம் - 5:1-12

களவுகளும், பொருளாசைகளும்...
மாற்கு-7:22

மாற்கு - 7:1-23

ஒருவன் ஒரு சிறு தொகையைத் திருடிவிட்டாலோ, இன்னொருவனை பண விஷயத்தில் ஏமாற்றி விட்டாலோ, அவனைக் கட்டி வைத்து அடிக்கவோ, ஆறுமாதம் சிறையில் தள்ளவோ மக்கள் ஆவலாயிருக்கின்றார்கள். அவனைக் காலமெல்லாம் அருவருப்பாகவே பார்ப்பார்கள். ஆனால் நாட்டை ஆளுகின்ற பல அரசியல்வாதிகள் பலகோடிகளை மக்களிடமிருந்து கொள்ளையடிக்கிறார்கள். அவர்கள் மேல் எத்தனைதான் ஊழல் வழக்குகள் இருந்தாலும், மக்கள் அவர் களை அருவருப்பாகப் பார்க்காமல் V.I.P. என்ற உணர்வுடனே பார்க்கவும் கௌரவிக்கவும் செய்கின்றார்கள்.

தவறுகளுக்குப் பல வடிவங்கள் உண்டு. சில அருவருப்பானவை. சில கவர்ச்சியானவை. ஆனாலும் எல்லாம் பாவமான இதயம் என்ற ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. இவற்றில் சிலவற்றைச் சாதாரணமாகவும், சிலவற்றைச் சீரியஸாகவும் எடுத்துக் கொள்வது நம்மை நாமே ஏமாற்றும் செயலாகும்.

கிறிஸ்தவர் எனப்படும் ஒருவரை சிகரெட் பிடிக்கிறவராகவோ, சினிமா பார்க்கிறவராகவோ, மது அருந்துகிறவராகவோ பார்க்க நேர்ந்தால் அதிர்ச்சி யடைந்து "சே... இவரும் ஒரு கிறிஸ்தவரா" என்று அருவருக்கின்றோம். ஆனால் ஒரு கிறிஸ்தவரை அல்லது ஊழியரைப் பண ஆசை பிடித்தவராகவும், ஆடம்பரவாதியாகவும், உள்ளொன்றும் புறம்பொன்றுமாகப் பேசுகின்றவராகவும் பார்த்தால், அதனைச் சாதாரணமாக எடுத்துக் கொள்கின்றோம். சிகரெட் பிடிக்கிற, மது அருந்துகிற மனிதனை விட, பண ஆசையினால் வேடமிடுகிறவனும், பொருளாசை மிகுந்தவனும், கபடாகப் பேசுகிறவனும், அன்பற்றவனும் எந்த விதத்திலும் மேன்மையானவன் அல்ல.

சிலர் பாலியல் தொடர்பான பாவங்களுக்கு விலகி வாழ்வதால், தங்களை மிகப்பெரிய பரிசுத்தவான்களாக எண்ணி விடுவதுண்டு. ஆனால் பொருளாசை, பண ஆசை, பேர், புகழ் பிரஸ்தாப ஆசை போன்றவை தங்களை எவ்வளவு ஆட்கொண் டாலும் அவைகளைப் பாவமாக எண்ணுவதில்லை. வேதம் மிக அருவருப்பானதாக எண்ணி மிகப்பெரிய பாவங்களாக பண ஆசையையும், பொருளாசையையும், புகழாசையையும் காட்டுகிறது. பணம், பொருள், புகழ் சார்ந்த ஆசைகள் ஒருவரை அதிகமாகப் பாதித்திருந்தால், அவர் தேவனுடைய பார்வையில் மிக மிக அருவருப் பாகத் தோன்றுகிறார் என்பது உண்மை. பாவம் சில தவறான பழக்கங்களாக வெளிவரலாம். சில தவறான குணாதிசயங்களாகவும் வெளிவரலாம். எல்லா வற்றையும் சமமாக எண்ணி வெறுக்கும் இதயம் நமக்குத் தேவை.

இச்சைகள் அற்ப நேர இனிமையைக் கொடுத்து,
மனிதனை நெடுங்காலக் கசப்பிற்கு கடனாளியாக்குகிறது.

ஜீவ நீரோடை

அன்பும் தீர்மானமும்

ஆதியாகமம் - 14:8-16

அன்பு நியாயப் பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது – ரோமர்–13:10

ரோமர் – 13:1-14

உணர்வு ரீதியாக இன்னொருவரைக் குறித்த ஒரு நல்லெண்ணம் நமக்குள் ஏற்பட்டால்தான், அவரில் அன்பு கூர நாம் தூண்டப்படுகின்றோம். மற்றவர்களின் செயல், குணம், நடத்தை, வார்த்தை, பழகும் விதம் நமக்குள் ஒரு நல்லுணர்வைத் தர முடியாமல் போனால், அவர்களை நேசிப்பது நமக்குக் கடினமாகி விடுகிறது. கணவனை மனைவி நேசிக்க இயலவில்லை. மனைவி கணவனை நேசிக்க இயலவில்லை. ஏனென்றால், ஒருவரையொருவர் நேசிக்கும் விதமான உணர்வு ரீதியான தூண்டுதல்களுக்கு, அங்கே சில விஷயங்கள் தடைகளாக உள்ளன. எனவேதான் எங்கு போனாலும் அன்பு செலுத்துகின்றவர்களை விட, வெறுப்புணர்வுடன் வாழ்கின்றவர்களையே அதிகமாகக் காண்கின்றோம்.

சமீபத்தில் ஒரு கத்தோலிக்க பாதிரியார் ஒருவர் தன்னுடைய அருளுரையில் அன்பு என்பது வெறும் உணர்வு சார்ந்ததாக அல்ல, அது ஒரு தீர்மானம் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்றார். என்னை அந்தக் கருத்து மிகமிக ஆழமாகத் தொட்டது. இன்னொருவரை நேசிக்க வேண்டிய அவசியமும், கடமையும் நமக்கிருக்கிறது. ஆனால் அவரை நேசிக்க நாம் விரும்பினாலும் அது முடியவில்லை. ஏனென்றால் அந்த நபருடைய செயலோ, குணமோ, நடந்து கொள்ளும் விதமோ அவரை நேசிக்கத்தக்க ஒரு தூண்டுதலை நமக்குத் தரவில்லை. அதற்குப் பதிலாக வெறுப்பதற்கான நியாயங்களின் எல்லையை விரிவாக்குகின்றது. ஆனால் இங்கே நேசிக்கத் தூண்டுகின்ற உணர்வைச் சார்ந்து செயல்படாமல், நேசிக்க வேண்டிய அவசியத்தையும், கடமையையும் சார்ந்து செயல்பட வேண்டும். ஏனென்றால் சத்துருக்களைக் கூட வெறுக்காமல் நேசிக்கவே இயேசு சொன்னார்.

மனிதனுடைய எந்தச் செயலோ, குணமோ, நினைவுகளோ அவனை நேசிப்பதற்கான ஒரு உணர்வுத் தூண்டுதலை தேவனுக்குக் கொடுக்க வாய்ப்பில்லை. ஆனால் மனிதர்கள் தேவனை வெறுப்பூட்டும் பாவிகளாயிருந்தும், தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை அவர்களுக்காகப் பாவ நிவாரண பலியாகக் கொடுத்தார். அது உணர்வுகள் சார்ந்தது அல்ல. அது தேவனுடைய தீர்மானம் சார்ந்தது. மனிதர்களை நேசிக்க அவர் தீர்மானம் செய்து கொண்டார்.

மனைவியை, கணவனை, பிள்ளைகளை, நண்பர்களை, அயலகத்தாரை, அடுத்தவர்களை, சபையாரை நேசிக்க வேண்டியது நமது கடமை. அதற்கான ஒரு தீர்மானம் வேண்டும். அப்போதுதான் அவர்களால் நமக்கு விசேஷ மகிழ்ச்சி எதுவும் இல்லையென்றாலும், அவர்களை நேசிக்க நாம் முன் வருவோம்.

உப்புக் கரையாவிடில் உணவுக்குச் சுவை வராது.
உன்னைக் கரைக்காவிடில் ஒருவருக்கும் பயன் வராது.

நெருங்க நெருங்க

ஏசாயா – 42:16-25

பிரகாசமுள்ள மனக்கண்களை....
எபேசியர் – 1:19

எபேசியர் – 1:13-23

வீட்டின் ஒரு மூலையில் ஒரு அரிக்கேன் விளக்கு எரிந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் சற்றுத் தூரமாக அமர்ந்திருக்கிறீர்கள். இப்போது உங்கள் கையில் இருக்கும் ஒரு கடிதத்தைப் படிக்க விரும்புகிறீர்கள். ஆனால் அதன் எழுத்துக்கள் தெளிவாகத் தெரியவில்லை. நீங்கள் வெளிச்சத்தில்தான் இருக்கிறீர்கள். ஆனாலும் உங்கள் கண்களுக்கு அந்த எழுத்துக்கள் தெளிவாக இல்லை. என்ன செய்வீர்கள்? விளக்கு இருக்கும் இடம் நோக்கி இன்னும் கொஞ்சம் நெருங்குவீர்கள். விளக்கை நெருங்க, நெருங்க கடிதத்தின் எழுத்துக்கள் தெளிவாகத் தெரியும்.

இறைவாழ்க்கையும் அப்படியே. இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பைப் பெற்ற உடன், நாம் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வந்து விடுகிறோம். ஆனாலும் நம்முடைய ஆவிக்குரிய, கண்களுக்கு தேவனுடைய இரகசியங்கள் தெளிவாகத் தெரிவதில்லை. தேவனுடைய மகிமைகளை நம்மால் காண முடிவதில்லை. ஆவிக்குரிய உண்மைகளைச் சரியாக அறிந்து கொள்ள முடிவதில்லை. நாம் இருந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டு இருந்தால் எத்தனை ஆண்டுகள் முயற்சித்தாலும் நிலமை மாறுவதில்லை.

வெளிச்சத்திற்கு வந்தால் மட்டும் போதாது. விளக்காகிய கிறிஸ்துவை நோக்கி நெருங்கிக் கொண்டேயிருக்க வேண்டும். விளக்கை நெருங்க, நெருங்கப் பார்வை தெளிவடையும். மகிமைகள் வெளிப்பட ஆரம்பிக்கும். உண்மைகளை நாம் உணர ஆரம்பிப்போம். கிறிஸ்தவ வாழ்க்கை கிறிஸ்துவை நெருங்கிக் கொண்டேயிருக்கும் வாழ்க்கை. நாம் இந்தியாவிலிருந்து புறப்பட்டு நியூயார்க் விமான நிலையத்தில் இறங்கின உடனேயே, அமெரிக்காவிற்கு வந்து சேர்ந்தவர்கள் ஆகிவிடுகிறோம். ஆனால் இன்னும் பலநூறு மைல்கள் அமெரிக்காவிற்கு உள்ளே சென்று பார்த்தால்தான் அமெரிக்காவை ஓரளவாவது கண்டுகொண்டு, புரிந்துகொள்ளும் நிலமை ஏற்படும். அவ்விதமாக ஆவிக்குரிய வாழ்க்கைப் பகுதிக்கு வந்துவிட்ட நாம் இன்னும் போகவேண்டிய பயணம் மிகுதியாக உண்டு. வளருகின்ற நிலைகள் மூலம்தான் தேவனுடைய சமுகத்தின் மகிமைகளை நாம் கண்டு களிகூர முடியும்.

தேவனை நெருங்குதல் என்பது அதிக ஜெபம், அதிக வேத தியானம், என்பதாக மட்டும் இருக்கக்கூடாது. நாம் வேதத்தை தியானிக்கும் போது நாம் இன்னும் எவ்வளவு மாற வேண்டியுள்ளது, எவ்வளவு வளர வேண்டியுள்ளது, எவ்வளவு இலக்கை நோக்கி ஓட வேண்டியுள்ளது என்பவைகளை உணர முடியும். இவ்விதமாக நாம் மாறவும், வளரவும், ஓடவும் விசுவாசத்தோடு தீவிர வாஞ்சையுள்ளவர்களாக மாறும் போது, தேவனை நோக்கி நாம் அதிகமாக நெருங்கி விடுகிறவர்களாக மாறுவோம். ஆவிக்குரிய ஒரு வாஞ்சையும், தாகமும் தான் தேவனிடம் நம்மை அதிகமாக நெருங்க ஏவுகிறது.

தேவனுக்கேற்றபடி வாழ்வதில் இன்னும் வளர வேண்டும் என்ற வாஞ்சைதான் நீ தேவனை நோக்கி நெருங்கி வருவதின் பிரதிபலிப்பாக உள்ளது.

உகந்தவைதானா?

தானியேல் – 1:1-16

ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது....
1 கொரிந்தியர் – 6:12

1 கொரிந்தியர் – 6:1-20

சில பிள்ளைகளுக்கு வழக்கமாக பிற பிள்ளைகள் சாப்பிடுவது போன்ற பல உணவுப் பொருட்கள் ஒத்துக் கொள்ளாது. எல்லா பிள்ளைகளைப் போல அந்த உணவு வகைகளை அந்த பிள்ளைகளும் ஆசையோடு விரும்பும். ஆனால் அந்த பொருட்களின் ஒவ்வாமையினால் பெற்றோர் அவற்றை கொடுப்பதில்லை. அந்த பிள்ளைகள் உடல் நிலையின் அடிப்படையிலான உணவுகளை தவிர்த்து, பிற உணவுகளைக் கொடுத்தால் உடல் நலன் கெட்டுப் போகும்.

நாம் கர்த்தரை ஏற்றுக் கொண்டு தேவனுடைய பிள்ளைகள் ஆகிவிட்டாலும், நமக்கு எல்லோரைப் போல ஆசைகளும், ஆர்வங்களும் இருப்பது உண்மையே. நாம் ஆசைப்படும் அனைத்து விஷயங்களும் பாவம் என்ற பட்டியலில் சேர்க்க முடிந்தவைகள் அல்ல. அவற்றில் பெரிய தீங்குகள் இருப்பதும் இல்லை.

ஆயினும் தேவனுடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய இயற்கைக்கு அவை தகுதியானவை அல்ல. அவை அவர்களின் ஆவிக்குரிய நலனுக்கு உகந்தது அல்ல. சினிமா படம் எல்லாம் பாவமா, டி.வி. நிகழ்ச்சிகள் எல்லாம் பாவமா, நிறைய பணம் சம்பாதிப்பது பாவமா, நவீனமாக உடுப்பது பாவமா, நட்புக்காக கொஞ்சம் மது அருந்துவது பாவமா, ஒரு பொழுது போக்கிற்காக சீட்டு விளையாடுவது பாவமா, அரசியலில் ஈடுபடுவது பாவமா, சினிமாத்துறையில் வேலை செய்வது பாவமா, பிற மதப் பெண்ணை மணப்பது பாவமா, என்று நிறைய விஷயங்களில் சிலர் கேள்வி கேட்பார்கள்.

ஒரு விஷயம் அதனளவில் பாவமா, இல்லையா என்பதல்ல. அது ஒரு உயர்ந்த தெய்வீக வாழ்க்கை வாழ அழைக்கப்பட்ட நமக்கு தகுதியானதா? அது ஒரு விசேஷமான வாழ்க்கையைத் தெரிந்து கொண்டவர்களுக்கு உகந்ததா? இது போன்றவைகளில் ஈடுபட்டுக் கொண்டே பரிசுத்தமான தேவனுடைய பாதைகளில் குற்ற மனசாட்சியின்றி நடக்க இயலுமா? இது போன்ற காரியங்கள் என்னுடைய இருதயத்தைக் கறைபடுத்தாதா? இவற்றால் என்னுடைய நல்ல தேவ உறவு பாதிக் கப்படாதா? என்பது போன்ற கேள்விகளே அவசியம்.

இராஜ சமுக உணவு வகைகள் யாவும் பாவமாகத்தான் இருக்கும் என்று கூற இயலாது. ஆனாலும் கர்த்தருக்காக வாழ அழைக்கப்பட்ட தனக்கு அவை உகந்த உணவுகள் அல்ல என்று தானியேல் நிதானித்தான். பாவமா என்ற கேள்வியல்ல நமக்கு அவை உகந்தவையா என்று பார்க்க வேண்டும்.

சந்தோஷத்தைத் தேடிச் சென்றால் அது தூரமாகும்
இறைவனைத் தேடிச் சென்றாலோ அது உன்னருகே வரும்.

மனிதரைக் கடவுளாய்

யாத் – 20:1-17

நாங்களும் உங்களைப் போல பாடுள்ள மனுஷர்தானே..... அப் – 14:15

அப் – 14:8-18

என்னுடைய ஊழியத்தின் துவக்க நாட்களில் எனக்கு ஏதாவது ஒரு உதவி வருவதாக இருந்தால், அது தபால்காரர் வழியாகவே வருவதாகயிருக்கும். எனவே நான் ஒவ்வொரு நாளும் தபால்காரர் வாயிலாக ஏதாவது உதவி வருகிறதா என்று தபால்காரரையே பார்த்துக் கொண்டிருக்கும் நிலை இருந்தது. பல நாட்கள் ஏமாற்றமே மிச்சமாகயிருக்கும். ஒரு நாள் தேவன் "உன் பார்வையை தபால்காரன் மேல் அல்ல, என் மேல் வை" என்று பேசுவதுபோல உணர்ந்தேன். எனவே என் பார்வை திரும்பியது. சில நேரங்களில் தபால்காரர் எதையும் கொண்டு வராத நிலையிலும், கர்த்தர் வேறு விதங்களில் உதவி அனுப்புவதைக் காண முடிந்தது.

பல நேரங்களில் உதவியும், உபகாரமும், நன்மையும் செய்கிறவர் தேவன் என்ற நம்பிக்கை நமக்கிருந்த போதிலும், அது யார் வழியாக வருகிறதோ அவர் மேல் நம் பார்வையைப் பதித்து விடும் மடமை நிகழ்ந்து விடுகிறது. சிலர் காலம் முழுவதும் தங்களின் ஆசீர்வாதங்களுக்காகச் சில குறிப்பிட்ட தேவ ஊழியர்களையே நம்பிச் சார்ந்து இருக்கும் நிலை உள்ளது. ஒரு முறை ஒரு ஊழியர் வழியாக ஒரு தேவ நன்மை கிடைத்ததால், தொடர்ந்து அவரையே தேவ நன்மைகளுக்காக அணுகும் தவறான கலாச்சாரம் இன்று கிறிஸ்தவ மக்களிடம் வேகமாகப் பரவி வருகிறது.

பலர் தேவ ஊழியர்களை கடவுளாக்கிவிட்டார்கள் என்பது உண்மை. எனவேதான் குறிப்பிட்ட சில தேவ ஊழியர்கள் ஜெபித்தால் தங்களுக்கு எல்லா நன்மைகளும் கிடைக்கும் என எண்ணுகின்றனர். உண்மையிலேயே அவர்கள் பெற்ற நன்மை தேவனால் வந்தது என நம்பினால், அந்த தேவனிடமல்லவா அடுத்த முறை நன்மைக்காகச் செல்ல வேண்டும்? ஏன் நாம் திரும்பத் திரும்ப தேவ ஊழியர்களிடமே ஆசீர்வாதங்களுக்காகச் செல்கின்றோம்? நாம் அறிந்தோ, அறியாமலோ, நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஊழியர்களை நம்மைக் காப்பாற்றும் கடவுள்களாக மாற்றி, தேவன் மேல் வைக்க வேண்டிய விசுவாசத்தை அவர்கள் மேல் வைத்துவிட்டோம்.

சிலர் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள தேவனுடைய தெளிவான சத்தியங்களை நம்புவதை விட, ஊழியர்களின் தவறான வார்த்தைகளை அதிகமாக நம்புகின்றனர். அந்த ஊழியர்கள் வழியாகச் சில நன்மைகள் வந்ததால், கடவுளின் வார்த்தையை விட அந்த ஊழியர்களின் வார்த்தையைக் கண்ணை மூடிக்கொண்டு நம்பும் நிலை உள்ளது. தேவ ஊழியர்கள் நாம் தேவனை விசுவாசிப்பதற்கு ஏதுவாயிருக்கின்றவர்களே. அவர்கள் ஆசீர்வாத ஒப்பந்தக்காரர்கள் அல்ல. எனவே நாம் ஊழியர்கள் மேல் வைத்த கண்களைத் திருப்பி, தேவன் மேல் வைப்போமாக.

மனிதர்கள் உன்னிடம் இறைவனைக் காணட்டும்
ஆயினும் இறைவனை மனிதரில் நீ தேடிப் போகாதே.

அவர் எப்படிப்பட்டவர்?

சங்கீதம் - 50:1-23

தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து - கொலோசெயர் - 1:10

கொலோசெயர் - 1:1-13

இன்றைய பெரும்பாலான கிறிஸ்தவப் பிரசங்கங்களும், போதனைகளும், உபதேசங்களும் இயேசு வல்லவர், நல்லவர் என்ற தகவல்களையே நமக்கு அதிக மாகத் தருகின்றன. அவர் எவ்வளவு வல்லவர் என்பதையும், அவர் எவ்வளவு நல்லவர் என்பதையும் நாம் அதிகமாக அறிந்து கொள்ளவே பெரும்பாலான கிறிஸ்தவ போதகர்கள் அதிக முனைப்புக் காட்டுகின்றார்கள். மேற்கண்ட நல்ல தகவல்கள் இயேசு நமக்காக எவ்வளவு பெரிய காரியங்களையும் செய்ய முடியும் என்ற விசுவாசத்தில் நாம் வளர உதவுகின்றன. மேற்கண்ட தகவல்கள் இயேசு நமக்கு எப்போதும் ஏதாவது நல்லதைச் செய்வார் என்ற நம்பிக்கையில் வளர உதவுகின்றன.

ஆனால் பெரும்பாலும் இது போன்ற உபதேசங்களால் நமக்குக் கிடைக்கும் இறை அறிவு, நம்முடைய வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட காரியங்களுக்காக இயேசுவைத் தேடவே வழிவகுக்கின்றது. ஆனால் இயேசு வல்லவர், நல்லவர் என்ற விசுவாசம் சார்ந்து செயல்படுகின்ற பலர், தங்களை நல்லவர்களாக்கிக் கொள்ள முடியவில்லை. அவர்களின் இறைபக்தி மிகவும் வல்லமையானது போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தும், அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை ஆவிக் கேற்ற நல்ல தோற்றத்தோடு இல்லை.

ஏனென்றால் கர்த்தர் வல்லவர், நல்லவர் என்ற அறிவைச் சார்ந்த பக்திச் செயல்பாடுகள் மட்டும் போதாது. அவர் எப்படிப்பட்டவர் என்ற ஆவிக்குரிய அறிவு வேண்டும். அவருடைய பரிசுத்த நிலைப்பாடு, அவருடைய நீதியின் தரம், அவருடைய தெய்வீக சிந்தை, அவருடைய உயர்ந்த குணாதிசயங்கள், அவருடைய மேன்மைமிகு தெய்வீக அழகு ஆகியவற்றை நம்முடைய ஆத்துமா அறிய வேண்டும். அது தொடர்பான போதனைகள் நமக்கு மிகுதியாக வேண்டும்.

அப்போதுதான் அவர் எப்படிப்பட்டவர் என்பதை நாம் அறியமுடியும். அவர் குணாதிசயரீதியாக எப்படிப்பட்டவர் என்று நாம் நன்கு அறியும் போதுதான், அவருக்கேற்றபடி நாம் எப்படியிருக்க வேண்டும் என்ற தேவையை உணர முடியும். அப்பொழுதுதான் அவருடைய வல்லமையை மட்டும் விசுவாசியாமல் அவருக்கு முன்பாக நாம் எப்படிப்பட்ட ஒரு ஜீவியம், அவர் எப்படிப்பட்டவர்களாக நாம் வாழ்வதை விரும்பு வார் என்பதையும் சரியாக அறிந்து கொள்ள முடியும். அதுவே உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கை.

கடவுளின் வழி எது என்பதைக் கண்டு கொண்டவன் ஆசீர்வாதத்தின் வழியைக் கண்டடையாமல் இருக்க முடியாது.

ஜீவ நீரோடை

பிள்ளைகள்

சங்கீதம் – 128:1–6

தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாக... 1 தீமோ – 3:4

1 தீமோ – 3:1–16

கணவனுடைய வருமானம் போதுமானதாக இருந்தாலும், மனைவியும் தீவிரமாக உழைப்பது இன்றைய சமுதாய நிலை. பெற்றோர்கள் பிள்ளைகளைப் பெறுகின்றவர்களாக இருக்கின்றார்களே ஒழிய, சரியான முறையில் பேணுகின்றவர்களாக இல்லை. பெரும்பாலும் பிள்ளைகள் வேலைக்காரிகளாலேயே வளர்க்கப்படுகிறார்கள். தாய்ப்பாலைக் கேட்கும் பிள்ளைக்கு தாய் அருகில் இல்லை. எனவே செயற்கையான புட்டிப் பாலில் பிள்ளை வளருகிறது. தாயின் அரவணைப்பையும், அன்பையும் பிள்ளை இயற்கையாகத் தேடுகிறது. ஆனால் வேலைக்காரியினால் அதற்குச் செயற்கையான அன்பும், அணைப்புமே கிடைக்கிறது. எனவே பிள்ளைகள் மனோநிலையில் ஒரு வேறுபட்ட ரீதியில் மாறிப் போய்விடுகிறார்கள்.

பணம் தாராளமாக இருப்பதால் பிள்ளைகளை எப்படியும் கொழு, கொழு வென்று வளர்த்து விடலாம். ஆனால் தாயின் அன்பு, அணைப்பு, ஐக்கியம், பராமரிப்பு இவைகளோடு பிள்ளைகள் வளர்ந்தால்தான் மனநிலையில் அவர்கள் ஆரோக்கியமாக வளர முடியும். வருமானம் பெருக வேண்டியது தேவையே. ஆனால் பிள்ளைகளை இயற்கையான முறையில் நன்கு கவனித்து வளர்க்க வேண்டியது எவ்வளவு முக்கியம்.

அநேகர் பிள்ளைகள் ஒரு குறிப்பிட்ட வயதைத் தாண்டும் போது, அவர்களைச் சீர்திருத்த விரும்புகின்றனர். ஆனால் அது பெரும்பாலும் எதிர் விளைவுகளையே ஏற்படுத்துகிறது. களிமண் ஈரமாய் இருக்கும் போதுதான் அதனை விரும்புகின்ற வடிவத்திற்குக் கொண்டு வர முடியும். அந்தக் காலத்தை இழந்துவிட்டு, பின்னர் காரியங்களைச் சரி செய்ய நினைப்பது பலன் தராது. ஆம். சிறுவயதிலிருந்தே பிள்ளைகளைச் சரியான பாதையில் நடத்தப், போதிய கரிசனை கொள்ளாவிடில், பின்னர் நினைத்து வருந்த நேரிடும்.

தற்கால சமுதாயத்தில் ஏராளமான பிள்ளைகள் வளர, வளர மிகவும் ஒழுங்கற்றவர்களாகப் போவதற்கு முக்கியமான ஒரு காரணம், சிறு வயதுகளில் அவர்கள் பெற்றோரின் நேரடிப் பராமரிப்பில், போதிய ஒழுங்குகளுக்குள் வளர்க்கப்படாததேயாகும். பிள்ளைகள் தாயின் அன்பை அறிய வேண்டும். பிள்ளைகளோடு தாய் அதிகமான நேரங்கள் செலவிட்டு தேவபக்தியை ஊட்ட வேண்டும். பிள்ளைகளோடு நன்கு பழக வேண்டும். பிள்ளைகளின் போக்குகளைக் கவனிக்க வேண்டும். கணவனும், மனைவியும் வெளியே போய் விட்டால் வீட்டில் பிள்ளைகள் எப்படி நலமாக வளர முடியும்? இறைவனின் ஒழுங்குகளை விட, வருமானம் பெரிய பலன்களைத் தராது.

பிள்ளைகள் எப்படி வாழவேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அப்படி நீங்கள் வாழ்கின்றீர்களா என்பதைக் கவனியுங்கள்.

கடினமானவை - ஆனால்

சங்கீதம் - 18:1-20 | **உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்** **லூக்கா - 6:27** | லூக்கா - 6:27-35

வியாதியைப் பரிசோதித்த மருத்துவர், அதற்கு உடனடியான ஒரு பெரிய சிகிட்சை தேவை என்றார். எவ்வளவு செலவாகும் என்று கேட்ட போது ஐந்து லட்சம் செலவாகும் என்றார். ஐயோ இவ்வளவு பெரிய தொகையா! என்று அதிர்ந்தார் வியாதியஸ்தனின் மனைவி. எத்தனை லட்சம் என்று பார்க்காதிருங்கள். உங்களின் கணவர் உயிர் வாழ வேண்டியது எவ்வளவு அவசியம் என்று பாருங்கள் என்றார் மருத்துவர்.

சில நேரங்களில் சில விஷயங்கள் மிகவும் கடினமானவைகள்தான். ஆனால் அவை எவ்வளவு கடினம் என்பதைவிட, அது எவ்வளவு அவசியம் என்பதைப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. சிலர் இயேசுவின் போதனைகள் எவ்வளவு கடுமையாயிருக்கிறது என்றுதான் பார்க்கின்றார்கள். ஆனால் அதனுடைய அவசியத்தை விளங்கிக் கொண்டால், அந்த கடினத்தைக் குறித்த எண்ணம் நம்மைக் கடினப்படுத்தாது.

ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்டுவதா? கடனை வாங்கித் தராமல் போனவனை அப்படியே விட்டுவிடுவதா? சத்துருவை நேசிப்பதா? பகைக்கிறவனுக்கு நன்மை செய்வதா? இதுபோன்ற விஷயங்கள் மிக மிகக் கடினமானவைகள்தான். ஆனால் இவை நமக்கு எவ்வளவு பெரிய நன்மைகளைத் தருகின்றன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இன்றைய சமுதாயத்தில், பதிலுக்குப் பதிலாக எதையாவது செய்யத் தீவிரிக்கும் ஒரு மனநிலைதானே, இடை நிறுத்தம் இல்லாத ஏராளம் பிரச்சினைகளுக்கு வழி வகுக்கின்றன. மனிதன் பழிக்குப் பழியாக எதையாவது செய்ய விரும்பும் மனநிலையை மேற்கொண்டுவிட்டால் எத்தனையோ தீமைகள் வராமல் தடுக்கப்பட்டு விடும். இயேசு சொன்னவைகள் கடினமானவைதான். ஆனால் அவை தவிர்க்கப்பட்டால் பல தீமைகள் தடுக்கப்படாமல் போகும். கடினமான விஷயங்களைச் செய்ய முன்வந்தால் அமைதியையும், ஆனந்தத்தையும், நம்பிக்கையையும், இழக்காமல் என்றும் தலைநிமிர்ந்து நிற்கலாம்.

மிக நல்லவைகளுக்காக அதிகக்கடின பிரயாசங்களும் அவசியமே. ஆனால் கிறிஸ்து கடுமையானதைச் செய்ய மட்டும் சொல்லவில்லை. அவருடைய ஐக்கியத்தின் மூலம் கடினமானவைகளை இலகுவாக்கும் வழிகளையும் காட்டுகின்றார். நாம் பக்திமுயற்சி என்ற அடிப்படையில் செல்லாமல், இறை உறவின் அனுபவங்களில் ஆழமாகச் சென்றிட மனதைச் சாய்க்கும் போது, தேவ உறவினால் கடினமானவைகளை எளிதாக்கிக் கொள்ள இயலும்.

உண்மையின் கசப்பை இன்று நீ ஏற்க மறுத்தால், பொய்யின் இனிமை நாளை உன் வாழ்வைக் கசப்பாக்கும்.

ஆராதனையின் அடுத்த பக்கம்

சங்கீதம் - 147:1-20

இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.... ரோமர் - 12:1

ரோமர் - 12:1-21

சபை கூடுகையில் கலந்து கொண்டு நீங்கள் உற்சாகமாகப் பாடலாம். துதி ஸ்தோத்திரங்கள் சொல்லி தேவனை உற்சாகமாக ஆராதிக்கலாம். தாராளமாக தசம பாகங்களையும், ஸ்தோத்திர காணிக்கைகளையும் செலுத்தலாம். கவன மாக தேவ செய்தியைக் கேட்கலாம். ஊழியக் குழுவோடு சென்று அவ்வப்போது ஊழியமும் செய்யலாம். இவைகள் யாவற்றையும் செய்யும் போது, உங்கள் மனதில் ஒரு பெரிய திருப்தியை, நிறைவை உணர முடியும். கர்த்தருடைய காரியங்களில் ஆழமாக ஈடுபட்டு அவரை ஆனந்தமாக ஆராதித்துவிட்ட ஒரு மனச்சமாதானத்தை நீங்கள் அனுபவிக்கலாம்.

நல்லது. இவை யாவும் நல்லதே. ஆயினும் அத்துடன் ஆராதனை வேளை முடிந்து விட்டதாக எண்ணி விடாதிருங்கள். நீங்கள் ஆராதித்து முடித்து விட்டதாக எண்ணலாம். ஆனால் தேவன் உங்களால் போதுமான அளவு ஆராதிக்கப்பட்டு விடவில்லை. அதாவது அவருக்குச் செலுத்த வேண்டிய கனத்தை இன்னும் நீங்கள் போதுமான அளவு செலுத்திவிடவில்லை.

ஆராதனையின் அடுத்த பக்கத்திற்கு வாருங்கள். உங்கள் கோபத்தை எந்த அளவிற்கு அடக்குகிறீர்கள்? உங்களின் அன்பைப் பிறரிடம் எந்த அளவு வெளிப்படுத்துகிறீர்கள்? உங்களால் எந்த அளவிற்குத் தாழ்ந்து போக முடிகிறது? உங்கள் பெருமையைச் சற்று விட்டுக் கொடுக்க முடிகிறதா? பிறரைக் குறித்த கசப்பை இதயத்தைவிட்டு விலக்கப் பிரயாசப்படுகிறீர்களா? பிறர் துன்பம் கண்டு இரங்கி எதையாவது செய்யும் தயவுணர்வு உங்களுக்கு உள்ளதா? மற்றவர் பிடித்த பிடியை விட்டு இறங்கி வர மறுக்கையில், நீங்கள் இறங்கிவர வெட்கப்படாம லிருக்கிறீர்களா? இப்படி உங்களின் குணத்தை, பண்புகளைச் சோதித்துப் பாருங்கள்.

நம்மில் அநேகர் மேடை நடிகர்களைப் போல ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடி வருகிறபோது மட்டும், தேவனை மிகுதியாகக் கனம் பண்ணிவிட்டது போல பல காரியங்களைச் செய்கின்றோம். பக்தியும், பரவசமும் அங்கேயே உருவாகி, அங்கேயே உருமாறியும் போய்விடுகிறது. ஆனால் பிற மனிதர்கள் நடுவில் நாம் தேவனைக் கனப்படுத்தும் உணர் வோடு எவ்விதப் பண்புகளோடும், இயல்புகளோடும், குணநிலைகளோடும் நம்மால் நடந்து கொள்ள முடிகிறதோ, அதுவே நாம் எந்த அளவிற்கு தேவனைக் கனப்படுத்துதலாகிய ஆராதனையைச் செய்கின்றோம் என்பதை வெளிப்படுத்தும். வாயினாலும், வார்த்தைகளினாலும் அல்ல, வாழ்க்கையின் குணநிலைகளால் தேவனை மகிமைப்படுத்துவதே உண்மையான இறை ஆராதனை ஆகும்.

எப்படி வாழ்கின்றோம் என்பதைக் கவனியாமல், எப்படிச் சிறப்பாக ஆராதிக்கிறோம் என்பதை மட்டும் கவனிப்பவன் பிசாசினால் ஏமாற்றப்பட்டவனே.

ஜீவ நீரோடை

சத்தியம்

யோவான் - 8:31-47

சத்தியத்தையும் அறிவீர்கள்
யோவான் – 8:32

2 யோவான் - 1-13

சத்தியம் என்றால் என்ன? என்ற பிலாத்துவின் கேள்விக்கு ஆண்டவராகிய இயேசு பதில் ஏதும் சொல்லவில்லை. சத்தியத்திற்கான விளக்கம் தர அது தகுந்த சூழ்நிலையாக இருக்கவில்லை. ஆனால் நான் இந்தக் கேள்வியை இன்றளவும் பல முறை கர்த்தரிடம் கேட்பேன். சத்தியம் என்றால் என்னவென்று எதுவும் தெரியாததால் அல்ல. சத்தியத்தைக் குறித்து இன்னும், இன்னும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே.

தேவனால் அறியப்பட்ட விஷயங்களை நாமும் அவ்விதமாக அறிவதற்கு தேவன் நமக்கும் வாய்ப்புத் தருகிறார். அதுதான் சத்தியத்தை அறிதல். தேவனுடைய பார்வையில் எது எப்படித் தோன்றுகின்றதோ, அது நம்முடைய பார்வையிலும் அப்படியே தோன்றும் விதமாக, நம்முடைய இருதயக் கண்கள் திறக்கப்படுவதே சத்தியம் அறிதல்.

ஆனால் முதலாவது ஒரு மனிதன் அறிய வேண்டிய பிரதான சத்தியம், தான் ஒரு பாவி என்பதே. அந்த அறிவைப் பெற்றுக் கொள்ளாதவரை, தேவனுடைய இராஜ்யம் தொடர்பான அல்லது தேவனோடு சம்பந்தப்பட்ட உண்மைகளை ஒரு மனிதன் சரியாக அறிவது கடினம். அறிந்தாலும் அதன்படி செயல்படுவது மிகவும் கடினம்.

தான் பாவி என்றதோர் உண்மையை அறியும் வரை, தேவன் அவர்களுக்குச் சத்தியத்தை வெளிப்படுத்த முடியாது. ஏனென்றால் மனந்திரும்புதலின் விளைவாக வருகின்ற பரிசுத்த ஆவியினால்தான், தேவனுடையவைகளைச் சரியாகப் பார்க்கும் ஆவிக்குரிய பார்வை கிட்டும். சத்தியம் என்பது தேவ ஆவியின் செயல்பாட்டினால் அறியப்படுகின்றவைகளாகும்.

சத்தியம் என்பது இறையியல் போதனைகளாலோ, பக்திப் பிரசங்கங்களாலோ வெளிப்பட்டு நாம் அறிந்து விடுவதில்லை. தேவனோடு நாம் தொடர்ந்து ஐக்கியமாயிருந்து அவருடைய சத்திய ஓசையை நமக்குள் கேட்கமுடிவதால் அடைவதே சத்தியம். ஏனென்றால் ஒரு உண்மை, உண்மை என்று அறிவிக்கப்பட்டால் மட்டும் போதாது. அது உண்மைதான் என்பது நமக்குள் ஆவியினால் உறுதி செய்யப்பட வேண்டும்.

மேலும் சத்தியம் என்பது எவ்வளவு தான் போதிக்கப்பட்டாலும், முதலாவது கேட்ட சத்தியத்தின்படி செயல்பட்டால்தான் அடுத்த சத்தியம் விளங்கும். ஏற்கெனவே அறிந்த சத்தியத்தின்படி செயல்படாதவர்களுக்கு அடுத்த கட்ட சத்தியம் விளங்காது. சத்தியம் என்பது அறிவைப் பெருக்குவதற்காக அல்ல. அறிந்ததின்படி வாழ்வதற்காக.

உண்மைக்கு ஒரு விலையைக் கொடுக்கத் தயாராயிராதவன் பொய்க்கு விலை போவதைத் தடுக்க முடியாது.

ஜீவ நீரோடை

சின்ன விஷயங்களில்

11 சாமு – 16:5–13

ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை
செய்யாதிருங்கள்.... ரோமர் – 12:17

ரோமர் – 12:12–21

தபால் நிலையத்தில் ஒரு நாள் இரண்டு பேர் நெடுநேரமாக காரசாரமாக ஒருவரை ஒருவர் திட்டி சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். விட்டுக் கொடுக்காமல் இருவரும் அசிங்கமான வார்த்தைகளை அள்ளி வீசினார்கள். இறுதியாக கைகலப்பு ஏற்படும்வரை அது ஓயவில்லை. இரண்டு பேருமே படித்தவர்கள். ஆனால் பிரச்சினை எங்கே ஆரம்பமானது தெரியுமா? தபால் தலை வாங்க ஒருவர் வரிசையில் நிற்கும் போது, பின்னால் வந்த மற்றவர் முன்னால் போக முயற்சித்தாராம்.

மிக, மிகச் சாதாரணப் பிரச்சனை. கொஞ்சம் விட்டுக் கொடுத்து பொறுமையாக இருந்திருந்தால், இவ்வளவு மோசமான நிலை ஏற்படுமா? சில வேளை பெரிய, பெரிய வாழ்க்கைப் பிரச்சினைகளையும், அநீதிகளையும், அக்கிரமங்களையும் நாம் பொறுமையாகச் சகித்துக் கொள்கிறோம். ஆனால் மிக, மிக அற்பமான காரியங்களையோ தாங்கிக்கொள்ள விரும்பாமல் பொங்கி எழுகிறோம். இந்த உலக வாழ்க்கையில் பிறருடைய சில தவறான காரியங்களையும், குறைவுகளையும் பொறுத்துக் கொண்டும், ஏற்றுக் கொண்டும்தான் வாழ்ந்தாக வேண்டிய நிலை உள்ளது. இல்லையேல் சிறு, சிறு விஷயங்களுக்காக பெரிய கேடுகளைச் சந்திக்க நேரிடும்.

மனைவியின் சிறு குறைவுகளை கணவன் சகித்துக் கொள்ள மறுக்கிறான். கணவனின் சின்னத் தவறுகளைப் பொறுத்துக் கொள்ள மனமின்றி, மனைவி போர்க்கொடி ஏந்துகிறாள். ஒருவரின் சிறு பிழையை அனுசரித்துப் போக மனமின்றி இன்னொருவர் மனதை இரும்பாக்கிக் கொள்கிறார். முடிவு என்ன? குடும்பங்கள் உடைகின்றன. வாழ்க்கைகள் சிதறுகின்றன. ஐக்கியங்கள் துண்டு துண்டாகிப் போகிறது. காரணம் என்ன? மனதின் பலவீனம், பக்குவமற்ற இதயம். ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கையில் அந்தப் பலவீனம் இருக்கக்கூடாது. தேவனுடைய ஆவியைப் பெற்ற இதயம் பக்குவமடைந்து, எதையும் தாங்கிக்கொள்ளும் தன்மையுடையதாக மாறும். அந்த அனுபவம் இல்லையேல் அங்கே தேவனுடைய கிரியை இல்லையென்றே அர்த்தம்.

ஒவ்வொரு சிறு பிரச்சினைகளையும், ஒவ்வொரு சிறு கருத்து வேறுபாடுகளையும் பெரிதாக ஊதிக்காட்டுவதின் முக்கியமான காரணம், நம்முடைய சுயம் அதிக பலத்தோடு ஆட்சி செய்வதாகும். அது, நான் என்ற உணர்வில் மிகவும் கூர்மையாக உள்ளது. எனவே எதையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ள இயலவில்லை. ஒவ்வொரு சிறு அதிர்வையும் அது பெரிய காயமாக எடுத்துக் கொள்கிறது. ஆம். சுயம் சாவதற்குப் பதிலாக அது உயிரோடிருந்து ஆட்சி செய்வதாலேயே, அது தேவனுடைய நியாயங்களுக்கிசைந்து போக மறுக்கிறது.

சுய உணர்வுகளைச் சார்ந்து வாழ்கின்றவன்
இறை உறவில் தொடர்ந்து வாழ்தல் இயலாதது.

சரியாகக் காண்பிக்கும் வெளிச்சம்

ஏசாயா – 6:1–8

நாம் பாவஞ் செய்யவில்லையென் போமானால்.... 1 யோவான் – 1:10

1 யோவான் – 1:1–10

நம்மை அதிகமாக நேசிக்கின்றவர்களின் கண்களுக்கு நம்முடைய சில தவறுகளும், குறைவுகளும் பெரிதாகத் தோன்றுவதில்லை. அவர்களின் அதிக அன்பு நாம் உண்மையில் இருக்கின்ற விதமாக நம்மைப் பார்க்க விடாமல் செய்து விடுகிறது. நம்மை அதிகமாக வெறுக்கின்றவர்களின் கண்களுக்கு நம்முடைய நல்ல பல விஷயங்கள் பெரிதாகத் தோன்றுவதில்லை. அவர்களும் நாம் உண்மை யில் இருக்கின்ற விதமாக நம்மைப் பார்க்க இயலாமல் போய் விடுகின்றனர்.

சிலருடைய அதிக அன்பு பிசாசைப் போன்றவர்களைக் கூட, தேவ தூதர்களைப் போல பார்க்கச் செய்து விடுகின்றது. சிலருடைய அதிக வெறுப்புணர்வு தேவ தூதர்களைப் போல வாழ்கின்றவர்களைக் கூட, பிசாசுகளைப் போல பார்க்கத் தூண்டி விடுகிறது. ஆம். மனிதர்களின் பார்வைகள் அவர்களின் அப்போதைய மனதின் நிலமையின் அடிப்படையில்தான் இருக்கும். நம்முடைய கண்களும் நம்மைச் சரியாக உள்ளபடியே பார்த்துச் சொல்லத் தகுதியற்றதாகயிருக்கின்றது.

ஆனால் நாம் இருக்கின்ற விதமாக பாரபட்சமில்லாமல் நம்மைப் பார்த்து சரியாகச் சொல்லிட ஏதாவது வேண்டும். கர்த்தரின் வெளிச்சம் மட்டுமே உள்ளபடியே நம்மைக் காண்பிக்கும். கர்த்தரின் வெளிச்சத்தில் வாழ்வதற்கு வந்தவர்களால் மட்டுமே, தங்களைச் சரியாகப் பார்த்து அறிந்து கொள்ள இயலும். ஏனென்றால் கர்த்தருடைய வெளிச்சம் பரிசுத்தமானது. அது பாரபட்சமற்றது. அந்த வெளிச்சம் நம்மிடம் உள்ள நல்லது கெட்டது எதையும் நமக்குச் சரியாக வெளியரங்கமாக்கிவிடும். ஏனென்றால் தேவ வெளிச்சம் மனிதனுடைய உள்ளான நிலமைகளை மிகத் தெளிவாகக் காண்பிக்கும் தன்மையுடையது.

இந்த வெளிச்சத்தில் வாழ்வதுதான் உண்மையான வாழ்க்கை. எனவே தான் தாவீது "கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்து கொள்ளும்" என்று விண்ணப்பித்தான்.

கர்த்தருடைய வெளிச்சத்தில் நம்மைப் பார்ப்பது எப்படி? கர்த்தருடைய பிரசன்னமும் கர்த்தரிடத்திலிருந்து புறப்படுகின்ற சத்திய வார்த்தைகளும்தான் வெளிச்சமாகச் செயல்படுகின்றன. இந்த வெளிச்சத்தை நமக்குள் நாம் காண்ப தற்கு, நாம் தேவ ஐக்கியத்தில் வாழ வேண்டியது அவசியம். ஏனென்றால் தேவன் ஒளியாயிருக்கின்றார். ஒளியாயிருக்கின்ற அவரை வழிபடுகிறவர்களாக மட்டும் வாழாமல், அவரோடு உறவை உடையவர்களாகவும், அவருடைய ஐக்கியத்தைத் தேடுகின்றவர்களாகவும் வாழ்ந்தால்தான், தேவ வெளிச்சத்தை நாம் காணமுடியும்.

உன்னிடம் உள்ள குறையை இன்று பார்க்காவிடில் உன்னிடம் இல்லாத குறையை ஊரார் விரைவில் பார்ப்பார்கள்.

ஜீவ நீரோடை

தண்டனையா?

யோனா – 1:1-17

கர்த்தர் பெருங்காற்றை வரவிட்டார்...
யோனா–1:4

லூக்கா – 15:11-24

சிலருடைய வாழ்க்கையில் சில கஷ்டங்கள், நெருக்கடிகள் ஏற்படும் போது, தேவன் என்னை அதிகமாகச் சோதிக்கிறார். கர்த்தர் என்னைப் பாடுகளின் வழியே நடத்துகிறார் என்றெல்லாம் புலம்பிக் கொண்டேயிருப்பார்கள். ஆனாலும் அவ்விதமான சூழ்நிலைகள் ஏற்படத் தாங்களே ஒருவேளை காரணமாயிருக்கக் கூடுமோ என்றோ, தங்களைச் சரி செய்ய வேண்டிய தேவை இருக்குமோ என்றெல்லாம் சிந்தித்துப் பார்க்க விரும்புவதில்லை. பல பரிசுத்தவான்களுக்கு நேரிடுவது போலவே தங்களுக்கு நேரிடுகிறது எனக்கூறி, தங்களை ஆராய்ந்து பார்க்காமலேயே போய்விடுகிறவர்கள் அநேகர். இதன் விளைவாக மனந்திரும் புதவற்கும், காரியங்களைச் சரிசெய்வதற்கும் தேவன் தந்த வாய்ப்புகள் பயன் படுத்தப்படாமல் போகிறது.

யோனா தேவனுடைய வார்த்தையை நிறைவேற்றாமல், அவருடைய சமுகத்தை விட்டு விலகித் தன் வழியே போனான். ஆனால் அவன் பயணம் செய்த கப்பல் அவனுடைய கீழ்ப்படியாமையினிமித்தம், பெருங்காற்றினால் பாதிக் கப்பட்டது. நடக்கின்ற காரியங்களைக் கண்டு உணர்ந்தான் யோனா, அதனை தேவனுடைய தண்டனை என உணர்ந்தான். அங்கே அவன் அந்தத் தண்டனை தன்னுடைய தவறினிமித்தம் வந்தது என்பதை ஒத்துக் கொண்டு மரிக்கத் தயாரானான். ஆயினும் தான் மனந்திரும்புவதற்கான ஒரு சூழ்நிலையை தேவன் உருவாக்கியுள்ளார் என்பதை அறியாமல் போனான்.

தேவனுடைய வார்த்தைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் உரிய மரியா தையைச் செலுத்தாமல், நம்முடைய மனம் போதித்த வழியில் செல்லும் போது, சில துன்பங்களையும் பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டிய நிலை நேரிடலாம். ஆயினும் அவைகள் தேவனுடைய தண்டனைகள் என்பதைவிட நாம் மனந் திரும்புவதற்காக தேவன் ஏற்படுத்திய சூழ்நிலைகள் என்பதே சரியாகும். சில நெருக்கடியான விஷயங்களை அனுமதித்து, அதன் மூலம் நாம் நம்முடைய தவறுகளை உணர்ந்து மனந்திரும்புவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவது, தேவனுடைய வழியாயிருக்கிறது.

நாம் நம்முடைய தவறுகளின் பலனாக அழிந்து போக வேண்டும் என்பது தேவனுடைய சித்தமல்ல. ஆனால் அவர் அனுமதிக்கும் இக்கட்டான நிலைகளை உணர்ந்து மனந்திரும்பி, அவருடைய ஆசீர்வாதங்களைப் பெறவேண்டும் என்பது அவருடைய சித்தமாயிருக்கிறது. இக்கட்டுகளும், இடையூறுகளும் ஏற்படும் போது ஒரு வேளை எதிலிருந்தாவது, நாம் மனந்திரும்பி அவரிடம் வர தேவன் அந்தச் சூழ்நிலையை உருவாக்குகிறாரோ அனுமதிக்கின்றாரோ என்று ஆராய்தல் அவசியம்.

பாடுகளின் பாதையில் நாம் கற்ற பாடங்களே,
பிறர் வெற்றி பெற நாம் கொடுக்கும் ஆயுதங்கள்.

ஆலயம் எங்கே?

ஏசாயா - 1:10-16

நீங்கள் என் சந்நிதியில் வரும்போது
ஏசாயா - 1:12

1 கொரிந்தியர் - 6:1-20

மனம்போனபடி தாறுமாறாக வாழ்கின்றவர்கள் கூட, ஆலயம் என்று அழைக்கப்படும் இடத்தில் வந்ததும், மிகவும் பணிந்து குனிந்து பயபக்தியை வெளிப்படுத்துகின்றனர். ஏனென்றால், அங்கே தேவன் இருக்கிறார் என்றும், தேவனுக்கு உரிய மரியாதை செலுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர்களின் பொது அறிவு சொல்லுகின்றது. ஆனால் தேவன் தங்குகின்ற ஆலயம் கட்டிடம் அல்ல என்றும், மனிதனே தேவஆலயம் என்றும் வேதம் சொல்கின்றது. (1 கொரி-3:16; 6:19)

மனிதன் தான் தேவன் தங்கும் ஆலயம் என்றால் அந்த மனிதன் இருக்குமிடத்தில்தான் தேவன் மகிமைப்பட வேண்டும். அதாவது மனிதன் எங்கெல்லாம் தன்னுடைய சரீரத்தைக் கொண்டு செல்கின்றானோ, அங்கெல்லாம் தேவனைக் குறித்த பயபக்தியை வெளிப்படுத்த வேண்டும். அதாவது தன்னுடைய சரீரம் எங்கிருந்தாலும். அந்த சரீரமாகிய ஆலயத்தில் தேவன் மகிமைப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வோடு செயல்பட வேண்டும்.

ஆலயம் என்ற கட்டிடத்தில் மட்டும் பக்தியும் பயமும் இருந்தால் அது அர்த்த மற்றது. ஏனென்றால், தேவன் மனிதர்கள் கட்டிய கட்டிடத்தில் தங்குவதில்லை என்று வேதம் சொல்லிவிட்டது. (அப்-7:48 ; 17:24) நம்முடைய பயபக்தியையும், மரியாதையையும் பெற்றுக் கொள்வதற்காக தேவன் ஆலயம் என்ற கட்டிடத்தில் காத்துக் கொண்டிருக்கமாட்டார்.

நாம் எங்கிருந்தாலும், எதைச் செய்தாலும், அங்கே நம் நடுவில் தேவன் இருக்கின்றார் என்ற விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். வேலை செய்கின்ற இடங்களில், தொழில் செய்யும் இடங்களில், பொழுது போக்கும் இடங்களில், சமுதாய உறவு வட்டங்களில் நம் நடுவில் தேவன் இருக்கின்றார் என்ற சிந்தை நமக்கு வேண்டும். அங்கெல்லாம் நாம் மனம் விரும்பியபடியும், சுய சுபாவங்களின்படியும் வாழ்ந்து விட்டு, ஆலயம் என்ற இடத்தில் வரும்போது மட்டும் பக்தி காட்டினால் அதை தேவன் ஏற்கமாட்டார். எனவேதான் பழைய ஏற்பாட்டுக் கால யூதர்களின் பலவித ஆலய ஆராதனைகளைக் கண்டு, தேவன் அவர்களைப் பாராட்டாமல் கடுமையாக எச்சரித்தார்.

நீ வாழ்கின்ற விதம் தேவனைக் கனப்படுத்தட்டும்
இல்லையேல் நீ ஆராதிக்கின்ற விதம் தேவனைக் கோபப்படுத்தும்.

ஜூலை 24

ஜீவ நீரோடை

திருப்தி எப்போது ?

ஏசாயா – 55:1–7

நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... மத்தேயு – 5:6

மத்தேயு – 5:1–16

என்னுடைய ஊழியத்தின் துவக்க நாட்களில் வழக்கமாக ஊழியர்களிடம் ஏற்படுகிற ஒரு ஆசை எனக்கும் இருந்தது. ஒரு வல்லமையான ஊழியராக மாற வேண்டும். ஒரு விரிவான ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்பது போன்ற கனவுகள் எனக்கும் இருந்தன. அதே வேளையில் அதைச் சார்ந்து ஆக்கப்பூர்வ மான நடவடிக்கைகள் எதையும் எடுக்க எனக்குத் தெரியவில்லை. ஆனால் நாட்கள் செல்லச், செல்ல தேவன் எனக்குள் வித்தியாசமான சிந்தையை உருவாக்குவதை உணர்ந்தேன்.

தேவன் நான் வல்லமையான ஒரு ஊழியர் என்று அறியப்படுவதை விட, உண்மையான ஒரு ஊழியர் என அறியப்படுவதையே விரும்புகிறார் என்றும், பிரபலமான ஒரு ஊழியராக மாறுவதைவிட, தேவனைப் பிரியப்படுத்தும் விதமான ஒரு சாட்சி வாழ்க்கை உடைய ஊழியராக மாறுவதையே அதிகமாக விரும்புகிறார் என்றும் உணர்ந்து கொண்டேன். அதற்குப்பின் அந்தச் சிந்தை சார்ந்த எண்ணங் கள் என்னை வித்தியாசமாக வனைய ஆரம்பித்தன.

அங்கே ஒரு வித்தியாசத்தைக் கண்டு கொண்டேன். தேவனுடைய நீதி நியாயங் களின்படி நடந்து, தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்ற ஒரு சிந்தை, ஒரு பெரிய சமாதானத்தையும், திருப்தியையும், மன நிறைவையும் தருகின்றது. ஆம். நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் திருப்தியடைவார் கள் என்று ஆண்டவராகிய இயேசு சொன்னார். (மத் – 5:6) இது மிக, மிக உண்மை யான ஒன்று.

மனிதன் பெரிய பெரிய இலக்குகளை நிர்ணயித்து, அவைகளை எட்டுவதற் காகக் கடுமையாகச் சிரமப்பட்டு பெரிய வெற்றிகளைக் காண முடியும். ஆயினும் மனதிற்குத் திருப்தியும், நிறைவும், வந்துவிடாது. தேவனுடைய வழியில் நடக்க வேண்டும். தேவனுடைய சத்தியத்தின்படி வாழ வேண்டும். தேவனுடைய நோக்கம் சார்ந்து செயல்பட வேண்டும் என்ற வாஞ்சைகளே நிறைவையும், திருப்தியையும் மனதிற்குள் கொண்டு வரும்.

இந்த அனுபவத்தை வாழ்க்கையில் கண்டு கொள்கின்றவர்கள், எவ்வளவு வளர வேண்டும், உயர வேண்டும் என்பதைவிட தேவனைப் பிரியப்படுத்தி எப்படி வாழவேண்டும், தேவனுடைய சித்தத்திற்கிசைந்து எப்படிச் செயல்பட வேண்டும் என்ற எண்ணங்களிலேயே அதிக மகிழ்ச்சியைக் கண்டடைவார்கள். ஆம். திருப்தி என்பது பணத்தினாலோ, புகழினாலோ, அந்தஸ்தினாலோ, சௌகரிய மான வாழ்க்கையினாலோ அல்ல. தேவன் பிரியப்படும்படி வாழ்வதினாலேயே வருகிறது.

செல்வங்களின் பெருக்கம் அல்ல. இறைவனோடுள்ள நெருக்கமே உனக்கு உண்மையான மகிழ்ச்சியைத் தரும்.

மீண்டும் பாவ வாசனை

எரேமியா – 4:1–7

மாம்சத்தின்படி நடவாமல்
ரோமர் – 8:4

ரோமர் – 8:1–15

ஒருவர் பல நாட்களாகக் குளிக்கவில்லை. அழுக்கேறிய உடலுடன் மோசமான துர்நாற்றம் வீசும் விதமாக உள்ளார். இவர் இந்த நிலைமையில் மதிப்பிற்குரிய மனிதர்களின் அருகில் வந்தால், அவரை யாரும் விரும்பமாட்டார்கள். ஒரு வேளை நல்ல கோட் சூட் அணிந்து, டை கட்டி, ஷூ போட்டுக் கொண்டு வந்தாலும் தோற்றம்தான் மாறும். நாற்றம் போகாது. ஒரு வேளை அந்த துர்நாற்றத்தை மறைக்க வாசனைத் தைலங்களை உடலில் தெளிக்கலாம். ஆனால் அழுக்கான உடலில் அந்த நல்ல வாசனைத் தைலம் மிக மோசமான இன்னொருவிதமான துர்வாசனையை ஏற்படுத்தும். இப்பொழுதும் இவர் தங்களின் அருகில் வருவதை சுத்தம் விரும்பும் யாரும் விரும்பமாட்டார்கள்.

மனிதன் பலவிதமான பக்திச் செயல்கள் என்னும் அழகான ஆடைகளை அணிந்து, தனக்கு நல்லதோர் பக்தி தோற்றத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அவற்றால் பாவ வாசனை அகலாது. அதனால் பக்தி மிகுந்த பலரிடம் கூட நல்ல பண்புகளோ, நல்ல செயல்களோ, நல்ல நடத்தைகளோ இல்லை. ஆராதனை, பிரார்த்தனை, வேத வாசிப்பு, காணிக்கை, ஊழியம் எனப் பல பக்தியான செயல்களால் பக்திமான் என்ற தோற்றம் ஏற்படுமே தவிர பரிசுத்தவான் என்ற நிலை ஏற்பட்டுவிடாது. அவற்றால் பாவசாயலான சுபாவங்கள் மாறாது.

சிலர் தங்களிடமுள்ள பாவ நிலைமை நீங்குவதற்கு ஏதுவாக வேதம் என்ன சொல்கிறதோ அவற்றைச் செய்வதில்லை. அதே வேளையில் கிறிஸ்தவம் போதிக்கும் சில நல்ல குணங்களைத் தங்களின் சொந்த பக்தி முயற்சிகளால் ஏற்படுத்திக் கொள்வார்கள். இப்போது இவர்களிடம் சில நல்ல பண்புகளைப் பார்க்க முடியும். ஆனாலும் பல பகுதிகளில் பழைய சுபாவங்களும், ஜென்ம சுபாவங்களும் வந்து கொண்டுதானிருக்கும். பழைய பாவ சுபாவங்களும், புதிய நல்ல சுபாவங்களும் சேர்ந்து கலப்படமாக வெளிப்படும் போது, அது மாய்மாலம் அல்லது சுயநீதி என்ற இன்னொரு விதமான மோசமான மாற்றமாக மாறும்.

முதலாவது அடிப்படை மனமாற்றம் ஏற்பட வேண்டும். உண்மையான மனந்திரும்புதலுக்கு வர வேண்டும். வேத வார்த்தைகளின் அடிப்படையில் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு மறுபடியும் பிறந்த ஆவிக்குரிய நிச்சயமான அனுபவத்தைப் பெற வேண்டும். அப்போது தேவ ஐக்கியத்தால் பாவம் அகலும், பரிசுத்தம் தோன்றும், பழைய மனிதன் அகற்றப்பட்டு ஆவியினால் பிறந்த புது மனிதன் வெளிப்படுவான். அப்போதுதான் ஆவிக்குரிய நற்குணங்கள் தோன்றி, விரும்பத்தக்க ஆவிக்குரிய நிலையை அடைய முடியும்.

தன்னுடைய முட்டாள்தனங்களை நன்கு கண்டு கொண்டவனே பிறரால் ஞானியாகப் பார்க்கப்படும் தகுதி பெறுகிறான்.

தேவ ஐக்கியம்

ஜீவ நீரோடை

உபாகமம் –4:1–14

தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும்... எபேசியர் – 1:17

எபேசியர் – 1:13–23

தேவ ஐக்கியம் என்ற வார்த்தை என்னுடைய புத்தகங்களிலாயினும் சரி, பிரசங்கங்களிலாயினும் சரி, அதிகமாக உபயோகிக்கப்படும் வார்த்தை. ஏனென்றால் ஆவிக்குரிய வாழ்க்கையின் உயிர் நாடி அதுதான். ஆயிரம்தான் ஆன்மீகத் தன்மையுடைய செயல்களில் நாம் ஈடுபட்டிருந்தாலும், தேவ ஐக்கியத்தை நமக்குள் உணர்கிற அனுபவம் இல்லையேல் எந்தப் பிரயோஜனமுமில்லை.

கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்ற விசுவாசத்திற்கு அடுத்தபடியாக, கர்த்தர் நம்மோடிருப்பதை நமக்குள் உறுதிப்படுத்துகின்ற அனுபவமும் தேவை. சிலர் கர்த்தர் தங்களோடிருப்பதை ஒரு போதும் அனுபவப்பூர்வமாக உணர்வதில்லை. “கர்த்தர் நம்மோடிருக்கின்றார்” என்ற விசுவாசத்தைத் தாண்டி அவர்கள் செல்வதேயில்லை.

சிலர் ஞாயிறு ஆராதனை வேளையிலும், விசேஷ கூடுகைகளிலும் மட்டுமே தேவ ஐக்கியத்தையும், தேவப்பிரசன்னத்தையும் உணருவார்கள். அதையே கர்த்தர் தங்களோடிருப்பதற்கான அடையாளமாக எடுத்துக் கொள்வார்கள். ஆனால் ஆராதனை வேளையிலும், உற்சாகமான பாடல் வேளையிலும் நாம் உணருகின்ற குதூகல உணர்வும், பரவச மனநிலையும் தேவன் நம்மோடிருப்பதற்கான உறுதியான அடையாளங்கள் அல்ல.

பலர் கூடி வருகின்ற அல்லது பலரோடு சேர்ந்து ஆராதிக்கின்ற ஒரு ஆன்மீக ஆரவார சூழ்நிலையில் அல்ல. நாம் தனித்திருக்கும் போதும், அமைதியான சூழ்நிலைகளிலும் தேவப்பிரசன்னத்தை உணர்வதே முக்கியமானது. அதுவே உண்மையானது.

கூட்டத்தோடு கூட்டமாக தேவ ஐக்கியத்தை உணர்வது அல்ல. நாம் தனிப்பட்ட முறையில் உணர வேண்டும். ஆரவார நேரங்களில் மட்டும் அல்ல. அமைதியான தனிமை நேரங்களில் ஆண்டவரின் அன்பையும், உறவையும், தொடுதலையும், தூண்டுதலையும் நமக்குள் உணர்ந்து நிச்சயப்பட வேண்டும். அதுவே அசைக்க முடியாத அனுபவம்.

எப்படி அதனை உணர்வது? நாம் தேவனை உண்மையாக நமக்குள் தேடுவோமானால், அவரை நாம் கண்டடைவோம். உண்மையான மனந்திரும்புதலைக் கண்டு, கர்த்தருக்காக உண்மையான சாட்சியாக வாழ வேண்டும் என்ற வாஞ்சையுடையோர், தங்களுக்குள் கர்த்தரை அறிவார்கள், உணர்வார்கள். ஏனென்றால் தேவன் உண்மையாய்த் தேடுகின்றவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தாவிடில், அவர்களால் சரியான ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ முடியாது.

தேவனின் தொடுதலை உணர நீ காட்டும் ஆர்வம்தான்,
உன்னைத் தொட முடியாமல் சாத்தானை ஓட வைக்கும்.

அதிக சௌகரியம்

பிரசங்கி – 2:1-17

நான் பெரியவனும் திரவியசம்பன்னனுமானேன்.... பிரசங்கி – 2:9

லூக்கா – 16:19-31

சௌகரியமாயிருப்பது என்பது வேறு. ஆடம்பரமாக இருப்பது என்பது வேறு. நண்பர் ஒருவர் நவீன ஹோட்டல் ஒன்றில் தன்னுடைய மகனுடைய திருமண வரவேற்பு நிகழ்ச்சியை நடத்தினார். அங்கே நடைபெற்ற விருந்தில் ஒரு சாப்பாட்டிற்காகச் செலவு செய்த தொகை எவ்வளவு என்பதைக் கேட்டபோது தலை சுற்றியது. திருமண விருந்து நல்லதோர் சூழ்நிலையில் நல்ல சுவை மிக்க உணவு வகைகளோடு இருப்பது தவறல்ல. அதே வேளையில் ஒரு சுவை மிக்க உணவுக்கு அவ்வளவு செலவு செய்து, பணத்தை வீணடிக்கத் தேவையில்லை. அதைவிட குறைந்த செலவில் அதைவிட நல்ல சுவை உணவைப் பெற முடியும். சமுதாயத்தின் மேல் தட்டில் உள்ள மிக முக்கியமானவர்கள் விரும்புகின்ற ஹோட்டலில், நாங்களும் திருமணம் நடத்தினோம், என்ற ஒரு பெருமைக்காகவே அவ்வளவு செலவு. இது தான் ஆடம்பரம்.

சாலொமோன் இராஜா ஒரு ஆடம்பரப் பிரியன். எதிலும் ஆடம்பரம் அதிக சௌகரியம் என்ற பெருமைமிக்க ஒரு மனநிலையோடே அவன் வாழ்ந்தான். ஆடம்பரவாதியாகிய அவன் ஒரு புறம் அநேகர் பயன்படும் விதமாக நீதிமொழிகளை எழுதினான். மறுபுறம் யாரும் பின்பற்றக் கூடாத ஒரு தவறான மாதிரியாக சுகபோக வாழ்க்கையை வாழ்ந்தான். ஆடம்பரத்தில் திளைத்துக் கொண்டிருந்த அவனுக்குப் பிறந்த மகனும், ஒரு பெருமைக்காரனாகவே இருந்தான்.

சாலொமோன் இராஜாவின் ஆடம்பரச் செலவுகளுக்காக ஜனங்கள் மீது அதிக வரியை விதித்தான். அந்தச் சுமைகளைத் தங்களால் தாங்க இயலவில்லை என்று நாட்டு மக்கள் சொன்னபோது பெருமைக்கார ரெகொபெயாம் அவர்களை அலட்சியம் செய்தான். ஆடம்பரச் சூழலில் வாழ்ந்த அவனுக்குத் தாழ்மையாய்ப் பதில் சொல்ல இயலவில்லை. தன்னைத் தாழ்த்தி பிறரின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவும் தெரியவில்லை. அதனுடைய விளைவாக ஏற்பட்ட கலகத்தால், தாவீது கட்டி எழுப்பிய சாம்ராஜ்யம் இரண்டாக உடைந்தது. தகப்பனின் ஆடம்பரம் தேசத்தை பலவீனப்படுத்தியது. மகனுடைய ஆடம்பரம் தேசத்தை உடைந்து விழ வைத்தது.

ஆடம்பரமான வாழ்க்கை ஆடம்பரமான மனநிலையுள்ள ஒரு சந்ததியை உருவாக்கும். பணத்தின் மிகுதியை ஆடம்பரத்தால் கரைக்கக் கூடாது. பின்னர் அடிப்படைத் தேவைக்குக் கூடப் பணமின்றிக் கஷ்டப்பட நேரிடும். சுயமகிழ்ச்சிக்காகவும், சுய பெருமைக்காகவும் பணத்தை வாரி இறைக்காமல், பிறருடைய சந்தோஷத்திற்காகவும், தேவன் கனப்படவும் வாரியிறைக்க வேண்டும். அதனால் ஆசீர்வாதம் வரும். அதனால் பின் சந்ததிக்குச் சாபத்தை வைத்துப் போகாமல், நன்மையை சுதந்திரமாக வைத்துப் போக முடியும்.

விரும்பியதையெல்லாம் எளிதாகப் பெறும் மனிதனிடம் விரும்பத்தகாத குணங்களெல்லாம் விரைந்து வருகிறது.

ஜீவ நீரோடை

ஆறுதலின் ஒரே வழி

யோபு - 9:10-25

நீர் என்ன செய்கிறீர் என்று அவரைக் கேட்பவன் யார் ? - யோபு - 9:12

எபி - 11:32-40

தான் எவ்வளவோ ஜெபித்தும், உபவாசித்தும், விசுவாசித்தும், விசுவாச அறிக்கை செய்தும் நோயுற்ற தன் கணவனைக் காப்பாற்றாமல் தேவன் சாகவிட்டு விட்டாரே என்ற வருத்தமும் கோபமும் ஒரு சகோதரியை தேவனை விட்டு விலகிப் போகத் தூண்டின. தேவனுக்குத் தன் அதிருப்தியைக் காட்டும் விதமாக வேதம் வாசிப்பதையும், ஜெபிப்பதையும், சபை கூடுதலில் கலந்து கொள்வதையும் அவர் நிறுத்தினார். ஆனால் தனக்கு ஏற்பட்ட துக்கத்தை ஆற்ற முடியாத நிலையில், சரீரத்திலும், மனதிலும் பாதிக்கப்பட்டார்.

தேவனைக்குறித்த அதிருப்தியையும், கசப்பையும், சோர்வையும், கோபத்தையும் நமக்குள் விதைத்து, கர்த்தரை விட்டு நம்மைத் தூரப்படுத்துவதற்கு சாத்தான் அதிகப் பிரயத்தனங்கள் செய்கிறான். நமக்கு நேரிடும் ஏமாற்றங்களையும், தோல்விகளையும், சோதனைகளையும், துக்க நிகழ்வுகளையும், தேவனைக் குறித்து அதிருப்தியடைவதற்கு ஏற்ற சூழ்நிலைகளாக அவன் பயன்படுத்திக் கொள்கிறான். கர்த்தர் அன்பானவரென்றால் ஏன் இதை அனுமதித்தார்! கர்த்தர் நல்லவர் என்றால் இந்தத் துன்பத்தை ஏன் வரவிட்டார்? அவர் பரம தந்தையென்றால், ஏன் அவர் வாஞ்சையோடு கேட்ட நன்மையைத் தரவில்லை. இப்படிப்பட்ட கேள்விகளுக்குப் பின்னால் ரூபமில்லாத பிசாசின் தூண்டுதல்கள் நிச்சயமாக உள்ளன.

ஏனென்றால் பிசாசானவன் மனுஷகொலை பாதகன். நம் அழிவிலேயே அவன் கரிசனையாயிருக்கிறான். பிசாசானவன் ஏன் இவ்விதமாய்த் தூண்டி, தேவனை விட்டு விலக வழி ஏற்படுத்துகின்றான்? ஆம். நமக்கு தேவன் மட்டுமே உண்மையான ஆறுதலுக்கும், சமாதானத்திற்கும், ஆதரவிற்கும் ஒரே வழியாயிருக்கிறார். அவரை விட்டு விலகுவது என்பது நமக்கு ஆறுதலும், தைரியமும், ஆதரவும் கிடைப்பதற்காக இருந்த ஒரே ஒரே வாய்ப்பையும் அசட்டை செய்து இழப்பதாகும். இந்த நிலைக்கு நாம் வந்து சேர்ந்துவிட்டால், அதற்குப் பின்னர் நம்மை அழித்து நாசமாக்குவதற்கு, சாத்தானுக்குத் திறந்த வாசல் கிடைத்து விடுகிறது அல்லவா.

தேவன் நமக்குத் தந்தை மட்டுமல்ல. அவர் இந்த பூமியை உருவாக்கிய தேவன், இந்த பூமியின் சுற்றோட்டத்தில் சில விதிமுறைகளை அவர் நியமித்துள்ளார். அங்கே அவரின் நியாயங்களையும், செயல்பாடுகளையும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. விசுவாசம் ஒன்றே அவரைப் புரிந்து கொள்ளும் வழி. துன்பமும், துயரமும், கண்ணீரும் இந்த பூமியில் நிகழ வாய்ப்புள்ள இயற்கையான விஷயங்கள். ஆனால் எந்த நிலையிலும் அவர் நம்மைத் தேற்றித் திடப்படுத்த வல்லவராயிருக்கின்றார். அந்தக் தேற்றப்படும் வாய்ப்பை இழத்தல், துன்பத்தை மேலும் துன்பமயமாக்கும் செயலாகும்.

நோயாளி மருந்தைப் புறக்கணித்தால் பாதிப்பு அவனுக்கே.
துன்பப்படுகிறவன் தேவனைப் புறக்கணித்தால் வேதனை அவனுக்கே.

ஜீவ நீரோடை

சத்திய வார்த்தை

சங்கீதம் - 19:1-14

அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன் – சங்கீதம்–19:11

யோவான் - 7:1-15

வேதத்தின் வார்த்தைகள் தேவனிடத்திலிருந்து புறப்படுகிறது. அது மனிதனுடைய வாயினால் பேசப்பட்டு இன்னொரு மனித இருதயத்திற்குள் செல்கிறது. அந்த வார்த்தைகள் தேவனுடைய ஆவியினால் பேசப்படும் சத்தியங்கள். அவை ஒரு மனிதனுக்குள் செல்லும் போது வேதம் தொடர்பான ஒரு உண்மையை அறிவது மட்டும் அல்ல. அந்த வார்த்தை அவனுக்குள் ஒரு உண்மையை அவனுக்கு உணர்த்துகின்றது. அந்த உண்மை அவனுடைய இருதயம், நினைவு, எண்ணம், குணம், சுபாவம், சிந்தனை தொடர்பானது. இருட்டான பகுதியில் டார்ச்லைட் அடித்துக் காண்பிக்கும் போது மறைவாயிருந்த உண்மைகள் கண்ணுக்குத் தெரியவரும். அது போலவே வேத வார்த்தை என்னும் சத்திய ஒளி ஒரு மனிதனுக்குள் செல்லும் போது, அந்த மனிதனுக்குத் தன்னைக் குறித்த ஒரு உண்மை வெளியரங்கமாகிறது. இதுதான் சத்திய வார்த்தையின் கிரியை.

மோசேயைக் குறித்தும், ஆபிரகாமைக் குறித்தும், இயேசுவைக் குறித்தும் அவர்கள் செய்த, பேசின பல விஷயங்களைக் குறித்தும் பல காரியங்களைப் பிரசங்கிக்கலாம். அவை யாவும் சத்தியங்கள்தான். ஆயினும் அவை பிரசங்கிக்கப்படும் போது அதனைக் கேட்கின்றவர்களுக்குத் தங்களைக் குறித்த ஒரு உண்மையை அறியவும், உணரவும் வாய்ப்புக் கிட்ட வேண்டும். அதுதான் தேவன் பேசினார் என்பதற்கும், சத்தியம் பிரசங்கிக்கப்பட்டது என்பதற்கும் அடையாளம்.

வேதம் தொடர்பான பல உண்மைகளை அறிவது நல்லது. அவை அவசியமானவையே. ஆனால் நம்மைக் குறித்த உண்மைகளை, நாம் அறிவதற்கு அவை நமக்கு உதவி செய்யாவிட்டால், அதனால் என்ன பிரயோஜனம். நாம் அறியாத, உணராத, பார்க்காத, சிந்திக்காத, கவனம் செலுத்தாத, பார்க்க விரும்பாத பல விஷயங்கள் நமக்குள் இருக்கின்றன. சிலவற்றை நாம் அறிந்திருந்தாலும் அதைக்குறித்த உணர்வோ, உறுத்துதலோ, விழிப்புணர்வோ, நமக்கில்லை. தேவ ஆவியின் ஏவுதல் வாயிலாக சத்திய வார்த்தைகள் பிரசங்கிக்கப்பட்டால், அந்த வார்த்தைகள் இவற்றை நாம் அறிய நம்மைக் கட்டாயப்படுத்தும். பார்க்காமல் கண்களை மூடிக் கொண்டிருந்தவற்றைப் பார்த்தாகும்படி கண்கள் திறக்கப்படும். உணராமல் இருந்தவைகளை உணர்ந்தே ஆக வேண்டிய கட்டாயம் உருவாகும். தேவனால் வார்த்தைகள் கொடுக்கப்பட்டுப் பிரசங்கிக்கப்பட்டால் இது போன்ற ஆவிக்குரிய கிரியை நடைபெறும்.

இதமான உணர்வுகள் இதயத்தின் முரண்பாடுகளைக் காணவிடாமல் கண்களைக் குருடாக்க முடியும்.

ஜீவ நீரோடை

ஜெபம் வீணாகாது

சங்கீதம் - 71:1-20

சோர்ந்துபோகாமல் ஜெபம் பண்ணவேண்டும்... லூக்கா-18:1

லூக்கா - 18:1-8

ஜெபத்தின் மூலம் நாம் தேவனிடமிருந்து பல நன்மைகளைப் பெற முடியும். ஜெபத்தின் மூலம் நம்மால் முடியாத பல காரியங்களை தேவ பலத்தால் சாதிக்க முடியும். ஆயினும் சில நேரங்களில் நாம் கேட்டதையெல்லாம் ஜெபத்தின் மூலம் பெறுவதில்லை. எவ்வளவோ ஜெபித்தும் நாம் மாற வேண்டும் என்று எதிர்பார்க்கும் சில வெறுப்புக்குரிய சூழ்நிலைகள் மாறுவதேயில்லை. நாம் விரும்பிக்கேட்ட பல விஷயங்கள் நமக்குக் கிடைக்காமலே போய்விடுவதுண்டு.

ஆனாலும் ஜெபம் நம்முடைய வாழ்க்கையில் மிக, மிக அவசியமான ஒன்றாகும். நாம் கேட்டதையெல்லாம் தேவன் தராவிட்டால் கூட, சில எதிரான சூழ்நிலைகளை அவர் மாற்றாவிட்டால் கூட, ஜெபத்தின் மூலம் தேவன் நம்முடைய இருதயத்தில் செய்கின்ற கிரியை அற்புதமானது.

வலுவான ஜெப வாழ்க்கை உடைய மனிதன், தன் ஜெபங்களின் மூலம், தன்னையும், தன்னுடைய சூழ்நிலைகளையும் கர்த்தர் காண்கின்றார், கவனிக்கின்றார் என்ற நம்பிக்கையின் உணர்வை தனக்குள் பெறுகின்றான். தன்னுடைய நிலைகளையும், மன உணர்வுகளையும் தேவன் அறிந்திருக்கிறார் என்ற நம்பிக்கையின் உணர்வு அவனுக்குள் மிகுந்த மனஅமைதியையும், ஆறுதலையும், தைரியத்தையும் கொண்டு வருகின்றது. ஏனென்றால் ஜெபத்தின் மூலம் தேவனே ஆவியினால் அந்த நம்பிக்கையை அவனுக்குள் வைக்கின்றார்.

கர்த்தர் தன்னுடைய நிலையை கவனித்து விட்டார் என்ற நிச்சய உணர்வைப் பெற்ற மனிதன், தான் எதிர்பார்த்தது எல்லாம் நடவாவிட்டால் கூட தெய்வீக அமைதியுடன் வாழப் பக்குவப்படுகின்றான். மேலும் நாம் ஜெபிக்கும் போது தேவனோடு ஐக்கியம் கொள்கின்றோம் என்பது உண்மையாகும். நம்முடைய வேண்டுதல்கள் பல விதங்களில் இருந்தாலும், ஜெபிக்கின்ற ஒரு தொடர் அனுபவத்தால் தேவனுடைய ஐக்கியம் நமக்குள் உணரப்பட்டு, இதயரீதியாக பல ஆவிக்குரிய பிரதிவிளைவுகளை ஏற்படுத்துகின்றது. ஜெபங்களின் மூலம் நாம் கேட்டவை கிடைக்காமல் போகும்போது கூட, இவ்வித அனுபவங்களால் உள்ளான நிலையில் நாம் மிகுதியாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றோம் என்பது உண்மை.

தாவீது தன்னுடைய சோதனையான காலகட்டங்களில், தான் எதிர்ப்பார்த்த விதமாக உடனே விடுதலைகளை அடைய முடியாத வேளையிலும், தன்னுடைய மன உணர்வுகளைக் கொட்டி, தொடர்ந்து தேவனை நோக்கி ஜெபித்தான். எனவே அவன் தேவஆறுதலைப் பெற்றதோடு, தெய்வீக ஐக்கியத்திலும் அவன் வளர வாய்ப்புக் கிட்டியது. எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படாமல், ஜெபிக்க ஆலோசனை சொன்னதோடு, அதனால் புத்திக்கெட்டாத தேவசமாதானம் கிடைக்கும் என்றும் கூறினான். (பிலி-4:6)

ஜெபம் என்பது தேவன் உன் மேல் வைத்த சுமை அல்ல. உன் சுமையை இறக்கி வைக்கக் கொடுத்த சுமைதாங்கி.

வல்லமை தேவனுடையதே

நியாயாதிபதி - 6:11-23

நீ மீதியானியரை முறிய அடிப்பாய்
நியாயாதிபதி – 6:16

1 யோவான் - 2:1-15

மீதியானியருக்கு எதிராகச் சென்று போரிடும்படி தேவனால் கிதியோன் அழைக்கப்பட்டான். ஆனால் அது ஒரு எளிதான விஷயம் அல்ல. அங்கே கிதியோன் தன்னுடைய பலவீனமான சில பின்னணிகளைக் கவனிக்கத் துவங்கினான். என் குடும்பம் மிகவும் எளியது, எல்லோரிலும் நான் சிறியவன் என்று அவன் தன்னுடைய பலவீனங்களைச் சொல்ல ஆரம்பித்தான்.

ஏனென்றால் தனக்கு முன்பாக வைக்கப்பட்ட மிகப்பெரிய சவாலைச் சந்திக்க தான் எந்தளவிற்கு பலமுடையவன் என்று யோசித்தான். ஆனால் தேவனால் ஒரு வேலைக்கு அழைக் கப்படும் போது அந்த வேலையைச் செய்து முடிக்க, தேவனே போதிய பலம் தருவார் என்பதை அவன் புரிந்துகொள்ள வேண்டிய தேவை இருந்தது.

அன்று கிதியோன் மீதியானியரை எதிர்க்க அழைக்கப்பட்டது போல, நாமும் பிசாசை எதிர்க்கவும், பாவத்தை எதிர்க்கவும், பாவசாயல் நிறைந்த உலகத்தை எதிர்க்கவும் அழைக்கப்படுகிறோம். ஆனால் அநேகர் தங்களுக்கு முன்னால் உள்ள பலம் வாய்ந்த இந்த எதிரிகளைத்தான் கவனிக்கின்றார்கள். இந்த வலிமைமிக்க எதிரிகளை எதிர்க்க இயலாத தங்களின் பலவீனங்களையே கவனிக்கின்றார்கள்.

பிசாசை ஜெயிக்க என்னால் இயலுமா? பாவங்களை எதிர்க்க என்னால் கூடுமா? உலகத்திற்கு இசைந்து போகாதிருப்பது எளிய விஷயமா? இந்த உலகத்தில் பாவம் செய்யாமல் வாழ முடியுமா? பரிசுத்தமாக வாழ்வதற்கு யாரால் கூடும்? வேதம் கூறுவது போல வாழ்வது சாத்தியதையா? என்பது போன்ற கேள்விகளையே பலர் கேட்கின்றனர். ஏனென்றால் இவற்றை சாத்தியமாக்க தேவையான வலிமை தங்களிடம் இல்லாததை அவர்கள் பார்க்கின்றனர்.

ஆனால் நாம் நம்மால் என்ன சாதிக்க முடியும் என்பதையல்ல. தேவன் நம்மை உபயோகித்து என்ன சாதிக்க முடியும் என்பதையே பார்க்க வேண்டும். நாம் சுய பலத்தால் எதையும் சாதிக்க இயலாத பலவீனர்கள் என்பதை தேவன் அறிவார்.

ஆனால் தேவன் விரும்பியபடி வாழ நாம் முன்வரும் போது, அவரே அதற்குத் தேவையான பலத்தை அருளுவார். நாம் அவரைச் சார்ந்து விசுவாசத்தால் சாதிக்க முன்வரும் போது பாவம், பிசாசு, உலகம் யாவற்றையும் மேலும் ஜெயம் பெற முடியும்.

வாழ்க்கை என்னும் வாகனத்தை இயேசு ஓட்டினால்
பாதைகளைக் குறித்த பதட்டம் தேவையில்லை.

ஆகஸ்ட் 1

ஜீவ நீரோடை

இரட்சிப்பே சுமையா ?

ஏசாயா – 5:1–7

பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு – எபிரேயர் – 3:13

எபிரெயர் – 3:1–19

ஒரு முறை இரட்சிக்கப்பட்டால் அதனைப் பின்னர் இழக்க இயலாது என்று போதிக்கின்ற கிறிஸ்தவ உபதேசப் பிரிவுகள் உண்டு. இரட்சிப்பை நாம் இழக்க முடியுமோ, முடியாதோ அது வேறு விஷயம். ஆனால் இரட்சிப்பினால் வருகின்ற தேவ ஐக்கியம் சந்தோஷம், சமாதானம், நம்பிக்கை, வல்லமை, மகிமை இவற்றை நாம் இழக்க இயலும். வார்த்தைகளை விட்டும். தேவ வழிகளை விட்டும், தேவ தரிசனத்தை விட்டும் விலகும்போது மேற்கண்டவைகள் நம்மோடு இராது.

உடலில் இருந்த உயிர் இன்னும் இருக்கிறது. ஆனால் உடலெல்லாம் நோயினால் பாதிக்கப்பட்டு எந்த ஆரோக்கியமும் இல்லையென்றால் அந்த உயிர் இருப்பதே பெரிய சுமையாகி விடுகிறது. உயிர் இருப்பதால் உடலில் தோன்றிய நோய்களின் கோரங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

சிலர் இரட்சிக்கப்பட்ட நிச்சயத்தை ஒரு போதும் இழக்கவில்லை. ஆனால் அந்த இரட்சிப்பு அவர்களுக்கு சுமையாக இருக்கின்றதேயன்றி சுகமாக இல்லை. இரட்சிப்பின் சந்தோஷமோ, தேவ உறவினால் கிட்ட வேண்டிய சமாதானமோ, இறை ஐக்கியம் தரும் நம்பிக்கையோ அவர்களிடம் இல்லை. ஆனால் ஒவ்வொரு தவறான செயலும், சுபாவமும், நடத்தையும், இறை ஐக்கியக் குறைவும் அவர்களுடைய குற்ற உணர்வுகளைத் தூண்டிவிடுகிறது.

மனசாட்சி மரத்துப் போய் வாழ்ந்த பழைய பாவ வாழ்க்கையின் காலங்களை விட ஆவிக்குரிய வாழ்க்கை வாழும் இந்தக் காலம்தான் அவர்களுக்கு அதிகமான அமைதிக்குறைவு. ஒருபுறம் வாழ்க்கை பிரச்சினைகளும் மறுபுறம் பயன் தராத ஆவிக்குரிய வாழ்க்கையும் அவர்களை விரக்தியின் எல்லைக்குக் கொண்டு செல்லுகின்றது.

ஆம். இரட்சிக்கப்படுதல் என்பது மிக மிக பாக்கியமான விஷயம். ஆனால் அதன் பிறகுதான் அதிக ஜாக்கிரதையும், அதிக விழிப்புணர்வும் தேவை. ஏனென்றால் தேவனை அறியாமல் வாழ்வதைவிட, தேவனை அறிந்த பின்பு அவருடைய வழிகளில் நடக்க கவனமின்றி, அவரை விசனப்படுத்தி வாழ்கின்ற வாழ்வில் அதிகமான சோகங்களும் சோர்வுகளும் உண்டு. தேவனை அறியாதவர்களை விட தேவனை அறியும் வாய்ப்புப் பெற்ற இஸ்ரவேலர்கள்தான், உலக வரலாற்றில் மிகுதியாகத் துன்புற்ற சந்ததி என்பது உண்மை. ஏனென்றால் தேவனை அறிந்த அவர்கள் அந்த அறிவைச் சார்ந்து வாழாமல் வழிவிலகி, தேவனை மிகுதியாய் விசனப்படுத்தினார்கள்.

அமைதியான வேளையில் ஆழ்ந்து சிந்தி, குழப்பமான நேரங்களில் நிதானமாய்ச் சிந்திக்கும் தெளிவு அதனால் வரும்.

ஜீவ நீரோடை

அழகற்ற பின்னணி

ஏசாயா - 1:10-20

உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்.... ஏசாயா - 1:16

எபேசியர் - 5:1-21

நண்பர் ஒருவர் ஒரு பெரிய வீட்டைக் கட்டத் துவங்கி அதன் முழு வேலையும் முடியும் முன்பே, அதில் குடியேறினார். அவர் ஒரு கலைப்பொருள் பிரியராக இருந்தபடியால், அந்த வீட்டில் பல நல்ல கலையழகு மிக்க பொருட்களை வைத்தார். ஆயினும் சரியாக தரை, சுவர் போன்றவை பூசி முடிக்காத அரைகுறை நிலையில், அந்த பொருட்கள் அந்த வீட்டிற்கு எந்த விசேஷ அழகையும் கொடுக்க வில்லை.

அழகான பொருட்களை அதற்கேற்ற அழகான, ஒழுங்கான ஒரு சூழ் நிலையில் வைக்கும்போதுதான், அங்கே ஒரு அழகான, விரும்பத்தக்க தோற்றம் ஏற்படுகிறது. இறை வாழ்க்கை என்பதும் அப்படியே. ஜெபம், வேதவாசிப்பு, ஆராதனை, துதி, ஸ்தோத்திரங்கள், காணிக்கை, ஊழியம், சமுதாய சேவை போன்ற யாவுமே, அழகான ஒரு பரிசுத்தமான வாழ்க்கைப் பின்னணியோடு இணையும் போதுதான், அங்கே தேவன் பிரியப்படத்தக்க ஒரு நிலைமை ஏற்படுகிறது.

நன்றாகப் பாடுகின்ற, ஜெபிக்கின்ற, பிரசங்கிக்கின்ற, காணிக்கை கொடுக் கின்ற, நற்சேவைகள் செய்கின்ற பலருடைய வாழ்க்கையைப் பார்க்கும் போது, அது முரண்பாடானதாக இருக்கிறது. அவர்களின் நல்ல பல ஆவிக்குரிய செயல் களின் பின்னால், நல்ல ஒரு பரிசுத்த வாழ்க்கை இல்லை. அவர்களின் நல்ல பல ஆவிக்குரிய அழகான செயல்களின் பின்னால் தேவனுக்கேற்ற ஒரு உயர்தர வாழ்க்கை இல்லாததால், அவை யாவும் மாய்மாலமாகவே தோன்றுகிறது.

அன்று தீர்க்கதரிசியாகிய ஏசாயாவின் காலத்தில் அன்றைய யூதர்கள் பலியிடுதல், ஜெபித்தல், காணிக்கை அளித்தல், பண்டிகை கொண்டாடுதல், ஓய்வு நாள் ஆசரித்தல் போன்ற அழகான ஆன்மீக வழிபாட்டுச் செயல்களைக் கருத்தாய் செய்தார்கள்.

ஆனால் தேவனோ அவைகள் யாவற்றையும் தாம் அருவருப்பதாகவும், வெறுப்பதாகவும் கூறினார். ஏனென்றால் அந்த நல்ல ஆன்மீகச் செயல்களுக் குப் பின்னால், அவர்களிடம் கர்த்தர் விரும்புகின்ற விதமான நற்குணங்களும், நற்சுபாவங்களும் இருக்கவில்லல. எனவே தேவன் முதலாவது, “உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்” என்றார். (ஏசாயா-1:16) ஆம். முதலாவது பரிசுத்த அழகு வாய்ந்த ஒரு வாழ்க்கை நிலைக்கே நாம் அதிக முக்கியத்துவம் தர வேண்டும்.

தேவனுக்காக எவ்வளவு செய்கிறாய் என்பதல்ல, அவர் எதிர்பார்ப்பதை செய்கிறாயா என்பதே முக்கியம்

வல்லமை எப்படி வரும் ?

ஆதியாகமம் - 22:1-12

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள – எபேசியர் – 3:19

எபேசியர் - 3:1-21

மதுபானப் பழக்கமுடைய ஒரு வாலிபன் ஒரு பெண்ணை மனதார விரும்பினான். அவளை திருமணம் செய்ய ஆசை கொண்டான். அவளோ நீ மதுபானப் பழக்கத்தை விட்டுவிடாவிட்டால், நான் உன்னை ஏற்கமாட்டேன் என்றாள். அவனோ தாய் தந்தை, நல்லோர்கள், நண்பர்கள், போதகர்கள் என பலர் எவ்வளவோ அறிவுரை சொல்லியும் மதுபானப் பழக்கத்தை விட்டு விட இயலாதவனாக தொடர்ந்தவன். ஆனால் அவளை அதிகமாக விரும்பிய அவன் மதுபானப் பழக்கத்திற்கு விடை கொடுத்தான்.

மதுபானப் பழக்கத்தை வேண்டாம் என்று விட்டுவிடத் தேவையான வல்லமை எங்கிருந்து இவனுக்கு வந்தது? மதுபானத்திற்கு “இல்லை” என்று சொல்ல இவனுடைய மனம் எப்படி ஆற்றல் பெற்றது? அந்தப் பெண்ணின் மேல் வைத்த ஸ்நேகம். அவளுடைய ஐக்கியத்தினால் கிட்டின சந்தோஷம். அவளுடைய நட்பு கொடுத்த மனப்பரவசம்.

நாம் தவறானவைகளை விட்டுவிடவும், நலமானதைச் செய்யவும் கர்த்தரால் அழைக்கப்படுகின்றோம். நாம் ஆகாத சிந்தனைகளையும், தீதான ஆசைகளையும் விட்டுவிட தேவனால் அழைக்கப்படுகின்றோம். ஆனால் இவை எளிதானவை அல்ல. இதற்கு நமக்கு ஆற்றலும், தைரியமும் தேவை. அவை எப்படி வரும்? அநேகர் ஏதோ ஒரு வல்லமை வானத்திலிருந்து இறங்கி வந்து தங்களை அவ்விதம் செய்துவிடச் செய்யும் என எண்ணுகின்றனர்.

ஆனால் உண்மை என்ன? தேவன் தேவ ஆவியின் வாயிலாக தம்முடைய அன்பையும், ஐக்கியத்தையும், நமக்குத் தருகின்றார். அந்த ஐக்கியத்தில் நாம் வாழும்போது நமக்குள் தெய்வீக சந்தோஷமும், சமாதானமும், பரிசுத்தமான பரவசமும் கிட்டும். அதனைத் தொடர்ந்து அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையும், அதனை இழந்து விடக் கூடாது என்ற ஆதங்கமும்தான் மனதை தேவன் சொன்னபடி செய்திட ஆயத்தப்படுத்துகின்றன.

தேவ உறவைத் தேடுதலும், தேவ உறவின் சந்தோஷத்தை அனுபவித்தலும் இல்லையானால், மனம் தேவன் சொன்னபடி செயல்படும் ஆற்றலைப் பெறாது. ஆம் தேவ வல்லமையின் பிறப்பிடம் தேவ உறவே. தேவ உறவைத் தேடுதல் ஆவிக்குரிய வாழ்க்கையின் முக்கிய அலுவலாக மாறினால்தான், கர்த்தர் சொன்னபடி செயல்பட நம்மால் கூடும்.

வாயின் வார்த்தைகள் உன்னை யார் என்று சொல்லும்
வாழ்கின்ற விதம்தான் உன்னை யார் என்று நிரூபிக்கும்.

ஜீவ நீரோடை

இதுதான் ஜெபம்

சங்கீதம் – 35:1–28 | **ஆண்டவரே எதுவரைக்கும் இதைப் பார்த்துக் கொண்டிருப்பீர்.... சங்கீதம் – 35:17** | லூக்கா – 22:39–46

தொடர்ந்து வந்த துன்பங்களின் மத்தியிலும், இடைவிடாத எதிர்ப்புகளின் நடுவிலும், தாவீதை நிலைகுலையாமல் நிற்க வைத்தது அவனுடைய வலிமையான ஜெப வாழ்க்கை என்பதில் சந்தேகமில்லை. அவன் தான் சந்திக்க நேரிட்ட ஒவ்வொரு வியாகுலமான சூழ்நிலைகளிலும், தன்னுடைய மன உணர்வுகளையும், போராட்டமான மனநிலையையும் தேவனிடம் அப்படியே பகிர்ந்து கொண்டு, ஆறுதலைத் தேடுகின்ற மனிதனாக விளங்கினான்.

அவன் தேவனை நோக்கி ஜெபங்களில் பொல்லாதவர்களின் செயல்களைக் குறித்த கோபத்தை, எரிச்சலை, மனக் கொந்தளிப்பை அப்படியே வெளிப்படுத்தினான். வியாகுலமாயினும், சோர்வாயினும், சலிப்பாயினும், எதுவாயினும் அவைகளை அவன் மறைக்க விரும்பாமல் தேவனிடம் கூறினான்.

ஆம். ஜெபம் என்பது திட்டமிடப்பட்ட வாக்கியங்களைக் கொண்டு, ஒரு மேடைப்பேச்சைப்போல மனதில்தயாரிக்கப்பட்டுபேசவேண்டிய ஒன்றல்ல. மனதின் உணர்வுகளையும், கொந்தளிப்புகளையும் மனதில் அடக்கிக் கொண்டு, வாயின் வார்த்தைகளை, சிறப்பாக வடிகட்டி, வடிவப்படுத்தி பேச வேண்டிய ஒன்றல்ல. சிலருடைய ஜெபங்கள் மேடைப் பேச்சுபோல சொல்நயம் மிகுந்ததாயிருக்கும். சிலர் அதிக சத்தமிட்டு ஜெபிப்பதை வல்லமையான ஜெபம் என நினைப்பார்கள். சிலர் ஜெபத்தைக் கேட்கிறவர் தேவன் என்பதை மறந்துவிட்டு, பிறர் காதுகளுக்கு கவர்ச்சியாகத் தொனிக்கும்படி சினிமாவில் வசனம் பேசுவது போல பேசுவார்கள். இதயத்தை ஈடுபடுத்தாமலும், உண்மையான உணர்வுகளைத் தாழ்மையாகத் தேவனுக்கு வெளிப்படுத்தாமலும், எவ்வளவு வாய்ஜாலங்கள் செய்தாலும் அவை யாவும் அலப்புதல்களின் பட்டியலிலே சேர்ந்து விடும்.

நம்முடைய மனநிலைகளையும், உணர்வுகளையும், உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் அப்படியே கர்த்தருடைய சமுகத்தில் கொட்டி விடுவதுதான் உண்மையான ஜெபம் ஆகும். ஏனென்றால் தேவன் நம்முடைய இதயங்களைக் காண்கின்றவராயிருக்கின்றார். பல நேரங்களில் நமக்குள் நடப்பதை நாம் தேவ சமுகத்தில் மறைப்பதே பக்தி என நினைக்கின்றோம் இதய உணர்வுகள் ஒரு விதமிருக்க, வாயினால் வடிவமைக்கப்பட்ட வார்த்தைகளால், பக்தித் தோற்றத்தை கொடுப்பதையே பக்குவம் என நினைக்கின்றோம். எனவேதான் இதயநிலைகளில் உள்ள கொந்தளிப்புகளும், அமைதியின்மைகளும் அகலாமலேயே தொடருகின்றன. சரீரத்தில் உணருகின்ற வேதனைகளை மருத்துவரிடம் மறைக்காமல் பேசுவதைப் போல, உள்ளத்தின் உணர்வுகளை அப்படியே தேவனுக்குக் காண்பிப்பதின் மூலம்தான். உண்மையான ஆறுதலையும், விடுதலையையும் நாம் பெற முடியும்.

உண்மையுள்ளவனை உலகம் ஆவலாய் எதிர்பார்க்கிறது
அவன் வந்து விட்டாலோ அவசரமாய் அவமதிக்கிறது.

ஜீவ நீரோடை

பக்தியான வாழ்க்கை

எரேமியா – 6:18–30

உங்கள் சர்வாங்க தகனங்கள் எனக்கு விருப்பமல்ல – எரேமியா – 6:20

ரோமர் – 12:1–11

பக்தியாய் வாழ்வது என்றால் என்ன? தேவனைத் துதித்துக் கொண்டு, பாடிப் புகழ்ந்து கொண்டு, ஆலயம் சென்று ஆராதித்துக் கொண்டு, வேத போதனைகளைக் கேட்டுக் கொண்டு, வழிபாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, ஜெபதபம் செய்து கொண்டே வாழ்வதுதான் பக்தியாய் வாழ்வதா? இவ்விதமான பல ஆன்மீகச் செயல்களோடு தங்களை அதிகமாக இணைத்துக் கொண்டு பக்திப் பழங்களாக வாழ்கின்ற பலர் உண்டு. ஆயினும் அவர்களால் அவர்களைத் தவிர வேறு யாருக்கும் எந்தப் பயனுமில்லை. பக்திச் செயல் அடையாளங்கள் அவர்களிடம் பல இருந்தும், பரிசுத்தமாக வாழ்கின்ற அடையாளங்கள் இல்லை.

தானியேல் இடைவிடாமல் தேவனை ஆராதித்துக் கொண்டிருந்தான் என்ற வேதாகம செய்திக்கு ஒருவர் கொடுத்த விளக்கம் வேடிக்கையானது. அவன் எப்பொழுதும், எதைச் செய்தாலும் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் அல்லேலூயா என்று சொல்லிக்கொண்டிருந்திருப்பான் என்பதே அவர் கொடுத்த விளக்கம். ஆனால் உண்மை அதுவல்ல. அவன் தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் தேவன்மேல் தான் வைத்திருந்த பக்தியையும், மரியாதையையும் வெளிப்படுத்தினான். தன்னுடைய ஒவ்வொரு செயலிலும், நடத்தையிலும், பேச்சிலும் தேவன் விரும்புகின்ற விதமான நற்பண்புகள் பிரதிபலிக்கும்படி அவன் செயல்பட்டான். அவன் வெறும் வழிபாட்டுப் பக்தியாளனாக அல்ல. அவன் வாழ்ந்து காட்டும் பண்பாளனாகச் செயல்பட்டான்.

பக்தி என்பதை வழிபாட்டு அடையாளங்களாலும், மத நம்பிக்கை சார்ந்த தொழுகை அடையாளங்களாலும் அல்ல. அதனை நம்முடைய வாழ்க்கையின் வழியாகக் காண்பிக்க வேண்டும். உண்மை, உத்தமம், நேர்மை, நியாயம், பொறுமை, தாழ்மை, அன்பு, தயை போன்ற தெய்வீகப் பண்புகளை நாம் செயல்பட நேரிடும் ஒவ்வொரு செயலிலும் பிரதிபலித்துக் காட்ட வேண்டும்.

அதுதான் பக்தி வாழ்க்கை. அதுதான் தேவன்மேல் கொண்ட பக்தியை உண்மையென்று விவரித்துக் காட்டும் வாழ்க்கை. அவ்விதமானதோர் வாழ்க் கையைத்தான் யோசேப்பு, தானியேல், நெகேமியா போன்றோர் வாழ்ந்து காட்டினார்கள். வெறும் வழிபாட்டு ரீதியான பக்தியோடு நின்றுவிடாமல், பண்புரீதி யான பக்தியை வெளிப்படுத்துவோம்.

இறைச் சிந்தனைகள் இதயத்தை விட்டு விலக விடாதிரு கவலைகளை விலக்கி விடுவதற்கு அதுவே சரியான வழி.

ஆசீர்வாதத் தகுதி

11 நாளா – 7:1-22

நான் உனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்து.... 11 நாளா – 7:17

எபே – 5:1-7

எருசேலம் தேவாலயத்தைப் பிரமாதமாகக் கட்டி முடித்தான் சாலொமோன் ராஜா. ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்த அன்று ஆயிரக்கணக்கான மாடுகளையும், லட்சத்திற்கு அதிகமான ஆடுகளையும் அவன் பலியிட்டான். அன்று இரவு தேவன் அவனுக்குத் தரிசனமானார். தரிசனத்தின்போது, சாலொமோன் கட்டிய ஆலயத்திற்காகவோ, அவன் பலியிட்ட திரளான ஆடுமாடுகளுக்காகவோ தேவன் அவனை மிகுதியாக மெச்சிவிடவில்லை. அதன் அடிப்படையில் அவனுக்கு மிகுதியான நன்மைகளை வாக்களித்து விடவும் இல்லை.

தேவனோ அந்த வேளையிலும் அவனுடைய தகப்பனாகிய தாவீதைப் போல உத்தமமாக நடக்க வேண்டிய தேவையையே அவனுக்கு நினைவுபடுத்தினார். தம்முடைய கட்டளைகளின்படியும், நியாயப்பிரமாணத்தின்படியும் செய்யக் கவனமாயிருந்தால்தான், அவன் தேவ ஆசீர்வாதங்களைப் பெற முடியும் என்பதையும் தெளிவுபடுத்தினார்.

ஆலயம் கட்டியதும், ஆயிரக்கணக்கில் ஆடுமாடுகளைப் பலியிட்டதும் தேவனுக்குப் பிரியமானவைதான். ஆனாலும் அவைகளே ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்து விடாது. அவைகளைப் பார்த்து தேவன் பரவசமடைந்து, ஆசீர்வாத வாக்குறுதிகளைத் தந்து விடுவதில்லை. தம்முடைய வார்த்தையின்படியும், வசனத்தின்படியும் வாழ கவனமாயிருக்கின்றவர்கள் மட்டுமே, அவருடைய ஆசீர்வாதங்களுக்குத் தகுதியாக முடியும்.

ஆனால் சிலருடைய சிந்தனை வித்தியாசமாயிருக்கின்றது. தாராளமாகக் காணிக்கை கொடுத்துவிட்டால், நன்றாக ஆராதித்து விட்டால், ஊழியங்கள் செய்துவிட்டால், மிஷினரிகளைத் தாங்கிவிட்டால், தேவ ஆசீர்வாதங்கள் மழை போல பொழிந்து விடும் என எண்ணுகின்றனர். ஆனால் தேவனுடைய நியாயமோ வித்தியாசமாகயிருக்கின்றது.

நம்முடைய காணிக்கைகளும், ஆராதனைகளும், துதி ஸ்தோத்திரங்களும், ஊழியங்களும், உற்சாகச் செயல்பாடுகளும் தேவனுக்குப் பிரியமானவை தான். ஆயினும் தேவனுக்குப் பிரியமாக வாழ்வதின் மூலமாக மட்டுமே, அவர் நம்முடைய வாழ்க்கையிலே செயல்படவும், நம்மை ஆசீர்வதிக்கவும் வழி ஏற்படும்.

இன்றைய சபைகளில் விசுவாசிகள் காணிக்கை கொடுக்கவும், ஆராதிக்கவும், ஊழியம் செய்யவும் உற்சாகப்படுத்தப்படும் அளவிற்கு கர்த்தருக்குப் பிரியமான வழிகளில் நடந்து அவருடைய ஆசீர்வாதங்களுக்குத் தகுதியாகிட உற்சாகப்படுத்தப்படவில்லல. எனவே விசுவாசிகள் தங்கள் ஆராதனை ஈடுபாடுகளையும் காணிக்கைகளையும், ஊழியங்களையும் தங்களை ஆசீர்வதிக்கும் கருவிகளாக எண்ணி ஏமாந்து போகின்றனர்.

தேவன் விரும்புகிறபடி வாழ விரும்புகிறவர்கள் கொடுப்பதுதான் காணிக்கை பிறர் கொடுப்பது வெறும் பண உதவி. அது தேவனுக்குத் தேவையில்லை.

ஜீவ நீரோடை

யாருக்காகச் செய்கின்றீர்கள் ?

சங்கீதம் – 81:1-16

நீ எனக்குச் செவிகொடுத்தால் நலமாயிருக்கும் – சங்கீதம் 81:8

1 யோவான் – 2:1-14

சிறு பிள்ளைகள் கீழ்ப்படிகின்றன. சில ஒழுங்குகளைப் பின்பற்றுகின்றன. சில வேலைகளைச் செய்கின்றன. பள்ளிக்கூடப் பாடங்களைப் படிக்கின்றன. பெற்றோர் விரும்பியபடியே நன்றாக குளித்து விட்டு வந்து சாப்பிடுகின்றன. இவை யாவும் நல்ல விஷயங்கள். இவை யாவற்றையும் தங்களின் பெற்றோருக்காகவே பிள்ளைகள் செய்கின்றன. பெற்றோரைப் பிரியப்படுத்துவதற்காகவோ அல்லது பெற்றோரின் கோபத்தை தவிர்ப்பதற்கோ அவர்கள் அவ்விதம் செய்கின்றனர். ஆனால் இவை யாவும் அந்தப் பிள்ளைகளின் நலனிற்காகவே. அவற்றால் பயன் அடைகின்றவர்கள் அவர்களே. அவர்கள் வளர்ந்து வரும் போது இவை யாவற்றையும் பெற்றோருக்காக அல்ல. தங்களின் சொந்த நன்மைக்காகவே செய்கின்றனர்.

நாம் நல்லதை நினைக்க வேண்டும். நல்ல சுபாவங்களோடு வாழ வேண்டும். நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். தீமையை விட்டு விலகவும் நல்லதை நாடிச் செல்லவும் பழக வேண்டும். இவை யாவற்றையும் நாம் தேவனுக்காகவும், இயேசுவுக்காகவும் செய்வதாக நாம் எண்ணுவது பக்திரீதியான சிந்தனை. ஆனால் நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர வளர இவை யாவும் நமக்கு அவசியம், என்பதையும், இவற்றால் நமக்குத்தான் நல்லது என்பதையும் உணர வேண்டும். ஏதோ கர்த்தருக்கு நல்லதைச் செய்வதாக நினைத்துக் கொண்டு, இவற்றின் உண்மையான தேவைகளை நாம் அறியாமல் போகக் கூடாது.

கோபத்தைத் தவிர்த்தீர்கள், பொறுமையாய் நடந்து கொண்டீர்கள், விரோ தத்தை விட்டு விட்டீர்கள். தவறுகளைச் செய்யவில்லை, நல்லதைச் செய்தீர்கள். இவை யாவும் கர்த்தருடைய பார்வையில் சந்தோஷமான நல்ல விஷயங்களே. ஆயினும் இவை யாவும் உங்களுக்குத்தான் மிகுந்த நல்லதைச் செய்கின்றன. இவற்றால் நீங்கள் நல்ல ஒரு வாழ்க்கையை வாழ்கின்ற திருப்தியைப் பெறுகின்றீர்கள். இவற்றால் உங்களுக்கு அமைதியும் சந்தோஷமும் ஏற்படுகிறது. உங்களுக்குக் குற்ற மனசாட்சியின் உறுத்துதல் இல்லை. உங்களுக்கு நல்ல மனித உறவும், ஐக்கியமும் கிடைக்கிறது. தேவனிடம் நெருங்கிச் செல்ல விசேஷ தைரியம் கிடைக்கிறது. எனவேதான் இப்படிப்பட்ட ஓர் நல்ல வாழ்க்கையை வாழ கர்த்தர் அழைத்தார்.

இவற்றையெல்லாம் கர்த்தருக்காகச் சுமக்க வேண்டிய பாரங்களாக எண்ணாதி ருங்கள். இவை யாவும் உங்கள் வாழ்வின் நன்மைக்காக நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடினமான கடமைகள். இவற்றை தேவ கிருபையோடு செய்யும் போது அதுவே ஒரு பெரிய ஆசீர்வாதமே.

இறைவனின் விதிகளை மதித்து வாழத் தயங்கினால்
சாத்தானின் சதி வழிகளில் மயங்கி விழ நேரிடும்.

மனித உறவு

யாத் – 33:10-23

எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்... ரோமர் –12:18

ரோமர் – 12:1-21

நல்ல கிறிஸ்தவ நம்பிக்கையும், பக்தியும் கொண்ட ஒருவர் யாரோடும் அதிக உறவில்லாத ஒரு நிலையில் காணப்படுகிறார். வாரம் தவறாமல் ஆலயம் செல்வார். ஆனால் யாரோடும் கலக்க மாட்டார். அலுவலகத்தில் அநேகரோடு பணி புரிந்தாலும் யாரோடும் அதிகமாகப் பழகுவதில்லை. உறவினர்களோடும் மிக மிகக் குறைந்த தொடர்பையே வைத்துள்ளார். யாரோடும் அதிகம் ஒட்டாத அவருடைய நிலலப்பாட்டைக் குறித்து யாராவது கேட்டால், "எனக்கு மனித உறவும் ஐக்கியமும் தேவையில்லை, கடவுளுடைய உறவும் ஐக்கியமும் போதுமானது" என்பார்.

கடவுளின் உறவும், ஐக்கியமும்தான் மிக மிக முக்கியமானது. அது மட்டுமே உண்மையானது, நிலையானது. தேவ உறவும், ஐக்கியமும்தான் நமக்கு எல்லாச் சூழ்நிலைகளிலும் ஆதரவாகவும், ஆறுதலாகவும் இருக்கும். மனித உறவும், ஐக்கியமும் நிலையற்றதும், நிறைவற்றதுமே. எனவே மனித உறவை விட, இறை உறவையே நாம் அதிகமாகத் தேடவும், நாடவும் வேண்டும்.

அதே வேளையில் கடவுளோடு நமக்கு நல்ல உறவும், ஐக்கியமும் ஏற்படும் போது, அந்த உறவின் பிரதிபலிப்பும், ஐக்கியத்தின் பின்விளைவும் மனிதர்களோடும் நாம் நல்ல உறவையும், ஐக்கியத்தையும் கொள்ள நம்மைத் தூண்டும் என்பது உண்மை. தேவனை நெருங்க நெருங்க மனிதர்களோடு நம்முடைய உறவும் ஐக்கியமும் பெருகவே செய்யும். தேவ உறவில் நாம் ஆழமாக இருப்பதாக எண்ணிக் கொண்டு, மனிதர்களைவிட்டு நாம் தூரமாகிக் கொண்டேயிருந்தால், நமக்கு உண்மையில் தேவ ஐக்கியம் ஏற்படவில்லல என்பதே உண்மையாயிருக்கும்.

தேவனோடு நெருங்கிய உறவும், ஐக்கியமும் கொண்டிருந்த மோசே, பல லட்சம் மக்களோடு நெருங்கி வாழ்ந்து அவர்களை வழி நடத்தினான். அவர்களின் குணமும், சுபாவமும், முரட்டாட்டத் தன்மையுடையதாயிருந்த போதிலும், தேவனோடு அவன் கொண்டிருந்த ஐக்கியத்தின் விளைவாக அவர்களை விட்டு விலகிப் போகாமல், அவர்கள்மேல் பாரம் கொண்டு அவர்களுடைய நன்மையைத் தேடினான்.

மனிதர்கள் நல்ல அன்பும், உண்மையும், நற்பண்பும் இல்லாதவர்களாக இருக்கலாம். ஆயினும் தேவ அன்பினால் தேவையான அளவிற்கு அவர்களோடு நல்ல உறவும், ஐக்கியமும் கொள்ள வேண்டும். பரிசுத்தராகிய இயேசு தம்மை தனிமைப்படுத்திக் கொள்ளவில்லை. பிதாவோடு அவர் கொண்டிருந்த நல்ல ஐக்கியத்தின் விளைவாக பாவிகளோடும், பலதரப்பட்ட மக்களோடும் அவர் தொடர்பு கொண்டிருந்தார்.

இன்னொருவரை நேசிக்க உன் இதயம் விரும்பாத போது, இயேசுவை நீ நேசிக்கிறாய் என்பது வெறும் கற்பனையே.

சிலுவையை புரிந்து கொள்தல்

ஓசியா – 6:1-11

கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு – 1 கொரி – 1:17

1 கொரிந்தியர் – 1:17-31

சிலுவை அடையாளத்தைப் பார்க்கும்படி வைத்தல், அதனைத் தொடுதல், சிலுவை அடையாளத்தை வரைதல், சிலுவை அடையாளத்தை பொருட்களில் பொறித்தல், சிலுவையை முத்தமிடுதல் என்பது போன்ற செயல்களால் அநேகர் தங்களின் பக்தியை அடையாளப்படுத்துகின்றனர். இதனால் தங்களுக்கு இறையருளும் இறை நன்மையும் கிடைக்கும் என்று நம்புகின்றனர். இது போன்ற விஷயங்களில் தங்களின் பக்தியை பிரதிபலித்துக் காண்பிக்க பழகிய பலர், ஒரு போதும் உண்மையான சிலுவை தொடர்பான உபதேசங்களுக்கு, செவி சாய்ப்ப தில்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் சிலுவை வீணாகப் போவதைக் குறித்து எழுதுகின்றான். சிலுவையைக் குறித்த பாரம்பரியமான பக்தி சிந்தனை சிலுவையை எப்படிப் பார்த்து எப்படிச் செயல்பட வேண்டுமோ அப்படிச் செயல்பட விடாமல் பலரைத் தடுக்கின்றது. சிலுவை முதலாவது புரிந்து கொள்ளப்பட வேண்டும். சிலுவையை பக்தியோடு பார்ப்பதும். அதனை பக்தியோடு சிந்திப்பதும் அல்ல. பாவத்திற்காக எவ்வளவு பெரிய விலை கர்த்தரால் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விழிப்புணர்வு தேவை. சிலுவை மரத்தில் பலவிதமான பாடுகளை அனுபவித்து உருவாக்கப்பட்ட பாவமன்னிப்பையும், பாவ விடுதலையையும் நாம் உரிய விதமாக அடையாமல், சிலுவைச் சின்னத்தை உயர்வாக மதிப்பதை பக்தி எனக் கூற இயலாது.

பாவம் எவ்வளவு கொடூரமானது, பாவமன்னிப்பு எவ்வளவு அருமையானது? என்பதை உணர சிலுவை நமக்கு ஞாபகக்குறியாக இருக்கலாம். ஆனால் அது வணக்கத்திற்குரியதாகவோ, வேத சார்பற்ற நம்பிக்கை வைப்பதற்கு ஏதுவான தாகவோ மாறிவிடக் கூடாது. சிலுவை ஏன் வந்தது என்று புரிந்து கொள்ளுதலோடு, உண்மையான இரட்சிப்பின் அனுபவத்தை நாம் பெற வேண்டும்.

மேலும் சிலுவையின் மூலமாக இயேசு சம்பாதித்த பாவ விடுதலையைப் பெற்றவர்கள், சிலுவை சுமக்கவும் அழைக்கப்படுகின்றார்கள். அதாவது உயர்ந்த தேவ நோக்கங்கள் நம்மிடம் நிறைவேறும் விதமாக, சில சிரமங்கள் என்னும் சிலுவையை நாம் சுமக்க முன் வர வேண்டும். சிலுவை சுமந்து இயேசுவைப் பின்பற்ற உண்மையான விசுவாசிகள் அழைக்கப்படுகிறார்கள்.

சிலுவை அடையாளங்களைச் சுமத்தலாகிய மூட நம்பிக்கை சார்ந்த பயனற்ற பக்திச் செயல்களை விட்டு விட்டு, இயேசுவுக்காக நமக்கு நியமிக்கப்பட்ட சிலுவையை தேவ கிருபையால் சுமக்க முன்வருவோம்.

> உலகமெல்லாம் போய் நல்லதைச் சொல்வதைவிட
> நாலுபேருக்கு நடுவில் நல்லவனாய் வாழ்வதே பெருமை.

மிகப் பெரிய சோதனை

ஜீவ நீரோடை

நீதி – 30:1-9

நான் பரிபூரணம் அடைகிறதினால்... நீதி – 30:9

எபி – 12:15-29

நாம் சந்திக்க நேரிடுகிற சோதனைகளிலேயே மிகப்பெரிய சோதனை எதுவென்றால் அது "வெற்றி" தான் என்று ஒரு புத்தகத்தில் படித்தேன். அது அதிக மாக என்னைச் சிந்திக்கத் தூண்டியது. எவ்வளவு பெரிய உண்மை இது. பலருடைய வாழ்க்கையை சோதனைகள் பழுதுபடுத்தியதுண்டு. ஆனால் அநேகருடைய வாழ்க்கையை வெற்றிகள் பாழாக்கியிருக்கிறது.

வெற்றி மகிழ்ச்சிக்குரியதாக இருந்த போதிலும், சற்று அஜாக்கிரதையா யிருந்தால்அங்கே ஆபத்துகள் பல உண்டு. தாவீது தொடர்ந்து பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், போராட்டங்களுக்கு மத்தியிலும் வாழ்ந்த போதிலும், வெற்றியாக ஒரு சாம்ராஜ்யத்தை கட்டி எழுப்பின மனுஷனாக இருந்தான். ஆனால் நினைத்ததையெல் லாம் சாதித்து, தடையில்லா உயர்வுகளை எட்டிய சாலொமோன் ஒரு சாம்ராஜ்யம் உடைந்து போவதற்கு வழிவகுத்த மனிதனாக மாறினான். அவனுடைய வெற்றிகள் ஒரு நாள் வேதனைக்குரிய முடிவுகளையே தந்தன.

எசேக்கியா ராஜாவின் வெற்றியும், உசியா ராஜாவின் வெற்றியும் அவர்களை மனமேட்டிமையாளர்களாக மாற்றியது. சோதனைகளை அவ்வப்போது சந்திக்க நேரிடுகிற மனிதன் தேவ சார்புடையவனாகவும், தன்னை ஆராய்ந்து பார்க்கிறவனாகவும், தேவனுக்குப் பயந்து வாழும் சிந்தையுடையவனாகவும் நிற்க மிகுந்த வாய்ப்புகள் உண்டு.

ஆனால் வெற்றிகள் தொடரும் போதும், நினைத்தவைகள் எளிதாக நிறைவேறும் போதும், தேவனைத் தேடுகிற உணர்விலும், அவருடைய கிருபையைப் பற்றிக் கொண்டிருக்கிற அனுபவத்திலும், அவருக்கு முன்பாக உண்மையாக வாழவேண்டும் என்ற கரிசனையிலும் மிகுதியான தொய்வுகள் ஏற்பட ஏராளம் வாய்ப்புகள் உள்ளன. அதுவே தொடர்கதையாகி தேவனைவிட்டு விலக நேரிடும் அபாயமும் உண்டு.

பல நேரங்கள் வெற்றிகளால் ஏற்படும் சந்தோஷம், தேவனோடு ஐக்கியங் கொள்வதினால் அடையும் சந்தோஷங்களை அலட்சியப்படுத்தி விடச் செய்கிறது. வெற்றிகள் ஏற்படுத்துகிற குதூகல சூழ்நிலைகளோடு அதிக ஐக்கியமாயிருக்கும் அனுபவம், தேவனோடு ஐக்கியமாயிருந்து அடைய வேண்டிய ஆசீர்வாதங்களைத், தடை செய்து விடுகிறது. வெற்றியின் காலங்களில் விழிப்பாயிருப்போமாக.

மேலே மேலே ஏறிச்செல்லும் வாஞ்சை தேவையே. ஆனால் இதுவரை ஏறிய உயரத்திலிருந்து விழாமலிருக்க எச்சரிக்கையும் தேவையே.

ஏன் முயற்சிக்கவில்லை?

1 சாமுவேல் – 14:1-15

பூரணராகும்படி கடந்து போவோமாக
எபிரேயர் – 6:2

எபிரேயர் – 6:1-20

வேலை ரீதியாகவும், தொழில் ரீதியாகவும், சில நல்ல பணிகள் தொடர்பாகவும் நாம் செயல்படும் போது அங்கே அவற்றைச் செய்ய இயலாத தடைகள் ஏற்படாமலில்லை. நாம் முன்னேற விரும்பும்போதும், எதையாவது அடைய விரும்பும் போதும், சாதிக்க விரும்பும்போதும் நமக்குச் சாதகமாக சூழல்கள் இருப்பதில்லை. நாம் செயல்படச் செல்லும்போது முட்டுக்கட்டையாக ஏதோ ஒன்று வருகிறது. ஆனால் நாம் விட்டுவிட்டுப் போய் விடுகின்றோமோ. ஒரு வழியில் தடை ஏற்பட்டால் இன்னொரு வழியில் முயற்சிக்கவில்லையா? ஒரு முயற்சியில் சாதிக்க முடியாமல் போகும் போது, இன்னும் அதிக முயற்சி எடுக்க முன்வரவில்லையா? முடியவில்லை என்று கூறிவிட்டு முயற்சிகளை விட்டு விடுவோமா?

ஏதோ ஒன்று மிக அவசியம் என்று உணரும் போதும், ஒன்றைச் சாதிப்பதினால் நமக்குச் சந்தோஷம் உண்டு என்று எண்ணுகின்ற போதும் எவ்வளவோ முயற்சிக்கின்றோம். இனி என்ன செய்யலாம் என்ற யோசனையோடு எத்தனையோ வழிகளைச் சிந்திக்கின்றோம். ஆனால் கர்த்தர் சொன்னபடி வாழ்கின்ற விஷயத்தில் மட்டும் நாம் ஏன் எளிதாகப் பின்வாங்கி விடுகிறோம். ஒரு தடை ஏற்பட்டு விட்டால் அத்துடன் முயற்சிகளை நிறுத்தி விடுவது ஏன்? எப்படி வாழ வேண்டும் என்ற கர்த்தரின் போதனைகளைக் கேட்டதும், மனதிற்குள் இப்படியெல்லாம் எங்கே வாழ முடியும் என்று உடனேயே கேட்டு விடுகிறோமே.

அவை கடினமானவை என்பதல்ல காரணம். தடைகள் வந்து விட்டது என்பதல்ல உண்மையான காரணம். கர்த்தர் சொன்னபடி வாழ்வது மிக மிக அவசியம் என நம்மால் யோசிக்க முடியவில்லை. எப்படியாவது வாழ்ந்து காட்டியாக வேண்டும் என்ற முனைப்பு மனதில் தோன்றவில்லை.

பரிசுத்தமாக வாழ வேண்டியதும், உண்மை உத்தமமாய்ச் செயல்பட வேண்டியதும், நற்பண்புகளோடு நடந்து கொள்ள வேண்டியதும். நல்லதோர் வாழ்க்கைக்கு மிகமிக அவசியம் என உணருகின்ற அளவிற்கு உண்மையான ஆவிக்குரிய உணர்வுகள் நமக்கு இல்லை. எனவேதான் காசுக்காகவும், சந்தோஷத்திற்காகவும், கௌரவத்திற்காகவும், உயர்வுகளுக்காகவும் திரும்பத் திரும்ப முயற்சிக்கும் நாம், ஆவிக்குரிய விஷயங்களிலோ போராடாமலே தோல்வியை ஒப்புக் கொண்டு ஒதுங்கி விடுகிறோம். மேலான விஷயங்களுக்காக முயற்சித்தும் முன்னேறத்துடிக்கும் மனநிலையை கர்த்தர் தரும்படி ஜெபிப்போம்.

தேவனை எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பவன் எப்போதும் தன்னைத் தேவன் நினைக்கிறார் என்பதை உணருகின்றான்.

ஜீவ நீரோடை

மகிழ்ச்சியின் ரகசியம்

சங்கீதம் – 42

எப்பொழுதும் சந்தோமாயிருங்கள்....
பிலிப்பியர் – 4:4

பிலிப்பியர் – 4:4-9

பல நேரங்களிலும் நாம் மகிழ்ச்சியை எதிர்காலத்தில்தான் எதிர்பார்க்கின்றோம். அதாவது இன்று நம்மைச் சூழ்ந்துள்ள கஷ்டங்களும், பிரச்சினைகளும் விலகிப் போன பின்பு, நாளைதான் நாம் மகிழ்ச்சியாயிருக்க முடியும் என்று எண்ணுகின்றோம். எனவேதான் பலவேளையும் மகிழ்ச்சி என்பது எதிர்காலக் கனவாக இருக்கிறதே யன்றி, நிகழ்காலத்தில் நாம் அனுபவிக்கும் ஒன்றாக அது இராமல் போகின்றது.

ஆனால் மகிழ்ச்சியை நிகழ் காலத்தில் நீங்கள் அனுபவிக்க வேண்டும். அதுவே தேவனுடைய விருப்பம். எனவேதான் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகின்றான். பலவிதக் கவலைகள், துன்பங்கள் நிறைந்த நம்முடைய வாழ்க்கையில் இது எப்படிச் சாத்தியமாகும்?

நிச்சயம் சாத்தியமாகும். அதுதான் இறை வாழ்க்கையின் ரகசியம். நம்முடைய பலவிதக் கஷ்டங்கள், நம்முடைய மகிழ்ச்சியைத் தடுக்க முடியாது. நாம் தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டுத்தான் செயல்பட்டுக் கொண்டிக்கின்றோம் என்ற நிச்சயத்தை உடையவர்களாயிருந்தால், பாடுகள் அந்தப் பாதையில் வந்தால்கூட, கர்த்தர் நம்மை மகிழ்ச்சியாக்கி நடத்த முடியும். தேவன் அருளும் சந்தோஷம் என்பது சூழ்நிலைகளினால் கட்டுப்படுத்தப்படாத ஒன்று. எனவேதான் இயேசு உங்கள் சந்தோஷத்தை ஒருவரும் உங்களை விட்டுப் பறிக்க முடியாது என்று தம்முடைய சீடர்களுக்கு உறுதி கூறினார். ஆம். தேவன் எந்த ஒரு சூழ்நிலையின் நடுவிலும் நமக்குச் சந்தோஷத்தைத் தந்திட வல்லவராயிருக்கிறார். ஏராளமான காயங்களுடன், கட்டப்பட்ட நிலையில்கூட, பிலிப்பி சிறையில் பவுலும், சீலாவும் பாடித் துதித்து மகிழ்ந்தார்களே? அவர்கள் மகிழ்ச்சியின் ரகசியத்தை அறிந்திருந்தார்கள்.

மகிழ்ச்சி என்பதை ஒரு சூழ்நிலை மாற்றத்தின் வாயிலாகவோ, சில பிரச்சினைகள் நீங்குதலின் வாயிலாகவோ எதிர்பார்க்கத் தேவையில்லை. ஏனென்றால் தேவன் அருளும் சந்தோஷம் சூழ்நிலைகளால் கட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது தேவனோடு நாம் கொள்ளும் ஐக்கியத்தினாலும், தேவன் மேல் நாம் வைக்கும் விசுவாசத்தினாலும், ஏற்படுவதாகும். அந்தவிதமான ஒரு தொடர் ஐக்கியமும், விசுவாச உணர்வும் பவுல், சீலா ஆகியோரிடம் இருந்ததால்தான், அவர்கள் இன்னல்களுக்கிடையிலும், இளைப்பாறுதலை உணர்ந்து தேவனைத் துதிக்க முடிந்தது. எனவே அந்தத் துன்பமான நேரத்தில் கூட தேவன் அவர்களைச் சந்தோஷப்படுத்த முடிந்தது. நாமும் எந்த நிலையிலும் ஜெபம், தியானம், விசுவாசம் இவைகளில் நம்மை ஈடுபடுத்தப் பழகிக்கொண்டால் நாளைக்கு அல்ல, இன்றே கிறிஸ்துவின் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும்.

அக்கினியைக் காணாத பொன் அழகு பெறாது
சோதனைகளைக் காணாத வாழ்வு சிறப்பு பெறாது.

குறை கூறுவது பாவமா ?

எரேமியா – 23:1-12

மாயக்காரராகிய வேதபாரகரே
லூக்கா – 11:44

லூக்கா – 11:37-54

சமீபத்தில் ஒரு கிறிஸ்தவ பத்திரிகையில் "எந்த ஊழியரையும் குறை சொல்லாதிருங்கள், எந்த ஊழியத்தையும் குறை சொல்லாதிருங்கள் அது தேவனுக்கு விரோதமான பாவம்" என்ற வாசகங்கள் பெரிய எழுத்துக்களில் வாசிப்பவர்களின் கவனத்தைக் கவரும்படி அச்சிடப்பட்டிருந்தது. இதை வாசிக்கின்ற எவரும் குறை கூறுதல் ஒரு பெரிய பாவம் என்று புரிந்து கொள்ள நேரிடும்.

யாரையும் எதையும் குறை கூறக் கூடாது என்ற ஆலோசனை எவரிடத்தில் குறை இருந்தாலும் அதனைக் கண்டு கொள்ளக் கூடாது என்ற மனோபாவத்தை உருவாக்கும். யாருடைய குறைகளையும், குற்றங்களையும், தவறுகளையும் ஒரு பொருட்டாக எண்ணக்கூடாது என்ற மனநிலையை அது உருவாக்கும். இது தவறுகின்றவர்களுக்கும், தப்புச் செய்கின்றவர்களுக்கும் கண் மூடித்தனமான ஆதரவு கொடுக்கும் செயலாகும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அன்றைய இறைப் பணியாளர்களாக எண்ணப்பட்டவர்களின் செயல்களிலும், பண்புகளிலும் இருந்த குறைவுகளைக் கோடிட்டுக் காட்டிக் கண்டனம் செய்தார். மேலும் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும், மாய் மால ஊழியர்களுக்கும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வைப் பல்வேறு தருணங்களில் ஏற்படுத்தினார். வேத வார்த்தைகளுக்கு எதிராகவும், தேவ நியாயங்களுக்கு எதிராகவும் போதித்த போதகர்களையும் மாய்மாலமாகச் செயல்பட்ட ஊழியர்களையும் அப்போஸ்தலனாகிய பவுல் கடுமையாகச் சாடினான். குறை கூறுவதே பாவமானால் இவர்கள் செய்ததும் பாவம் இல்லையா?

சத்தியம் என்ற வெளிச்சத்தில் வாழ்கின்றவர்களுக்குச் சத்தியமற்ற விஷயங்கள் குறைவாகவும், குற்றமாகவும் தோன்றுவது இயற்கை. தேவனுடைய வார்த்தைகளின் உண்மைகளைக் கண்டு கொண்டவர்களுக்கு, வேத வார்த்தைகளுக்கு விரோத மான செயல்பாடுகளும், போதனைகளும் தவறுகளாகத் தெரிவது இயற்கை. அவற்றை அவர்கள் சுட்டிக்காட்டாவிட்டால் அவர்கள் சத்தியத்தை அறிந்தது உண்மையல்ல. யாரையும் குறை சொல்லாதே என்ற பொதுவான ஆலோசனை கள்ளத் தீர்க்கதரிசிகளையும், கள்ளப் போதனையாளர்களையும், கள்ளத்தனமான ஊழியர்களையும் தடையின்றிச் செயல்பட வைப்பதற்கு பிசாசானவன் கொடுக்கின்ற தந்திரமான போதனையே.

தன் தவறினை ஒத்துக் கொள்ளுதல் என்ற கர்ப்ப வேதனையின்றி நற்பண்பு என்ற பிள்ளை பிறப்பதில்லை.

ஆசீர்வாதம் இலக்கானால் !

ஜீவ நீரோடை

ஆதி – 12:1-9

கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல்..... பிலி – 2:21

பிலி – 2:12-22

என்னுடைய பிரச்சனைகளிலிருந்து விடுதலைக்காகவும், என் வாழ்க்கையின் ஆசீர்வாதங்களுக்காகவும் இரவும், பகலும் நான் ஜெபித்து, உபவாசித்த காலங்கள் இருந்தது. மணிக்கணக்கில் என் தேவைகளுக்காகப் பாரத்தோடு ஜெபித்து மன்றாடின காலங்கள் இருந்தது. ஆயினும் அந்த நாட்களில் நான் எதிர்பார்த்த நன்மைகள் எனக்கு வரவில்லை. நீண்ட காலம் அது எனக்குச் சோர்வானதாகவும், புரிந்து கொள்ள முடியாத புதிராகவும் இருந்தது.

என்னுடைய தேவைகளையும், பிரச்சினைகளையும், ஆசீர்வாத எதிர் பார்ப்புகளையும் மையமாகவும், நோக்கமாகவும் வைத்து ஜெபித்த, உபவாசித்த காலங்கள் எனக்கு அவ்வளவு பிரயோஜனமான காலங்கள் என்று கூறமுடியாது. கேட்டுக் கேட்டு கிடைக்காமல் சோர்ந்து போய் இனி உம் சித்தம் போல் ஆகட்டும் என்று எல்லாப் பிரச்சினைகளையும் ஓரமாக வைத்துவிட்டு, தேவனுடைய நோக் கங்களையும், விருப்பங்களையும் மையமாகவும், குறிக்கோளாகவும் வைத்துச் செயல்பட ஆரம்பித்த பின்னர்தான், நிலைமைகள் புதிய திருப்பங்களைக் காண ஆரம்பித்தன.

ஒன்றை மட்டும் என் அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்டேன். நம்முடைய தேவைகளையும், ஆசீர்வாதங்களையுமே மையமாகவும், நோக்கமாகவும் கொண்டு நாம் ஆவிக்குரிய வாழ்க்கையை வாழும் போது, அவைகள் நமக்குத் தூரமாகிக் கொண்டே செல்லும். எப்பொழுது தேவ விருப்பங்கள் நிறைவேற்றுதலை நோக்க மாகக் கொண்டு நாம் ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கின்றோமோ, அப்பொழுது ஆசீர்வாதங்கள் நம்மைப் பின் தொடர ஆரம்பிக்கும்.

ஏனென்றால் தேவசித்தத்தை நிறைவேற்றும் விதமாகவும், தேவனை மகிமைப்படுத்துவதை முதல் நோக்கமாகவும் கொண்டு நாம் செயல்படும் பாதையில், நம்மைத் தேடிவருகின்றவைகள்தான் ஆசீர்வாதங்கள். அநேகர் எந்த அளவிற்கு ஆசீர்வாதங்களைத் தேடுகின்றார்களோ, அந்த அளவிற்கு அவைகள் அவர்களுக்கு எட்டா தூரத்தில் போய்க் கொண்டிருக்கிறது. ஏனென்றால் ஆசீர்வாதங்கள் மட்டுமே நம்முடைய இலக்குகளாகவும், ஆவிக்குரிய வாழ்க்கையை வாழத்தூண்டுகின்ற உந்து விசைகளாகவும் இருக்கக்கூடாது. தேவன் நம் வாழ்க்கையின் மேல் கொண்டுள்ள நோக்கம், வைத்துள்ள திட்டம் இவைகளே நம் இலக்குகளாக மாற வேண்டும். அந்த இலக்கை நோக்கிய பாதையில் நாம் தொடர்ந்து முன்னேறும் போது தேவ நன்மைகளும், ஆசீர்வாதங்களும், நாம் தேடாமலே நம்மைத் தேடிவருகின்றன. தேவன் விரும்பும் பரிசுத்தம், உண்மை, உத்தமம், கீழ்ப்படிதல், அன்பு ஆகிய இலக்குகளை நோக்கி நாம் ஓடுவோம். அப்போது நம் தேவைகள் உரிய முறையில் சந்திக்கப்படுவதை நாம் காண்போம்.

தேவனுடைய விருப்பத்திற்குக் கவர்ச்சி இல்லை. ஆனாலும் அதனை ஏற்போர் கனமடையாமல் போவதில்லை.

பணமும் ஆடம்பரமும்

1 தீமோத்தேயு - 6:1-12

எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது - பிரசங்கி - 2:17

பிரசங்கி - 2:1-17

பல முன்னணி வியாபார நிறுவனங்களை உள்ளடக்கிய பெரியதோர் குழுமமே சகாரா. அந்த சகாரா நிறுவனத்தின் மதிப்பிற்குரிய வலிமையான தலைவராகச் செயல்பட்டவரே சுப்ரதா ராய். ஆனால் அந்தக் குழுமத்தைச் சேர்ந்த சில நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட சுமார் 20,000 கோடி ரூபாயைத் திருப்பித்தரவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், சுப்ரதா ராய் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டார். அவரைக் கோர்ட்டுக்கு அழைத்துச் சென்ற போது வாலிபன் ஒருவன் கோபமுற்று பலர் நடுவில் முகத்தில் மையை கொட்டி விட்டான். பரிதாபமான ஒரு தோற்றத்தோடு உலகமே பார்க்கும் விதமாக அந்த மனிதர் நின்ற காட்சி வேதனைக்குரியதாக இருந்தது.இவ்வளவு பெரிய ஒரு வலிமையான செல்வாக்கு மிக்க ஒரு நபருக்கு இந்தக் கதி ஏற்பட்டதே என்ற பரிதாபம் யாருக்கும் ஏற்படும்.

இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? பண ஆசை, ஆடம்பரம், பெருமை, பந்தா போன்றவையே. பல்வேறு துறைகளில் பணத்தை வாரி இறைத்துத் தன்னை மிகப் பெரிய மனிதனாகக் காண்பிக்கும் இவருடைய பழக்கம், இறுதியிலே பலர் பார்த்துப் பரிதாபப்படும் நிலைக்கு இவரைக் கொண்டு சென்றது. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர் என்ற வேத வார்த்தை எவ்வளவு உண்மையானது.

சாலொமோன் ராஜாவுக்கு தேவன் கொடுத்த நன்மைகள் கொஞ்சமல்ல. ஆனாலும் அவனுடைய வாழ்க்கையின் இறுதிப் பகுதி அவனை நமக்கு மதிப்பு மிகு மனிதனாகக் காட்டவில்லை. அதிக ஆடம்பரம், பந்தா, சுகபோகம், எதிலும் இன்பம் என்றும் இன்பம் என்ற தடையில்லா ஆசை ஆகியவை சாலொமோனை இறுதியில் விரக்தியடையவே செய்தது. தேவன் வாரி வழங்கியும் அவனுக்குப் போதாமல் போய் விட்டது. அவனுடைய வாழ்க்கை எப்படி வாழ வேண்டும் என்பதற்கான மாதிரியாக அல்ல. எப்படி வாழக் கூடாது என்பதற்கே மாதிரியாக மாறினது.

வாழ்க்கையில் சுய நலமே இலக்காக மாறும் போது அங்கே எவருக்கும் முன் மாதிரியாக இருக்கக் கூடாத ஒரு வாழ்க்கை முறையே விளைவாக வரும். அப்போஸ்தலனாகிய பவுலிடம் பணமோ, பொருளோ, அதிகாரம், பதவியோ இருக்கவில்லை. ஆனால் அந்த மனிதனின் வாழ்க்கை இன்றும் எத்தனையோ பேருக்கு கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றத்தக்கதான, மிக நல்லதோர் முன் மாதிரி வாழ்க்கையாக இருக்கின்றது. ஆம். பணம் அல்ல, நம்முடைய குணம் எப்படி என்பதே முடிவுகளை நிர்ணயிக்கும்.

தோல்வியடையும் போதெல்லாம் பிறரைக் காரணம் காட்டினால் நீ தொடர்ந்து தோல்வியடைய பலர் வந்து கொண்டிருப்பார்கள்.

ஜீவ நீரோடை

ஏவுதல் தேவையா?

ஏசாயா – 58:6–14

வாரியிறைத்தான், ஏழைக்களுக்குக் கொடுத்தான்... 11 கொரி–9:9

11 கொரி – 9:1–15

வறுமை நிலையிலுள்ள ஒருவர் வியாதிப்பட்டு மருத்துவமனையில் சிகிட்சை பெற்றுக் கொண்டிருந்த போது, அவருடைய விசுவாச உறவினர் ஒருவர் ஏதாவது உதவி செய்ய விரும்பினார். அது குறித்து அவர் ஜெபித்து தேவ வழிநடத்துதல் தேடினார். ஆனால் உதவி செய்வதற்கான ஒரு ஏவுதலை அவர் உணர முடியாததால், தொடர்ந்து ஜெபித்தாரேயன்றி உதவி செய்யவில்லை.

ஒவ்வொரு காரியத்தையும் தேவசமுகத்தில் வைத்து ஜெபித்து தேவ வழிநடத்துதலைத் தேடுவது நல்ல பழக்கமே. அதே வேளையில் பொதுவாக சில நற்காரியங்களை நாம் செய்ய தேவன் ஏற்கெனவே நமக்கு கட்டளையும், அறிவுரையும் தந்துள்ளார். பிறருடைய துன்பங்களில் உதவுவதற்கும், பிறருக்கு ஆறுதலாக நற்காரியங்கள் செய்வதற்கும் விசேஷ வழி நடத்துதல்களோ ஏவுதலோ தேவையில்லை. அவசியமான சூழ்நிலைகளில், விசேஷ ஏவுதலை உணராமலே, நல்ல காரியங்களைச் செய்ய நாம் முன்வரலாம்.

சில ஜெபக்கூட்டங்களில் “ஏவப்பட்டவர்கள் ஜெபிக்கலாம்” என்ற வாக்கியம் அடிக்கடி உபயோகிக்கப்படும். இது அவசியமில்லாத ஒரு வாக்கியம். ஒரு நல்ல காரியத்திற்காக ஜெபிப்பதற்கு விருப்பம்தான் தேவையே ஒழிய, விசேஷ தேவ ஏவுதல் தேவையில்லை. கர்த்தருடைய ஊழியங்களைத் தாங்கவும் வறியோருக்கு உதவி செய்யவும், துன்புறுவோருக்கு ஆறுதலாக எதையாவது செய்யவும் தேவன் சில நேரங்களில் விசேஷ ஏவுதல்கள் தருவது உண்டு. ஆயினும் அது போன்ற சூழ்நிலைகளில் விசேஷ ஏவுதல்களுக்காகக் காத்திருக்கத் தேவையில்லை. ஏனென்றால் இதுபோன்ற காரியங்களைச் செய்வதற்கான தூண்டுதலை ஏற்கெனவே தம்முடைய வசனங்கள் மூலமாக தேவன் தந்துள்ளார். அங்கே மனவாஞ்சையும் கீழ்ப்படிதலும்தான் அவசியம். அந்த நற்செயலுக்கான ஆர்வங் களை தேவன் அங்கீகரிப்பதும், பாராட்டுவதும் உண்மை.

ஒருவேளை சில சூழ்நிலைகளில், சிலருக்கு நாம் செய்கின்ற உதவிகள் அவசியமற்றது என தேவன் எண்ணினால், அதனை தேவன் தடை செய்வார் என்று விசுவாசிக்கலாம். சிலர் உதவி செய்ய வேண்டிய ஒரு அவசியமான சூழ்நிலையில், “உங்களுக்காக ஜெபிக்கிறோம்” என்று கூறி உதவி செய்யும் கடமையைத் தவிர்த்து விடுவார்கள். சிலர் நன்மை செய்வதற்கான ஒரு உண்மையான சிந்தை இல்லாத தின் விளைவாக கர்த்தரின் ஏவுதலுக்காக காத்திருக்கிறோம் என்று சொல்லி, நன்மை செய்யும் கடமையைத் தவிர்த்து விடுவார்கள்.

கடவுளிடமிருந்து நீ எதையாவது பெற்றதுண்டானால் மனிதர்கள் உன்னிடமிருந்து எதையாவது பெறும்படி செயல்படு..

ஜீவ நீரோடை

விட்டுக் கொடுத்தலின் பலன்

ஆதியாகமம் - 13:1-9

நீ வலது புறம் போனால் நான் இடது புறம் போகிறேன் – ஆதி – 13:9

மத்தேயு - 5:34-48

அண்ணன் தம்பி இருவருக்கிடையே சொத்துப் பிரச்சனை வந்தது. தம்பி நியாயமில்லாமல் அண்ணனுக்குச் சேர வேண்டிய ஒரு நிலத்தைத் தான் பெற விரும்பினான். கோர்ட்டுக்குப் போயாவது அதைப் பெற்றுக் கொள்ள அவன் தீவிரித்தான். அண்ணனோ பிரச்சினை, வாக்குவாதம், போலீஸ், கோர்ட் என்று எதற்கும் வாய்ப்புக் கொடுக்காமல் தம்பி விரும்பியபடி விட்டுக் கொடுத்துவிட்டார். நியாயமில்லாமல் உரிமை கோரும் தம்பிக்கு ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டனர். அதற்கு அந்த அண்ணன் என் தம்பிக்கு எது முக்கியமாகத் தெரிந்ததோ, அதற்காக அவன் விடாப்பிடித்தனம் காண்பித்தான். எனக்கு எது முக்கியமாகத் தெரிந்ததோ அதற்காக நான் விடாப் பிடித்தனம் காண்பித்தேன். ஒரு துண்டு நிலத்தை விட எனக்கு அமைதியும், ஐக்கியமும்தான் அதிகப் பிரியம் என்றான்.

விட்டுக் கொடுப்பதாலும், உரிமைகோருவதில் விடாப் பிடித்தனம் காண்பிக்காமல் போவதாலும் நமக்கு சில நஷ்டங்கள் ஏற்படலாம். பொருளாதார ரீதியான நஷ்டத்தை விட, உணர்வு ரீதியாகச் சில விஷயங்கள் நமக்கு அதிகமான மனக்காயத்தைத் தரும். அநியாயம், முறைகேடு, வலிமை காட்டிச் சாதித்தல், மனிதாபமின்மை, உரிமை கள் வன்முறைத்தனமாக மறுக்கப்படுதல் போன்றவற்றைக் காணநேரிடும் போது மனக் கொதிப்புகள் இயற்கையானவை. ஆயினும் பணத்தை விட, நிலத்தை விட, சாதித்து காட்டுவதை விட, நம்மை யார் என்று காண்பிப்பதை விட, அமைதி, பொறுமை, பிரச்சினைக்கு முற்றுப்புள்ளிவைத்தல் ஆகியவை அதிக மதிப்பிற்குரியவைகள். அமைதியை இழந்து சாதிப்பதை விட, சாதிக்கும் வாய்ப்பை இழந்து அமைதியைத் தக்க வைப்பதே அதிக விலை மதிப்புள்ளது.

ஆபிரகாம் லோத்துவுக்கு விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஆபிரகாம் லோத்துவின் பொருளாதார சிந்தைமிக்க மனதைப் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்தான். லோத்துவுக்குக் கிடைத்தது குற்ற உணர்வோடு சேர்ந்த சொத்துக்கள். ஆபிரகாமுக்குக் கிடைத்ததோ அமைதி. எதையும் நினைத்து வருந்தத் தேவையில்லை. சொத்தைவிட அமைதியும் அன்பும், ஐக்கியமும் அதிக விலையுள்ளது என்பதை உணர்ந்த ஆபிரகாம் எளிதாக விட்டுக் கொடுத்தான்.

இன்று அமைதியை இழக்காதிருப்பதற்காக விட்டுக் கொடுத்து இழந்தால், அதற்கொரு பிரதி நன்மை பின்னாளில் தேவனால் வராமல் போவதில்லை. ஆபிரகாம் இழந்த பின் ஏராளம் பெற்றான்.

தவறான குணங்களை நிரந்தரமாகக் கொண்டவன் காணும் அமைதியும் ஆறுதலும், தற்காலிகமானவையே.

ஜீவ நீரோடை

பிறரைப் பார்த்து

அப் - 19:11-20

எகிப்தியர் அப்படிச் செய்யத் துணிந்து....
எபிரேயர் - 11:29

எபி - 11:23-40

யோர்தானை இஸ்ரவேலர் விசுவாசத்தால் கடந்தார்கள் என்ற சம்பவத்தை முன்னுதாரணமாக வைத்து சிலர் தாங்களும் ஒரு ஆற்றைக் கடக்க முடியும் என விசுவாசித்துக் கடக்க முயற்சித்தார்களாம். ஆனால் அவர்களின் விசுவாசம் அவர்களுக்குக் கைகொடுக்கவில்லை. அவர்கள் ஆற்றோடு போக நேரிட்டதாம். யோர்தான் பிரிந்ததென்றால் அங்கே ஒரு தேவையும், தேவனுடைய திட்டமும் இருந்தது. அதனைப் பார்த்து எல்லோரும் ஆறுகளைக் கடக்க முயற்சிப்பது வீண்வேலையே.

சிலருடைய சில செயல்களின் விளைவாக வரும் ஆசீர்வாதங்களைக் காணும்போது, நாமும் அத்தகைய செயல்களைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் வருவதுண்டு. ஆனால் செயல்களை மட்டும் அல்ல. அந்தச் செயல்களுக்கு பின்னால் உள்ள தேவ அழைப்பு, உணர்வுகள், விசுவாச நிலை ஆகியவை மிக முக்கியமானவை. இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடல் பிளந்தபோது வெற்றியாக அதன் வழியாகக் கடந்து சென்றார்கள். அதைப் பார்த்த எகிப்தியர்கள் அவ்விதம் செய்ய முயன்றபோதோ அமிழ்ந்து போனார்கள்.

பேதுருவைப் போல மற்றவர்களுக்குப் பரிசுத்த ஆவியின் வரத்தைக் கொடுக்க விரும்பிய சீமோன் சாபத்தைப் பரிசாகப் பெற்றான். பவுலைப் போல பிசாசுகளைத் துரத்த விரும்பிய ஸ்கேவாவின் மக்கள் நிர்வாணிகளாக ஓட நேர்ந்தது. மற்ற வர்களைப் பார்த்துக் காப்பியடித்து செயல்பட விரும்புவது ஒருபோதும் நல்லது அல்ல.

ஒருவர் காணிக்கை கொடுத்ததால் பெற்ற மிகப்பெரிய நன்மையைக் காண்கின்ற இன்னொருவர், தானும் காணிக்கை கொடுத்து அவ்விதம் நன்மை பெற விரும்புகிறார். இது ஆவிக்கேற்றது அல்ல. இது உண்மையான விசுவாசம் அல்ல. அது சுயத்தில் எழுந்த ஒரு ஆசையின் விளைவு. இதைத்தான் இன்று பல ஊழியர்கள் பிரமாதமாகப் போதிக்கிறார்கள். உண்மையான உற்சாகத்திலும், உள்ளான அன்பிலும் கொடுப்பதும், செய்வதுமே தேவனுக்குப் பிரியமானவை. தேவன் நாம் தாராளமாகக் காணிக்கை கொடுப்பதை மட்டும்.வைத்து நமக்கு ஆசீர்வாதங்களை அருளிடமாட்டார். நம்முடைய வாழ்க்கையும், செயல்பாடுகளும் தேவனுக்குகந்த விதமாக இருக்குமாயின், நம்முடைய காணிக்கைகளையும் அவர் கனப்படுத்தி அதற்குரிய பிரதிபலன்களை அருளுவார். அதுபோலவே ஜெபிப்பதினால் மட்டுமே நாம் ஆசீர்வதிக்கப்பட முடியாது. தேவனுடைய வழிகளில் நடக்கின்றவர்களாயிருந்து கொண்டு, ஜெபிக்கும் போதுதான் எதிர்பார்க்கும் நன்மைகள் வரும். வெறும் செயலை வைத்து அல்ல. செயலுக்குப் பின்னால் உள்ள உண்மையான அன்பு, தெய்வீக உணர்வுகள், விசுவாசம் ஆகியவற்றை வைத்தே தேவன் ஆசீர்வதிக்கிறார்.

படகு அருகில் இருக்கையில் ஆற்றைக்
கடக்க அற்புதம் தேடாதே.

இருதயத்தின் தரம்

எரேமியா - 17:1-10

இருதயமே திருக்குள்ளதும் மகாகேடுள்ளது மாயிருக்கிறது - எரேமியா 17-9

யோவான் - 15:1-11

நம்முடைய இருதயத்தின் தரம் இன்னதென்பதைப் பிறர் அறியச் செய்கின்றவைதான் சுபாவங்கள். நம்மிடம் அன்பு, தாழ்மை, பொறுமை, உண்மை, ஒழுக்கம், தயவு, இரக்கம், கட்டுப்பாடு ஆகிய குணாதிசயங்களைப் பிறர் காண நேரிடும் போது, அவை நாம் நமக்குள் எப்படிப்பட்ட தரமான சிறந்த இருதயம் உடையவர்களாக இருக்கின்றோம் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. மரமானது அதனுடைய கனிகளினால் அறியப்படுகிறது. மரத்தின் தன்மையும், தரமும் அதனுடைய கனிகளின் அளவையும் தன்மையையும் வைத்து அளவிடப்படுகின்றன.

நற்குணங்கள் இல்லாத மனிதர்கள் யாரும் இருக்க முடியாது. நற்பண்புகள் முற்றிலும் இல்லாதவர் எவரும் இருக்க முடியாது. ஆனால் அவைகளின் அளவுகள்தான் தரத்தை நிர்ணயிக்கின்றன. பொறுமை, தாழ்மை, அன்பு, இரக்கம், தயவு போன்ற குணங்கள் இல்லாதவர்கள் இல்லை.ஆனால் வாழ்க்கைப் பகுதியில் நாம் சந்திக்க நேரிடும் சூழ்நிலைகளில் அவை வலிமையாகவும், அதிகமாகவும் இருக்க வேண்டியது அவசியம். பலவிதமான உணர்வுப்பூர்வ பரீட்சைகளைச் சந்திக் கும் போது, அந்த நற்குணங்கள் போதிய அளவில் இல்லாவிட்டால் நாம் தவறாகக் கணக்கிடப்படுவோம்.

சமீபத்தில் அவசரத்திற்கு ஒரு டீப்பாய் வாங்கினேன். அது நன்றாகத் தான் தோன்றியது. ஆனால் யாராவது அதன் மேல் ஏறி அமர்ந்து விட்டால் உடைந்து போகும் என்ற எச்சரிக்கைத் தகவலையும் விற்பனையாளர் தந்திருந்தார். அது போலவே நம்மிடம் பொறுமை, தாழ்மை, அன்பு, சாந்தம் எல்லாம் இருக்கலாம். ஆனாலும் அவை கடுமையான சோதனைச் சூழல்களுக்குத் தாக்குபிடிக்கப் போது மானவையா என்பதே முக்கியம். சிலுவையில் தொங்கிக் கோரப்பாடுகள் அனுபவித்த வேளையிலும், மிக இழிவான வார்த்தைகளைக் கேட்க நேரிட்ட வேளையிலும், இயேசு அமைதியான வார்த்தைகளைப் பேசினார். அது அவருடைய இருதயம் தேவ ஆவியினால் எவ்வளவாய்ப் பக்குவப்பட்டு, தரமாயிருந்தது என்பதை உறுதிப் படுத்துகிறது. சுபாவங்கள் என்பது நாம் திட்டமிட்டு யோசித்து வெளியே காண்பிப்ப தில்லை. அவை நம்முடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும். எனவே தேவ ஐக்கியத்தினால் இருதயத்தைச் சரியாக வைக்க அறிந்திருந்தால். அந்த இருதயம் தரமான நல்ல சுபாவங்களையே கொண்டு வரும்.

தவறை உணர்வது நேர்மை
அதனைச் சரி செய்ய முன் வருவது தான் விவேகம்.

சமாதானம் எப்போது?

சங்கீதம் – 16:1-11

என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு..... மத்தேயு – 11:29

மத்தேயு – 11:25-30

இயேசுவிற்குத் தூரமாக நின்று கொண்டே சுகம் பெற்றவர்கள் உண்டு. அவரை நேரில் பாராமலே சுகம் பெற்றவர்கள் உண்டு. ஒரே ஒரு முறை மட்டும் தொடப்பட்டதால் சுகமானவர்கள் உண்டு. ஆனால் அவருடைய இளைப்பாறுதலைப் பெறவோ அவரிடம் செல்ல வேண்டும் என்றார். அவருடைய நுகத்தை ஏற்க வேண்டும் என்றார். அவரிடம் கற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

சகோதரரே எனக்கு தேவன் சமாதானத்தைத் தரும்படியாக ஜெபியுங்கள், சந்தோஷத்தை அருளும்படியாகப் பிரார்த்தியுங்கள். என்னுடைய பரிசுத்தத்திற்காக ஜெபியுங்கள் என்று என்னைக் கேட்டுக்கொள்கின்றவர்கள் உண்டு. அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு நான் ஜெபிப்பதுண்டு. ஆயினும் அந்த ஜெபமோ அவர்களுக்குப் போதுமானது அல்ல. ஏனென்றால் சமாதானம், சந்தோஷம், பரிசுத்தம், நற்குணங்கள் என்பவையெல்லாம் நேரடியாக சம்மந்தப்பட்டவர் தேவனை நோக்கி ஜெபித்துப் பெற வேண்டியவை. பிறர் மூலம் அவைகள் ஜெபித்துப் பெற கூடியவைகள் அல்ல.

ஒரு குறிப்பிட்ட விதமான வாழ்க்கையைத் தெரிந்து கொள்வதின் பிரதி விளைவுகளாக ஏற்படும் ஆசீர்வாதங்களே மேற்கண்டவை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மனந்திரும்புதலின் அனுபவத்தைப் பெற்று, அவரோடு தொடர்ந்து ஐக்கியமாயிருக்கிற ஒரு ஆவிக்குரிய நிலைக்கு வருவதால், நமக்குள் ஏற்படுகின்றவைகளே சமாதானமும், சந்தோஷமும், பரிசுத்தமும் ஆகும். இவைகளை அனுதின வாழ்க்கையில் காண, அனுதின தேவ ஐக்கிய அனுபவம் தேவை.

அநேகர் மேற்கண்டவைகளை உரிமை கொண்டாடுதல் வாயிலாகவும், பிற தேவ ஊழியர்கள் ஜெபிப்பதாலும் பெற முடியும் என நினைப்பது தவறாகும். ஏனென்றால் மேற்கண்டவை யாவும் நம்முடைய மனநிலை சம்பந்தப்பட்டவை. இவைகளை தேவனிடம் நாம் நெருங்கி வந்து, அவருடைய சமுகத்தை உணர்வதினால் மட்டுமே பெற முடியும். ஆகையால்தான் இளைப்பாறுதல் காண விரும்புகின்றவர்கள் தம்மிடம் வந்து "நுகத்தை ஏற்க வேண்டும்" என்றார். அவரோடுள்ள உறவுதான் அவைகளை நமக்குள் கொண்டு வருகிறது. எனவே கர்த்தரோடு நெருங்கி வாழ்கிற ஒருவாழ்க்கை நிலையை நாம் தெரிந்து கொண்டு, அதில் தொடர்ந்து செல்லக் கரிசனையாயிருக்க வேண்டும். அங்கே நாம் இளைப்பாறுதலையும், சந்தோஷத்தையும் பரிசுத்தத்தையும் பெற்றுக் கொள்கின்றோம்.

கவலைகளை கடவுள் சுமக்க விட்டுவிடு. அவருடைய சமாதானம் உன்னைச் சுமக்கக் கட்டுப்படு.

மதிப்பு என்றால் என்ன?

நீதிமொழிகள் - 11:1-20

உத்தமனுடைய நீதி அவன் வழியைச் செம்மைப்படுத்தும் - நீதி - 11:5

மத்தேயு - 11:1-11

என்.டி. திவாரி உத்தரபிரதேசத்தைத் சேர்ந்த மிக வலிமையான அரசியல் வாதி. ஒரு காலகட்டத்தில் பிரதமர் பதவிக்கும் வாய்ப்புள்ள நபராகக் கருதப்பட்டவர். அரசியல் களத்தில் எதிர்பார்த்த பதவி கிட்டாமல் போன வேளையில் கவர்னர் பதவி பெற்றார். ஆனால் 80 வயதைத் தாண்டிச் சென்று விட்ட போதும், பெண்கள் தொடர்பான தவறான உறவுகளுக்காகக் குற்றம் சாட்டப்பட்டு பல சோதனைகளைச் சந்தித்தார். ஒரு பெண்ணோடு பழகி அவளுக்குக் குழந்தை பிறந்து, அந்தக் குழந்தை 34 வயதை எட்டும் வரை உண்மை மறைக்கப்பட்டது. சமீபத்தில் வேறு வழியின்றி அந்த மகனை என் மகன் தான் என்று ஒத்துக் கொண்டார். அப்போது அவர் சொன்ன ஒரு வார்த்தை என்னை யோசிக்க வைத்தது. "மதிப்பு மிகுந்த என் குடும்பத்தில் இந்த வாலிபனும் இணைவதில் எனக்கு மகிழ்ச்சிதான்" என்றார்.

செல்வாக்குமிக்க, பண வசதி மிக்க குடும்பம் என்றால் பரவாயில்லை. அவர் சொன்னது "மதிப்பு மிகுந்த குடும்பம்" என்பதாகும். தன்னுடைய உண்மையான மதிப்பு நிலையை அவர் அறியவில்லை. நம்முடைய குணங்களும், பண்புகளும், செயல்களும், உணர்ச்சி சார்ந்த நடத்தைகளும் மதிக்கத்தக்கவையாக இல்லாத போது பணமும், அதிகாரமும், செல்வாக்கும் மதிப்பிற்குரியவைகள் அல்ல. மனிதன் கனத்திற்குரியவனா இல்லையா என்பதை அவனுடைய வலிமையான பின்னணி அல்ல. அவனுடைய குணாதிசயங்களும், நடத்தைகளும், செயல்களும், வார்த்தைகளும்தான் நிர்ணயிக்கின்றன.

பணம் என்பது வியாபாரியாலும் சம்பாதிக்க முடிகிறது. விபசாரியாலும் சம்பாதிக்க முடிகின்றது. அதிகாரம் பதவி என்பவற்றை யோக்கியர்களாலும் பெற முடிகிறது. அயோக்கியர்களாலும் பெற முடிகிறது. ஆனால் நற்பண்புகளும் நன்னடைத்தைகளும் நல்லவர்களால் மட்டுமே பெற முடியும். நல்ல மரம்தான் நற்கனி தர முடியும். எனவே உண்மையான கனத்திற்குரியவர்கள் நல்லவர்கள் மட்டுமே. மற்றவர்கள் பின்பற்றுவதற்கு ஏற்ற நல் வாழ்க்கைமுறை இல்லாதவர்கள் மதிக்கத்தக்கவர்கள் அல்ல. ஆனால் பணபலமும் அதிகார பலமும், செல்வாக்கும் ஒருவரை மதிக்கும்படி பலரைக் கட்டாயப்படுத்தலாம். ஆனால் அந்த மதிப்பும் மரியாதையும் விரும்பத்தக்கவை அல்ல. அவை ஏதோ ஒரு விதத்தில் ஒருவருடைய பின்னணி பலத்தால் மறைமுகமாக மிரட்டப்பட்டுப் பெற்றவையே. அதை நினைத்து கௌரவமாக மகிழ ஒன்றுமில்லை.

உண்மையுள்ளவன் தன்னிலே பலவீனத்தைக் காண்கிறான்.
ஆயினும் தன் செயல்களிலே தேவ பலத்தைக் காண்பிக்கிறான்.

பிரதான நோக்கம்

ஜீவ நீரோடை

சங்கீதம் – 128:1-6

தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ.... 1 யோவான் – 2:17

1 யோவான் – 2:15-19

குறிப்பிட்ட ஒரு நபர் தன்னுடைய மூன்று பிள்ளைகளையும் நன்றாக வளர்த்து, உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதையே பிரதான லட்சியமாகக் கொண்டிருந்தார். யாராவது ஆன்மீகத்தைக் குறித்து அவரிடம் பேசினால் “என்னுடைய பிள்ளைகளை நல்ல நிலைக்கு கொண்டு வருவதுதான் எனக்கு ஆன்மீகம்” என்பார். ஒரு நாள் அவருடைய பிள்ளைகள் எல்லோரும் அவர் விரும்பியபடியே உயர்ந்த நிலைக்கு வந்தார்கள். ஆனால் அவரையோ வெறுத்து, விலக்கி அனாதையாக விட்டார்கள்.

நல்ல உத்தியோக நிலை அடைதல், பிள்ளைகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருதல், செல்வ நிலையில் பெருகுதல், பிறருக்குச் சேவை செய்தல் போன்ற பல நோக்கங்கள் நமக்கு இருக்கலாம். இவை யாவும் பாவமானவை அல்ல. ஆயினும் தேவனுக்குப் பயந்து அவருடைய வழியில் நடக்க வேண்டும் என்ற பிரதான நோக்கம் நமக்கு இல்லாமல் போனால், நம்முடைய சந்தோஷம் நிச்சயமற்றதே.

தேவனுடைய விருப்பம் செய்தல் என்ற நோக்கம் பிரதானமாயிருக்கும் போது, நம்முடைய பிற நோக்கங்கள் கூட தேவனால் ஆசீர்வதிக்கப்படுகிறது. நம்முடைய சுய நோக்கங்களே பிரதானமாகி விடும்போது, நினைத்தவை யாவும் நிறைவேறினால் கூட அவை கசப்புகளையும், மனநோவுகளையும், பல தீமைகளையும் கொண்டு வர முடியும்.

சாலொமோன் நினைத்தவைகள் யாவற்றையும் நிறைவேற்றினான். ஆயினும் அவன் தேவசித்தம் செய்தலைப் பிரதானமாகக் கொள்ளாததால், ஒழுங்கற்ற வாழ்க்கைக்குக் காரணமாகி, விரக்தியையே விளைவாகப் பெற்றான். சுயநலத்தையே வாழ்க்கையின் மிகப்பெரிய குறிக்கோளாக எண்ணிச் செயல்பட்ட அவனுடைய செயல்களால் அவன் கசப்பான விளைவுகளைக் காண நேரிட்டது. தேவ சித்தத்தை மையமாகக் கொண்டு செயல்படாத அவனுடைய வாழ்க்கையால், ஒரு வலிமையான சாம்ராஜ்யமே இரண்டாகப் பிளவுபடும் நிலை ஏற்பட்டது.

தேவசித்தம் செய்தலின் பாதைதான் நம்மை ஆசீர்வாதத்திற்கு நேராக வழி நடத்துகிறது. தேவனுடைய வார்த்தைகளின்படி வாழ்வதற்கு உறுதி பூண்ட மனிதன் மேல், தேவனுடைய கரிசனையான பார்வை எப்போதும் இருக்கும். யோசேப்பு, தாவீது போன்றோர் தங்கள் வாழ்க்கையின் மேல் தேவன் கொண்டிருந்த நோக்கங்களைப் புரிந்துகொண்டு, அதற்கேற்றபடி செயல்பட்ட போது, தேவன் அவர்களை உயர்த்தினார். சுயசித்தம் சார்ந்த வாழ்க்கை சுயபலத்தையே சார்ந்திருக்கும். தேவசித்தம் சார்ந்த செயல்பாடு, தேவ பலத்தையும், கிருபையையும் நம் வாழ்வில் வந்து சேரச் செய்கிறது.

தேவனுக்குரியவைகளைத் தேடிக்கொண்டிருப்பதில் நீ கவனமாயிரு.
தேவையானவைகள் உன்னைத் தேடிவரும் நீ நம்பிக்கையோடிரு.

சத்திய பசி

உபாகமம் – 8:1-11

புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல – 1 பேதுரு – 2:3

1 பேதுரு – 2:1-12

பசி வந்துவிட்டால் உணவு இருக்கும் இடம் தேடி சிறு பிள்ளைகள் வேகமாக ஓடிச் செல்வார்கள். பெரியவர்கள் நடந்து செல்வார்கள். வயது முதிர்ந்தவர்கள் ஒரு கோலை பிடித்துக் கொண்டு தள்ளாடி தள்ளாடிச் செல்வார்கள். சற்றும் நடக்க இயலாதவர்கள் வேறு உதவி இல்லையென்றால் மெல்லத் தவழ்ந்து தவழ்ந்தாவது செல்வார்கள். உணவு மிகவும் முக்கியமானதால் உடலில் இருக்கும் பலவீனங்களைக் கணக்கிடாமல் எப்படியாவது ஒரு வழியில் அதனை அடைய முயற்சிக்கிறோம்.

வாழ்க்கையில் ஒரு விஷயம் நமக்கு எவ்வளவு முக்கியமானது என்பதே முக்கியம். அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்துவிட்டால் அதனை அடைவதற்குத் தடையாக எவை எவை வருகின்றது என்பதையல்ல. அதனை அடைவதற்கு ஏதாவது ஒரு வழியில்லையா என்றுதான் மனம் யோசிக்கும்.

நம்முடைய வாழ்க்கையில் சில விஷயங்கள் அவ்வளவு முக்கியமாக இருக்கவில்லை என்பதை எப்பொழுது அறியலாம். அதனை அடைவதற்கு நமக்கு ஏற்படும் தடங்கல்களைக் காரணமாக்கி, அவற்றைத் தவிர்க்கின்றோம் அல்லவா, அப்போது அதனை அறியலாம். அநேகர் சத்தியத்தை விரும்பாமலில்லை. நல்ல போதனைகள் விஷயத்தில் நாட்டம் இல்லாமல் இல்லை. ஆவிக்குரிய நல்ல வழிகாட்டுதல்களும், அறிவுரைகளும் அவசியம் என்று எண்ணாமலில்லை.

ஆனால் அவை மிக சௌகரியமான, வசதியான எல்லைக்குள் கிடைக்க வாய்ப்பில்லாவிட்டால் சும்மா இருந்துவிடுகின்றார்கள். சற்று சிரமம் எடுத்தால்தான் அதனைப் பெற முடியும். சற்று தூரம் பயணம் சென்றால்தான் அவற்றைக் கேட்க முடியும். வேறு சில வேலைகளை வேறு வழியில் ஒழுங்குபடுத்தினால்தான் போக முடியும்.

ஆனால் ஆசையிருந்தும் சிரமம் எடுக்க முன்வருவதில்லை. தடையாய் உள்ள காரணங்களைக் கணக்கிட்டு அவற்றை அடையாமல் போக நேர்ந்ததை நியாயப்படுத்திக் கொள்வார்கள். இதனுடைய அடிப்படைக் காரணம் என்ன? சிரமம் எடுக்க விரும்பாத அசதி மட்டுமல்ல. சத்தியமும் நல்ல போதனையும் அவர்களுக்குப் பசிதீர்க்கும் உணவு போல மிக மிக அவசியமாயிருக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் உண்மையான ஆவிக்குரிய பிறப்பைப் பெற்றிருக்கவில்லை. எனவே சத்தியத்தை மிகமிக அவசியமாக எண்ணி, அதனைச் சிரமப்பட்டாகிலும் அடைய விரும்புகின்ற ஆவிக்குரிய சத்திய பசி இல்லை. முதலாவது சத்திய பசி ஏற்படப் பிரார்த்திக்க வேண்டும்.

உண்மையாக வாழ்கின்றவர்களை விட வாயினால் பேசுகின்றவர்களுக்கே கவர்ச்சி அதிகம், மயங்கிவிடாதே.

பலப்படுத்தும் துன்பங்கள்

1 சாமுவேல் - 30:1-6

தாவீது தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்.... 1 சாமுவேல் - 30:6

11 கொரி - 1:1-10

ஒரு குறிப்பிட்ட விசுவாசக் குடும்பத்தார் தொடர்ந்து சில சோதனையும், வேதனையுமான நிகழ்வுகளைச் சந்திக்க நேர்ந்ததைக் கவனித்த தேவ ஊழியர் ஒருவர், தொடர்ந்த சோதனைகள் அவர்களை, விசுவாசத்தை விட்டு விலகச் செய்துவிடுமோ என அச்சப்பட்டார். ஒரு நாள் அவர்களை அவர் சந்தித்தபோது, "ஐயா இந்தக் கஷ்டங்கள் யாவும் கிறிஸ்துவிடம் அதிகமாக எங்களை நெருங்கச் செய்திருக்கிறதேயன்றி, விலகிப்போகச் செய்யவில்லை" என்று அவர்கள் சாட்சி கூறக் கேட்டதும், அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார்.

சில மரங்கள் காற்றினால் அதிகமாக அசைக்கப்பட, அசைக்கப்பட, அந்த மரங்களின் வேர்கள் அதிக வலிமையோடு பூமிக்குள் ஆழமாக ஊடுருவிச் செல்லு மாம். பேரசைவுகள் அந்த மரங்களைப் பலவீனப்படுத்தாமல், மேலும் மேலும் பலப்படுத்துகின்றது என்பதே உண்மை.

கர்த்தருக்குப் பயந்து அவருடைய பாதையில் உத்தமமாக நடக்கின்றவர்களின் நிலைமையும் அதுவே. துன்பங்களையும், பாடுகளையும் மீண்டும், மீண்டும் அனுபவிக்க நேரிடும் போது, அவர்களின் அஸ்திபாரம் அதிக வலிமையாகின்றதே யன்றி, வலிமை குன்றிப்போகவில்லை. ஒவ்வொரு போராட்டமும், ஒவ்வொரு துன்பமும் அவர்களின் வேர் கிறிஸ்துவுக்குள் ஆழமாக ஊடுருவி, பலப்பட வழிவகுக்கின்றதேயன்றி, பலவீனப்படுத்துவதற்கல்ல.

தாவீது துன்பங்களைத் தொடர்ந்து சந்திக்க நேர்ந்தவன். அவைகள் அவனைப் பலவீனப்படுத்தி விடுகிறதைப் போல வேகமாக வந்த போதிலும், ஒவ்வொரு துன்பமும் தேவனோடு அவனை அதிகமாகப் பிணைக்கவும், இணைக்கவுமே செய்தது. ஒரு கால கட்டத்தில் அவனுக்குத் துணையாக நின்ற அனைவரும் அவனை விட்டு விலகிப் போகும் சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது தாவீது ஆடிப்போய் விழுந்திருக்க வேண்டும். ஆனால் நடந்ததோ வித்தியாசமாயிருந்தது.

அந்தத் துயரச் சூழ்நிலை தாவீதை இன்னும் ஒருபடி ஆழமாக கர்த்தருக்குள் தன்னைத் திடப்படச் செய்தது. அவன் "கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்". (1 சாமுவேல் - 30:6) என்று வேதம் சொல்கிறது. ஆம். உண்மை யான கர்த்தருடைய பிள்ளைகள் சந்திக்க நேரிடுகின்ற தொடர் துன்பங்கள் பிறருடைய பார்வையில் அவர்களைப் பலவீனப்படுத்தி விடுகிறவை போலத் தோன்றினாலும், தேவனுடைய பார்வையில் அவை அவர்களுக்கு மேலும் வலிமை சேர்க்கின்றவையே. ஏனென்றால் ஒவ்வொரு துன்பமும், நெருக்கமும் தேவனை விசுவாசிக்கின்றவர்களை கர்த்தருக்குள் மேலும் மேலும் உறுதிப்படவும், அவரோடுள்ள தொடர்பு நிலைகளில் பலப்படவுமே வழிவகுக்கும்.

ஒருவன் எத்தனை முறை விழுந்தான் என்பதை அல்ல
அவன் எத்தனை முறை எழுந்தான் என்பதைப் பார்.

நான் நம்பவில்லை

நீதிமொழிகள் - 17:1-15 | நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய நீதி – 17:15 | 1 கொரிந்தியர் - 13:1-13

சில கணவன் மனைவியருக்கிடையில் நம்பிக்கைக் காற்று வீசுவதில்லை. ஒருவரையொருவர் நம்புவதற்கான அடையாளங்களை ஒருவருக்கொருவர் வார்த்தைகளிலோ செயல்களிலோ பார்க்க முடிவதில்லை. மனைவியின் பார்வை, வார்த்தை, செயல்படும் விதம் யாவுமே கணவனை நான் நம்பவில்லை என்பதையே சொல்லிக் கொண்டிருக்கும். அவ்விதமாகவே சில பெற்றோர்கள் தங்களின் அனைத்து நடவடிக்கைகளின் மூலமாகவும் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் ஒரே செய்தி "உன்னை நான் நம்பவில்லை, உன்னை நான் சந்தேகிக்கின்றேன்" என்பதே.

கண்ணைமூடிக்கொண்டு எதையும் நம்பக் கூடாது. அதே வேளையில் நம்பிக்கையின்மையையே வாழ்க்கைமுறை ஆக்கிவிடக் கூடாது. சிலர் நாம் மற்றவர்களை நம்பிவிட்டதாக காட்டிக் கொண்டால் நம்மை ஏமாற்றிவிடுவார்கள் என சிந்திக்கின்றனர். உன்னை நான் நம்பவில்லை, நம்பவில்லை என்பது போலக் காட்டிக் கொண்டால் மற்றவர் ஜாக்கிரதையாயிருப்பார் என்று நினைக்கின்றனர்.

நம்முடைய நம்பிக்கையின்மை நம்மைச் சந்தேக வியாதியினால் மிகுதியாய் பலமிழக்க வைக்கும். அதுவே நம்மால் சந்தேகிக்கப்படுகின்றவர்கள் தங்களின் நம்பகத் தன்மையை இழக்கவும் வழிவகுக்கும். நம்மால் நம்பப்படாதவர்கள் நம்மிடம் அவர்களுக்கு என்றுமே நற்பெயர் கிட்டாது என்ற விரக்தியினால் தவறிப் போக வாய்ப்புண்டு. மற்றவர்களைச் சந்தேகிக்கும் உணர்வோடேயே வாழ்கின்றவர்களால் மற்றவர்கள் தங்களின் நல்ல உறுதிப்பாட்டில் தளருவார்கள். உன்னை நான் நம்புகின்றேன். உன்னை நான் நம்புகின்றேன் என்ற விதமாக நம்முடைய அணுகுமுறை இருந்தால், வழிவிலகத் தூண்டப்படுகின்றவர்கள் கூட தங்களை நம்பகத் தன்மையுடைவர்களாக நிறுத்திக் கொள்ள அதிகக் கவனமாயிருப்பார்கள்.

நம்பாதவர்களுக்கு முன்னால் நல்லவர்களாக வாழ்ந்து காட்டும் வைராக்கியம் தளரும். நம்புகின்றவர்களுக்கு முன்னால் தீயவர்கள் கூட அந்த நல்ல பேருக்காகத் தங்களைச் சரியாக நிறுத்திக் காட்டத் தூண்டப்படுவார்கள்.

அடிமையான யோசேப்பை போத்திபார் அதிகமாக நம்பினான். அதனை உணர்ந்து செயல்பட்ட யோசேப்பு அந்த நம்பிக்கைக்குச் சேதம் வராமல் வாழ்ந்திட மிகவும் கரிசனையாயிருந்தான். எனவே எளிதாக வெல்ல முடியாத ஒரு பயங்கரமான பாலியல் சோதனையை, இளைஞனாகிய அவன் எளிதாக மேற்கொண்டான். ஏனென்றால் தன்னை நம்பினவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யக் கூடாது என்ற உணர்வு மேலோங்கியிருந்தது. சந்தேகக் கண்கள் சந்தோஷத்தின் எதிரிகள். நம்பிக்கையான நாவு மகிழ்ச்சியின் நண்பன்.

உண்மையில் நிலைத்திருப்பதைத் தவிர பொய்யைப் பொய்யாக்குவதற்காகன சிறந்த வழி இல்லை.

ஜீவ நீரோடை

துவக்கமும் முடிவும்

1 நாளா – 10:1-14

முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். – மத்–10:22

1 கொரி–10:1-12

சாமுவேல் என்ற மிகப்பெரிய தேவனுடைய தீர்க்கதரிசியின் தீர்க்க தரிசனத்தைக் கேட்டு ராஜாவாக தன்னுடைய வெற்றியின் வாழ்க்கையை ஆரம்பித்தவன் சவுல். அதே சவுல் இறுதியாக தேவனுடைய பார்வையில் மிகப் பெரிய பாவியாகச் சித்தரிக்கப்படும் குறி சொல்லுதலை தொழிலாகக் கொண்ட ஒரு பெண்ணிடம், குறிகேட்கச் சென்று தன் வாழ்க்கை அத்தியாயத்தை முடித்தான்.

துவக்கங்கள் எவ்வளவு மகிமையாக இருக்கின்றது என்பதைவிட, தொடர்ச்சிகளும், முடிவுகளும் எப்படி அமைகின்றன என்பதே முக்கியம். திருமண வாழ்க்கை பொதுவாக எல்லோருக்கும் குதூகலமாக, கொண்டாட்டமாக, கோலாகல மாகவே ஆரம்பிக்கின்றன. ஆனால் அந்தக் குதூகலத்தைத் தொடர்ந்து கொண்டு செல்வோர் வெகு சிலரே. ஒரு நிறைவான திருமண வாழ்க்கையை வாழ்ந்து முடித்த திருப்தியைப் பெறுவோர் வெகு சிலரே.

ஆவிக்குரிய வாழ்க்கையிலும் நாம் நன்றாகவே ஆரம்பித்தாலும். எப்படித் தொடர்ந்து அந்த அனுபவத்தைக் கொண்டு செல்கிறோம் என்பதே முக்கியம். தேவனோடு நாம் ஒரு புதிய வாழ்க்கை அத்தியாயத்தைத் துவங்கின உடனேயே எல்லாம் நிறைவேறிவிட்டதாக எண்ணி விடக்கூடாது. தேவனோடு தொடர்ந்து நாம் நடக்கப்போகிறோம். அவரோடு இணைந்து செயல்படப்போகிறோம். அவருடைய நோக்கங்களை உணர்ந்து செயல்படுகிறோம். அங்கேதான் மிகுந்த ஜாக்கிரதையும், கரிசனையும் தேவைப்படுகிறது.

நம் உணர்வுகளையும், தேவனுடைய உணர்வுகளையும் ஒரே நேரத்தில் நாம் திருப்திப்படுத்த முடியாது. நம் வழியிலும் தேவனுடைய வழியிலும் ஒரே நேரத்தில் நாம் நடக்க முடியாது. சவுல் தேவன் கொடுத்த கடமையை நிறைவேற்றப் புறப்பட்டான். ஆனால் தன்னுடைய சுய உணர்விற்கு நலமாகத் தோன்றியதையும் செய்ய முற்பட்டான். இதன் விளைவாக சவுலோடு தேவன் ஐக்கியமாயிருக்க முடியவில்லை. வெற்றி முழக்கத்தோடு ஆரம்பித்த அவன் தோல்வியின் சாயலோடு முடித்தான்.

தேவனோடு சிறப்பாக ஆரம்பித்த அநேகரை ஜனங்கள் பார்க்கின்றார்கள். ஆனால் தேவனோடு முடித்தவர்களாக ஒரு சிலரைத்தான் சமுதாயம் பார்க்கின்றது. இரட்சிப்பு என்பது வெற்றியாய்த் துவங்கியவர்களுக்காக அல்ல. வெற்றியாக முடிக்கிறவர்களே அதை அடைவார்கள். தாழ்மையோடும், கீழ்ப்படிவோடும் தேவனோடு நடக்கப் பழகிவிட்டவர்கள் வெற்றியோடு யாத்திரையை முடித்து தேவனோடு அரசாளுவார்கள்.

போர்க்களத்தை விரும்பாதவன் வீரன் அல்ல. மனிதர்கள் நடுவில் வாழ்ந்து காட்டாதவன் கிறிஸ்தவன் அல்ல.

மறைக்கப்பட்ட கோபம்

நீதிமொழிகள் 17:1-16

நீங்கள் கோபங்கொண்டாலும்...
எபேசியர் 4:26

எபேசியர் 4:17-32

சிலர் இன்னொருவர் மேலுள்ள கோபத்தைத் தங்களுடைய சூடான வார்த்தைகளினால் உடனேயே வெளிப்படுத்தி விடுவார்கள். எனவே அவர்களுக்குக் கோபக்காரர்கள், சிடுமூஞ்சிகள் என்ற பட்டங்கள் எளிதாகக் கிடைத்துவிடும். ஆனால் சிலர் எதையும் தாங்கும் இதயமுடையவர்களாய்த் தங்களின் கோபத்தையும், எரிச்சலையும் வெளிக்காட்டாமல், தங்களுக்குள் அடக்கிக் கொள்வார்கள். இவர்களுக்கு சாந்த சொரூபிகள் என்ற பட்டமும், பொறுமையாளர்கள் என்ற பட்டமும் எளிதாகக் கிடைத்துவிடும்.

ஆனால் இந்த சாந்த சொரூபிகளில் பலரும், பொறுமையாளர்களில் பலரும், சிடுமூஞ்சிகளை விட மிகவும் பயங்கரமானவர்களாக இருப்பார்கள். ஏனென்றால் சிடுமூஞ்சிகள் தங்களுக்குள் ஏற்பட்ட எரிச்சலை உடனேயே வார்த்தைகளினால் வெளிப்படுத்தி விட்டு உடனேயே தணிந்து போய்விடுவார்கள். அதற்குப் பிறகு அவர்களின் கோபத்தினால் வேறெந்த அஞ்சத்தக்க பின்விளைவுகளும் இராது. ஆனால் கோபத்தை அடக்கிக் கொண்டவர்களோ அதை மெல்ல மெல்ல தொடர்ந்து செயல்பூர்வமாக வெளிப்படுத்துவார்கள். அவர்களின் கோபம் ஆரவாரமாக அதிக சத்தத்துடன் வெளிப்படவில்லை. ஆனால் அமைதியாக உள்ளே செயல்பட்டு மௌவுனமாகப் பலபயங்கர பிரதிவிளைவுகளை ஏற்படுத்தும். இதுதான் மறைக்கப்பட்ட கோபங்கள்.

கணவர்களால் கோபமூட்டப்பட்ட சில மனைவிகள் அதற்காக எந்தக் கோப வார்த்தையையும் பதிலாகப் பேசுவதில்லை. ஆனால் அடுத்த சில நாட்களுக்கு வழக்கமான செயல்பாடுகள் இராது. சாப்பாடு விசேஷமாயிராது. கணவனுக்காகச் செய்ய வேண்டிய சில கடமைகள் நடைபெறாது. உரையாடல்களில் தகுந்த உற்சாகம் வெளிப்படாது. வெளியே போய் வர விருப்பம் இராது. ஆம். கோபமானது மறைக்கப்பட்டு அது வித்தியாசமான வடிவங்களில் மௌவுனமாகப் பிரதிபலிக்கிறது. அவ்விதமே மனைவிகளால் கோப மூட்டப்படும் கணவர்கள் பலர் எதையும் தாங்கிக் கொள்வார்கள். ஆனால் வழக்கமான செயல்பாடுகளிலும், உரையாடல்களிலும், பல மாற்றங்களைக் காண்பிப்பார்கள். சட்டப்பூர்வமாக அவர்களின் கோபம் நிரூபிக்கப்படாவிட்டாலும், அது அங்கே இருப்பது உண்மை.

கோபத்தை அடக்குவது மிக அவசியமான ஆவிக்குரிய பண்பு. அதே வேளையில் அது மறைக்கப்படுவதாக இருக்கக்கூடாது. கோபத்தை வெளிப்படுத்தும் வடிவங்கள் மாறலாம். ஆனால் அவை மறைக்கப்பட்ட கோபத்தின் விளைவுகள் என்பதை தேவன் அறிவார். எனவே கோபத்தால் எரிந்து விழாதிருக்கும்படி பக்குவம் பெறுவதோடு, அதனை வேறெந்த மறைமுக வழிகளிலும் வெளிப்படுத்த விரும்பாத மனநிலையையும் தேவனிடமிருந்து பெறப் பிரயாசப்பட வேண்டும்.

மனிதர்கள் முன்பாக உன் தாழ்மை வெளிப்படாவிட்டால்
இறைவனின் முன்பாக உன் தாழ்மைக்கு எந்த விலையுமில்லை.

உண்மையினால் உயர்வு

ஆதியாகமம் - 39:1-10

மரணபரியந்தம் உண்மையாயிரு...
வெளி 2:10

வெளி-2:1-10

உண்மையை நிரூபிப்பதற்குத் தனக்குக் கிடைத்த எந்த ஒரு வாய்ப்பையும், வீணடிக்காத ஒரு இளைஞனாக யோசேப்பு விளங்கினான். அவன் தன்னுடைய உண்மைக்கு உடனடியாய் பலன்களைப் பெறாவிட்டாலும் உண்மை என்பது தன்னுடைய இரத்தத்தோடு கலந்த ஒன்று என்பது போல், சோர்ந்து போகாமல் செயல் பட்டான். எனவே தனக்கு எதிர்மாறாக எல்லாம் இயங்கிக் கொண்டிருந்தபோதும், தன்னுடைய உண்மையாலும், உத்தமத்தாலும் ஒரு சிலருடைய கவனத்தை அவன் தன் பக்கமாகத் திருப்பவே செய்தான்.

அடிமையாக வந்தவனை போத்திபார் தன் வீட்டின் அதிகாரியாக மாற்றினான். குற்றவாளியாகக் கருதப்பட்டு அவன் சிறையில் தள்ளப்பட்ட போதும், அங்கேயும் மற்றவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு அவனைத் தேடி வந்தது. ஆம். உண்மை உடையவனை நோக்கி ஒரு நாள் உயர்வுகள் வராமல் போவதில்லை. ஒரு வேளை சிலரால் உண்மையும், உத்தமமும் உதாசீனப்படுத்தப்படலாம். ஆனாலும் உண்மையின் வெளிச்சத்தைத் தேடிவந்து கௌரவிக்க ஒரு கூட்டம் நிச்சயம் இருக்கவே செய்யும்.

பல நேரங்களில் உண்மைக்கும் உத்தமத்திற்கும் உரிய பலன் வராமல் போவதோடு, ஒரு சில சிரமங்களையும் கொண்டுவந்து விடுவதால், அநேகர் உண்மையை இடையிலேயே விட்டுவிடுகின்றனர். சிலர் தங்களுக்கு உடனடி நன்மை வராவிட்டாலோ அல்லது உண்மையின் நிமித்தம் சிரமம் ஏற்பட்டாலோ உண்மையை விட்டு பின்வாங்கி விடுகின்றனர். ஏனென்றால், அவர்கள் தங்களுக்குப் பலன் தராத எதிலும் நிலைத்திருக்கும் கொள்கை இல்லாதவர்கள். ஆனால் உண்மை என்பதை பலன்களை எதிர்பார்த்து அல்ல. அதுவே மனிதன் என்ற நிலையிலிருந்து தேவனுடைய பிள்ளை என்ற நிலைக்குக் கொண்டு செல்லத் தேவையான தகுதி. அதன்மேல் நமக்கு ஒரு விருப்பமும், தாகமும் இருக்க வேண்டும்.

உண்மைகள் சோதிக்கப்பட்டே பலன் தரும். நாம் உண்மையின் மேல் எந்த அளவு பற்றுதலாயிருக்கின்றோம் என்பதைச் சோதித்தறிந்தே தேவன் பலன் தருவார். உண்மை உலகத்திற்கேற்ற பலன் தராமல் போனால் கூட, உண்மையைப் போல மனிதனைத் திருப்திபடுத்துவது எதுவும் கிடையாது. யோசேப்பு மனஞ்சோர்ந்து போகாமல், இறுதிவரை உண்மையை விடாமல் பற்றிக் கொண்டிருந்தான். ஏனென்றால் உண்மைக்காக உலகம் தனக்கு எதைத் தருகிறது. அல்லது தரவில்லை என்று அவன் கணக்குப் போடாமல், தேவனுக்கு அதுதான் பிரியம் என்ற காரணத்திற்காக, அந்த விஷயத்தில் அவன் பின்வாங்காதிருந்தான். அவன் குப்பையைப் போல சாதாரணமாக வீசியெறியப்பட்ட போதிலும், தாங்கள் வீசி எறிந்தது குப்பையை அல்ல, கோமேதகத்தை என்பதை அவர்கள் உணரத்தக்க விதமாக அவன் நடந்துகொண்டான்.

தவறைச் சுட்டிக்காட்டுகின்றவனுக்கு நீ விரோதியாகலாம். ஆனாலும் அவனே நல்ல நண்பன் என்பதை அறியும் நாள் வரும்.

குறை இருந்தால்

1 சாமுவேல் 12:1-13

கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும் – 1 தீமோத்தேயு 3:2

1 தீமோத்தேயு - 3:1-13

ஆசிரியர் ஒருவர் தொடர்ந்து மூன்று நாட்கள் ஒரே விதமான ஆடையை அணிந்து வந்தார். அதனைக் கவனித்த மாணவன் ஒருவன் "சார் இந்த டிரஸ் உங்களுக்கு மிகவும் பிடித்ததா அல்லது வேறு மாற்று உடை இல்லையா? ஒரே டிரஸ்ஸை மூன்று நாட்கள் தொடர்ந்து அணிந்து வருகின்றீர்களே" என்று கேட்டான். அதைக் கேட்டதும் ஆசிரியருக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. "போய் உட்காருடா மடையா" என்று திட்டினார்.

ஆனாலும் தன்னுடைய உடை நடைகள் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது என்ற விழிப்புணர்வை அதன்மூலம் பெற்றுக் கொண்டார். அந்த மாணவன் கிண்டலாகக் கேட்ட போதிலும், அது தன்னுடைய தவறான பழக்கத்தை மாற்றிக் கொள்வதற்கு உதவியாயிருந்ததைக் கண்டார்.

சில வேளைகளில் நம்மிடம் காண நேர்ந்த ஒரு குறையை அல்லது சரியற்ற பழக்கத்தை, மற்றவர்கள் நம்மைக் குறைகூறக் கிடைத்த வாய்ப்பாக எடுத்துக் கொண்டிருக்கலாம். சும்மா இருந்த வாய்க்கு அவல் கிடைத்ததுபோல, நம்மை மோசமாகப் பார்க்க வைப்பதற்கு அவர்களுக்கு அது உதவியிருக்கலாம்.

ஆனால் நம்முடைய குறைகளையும், தவறுகளையும், சரியற்ற செயல் பாடுகளையும் அன்பின் விளைவாகக் கண்டு கொள்ளாமல் போன நண்பர்களைவிட, இவர்களால் நமக்கு நல்லது நடந்திருக்கிறது. நாம் உணராமலிருந்த குறையை உணர்ந்து நம்மைத் திருத்திக் கொள்ளவும், சரி செய்யவும் அவர்கள் நல்ல வாய்ப்பைத் தந்துள்ளனர்.

என்னுடைய பிரசங்கங்களிலும், புத்தகங்களிலும் எப்படியாவது சில குறைவுகளைக் கண்டுபிடித்து அதைப் பெரிதாகக் காண்பிப்பதற்குச் சிரமப்படுகிற சிலர் உண்டு. எனவே அவர்கள் அவற்றை மிக மிக உன்னிப்பாகக் கவனித்து எப்படியாகிலும் சில பிழைகளைக் கண்டுபிடிப்பதுண்டு. ஆனால் அவர்களின் நோக்கம் எதுவோ எனக்கு அதினால் நல்லது நடந்துள்ளது. நல்லவர்களும், நலம் விரும்பிகளும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் போன சிலவற்றை, அவர்கள் திறனாய்வு செய்து சுட்டிக்காட்டியதால், நான் சில விஷயங்களில் உள்ள குறைவுகளை உணர்ந்து கொள்ள முடிந்திருக்கிறது.

ஆம். மற்றவர்களின் நோக்கங்களில் உள்ள குறைகளை அல்ல. நம்முடைய செயல்களில், சுபாவங்களில், நடத்தைகளில், கருத்துகளில், போதனைகளில் உள்ள குறைகளை நாம் அறிவதற்கு வாய்ப்புக் கிட்டும்போது, அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறை கூறினவர்கள் நோக்கங்களில் குறை இருக்கலாம். ஆனால் குறைகளை உணர்ந்து கொள்ளும் உனது பண்புகளில் குறை இருக்கக்கூடாது.

ஜீவ நீரோடை

அவிசுவாசம்

நியாயாதிபதிகள்-6:11-21

மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது... நியா. 6:15

மாற்கு-5:22-43

தேவன் "முடியும்" என்று சொல்வதை நாம் "முடியாது" என்று சொல்வது தான் அவிசுவாசம். நாம் ஏன் முடியாது என்று சொல்கின்றோம்? நாம் நம்மையும், நம்முடைய சூழ்நிலைகளையும் கணக்கிட்டுப் பார்த்து, அதன் அடிப்படையில் முடியுமா, முடியாதா என்று தீர்மானிக்கின்றோம். இது தேவனுக்குப் பிரியமில்லாத ஒரு அணுகுமுறை.

கிதியோனிடம் மீதியானியர் மேல் படையெடுக்கத் தேவன் சொன்னபோது, அவன் முதலாவது அவனுடைய பலவீன நிலைகளையே கணக்கிட்டுக் கொண்டிருந்தான். தன்னுடைய குடும்பம் சமுதாயத்தில் எளிமையானது என்றும், தான் குடும்பத்தில் மிகவும் சிறியவன் என்றும் அவன் புலம்ப ஆரம்பித்தான்.

ஆனால் தேவன் "முடியும்" என்று சொன்ன அந்தப் பெரிய காரியத் திற்கு கிதியோனின் குடும்ப பலம் எவ்வளவு என்பதோ, கிதியோன் பெரியவனா, சின்னவனா என்பதெல்லாம் முக்கியமாயிருக்கவில்லை. அது தேவ வல்லமையை அடிப்படையாகக் கொண்டு நிறைவேறப்போகின்ற செயல், அவன் தேவபலத்தை விசுவாசித்து, சார்ந்து செயல்படுவதே தேவையாயிருந்தது.

சில நேரங்களில் நம்முடைய பலத்தின் எல்லைகளைக் கடந்து, கர்த்தர் மேல் விசுவாசம் வைத்துப் பெரிய காரியங்களைக் குறித்துத் தரிசனம் கொள்ளத் தயங்குகிறோம். நம்முடைய பலத்தின் அளவுகளைக் கவனியாமல், தேவ பலத்தினைக் கவனித்து விசுவாசத்தோடு நிற்க அஞ்சுகிறோம். தேவனோடு போதிய அளவு உறவும், ஐக்கியமும், பழக்கமும் இல்லாமையே இவ்வித அவிசுவாச உணர்வுகளுக்குக் காரணம்.

ஒரு சிறந்த ஆவிக்குரிய புத்தகத்தைப் படித்த ஒரு சகோதரர். இந்தப் புத்தகத்தில் எழுதியுள்ள அளவிற்கு ஒரு உயர்ந்த குணாதிசய வாழ்க்கையை, என்னால் வாழ முடியும் என்று என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை" என்றார். ஆம். அவர் தன்னுடைய சுய பலத்தின் எல்லையைக் கடந்து எதையாவது உயரமாகச் சிந் திக்க இயலவில்லை. ஆனால் அது தேவ பலத்தைச் சார்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு விஷயம். போதிய உறவும், ஐக்கியமும், பழக்கமும் தேவனோடு இல்லாத காரணத்தி னால், வெற்றியாகச் சிந்திக்க இயலவில்லை.

கானான் தேசத்தை வேவு பார்க்கச் சென்ற, இஸ்ரவேலர்கள் அங்கு கண்ட காட்சிகள் யாவும், கானானியரை மேற்கொள்ள முடியாது என்ற எண்ணத்தை உருவாக்கத்தக்கவையே. ஆயினும் தேவன் அதைச் சாத்தியப்படுத்துவார் என்று சிந்தித்துச் செயல்பட்டிருக்க வேண்டும். தங்களின் பலத்தைக் கணக்கிட்டே காரியங்களைத் தீர்மானித்த அவர்களால் அது முடியாமல் போய்விட்டது.

விசுவாசம் என்பது உன்னால் எவ்வளவு நம்பமுடிகிறது என்பது அல்ல. எவ்வளவு தேவனைச் சார்ந்திருக்க முடிகிறது என்பதே அது.

ஜீவ நீரோடை

நாளைக்கு அல்ல இன்று

பிரசங்கி-3:1-12

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு – பிரசங்கி 3:1

மத்தேயு-6:25-34

நாளைய தினம் இதனைச் செய்யலாம் என்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் இன்றைக்கு ஏன் அதனைச் செய்யக்கூடாது என்பதற்குப் போதுமான காரணங்கள் இல்லையா என்று பாருங்கள்.

★ இன்றே செய்ய நல்ல வாய்ப்புகள் இருந்தும் நாளை என்று தள்ளிப் போடும் போது, அதனைச் செய்வதற்கான வாய்ப்புகளின் அளவுகள் குறைகின்றன.

★ செய்யப்படாமல் போன பல செயல்கள் செய்யப்பட இயலாமல் போனவைகள் அல்ல, செய்வதற்கு வாய்ப்பிருந்த நேரங்களை இழந்ததே காரணம்.

★ நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று இன்று சும்மா இருந்தால், நாளைக்கும் இதே மனநிலை இப்படித்தான் வேலை செய்யும்.

★ நாளைக்குச் செய்யலாம் என்று இன்று தள்ளிப் போட்ட செயலை நாளைக்கும் செய்ய முடியாமல் வேறொரு செயல் மிக அவசரத் தேவையாக வந்து நிற்கும்.

★ இனியும் தாமதிக்க முடியாது என்றதோர் அவசர நிலை வரும்வரை ஒரு செயலைச் செய்யாமல் தாமதிப்பது அதனை மிக நன்றாகச் செய்கின்ற வாய்ப்பை அசட்டை செய்வதாகும்.

★ நாளைக்குச் செய்யலாம் என்று தள்ளிப் போட விரும்பும் செயலை, இன்று சிரமப்பட்டாகிலும் செய்தால், நாளைக்கு இன்னொரு நல்ல செயலைச் சிரமப்படாமல் செய்வதற்கான வாய்ப்பை தரும்.

★ நாளைய தின சூழ்நிலைகள் இன்று போலிருக்கும் என்ற நிச்சயம் இல்லை. எனவே இன்று செய்ய தாமதிக்கும் செயலை நாளைக்குச் செய்ய விரும்பினாலும் கூடாமல் போகலாம்.

★ நாளைய தினம் நமக்கு நிச்சயமானதல்ல. எனவே ஒரு செயலைச் செய்ய இன்றே கடைசி தினமாக இருக்கலாம்.

★ இன்று மிக அவசியமாக உணர முடிந்ததை நாளைக்கு அவ்வளவு அவசியமற்றதாக மனம் எண்ணக் கூடும். ஆனால் மனம் அவ்விதம் உணர்ந்தது சோம்பேறித்தனத்தின் விளைவாகவும் இருக்கும்.

★ இன்று நாம் செய்யத் தாமதித்ததை நாளைக்கு நாம் செய்யும் முன்பு இன்னொருவர் அதனைச் செய்துவிடலாம். நல்ல ஒன்றைச் செய்யக் கிடைத்த வாய்ப்பை இழப்பது நல்லதல்ல.

★ சில நேரங்களில் நாம் செய்ய வேண்டிய ஒன்று இன்றே நாம் செய்வதற்காக தேவன் தந்ததாக இருக்கும். இன்று செய்ய மறுத்ததை நாளை செய்ய விரும்பினாலும் அவர் நாளைக்கு அனுமதி மறுப்பார்.

செய்த தவறுக்காக இன்று வருந்தாதவன் நாளை செய்யாத தவறுக்காகவும் வருந்த நேரிடும்.

ஏன் உணர்வில்லை?

சங்கீதம் 95:1-11

உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள் – சங்கீதம் 95:8

அப்போஸ்தலர் 27:17-31

சற்று ஜாடைமாடையாக ஏதாவது ஒன்றைச் செய்தால் கூட, சிலர் உடனேயே அதைப் புரிந்து கொள்வார்கள். மிக மிக மறைமுகமாக ஒன்றைச் சொன்னால் கூட, சிலர் அது தன்னைக் குறிவைத்துச் சொன்னதுதான் என்று எளிதாக அறிந்து கொள்கின்றார்கள். சிலர் சின்ன சின்ன வார்த்தைகளைக் கூட அதிக நுண்ணுணர்வுத் தன்மையோடு சிந்தித்து தங்களுக்குள் காயப்பட்டதாகவும், தாங்கள் பாதிக்கப்பட்டதாகவும் உணர்கின்றார்கள்.

ஆனால் சிலர் தங்களின் பாவமான நிலைமையை அறிந்து கொள்ளவும், தங்களிடத்தில் தேவனுக்குப் பிரியமில்லாத ஓர் வாழ்க்கை முறையே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவும், தேவ வார்த்தைகளின் மூலமாக எவ்வளவோ வாய்ப்புப் பெற்றாலும் சற்றும் உணர்வதில்லை. சிலர் நான் பிரசங்கித்து முடித்ததும் ஓடி வந்து இது ரொம்ப நல்ல செய்தி, இன்றைய நாட்களுக்கு இது மிகவும் அவசியமான செய்தி என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால் அது தங்களுக்குத் தேவையானது என்பதை உணருவதில்லை. ஒரு முறை ஒரு தேவசெய்தியாளர் பிரசங்கித்து முடித்தார். அதனைக் கேட்ட ஒருவர் ஓடி வந்தார். இது மிக மிக ஸ்டிராங்கான சூப்பர் ஹிட் செய்தி என்றார். அது சரி இது உங்களுக்கு என்ன செய்தது? என்று கேட்ட போது, அது எனக்கு ஒன்றும் செய்யவில்லை என்று மிகச் சாதாரணமாகப் பதில் சொன்னார்.

யாராவது ஒருவிதமாகப் பார்த்து விட்டால் கூட, அதனால் தங்களுக்குள் பெரிய தாக்குதலை உணரும் பலர் கூட, தேவனுடைய வார்த்தைகள் கற்பாறைகளை உடைக்கும் சம்மட்டி போல வரும் போதும் எதையும் உணராமல் இருப்பார்கள். தேவன் எத்தனையோ நேரங்களில், எத்தனையோ விதங்களில் நீ ஒரு பாவி... நீ இன்னும் மனந்திரும்பவில்லை... நீ எனக்கு முன்பாக சரியாக இல்லை.. நீ இன்னும் உன்னில் மாறுதல்களைக் காணவில்லை.. நீ இன்னும் ஏன் மனந்திரும்பத் தாமதிக்கின்றாய். நீ இன்னும் தேவன் இல்லாத இருளில்தான் வாழ்கின்றாய் என்றெல்லாம் திரும்பத் திரும்பச் சொன்னாலும் எதையும் அவ்விதம் உணர்வதில்லை.

காரணம் என்ன? கடினப்பட்ட இருதயமா? உணர்வுகளை இழந்த நிலையையா? கன நித்திரையின் ஆவியா? தேவ சமுகத்தில் ஆவிக்குரிய உணர்வுகளைத் தாரும் என்று ஜெபிக்கலாமே... உண்மைகள் உரிய விதமாக சொல்லப்படும் போது அதனை சரி என்று ஒத்துக் கொள்வதோடு, நம்மை அதனுடைய அடிப்படையில் சரி செய்ய கவனம் செலுத்த வேண்டும்.

மனிதனுக்கு இன்னொருவரால் வரும் தீங்குகளை விடத் தன்னால் தனக்கு நேரிடும் தீங்குகள் தான் அதிகம்.

சிறு தோல்விகள்

யாத்திரை – 6:1-12

பார்வோன் எனக்கு எப்படிச் செவிகொடுப்பான்? – யாத் – 6 : 12

மத்தேயு 10:16-31

பட்டத்து இளவரசன் ஒருவன் எதிரி நாட்டின் மேல் போர்தொடுக்கப் போகும் பெரிய படைக்குத் தலைமை தாங்கிச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். எதிர்பாராத விதமாக எலி ஒன்று குறுக்கிடவே வாளை எடுத்துக் கொண்டு அதனை வெட்டும்படி துரத்தினான். அவன் எவ்வளவோ முயன்றும் முடியாமல் எலி தப்பியோடி விட்டது. சோர்ந்து போன இளவரசன், கேவலம் ஒரு எலியைக் கூட வெட்ட இயலாத நான் எப்படி எதிரி நாட்டோடு சண்டையிட்டு வெற்றி பெறப் போகிறேன் என்று எண்ணி, யுத்தத்திற்குப் போகாமல் பின்வாங்கிக் போனான்.

சில நேரங்களில் இந்தப் புத்தியீன இளவரசனைப் போல, நாமும் சிறு சிறு தோல்விகளைக் கண்டு சோர்ந்து போய், நம்மை நாமே எதற்கும் லாயக்கற்றவர்கள் என்று முடிவு செய்துவிடுகின்றோம். இஸ்ரவேல் மக்களை விடுவிக்கும்படி எகிப்து சென்ற மோசேக்கு துவக்கத்தில் அந்த மக்களே செவி கொடுக்கவில்லை. எனவே சோர்ந்து போன அவன், இவர்களே எனக்குச் செவி கொடுக்காத போது, எகிப்தின் ராஜா எனக்கு எப்படிச் செவிகொடுப்பான் என்று தயங்கி நின்றான். ஆனாலும் அதே மோசேயின் முன்னால் தேவன் அந்த நாட்டு மன்னனையே அடங்கிப் போக வைத்தார்.

நாம் பெரிய பலசாலிகளாக இருந்தாலும், சில நேரங்களில் சில சின்ன விஷயங்களில் நாம் தோற்றுப் போய் விடக்கூடும். நாம் மிகப்பெரிய திறமை யாளர்களாக இருந்தாலும், சாதாரண சில காரியங்களில் அந்தத் திறமை நமக்குக் கை கொடுக்காமல் போக முடியும். மிக வலிமையான ஆவிக்குரிய நிலைகளை உடைய பலர் சில சின்னக் காரியங்களில், சாதாரண உலக மனிதன் அடையும் வெற்றியைக் கூட அடைய முடியாமல், தோல்வி அடையும் வேளைகள் உண்டு. ஆனாலும் இந்தச் சின்ன விஷயத் தோல்விகள், பெரிய வெற்றிகளுக்கு நாம் தகுதியானவர்கள் அல்ல என்பதை முடிவு செய்து விட முடியாது.

இயேசுவை சிலுவையின் பாதையில் பின்பற்ற விரும்பிய பேதுருவால் அது கூடவில்லை. ஆனாலும் கர்த்தருடைய வேளை வந்தபோது, பேதுரு அதை விட மிகக் கடுமையான சூழ்நிலைகளிலும் கர்த்தருடைய பலத்தில் மிகப்பெரிய சாதனைகளைப் புரிந்தான். முதல் தோல்வி முற்றிலும் தோல்வி என்ற நிலை ஏற்படவில்லை.

சிறிய சபை கூடுகையில் சில நிமிடங்கள் சில வார்த்தைகளைப் பிரசங்கிக்க வலுவின்றி நின்ற பலர், பிற்காலத்தில் லட்சங்களுக்கு முன்னால் நின்று பவுலைப் போல தைரியமாகப் பிரசங்கித்திருக்கிறார்கள். ஆம். சிறு தோல்விகளைச் சுட்டிக்காட்டி, பெரிய வெற்றிகளுக்கு நேராக நாம் போகக்கூடாதபடி தடை செய்ய விரும்பும் சாத்தானுக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உன்னுடைய முயற்சிகள் ஒரேயடியாக மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டாலும் ஒரு சில மாற்றங்களையாவது ஏற்படுத்தவே செய்யும்.

வேதத்தை வாசித்திருந்தும்

ஓசியா – 6:1-11

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால்... அப்போஸ்தலர் 17:11

அப்போஸ்தலர் 17:1-20

மிகவும் பிரசித்தி பெற்றிருந்த ஒருவர் அவ்வப்பொழுது தேவன் தரிசனத்தில் வந்து புதிதாக ஒரு திட்டம் கொடுத்ததாகச் சொல்வார். ஜனங்களும் அதற்காக மிகுதியான பொருளாதார ஆதரவு கொடுப்பார்கள். ஒரு முறை அவரிடம் இயேசு கிறிஸ்து வந்து புதிய ஒரு திட்டம் கொடுத்ததாக அறிவிப்புக் கொடுத்தார். இயேசு தாம் நிரந்தரமாக தங்கியிருந்து ஜனங்களுக்கு அற்புதம் செய்திட ஒரு கட்டிடத்தைக் கட்டும்படி அவரிடம் சொன்னாராம். இந்த அறிவிப்பிற்கும் ஜனங்கள் வழக்கம் போல் வாரி வழங்கினார்கள்.

ஆனால் ஒரு சுவிசேஷகர் இயேசு சொன்னதாகச் சொன்ன ஒன்றை அப்படியே நம்பி விட்டார்கள். ஆனால் இது தொடர்பாகச் சொல்லப்பட்டது வேத வார்தைகளுக்கு ஒத்துப் போகிறதா என்று சற்றும் சிந்திக்கவில்லை. வேதம் என்ன சொல்கிறது. கைகளினால் கட்டப்பட்ட ஸ்தலங்களில் தேவன் வாசம் பண்ணுவதில்லை. (அப்-7:48; அப்-17:24). வேத வார்த்தைகள் சொல்லுவதற்கு முரண்பாடாக வேதத்தைத் தந்த தேவனே தாம் தங்கியிருக்கக் கட்டிடம் கட்டச் சொல்லுவாரா என்று ஜனங்கள் சிந்திக்கவில்லை.

இன்று போல சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக எல்லோரிடமும் வேதாகமங்கள் இல்லை. ஒரு விஷயம் தொடர்பாக வேதம் என்ன சொல்கிறது என்று பார்த்து அறிந்து கொள்வது அந்த நாட்களில் எளிதானது அல்ல. ஆயினும் பெரோயா என்ற இடத்திற்கு வந்து அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷம் அறிவித்த போது, அந்த இடத்திலுள்ள மக்கள் அப்படியே நம்பிவிடவில்லை. காரியங்கள் இப்படியிருக்கின்றதா என்று அவர்கள் வேத வார்த்தைகளை வாசித்து ஆராய்ந்து பார்த்தார்கள். எனவே அவர்கள் நற்குணசாலிகளாக மாறினார்கள்.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வேதாகமத்தைப் படிக்கும் பழக்கம் உடையவர்கள். ஆனால் படித்ததின் அடிப்படையில் எதையும் ஆராய்ந்து சிந்திக்கின்றவர்கள் அல்ல ஒரு புறம் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று எழுதப்பட்ட வேத வார்த்தைகளை அடிக்கோடிட்டு வைத்து விட்டு, மறுபுறம் கள்ளத்தீர்க்கதரிசிகளின் தந்திரப் போதனைகளைச் சற்றும் சோதிக்காமல் ஏற்றுக் கொள்வார்கள். ஆம். வேதாகமங்களின் எண்ணிக்கை பெருகப் பெருக இந்தக் கடைசி நாட்களில் வேதத்தின் வெளிச்சத்தில் காரியங்களைச் சோதிக்கும் பழக்கம் ஜனங்களிடமிருந்து போய்விட்டது என்பது வேதனையான விஷயம்.

தேவன் செய்யச் சொன்னதை நீ செயல்படுத்தாதவரை
தேவன் செய்வார் என்ற உன் நம்பிக்கை செயலற்றதே

ஜீவ ஜோதை

அன்பும் வார்த்தையும்

1 சாமுவேல் - 20:1-17

வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும்... 1 யோவான் 3:18

1 யோவான்- 3:14-24

ஒரு சபை சார்பாக நடைபெற்ற ஒரு ஆவிக்குரிய கூட்டத்தில் பேசுவதற்காகச் சென்றிருந்தபோது குறிப்பிட்ட ஒரு சகோதரருடைய வீட்டில் நான் தங்குவதற்கு ஏற்பாடாயிருந்தது. அங்கே நான் தங்கியிருந்த மூன்று நாட்களும் அந்த சகோதரர் எனக்குத் தேவையான எல்லாக் காரியங்களையும் மிகக் கரிசனையாக சிறப்பாகச் செய்திருந்தார். அதே வேளையில் நான் அந்த வீட்டில் ஒரு அந்நியன் போல இருப்பதாகவே உணர்ந்தேன். ஏனென்றால் அவர் என்னிடம் எதையும் அதிக மாகப் பேசவோ, விசாரிக்கவோ, பகிர்ந்து கொள்ளவோ இல்லை. ஆனால் அவர் ஊழியர்களை அதிகம் நேசித்துச் கரிசனையாகப் பல காரியங்களைச் செய்கிறவர் என்று அந்த சபையின் போதகர் சொல்லியிருந்தார்.

உண்மைதான். அவர் அன்பும் கரிசனையும் உடையவர்தான். ஆனால் அந்த அன்பை, கரிசனையை வாயின் வார்த்தைகளால் வெளிப்படுத்த இயலாத ஒரு சுபாவம் அவரை ஒரு அன்புள்ளவராகப் பார்க்கப் பெரிய தடையாயிருந்தது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி தன்னுடைய கணவனுடைய அன்பை உணர, அடுத்து அவர் ஒரு நல்ல செயலைத் தனக்காகச் செய்யும் வரை காத்தி ருக்க வேண்டியுள்ளது என்று குறைபட்டுக் கொண்டார். ஏனென்றால் அன்பை வெளிப்படுத்த அவர் தன் வாயை உபயோகப்படுத்தவில்லை.

“வசனத்தினாலும், நாவினாலும் அல்ல, கிரியையினாலும், உண்மை யினாலும் அன்பு கூரக் கடவோம்” என்று வேதம் சொல்கிறது. (1 யோ-3:18) இதனுடைய பொருள் வாயின் வார்த்தைகளையும், நாவையும் அன்பை வெளிப்படுத்த உபயோகிக்க வேண்டாம் என்பது அல்ல. வெறும் வார்த்தையோடு அன்பு நின்றுவிடக்கூடாது. அது அன்பான செயல்களால் வெளிப்படவேண்டும் என்பதே அதன் பொருள்.

அதே வேளையில் நம்முடைய அன்பையும், கரிசனையையும், பாசத் தையும் வெளிப்படுத்த வாயின் வார்த்தைகளைப் போதுமான அளவு உபயோகிக்க வேண்டும். ஆயிரம் நற்செயல்கள் செய்தாலும் வாயினால் அன்பு வெளிப்படாத போது, அந்த நற்செயல்கள் அன்பை முழுமையாக அனுபவிக்க உதவாது.

சில பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக மிகுதியான காரியங்களைச் செய்வார்கள். ஆனால் நாலு வார்த்தை அன்பாய் பேசாமல், சர்வாதிகாரி போல முகத்தை இறுக்கமாய் வைத்திருப்பார்கள். எனவே அந்தப் பிள்ளைகளுக்குக் குறைகள் எதுவும் இல்லாவிடினும், சரியான நேசத்தை உணராமல் இறுக்க மான ஒரு மனநிலையோடு வளருவார்கள். ஆக்கப்பூர்வமான செயல்களால் உறுதி செய்யப்படாத அன்பு மாயையானது. அன்பான வார்த்தைகளால் சூழப்படாத நற்செயல்கள் சுவையற்றவை.

மனதில் மறைந்திருக்கும் மலையளவு அன்பைவிட வாயினால் வெளிப்படும் கடுகளவு அன்பே இன்னொருவருக்குப் பயன்தரும்.

ஆசிரியர் தினம்

சங்கீதம் 78:1-8

என்னிடத்தில் கற்றும், அடைந்தும், கேட்டும்
பிலிப்பியர் 4:9

பிலிப்பியர் 4:1-10

ஒரு வாலிபன் ஆசிரியர் தினத்தன்று தன்னுடைய தந்தைக்கு ஒரு அழகான பரிசையும் பூங்கொத்து ஒன்றையும் கொடுத்து ஆசிரியர் தின வாழ்த்துக்கள் கூறினான். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. இன்று தந்தையரின் தினம் அல்ல, ஆசிரியர் தினம் எனக்கு ஏன் பரிசு தருகின்றாய் என்று கேட்டார் தந்தை. அதற்கு அவன் பள்ளிக்கூட ஆசிரியர்களும், கல்லூரி விரிவுரையாளர்களும் எனக்குக் கற்றுத்தந்த பாடங்களைவிட, நான் உங்களிடம் கற்ற பாடங்கள்தான் என்னைக் கட்டி எழுப்பியிருக்கிறது என்றான்.

ஆம். அவர் ஒரு சாதாரண மனிதர்தான். ஆனாலும் அவருடைய குணம், செயல், நடத்தை, வார்த்தை யாவுமே மற்றவர்களுக்கு ஏராளமான நல்ல வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுக் கொடுக்கும் தன்மையுடையவை. எனவே அவன் ஆசிரியர் தினத்தன்று அவரை வாழ்த்திப் பரிசளித்தது நியாயம்தான்.

நாம் கற்ற கல்வியின் பின்னணியின் மூலமாகவும், நம்முடைய நல்ல மூளையினாலும், சிந்தனைத் திறனாலும் மற்றவர்களுக்கு ஏராளமாக கற்றுக் கொடுக்க முடியும். ஆயினும் நல்லதோர் வாழ்க்கையைப் பலர் நடுவில் வாழ்ந்து காட்டுவது போன்ற சிறந்த கல்விமுறை வேறொன்றுமில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய போதனைகளை மட்டும் சீடர்களுக்குக் கற்றுக் கொடுக்கவில்லை. அவர் பேசினவிதம், நடந்து கொண்ட விதம், சுபாவங்கள் பிரதிபலித்த விதம், சோதனைகளைச் சந்தித்த விதம், மனிதர்களை அணுகிய விதம், சூழ்நிலைகளை எதிர்கொண்ட விதம் யாவுமே சீடர்களுக்கு ஏராளமான காரியங்களைக் கற்றுக் கொடுத்தன. அவைதான் அவர்களை உயர்ந்ததோர் வாழ்வில் கட்டி எழுப்பியது.

அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு சமயப் போதகனாக மட்டுமல்ல. தான் வாழ்ந்த விதத்தால் இன்னொருவருக்கு வாழ வேண்டிய விதத்தை கற்றுக் கொடுத்த மனிதன்.

நாம் என்ன கற்றுக்கொடுக்கின்றோம் என்பதைவிட, நாம் வாழ்கின்ற விதம் மற்றவர்களுக்கு எதை கற்றுக் கொடுக்கும் என்பதே முக்கியம். அறிவு மிகுந்த சாலொமோனின் நீதிமொழிகளை விட, தேவ பக்தனாகிய ஆபிரகாம் வாழ்ந்த விதம் நம்முடைய வாழ்க்கையைச் சரியாக வாழ்வதற்கு நமக்கு ஏராளமான நல்ல பாடங்களைத் தருகின்றன. பெற்றோர்களே, உங்கள் வாழ்க்கை முறை உங்கள் பிள்ளைகளுக்கு நல்லதோர் பாடமாக இருக்கத் தகுதியானதா?

நாளை உங்கள் பிள்ளைகளை எப்படிப் பார்க்க விரும்புகின்றீர்களோ, அவ்விதம் இன்று உங்களை அவர்கள் பார்க்கட்டும்

மனமாற்றமில்லா மனஸ்தாபம்

எரேமியா – 8:1-13

இந்த ஜனம் என்றைக்கும் வழிதப்பிப் போகிறதென்ன? – எரேமியர் – 8:5

யாக்கோபு – 4:1-10

பல விசுவாசிகள் சபை கூடுகை வேளைகளிலும், சில உணர்வூட்டும் பிரசங்கங்களைக் கேட்கும் போதும் தங்களை தவறானவர்களாகக் கண்டு மனஸ்தாபப்படுவார்கள். ஆனால் சாதாரணச் சூழ்நிலைகளில் அந்தக்குற்றத்தை உணரும் உணர்வு செயல்படுவதில்லை. ஆனால் இது சரியான அனுபவம் அல்ல. அனுதின வாழ்க்கையில் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படும் ஒரு அனுபவம் வேண்டும். அப்போது விசேஷ சூழ்நிலைகளில் மட்டும் அல்ல. எப்போதும் தவறுகளை உணர்த்தும் ஆவியானவருடைய செயலினால் நாம் தவறுகளுக்கு ஜாக்கிரதையாயிருக்க முடியும். மற்றபடி எதாவது குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் தவறுகளை உணருவது வெறும் உணர்ச்சி வசப்படும் அனுபவங்களே.

சவுல் ராஜா தாவீதின் மேல் கொண்ட மிகுந்த வெறுப்பினால் அவனை அழிப்பதற்காக வலைவீசிக்கொண்டிருந்தான். ஆனாலும் ஒவ்வொரு முறையும் அவன் தாவீதின் வலையில் தானாகப் போய் விழுந்து விடுவான். சவுலைக் கொன்று போடும் வாய்ப்புக் கிடைத்த போதிலும், தாவீது தேவனுக்காக அவனை விட்டு விடுவான். அந்த நேரங்களில் சவுல் தன்னுடைய தவறுகளை உணர்ந்து தாவீதிடம் மனஸ்தாபத்துடன் அறிக்கையிடுவான். ஆயினும் அந்தத் தவறை உணருகின்ற நிலை தற்காலிகமான ஒரு உணர்ச்சியாக மட்டுமே இருந்தது. திரும்பவும் அவன் செய்த தவறுகளையே செய்ய விரைந்து கொண்டிருந்தான்.

தவறுகளை உணர்வதும், மனஸ்தாபப்படுவதும் மேன்மையான அனுபவங்கள்தான். ஆயினும் அது ஒரு தாற்காலிக நிலையாயிராமல், நிரந்தர நிலையாக மாற வேண்டும். அதுதான் நாம் உண்மையாக நம்முடைய தவறுகளை உணர்ந்தோம் என்பதற்கான அடையாளமாகும். தவறுகளின்றி வாழ வேண்டும் என்ற அடிப்படைத் தீர்மானம் வாழ்க்கையில் இல்லாமலிருப்பதால்தான், திரும்பத் திரும்ப தவறுகளுக்குத் திரும்ப வேண்டிய காட்டாயங்கள் நேரிடுகிறது.

சிலர் தவறுகள் உணர்த்தப்படுகின்ற சில சூழ்நிலைகளில், அதிகமாக மனஸ்தாபப்பட்டு தவறுக்காக வருந்துவார்கள். ஆனால் அந்த உணர்வின் வேகம் விரைவில் தணிந்து மீண்டும் அதே தவறையோ, அல்லது வேறு ஏதாவது தவறையோ செய்வார்கள். காரணம் என்னவென்றால் தேவனுக்கேற்ற ஒரு உண்மையான, நிறைவான வாழ்க்கை வாழவேண்டும் என்ற கொள்கை சார்ந்த தீர்மானம் அவர்களுக்கு இல்லை. உணர்ச்சியின் உந்துதல்கள் தவறை உணர வைக்கும். ஆயினும் அடிப்படை சரியில்லையேல், அதில் நிலைத்திருக்க முடியாது. நாம் சரியான இறைவெளிச்சத்தில் வாழ்ந்தால், விசேஷ உணர்ச்சி உந்துதல்கள் இல்லாமலே, நம்முடைய தவறுகளையும், குறைகளையும் சரியாகக் கண்டுணர்ந்து செயல்பட முடியும்.

மனஸ்தாபம் அடையாத மனந்திரும்புதலும் மனந்திரும்புதல் இல்லாத மனஸ்தாபமும் பிரயோஜனமற்றவையே.

கீழ்ப்படிவா, அன்பா?

ஆதியாகமம் 22:1-18

நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால்...
ஆதியாகமம் 22:18

எபிரேயர் 10:25-39

குறிப்பிட்ட ஒரு குடும்பத்தில் மனைவி கணவனுக்காக எல்லாவற்றையும் மிக நேர்த்தியாகச் செய்கிறவள். கணவன் எதைச் சொன்னாலும் அதனைச் செய்கின்ற தயார் நிலையை உடையவள். கணவன் சொல்லுகின்ற எதற்கும் எதிர் குரல் கொடுக்காத அவளுடைய நடவடிக்கை சிலருக்கு அளவுக்கு மிஞ்சிய கீழ்ப்படிவாகத் தோன்றியது. அவளுடைய பெற்றோரோ "நீ எதற்கெடுத்தாலும் உன் கணவனுக்கு ஒரு அடிமைபோல் செயல்படுகிறாய்" என்று கூறுவார்கள்.

ஆனால் அவளுடைய நியாயம் வித்தியாசமானது. நான் என்னுடைய கணவனுக்குப் பயந்தோ அல்லது அதிக கீழ்ப்படிதலோ அல்ல. என்னுடைய கணவன் சந்தோஷமாயிருப்பதையே நான் பார்க்க விரும்புகின்றேன். என் கணவன் மேல் உள்ள அன்புதான் என்னை அவ்விதம் செயல்படத் தூண்டுகின்றதேயன்றி கீழ்ப்படிதல்ல என்றாள்.

ஆவிக்குரிய வாழ்க்கையிலே நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ அழைக்கப்படுகின்றோம் என்பது உண்மை. ஆயினும் அது ஒரு அடிமைத் தனமாக அல்ல. அது ஒரு மேலாண்மைக்கு அடிபணியும் ஒன்றாக அல்ல. அது அன்பின் விளைவானதாக இருக்க வேண்டும். நம்முடைய செயல்களும், சுபாவங்களும், நடத்தைகளும், பண்புகளும் தேவனுடைய பார்வையில் சந்தோஷத்திற்கேதுவாக இருக்க வேண்டும். அந்தச் சிந்தனை வந்துவிட்டால் நாம் வெறும் பயபக்திக்காகக் கீழ்ப்படியாமல், தேவன் மேல் வைத்த அன்பினால் இசைந்து செயல்படுகின்றவர்களாயிருப்போம்.

ஆவிக்குரிய வாழ்க்கையில் நம்மை ஆளுகை செய்ய வேண்டியது தேவனைக்குறித்த அச்ச உணர்வு அல்ல. அது அன்பின் உணர்வாக இருக்க வேண்டும். ஆபிரகாம் தன்னுடைய ஒரே மகனைக்கூட தேவனுக்காகப் பலியிட ஆயத்தம் ஆனான். அது ஒரு அச்சத்தின் விளைவான கீழ்ப்படிவு அல்ல. அது அன்பின் விளைவாக ஏற்பட்டதே. ஆபிரகாமின் கீழ்ப்படியும் செயல், தேவனுடைய பார்வையில் தேவபயத்தின் அடையாளமாக எண்ணப்பட்ட போதிலும், ஆபிரகாமை அவ்விதம் செயல்படத் தூண்டியது அச்ச உணர்வு அல்ல, அன்பின் உந்துதலே. ஆம். தேவனுக்குப் பயப்படுவதினால் அல்ல. தேவன் மேல் அன்பு கூருகின்ற ஒரு அனுபவம்தான் ஆவிக்குரிய வாழ்க்கையின் உண்மையான உந்துவிசையாக வேண்டும்.

இறைவாழ்க்கை என்பது அடிமை எஜமான் உறவு அல்ல.
தந்தைமகன் என்ற அன்பின் உறவு சார்ந்த வாழ்வே அது.

ஜீவ நீரோடை

நல்ல கணவன்

நீதி-5:1-23

புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையை... 1 கொரிந்தியர் -7:3

1 கொரிந்தியர் 7:1-17

இளைஞனாகிய யோசேப்பின் மேல் ஆசை வைத்து பாவம் செய்ய ஓடிய போத்திபாரின் மனைவி ஒரு மோசமான பெண். ஆனால் அவள் மோசமான பெண்ணாக மாறுவதற்கு போத்திபார்கூட ஒரு காரணமாயிருந்திருக்க வாய்ப்புண்டு அவன் பார்வோனின் அரண்மனையில் அதிக பொறுப்புகள் உடைய பதவியை வகித்தவன். எனவே அவன் தன் குடும்ப நிர்வாகப் பொறுப்புகளையெல்லாம் யோசேப்பின் கையில் விட்டிருந்தான். அதிக அலுவல்களுக்கு நடுவில் இரவும், பகலும் உழைத்து, பார்வோனுக்கு நல்ல ஒரு ஊழியனாக இருந்திருப்பான். ஆனால் தன் மனைவிக்கும், வீட்டுக்கும் செய்ய வேண்டிய கடமைகளைக் குறித்து கவலைப்படாத ஒரு மோசமான கணவனாக இருந்திருப்பான். அதன் விளைவாக அவள் மோசமான பாதையில் செல்லத் தூண்டப்பட்டிருக்க வாய்ப்புகள் உண்டு.

இன்றைய சமுதாயத்தில் பொருள், பொருள் என்று இரவு பகல் பாராமல் ஓடுகின்ற கணவர்களே ஏராளம். பொருள் சேர்க்கும் பணிகளில் ஆழ்ந்துபோய், தங்கள் மனைவிக்கும், குடும்பத்திற்கும் ஏற்ற ஒரு குடும்பத் தலைவனாக இருக்க வேண்டிய கடமையை மறந்து விடுகிறார்கள். மனைவியின் உணர்வுகளை புரிந்து கொள்ள இயலாத கணவன்மார்கள், மனைவிகள் தவறான திசைகளுக்கு செல்வதற்குக் காரணமாயும் இருக்கின்றார்கள்.

கணவன்மார்கள் பலவித அலுவல்களில் மூழ்குவதாலும், பலத்தரப்பட்ட மனிதர்களோடு தொடர்ந்து பழகுவதாலும் மனைவிகளிடம் அவர்களுக்கு அதிக எதிர்பார்ப்புகள் இல்லாமல் போகலாம். ஆனால் வீட்டிலிருக்கும் மனைவிக்கோ கணவனிடம் அதிக எதிர்பார்ப்புகள் உண்டு. அவள் அவனுடைய ஐக்கியத்தையும், அன்பான நடவடிக்கைகளையும் அதிகமாக எதிர்பார்க்கிறாள். எனவேதான் கணவன் தன்னுடைய மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும் என்று வேதமும் வற்புறுத்துகிறது. (1 கொரி-7:3)

வருவாய் நெருக்கடிகளினால் வெளிநாடுகளில் வேலை தேடிச் செல்வோர் அநேகர். ஆனால் அதிக வருவாய் ஈட்டிப் பழகிப் போய்விட்ட காரணத்தால், வெளிநாடுகளில் வேலை செய்வதிலேயே தங்களின் வாழ்க்கையின் பெரும்பகுதியை செலவிடுவோர் உண்டு. பணம் ஈட்டுவது மட்டுமே குறியாகவும், வெறியாகவும் மாறி, மனைவி பிள்ளைகளை சொந்த நாட்டில் விட்டு விட்டு, வாழ வேண்டிய காலங்களை வீணாக்குவோர் அநேகர். பணம் ஈட்டுவதே வாழ்வு ஆகாது. எதற்காகப் பணம் ஈட்டுகிறோம்? மனைவி பிள்ளைகளோடு சந்தோஷமாக வாழத்தானே. ஆனால் பணம் ஈட்டுதலே சந்தோஷ அனுபவமாக மாறி விடுவதால், செல்வந்தர்களாகி விடுகிறார்கள். ஆனால் குடும்ப வாழ்வோ வீணாகி விடுகிறது. பலருடைய குடும்ப வாழ்வு கறைபடுவதோடு, பிள்ளைகளும் வீணாகிப் போகிறார்கள்.

வாழ்க்கையை அனுபவிக்கப் பணபலத்தைத் தேடுகிற மனிதன் பின்னர் வாழ்க்கையைச் சகிக்க மனபலத்தை தேடுகிறான்.

இது சரியா?

நீதிமொழிகள் 12:1-14

ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்பட மாட்டேன் – 1 கொரிந்தியர் 6:12

1 கொரிந்தியர் 6:1-13

பல கிறிஸ்தவர்கள் எந்த ஒரு விஷயத்தைச் சொன்னாலும் இதில் என்ன தப்பு இருக்கிறது என்றுதான் கேட்பார்கள். ஆனால் இதில் என்ன சரி இருக்கிறது என்று பார்க்கமாட்டார்கள். ஏதாவது ஒன்றைக் குறித்துச் சொன்னால் இதில் என்ன பாவம் இருக்கிறது என்றுதான் கேட்பார்கள். இதில் என்ன பரிசுத்தம் இருக்கிறது என்று கேட்கமாட்டார்கள். நாம் வாங்கி உபயோகிக்கும் பொருட்களிலெல்லாம் இதில் என்னென்ன கெடுதல்கள் இல்லை என்று மட்டுமே பார்ப்பதில்லை. இதில் என்னென்ன நல்ல பயன்கள் இருக்கிறது என்பதையும் பார்ப்போம்.

சினிமா பார்க்கும் பழக்கத்தில் தவறேதும் காணாத கிறிஸ்தவர் ஒருவரிடம் இப்படி சினிமா பார்ப்பது நல்லதல்ல என்றார் ஒருவர். உடனேயே அவர் இதில் என்ன பாவம் இருக்கிறது. இது பாவம் என்று பைபிளில் எழுதியிருக்கிறதா என்று கேட்டார். சில மணி நேரங்கள் சினிமா பார்த்து முடித்த அவரிடம் இதுவரை நீங்கள் பார்த்த சினிமாவில் நீங்கள் பெற்ற பலன்கள் என்னவென்று கேட்டபோது, நல்லது ஒன்றும் கிடைக்கவில்லை. ஒரு டைம் பாஸ் அவ்வளவுதான் என்றார்.

நமக்குப் பலன்தராத விஷயங்களில் நாம் நேரங்களை விரயமாக்குவது நல்லது அல்ல. சினிமா, சீரியல், டி.வி. கலை நிகழ்ச்சிகள், அரசியல் வாக்குவாதங்கள், இண்டர்நெட், என நாம் எதிலாவது நம்மை அதிகமாக ஈடுபடுத்தி ஒரு பொழுதுபோக்கு உணர்வைப் பெறலாம். ஆனால் சில விஷயங்கள் தவறாகத் தோன்றாது. ஆனால் அது நமக்குள் மறைமுகமாக தவறுகளை உருவாக்கும். சில விஷயங்களில் நாம் பாவம் என்று எதையும் பார்க்க முடியாது. ஆனால் நாம் பாவம் செய்வதற்கு அவை மறைமுகத் தூண்டுதல்களைத் தரும்.

நம்முடைய கண்கள் தவறற்றவைகளை பார்க்கின்றது என்ற திருப்தி மட்டும் போதாது. அவற்றால் நமக்கு பலன் ஏதாவது கிட்டுகிறதா, அவற்றால் தவறுகளின்றி வாழ எனக்கு உந்துதல் கிடைக்கின்றதா என்றும் பார்க்க வேண்டும். உண்மையான கிறிஸ்தவர்கள் எவரும் "தவறில்லை" என்ற ஒரு பக்கத்தை மட்டுமல்ல. இது மிகவும் சரியானது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். கண்கள் எதை அதிகமாகப் பார்க்கின்றதோ, காதுகள் எவற்றை அதிகமாகக் கேட்கின்றதோ, வாய் எவற்றை அதிகமாகப் பேசுகின்றதோ, அவற்றின் அடிப்படையிலேயே இருதயத்தின் தன்மையும் இருக்கும். அதற்கேற்பவே வாழ்க்கையின் தரமும் இருக்கும்.

பொழுதைப் போக்குவதில் சந்தோஷம் அடையாதே
பொழுதை வீணாகப் போய்விடாமல் தடுப்பதில் சந்தோஷத்தைப் பார்.

ஜீவ நீரோடை

நற்குணக் கவர்ச்சி

ரூத் – 3:1-18

நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்... ரூத்–3:11

எபேசியர் – 5:1-21

போலித்தனங்களுக்கும், புறக்கவர்ச்சிகளுக்கும் அதிகமான முக்கியத்துவத்தை கொடுத்து மயங்கிப் போய் விடுகின்ற உலகம், நற்சுபாவங்களையும், உயர் குணங்களையும் உரிய முறையில் மதிப்பீடு செய்து கௌரவிக்கவில்லை என்பது உண்மைதான். ஆயினும் நற்குணங்களுக்கென்று ஒரு தனி அழகும், அதற்கென்று ஒரு விசேஷ விலையும் உண்டென்பதை மறந்து விடக்கூடாது. மலர்களிலிருக்கும் சுவைமிகு தேனின் அருமையை அவைகளின் அருகே பறந்து திரியும் பறவைகள் அறியவில்லை. ஆனால் எங்கிருந்தோ அவைகளைத் தேடி வண்டுகளும், தேனீக்களும் வருகின்றன. அதுபோலவே நற்குணங்களின் அருமையினை அறிந்து அதற்குரிய விலையைத் தருகின்ற நல்லோர் இவ்வுலகில் இல்லாமல் இல்லை.

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் பணம், பொருள், அந்தஸ்து, கல்வி சிறப்பு என உலகத்திற்கேற்ற பல மேன்மைகள் இருந்தாலும், அந்த மனிதனுடைய வாழ்க்கையில் குணாதிசய நிலைகள் சரியாக இல்லாமற் போகுமாயின் அவைகளால் அவன் வாழ்வு மகிழ்ச்சியைக் காண முடியாது. அநேக குடும்பங்களில் சமாதானம் இல்லை. சந்தோஷம், இல்லை. காரணம் என்ன? பணக்குறைவோ, பொருள் குறைவோ அல்ல. நற்குணங்கள் அங்கு இல்லை. எங்கே நற்குணங்கள் இல்லையோ அங்கே உண்மையான சமாதானமும், சந்தோஷமும் இராது. நற்குணங்கள் உடையவர்களைத்தான் இயேசு மலைப்பிரசங்கத்தின் போது, பாக்கியவான்கள் என்றார். ஆம். குணங்கள் உப்பைப் போன்றது. அதனை அநேகர் மேன்மையாக எண்ணாவிடினும், அது இல்லையேல் சுவை இல்லை.

நகோமியின் மருமகளாகிய ரூத் பிறப்பால் மோவாபியப் பெண். ஒரு யூதனால் விரும்பப்படத்தக்கவள் அல்ல. அதுமட்டுமல்ல அவள் ஒரு ஏதுமற்ற ஏழை விதவை. எனவே அவள் யாருடைய பிரியத்தையும் எளிதில் பெற முடியாது. ஆனால் எருசலேமைச் சேர்ந்த செல்வந்தனாகிய போவாஸ் அவளை ஒருநாள் மனதார ஏற்றுக்கொண்டான். அவள் ஒரு உயர்ந்த குடும்பத்திற்குத் தலைவியானாள். போவாஸைக் கவர்ந்தது எது? அவளை மனைவியாக ஏற்றுக் கொள்ள அவனைத் தூண்டியது எது?

பணமோ, படிப்போ, உயர்குலப் பிறப்போ அல்ல. அவளுடைய நற்குணம் தான் அவனைக் கவர்ந்தது. அவள் எருசலேமிற்கு வந்து சேர்ந்த ஒரு சில நாட்களுக்குள்ளாகவே நற்குணங்களுக்காக அறியப்பட்ட ஒரு பெண்ணாக அவள் விளங்கினாள். தேவன் நம்முடைய சகலவிதச் செயல்களைவிட, நம்முடைய நற்குணங்களுக்குத்தான் அதிக முக்கியத்துவம் தருகிறார்.

**இறைவனின் நற்குணங்கள் உன்னிடம் வெளிப்படாத நிலையில்
நீ பெற்றதாக எண்ணும் இறைச்சந்தோஷம் போலியானதே.**

பழைய ஆவி?

11 இராஜாக்கள் 1:1-12

நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் – லூக்கா 9:55

லூக்கா 9:51-62

இரயிலில் இரவுப்பயண வேளையில் விளக்குகளைப் பயன்படுத்தியது தொடர்பாக இரண்டு பயணிகளிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஒரு பயணி மிக மிகக் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்து வாய்க்கு வந்தபடி தாறுமாறாகப் பேசினார். இன்னொரு பயணியோ அந்த கடுமையான வார்த்தைகளினால் எந்த பாதிப்பையும் அடையாதவர் போல மிக மிக கௌரவமான வார்த்தைகளைக் கண்ணியமாகப் பேசினார். அதைக் கவனித்துக் கொண்டிருந்த இன்னொரு பயணி உங்களால் எப்படி அந்த முரடனின் மிக மோசமான வார்த்தைகளைக் கேட்டு விட்டு மிக மிக அமைதியாக பதிலளிக்க முடிந்தது? என்று கேட்டார். அதற்கு அந்தப் பயணி அந்த மனிதனுக்குள் இருந்த ஆவி அவனை அவ்விதம் பேச வைத்தது. எனக்குள்ளிருந்த ஆவி இவ்விதம் என்னைப் பேச வைத்தது. வேறொன்றுமில்லை என்றார்.

சில நல்ல கிறிஸ்தவர்கள் கூட சற்று கோபமூட்டப்பட்டுவிட்டால் கிறிஸ்தவ ஆவியை விட்டு விட்டு, மனுஷ ஆவியின்படி செயல்பட முந்திவிடுகின்றார்கள். தேவ ஊழியர் ஒருவரை இன்னொருவர் சற்று எரிச்சலடையச் செய்தபோது "ஹலோ... ஒரு பாஸ்டர் என்பதற்காக நான் பொறுமையாயிருக்கிறேன், என் கோபத்தை கிளறி நான் யார் என்பதைக் காண்பிக்க வைக்காதிருங்கள்" என்றாராம்.

சிலர் இயேசுவைப் போல மிக மிக சாந்தமாகவும், பொறுமையாகவும் தெய்வீகக் குரலில் அமைதியாக பேசுகின்றார்கள். ஆனால் தங்களுக்குள் சற்று காயப்பட நேர்ந்து விட்டால் தங்களின் சுயரூபத்தைக் காட்ட முந்திவிடுகிறார்கள். ஒரு உண்மையான கிறிஸ்தவன் சுய ஆவியாலும் தேவ ஆவியாலும் ஆளப்பட முடியாது. இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்ட பிறகு பழைய மனிதனையும், பழைய சுய ஆவியையும் செயல்பட அனுமதிக்கக் கூடாது.

தேவனுடைய பிள்ளைகளுக்கு இரண்டு ஆவி இருக்கக் கூடாது. கோப மூட்டப்படும் சூழ்நிலையிலும், அதிகமாக அநீதியாகக் காயப்படுத்தப்படு கின்ற வேளையிலும் தேவன் தந்த பரிசுத்த ஆவியின் சாந்தத்தினால் அதனைச் சந்திக்க வேண்டும். சோதிக்கப்படும் வேளையில் பழைய மனுஷனையும், பழைய ஆவியையும் செயல்பட அழைத்தால் இன்னும் நாம் சுயத்திற்குச் சாகவில்லை என்பதே அர்த்தம்.

சமாரியாவில் இயேசுவின் சீடர்கள் ஆத்திரமூட்டப்பட்டபோது அவர்களோ எலியாவின் ஆவியை நினைவுகூர்ந்து அதுபோல செயல்பட விரும்பினார்கள். ஆனால் இயேசுவோ நீங்கள் இன்ன ஆவியை உடையவர்கள் என்பதை அறியீர்களா என்றார். ஆம். எந்த வேளையிலும் தேவ ஆவியால் மட்டுமே செயல்பட கவனமாயிருப்போம்.

பழிவாங்க விரும்புகிறவன் ஏற்கனவே பட்ட காயத்தோடு இன்னுமொரு காயத்தையும் சேர்த்துக் கொள்கிறான்.

ஒரு தாலந்து

நீதிமொழிகள் -11:23-31

உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்... மத்தேயு-25:25

மத்தேயு-25:14-30

நம்மில் அநேகர் ஒரு தாலந்தை பெற்றுக்கொண்டு அதனை உபயோகிக்காமல் புதைத்து வைத்த மனிதனைப் போலிருக்கிறார்கள் என்பது உண்மை. தேவன் ஒரு சிலருக்கே நல்ல சூழ்நிலைகளைக் கொடுத்துவிட்டு, மற்றவர்களை சும்மா விட்டுவிட்டதாக நினைக்கின்றனர். இந்த ஒரு தாலந்தை வைத்துக் கொண்டு பெரிதாக எதைச் சாதித்துவிட முடியும் என அவர்கள் எண்ணுகின்றனர்.

அநேகர் கர்த்தருடைய நன்மைகளையும் அசீர்வாதங்களையும் பெறாமல் போவதற்கு, ஒரு தாலந்தை அலட்சியப்படுத்துவதும் முக்கியமான ஒரு காரணமாகும். அவர்கள் தங்களுக்கு கிடைத்திருக்கிறவைகளை ஒருபோதும் முக்கியமாக எண்ணாமல், கிடைக்காதிருக்கிறவைகளைக் குறித்தே கவலைகொண் டிருப்பார்கள். ஏற்கெனவே அருளப்பட்டதின் அடிப்டையில் ஒரு பயன்பாட்டை ஏற்படுத்தாதவர்கள், அதிகமான தேவ அருளையோ, ஆசீர்வாதங்களையோ பெற முடியாது.

சாறிபாத் விதவையிடம் மீதமாயிருந்த மாவு மிகச் கொஞ்சமாயிருந்த போதிலும், அதில் ஒரு பகுதியை எலியா தீர்க்கதரிசியின் பசியை ஆற்ற உபயோ கித்தபோது. அவளுடைய வீட்டில் ஒருபோதும் குறைவு ஏற்படவேயில்லை. ஆம். நமக்கிருக்கும் குறைந்த ஆதரவுகளின் மத்தியிலும், நம்மால் சிலருக்கு சில நலமான காரியங்களைச் செய்ய முடியும் என்று விசுவாசித்துச் செயல்பட்டால், அதனுடைய விளைவே அபரிமிதமான ஆசீர்வாதங்கள்.

இரண்டு காசை வைத்திருந்த பெண்மணி "என்னிடம் என்ன இருக்கிறது கர்த்தருக்குக் கொடுக்க" என எண்ணாமல் எதையாவது செய்ய வேண்டும் என்று முடிவு செய்து வந்தாள். எனவே அவளுடைய நற்கிரியைக் குறித்த செய்தி வேதத்தில் இடம் பெற்றதோடு, அநேகருக்கு அவள் ஒரு முன் மாதிரியாகவும் மாறினாள்.

நம்முடைய திராணிக்கேற்ப பிறருக்கு சிறு உதவியாவது செய்ய வேண்டும். ஏனென்றால் குறைந்தபட்சம் நமக்கு ஒரு தாலந்தாவது கொடுக்கப்பட்டுள்ளது. அந்த குறைந்த தாலந்தை உபயோகித்து இயன்ற நம்மையைப் பிறருக்குச் செய்யாவிடில், இருக்கின்ற தாலந்தும் பறிக்கப்பட்டு, மேற்கொண்டு தாலந்துகள் கிடைப்பதற்கான வழியும் அடைபட்டுப் போகும். உள்ளதில் ஒரு சிறு பகுதியை யாவது பிறருக்காக பயன்படுத்தாதவர்கள், கோடி கோடியாகப் பெற்றாலும் யாருக்கும் அவர்களால் பிரயோஜனம் ஏற்படாது.

பிறருக்குக் கொடுக்க விரும்பாதவர்கள்
இறைவனிடமிருந்து பெறவும் இயலாதவர்களே.

சரியான சூழ்நிலைகள்

சங்கீதம் 1:1-6

பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்... சங்கீதம் 1:1

11 கொரிந்தியர் 6:13-18

ஒரு தேவனுடைய ஊழியர் ஊழியத்திற்காகப் பயிற்றுவிக்கப்பட்ட ஆரம்ப நாட்களிலே, சில மாதங்கள் நகரப் பகுதியிலுள்ள ஒரு லாட்ஜில் தங்கியிருக்க நேர்ந்தது. ஆனால் அந்த லாட்ஜிற்கு வந்து ரூம் போடுகின்றவர்களில் பெரும் பாலானவர்கள் பாலியல் சம்பந்தமான தவறான காரியங்களுக்கு வருகின் றவர்களே மிக மிக அதிகமான பாவத்தூண்டுதல்கள் உடைய அந்த இடத்திலும், அந்த, தேவ ஊழியர் அந்தச் சூழ்நிலையினால் சற்றும் தன்னைக் கறைபடுத்திக் கொள்ளாமல் வாழ முடிந்தது. ஆயினும் இந்தச் சூழ்நிலையில் எல்லோரும் அவ்விதமாக இருக்க இயலும் என்று கூற இயலாது. எனவே இது போன்ற ஒரு சூழ்நிலையை வேறு யாருக்கும் காண்பிப்பது நல்லதல்ல.

யோசேப்பு போத்திபாருடைய மனைவியின் இச்சைத் தூண்டுதல்களை மேற்கொண்டு பரிசுத்தத்தை இழக்காமல் வாழ முடிந்தது. அதே வேளையில் அதுபோன்ற சூழ்நிலைகள் எல்லோருக்கும் ஜெயிப்பதற்கு ஏற்ற இடமாக இராது. தானியேல் விக்கிரக வழிபாட்டிற்கு முதலிடம் கொடுக்கும் பாபிலோன் அரண்மனையில் இருந்த போதிலும், ஜீவனுள்ள தேவனுடைய வழிகளை விட்டு சற்றும் விலகாமல் வாழ்ந்து காட்ட முடிந்தது. ஆனாலும் எல்லாரும் தானியேலைப் போல தங்களின் தனித்தன்மையை இழக்காது ஜெயிக்க முடியுமா என்பது கேள்விக்குறியே.

எனவே பரிசுத்தமான ஒரு வாழ்க்கை வாழ விருப்பம் கொண்ட எவரும் அதற்கேற்ற சூழ்நிலைகளை தெரிந்து கொள்ள மிக அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும். சில வாய்ப்புகள், வசதிகள், சௌகரியங்கள் போன்றவைகளில் நஷ்டப்பட்டாலும் பரவாயில்லை, என்று எண்ணி தூய வாழ்விற்குத் துணை நிற்கும் பகுதிகளையே தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு நல்ல வாழ்க்கைக்கு உகந்த நல்ல சூழ்நிலைகளைத் தேர்ந்தெடுப்பது ஆவிக்குரிய விவேகம்.

தவிர்க்க இயலாத விதமாக சில நேரங்களில் நாம் யோசேப்பை போலவோ, தானியேலைப் போலவோ சில சூழ்நிலைகளில் வாழ்ந்தாக வேண்டிய கட்டாயம் நேரிடலாம். அது போன்ற நேரங்களில் யோசேப்பை போல, தானிலையப் போல நாமும் ஜெயித்துக் காட்ட அவற்றை ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக் கொள்ள லாம். ஆனால் பாவத்திற்கேதுவான சூழ்நிலைகளை அறிந்திருந்தும், ஏதோ ஒரு ஆசையின் விளைவாக லோத்துவைப் போல, நாம் அதனைத் தெரிந்துக் கொள்ளக்கூடாது. ஆம். சோதனைகளை நாம் வலிய வரவழைத்து போரிட்டுப் பார்க்க விரும்புவது நல்லதல்ல.

கோலியாத்து வந்தால் பின்வாங்காமல் எதிர்த்து நில்!
ஆனாலும் கோலியாத்துகள் வாழும் இடம் தேடி சென்று சண்டையிடாதே.

ஜீவ நீரோடை

தனிமை ஏன்?

சங்கீதம் - 102:1-28

நான் தனித்திருக்கும் குருவியைப் போ இருக்கிறேன்... சங்கீதம் 102:7

11 தீமோத்தேயு-1:7-18

நமக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் அநேகரை தேவன் விலகிப் போகத்தக்கதாகச் செய்யும் நேரங்களும் உண்டு. நமக்கு தூரமாயிருக்கிற அநேகரை நமக்கு நெருக்கமாகக் கொண்டு வருகின்ற நேரங்களும் உண்டு. தேவனை உண்மையாக விசுவாசித்துப் பின்செல்லுகின்ற யாவருடைய வாழ்க்கையிலும், இவ்வித காரியங்கள் நிகழ்கின்றது என்று நான் நம்புகின்றேன்.

தேவன் நம்மை யாவரிடமிருந்தும் பிரித்துத் தனித்தீவாக மாற்றுகிறவர் அல்ல. ஆயினும் பலரை நமக்கு அன்பர்களாகவும், நண்பர்களாகவும் தருவதற்கு முன்பாக, நம்மைத் தனியே நிற்க வைத்து விடுகிற வேளைகள் உண்டு. அதன் பின்னால் உள்ள தேவ நோக்கம் மேன்மையானது. முதலாவது தேவன் தாம் மட்டுமே நமக்கு நிரந்தர நண்பர் என்பதையும், அவர் மட்டுமே கடைசி வரை நமக்கு ஆதரவாக இருக்க வல்லவர் என்பதையம், அவர் ஒருவரே சார்ந்து கொள்ளப்பட ஏற்றவர் என்பதையும் நாம் அறிந்து கொள்ளச் செய்கின்றார்.

நாம் தனிமைப்படும்படியான சூழ்நிலைகளை அவர் அனுமதிப்பது நம்மை அனாதைகளாக்குவதற்காக அல்ல. ஆண்டவரை நாம் அதிகமாகப் பற்றிக் கொள்வதற்காகவும், அவர் ஒருவரே நீங்காத துணை என்பதை அனுபவப் பூர்வமாக அறிந்து கொள்வதற்குமே அவ்விதம் தேவன் செய்கின்றார். அது மட்டுமல்ல. அப்படிப்பட்ட சூழ்நிலைகளின் வழியாக நாம் கடந்து செல்லும்போது, "கர்த்தர் எக்காலங்களுக்கும் நமக்குப் போதுமானவர்" என்ற நம்பிக்கை நம்முடைய உணர்வுகளோடும், ஆவிக்குரிய இரத்த ஓட்டத்தோடும் கலந்து விடுகிறது.

இந்த அனுபவம் ஒருமுறை நமக்குள் வேரூன்றி விட்டதென்றால். அதற்குப் பின் நம்மோடு ஆயிரம் பேர் நின்றாலும், அல்லது ஒருவர் கூட உடனிராமல் போனாலும், கர்த்தர் என்னோடிருக்கிறார், அவர் எனக்குப் போதுமானவர் என்ற நம்பிக்கை நம்மைத் தைரியப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் செய்யும்.

இந்த அனுபவம் வந்துவிட்ட பிறகு, தேவன் நமக்கு அநேகருடைய உறவையும், ஐக்கியத்தையும் நிச்சயம் தருவார். அப்படி நிகழுகின்ற வேளைகளிலும் நம்முடைய பார்வை கர்த்தர் மேலும், நம்முடைய சார்புத் தன்மை அவரோடுமே இருக்கும். ஆயிரம் பேர் சூழ இருக்கையிலும், ஆண்டவர் மட்டுமே என்னுடைய நிச்சயமும், நிலையுமான துணை என்ற உணர்வு செயல்பட்டுக் கொண்டேயிருக்கும்.

தேவனோடு இணைந்திருப்பவனை விட்டு எல்லோரும் விலகினாலும் அவன் தனிமைப்படுவதில்லை.

நல்லவர் யாருமில்லையே

ஆதியாகமம் 6:1-9

நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே... ஆதியாகமம் 6:9

மத்தேயு 5:1-16

யாரும் நல்லவர்களாயில்லாத போது, நான் மட்டும் நல்லவனாயிருந்து என்ன செய்ய முடியும். யாரும் சரியாகச் செயல்படாத போது, நான் மட்டும் சரியாகச் செயல்பட்டு என்ன புரட்சியை ஏற்படுத்திவிட முடியும் என்ற சிந்தனையே பலரிடம் உள்ளது. எல்லா விளக்குகளும் அணைந்து போன பின்பு, நான் மட்டுமே எரிந்து என்ன பயன் என்று ஒரு விளக்கு நினைத்தால் அது முட்டாள்தனம். எல்லோரும் விழுந்து விட்டார்கள். நான் மட்டும் நின்று போர் செய்வதால் என்ன பயன் என்று போர்வீரன் எண்ணினால் அது கோழைத்தனம்.

ஒரு விளக்கும் எரியாமல் போனாலும், எரிகின்ற ஒரு விளக்கினால் ஒரு வித்தியாசம் தோன்றும். பாகால் வழிபாட்டிற்கு எதிராக நிற்க எவரும் இல்லை என்ற சூழ்நிலையிலும், எலியா எல்லோரைப் போல மாறவில்லை. எனவே தேவன் அந்த ஒரே ஒரு எலியாவின் மூலம் மிகப் பெரிய காரியங்களைச் செய்தார். பாபிலோனில் எல்லோரும் நேபுகாத் நேச்சார் நட்டுவைத்த சிலையை வணங்கினார்கள். அதைப் பார்த்து, நாம் மட்டும் என்ன செய்ய இயலும் என்று சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ ஆகியோர் எண்ணவில்லை. எல்லோரும் அடிபணிந்து போனாலும், தேவனுக்காக நிற்கும் சிலர் உண்டு என்று காண்பிக்க, அவர்கள் வைராக்கியமா யிருந்தனர். எனவே அவர்களால் அங்கே மாபெரும் விளைவுகளை ஏற்படுத்த முடிந்தது.

நல்லதைச் செய்திட ஒருவரும் இல்லை என்பது நல்லதைச் செய்ய வேண்டிய நம்முடைய கடமையைத் தடுத்துவிடக்கூடாது. ஒருவரும் நல்லவராக இல்லையே என்ற எண்ணம், நாம் நல்லவர்களாக நின்று காண்பிக்க வேண்டிய பொறுப்பைப் பறித்து விடக்கூடாது. நல்லதைச் செய்கின்ற இன்னும் ஒருவர் தேவனுக்காக இருக்கின்றார் என்று உலகம் பார்க்கட்டும். நல்லவர் ஒருவரும் இல்லை என்று எண்ணும் உலகத்தில், இன்னும் ஒரு நல்லவர் இருக்கின்றார் என்று அது பார்க்கட்டும். இந்த சிந்தனை நமக்கு அவசியம்.

நோவாவின் நாட்களில் நோவாவைத் தவிர வேறு யாரும் நல்லவர்களாக இல்லை. ஆனால் நோவா நான் மட்டும் சரியாக இருந்து என்ன சாதிக்க முடியும் என்று எண்ணவில்லை. அவன் தேவனுக்காகச் சரியாக வாழும் கடைசி மனிதனாக நான் இருக்கட்டும் என்ற உணர்வோடு வாழ்ந்தான். எனவே அந்த ஒருவனை நோக்கி தேவன் வந்தார். அவனை எல்லார் நடுவிலும் மேன்மை யாக்கிப் பெரிய காரியங்களைச் செய்தார்.

மனித இதயம் மறைந்திருந்தாலும் அதனுடைய குணங்கள் மறைந்திருப்பதில்லை.

கர்த்தருக்குள் மகிழ்ச்சி

ஆபகூக்-3:13-19

அத்திமரம் துளிர்விடாமல் போனாலும்...
ஆபகூக்–3:17

1 தெசலோனிகேயர் 1:1-10

நமக்கு நல்ல வீடு இருக்கின்றது. நல்ல வருமானம் இருக்கின்றது. வங்கியில் கனமான சேமிப்பு உள்ளது. சுற்றுச் சூழ்நிலைகள் மிகவும் சுகமாக இருக்கின்றது. நாம் இவைகளைப் பார்த்து மனம் பூரித்து, மகிழ்ச்சியடைந்து தேவன் என்னை எவ்வளவாகச் சந்தோஷப்படுத்தியிருக்கிறார் என்று சொல்லலாம். ஆனாலும் தேவனிடமிருந்து நாம் அடையவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிற மகிழ்ச்சி இது அல்ல. ஏனென்றால் நாளை ஒரு வேளை இந்த சுகமான வாழ்க்கை நம்மை விட்டு விலகிப் போகுமானால், அத்துடன் நம்முடைய மகிழ்ச்சியும் மறைந்து விடும்.

அநேகர் இன்று தேவாசீர்வாதத்தை பணம், பொருள், வசதி, புகழ், நிலைகளிலேயே பார்க்க விரும்புகின்றனர். உலக நிலையில் செழிப்புகளைக் காண்பதே ஆசீர்வதிக்கப்பட்டதின் அடையாளமாக எண்ணுவதும் எதிர்பார்ப்பதும் தவறான ஒரு ஆன்மீகச் சிந்தனையாகும். ஆனால் ஆவிக்குரிய மகிழ்ச்சி என்பதும், ஆசீர்வாதம் என்பதும் தேவன் நம்மோடிருக்கின்றார், என்ற முழுமையான நிச்சயத்தில் அவரோடு கொண்டுள்ள ஐக்கியத்தினால் மட்டும் வருகின்ற ஒன்றாகும். அது ஒரு போதும் விலகுவதில்லை. நாம் எதை இழந்தாலும் அதை இழக்காமல் அனுபவிக்க முடியும். ஏனென்றால் அது என்றென்றும் நீங்கிப் போகாத நித்திய கன்மலையாகிய தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறது.

அநேகர் நல்ல வசதி நிலைகளை ஏற்படுத்துவதின் வாயிலாகவே தேவன் நம்மை ஆசீர்வதித்து சந்தோஷமடையச் செய்கின்றார் என நினைக்கின்றனர். எனவே அவர்களின் பார்வை உலகரீதியான பலவித நன்மைகளின் மேலேயே உள்ளது. அவைகளையே அவர்கள் நாடித் தேடுகின்றனர்.

ஆனால் தேவன் அருளும் சந்தோஷம் என்பது தேவனோடு எந்த அளவு ஐக்கியம் கொண்டுள்ளோம் என்ற அடிப்படையிலேயே வருவதாகும். நம்முடைய ஆத்துமா கர்த்தரின் ஐக்கியத்தின் மூலமாகச் சந்தோஷப்படுத்தப்படுகிறது. எனவே நம்முடைய பிரதான தேடல், தேவ ஐக்கியம் தொடர்பானதாகவே இருக்க வேண்டும்.

ஆபகூக் தீர்க்கதரிசி அத்திமரம் துளர்விடாமற் போனாலும்... கர்த்தருக்குள் நான் மகிழ்ச்சியாயிருப்பேன் என்றான். பாருங்கள் அத்திரமரம் துளிர் விடுவதுதான் அது காய்த்து பலன்தரப் போகிறது என்பதற்கு அடையாளம். ஆனால் துளிர் விடவில்லையென்றால் நம்பிக்கைக்கே இடமில்லை. ஆனால் நம்பிக்கைக்கே இடமில்லாமல் போனால் கூட, கர்த்தருக்குள் தனக்கு நிச்சயமான நம்பத்தகுந்த மகிழ்ச்சி இருப்பதை அவன் சந்தேகமின்றி அறிக்கையிட்டான். ஆம். மகிழ்வதற்கு வாய்ப்பே அற்ற வெறுமையான சூழ்நிலையிலும் கர்த்தர் உங்களை மகிழ்ச்சியாக்க வல்லவர்.

எல்லாமிருந்தும் அழுது கொண்டிருப்பான் அவிசுவாசி
எதுவுமில்லாமலே சிரித்துக் கொண்டிருப்பான் விசுவாசி.

கோட்பாடுகளும் அனுபவமும்

எசேக்கியேல் 33:28-33

விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால்...
யாக்கோபு 2:17

யாக்கோபு 2:14-26

குறிப்பிட்ட ஒருவர் மேடையானினும் சரி, தனிப்பட்ட சந்திப்புகளாயினும் சரி எப்போதும் கிறிஸ்தவ கோட்பாட்டு ரீதியான காரியங்களையே பேசுவார். கிறிஸ்தவ உபதேசங்கள் தொடர்பான சட்டதிட்டங்களையே அதிகமாக வலியுறுத்துவார். இரட்சிப்பு, பரிசுத்தமாகுதல், நீதிமானாக்கப்படுதல், வேத பிரமாணங்கள், மோட்சம், நரகம், நியாயத்தீர்ப்பு என்று எந்த தலைப்பை எடுத்துக் கொண்டாலும் அது தொடர்பான வேதாகமக் கோட்பாடுகளையே அதாவது சட்ட திட்டங்களையே அதிகமாக விளக்குவார். ஆனால் எப்போதுமே கிறிஸ்தவப் பிரதிபலிப்புகள், அனுபவங்கள், சாட்சி வாழ்க்கை, தேவ அன்பை ருசித்தல் போன்ற விஷயங்களைப் பேசவே மாட்டார்.

கிறிஸ்தவக் கோட்பாடுகளும், விதி முறைகளும், சட்டதிட்டங்களும், கோட்பாடு களைக் குறித்த விளக்கங்களும் மிகவும் அவசியம். ஆனால் கோட்பாடுகளைக் குறித்த அறிவும், சட்டதிட்டங்களைக் குறித்த விளக்கங்களும் மட்டுமே ஒருவரை ஆவிக்குரியவராக்கிவிடாது. கிறிஸ்தவத்தைக் கோட்பாட்டு ரீதியாக எந்த அளவிற்குப் புரிந்து வைத்திருக்கின்றோம் என்பது அல்ல. கிறிஸ்தவம் என்னும் வெளிச்சத்தை எந்த அளவிற்கு வாழ்க்கையின் மூலம் காண்பிக்கின்றோம் என்பதே முக்கியமானது.

கிறிஸ்தவக் கோட்பாடுகளைக் குறித்த தெளிவையும் புரிந்து கொள்ளுதலையும் மூளையின் துணையைக் கொண்டு கூடப் பெற முடியும். ஆனால் கிறிஸ்தவத்தின் ஆசீர்வாதத்தை அனுபவிப்பதும் கிறிஸ்தவத்தின் மகிமையைப் பிரதிபலிப்பதும் இருதயத்தின் மூலமாகவே. எனவே இருதயம் எந்த அளவிற்கு தேவ உறவோடும், தேவ நட்போடும், தேவ பிரசன்னத்தோடும் இணைந்திருக்கிறதோ, அந்த அளவிற்குத்தான் கிறிஸ்தவத்தின் மேன்மை நிலையை வாழ்வின் பகுதிகளில் வெளிப்படுத்த இயலும்.

ஆப்பிள் பழத்தின் தன்மையைக் குறித்தும், அதிலுள்ள சத்துக்களின் அளவுகளைக் குறித்தும் அதிகமாக கற்றறிந்து விடுவதால் மட்டும் நாம் ஆரோக்கியம் அடைந்துவிட முடியாது. ஆப்பிள் பழக்தைச் சாப்பிட்டுப் பயனடைய வேண்டும். ஆப்பிள் பழங்களின் தரத்தைக் குறித்த ஆய்வுகள் மட்டும் போதாது. அவற்றைச் சாப்பிட்டு, சக்திபெற்று வலிமையாகச் செயல்படுவது தொடர்பான காரியங்களில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஆம். கிறிஸ்தவம் ஒரு ஆராய்ச்சி மையம் அல்ல. அது அனுபவ மையமாக இருக்க வேண்டும்.

விதை மட்டும் தரமானதாக இருந்தால்போதாது
விழுகின்ற நிலமும் விதைப்புக்கேற்றதாக இருக்க வேண்டும்.

உண்மையை அறிந்தால்

11 சாமுவேல் 12:1-14

விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல்... மத்தேயு 5:15

மத்தேயு 14:1-12

மார்ட்டின் லூத்தர் வாழ்ந்த காலம் இந்த நாட்களைப் போல சுதந்திரமாகத் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த இயன்ற காலம் அல்ல. அன்றைய ரோமத் திருச்சபைக்கு எதிராகவோ, அதனுடைய கோட்பாடுகளுக்கு எதிராகவோ ஒரு கருத்துக் கூறுதல் என்பது உயிரை இழக்கத் துணிந்து விடுவதற்குச் சமமாகும். ஆயினும் மார்ட்டின் லூத்தருக்கு இறை உண்மை வெளிப்பட்டபோது, அதனைப் பயப்படாமல் கூறத் துணிந்தார். எதிர்ப்புகளும், இன்னல்களும், ஏளனங்களும், மிரட்டல்களும் எல்லாத் திசைகளிலிருந்தும் வந்தன. ஆனாலும் உண்மையை ஒளித்து வைக்க மார்ட்டின் லூத்தர் விரும்பவில்லை. விளக்கை கொளுத்தி மரக்காலால் மூடி வைக்க அவரால் முடியவில்லை.

உண்மையை உரிய முறையில் கூறுவதால் பாதிப்புகள் வருவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உண்டு. ஆனால் உண்மையைக் கூறுவதால் ஏற்படும் பாதிப்புகளைக் கணக்கிட்டு, உண்மையைக் கூறாமல் போனால், தேவனுடைய பக்கத்திலிருந்து வரும் பாதிப்புகள் அதிகமாயிருக்கும். தாவீதின் தவறைக் குறித்த உண்மையை தேவன் வெளிப்படுத்தியபோது, நாத்தான் அதனைத் துணிந்து கூறத் தயங்கவில்லை. அவன் ராஜாவுக்கு அஞ்சி, மௌனம் சாதிப்பதைவிட, தேவனுக்கு அஞ்சி அதனை உரக்கப் பேசுவதையே மேன்மையாக எண்ணினான்.

உண்மையை அறிதல் என்பது வேறு. உண்மையை நேசித்தல் என்பது வேறு. தேவனை அறிந்து அவருடைய வழியில் நடக்க ஆர்வம் கொண்டவர்கள் உண்மையை உளமார நேசிக்கும் இயல்புடையவர்களாக மாறுவார்கள். அவர்கள் உண்மை தங்களுக்கு லாபத்தைத் தருமா, நஷ்டத்தைத் தருமா என்று யோசிக்கமாட்டார்கள். அவர்கள் உண்மையை விரும்பும் ஒரு இதயத்தைப் பெற்றிருப்பதால், உண்மைக்குப் புறம்பானவைகளை அவர்கள் சாதாரணமாக ஜீரணித்துக் கொள்ளமாட்டார்கள்.

ஒரு ராஜாவுக்கு எதிராக எதையாவது பேசுவது எவ்வளவு ஆபத்தானது என்பது யோவானுக்குத் தெரியும். ஆயினும் அவன் ஏரோதின் அடாத செயலைக் கண்டபோது, பின் விளைவுகளைக் கண்டு அஞ்சாமல், துணிந்து போய் அவனுடைய பாவத்தைச் சுட்டிக்காட்டி, தன்னுடைய தேவ பக்தியை நிரூபித்தான். ஆம். உண்மையை அறிந்தும் அறியாததைப் போல இருப்பதால் வரும் ஆயிரம் லாபங்களை விட, அறிந்ததை அறிவிப்பதால் வரும் நஷ்டமே மேன்மையானது.

விமர்சனங்களுக்கு விதி விலக்காக இருக்க விரும்புகின்றவன், உண்மையின் விதிகளை விட்டு விலகித்தான் ஆகவேண்டும்.

தேவன் நல்லவர் ஆனால்...

உபாகமம் 34:1-12

தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே...
எபிரேயர் 12:29

எபிரெயர் 12:18-29

புதிதாக ஆப்பிள் போன் 5-ஐ வாங்கின ஒருவர் இது மிக மிக நல்ல போன். இதனுடைய செயல்பாடுகள் மிகச் சிறப்பானவை என்று புகழ்ந்து கொட்டினார். அதே வேளையில் இதனை மிக மிகக் கவனத்தோடும், அதிக விழிப்போடும் கையாள வேண்டியுள்ளது என்றும் கூறினார். ஆம். ஒரு பொருள் நல்லதாகவும், மிக பயனுள்ளதாகவும் கண்டறியப்படுவது நல்லதே. அதே வேளையில் அது தொடர்ந்து நல்லதாகவும், பயனுள்ளதாகவும் விளங்க வேண்டுமானால், அதனை மிக மிக ஜாக்கிரதையோடும், சரியான தொழில்நுட்பப் புரிந்து கொள்ளுதலோடும் பயன்படுத்த வேண்டும்.

தேவன் நல்லவர். அவர் மிகவும் வல்லவர். இந்த அறிவும் இந்த அறிவை ஆதாரமாகக் கொண்ட விசுவாசமும் மிகவும் தேவையானது. அதே வேளையில் இந்த இரண்டு அறிவு மட்டும் போதாது. அவருடைய நீதி, அவருடைய சிந்தை, அவருடைய உண்மை, அவருடைய பரிசுத்த நிலைமை, அவருடைய நீதிநியாயக் கோட்பாடுகள் ஆகியவையும் சரியாக அறிந்து கொள்ளப்பட வேண்டும்.

அநேகர் தேவன் நல்லவர். எனவே நமக்கு நல்லதைச் செய்வார். அவர் மிகவும் வல்லவர். எனவே அவர் நமக்காக எதையும் செய்ய முடியும் என்ற ரீதியாக மட்டுமே விசுவாசிக்கவும் எதிர்பார்க்கவும் செய்கின்றனர். ஆனால் அவர் நீதி, உண்மை, பரிசுத்தம், போன்றவற்றில் மிக மிக வைராக்கியம் உடையவர் என்பதை சீரியஸாகச் சிந்திப்பதில்லை.

எகிப்திலிருந்து விடுதலையாகி கானானை நோக்கிச் சென்ற எபிரெயர்களுக்கு தேவன் நல்லவராகவும், வல்லவராகவும் அறியப்பட்டிருந்தார். அவர்கள் அவருடைய நல்லவர் என்ற நிலைமையையும், வல்லவர் என்ற நிலைமையையும் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர். ஆனால் அவருடைய நீதியான வழிகளையும், பரிசுத்தமான அணுகுமுறைகளையும், உண்மை நிறைந்த சிந்தையையும், பாரபட்சமற்ற நியாயமான விதிமுறைகளையும் அவர்கள் பெரிய விஷயமாக எண்ணவில்லை. எனவே, நல்ல ஒரு தேவனாகப் பார்க்கப்பட்டவர், பயங்கரமான ஒரு தேவனாக வெளிப்பட்டதைக் காண போது அதனை எதிர்கொள்ள இயல வில்லை. நேர்ந்த, அன்பராக வந்து மீட்டவர், அக்கினியாக எரிந்ததை அவர் களால் சகித்துக் கொள்ள இயலவில்லை. ஆம். தேவனை நல்லவராக மட்டுமல்ல, நீதி நிறைந்த பரிசுத்தராகவும் பார்த்து ஜாக்கிரதையோடு வாழப் பழகுவோம்.

பாடுகளின் பாதையில் நாம் கற்ற பாடங்களே
பிறர் வெற்றி பெற நாம் கொடுக்கும் ஆயுதங்கள்

சூழ்நிலை தடையல்ல

தானியேல் 1:1-21

தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தீர்மானம் பண்ணி... தானியேல் 1:8

11 தீமோத்தேயு 2:1-15

தேவனுக்குப் பிரியமாக வாழவேண்டும் என்ற தீர்மானத்தை அஸ்திபாரமாகக் கொண்ட மனிதன், சூழ்நிலையின் நிர்பந்தங்களுக்கு அடிபணியமாட்டான். அவன் எந்தச் சூழ்நிலையில் வாழ நேரிட்டாலும், அந்தச் சூழ்நிலைகளோடு சமரசம் செய்து போகமாட்டான். தேவன் குறிப்பிட்ட விதமான ஒரு வாழ்க்கை முறையை வாழ அழைத்திருந்தால் மாறுபட்ட சூழ்நிலைகள் அந்தவித வாழ்க்கைக்குத் தவிர்க்க முடியாத தடைகளாயிருக்க முடியாது. அதனை அவன் நிரூபிக்க ஆவலாயிருப்பான். வாழ்க்கைத் தரங்களை நிர்ணயிப்பது அவன் வாழ்கின்ற இடம் அல்ல. அவனுடைய இதயம்தான் அதனை நிர்ணயிக்கும் என்ற நம்பிக்கையில் அவன் நிலைத்திருப்பான்.

அத்தகைய ஒரு கொள்கை சார்ந்த மனிதன்தான் தானியேல். அவன் தேவனுடைய விதிகளை விட்டு விலகி வாழும் மனிதர்கள் நிறைந்த பாபிலோன் அரண்மனையில் இருந்தான். ஆயினும் அவன் அறிந்திருந்த தேவனுடைய விதிகளை விட்டுச் சிறிதும் விலகாமல் வாழ்ந்து காட்டினான். கர்த்தருக்குப் பிரியமாக வாழவேண்டும் என்ற உண்மையான நோக்குடைய மனிதனை, தேவன் எந்தச் சூழ்நிலையிலும் வெற்றிகாணச் செய்ய முடியும், என்பதற்கு தானியேல் ஒரு ஒப்பற்ற மாதிரியாக விளங்கினான். ஆம் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஏற்படும் தொய்வுகளுக்கு நாம் சில மனிதர்களையும், சூழ்நிலைகளையும் சுட்டிக்காட்டி சமாதானம் அடைகிறோம். அது தவறு. நம்முடைய இதய நிலையே முக்கியக் காரணம். வலுவான தீர்மானமும், அதற்கேற்ற மன ஆர்வமும் இல்லாமையே தோல்விகளுக்கு முக்கியக் காரணம்.

ஓநாய்களுக்கு நடுவில்தான் கர்த்தர் நம்மை ஆடுகளாகத் தெரிந்து கொண்டிருக்கின்றார். முரண்பாடுகளின் நடுவில்தான் நேர்மையாயிருக்க நம்மை அவர் அழைத்திருக்கின்றார். அசுத்த சூழ்நிலைகளின் மத்தியில்தான் பரிசுத்தமாய் வாழ்ந்து காட்டிட அவர் நமக்குப் போதித்திருக்கின்றார். இருளின் நடுவில்தான் வெளிச்சங்களாக விளங்கும்படி நம்மை அவர் நியமித்திருக்கின்றார். அப்படி வாழ்வதற்கான வல்லமையைத் தருவதற்கு அவர் ஆயத்தமாயிருப்பதினால்தான் அவ்விதம் நம்மை அழைத்துள்ளார்.

யோசேப்பு பாவத்தைத் தவிர்க்க முடியாது என்பது போன்ற ஒரு சூழ்நிலையில் இருந்த போதிலும், அவன் பாவத்திற்கு உடன்படாமல் அதனை எதிர்த்து வெற்றிகண்டான். தவறு செய்துவிட்டு அதனை நியாயப்படுத்தப் போதுமான சாக்குப்போக்கு வாய்ப்புகள் இருந்தும், அவன் அவைகளைப் பயன்படுத்த விரும்பவில்லை. தேவனுக்கு முன்பாக எப்படியிருக்க வேண்டும் என்பது மட்டுமே, அவனுடைய இலக்காக இருந்ததால் அவனால் பாவத்தை வெல்ல முடிந்தது.

எப்படியிருக்க வேண்டும் என்பதில் உறுதியாயிருப்பவன், எங்கேயிருக்கிறோம் என்பதைப் பற்றிக் கவலைப்படமாட்டான்.

ஏன் இந்த முரட்டுத்தன்மை?

ஏசாயா 6:1-13

நீ அவர்கள் இருதயத்தைக் கொழுத்ததாக்கி... ஏசாயா 6:10

யூதா – 1-13

என்னுடைய எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் இன்னும் கொஞ்சம் மென்மைத்தன்மையை ஏற்படுத்த நான் முயற்சிப்பதுண்டு. ஆயினும் அவற்றில் கொஞ்சம் முரட்டுத்தன்மையும், சிலரால் விரும்ப இயலாத காரத்தன்மையும் இன்னும் இருப்பதை நான் உணராமலில்லை. சில பிரபல தேவ ஊழியர்களின் புத்தகங்களைப் படிக்கும் போதும், அவர்களின் பிரசங்கங்களைக் கேட்கும் போதும், அவற்றில் புத்த பிட்சுக்களின் மென்மைத் தன்மையை விட அதிகமான மென்மைத் தன்மை இருப்பதைக் காண்கின்றேன். யாரையும் சற்றுகூட சங்கடப்படுத்தாமல், அவர்களால் இவ்வளவு மென்மையாக எப்படித்தான் பேசவும் எழுதவும் முடிகிறது என்று யோசிப்பேன்.

இதற்கு மேல் மென்மைத்தன்மையோடும் இனிமையுணர்வோடும் என்னால் எழுத இயலாது என்று எண்ணுகின்றேன். ஏனென்றால் இது ஒரு பயிற்சி சம்பந்தப்பட்டதல்ல. தேவன் அந்தந்தக் காலகட்டத்திற்கு ஏற்ற வார்த்தைகளைத் தரும் போது, அதனை அந்தக் காலகட்டத்தின் தன்மைக்கேற்றபடிதான் சொல்ல முடியும். இது நான் எப்படிச் சொல்ல விரும்புகிறேன் என்பதல்ல. கர்த்தர் எப்படி எது சொல்லப்படவேண்டும் என்று விரும்புகின்றார் என்பதைப் பொறுத்தது.

சிறு குழந்தைகளைச் சீர்செய்ய விரும்பும் பெற்றோர், மிக மெல்லியதான ஒரு குச்சியினால் அவர்களை மெல்ல அடித்து அதைச் செய்வார்கள். ஆனால் வளர்ந்து விட்ட ஒரு வாலிபனைச் சீர்செய்ய அதே விதமான மெல்லிய அணுகுமுறை பொருத்தமானதல்ல. துர்மார்க்கம் பெருகின காலம் இது. மாய்மாலங்கள் மிகுந்து போன காலம் இது. சத்தியம் பேரளவில் தள்ளுபடியாகிப் போன காலம் இது. விசுவாச விஷயத்தில் நிர்விசாரமும், அலட்சியமும் அதிகரித்துப் போன காலம் இது. மெல்லிய வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க இயலாமல் ஜனங்களுக்கு செவித்தினவு மிஞ்சிப் போன காலம் இது. இது சாதாரண நித்திரையின் காலமல்ல. இது கன நித்திரையின் காலம்.

இது ஏதோ சில தவறுகளை ஏதோ சில தேவ ஊழியர்கள் செய்கிறார்கள் என்று சாதாரணமாக நினைக்கும் காலம் அல்ல. இது தவறுகளையும், குற்றங்களையும், பொய்களையும், தந்திரங்களையும், விசுவாசிகளும், தேவ ஊழியர்களும் வாழ்க்கை முறையாக்கிக் கொண்ட காலம் இது. இந்த நாட்களில் வார்த்தைகளைத் தேன்பாகாகக் கொடுத்தால் பயன்தராது. பிரம்பால் அடித்தால் அன்றி விழிப்படையச் சற்றும் முடியாமல் ஆவிக்குரிய மரத்தநிலை அதிகமாகிப் போன காலம். இந்த நாட்களில் தேவ ஆவியானவர் சற்று முரட்டுத்தனத்தோடும், காரசாரத் தன்மையோடும் செயல்படுவதை நான் விரும்பினாலும் தடுத்துவிட முடியாது.

உன்னிடம் உள்ள குறையை இன்று நீ பார்க்காவிடில்
உன்னிடம் இல்லாத குறையை ஊரார் விரைவில் பார்ப்பார்கள்.

ஜீவ நீரோடை

மிஞ்சுவது

1 சாமுவேல் 30:8-19

அனேகர்... பின்வாங்கிப் போனார்கள்...
யோவான் - 6:66

யோவான் 6:1-71

அநேகர் அற்புதமான காரியங்களைத் தேடுவதும், பெறுவதுமே ஆழமான வல்லமையான ஆவிக்குரிய வாழ்க்கை என எண்ணுகின்றனர். அநேகர் தங்களின் வாழ்க்கைத் தேவைகளைக் கேட்டு ஜெபிப்பதையும், அதற்காக கர்த்ரை விசுவாசிப்பதையுமே முழு ஆவிக்குரிய அனுபவமாகக் கொண்டுள்ளனர். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை கர்த்தருடைய நித்திய நோக்கை மையமாகக் கொள்ளாமலும், அவருடைய சத்திய நெறிகளின்படி வாழ்ந்து கனி கொடுப்பதை முக்கியமாகக் கொள்ளாமலும் போகும்போது, அந்த வாழ்க்கை தேவ உறவில் நிலைத்திருக்க இயலாது. சரீரப்பிரகாரமான தேவைகளைத் தேடுவதிலேயே நம்முடைய இறைவாழ்க்கை முழுவீச்சாக இருக்கும்போது, ஆண்டவரோடு ஐக்கியத்தில் தொடர்வது இயலாத காரியம்.

யோவான் 6-ம் அத்தியாயத்தைக் கருத்துடன் தியானித்தால் ஆழமான சத்தியங்கள் விளங்கும். அங்கே ஐந்து அப்பங்களைக் கொண்டு ஐயாயிரம் பேருக்கு இயேசு போஜனம் கொடுக்கின்றார். உடனே மக்கள் அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அவரை ராஜாவாக ஏற்றுக்கொள்ள விரும்பினார்கள். மறுபடியும் அதுபோன்ற ஒரு அற்புதத்திற்காக அவரை ஆவலோடே தேடினார்கள். ஆனால் அவரோ மறுபடியும் ஒரு அற்புதத்தைச் செய்ய விரும்பவில்லை.

அதற்குப் பதிலாக உலகப்பிரகார உணவை அல்ல, நித்திய வாழ்விற்குத் தேவையான உணவைத் தேடுங்கள் என்று போதிக்கத் துவங்கினார். தம்மை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மையை விளக்கினார். நித்திய வாழ்விற்கு அவசியமான உபதேசங்களைப் போதித்தார். ஆனால் மக்களுக்கு அது சரியாக விளங்கவில்லை. அவர்கள் அதுபோன்ற போதனைகளை விரும்பவுமில்லை. அவர்கள் எதிர்பார்த்ததெல்லாம் அற்புதமான செயல்களை மட்டுமே, எனவே ஆயிரக்கணக்கில் பின்பற்றியவர்கள், பின்வாங்கிப் போனார்கள்.

அநேகருடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் நோக்கமெல்லாம் அற்புதங்களையும், அதிசயங்களையும் மையமாகக் கொண்டுள்ளது. எனவே ஒரு நிலைவரமான மனதுடன் இயேசுவின் பாதையில் அவர்களால் தொடர்ந்து செல்ல இயலவில்லை. ஏனென்றால் அவர்களின் இதயம் இயேசுவின் நித்திய வாழ்வின் போதனைகளால் சரியாக ஈர்க்கப்படவில்லை. ஆம். இயேசு அற்புதம் செய்வது உண்மை. ஆனாலும் அதனுடைய அடுத்தபடி அவரை முழுமையாக ஏற்றுக்கொண்டு, அவருடைய போதனைகளைக் கைக்கொண்டு வாழ்வதாகும். ஆனால் உலகப்பிரகார நன்மைகளையே எதிர்பார்ப்பவர்கள் கொஞ்ச நாள் மட்டுமே நிலைத்திருப்பார்கள். உண்மை உபதேசங்களைக் கேட்க மனதின்றிப் பின்வாங்கிப் போவார்கள். அங்கே மிஞ்சுவது “நீரே போதும்” என்று வந்த சீடர்கள் மட்டுமே. நீங்கள் அதில் ஒரு சீடரா?

இறைவனிடம் அற்புதங்களை எதிர்பார். ஆனாலும்
அற்புதங்களில் மட்டுமே அவரைப் பார்க்க எண்ணாதே.

ஜீவ ஓடை

இருளை விட்டு ஓடாமல்

நீதிமொழிகள் 8:1-21

இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக்கூடாதென்று நான் எழுதவில்லை – 1 கொரிந்தியர் 5:10

1 கொரிந்தியர் 5:1-13

ஒருவர் தினமும் புதிது புதிதாகப் பலரைச் சந்தித்துப் பேசுவார். பலரைக் குறித்து நன்றாகத் தெரிந்து கொள்வார். ஆனால் யாரோடும் அவருக்கு நல்ல தொடர்புகளோ, பழக்கங்களோ, நட்புகளோ கிடையாது. ஏனென்றால் அவர் யார் யாரோடு பழகுவது நல்லதல்ல, யார் யாருடைய நட்பு தனக்கு நன்மைதராது என்ற கண்ணோட்டத்திலேயே எல்லோரையும் அணுகுவார். எனவே தன்னுடைய நட்பிற்கும், ஐக்கியத்திற்கும் ஏற்றவர்களாக யாரையும் அவரால் பார்க்க முடிய வில்லை.

எங்கெல்லாம் வெளிச்சம் இருக்கிறதோ அங்குதான் நான் எரிந்து பிரகாசம் கொடுப்பேன் என்று சூரியன் சொன்னால் ஒரு இருண்ட உலகம்தான் மிஞ்சும். எந்தத் தவறான மனிதராலும் எனக்கு ஒரு பாதிப்பும் வந்துவிடக்கூடாதே என்ற சிந்தனை அவசியமே. அதே வேளையில் என்னுடைய நல்ல வாழ்க்கையால் மற்றவர்களுக்கு ஏதாவது நல்லது நடக்க வேண்டும் என்ற ஆர்வம் மிகவும் அவசியம்.

நாம் யாரோடும் பழகாமல், பேசாமல், தொடர்பு வைக்காமல் நம்மைத் தனித்தீவில் கொண்டு நிறுத்திக் கொண்டால், நம்மைச் சரியாக வைத்துக் கொள்ள வாய்ப்புக் கிட்டலாம். ஆனால் நம்முடைய நல்ல வாழ்க்கையால் யாருக்கும் பயன் கிட்டாது. இருளோடு இருளாக இணைந்து போவதுதான் தவறு. இருளின் நடுவில் ஒரு விளக்காக எரிவது தவறல்ல. வெளிச்சம் இருக்கும் இடம் தேடி இருளிலிருக்கின்றவர்களை அழைக்க முடியாது. இருளில் இருக்கின்றவர்களின் நடுவில் போய்த்தான் நாம் வெளிச்சம் காட்ட வேண்டும்.

வியாதியாளர்களை விட்டு விலகிப் போய் வாழ்ந்தால் மருத்துவரின் ஆரோக்கியத்திற்கு நல்லது. ஆனால் அவர் மருத்துவராகயிருப்பதாலே யாருக்கும் பிரயோஜனம் இராது. மனிதர்களுக்கு எச்சரிக்கையாயிருக்க இயேசு சொன்னார். ஆயினும் மனிதர்களை விட்டு அவர் விலகிப் போய் எங்கோ ஒரு மலையிலோ, காட்டிலோ உட்காரவில்லை. அவர் மனித கூட்டத்தின் நடுவிலேயே செயல்பட்டார். ஆம். நம்முடைய நல்ல நிலைமையினால் யாருக்காவது பயன் ஏற்பட வேண்டும் என்ற தாகம் நமக்கு அவசியம். இருளுக்கும் ஒளிக்கும் சம்மந்தம் இல்லைதான். ஆனாலும் இருளின் நடுவில்தான் வெளிச்சம் வேலை செய்தாக வேண்டும். ஆம். பிறரால் நாம் கறைபட்டுவிடல் கூடாது என்ற கரிசனையோடு, நம்மால் பிறர் பரிசுத்தமாக வேண்டும் என்ற கரிசனையும் அவசியம்.

நல்லதைப் பகைவனிடம் பார்த்தாலும் மெச்சிடத் தயங்காதே
தீயதை நண்பனிடம் பார்த்தாலும் சுட்டிக்காட்டத் தவறாதே

தகப்பனின் தரிசனம்

சங்கீதம் 103:1-22 | **தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல... *சங்கீதம் – 103:13*** | கலாத்தியர் 4:1-16

நாம் தேவனை பாசமிகு தந்தை என அறிந்திருக்கிறோம். ஆனால் நம்மில் அநேகர், தேவன் என்றால் நாம் கேட்கும் நன்மையானவைகளை நமக்குத் தந்து நம்மை ஆதரிக்கின்ற ஒருவர் என்ற நம்பிக்கை நிலையை தாண்டிச் செல்வதில்லை. நாம் கேட்டதைத் தருவதில் மட்டுமே அவருடைய அன்பையும், இரக்கத்தையும் புரிந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் தகப்பன் என்பவர் தன் பிள்ளைகள் கேட்பவைகளைக் கொடுத்து, ஆதரித்து உற்சாகப்படுத்துகிறவர் மட்டுமல்ல. தன் பிள்ளைகள் மேல் ஒரு தரிசனத்தையும், திட்டத்தையும் கொண்டிராத ஒரு தகப்பனை நல்ல தகப்பன் என்று கூற முடியுமா? ஆம். ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்குப் பல நன்மை களைச் செய்கிற அதே வேளையில், அவர்கள் எப்படி வளர வேண்டும். எப்படி மாற வேண்டும். எப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு வந்து சேர வேண்டும் என்ற கனவுகளையும் உடையவனாயிருப்பான்.

ஆம். தேவன் நம் தந்தையென்றால் ஏதோ நாம் கேட்கிற நன்மை களைத் தருவதுதான் அவருடைய அன்பின் பரதிபலிப்பு என்றும், அதுதான் அவர் செய்கின்ற வேலை என்றும் எண்ணிவிடக்கூடாது. கர்த்தர் நம் மேல் ஒரு பெரிய தரிசனத்தையும், நோக்கத்தையும் வைத்திருக்கின்றார். அதனை உணர்ந்தவர்களாக நாம் அவருடைய வழி நடத்துதலின்படி செயல்படும் போதுதான் தேவனுடைய உள்ளம் மகிழ்கிறது.

கானகத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் பயணம் செய்தபோது, அவர்களுக்குப் பல நன்மைகளைத் தேவன் செய்தார். ஆயினும் அவர்களுடைய தேவைகளைத் தருவது மட்டுமே அவரது நோக்கமாயிருக்கவில்லை. அவர்கள் மேல் அவர் ஒரு தரிசனத்தை வைத்திருந்தார். அவர்கள் தேவனுடைய கட்டளைகளின் படி நடக்கின்ற மக்களாக மாறி, கானான் தேசத்தில் ஆசீர்வாதமாக வாழ வேண்டும். ஆனால் அவர்களுக்கு அந்த தரிசனம் இல்லை. கேட்டதெல்லாம் கிடைப்பதுதான் அவர்கள் அறிந்த ஆன்மீகமாகவும், அவர்களின் எதிர்பார்ப்பாகவும் இருந்தன. எனவே தேவன் அவர்களுக்குத் தந்தையாக இருந்தும் அவர்கள் வாழ்வடையவில்லை.

நமக்கு நன்மை செய்கின்ற தந்தையாகிய தேவன், நாம் அவருடைய பிள்ளைகளுக்கேற்ற தகுதி நிலையோடு இந்த உலகில் ஓர் உயர்தர வாழ்க்கையை வாழ்ந்து, அவருடைய மகிமையின் ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று விரும்புகிறார். நமக்கும் அதே வித தரிசனப் பார்வை இருந்தால்தான் தந்தையோடு நம் உறவு தொடர்ந்து நல்லாசீர்வாதங்கள் அடைய முடியும்.

பரிசுத்தத்தோடு தொடர்பில்லாத தரிசனமுடையவன் மேல் தேவனுடைய கரிசனை செயல்படாது.

ஜீவ நேரம்

எப்படி வாழ வேண்டும்?

சங்கீதம் 78:1-8 | **பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு...**
சங்கீதம் 78:4 | எபிரெயர் 2:10-18

ஒருவர் இவ்விதம் சொன்னார். எங்க பெரியப்பா அவரோட பிள்ளைகளுக்கு நிறையச் சொத்து சேர்த்து வைத்தார். ஆனால் அவரோட பிள்ளைகளுக்கு அவற்றை வைத்து நன்றாக வாழத் தெரியல. எப்பப் பார்த்தாலும் அங்கே சண்டையும், சச்சரவும்தான். ஆனால் எங்க அப்பா எங்களுக்கு எதையும் சம்பாதிச்சு வைக்கல. ஆனால் நாங்க சண்டை சச்சரவு இல்லாம ஒருத்தருக்கொருத்தர் உதவியாயிருந்து நன்றாக வாழ்கின்றோம். ஏனென்றால் எங்க அப்பா எப்படி வாழணும் என்பதை எங்களுக்கு மிக நன்றாகச் சொல்லிக் கொடுத்திருக்காரு."

சாலொமோன் இராஜாவுக்கு தேவன் மிக அதிகமான செல்வங்களையும் நல்ல சூழ்நிலைகளையும் கொடுத்திருந்தார். ஆயினும் சாலொமோனுக்கு அதனை நன்றாக வைத்துப் பயன்படுத்தத் தெரியவில்லை. ஏனென்றால் வாழ்க்கையை எப்படிச் சுகபோகமாக அனுபவிக்கலாம் என்று யோசித்து அவன் செயல்பட்டானேயன்றி, வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்று அறியவில்லை. அறிவு ரீதியாக அநேகருக்குப் பயனுள்ள பல நல்ல நெறிகளைச் சொல்லிக் கொடுத்தும் சரியாக வாழத்தெரியாத ஒரு மனிதனே அவன்.

தாவீது சாலொமோனைப் போல அரண்மனைச் சூழலில் பிறந்து வளர்ந்தவன் அல்ல. அதே வேளையில் தேவ உறவின் வாயிலாக வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருந்தான். தேவன் அவனுக்கு நல்ல அனுபவக் கல்வியைக் கொடுத்து, மேடுபள்ளமான வாழ்வின் சூழ்நிலைகளில் சரியாக வாழ உதவினார். சாலொமோன் தேவனிடத்திலிருந்து ஏராளமாகப் பெற்றவன். ஆனால் எதையும் தனிப்பட்ட தேவ உறவினால் கற்றவன் அல்ல. எனவே அமைதி நிறைந்த ஒரு நாட்டை அமைதியிழந்த நாடாகத்தான் மாற்ற முடிந்தது. தேவன் தம்முடைய அன்பின் உறவில் வாழ விரும்புகின்றவர்களுக்கு ஏராளமாக வாரி வழங்குவதைவிட, அவர்களை எந்தச் சூழ்நிலையிலும் நன்றாக வாழ்வதற்குப் பழக்கவே அதிகமாக விரும்புகின்றார். இன்றைய கிறிஸ்தவர்கள் தேவனிடத்திலிருந்து எவ்வளவு பெறலாம் என்றே யோசிக்கின்றனர். ஆனால் தேவனோ நமக்கு எப்படிச் சரியாக வாழ்வது என்பது தொடர்பான உயர்ந்த ரகக் கல்வியைக் கொடுக்கவே அதிக ஆர்வமாயிருக்கின்றார்.

உண்மையற்ற ஆயிரம் நண்பர்களைச் சம்பாதிப்பதைவிட உண்மையுள்ள ஒரு சிலருக்கு நீ நண்பனாவதே மேன்மை.

செப்டம்பர் 26

ஜீவ நிரோடை

இரண்டு வகைத் தாழ்மை

உபாகமம் 8:1-6

அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி...
உபாகமம் 8:3

யாக்கோபு 4:1-10

ஆவிக்குரிய நிலையில் தாழ்மை என்பது இரண்டு வகைப்படும். ஒன்று ஒருவர் தன்னுடைய ஆன்மீக நிலைக்காக அல்லது, தேவன் மேல் கொண்ட பற்றிற்காகத் தானே முன்வந்து உருவாக்கிக் கொள்ளும் தாழ்மை. இன்னொன்று தேவன் ஒருவரைப் பலவித சோதனைகளில் நடத்தி, அனுபவங்கள் மூலமாக ஒருவருக்குள் ஏற்படச் செய்கின்ற தாழ்மை.

முதல் வகைத் தாழ்மையை ஒரு மனிதன் மாறுகின்ற சூழ்நிலைகளில் விட்டுவிடும் தருணங்கள் வருவதுண்டு. ஆனால் இரண்டாவது வகைத் தாழ்மை ஒரு மனிதனின் இரத்த ஓட்டத்தில் கலந்து இயல்பாகி விடுகிறது. தேவன் தாம் விரும்புகின்ற மக்களை இரண்டாம் வகைத் தாழ்மைக்கு நேராக வழி நடத்துகிறார் என்பது உண்மை. தேவன் நம்மை உயர்த்த விரும்புகின்றாரென்றால், முதலில் நாம் தாழ்ந்து போகத்தக்க சூழ்நிலைகளை அவர் அனுமதிக்கின்றார். அங்கே நாம் உண்மையிலேயே ஒரு தாழ்வான பலவீன நிலையில் இருப்பதை அறியச் செய்கின்றார். நாம் தேவனைத் தேடி அவரைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டிய ஒரு தேவை நிலையில் இருப்பதை நாம் உணர்ந்துகொள்ளச் செய்கின்றார்.

தாவீது துவக்க காலத்திலேயே இறைப்பற்றின் விளைவாகத் தாழ்மையாக வாழ்ந்தவன்தான். கோலியத்தோடு பேசும்போது அவன் தேவனை உயர்த்தித் தன்னைத் தாழ்த்தினான். (1சாமு-17:45, 46) சவுல் ராஜா தன் மகளை அவனுக்குக் கொடுக்க முன்வந்த போது கூட, அவன் தாழ்மையுணர்வின் விளைவாக, தான் அதற்குத் தகுதியானவன் அல்ல என்றே கூறினான். (1 சாமு-18:18)

ஆயினும் தேவன் அவனைப் பலவித சோதனையான பாதைகளில் நடத்தி அவனுக்குள் இயல்பான தாழ்மையுணர்வு ஏற்படும்படி செயல்பட்டார். இயற்கையாகவே ஆற்றல்கள் பல பெற்றிருந்த அவன், சோதனைகளின் விளைவாக கர்த்தர் தனக்காக எதையாகிலும் செய்தாலொழிய, தன்னால் தலைநிமிர்ந்து நிற்க முடியாது என்பதை உண்மையாக உணர்ந்து, தன்னைத் தாழ்த்திக் கொள்கின்ற பக்குவத்தை அடைந்தான். சூழ்நிலைகள் மூலமாக தேவன் அவனுக்குள் உருவாக்கிய தாழ்மை உணர்வுதான், கடைசிவரை கர்த்தரின் கிருபையைச் சார்ந்து நிற்கும்படி அவனை வழி நடத்தியது.

சில நேரங்களில் இறைப்பற்றிற்காக நாம் தாழ்மையாகச் செயல்பட்டாலும், தேவன் ஒரு உண்மையான, வலுவான தாழ்மையை நம்மில் ஏற்படுத்தி நம்மை உயர்த்துவதற்காக, சோதனைகளின் பாதையை அனுமதிக்கிறார். அவை நன்மைகளையே கொண்டு வரும்.

தாழ்த்திக் கொள்கின்ற நிலையில் நீ நல்லவனாயிரு. உன்னை உயர்த்த வேண்டிய நிலையில் தேவன் வல்லவராயிருப்பார்.

தேவன் அன்பானவரா?

சங்கீதம் 18:1-20

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள... எபேசியர் 3:19

எபேசியர் 3:9-21

தேவன் நம்மிடம் அன்பாயிருப்பது என்பது வேறு. தேவனுடைய அன்பினால் நாம் பயன் அடைவது என்பது வேறு. நாம் பாவிகளாயிருந்தாலும் தேவன் நம்மை நேசிக்கின்றார் என்பதே உண்மை. ஆனால் நாம் பாவிகளாயிருந்து கொண்டே அவருடைய அன்பினால் எந்த நன்மையையும் பெற முடியாது. கெட்ட குமாரன் உவமையில் நாம் பார்க்கும் தந்தை, மகன் தன்னை விட்டு தூரமாகிப் போய் துன்மார்க்கமாக வாழ்ந்த போதிலும் அவன்மேல் அவருக்கு நல்ல அன்பு இருந்திருக்கின்றது. இல்லையென்றால் மகனைத் தூரத்தில் கண்ட மாத்திரத்தில் ஓடிப் போய்க் கட்டி அணைத்து முத்தம் கொடுத்திருக்க முடியாது.

ஆயினும் தகப்பனை விட்டு விலகிச் சென்ற மகன் மறுபடியும் தகப்பனிடம் வந்த பின்புதான் அந்த அன்பை அனுபவிக்க முடிந்தது. மகன் மேல் அன்பான எண்ணங்களோடு அந்தத் தகப்பன் நீண்ட காலமாக இருந்தும், அந்த அன்பினால் அந்த மகன் பரவசமடைந்தது அவன் திரும்பி வந்த பிறகே.

நாம் எங்கிருந்தாலும் எப்படியிருந்தாலும் நம்மைக் குறித்து தேவன் அன்பான எண்ணங்களோடுதான் இருக்கின்றார். ஆனால் அந்த அன்பு அவருடைய ஆள்தத்துவத்தின் ஒரு தன்மை. அதைக் குறித்த அறிவு மட்டும் நமக்கு நன்மை தராது. வாழ்க்கையில் சில நேரங்களில் நாம் மனரீதியாக மிகுதி யாக வருத்தப்பட்டுக் கொண்டிருக்க நேரிட்டது, அவர் நம்மை நேசிக்கவில்லை என்பதால் அல்ல. அந்த நேசத்தின் பலனை அனுபவிக்கும்படி நாம் அவருக்கு அருகாமையில் இல்லாமல் போனதே காரணம்.

சில நேரங்களில் தேவன் அன்பாயிருந்தால் இப்படியெல்லாம் நிகழுமா? இப்படியெல்லாம் நாம் விசனப்பட்டு வாழ நேரிடுமா? என்றெல்லாம் மனம் கேள்வி கேட்கின்றது. ஆனால் நாம் அவருக்கு அருகில் இருக்கின்றோமா? அவருடைய பிரசன்னத்தை உணரும் விதமாக அவருக்கு நெருக்கமாக வரப் பிரயாசப்படுகின்றோமா? நாம் ஐரோப்பிய குளிர் பிரதேசத்தில் நின்று கொண்டு அரேபியாவில் அதிக வெம்மை என்றால் எனக்கேன் குளிருகிறது என்று கேட்பது சரியாயிராது. சில நேரங்களில் நாம் அமைதியற்றவர்களாகவும், நம்பிக்கையற்றவர்களாகவும் சோர்ந்து போய் வாழ்வதற்கு உண்மையான காரணம் நம்முடைய பிரச்சினைகளல்ல. நாம் தேவனுடைய அன்பை ருசிக்கும் அளவிற்குத் தேவனுக்கு நெருக்கமானவர்களாக வாழவில்லை என்பதே உண்மை. தேவ பிரசன்னத்தை விட்டு ஏதோ ஒன்று நம்மைத் தூரமாக்கி வைத்திருக்கின்றது என்பதே உண்மை.

இறைவனுக்கு நீ கொடுப்பதைப் பிறர் பார்க்க விரும்பாதே
இறைவன் உனக்குத் தந்ததைப் பிறர் பாராமல் மறைக்காதே.

ஜீவ நீரோடை

தவறான மனநிலை

சங்கீதம் 58:1-11

சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால்...
யோவான் – 8:44

யோவான் 8:34-50

சிலர் நம்மை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை? சிலரால் நம்மை ஒருபோதும் ஏன் நேசிக்க இயலவில்லை? சிலரால் ஏன் ஒரு போதும் நாம் செய்யும் நல்ல விஷயங்களை நல்லதாக ஒத்துக் கொண்டு பாராட்ட இயலவில்லை? நம்மைத் தவறாகப் புரிந்துகொண்டதாலா? நம்முடைய செயல்பாடுகளைக் குறித்த தப்பித மான அபிப்பிராயமா?

இல்லை, இல்லை, இல்லவே இல்லை. அவர்கள் நம்மைத் தவறாகப் புரிந்து கொள்ளவில்லை. அவர்களுக்கு நம்முடைய செயல்கள் தப்பிதமாகத் தோன்றவும் இல்லை. பின்னர் ஏன் அவர்கள் நம்மையும் நம்முடைய செயல்பாடுகளையும் ஏற்காமல் இருக்கிறார்கள் என்று கேட்கிறீர்களா? பதில் சொல்கிறேன்.

அவர்கள் தவறாக இருக்கிறார்கள். அவர்கள் தப்பிதமாகச் சிந்திக்கிறார்கள். அவர்களுக்கு உண்மை தெரியாத பிரச்சினை அல்ல. அவர்கள் உண்மையில் லாதவர்கள். அதுவே பிரச்சினை. அவர்களுக்கு நம்முடைய நற்காரியங்கள் உண்மையில் தவறாகத் தோன்றவில்லை. அவர்களுக்கு நல்லதை விரும்புகின்ற, ஏற்கின்ற மதிக்கின்ற, பாராட்டுகின்ற ஒரு உண்மையான மனநிலையோ, மனோபாவமோ இல்லை. எனவே நம்மையும், நம்முடைய நற்காரியங்களையும் அசட்டை செய்கின்றார்கள்.

இவர்களிடம் போய் எவ்வளவுதான் நம்முடைய உண்மையையும், நேர்மையையும் நிரூபித்துக் காட்டினாலும் பயனில்லை. அவர்கள் அவைகளை அறியாததினால் அல்ல. அவைகளை விரும்பாததினாலேயே நம்மை வித்தி யாசமான கண்களோடும், வித்தியாசமான உணர்வுகளோடும் பார்க்கின்றார்கள். எனவே இவர்களைக் குறித்துக் கசப்பதும், மன விசனப்படுவதும் தேவையற்ற காரியமே. அன்றைய மதத்தலைவர்கள் இயேசுவை ஏற்கவில்லை. அவருடைய நற்செயல்களை அங்கீகரிக்கவும் இல்லை. சத்தியம் விளங்காததால் அல்ல. சத்தி யத்தை அவர்கள் விரும்பாததே காரணம். அவர்களின் கண்களுக்கு முன்பாக மறுக்க முடியாத அளவிற்கு இயேசு அற்புதமான காரியங்களைச் செய்திருந்தும், அவர்கள் அவரை அசட்டை செய்யக் குறியாயிருந்தார்களேயன்றி, அங்கீகரிக்க மனதைச் சாய்க்கவில்லை. ஏனென்றால் அவர்களிடம் சத்தியம் இல்லை. சத்திய வாஞ்சையும் இல்லை. சத்தியத்தை ஏற்க அவர்களால் இயலவில்லை.

தவறாகப் புரிந்து கொண்டவர்களும், தப்பித அபிப்பிராயங்கொண்டவர்களும், ஒரு நாள் தங்கள் தவறைப் புரிந்து கொள்வார்கள். ஆனால் தவறான மன நிலையோடு இருக்கிறவர்கள் எப்போதும் சரியானதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே அவர்களுக்கு நம்மை நிரூபிப்பதற்கு எடுக்கும் சிரமங்கள் தேவையற்றவையே.

இறைவனின் கண்களுக்கு முன்பாக சரியாகத் தோன்ற விரும்புகிறவன், மனிதர்களின் கண்கள் தன்னைத் தவறாகப் பார்க்கிறதே என்று கவலைப்படமாட்டான்.

பிறர் பார்க்கணும்

தானியேல் 6:1-8

விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல். – மத்தேயு 5:15

மத்தேயு 5:14-28

சில தரமான பொருட்களை தயாரிக்கும் கம்பெனிகள் உலகமெங்கும் பிரசித்தி பெற்று மிகுதியாக வளர்ந்திருக்கின்றன. அவர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு எங்கும் அதிகமான கிராக்கி உள்ளது. கெண்டகி பிரைட் சிக்கன் (KFC) என்ற அமெரிக்க ஸ்தாபனம் இன்று உலகமெங்கிலும் அறியப்படாத பகுதிகள் இல்லை. ஆனால் இவர்களை விட மிகத் தரமாகச் சிக்கன் அயிட்டங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் உண்டு. ஆனால் அந்தக் கம்பெனிகளை வெகுசிலரே அறிவார்கள். உலகமெங்கிலும் எவருக்கும் தெரியாமலிருக்க முடியாது பெப்சி கோலாவும், கோகோ கோலாவும். ஆனால் அதைவிடத் தரமான சிறந்த பானங்கள் தமிழ்நாட்டிலேயே உண்டு. ஆனால் அவை தமிழ்நாட்டிலே கூட எல்லாருக்கும் தெரியாது. ஏனென்றால் தரமானவைகளாயிருந்தும் அவற்றை வெகு ஜனங்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதில், சில கம்பெனிகள் மட்டுமே ஜெயித்திருக்கின்றன.

விளக்கைக் கொளுத்தி விளக்குதண்டின் மேல் வைத்தால்தான் அங்கே வெளிச்சத்தைக் காணமுடியும் என்பதை இயேசு விளக்கினார். ஒரு விஷயம் நல்லதாயிருந்தால் மட்டும் போதாது. அந்த நல்ல விஷயம் நான்கு பேருக்குத் தெரிந்து பயன்பெறும் விதமாக அவை பலர் நடுவில் கொண்டு செல்லப்பட வேண்டும். தானியேலின் நல்ல விதமான வாழ்க்கை அவனுக்கு மட்டுமே தெரிகின்ற அளவில் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் அடங்கவில்லை. அதனை ஒரு நாடே அறியும்படி அது பலர் நடுவில் கொண்டு செல்லப்பட்டது.

சிலர் நல்லவர்கள்தான். நற்சுபாவமுடையவர்கள்தான். தூய்மையான இருதயமுடையவர்கள்தான். ஆனால் அவர்கள் நல்ல வாழ்க்கையினால் யாரும் பயனடைவதில்லை. அவர்களுடைய நல்ல குணாதிசயங்கள் யாருக்கும் முன் மாதிரியாவதில்லை. ஏனென்றால் அவர்கள் தங்களின் பரிசுத்தத்தைத் தற்காத்துக் கொண்டு தனியாக இருந்து விடுகின்றார்கள். மக்கள் கூட்டங்களுக்குள் அவர்கள் செல்வதில்லை. நான்கு பேருக்குத் தங்களின் நல்ல குணங்கள் அறியப்படும் விதமாக யாரோடும் ஐக்கியம் கொள்வதில்லை.

உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை என்பது மலையின் மேலிருக்கின்ற பட்டணம் போலிருக்க வேண்டுமேயன்றி, காட்டுக்குள் தவம் புரியும் யோகியைப் போலிருக்கக்கூடாது. வெளியரங்கமாக வாழ்ந்து காட்டவே நாம் அழைக்கப்படுகின்றோம்.

**இயேசுவின் கருத்துக்களைக் கடைப்பிடிப்பதல்ல
இயேசுவின் கரங்களைப் பிடித்து நடப்பதே கிறிஸ்தவம்.**

ஜீவ தீர்த்தம்

பிரதிஷ்டை

சங்கீதம் 84:1-12

உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள் – *சங்கீதம்* – 84:1

லூக்கா 19:1-10

கிறிஸ்தவர் ஒருவருடைய வீடு பிரதிஷ்டைக்காக தேவ ஊழியர் ஒருவர் வந்து பிரதிஷ்டை ஆராதனை நடத்தினார். வீட்டின் ஒவ்வொரு அறையிலும் தண்ணீரை இயேசுவின் இரத்தத்திற்கு அடையாளமாக தெளித்து எல்லா இடங்களிலும் தேவப்பிரசன்னம் நிரம்பும்படி ஜெபித்தார். ஜெபத்தின் இறுதி வேளையில் அந்த தேவ ஊழியர் "இதோ இந்த வீட்டின் ஒவ்வொரு அறையும் தேவப்பிரசன்னத்தினால் நிரம்புவதைக் காண்கிறேன். இந்த வீட்டில் தேவமகிமை மேகம் போல என்றென்றும் தங்கியிருக்கப் போகிறது" என்று பரவசத்தோடு கூறினார்.

ஆனால் அவர் சொன்னது உண்மையாயிருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் அந்த இல்லத்தைக் கட்டித் தங்கப் போகிற அந்த குடும்பத்தார் யாரும் அதுவரை இரட்சிப்பின் அனுபவத்தையோ, பரிசுத்த வாழ்வின் அனுபவத்தையோ தேடிப் பெறாதவர்கள். கர்த்தருக்காகத் தங்கள் வாழ்க்கையைப் பிரதிஷ்டை செய்து கர்த்தருக்காக வாழ வேண்டிய அவசியத்தை உணராதவர்கள்.

தேவப்பிரசன்னம் என்பது தேவன் எங்கே தம்மை வெளிப்படுத்துகிறாரோ அதன் விளைவாக ஏற்படுகிற ஒரு தெய்வீக நிலையின் நிறைவாகும். தேவப் பிரசன்னம் மனிதர்கள் வழியாகத்தான் வெளிப்பட முடியும். ஏனென்றால் மனிதர்கள்தான் தேவன் தங்கியிருக்க விரும்புகின்ற ஆலயம். மனிதர்கள் தங்களின் இருதயத்தின் உட்பகுதிகளை கர்த்தருக்குத் திறந்து கொடுத்துத் தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் தேவன் தங்கியிருந்து தம்முடைய மகிமை யையும், பிரசன்னத்தையும் வெளிப்படுத்த முடியும்.

அநேகர் தங்களுக்குள் தேவனைத் தங்கியிருக்கும்படி அழைக்க விரும்பாமல், தங்கள் வீட்டிலும், வியாபாரஸ்தலங்களிலும் அவருடைய பிரசன்னத்தைத் தங்க வைக்க விரும்புகிறார்கள். தங்களைக் கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ணும் முன்பு, தங்கள் இல்லங்கள் பிரதிஷ்டை பண்ணப்பட வேண்டும் என எண்ணுகின்றனர். ஆனால் தேவன் கட்டிடங்களில் அல்ல, மனிதர்களிடமே தங்க விரும்புகிறார்.

சிலர் எலிசாவிற்கு சூனேம் ஊராளாகிய ஸ்திரீ மேலறை அமைத்துக் கொடுத்தது போல, தங்கள் வீடுகளில் ஒரு அறையை ஊழியர்கள் தங்குவதற்காகக் கட்டுகின்றனர். தேவ ஊழியர்கள் தங்கள் வீட்டில் வந்து தங்கினால் அது ஆசீர்வாதமாகயிருக்கும் என எண்ணுகின்றனர். நல்ல சிந்தைதான். அதே வேளையில் இவ்வித நற்சிந்தையுடைய பலர் தங்கள் இருதயத்தை இன்னும் ஆண்டவருக்காக முழுமையாகத் திறந்து கொடுக்காதவர்களாக இருப்பது வருந்தத்தக்கது. நம்முடைய வீட்டிலாகிலும், வியாபார ஸ்தலத்திலாகிலும் தேவப் பிரசன்னம் தங்க வேண்டுமானால், அந்த இடங்களை அல்ல. அவர் தங்கியிருந்து செயல்பட விரும்பும் நம்முடைய வாழ்க்கையைத்தான் கர்த்தருக்காகப் பிரதிஷ்டை செய்யவேண்டும்.

மனிதன் இறைவனுக்காகக் கட்டிய மாளிகையில் அவர் இல்லை.
ஏனென்றால் அவர் தங்க விரும்பும் இடம் மனிதனின் மனக்குடிசையே.

போலி கிறிஸ்தவம்

எசேக்கியேல் 36:24-38

நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க... ரோமர் 7:16

ரோமர் 7:11-23

எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ இயலவில்லை. எப்படி வாழக்கூடாதோ அப்படி வாழ்வதைத் தவிர்க்க இயலவில்லை. எவற்றைச் செய்வது நல்லதோ அவற்றைச் செய்ய விரும்பினாலும் முடியவில்லை. எவற்றைச் செய்வது தவறானதோ, அவற்றைச் செய்யக்கூடாது என்று விரும்பினாலும் முடியவில்லை. இது மனிதனுடைய இயற்கையான பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அறிவுரைகளையும், நெறிமுறைகளையும் கற்றறிந்து கடைப்பிடித்து வாழ இயன்றாலும், போதிய வெற்றியில்லை. மத நம்பிக்கை சார்ந்த போதனைகளைப் பெற்றுக் கொண்டாலும், பிரச்சினைக்கு உரிய தீர்வு கிட்டவில்லை.

இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காட்டுவதுதான் கிறிஸ்தவம். மனிதன் எப்படி வாழ்வது தேவனுடைய பார்வையில் சரியாயிருக்குமோ அப்படி வாழ்வதற்கான வழியைக் கிறிஸ்தவம் காட்டுகிறது. மனிதன் எப்படி வாழ்வது தேவனுடைய பார்வையில் தவறாயிருக்குமோ அப்படி வாழ்வதை விட்டுவிட கிறிஸ்தவம் ஆற்றல் தருகிறது.

ஆனால் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அடையாளப்படுத்தி வாழ்கின்றவர்கள் இப்படி வாழ்வது உண்மையா என்ற கேள்வி எழும்புகிறது. கிறிஸ்தவத்தைப் பற்றி பிரமாதமாகப் பேசுகின்றவர்களும், கிறிஸ்தவத்தை நல்ல தீர்வாகப் பிறருக்குக் காண்பிக்கின்றவர்களும் சரியானதோர் வாழ்க்கை முறையில் வெற்றி பெறுவது உண்மையா என்ற கேள்வி நியாயமானது.

உண்மையான கிறிஸ்தவம் ஒருவரிடத்தில் இருந்தால் அவரால் மேற் கண்ட விதமான ஒரு நல்ல வாழ்க்கையை வாழ இயலும். அவரால் சரியான செயல்களைச் செய்ய இயலும். தவறான செயல்களைச் செய்யாதிருக்க இயலும். அவரால் ஜென்ம சுபாவங்களின் வழியில் செல்லாமல், தெய்வீக சுபாவங்களோடு வாழ இயலும். அவர்கள் 100 சதவிகிதம் ஜெயித்துக் காட்டுகின்றார்களா என்ற கேள்விஅல்ல. அவர்கள் ஜெயிக்கின்றவர்கள் என்பதையும், வாழ்ந்து காட்டுகின்றவர்கள் என்பதையும் உறுதிப்படுத்த அவர்களிடம் ஏராளமான நல்ல சான்றுகள் உள்ளன. ஆனால் கிறிஸ்தவர்கள் எல்லோரிடமும் உண்மையான கிறிஸ்தவம் அவர்களிடத்திலிருந்தால் அவர்கள் நல்லதைச் செய்வதிலும், தவறானதைத் தவிர்ப்பதிலும் நிச்சயம் ஜெயம் பெறுவார்கள். அப்படி ஜெயம் பெறாவிட்டால் அவர்களிடம் இருப்பது போலியான கிறிஸ்தவம். அதை உணர்ந்து கர்த்தருக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தினால் அவர்கள் உண்மையான கிறிஸ்தவத்தைக் கிறிஸ்துவிடமிருந்து பெற்று ஜெயித்துக் காட்ட முடியும்.

தவறைக் கண்டு கொள்ளாதவன் நண்பனாயிருந்தாலும், அவனால் உனக்குத் தீமையே
தவறைச் சுட்டிக்காட்டியவன் விரோதியாயினும், அவனால் உனக்கு நன்மையே.

உண்மையான உணர்ச்சியா?

11 சாமுவேல் 12:1-13

அவன் மேல் குற்றஞ்சுமந்ததினால் முகமுகமாய் எதிர்த்தேன்... கலாத்தியர் 2:11

கலாத்தியர் 2:1-21

அரசியல் தலைவர்கள் ஆயிரம் குற்றங்களைச் செய்து, அவை மிக நிச்சயமாக நிருபிக்கப்பட்டாலும், அவர்களின் தொண்டர்களுக்கு அவர்கள் தெய்வங்களைப் போலவே காணப்படுவார்கள். ஒருவர்மேல் வைக்கும் அதிகமான பற்றும், பாசமும், விருப்பமும், அவர் மேல் ஒரு வெறியை ஏற்படுத்தி, அவரின் எந்த ஒரு குற்றத்தையும் நடுநிலைக் கண்ணோட்டத்தோடு பார்க்கவிடாமல் செய்து விடுகின்றன.

ஆனால் உண்மை என்பது பந்தம், பாசம், சொந்தம், விருப்பம் யாவற்றையும் கடந்து மேலோங்கி நிற்க வேண்டிய ஒன்றாகும். அன்பும், பற்றும் மற்றவரிடம் உள்ள தவறையும், குற்றத்தையும் காண விடாமலோ, அல்லது அவற்றை சாதாரணமாக எடுத்துக் கொள்ளவோ நம்மைக் கட்டாயப்படுத்த அனுமதிக்கக் கூடாது. ஆனால் உண்மைகளை விட உணர்ச்சிகள் வலிமையானவை. எனவே தான் சில விஷயங்களில் உண்மைநிலை நமக்குத் தெரிந்திருந்தாலும், உணர்ச்சி அதனைக் கீழே தள்ளி விடுகிறது. நமக்கு வேண்டியவர் என்றால் அவரது தவறை, தவறு என்று பார்க்க எவ்வளவு சிரமப்படுகிறோம். நமக்கு வேண்டாதவர் என்றால், அவரது சரியான செயலைச் சரியானதாகப் பார்க்க எவ்வளவு விசனப்படுகிறோம். ஆனால் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளையாக நாம் வாழ்ந்தால் உணர்ச்சிகளை பின்னே தள்ளிவிட்டு, உண்மைகளுக்கே முதலிடம் கொடுப்போம்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் சபைகளில் காணப்படும் பலவிதக் குறைபாடுகளை இயேசு கடுமையாகச் சுட்டிக்காட்டினார். அங்கே நாம் பார்க்கும் ஒரு விசேஷம் என்னவென்றால் சபைகளில் காணப்பட்ட நல்ல விஷயங்களை மெச்சிய இயேசு, அதே சபைகளில் உள்ள குறைபாடுகளையும், தவறுகளையும் கண்டிக்கத் தவறவில்லை. சபைகளில் தவறான விஷயங்களைக் கண்ட இயேசு அவைகளைக் கண்டித்த அதே வேளையில் நல்ல விஷயங்களை மெச்சிட மறக்கவில்லை. இந்த அணுகுமுறைதான் நமக்கு அவசியம் வேண்டும்.

உணர்ச்சி சார்ந்த உறவைவிட, உண்மையைப் பெரிதாக எண்ணியதால்தான் தாவீதின் பாவத்தை நாத்தானால் சுட்டிக்காட்ட முடிந்தது. இன்னொருவருவடைய நல்லெண்ணத்தைவிட சத்தியத்தைப் பெரிதாக எண்ணியதால்தான் பேதுரு சற்று சமசரப் போக்கில் போனபோது, பவுலால் அதைக் கண்டிக்க முடிந்தது. சற்று நேரத்திற்கு முன்னே “சீமோனே நீ பாக்கியவான்” என்று பேதுருவை புகழ்ந்த இயேசு, அவனுடைய தேவனுக்கு உகந்ததல்லாத ஒரு சிந்தனையைக் கண்டு “பின்னாகப்போ சாத்தானே” என்றும் கடிந்து கொண்டார். (மத்-16:17, 23) மிகவும் வேண்டியவர்களானாலும், அவர்கள் தவறினால் சுட்டிக்காட்டுவதே உண்மையான அன்பு. மிகவும் வேண்டாதவர்களானாலும் அவர்களிடம் உள்ள நல்லதை மெச்சுவதே பண்பு. எதிலும் உண்மையே காரியங்களை நிர்ணயிக்கட்டும்.

தீயதைக் கண்டிக்க யாராலும் கூடும்.
நல்லதை மெச்சிடவோ சிலரால் மட்டுமே கூடும்.

படித்தலும், சிந்தித்தலும்

சங்கீதம் 1:1-6 | **அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்... சங்கீதம் 1:2** | லூக்கா 10:38-42

நான் வேதாகமத்தை வாசிக்க மிக அதிகமான நேரங்களை ஒதுக்கிய காலம் இருந்தது. எந்த இரவாயினும் சில அத்தியாயங்களை படித்து முடிக்காமல் படுக்கைக்குச் செல்லக் கூடாது என்று உறுதியாயிருந்த காலம் இருந்தது. ஆனால் அந்த நாட்களில் நான் பெற்ற தேவனைக் குறித்த அறிவும், ஆவிக்குரிய மனப்பக்குவமும் இன்றைய நாட்களோடு ஒப்பிடும் போது மிகவும் குறைவுதான்.

இப்போது வேதாகமத்தை வாசிக்கும் நேரங்கள் குறைந்து, வேதாகம நாயகராகிய தேவனைக் குறித்து இருதயத்தில் சிந்திக்கின்ற நேரம் அதிகரித் துள்ளது. ஏராளம் வேதாகம அத்தியாயங்களைப் படித்து முடிப்பதில் திருப்தி தேடாமல், தேவனைக் குறித்த பல விஷயங்களை உள்ளபடியே அறிந்து கொள்ள மனதிற்குள் அதிகமாக யோசிக்கவும், சிந்திக்கவும் செய்கிறேன். இதனால் ஆவிக் குரிய பல விஷயங்களில் நல்ல தெளிவினைப் பெறுவதோடு, கர்த்தருக்கு இசைந்த வாழ்க்கையிலும் முன்னேறிச் செல்ல முடிகிறது.

வேதாகம வாசிப்பு மிக அவசியம், வேதாகம ஆராய்ச்சி மிக அவசியம். ஆனால் அதிக அத்தியாயங்கள் படித்து முடிப்பதிலோ அல்லது அதிக வேத ஆராய்ச்சி செய்வதினால் மட்டுமோ தேவனை அறிந்து விட முடியாது. தேவனை நமக்குள் தேட வேண்டும். தேவனோடு சம்பந்தப்பட்ட காரியங்களை அநேக கேள்விகளோடு கருத்தோடு சிந்திக்க வேண்டும். தேவனை நமக்குள் இருக்கின்ற வராகக் காணும்படி வாஞ்சிக்க வேண்டும். அப்போது தேவனை நாம் அதிகமதி கமாக நமக்குள் காணவும், உணரவும், அவருடைய உறவில் மகிழவும் முடியும்.

அதிகமாகப் படித்து விட்டு எதையும் சிந்தியாமல் போவதை விட, கொஞ்ச மாகப் படித்தாலும் அதிகமாக யோசிப்பதே மிக நன்மையானது. அதனால் தேவ உறவின் நிச்சயமும், தேவஅறிவின் அனுபவமும் பெருகி ஆவிக்குரிய வாழ்க்கை அதிகமாக வலிமையடையும்.

கடவுளை நமக்குள் உணர்வதற்கு மட்டுமே விரும்பிச் செயல்படுவதும் சரியல்ல. கடவுள் தொடர்பான விஷயங்களையும், கோட்பாடுகளையும் மட்டுமே ஆராய்ந்து கொண்டிருப்பதும் சரியல்ல. ஒரு சமநிலை அவசியம். அதிகமாக அவரை நமக்குள் தேடி, அதிகமாக அவரைக் குறித்தும் அவருடைய போதனைகளைக் குறித்தும் தியானித்தால் அதுவே சரியானவழி.

*உயர்ந்த கருத்துகளால் உலகத்தைக் கவருவதைவிட
உயர்ந்த வாழ்க்கையால் ஒரு சிலரையாகிலும் கவருவதே சிறப்பு.*

ஜீவ நீரோடை

இதுவும் விக்கிரகமே

1 இராஜா - 18:21-39

கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள் – 1 இராஜா 18:21

1 கொரி - 8:1-13

இஸ்ரவேல் ஜனங்களின் வரலாற்றை வேதாகமத்தில் கவனிக்கும் போது, அவர்கள் அவ்வப்போது பிற மதத்தவர் வணங்கும் விக்கிரங்களை நம்பி அவைகள் மூலம் நன்மைகளைத் தேடினார்கள். எனவே தேவன் அவர்களை ஆசீர்வதிக்க முடியாதது மட்டுமின்றி, அவர்கள் மேல் அவர் பல தண்டனைகளையும் விதித்தார். விக்கிரக ஆராதனை தேவனுடைய பார்வையில் மிகக் கடுமையான பாவமாக இருக்கிறது. ஆனால் இன்றைய கிறிஸ்தவ மக்கள் இதுபோன்ற தவறுகளைச் செய்வதில்லை. பொதுவாக கர்த்தர் மேல் விசுவாசம் வைத்திருக்கிற யாரும் விக்கிரக தெய்வங்களை நாடிச் செல்வதில்லை. ஆனால் விக்கிரக வழிபாடு வேறு பல்வேறு வடிவங்களில் நடைபெறுகிறது.

விக்கிரக வழிபாடு என்றவுடன் ஒரு விக்கிரகத்தைச் செய்து வைத்து வணங்க வேண்டிய கட்டாயம் இல்லை. தேவன் மேல் வைக்க வேண்டிய நம்பிக்கையை நாம் வேறு எதன் மேலாவது வைத்து, அதனை முக்கியப்படுத்தினால் அங்கே விக்கிரக வழிபாடு நடைபெறுகிறது என்றுதான் பொருள்.

சிலர் தேவன் மேலும் அவருடைய வழிகளின் மேலும் நம்பிக்கை வைத்து ஆசீர்வாத நிலைகளை அடைவதற்குப் பதிலாக தங்களின் அறிவுத்திறன், திறமையான அணுகுமுறைகள், மூளை ஆற்றல் ஆகியவற்றில் அதிகமாகச் சார்ந்திருப்பார்கள். இது ஒரு விக்கிரக வழிபாடே. சிலர் தேவனையும், அவருடைய ஆவிக்குரிய ஆலோசனைகளையும் முழுமையாக நம்பி வாழ்வதற்குப் பதிலாக, உலகத்தாரைப் போல நேர்மை, உண்மை, நியாயம் போன்றவற்றிற்கு இடமில்லாத யுத்திகளைக் கையாண்டு உயர விரும்புவார்கள். இதுவும் விக்கிரக ஆராதனைதான்.

சிலர் தேவன் தங்களை உயர்த்த வல்லவர் என்ற விசுவாசத்தில் உறுதியாக நில்லாமல், அரசியல் தலைவர்கள், உயர் அதிகாரிகள் போன்றவர்களுக்கு லஞ்சம் கொடுத்து, தங்களின் காரியங்களை நீதிக்குப் புறம்பாய் முடித்துக் கொள்வதற்கே முன்னுரிமை தருவார்கள். இதன் பெயரும் விக்கிரக ஆராதனைதான். ஆம். உண்மை, நேர்மை, தேவ சார்பு போன்றவைகளில் நம்பிக்கை வையாமல் உலகத்தார் போகிற பாதையிலே நாமும் போய், உலகத்தார் கையாளுகிற தவறான முறைகளையே நாமும் கையாண்டால், அங்கே நாம் உலகத்தாரின் விக்கிரக தெய்வங்களை வணங்குகிறோம் என்பதுதான் உண்மை.

அதுபோல சிலர் தேவனோடு தனிப்பட்ட உறவை வைத்து அவரிடம் வேண்டுவதற்குப் பதிலாக தங்களுடைய ஆசீர்வாதங்களுக்காக ஊழியர்களையும், ஊழிய ஸ்தாபனங்களையுமே அதிகமாகச் சார்ந்திருப்பார்கள். இதுவும் ஒரு விக்கிரக ஆராதனையே. தேவனுடன் நெருங்கி வாழ்ந்து, அவருடைய வார்த்தைகளின்படி செயல்பட்டு உயர்வுகளைத் தேடுவதுதான் தேவையானது. பிற யாவும் விக்ரக ஆராதனைகளே.

எதையும் விட்டு விலகத் தயாரானவனே, இறைவனை விட்டு விலகாதிருக்க விருப்பமாயிருக்கிறான்.

விலைமிக்கது நேரம்

நீதிமொழிகள் - 10:1-17

காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் – எபேசியர் 5:16

எபேசியர் – 5:1-21

ஒரு வாலிபன் சுமார் ஒரு மணி நேரம் யாரோடோ மொபைல் போனில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்து வருத்தமடைந்த ஒருவர் இவ்வளவு நேரம் மொபைல் போனில் பேசுகிறாயே உனக்கு இது நஷ்டமில்லையா என்று கேட்டார். அதற்கு அவன் இதற்கு கட்டணம் கிடையாது. இது ஒரு இலவச ஆபர் என்றான். டெலிபோன் சேவை இலவசம். ஆனால் நீ இவ்வளவு நேரத்தை பயனில்லாமல் வீணாக்குவது உனக்கு நஷ்டமில்லையா என்று கேட்டார் அவர். வாலிபனோ சிரித்துக் கொண்டு பதில் பேச இயலாமலிருந்தான்.

நவீன தொழில் நுட்பம் வானளாவிய வளர்ச்சி கண்டுள்ள இந்த நாட்களில் ஒரு புறம் பல பொருட்களுக்காக பணம் தண்ணீரைப் போல இறைக்கப்படுகிறது. இன்னொரு பக்கம் நேரங்களின் தேவை மிகுந்து போன ஒரு காலகட்டத்தில் மிகுதி யான நேரங்கள் அநியாயமாக வீணாக்கப்படுகின்றன. முன்னரை விட இப்போது பொதுவாக ஜனங்கள் பணத்தை மிகுதியாகச் சம்பாதிக்கின்றார்கள். எனவே அதி கமான செலவு அதிக பாதிப்பைத் தரவில்லை. ஆனால் நேரங்கள் இன்று அதிக மாகிவிட வில்லையே. அப்படியானால் ஒவ்வொரு நிமிடத்தையும் நாம் எவ்வளவு கரிசனையாக யோசித்து, யோசித்து செலவிட வேண்டும்.

தேவையில்லாமலே தினமும் போனில் பேசுதல், ஒரு சில வார்த்தைகளோடு முடிக்க இயன்ற விஷயத்தை ரப்பர் போல இழுத்து நெடு நேரம் பேசுதல், வாட்ஸ் ஆப், ஸ்கைப், பேஸ்புக் போன்ற சமுக வலைத்தளங்களில் தேவையில்லாத விஷயங்களை மிகுந்த நேரம் செலவிட்டு பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றால் அநேகர் மதிப்பு மிக்க நேரங்களை நாசமாக்குகின்றார்கள். அருகிலிருக்கும் மனிதர்களோடு நட்புறவை வளர்க்காமல் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் இருக்கின்ற முகமறியாதவர்களோடு நட்பு வளர்ப்பதில் என்ன மேன்மை உள்ளது? கணவன் மனைவியாக மனதிலுள்ளதைப் பகிர்ந்து கொள்ளாமல், வாட்ஸ் ஆப் மூலமாக குடும்பத்தில் நடப்பதையெல்லாம் ஊராரோடு பகிர்ந்து என்ன பயன்? தேவன் தந்த நேரங்களில் ஒரு பகுதியை தேவ சமுகத்தில் செலவிடாமல் சமூக வலைத் தளங்களில் சிக்கிக் கொண்டு பொன்னான நேரங்களை இழப்பதில் என்ன நன்மை உள்ளது. எல்லாவற்றையும் விட மிக மிக அளந்து உபயோகிக்க வேண்டியது தேவன் தந்த காலங்கள் என்பதை மறவாதிருப்போம்.

தவறைச் சுட்டிக்காட்டுகின்றவனுக்கு நீ விரோதியாகலாம்
ஆனாலும் அவனே நல்ல நண்பன் என்பதை அறியும் நாள் வரும்.

ஜீவ நீரோடை

குறிக்கோள்

1 சாமு – 14:1–17

உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் – பிலி 2:12

பிலிப்பியர் – 2:1–21

வாழ்க்கையில் விருப்பங்கள், ஆசைகள் என்பது வேறு, குறிக்கோள்கள் என்பது வேறு. நாம் பல காரியங்களை விரும்புகிறோம். அவைகளை அடைய வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். ஆனால் சில விஷயங்களில் நாம் விடாப்பிடித்தனத்தோடு எப்படியும் அடைந்து விட வேண்டும் என்று தீவிர சிந்தையோடும் செயல்படுகிறோம். நண்பர் ஒருவர் கார் ஒன்று வாங்க வேண்டும், வீடு கட்ட வேண்டும் என்று நீண்ட காலமாகக் கூறி வந்தார். இப்போது அவர் கார் வாங்கி விட்டார். ஆனால் வீடு கட்டும் விஷயத்தில் இன்னும் அவர் தீவிரம் காட்டவில்லை. ஆம். கார் என்பது அவரது குறிக்கோள். வீடு என்பது ஒரு விருப்பம், அவ்வளவுதான்.

அதுபோலவே பரிசுத்தமாக வாழ்வது என்பதும், தேவனுக்குப் பிரியமாக வாழ்வது என்பதும் நம்முடைய ஆசைகளாக மட்டும் இராமல் அவைகள் குறிக் கோள்களாக மாறவேண்டும். குறிக்கோள்களுக்கு பின்னால்தான் சிரமங்கள் ஏற்கும் மனநிலையும், தீவிரமாகச் செயல்படும் வாஞ்சையும் வலிமையாக இருக்கும்.

அநேகர் தேவனுக்குப் பிரியமாக வாழ ஆசைப்பட்ட போதிலும் அதில் அவர் கள் வெற்றி காணவில்லை. ஏனென்றால் அது வெறும் ஆசையாகத் தொடர்கின்ற தேயன்றி இலக்காக மாறவில்லை. ஆனால் ஆவிக்குரிய வாழ்க்கையில் பரிசுத்த மாக வாழ்வதென்பதும், உண்மையாக வாழ்வது என்பதும், உயர் குணநிலைகளில் வாழ்வது என்பதும் இலக்குகளாக மாறவேண்டும். அப்போதுதான் ஆவிக்குரிய வாழ்க்கை வேகமும், விறுவிறுப்புள்ளதுமாக மாறும். யோசேப்பு, தாவீது, தானி யேல் போன்றோர் தங்களுடைய வாழ்க்கையில் தேவனைப் பிரியப்படுத்தி வாழ் வதில் வெற்றி கண்டார்கள். ஏனென்றால் அது வெறும் ஆசையாக இராமல், எப்படியும் செய்து முடிக்கவேண்டும் என்ற குறிக்கோளாய் இருந்தது.

ஆவிக்குரிய வாழ்க்கை என்பது தேவனுக்குப் பிரியமாக வாழ வேண்டும் என்ற குறிக்கோளை நோக்கி விரைந்து செயல்பட்டால்தான், பிரகாசமுள்ளதாக மாறும். வாழ்க்கையில் நாம் விரும்புகின்ற பல காரியங்களில் ஒன்றாக ஆவிக் குரிய வாழ்க்கையையும் எடுத்துக்கொண்டால், அந்த விருப்பம், நாம் ஆசைப்பட்டும் அடையாமல் போன பல விருப்பங்களில் ஒன்றாகவே முடியும். பவுல் அப்போஸ் தலன் பலவித சோதனைப் புயல்களின் நடுவிலும் தேவனுக்கேற்ற விசுவாச ஓட்டத்தில் நிறைவான வெற்றியைக் கண்டான். ஏனென்றால் அதுவே அவனுடைய குறிக்கோளாகயிருந்ததால், எல்லாச் சூழ்நிலைகளிலும் அதனை நோக்கி விரை வதில் அவன் பின்வாங்கவில்லை.

சிறகடிக்க விரும்பாத பறவை உயரத்தில் பறக்குமா?
சிரமப்பட விரும்பாத மனிதன் உயர்ந்து சிறக்க முடியுமா?

அன்பின் அடையாளங்கள்

எண்ணாகமம் - 11:1-15

உங்களில் தேவ அன்பு இல்லையென்று.... யோவான் 5:42

யோவான் - 5:33-47

கணவன் தன்னை நேசிக்கவில்லை என்பதற்கு ஒரு பெண் ஆதாரமாகப் பல காரியங்களைச் சொன்னாள். அதைக் கேட்ட ஒருவர் அவளிடம் நல்ல நியாயம் இருப்பதைக் கண்டார். அடுத்தபடியாகத் தான் எப்படியெல்லாம் மனைவியை நேசிக்கிறேன் என்பதற்கு ஆதாரமாகக் கணவன் பல காரியங்களைச் சொன்னான். அதைக் கேட்ட அவர் இவன் சொல்வதிலும் நல்ல நியாயம் இருக்கிறது என்பதைக் கண்டறிந்தார்.

சில நேரங்களில் நாம் அன்பைப் புரிந்து கொள்ளாமலும் தவறு செய்கின்றோம். சில நேரம் அன்பை பிரதிபலிக்கத் தெரியாமலும் தவறு செய்கின்றோம். இன்னொருவருடைய பல செயல்களில் உள்ள அன்பைப் பார்க்காமல் கண்ணை மூடி வைத்துக் கொண்டு செய்யப்படாமல் போன சில விஷயங்களையே பார்த்துக் கொண்டிருப்பது தவறு. அது போல செய்யப்படும் சில காரியங்களில் மட்டும் அன்பைக் கோடிட்டுக் காட்டிவிட்டு, செய்யத் தவறிய வேறு சில காரியங்களைச் சிந்தியாமல் போவதும் தவறு.

இன்னொருவர் என்னை உண்மையாக நேசிக்கவில்லை என்ற சிந்தனையை உடும்புப் பிடியாக பிடித்துக் கொண்டிருக்கின்றவர்கள் ஒரு போதும் மற்றவரின் அன்பை அடையாளம் காணமுடியாது. நான் ரொம்ப நேசிக்கின்றேன் என்ற கருத்தை அடிக்கடி மறுசிந்தனை செய்து பார்க்காதவர்கள் ஒரு போதும் பிறரை உண்மையாய் நேசிக்க முடியாது.

இன்னொருவரின் அன்பு வெளிப்படாத இடங்களையே பார்த்துக் கொண்டிருப்பதல்ல. இன்னொருவரின் அன்பைப் பிரதிபலிக்கும் செயல்களையும் கவனிக்க வேண்டும். மற்றவர் அன்பற்றவர் என்று நீங்கள் முடிவு செய்துவிட்டால் இனி அவர் உயிரையே உங்களுக்காக கொடுத்தாலும், அதை அன்பாகப் பார்க்கத் தயாரில்லை என்று நீங்கள் முடிவு செய்து விட்டீர்கள் என்று அர்த்தம்.

இது, இது அன்பு என்று நாம் முடிவு செய்யலாம். ஆனால் இன்னொருவரால் எதை, எதை அன்பு என்று பார்க்க முடிகிறது என்பதையும் பார்க்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் அடிப்படைப் பிரச்சினை, தேவ அன்பை மனிதன் சரியாகத் தேடி அனுபவிக்காததுதான். தேவ அன்பை ருசித்தவன் அன்பு எதில் பிரதிபலித்தாலும் அதைக் கண்டு கொள்ளாமல் போகமாட்டான். தேவ அன்பை அனுபவித்தவன் எது, எது மற்றவர்களை மகிழ்ச்சியாக்கும், உண்மை அன்பின், செயல்களாயிருக்கும் என்பதை அறியாமலிருக்கமாட்டான். அன்பைப் புரிந்து கொள்ள தேவ அன்பினால் தொடப்பட்ட இருதயம் வேண்டும். அன்பைச் சரியாக வெளிப்படுத்த தேவ அன்பை ருசித்துப் பார்க்கும் அனுபவம் வேண்டும்.

மனித அன்பிற்காக ஏங்குகின்ற இருதயம்
இறை அன்பினை இன்னும் ருசிக்கவில்லை என்று அர்த்தம்.

ஏன் பிரியமில்லை?

ஆதி - 37:1-20

பரபாஸைத் தங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்று.... மாற்கு 15:11

மாற்கு - 15:1-15

நீங்கள் வட இந்தியாவிற்குச் சென்றிருக்கும்போது அங்கு தமிழ் பேசுகின்ற ஒருவரைக் காண நேர்ந்தால் உங்களுக்கு அவர் மேல் பிரியமும், அவரோடு பேச வேண்டும் என்ற ஆர்வமும் வந்துவிடும். ஏனென்றால் நீங்களும் தமிழர், அவரும் தமிழர். நீங்கள் அமெரிக்காவில் இருக்கும் போது அங்கு ஒரு இந்தியரைப் பார்க்கும் போது, அவர் உங்களுக்கு மிகவும் விசேஷமாயிருப்பார். ஏனென்றால் நீங்களும் இந்தியர், அவரும் இந்தியர்.

தங்களைப் போன்ற இன்னொருவர் மேல் ஒரு தனி ஈர்ப்பு வருவது இயற்கை. இதுபோலவே நம்மிடம் நல்ல குணங்களும், பண்புகளும், சத்தியமும் இருந்தால் அது போன்ற நிலையிலிருப்பவர்களைப் பார்க்கும் போது அவர்கள் மேல் நமக்கு ஒரு தனி அன்பும், மரியாதையும் ஏற்படும்.

சிலர் நல்ல பதவி நிலையிலிருப்பவர்களையும், நல்ல தோற்றம் உள்ளவர் களையும், நல்ல அந்தஸ்தில் உள்ளவர்களையும் பார்த்தவுடன் அவர்களுடன் பேச வேண்டும், பழக வேண்டும், அவர்களைக் கனப்படுத்த வேண்டும் என்ற உணர்வுகளை உடனே பெற்று விடுவார்கள். அதே வேளையில் நல்ல குணம் படைத்தவர்களை, உண்மையானவர்களை, ஒழுக்கம் நிறைந்தவர்களை, சத்தி யத்தை நேசிக்கின்றவர்களைக் கண்டாலோ அவர்களைச் சற்றும் விசேஷமாக எண்ணமாட்டார்கள். அவர்களுடைய உறவையோ, ஐக்கியத்தையோ ஒரு பெரிய விஷயமாக எண்ணமாட்டார்கள்.

இதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய உள்ளங்களில் நற்குணங்களுக் கும், நன்னடத்தைகளுக்கும், ஒழுக்கங்களுக்கும், உண்மை நிலைகளுக்கும் விசேஷ இடம் கிடையாது. ஏனென்றால் அவர்களிடம் நற்குணங்களோ, நல்ல ஒழுக்கங்களோ இல்லை. தங்களிடம் இல்லாதவைகளையும், தங்களிடம் இருக்க வேண்டும் என்று ஆசைப்படாதவைகளையும் பிறரிடம் பார்க்கும் போது, அவர்கள் அவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முடியாது.

இயேசுவிடம் உயர் பண்புகளை அன்றைய மதத்தலைவர்கள் பார்க்க முடிந்தது. அவரிடம் தெய்வீக சுபாவம் பிரகாசிப்பதை அவர்களால் கண்டு கொள்ள முடிந்தது. ஆனாலும் அவர்கள் அதைப்பார்த்து மகிழ்ச்சியடைய வில்லை. ஏனென்றால் அவரிடம் இருந்த உயர்ந்த குணாதிசயங்களுக்கு எதிரான, முரண்பாடான குணம் அவர்களிடம் இருந்தது. எனவே அவரைத் தங்களுக்கு வேண்டாதவரைப் போலவும், தேவையில்லாதவரைப் போலவும் நடத்தினார்கள். எனவேதான் இயேசுவைப் புறக்கணித்து, தங்களுக்கு பரபாஸ் வேண்டும் என்றார்கள். ஏனென்றால் பரபாஸிடம் இருந்த கலகக் குணமும், கொடூரசிந்தையும், விரோத உணர்வும் அவர்களிடமும் இருந்தது. நம்முடைய மனநிலை எப்படி?

நல்லவனை நேசிக்கத் தெரியாதவன் தனக்குள் தீயவனாய் இருப்பதை நினைவுபடுத்துகிறான்.

ஜீவ தேனை

அவரோடு நிற்போம்

11 நாளாகமம் - 15:1-19

நீங்கள் கர்த்தரோடிருந்தால் அவர் உங்களோடிருப்பார் – 11 நாளா 15:2

லூக்கா - 15:11-21

என்னுடைய முக்கியமான கரிசனை, தேவன் என் பக்கம் நிற்கிறாரா என்பது அல்ல. நான் தேவனுடைய பக்கத்திலே நிற்கின்றேனா என்பதே என்னுடைய மிக முக்கிய கரிசனை. ஏனென்றால் தேவன் எப்போதுமே சரியான பக்கத்தில் நிற்கின்றார். இது தேவ பக்தியுடைய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் சொன்ன வார்த்தைகள்.

தேவன் என் பக்கத்தில் நிற்கின்றாரா என்ற விழிப்புணர்வு சிந்தனை அவசியமே. ஆனால் சில வேளைகளில் நாம் நிற்கும் இடம் தேவன் நம்மோடு நமக்கு ஆதரவாக நிற்க இயலாத இடமாக இருந்து விடுகிறது. சில நேரங்களில் நம்முடைய தேவ பக்தி நம்முடைய பக்கத்தில் தேவன் நிற்கிறாரா என்று ஆழமாகக் கேட்க வைக்கின்றது. ஆனால் நாம் நிற்கும் இடம் தேவன் நிற்கத்தக்க இடமா என்று யோசிப்பதில்லை. நமக்கென்று சிலவற்றை தேர்ந்தெடுத்துக் கொள்கின்றோம். அங்கே தேவன் நம்மோடு நமக்காக நிற்க வேண்டும் என்று அவரைத் தேடுகின் றோம். ஆனால் தேவன் எங்கே நிற்க நம்மை அழைக்கின்றாரோ அங்கே நிற்பதற்கு ஆயத்தமானால்தான் அவர் நமக்காக நம்மோடு நிற்பதைக் காண முடியும்.

லோத்து தேவ பக்தனாயிருந்தும் தான் தெரிந்து கொண்ட இடம் தேவன் தன்னோடு நிற்கத் தக்க சரியான இடமா என்று யோசிக்கவில்லை. தேவன் நிற்க விரும்பாத சோதோமில் சென்று நின்ற அவன் தேவ பக்தனாயிருந்தும் தேவ உறவை அங்கு காண இயலவில்லை.

முதலாவது நாம் தேவன் நியமித்த சரியான வாழ்க்கை ஒழுங்கு முறையில் நிற்கின்றோமா என்று பார்க்க வேண்டும். எலியா தேவன் நியமித்த பகுதி யில் நிற்க உறுதியாயிருந்தான். எனவே எலியா நிற்க நேர்ந்த எல்லா எதிர் மாறான வாழ்க்கைச் சூழ்நிலையிலும் தேவன் அவனுக்கு ஆதரவாக வந்து நின்றார்.

பிரதான ஆசாரியனாகிய ஏலியின் காலத்தில் இஸ்ரவேலர்கள் பெலிஸ்தி யரை எதிர்த்து நிற்க நேர்ந்தது. அந்த யுத்த சூழ்நிலையில் தேவனைத் தங்களுக்கு ஆதரவாக வந்து நிற்க அவர்கள் அழைத்தனர். அதற்கு அடையாளமாக உடன்படிக்கைப் பெட்டியை யுத்த களத்திற்குக் கொண்டு வந்தனர். ஆனால் அவர் களோடு தேவன் நிற்கவில்லை. ஏனென்றால் அவர்கள் தேவனுடைய சரியான வழிகளில் நிற்கவில்லை.

தேவ சத்தத்தை இதயத்தில் கேட்டுப் பழகாதவர்களால் அவருடைய சித்தத்தைப் புரிந்து கொள்ளுதல் இயலாது.

வாழ்வு பயனற்றதா?

ரூத் - 1:1-22

நீங்கள் என்னை மாராள் என்று சொல்லுங்கள்... ரூத் - 1:20

1 பேதுரு - 5:6-14

சமீபத்தில் ஒரு கலைப்பொருள் அங்காடிக்குச் சென்றபோது, அங்கே தேங்காய் மூடியினால் செய்யப்பட்டிருந்த ஒரு பொம்மை கண்ணைக் கவருகின்ற, விதமாக சிறப்பாக இருந்ததைப் பார்க்க முடிந்தது. இனி எதற்கும் பயனற்றது என்று வீசி எறியத்தக்க நிலையில் உள்ள ஒரு சாதாரணப் பொருளை ஒரு கலைஞன் அவ்வளவு சிறப்பான ஒரு பொருளாக மாற்ற முடிந்திருந்தது சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தது. வாழ்க்கையில் சில நேரங்களில் எதிர்பாராத விதமாக நேரிட்டு விடுகின்ற சில துயர நிகழ்வுகளும், ஏமாற்றங்களும், தோல்விகளும், பலரை இனி "நான் வாழ்வதால் என்ன பயன்? இனி என் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் இருக்கிறது?" என்று எண்ணச் செய்து விடுகின்றது. ஈடு செய்ய இயலாத சில இழப்புகள், வியாதி கள், சரி செய்ய இயலாத சில வீழ்ச்சிகள் வாழ்க்கையின் அனைத்துப் பயன்பாடு களும் முடிந்து போய்விட்டது போன்ற எண்ணத்திற்குத் தள்ளிவிடுகிறது.

கட்டிய கணவனையும், பெற்றெடுத்த பிள்ளைகளையும் வரிசையாக இழந்து அன்னிய மண்ணில் எதற்கும் இனிப்பிரயோஜனமற்றவள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டவள் நகோமி. ஆயினும் அது அப்படியாகத் தொடரவில்லை. சிலவேத னைகளுக்குப் பின்பு வாழ்க்கை அவளுக்கு மிகுந்த பயனுடையதாகவும், அர்த்த முடையதாகவும் இருப்பதை அவளால் காணமுடிந்தது.

அரண்மனையில் வாழ்ந்து வளர்ந்த மோசேயின் வாழ்க்கையில் எதிர்பாராத விதமான ஒரு சோர்வுக்குரிய திருப்பம் ஏற்பட்டது. ஜனங்களை ஆளுகின்ற தகுதியுடைய அவன் அந்தோ பாவம் ஆடுகளை மேய்க்கின்றவனாக மாறினான். அதுவே நாற்பது ஆண்டுகளுக்குத் தொடர்ந்ததால், ஒரு வேளை மோசே "தேவை யில்லாமல் ஒரு விஷயத்தில் நுழைந்து ஆடு மேய்க்கும் ஒரு நிலைக்கு வந்து சேர நேர்ந்ததே, இனி என் வாழ்க்கையில் என்ன இருக்கிறது" என்று அவ்வப் போது எண்ணியிருக்கக் கூடும். ஆனால் எல்லாம் முடிந்து போய்விட்டது என எண்ணத்தக்க சூழ்நிலையிலிருந்த அவனுடைய வாழ்க்கையை தேவன் தொட்டார். அவனை உபயோகப்படுத்தினார். அவன் ஒரு மாபெரும் தலைவனாக வும், தேவநியாயங்களைப் பெற்றவனாகவும், தீர்க்கதரிசியாகவும் மாறி நீங்காப் புகழ்பெற்றான்.

ஆம். தேவன் ஒரு அற்புதமான கலைஞர். அவர் இனி எதற்கும் பயனற்றது என்பது போன்ற ஒரு வாழ்க்கையை, மிகச் சிறந்த அர்த்தமுடையதாக மாற்ற இயலும். சில குறைவுகள் நிரந்தரமாகிவிட்டால் கூட தேவன் தரும் புதிய நிறைவு கள் அந்தக் குறைவுகளை மறக்கச் செய்வதோடு, ஒரு பெரிய திருப்தியான வாழ்க் கைக்கு வழி நடத்தும். ஆம். எந்தச் சூழ்நிலையிலும் தேவன் மேல் விசுவாசத்தி லும், அன்பிலும், அர்ப்பணிப்பிலும் பின்வாங்காதிருப்போமாக. அப்போது அவர் நம்முடைய வாழ்க்கையை ஒருபோதும் பயனற்ற ஒன்றாகத் தொடர விடமாட்டார்.

அடைக்கப்பட்ட வழிகளுக்காகக் கவலைப்படாதே. தேவனுடைய புதிய வழிகளைக் காணும் கண்கள் திறக்கப்பட காத்திரு.

தவறானவிதைகள்

ஓசியா – 10:1-10

இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள.... 11 தெச 2:10

11 தெசலோனிக்கேயர் - 2:1-17

நல்ல சுவிசேஷ வார்த்தைகள் விதைக்கப்படுவ்து போல, போலியான சுவிசேஷ வார்த்தைகளும் விதைக்கப்படுகின்றன. தேவனுடைய வேலையாட்கள் நல்ல விதைகளை விதைப்பது போல, சாத்தானின் வேலையாட்கள் போலியான விதைகளை விதைத்து, களைகள் வளரச் செய்கின்றனர். இன்று ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் என்று அநேகர் சொல்லிக் கொண்டாலும் எல்லோரும் அப்படியல்ல. அவர்களில் அநேகர் பயிர்கள் அல்ல, களைகளே. அவர்கள் தங்களை உண்மை யான கிறிஸ்தவர்கள் என்று நம்பினாலும் அவர்கள் போலியான கிறிஸ்தவர்களே.

ஒருவர் எப்படி உண்மையான கிறிஸ்தவராகப் பிறக்கின்றார்? ஒருவர் எப்படி போலியான கிறிஸ்தவராகப் பிறக்கின்றார்? மனிதனுக்கு மிக முக்கியத் தேவை எது என்று அறிந்து தேவன் எதனை இயேசு கிறிஸ்து மூலமாக அனுப்பினாரோ அதனைப் பெற்றுக் கொள்ள தங்களின் இருதயங்களைத் திறக்கின்றவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாகப் பிறக்கின்றார்கள்.

மனிதனுடைய தேவைகள் ஆயிரம். ஆனால் மனிதனுடைய மிக முக்கியத் தேவை பரிசுத்தமாகுதல். அதற்காகவே இரட்சிப்பு, பாவ விடுதலை, தேவ ஐக்கியம் ஆகிய தெய்வீக ஆசீர்வாதங்கள் இயேசுவின் சிலுவை மரணம் வாயிலாக பூமிக்கு வந்தன. இதனை மிக முக்கியத் தேவையாக உணர்ந்து இயேசுவைத் தேடுகின்றவர்களின் இருதயத்தில் உண்மைக் கிறிஸ்தவமாகிய நல்ல விதைகள் விழுந்து முளைத்துக் கனி தரும் மரமாகும். ஆனால் இந்த உயர்ந்த தேவையைப் பின் தள்ளி விட்டு, வாழ்வு தொடர்பான தேவைகளுக்காகவும், சரீரப் பிரகார மான தேவைகளுக்காகவும் இயேசுவைத் தேடுகின்றவர்களின் இருதயத்தை பிசாசானவன் வஞ்சித்து விடுவான்.

அங்கே அவன் போலி கிறிஸ்தவ விதைகளை போலி கிறிஸ்தவ ஊழியர்கள் வாயிலாக விதைப்பான். அந்த விதை முளைத்து வளரும் போது அது ஒரு கிறிஸ்தவ தோற்றத்தைக் கொடுக்கும். ஆனால் கிறிஸ்துவுக்கேற்ற கனிகளைக் கொடுக்காது. உண்மையான பரிசுத்தமாகுதலின் தேவையை உணராத இருதயம் தவறான உபதேச விதைகளை எளிதாக ஏற்றுக் கொண்டு வளரும். எவ்வளவு மோசமான நிலமானாலும் ஆகாத களைகள் ஆமோகமாக வளர்ந்து இடத்தை நிரப்பும். ஆனால் தேவனால் பண்படுத்தப்பட்ட, அர்ப்பணிக்கப்பட்ட நல்ல இருதயத்தில்தான் உண்மையான கிறிஸ்தவ விதைகள் முளைத்து வளரும்.

சிறந்த சிந்தனைகள் என்ற உரம் இல்லையேல் வாழ்வில் உயர்ந்த செயல்கள் என்ற கனிகள் இருப்பதில்லை.

ஜீவ நீரோடை

எதிர்பார்ப்பு

ஏசாயா - 5:1-7

எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ... லூக்கா 12:48

லூக்கா - 12:41-48

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு வெண்கலப்பதக்கத்தை வென்றான். அந்த செய்தியை தொலைக் காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய நண்பர்கள் சிலர் உற்சாக மிகுதியோடு அவனுடைய தந்தையைச் சந்தித்து வாழ்த்துக் கூறச் சென்றார்கள். ஆனால் மகன் வெண்கல பதக்கம் வென்ற செய்தியால் எந்த மகிழ்ச்சியுமடையாத தந்தையாக அவரை அவர்கள் கண்டு ஆச்சரியப்பட்டனர். ஏன் என்று வினவின போது, "என் மகன் தங்கப்பதக்கம் பெறுகின்ற அளவிற்குப் பயிற்சி கொடுத்திருந் தேனே. அவன் அதை எப்படி இழந்தான்?" என்று வருத்தத்தோடு கூறினார் அந்த தந்தை.

சில நேரங்களில் இறைவாழ்க்கைப் பாதையில், நம்முடைய தேவனின் எதிர்பார்ப்பும் இப்படியாகவே உள்ளது. நாம் ஆவிக்குரிய நிலைகளில் அடைய நேரிட்ட சிறு, சிறு வெற்றிகளால் அதிக திருப்தியடைந்து, அதிகமாகச் சாதித்துவிட்ட உணர்வோடு நின்றிருப்போம். ஆனால் தேவனுடைய எதிர்பார்ப்பு இன்னும் சற்று அதிகமாக இருக்கும். தேவன் நமக்கு அளித்த கிருபை, வாய்ப்பு, வல்லமைகள், ஆதரவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இன்னும் நாம் அதிகமாகச் சாதித்து தேவநாமத்தை மகிமைப்படுத்தியிருக்க முடியும்.

அநேகரைவிட நாம் கிறிஸ்தவ பண்புகளில், ஒழுக்கங்களில், ஊழியம் ஆகியவற்றில் உயர்ந்து நிற்கலாம். அதற்காக அதிகமாக நாம் பாராட்டப் படலாம். இது மகிழ்ச்சியானதுதான். ஆனால் இவைகளெல்லாம் தேவனுடைய பார்வையில் வெண்கலப் பதக்கங்களாக இருக்க முடியும். ஏனென்றால் தேவன் நமக்கு அளித்த கிருபை, வாய்ப்பு ஆகியவற்றின் அளவிகள் அதிகம்.

யாருக்கு அதிகமாகக் கொடுக்கப்படுகிறதோ அவர்களிடமிருந்து தேவனு டைய எதிர்பார்ப்பும் அதிகமாகவேயிருக்கும். நாம் குணநிலைகளிலும், சிறந்த செயல் நிலைகளிலும் எரிந்தால் மட்டும் போதாது. எரிந்து பிரகாசிக்கும் நிலைக்கு வரவேண்டும். நாம் ஏதோ கனிகொடுக்கிறவர்களாக மட்டுமல்ல. நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்கவேண்டும் என்பதே தேவனுடைய எதிர்பார்ப்பு. நாம் வாழுகின்ற சமுதாயத்தின் நடுவில், மகிமையான வேறுபாட்டை பிறர் நம்மிடம் காணத்தக்கதான ஒரு வாழ்க்கையையே தேவன் விரும்புகிறார். நம்மிடம் விசேஷ மான வேறுபாட்டைப் பிறர் கவனிக்க வேண்டுமானால், நம்மிடம் மிகுதியான ஒரு குணநிலை, மேன்மையான வாழ்க்கை அவசியமாகிறது. ஏதோ சில நல்ல ஒழுங்கு களும், பிறருக்குத் தீங்கு எதுவுமில்லாத ஒரு வாழ்க்கை முறையும் போதுமான தல்ல. எனவேதான் ஆண்டவர் கனிகொடுக்க வேண்டும் என்று மட்டும் கூறாமல், மிகுந்த கனிகொடுக்க வேண்டும் என்றும் கூறினார். (யோவான்-15:8)

இன்னொருவரை மாதிரியாகக் கொள்வதை விட இன்னொருவருக்கு மாதிரியாயிருக்க முயற்சி செய்.

ஜீவ நீரோடை

போலியான சுவிசேஷம்

எரேமியா – 4:1-14

மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும்
லூக்கா 24:47

லூக்கா – 24:38-53

ஏதாவது ஒன்றில், ஏதாவது சில நல்ல பயன்பாடுகள் இருந்தால் அவற்றை அடிப்படையாக வைத்து அதனை நல்லது என்று சிலர் அத்தாட்சி கொடுத்து விடுகின்றனர். ஏதாவது ஒன்றில் மோசமானது என்று சொல்லத்தக்க சில விஷயங்கள் இருந்தால் அவற்றின் அடிப்படையில் அதனை மிக மோசமானது என சிலர் தீர்ப்புக் கொடுத்து விடுகின்றனர்.

ஆனால் சில நல்ல விஷயங்கள் ஒன்றை நல்லது என்று உறுதிப்படுத்தி விடாது. சில மோசமான விஷயங்கள், ஒன்றை தவறானது என்றும் நிரூபித்து விடாது. சில ஊழியர்களால், சில சபைகளால், சில ஆவிக்குரிய செயல்களால், பல நன்மைகள் விளைவாக வருவதுண்டு. ஆயினும் அவற்றைக் கொண்டு அந்த ஊழியர்களுக்கு அல்லது சபைகளுக்கு நற்சாட்சி கொடுத்துவிட முடியது.

ஒரு ஊழியமாயினும், சபையாயினும் மிக முக்கியமானது போதனைகள். ஒரு சுவிசேஷகராயினும், போதகராயினும் அவர்களுடைய ஊழியங்களிலே முதல் முக்கியத்துவம் பெற வேண்டிய விஷயங்கள், ஜனங்களின் உண்மையான மனந்திரும்புதலும், அவர்களின் சாட்சியுள்ள பரிசுத்த ஜீவியமுமே. இவற்றை மிக முக்கியமாக எண்ணி, அதற்கேற்றவிதமாக ஒரு ஊழியம் செயல்படாத போது அந்த ஊழியத்தால் எத்தனை பிற நன்மைகள் இருந்தாலும் அது கிறிஸ்தவ ஊழியம் அல்ல.

ஒரு பொருள் போலியானது என்றால் அது பயனற்றது என்று அர்த்தமல்ல. அதனால் பல நல்ல பயன்கள் இருக்கும். ஆயினும் அந்தப் பொருளில் எதிர்பார்க்கப்படும் மிக முக்கியமான அம்சம் அதில் இல்லாவிட்டால் அது போலியானது. எதிர்பார்க்கப்படும் தரம் இல்லாத போதே பல நல்ல நன்மைகள் அதனால் ஏற்பட முடியும். ஆயினும் அது போலியானதே.

மனிதனுக்கு மிக, மிக முக்கியமானது மனந்திரும்பிய வாழ்க்கையும், தேவ உறவுமே. அதனை முன்னிலைப்படுத்தி நடத்தப்படாத சபைகளும், சங்கங்களும், ஸ்தாபனங்களும், இயக்கங்களும் எத்தனைதான் நன்மைகளை ஏற்படுத்தினாலும் அவை போலியானவையே. அவற்றால் என்ன பயன் என்பதைவிட, தேவன் எதிர்பார்க்கும் பயன்பாடும், மனிதர்களுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் பயன்பாடும் உள்ளதா என்பதே முக்கியம். ஒரு மனிதனுடைய பரிசுத்தமான ஜீவியத்தைக் குறிவைத்து செயல்படாத எந்த ஆவிக்குரிய செயல்பாடுகளும் தேவ அங்கீகாரம் பெறாது. ஆம். வேத வெளிச்சத்தில் எதையும் பகுத்துணரும் பக்குவம் அவசியம்.

தான் வாழாத வாழ்க்கையைப் பிறருக்குப் போதிப்பவன் தனக்குத் தொடர்பில்லாத விஷயத்தில் தலையிடுகிறான்.

திசை மாறினாலும்

ஆதி - 39:1-23

காற்றின் போக்கிலே கொண்டு போகப்பட்டோம்... அப் 27:15

அப் - 27:1-25

இயற்கை வளமிகுந்த ஒரு சிறு தீவைக் கண்டுபிடித்த மாலுமி ஒருவன், அடிக்கடி பாய்மரக்கப்பலில் அந்த தீவுக்குச் சென்று, மிகுந்த பொருட்களை எடுத்து வருவான். ஒரு முறை அவ்விதம் சென்றபோது பலத்த காற்றின் நிமித்தம் பாய்மரக்கப்பல் எங்கேயோ அடித்துச் செல்லப்பட்டு விட்டது. மறுநாள் காற்று அமர்ந்தபோது, மாலுமியின் கண்களுக்கு தூரத்தில் ஒரு சிறு தீவு தென்பட்டது. அருகில் போய்ப் பார்த்தபோது, மாலுமி மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாக, அது வேறொரு வளமான தீவாக இருந்தது. அது அவன் போகவண்டும் என தீர்மானித்துப் பயணம் செய்த தீவைவிட பல மடங்கு சிறப்பான தாயிருந்தது.

வாழ்க்கை யாத்திரையிலும் சில வேளைகளில் இப்படியே நிகழ்கிறது. சில நலமான திசைகளை நோக்கிப் பயணம் செய்யும் நம்முடைய வாழ்க்கைப்படகு சோதனைக் காற்றுகளால் இடை மறிக்கப்பட்டு எங்கேயோ அடித்து செல்லப்பட்டு விடுகிறது. அயினும் கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து அவருடைய சித்தத்தின் மையத்தில் வாழும் மக்களுக்கு, அது ஆச்சரியப்படத்தக்க மேன்மையான நன்மைகளையே கொண்டு வருகிறது. மனம் விரும்பிய, திசைகளுக்குப் போய்ச் சேர முடியாவிட்டாலும் சோதனைக் காற்றுகள் அதைவிட ஆசீர்வாதமான திசைகளுக்குப் போய்ச் சேர்ந்திடவே வழிவகுக்கிறது.

போத்திபாரின் வீட்டில் சுகமான சூழ்நிலையைக் கண்ட யோசேப்பு சோதனைக் காற்றுகளால் எங்கேயோ திடீரென்று அடித்துச் செல்லப்பட்டான். ஆயினும் ஒரு வீட்டின் நிர்வாகி என்ற நிலையிலிருந்து, ஒரு நாட்டின் நிர்வாகி என்ற உயர் நிலைக்கு வரவே அது வழிவகுத்தது. கர்த்தர் சில வேளைகளில் எதிர்மாறான காற்றுகளை தம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் அனுமதிக்கின்றார். ஏனென்றால் அவர்களின் திசையை மாற்றி உயர்ந்த ஆசீர்வாத நிலைகளுக்குக் கொண்டு வந்திட அவை அவருடைய பார்வையில் அவசியமாயிருக்கின்றது.

தாவீதின் வாழ்க்கையிலும் இதனையே காண்கின்றோம். உயர்ந்த நிலையை நோக்கி வந்து கொண்டிருந்தபோது எங்கோ தூக்கி வீசப்படுவது போன்ற ஒரு சோதனையான திருப்பம் ஏற்பட்டது. அதன் விளைவாக தாவீது பல விதங்களில் மிகுந்த வேதனைகளைச் சந்தித்தான். ஆயினும் பாதகமான ஒரு திருப்பம் போல் அது தோன்றினாலும், உண்மையில் அது ஒரு ஆசீர்வாத திருப்பமாகவே முடிந்தது. உண்மையில் சவுலின் அரண்மனையில் பெரியவன் என்ற ஒரு நிலையை இழந்து, ஒரு நாட்டிற்கே ராஜா என்ற உயர்நிலைக்கு அவன் வந்து சேர்ந்தான். ஆம். சில தடைகள், சோதனைகள், எதிர்பாராத தோல்விகள் ஆகியவை நாம் வாஞ்சித்ததை அடையவிடாமலும், எதிர்பார்த்ததைப் பெற முடியாமலும் தடை செய்திருக்கலாம். ஆயினும் கர்த்தரின் பிள்ளைகளுக்கு அதைவிட மேலான ஆசீர்வாதம் வைக்கப்பட்டிருக்கும் என்பதே உண்மை.

தோல்வியை அடையாதவனை விட தோல்வியால் துவளாமல் இருப்பவனே வெற்றியாளன்.

மகிழ்ச்சியின் வழி

சங்கீதம் - 106:1-22

ஆனாலும் சீக்கிரமாய் அவருடைய கிரியையை மறந்தார்கள் – சங்கீதம் 106:13

எபேசியர் - 1:13-23

தன்னுடைய குடும்ப வாழ்க்கையில் தேவன் செய்த நன்மைகளையெல்லாம், வாய்ப்புள்ள போதெல்லாம் ஒரு சகோதரி சாட்சி சொல்லி, தேவனை மகிமைப்படுத்துவார். தான் விரும்பியபடி பிள்ளைகள் பிறந்தன. அவர்களுக்கு, தான் விரும்பியபடி பிள்ளைகளுக்கு பிரசித்தி பெற்ற பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் இடம் கிடைக்கப் பெற்றனர். அவர்களுக்கு தான் விரும்பிய படியே மதிப்புமிகு கம்பெனிகளிலும் வேலை கிடைத்தது. அவர்களுக்கு தான் விரும்பியபடியே மிக நல்ல இடங்களிலிருந்து வாழ்க்கைத் துணைகள் கிடைத்தன. ஆனால் இப்பொழுதெல்லாம் அந்த சகோதரி சாட்சி சொல்வது இல்லை. அவர் சபை கூடுகைகளுக்கோ, ஜெபக் கூட்டங்களுக்கோ முன்பு போல போவதில்லை. ஏனென்றால் தான் எவ்வளவோ ஜெபித்தும் மன்றாடியும் தன் மகளுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவேயில்லை. மிகவும் சோர்ந்து போனார்.

வாழ்க்கையில் நாம் எவ்வளவு தான் பக்தியோடு வாழ்ந்தாலும், நாம் கேட்டது அனைத்தும் நமக்கு கிடைத்து விடாது. தேவன் நமக்கு எத்தனையோ நன்மைகள் விரும்பியபடியே செய்தாலும், நாம் விரும்பிய இன்னொன்றும் கிடைக்காமல் போகும் போது, அதுவரை பெற்றுக் கொண்டிருந்த மகிழ்ச்சி யாவும் மறைந்து போக வாய்ப்புண்டு. நமக்குக் கிடைத்த எத்தனையோ நன்மைகளுக்காக நன்றி சொல்லி வாழ்ந்த நாம், கிடைக்காமல் போன ஒன்றின் அடிப்படையில் தேவன் மேல் கொண்ட பக்தியை இழக்க வாய்ப்புண்டு.

இஸ்ரவேல் மக்கள் கானகத்தின் வழியாக வழிநடத்தப்பட்ட வேளையில், தேவன் அவர்களுக்காகச் செய்த அற்புதங்கள் கொஞ்சமல்ல. அவை ஆச்சரியமானவை, ஆனால் அடுத்ததாக தாங்கள் விரும்பியபடி ஒன்று நடவாமல் போன போதோ, அவர்கள் தேவனுக்கு எதிராக முறுமுறுத்து முரட்டாட்டம் செய்தார்கள்.

சந்தோஷம் என்பது நாம் விரும்பியபடி அடைகின்ற நன்மைகளின் அடிப்படையில் இருக்கக் கூடாது. தேவ பக்தி என்பது நாம் கேட்டபடி கிடைத்ததின் விளைவாக இருக்கக் கூடாது. மகிழ்ச்சி என்பதை தேவனால் செவ்வை செய்யப்பட்ட ஒரு இருதயத்தைப் பெற்றிருப்பதால் அடைய வேண்டும். தேவ பக்தி என்பதை அனுதின வாழ்க்கைச் சூழ்நிலைகளில் அவர் நம்மோடு இருப்பதை உறுதிப்படுத்தும் அனுபவத்தில் காண வேண்டும். தேவன் என்ன தருகிறார் என்பதில் அல்ல. அவர் நம்மோடிருந்து நம்முடைய எல்லா வாழ்க்கைச் சூழ்நிலைகளிலும் நம்மை நடத்துவதில்தான் உண்மையான மகிழ்ச்சியையும், திருப்தியையும் உணர வேண்டும்.

இறைவனின் விதிகளை மதித்து வாழத் தயங்கினால்
சாத்தானின் சதி வலையில் மயங்கி விழ நேரிடும்.

ஜீவ நீரோடை

அறிவு மட்டும் போதுமா !

உபாகமம் - 28:1-14

அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள்.... லூக்கா 11:52

லூக்கா - 11:37-54

ஆற்றின் அக்கரைக்குச் செல்லவேண்டும். ஓடக்காரன் இன்னும் வராத தால் ஜனங்கள் காத்திருந்தனர். அவர்கள் நடுவில் அறிவியல் மேதை ஒருவர் இருந்தார். அவர் மற்றவர்களிடம் பேச்சுக் கொடுத்தார். தினமும் இந்த ஓடத்தில் ஏறி அக்கரை போகிறீர்களே, இந்த ஓடம் துடுப்பு போடும் போது எப்படி முன்னோக்கிப் போகிறது, காரணம் தெரியுமா? இந்த ஆற்று வெள்ளம் ஒரே திசை நோக்கி வேக மாகப் போகிறதின் விதி தெரியுமா? ஓடம் ஏன் தண்ணிரில் மூழ்காமல் மிதந்து கொண்டே போகிறது என்பது தெரியுமா? என்பது போன்ற பல அறிவியல் சார்ந்த கேள்விகளைக் கேட்டார். யாருக்கும் பதில் சொல்லத் தெரியவில்லை. அவர்களின் அறிவின்மையைக் கண்டு அவர் பரிதாபப்பட்டார்.

சற்று நேரத்தில் ஓடக்காரன் சுகவீனமடைந்ததால் ஓடம் ஓட்ட வரமுடியா தென்றும், தேவைப்படுகிறவர்கள் ஓடத்தை உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் செய்தி வந்தது. உடனேயே அந்த ஜனங்கள் அந்த அறிவியல் மேதையைப் பார்த்து, "ஐயா - எங்களுக்கெல்லாம் ஒன்றும் தெரியாது. உங்களுக்குத்தான் ஆற்றின் விதியும், ஓடத்தின் விதியும் தெரியும். நீங்கள் ஓடத்தை ஓட்டுங்கள் என்றனர். அவரோ "ஐய்யய்யோ எனக்கு ஓடம் இயங்கும் விதிதான் தெரியும், அதை இயக்கும் விதம் தெரியாது" என்றார்.

ஓடம் இயக்கும் விதிகளைத் தெரிந்து வைப்பதால் மட்டும் ஓடத்தை இயக்க முடியாது. அதற்கு பழக்கம்தான் முக்கியம். இறையியல் கோட்பாடு களை பல வருடமாக பாடம் நடத்தி, பல மாணவர்களை இறையியலில் தேர்ச் சியடையச் செய்திருந்தார் ஒருவர். ஆனால் அவரிடம் ஒரு சாதாரண விசுவாசியிடம் செயல்படும் ஒரு விசுவாசமோ, பாவ எதிர்ப்புத் திறனோ, நற்குண அம்சங்களோ இல்லாதிருந்தது.

ஆவிக்குரிய அறிவு மிகவும் அவசியம். ஆனால் அது ஆவிக்குரிய அனுபவ மாக மாறாவிட்டால் பிரயோஜனமில்லை. இறையியல் படிக்கும் முன்பு இறை வனைப் பிடித்துக் கொள்ள வேண்டும். வேதாகமத்தை ஆராயும் முன்பு நம்மை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இறைக் கோட்பாடுகளை ஆய்வு செய்யும் முன்பு, நாம் எந்தக் கோட்பாட்டில் வாழ்கின்றோம் என்பதைக் கவனிக்க வேண்டும். நாம் ரெவரண்டுகளாக மாறலாம், கௌரவ டாக்டர்களாக மாறலாம், வாய்ப்புக் கிட்டினால் பேராயர்களாகவும் மாறலாம். ஆனால் நாம் தேவ மனிதர்களாக மாறினோமா என்பதே மிக முக்கியமான கேள்வி. எவ்வளவு வேதம் படிக்கிறோம், எவ்வளவு வேதாகம அறிவு பெற்றிருக்கிறோம் என்பதை விட, நாம் பெற்ற அறிவினால் எந்த அளவு பாவத்தை வெல்லவும், பரிசுத்தமாய் நடக்கவும், பிரகாசிக்கும் ஒரு இறைவாழ்க்கையை வாழவும் அனுபவம் பெற்றிருக்கிறோம் என்பதே உடனடியாக உற்றுக் கவனிக்க வேண்டிய காரியம்.

அறிவு நிலையில் ஆலமரமாய் தழைத்த பலர், இதய நிலையிலோ இலைகளற்ற வெறும் மரங்களாய் நிற்கின்றனர்.

சத்தியம் தேவையில்லை

ஏசாயா – 59:1-15 | சத்தியம் தள்ளுபடியாயிற்று ஏசாயா 59:15 | யோவான் – 6:48-71

மோசேயின் மூலமாக தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்காகச் செய்த அற்புதங்களும், அதிசயங்களும் அவர்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால் அவை அவர்களுடைய சரீர நலன் தொடர்பானவை மட்டுமே. ஆனால் மோசேயின் மூலமாக தேவன் அவர்களுக்குச் சத்திய வார்த்தைகளையும் கொடுத்துக் கொண்டு வந்தார். ஆனால் அவை அவர்களால் விரும்பி ஏற்கப்படவுமில்லை, கனத்திற்குரியதாகக் கருதப்படவுமில்லை. அற்புத அதிசயங்களின் அவசியத்தை உணர முடிந்த மக்கள், சத்தியத்தின் அவசியத்தை உணரவில்லை. எனவே அவர்களில் பெரும்பாலானோர் ஆசீர்வாதக் கானானுக்குள் போகவும் முடியவில்லை. போனவர்கள் நன்றாக வாழவும் முடியவில்லை.

இயேசு கிறிஸ்துவின் நாட்களிலும் அதே நிலைதான் ஏற்பட்டது. அற்புதங்கள் செய்யப்பட்டதைக் கேட்டறிந்து ஆயிரக்கணக்கில் வந்தனர். ஆனால் அற்புதங்கள் செய்யாமல் இயேசு சத்திய வார்த்தைகளை வழங்கினபோது வந்தவர்களெல்லாரும் போய்விட்டனர். 12 பேர் மட்டுமே மிஞ்சினார்கள்.

மனித வாழ்வின் மிகப்பெரிய தேவையாகவே ஒழுங்குமுறைப்படுத்தும் சத்திய வார்த்தைகள் தரப்படுகின்றன. ஆனால் அன்றும் இன்றும் சத்தியம் என்பதை மிகப்பெரிய தேவையாக உணர்ந்து தேடுவோர்கள் மிகவும் குறைவே. மனிதன் தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகின்ற வார்த்தைகளால்தான் பிழைக்கின்றான் என்ற உண்மை திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டாலும் அற்புதங்களும், அதிசயங்களும், வல்லமையின் செயல்களுமே ஜனங்களால் தேடப்படும் நிலை உள்ளன. அற்புதங்களுக்காக ஆயிரக்கணக்கானோர் திரண்டாலும், சத்தியத்திற்காகவோ வெகுசிலரே வருகின்றனர்.

ஏனென்றால் அற்புதங்களையும், வல்லமையையும் யார் வேண்டுமானாலும் தேட இயலும். ஆனால் சத்திய வார்த்தைகளையோ சத்தியத்தால் விடுதலையாக்கப்பட்டோர் மட்டுமே விரும்பித் தேட முடியும். சத்தியத்தால் விடுதலையாக்கப்பட்ட இருதயத்தில் சத்திய வார்த்தைகளுக்கான பசியும் தாகமும் வந்துவிடும். அவர்களால் சத்திய வார்த்தைகளைக் கேட்டுப் பயனடையாமல் இருக்க முடியாது. இன்று சத்தியத்தால் விடுவிக்கப்பட்ட ஜனங்கள் மிகமிகக் குறைவே. எனவே சத்தியம் வெகு சிலராலேயே தேடப்படுகிறது.

உண்மையை ஒத்துக் கொள்ளுதல் இன்று கசப்பாக இருக்கலாம்
ஆனால் நாளை உன் வாழ்வு கசப்பாகி விடாதிருக்க அது அவசியம்.

தேவன் பேசினால்...

ஏசாயா – 1:10-20

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்....
வெளி 3:15

வெளி – 3:14-22

இதயத்தில் இறைவனின் குரல் :

நீ எனக்காக ஏராளம் செய்தாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உனக்காக நான் எதையும் செய்யவில்லையே என்று உனக்குள் வருந்துகிறாய். தேவனுக்காக இத்தனை காரியங்கள் செய்தும் எனக்கு ஏன் இத்தனை பாடுகள் என்று நீ அடிக்கடி கேட்கிறாய். எனக்காக நீ செய்தவைகளை நீ நினைவில் வைத்திருக்கிறாய். ஆனால் அவைகளால் நான் மகிமைப்பட்டேனா என்பதை நீ யோசித்துப் பார்த்தாயா?

எனக்காக நீ ஆலயம் கட்டினாய். ஆனால் உனக்காக நீ பெருமையைத் தேடினாயே. எனக்காக ஆலயம் கட்டின நீ நான் தங்கும் ஆலயமாகிய உன் வாழ்க்கையில் என்னைத் தங்கவிடாமல் உன் தவறான வாழ்வால் தடுத்து விட்டாயே.

பாவிகள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் தாராளமாய் நீ சுவிசேஷ ஊழியங்களைத் தாங்கினாய். ஆனால் பவுலைப் போல உன்னை நீ பிரதான பாவி எனக் கண்டு உன் இரட்சிப்பிற்காக இன்னும் உன்னை தாழ்த்தி ஜெபிக்கவில்லையே.

நீ காணிக்கை கொடுப்பதிலும், ஊழியர்களுக்கு உதவி செய்வதிலும் தாராளமானவன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நீ செய்யும் வேலையிலே, நீ செய்யும் தொழிலிலே உண்மையாயிருக்கவும், உலகின் வழியைப் பின்பற்றாமலிருப்பதற்கும் நீ தவறிவிட்டாயே.

நீ பல மனித நேயப் பணிகளை ஆதரிக்கிறாய். பல நற்செயல்களால் பலருக்கு உதவியாயிருக்கிறாய். ஆனால் அந்த நற்கிரியைகளே உனக்கு ஆசீர்வாதத்தைத் தரும் என நம்பி, உண்மையில் என்னுடைய பார்வையில் எதை நீ முதலாவது செய்ய வேண்டும் என்பதை அறியாதிருக்கிறாயே. என்னுடைய நீதியை உணராமல், உன்னுடைய சுயநீதியில் வாழ விரும்புகிறாயே.

நீ என்னை மனதால் மதிக்கிறாய். ஆனால் உன் தவறான குணங்களாலும், சுபாவங்களாலும் என்னை அவமதிக்கிறாயே. நீ என் வேதத்தை தினமும் படிக்கிறாய். ஆனால் அதன் மூலம் நீ அறியும் சத்திய ஆலோசனைகளையோ காலில் போட்டு மிதிக்கிறாயே.

நீ என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறாய். நீ போகும் இடங்களும், நீ விரும்பும் திசைகளும், நீ சம்பந்தப்படும் காரியங்கள் என் சமுகத்திற்கு ஏற்றவையா என்பதைச் சிந்தித்தாயா.

நீ எனக்காகச் செய்கிற காரியங்களைச் சற்று நிறுத்தி வைத்துவிட்டு, உனக்காகக் கல்வாரிச் சிலுவையில் நான் என்ன செய்திருக்கிறேனோ, அவைகளைச் சிந்தி. முதலில் நீ மனந்திரும்பு. உன் உள்ளான இதயத்தில் எனக்கு இடங்கொடு. உன்னை மாற்றி அமைக்க எனக்கு அனுமதி கொடு. அப்போது உனக்கு நான் எதையும் செய்யவில்லை என்று நீ ஒரு போதும் சொல்லமாட்டாய்.

முதலில் அறிந்த உண்மையில் நிற்க இயலாதவனுக்கு அடுத்த கட்ட உண்மை விளங்காது.

ஜீவ நீரோடை

மற்றவர்களின் சுவை

நெகேமியா – 4:7-23

எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறது போல... 1 கொரிந்தியர் 10:32

1 கொரிந்தியர் -10:24-33

ஒரு முறை சாப்பிட மிக நன்றாக இருக்கிறதே என்று நான் ருசித்தறிந்த ஒரு இனிப்புப் பொருளைப் பிள்ளைகளுக்காக ஆசையோடு வாங்கி வந்தேன். ஆனால் அந்த இனிப்புப் பொருள் அவர்களைச் சற்றும் கவரவில்லை. நான் ஆசையோடு வாங்கி வந்த பொருளை அவர்கள் அற்பமாக ஒதுக்கி வைத்து விட்டார்கள். ஒரு சுவையான பொருளை ருசிக்கத் தெரியவில்லையே என்று நான் வருத்தப்பட்டேன். ஆனால் நன்கு சிந்தித்துப் பார்த்தபோது நான்தான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை விளங்கிக் கொண்டேன்.

எனக்குச் சுவையாயிருப்பது எல்லா நாவுக்கும் சுவையாயிராது. எனக்குப் பிரமாதமாகத் தெரிவது எல்லோருக்கும் பிரமாதமாகத் தெரியாது. எனவே என் சுவையை மட்டுமே அடிப்படையாக வைத்துச் செயல்படாமல், மற்றவர்களுக்கு எது சுவையாயிருக்கும் என்று யோசிக்கும் தேவையும் உள்ளது.

உறவுகளுக்கு மத்தியில் எது அன்பு, எது மகிழ்ச்சி என்று நாமே முடிவு செய்து விடுவதல்ல. மற்றவர்கள் எதனை அன்பு என்று பார்க்கின்றார்கள்? எதை அவர்கள் மகிழ்ச்சியான விஷயமாகப் பார்க்கின்றார்கள்? எது அவர்களுக்கு திருப்தியளிக்கின்றது? என்பவற்றை நாம் சிந்திக்க வேண்டும். மற்றவர்களின் மனநிலைக் கேற்றபடி நாம் வளைந்து போய் சமரசமாக வேண்டும் என்பதல்ல. மற்றவர்களின் நியாயமான உணர்வுகள், எண்ணங்கள், சுவைகள், விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றிற்கு நாம் சமநிலைப் பிரமாணத்தோடு மதிப்பளிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களை நாம் உண்மையாக நேசிக்க முடியும். அப்போது தான் அவர்களை மகிழ்விக்கும் தன்மையுடைய நற்காரியங்களைச் செய்ய முடியும்.

குடும்ப வாழ்க்கையில் நாம் அன்பு என்று சிந்தித்தது மற்றவருக்கு அன்பாகத் தெரிந்ததா? நாம் நல்லது என்று பார்த்தது அவராலும் அப்படிப் பார்க்கப்பட முடியுமா? நாம் மிகுந்த மகிழ்ச்சிக்குரியது என்று கணக்கிட்டது அவருக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தந்ததா? இவ்விதமாகச் சிந்தித்து செயல்பட்டால்தான் நம்முடைய அன்பும் நற்செயல்களும் மதிக்கப்படும். தேவன் எதை விரும்புகிறார்? தேவனுடைய பார்வையில் எது சரியாகத் தோன்றுகிறது? தேவன் எதனை அன்பு என்று அங்கீகரிக்கிறார்? நாம் நல்லது என்று செய்வதெல்லாம் அவர் பார்வையில் அப்படியே இருக்குமா? என்றெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். தேவன் பிரியப்படும் விதமாகச் செயல்படப் பழகிவிட்டால், மற்றவர்களின் நியாயமான பிரியங்களையும் நாம் அறிந்து செயல்பட முடியும்.

தீயதைக் கண்டிக்க யாராலும் கூடும்
நல்லதை மெச்சிடவோ சிலரால் மட்டுமே கூடும்

ஜீவ நீரோடை

தேவையின் அழுத்தம்

நியாயாதிபதிகள் 6:1-14

அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்... நியா – 6:6

அப் . 7-17-36

குறிப்பிட்ட ஒருவர் நன்கு படித்திருந்தும், வேலையில்லாத நிலையிலேயே இருந்தார். அவ்வேளையில் திருமணமும் செய்து கொண்டார். ஆயினும் மனைவியினுடைய பெற்றோரின் ஒத்தாசையால்தான் சில வருடங்கள் குடும்பத்தை நடத்தினார். இந்நிலையில் மனைவியின் பெற்றோரோடு ஏற்பட்ட ஒரு மனஸ்தாபத்தின் விளைவாக, ஒத்தாசையும் நின்று போனது. நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்ட அவர், வேலை தேடி அலைந்தார். முதலில் ஓரளவு வருமானமுள்ள ஒருவேலைதான் கிடைத்தது. பின்னர் நல்ல ஒரு வேலை கிடைத்து, நல்ல நிலையை அடைந்தார்.

தொடக்கத்திலிருந்தே அவர் ஒரு வேலையைத் தேடினபோதிலும், நிர்பந்தமான ஒரு நிலை ஏற்பட்டபோதே அந்தத் தேடலின் வேகம் அதிகமானது. அதன் விளைவே தேடியது கிடைத்தது. ஆம். நாம் நம்முடைய பல தேவைகளை நன்கு உணர்ந்துதானிருக்கிறோம். அதனைப் பெறத் தேடுதல்களிலும் ஈடுபடத்தான் செய்கின்றோம். ஆயினும் அந்தத் தேடுதல்களில் போதிய அளவிற்கு ஒரு வேகம் இல்லாததால், அடைகின்ற நிலைகளில் மிகவும் பின்னுக்கு இருக்கின்றோம்.

வாழ்க்கையில் நம்முடைய தேவைகளின் அழுத்தங்களை அதிகமாக உணருகின்ற தருணங்கள் ஏற்படும் போதுதான், தேடுகின்ற நிலைகளிலும் அதிக அழுத்தங்களை ஏற்படுத்த முடிகின்றது. எனவேதான் தேவன் சில நெருக்கங்களைச் சரியாக உணர்ந்து அதற்கேற்ற விசையோடு தேடும்படியான ஒரு கட்டாயத்தை ஏற்படுத்துகின்றார். அவைகள் உண்மையில் நமக்கு எதிரானவைகள் அல்ல. ஏனென்றால் தேவனைத்தேடி அவரைச் சார்ந்து கொள்ளும் நல்ல ஒரு அனுபவத்திற்கு அது காணமாகின்றது.

இஸ்ரவேல் மக்களுடைய வரலாற்றைப் பார்க்கும்போது அவர்கள் தேவனுடைய கிருபை, இரக்கம், தயவு, வழிநடத்துதல், பாதுகாப்பு, ஆலோசனைகள் ஆகியவற்றின் தேவைகளை உணர்ந்தவர்களாகவேயிருந்தனர். ஆயினும் அவைகளை முழு வாஞ்சையோடு தேடவில்லை. எனவே தேவன் அவர்களுக்கு நெருக்கமான சூழ்நிலைகளை அனுமதித்தார். அதன் விளைவாக அவர்களுடைய தேவை அதிகமாக வற்புறுத்தப்பட்டது. ஆகவே, அவர்கள் தேவனைத் தேட முழு பலத்தோடு முன் வந்தார்கள். ஆம். ஒரு வேளை நீங்கள் கூட சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாத நிர்ப்பந்த நிலைகளில் காணப்படலாம். ஒரு வேளை அவைகள் தேவனைத் தேட வேண்டிய தேவையை நீங்கள் உணரும்படியாக வந்திருக்கலாமே.

துன்பங்களினால் வரும் வேதனையை விட அதனைக் கற்பனை செய்வதால் வரும் வேதனையே அதிகமானது.

ஜீவ நீரோடை

மகிழ்ச்சி எப்படி?

சங்கீதம் 16:1-11

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். – பிலிப்பியர் 4:4

பிலிப்பியர் – 4:1-9

ஒரு மனிதன் மிகுந்த துக்கத்துடன் உட்காந்திருந்தான். அவனுடைய கையில் மகிழ்ச்சியாயிருப்பது எப்படி? என்ற ஒரு புத்தகம் இருந்தது. மகிழ்ச்சியாயிருப்பது எப்படி என்ற புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு நீ ஏன் இவ்வளவு துக்கத்துடன் இருக்கின்றாய் என்று கேட்டார் ஒருவர். இந்தப் புத்தகம் என்னுடைய துக்கத்தை அதிகமாக்கி விட்டது என்றான் அவன். அது எப்படி என்று கேட்டார் அவர். மிகுந்த துக்கத்துடன் இருந்த போது இந்த புத்தகத்தை வாங்கிப் படித்தேன். இந்த புத்தகத்தில் எனக்கு உதவி செய்யும் கருத்து ஒன்றும் இல்லை. எனவே இந்த புத்தகத்தை வீணாய் வாங்கிப் படித்ததற்காகத் துக்கப்படுகிறேன் என்றான் அவன்.

மகிழ்ச்சி தொடர்பான புத்தகங்களுக்கு அளவேயில்லை. ஆனால் பல புத்தகங்கள் வெறும் ஏட்டுச் சுரைக்காயாக உள்ளதேயன்றி உருப்படியான பலன் எதையும் தரவில்லை. ஒரு மனிதன் வியாதியை தனக்குள் வைத்துக் கொண்டு ஆரோக்கியம் தொடர்பான பல புத்தகங்களைப் படிப்பதால் ஆரோக்கியம் அடைந்து விடுவதில்லை. அநேகம் ஆலோசனைகளால் அல்ல. அவசரமான சிகிட்சையால்தான் வியாதி விலகி ஆரோக்கியம் வந்து செயல்பட முடியும்.

மனமகிழ்ச்சி என்பது நமக்குள் நம்மை மகிழ்ச்சியாக்கிக் கொள்ளப் பழகிக் கொள்வதல்ல. மகிழ்ச்சியான மனநிலையைப் பெற்றிட முதலாவது மனதில் ஒட்டிக் கொண்டிருக்கின்ற பாவக்கறைகள் அகல வேண்டும். இரண்டாவது மனதைப் பாவத்துக்கு விலக்கி வைத்து, பரிசுத்தமான உணர்வுகளைக் கொடுக்கின்ற ஒரு வல்லமை வேண்டும். உயர்ந்த ஆசைகளும் உன்னதமான சிந்தைகளும் மனதிற்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

மனம் ஆரோக்கியமாயிருந்தால்தான் மகிழ்ச்சிக்கான உணர்வுகள் தோன்றும். நாம் நம்மை அடிமை கொண்டிருக்கின்ற பாவத்தை விலக்காமல் வேறு எத்தனை செயல்கள் செய்தாலும் அதனால் மனம் மகிழ்வடைந்து விடாது. மனதை நம்மை நாமே ஆரோக்கியமாக வைக்க முடியாது. தேவ சமுகம்தான் நம்மை நமக்குள் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும் வலிமையுடையது.

எத்தனையோ சுகபோக வசதிகளுடன் வாழ்ந்து வாழ்க்கையை இன்பத் தேடல்களால் நிறைத்துக் கொண்டிருந்தான் சாலொமோன் இராஜா. ஆனால் இறுதியில் எல்லாம் மனதுக்குச் சஞ்சலமே என்றான். ஆனால் தேவப்பிரசன்னம் தேடி வாழ்ந்த தாவீதோ உம்முடைய சமுகத்தில் எனக்குப் பரிபூரண ஆனந்தம் உண்டென்றான்.

பிறருடைய கவலைகளைக் குறித்துக் கொஞ்சம் நீ கவலைப்பட்டால் உன் கவலைகளில் பெரும்பகுதி கரைந்துவிடும்.

சிறிய கல்

சங்கீதம் - 108:1-13

ஆவியினாலே ஜெபம் பண்ணி...
எபேசியர் 6:18

எபேசியர் - 6:1-18

மாபெரும் பலவானாகிய ராட்சத கோலியாத்தைக் கண்டு ராஜாவே அஞ்சி நின்ற வேளையில் சாதாரண இளைஞனான தாவீது சாதாரணமான கவண் கல்லை வீசி அவனை வீழ்த்தினான். வாளாலும், ஈட்டியாலும் சாதிக்க இயலாததை சிறு கல்லைக் கொண்டு தாவீது சாதித்தான் என்பது உண்மை.

அதே வேளையில் அந்த சிறுகல்லைச் சரியாகக் குறி தவறாமல் உபயோகித்து எதிராளியை வீழ்த்துகின்ற ஒரு அற்புதமான திறமையை தாவீது வளர்த்து வைத்திருந்தான். ஏதோ ஒரு கல்லை எடுத்து வீசின உடனே கோலியாத் விழுந்துவிட்டான் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. ஒரு சிறு கல் ஆயினும் தாவீது அதனைத் திறமையாக உபயோகிக்கும் பயிற்சியைக் கொண்டிருந்தான். அதுவே அவனுக்கு வெற்றிக்கு வழிகோலியது.

வாழ்க்கையிலே வருகின்ற பல பிரச்சினைகளைச் சரியான கோணத்திலே சந்திப்பதற்கு கர்த்தர் நமக்கு காண்பிக்கும் ஒரு சிறு கல் ஜெபமே. இந்தச் சிறிய கூழாங்கல்லைக் கொண்டு, தீர்வு காண முடியாமல் தொடரும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். ஆனால் இந்த ஜெபமாகிய சிறு கூழாங்கல்லை சரியாகக் கையாளுகின்ற ஒரு ஆவிக்குரிய பயிற்சி நமக்கு அவசியம். ஏதோ வாயினால் சில நிமிடங்கள் நம்முடைய வேண்டுதல்களை வற்புறுத்திக் கூறி விட்டால் போதாது. அது வலிமையான ஜெபம் ஆகாது.

சிலரிடத்தில் ஜெபமாகிய கூழாங்கற்கள் ஏராளம் உள்ளது. ஆனால் அதனை எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்று தெரியாமல் வீசிக்கொண்டிருப்பதால் அவைகளால் சோதனைகளாகிய கோலியாத்துகள் வீழ்வதற்குப் பதிலாக, இன்னும் அவர்களை நெருங்கிவரும் நிலை உள்ளது. ஜெபம் என்பது தேவனோடு பேசுகின்ற ஒரு அனுபவமாகவும், தேவன் நாம் பேசுவதைக் கேட்கிறார் என்பதை நம்ப முடிகின்ற ஒரு அனுபவமாகவும், தேவ ஐக்கியத்தை ஜெப வேளைகளில் சரியாக உணர்ந்து உற்சாகப்பட முடிந்த அனுபவமாக மாறவேண்டும். ஜெபங்கள் தேவனோடு நமக்கிருக்கும் உண்மையான தொடர்பையும், உறவையும் பிரதிபலிக்கின்ற கருவிகளாக மாறும்போது, அவைகள் எந்த கோலியாத்துக்களையும் விழவைத்துவிடும் என்பது உண்மை.

முதலாவது ஜெபத்தை உபயோகிக்கிற நமக்குச் சரியான ஒரு மனந்திரும்புதலின் அனுபவம் வேண்டும். இரண்டாவது தேவ ஐக்கியத்தை உணர முடிகின்ற அளவிற்கு ஒரு ஸ்திரமான, விழிப்புணர்வு மிக்க பரிசுத்த வாழ்க்கை வேண்டும். மூன்றாவதாக, ஜெப விஷயத்தில் விடாப்பிடித் தன்மையும் வேண்டும். இவ்விதமாக நாம் நம்மைப் பயிற்றுவித்துக் கொண்டால் பிரச்சினைகளாகிய கோலியாத்துக்களை ஜெபத்தால் சரியாககக் குறி தவறாமல் தாக்கித் தள்ளிவிட முடியும்.

இறை நம்பிக்கை என்பது இறைவனின் பாதையில் நடப்பதால் இதயத்தில் உருவாகும் இறையாற்றலே.

ஜீவ நீரோடை

விடுதலை எப்படி?

எண்ணாகமம் 23:13-30

கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுண்டு – 11 கொரிந்தியர் 3:17

11 கொரிந்தியர் - 3:1-18

சிலர் தங்களிடமுள்ள வியாதி தொடர்பாக எப்படிப்பட்ட ஒரு மருத்துவ சிகிட்சை அவசியம் என்று தகுதியான மருத்துவரை அணுகி ஆலோசனை கேட்பதில்லை. அதற்குப் பதிலாக தங்களிடமுள்ள வியாதிகள் காண்பிக்கும் தலை வேதனை, உடல்வலி, காய்ச்சல், பசியின்மை, அசதி, தூக்கமின்மை போன்ற அறிகுறிகளுக்காக மருத்துவர்களைத் தேடுவார்கள். அதாவது உண்மையான வியாதிக்கு சிகிட்சை பார்க்காமல் வியாதி ஏற்படுத்தும் விளைவுகளுக்கு சிகிட்சை பார்ப்பார்கள். எனவே அநேகர் கவர்ச்சிகரமான போலி மருத்துவர்களிடம் மாட்டிக் கொண்டு அவதிப்படுவார்கள்.

பிசாசின் போராட்டங்கள், பில்லி சூனிய தாக்குதல்கள், அமைதியின்மை, பயம், பீதி, பயங்கரமான சொப்பனங்கள், தீய ஆவிகளின் தொல்லைகள், தற்கொலை சிந்தனைகள், எதைச் செய்தாலும் தோல்விகள், காரணகாரியம் கண்டறிய முடியாத பிரச்சினைகள், குடும்ப உறவுகளில் உடைவுகள் போன்ற ஏராளமான பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் மனிதனை ஆளுகை செய்கின்ற பாவமே. இது போன்ற ஏராளமானக் மனக்கஷ்டங்களுக்கு முக்கியக் காரணம் தேவ உறவுடன் வாழாமையே. தேவ பிரசன்னத்தில் வாழ்க்கை இல்லா தததின் விளைவாக மேற்கண்டது போன்ற ஏராளமான துன்பங்கள் மனிதனைச் சீரழிக்கின்றன.

இவற்றை மேற்கொள்வற்கான ஒரே தீர்வு மனிதன் பாவத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் விடுதலை அடைதலும் பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தோடு வாழ்தலுமே. ஆனால் அநேகர் தங்களுக்கு உண்மையான மன மாற்றமும், தேவ உறவும் தேவை என்பதை உணர்வதில்லை. அதற்குப் பதி லாக எந்த வரம் பெற்ற ஊழியரிடம் போனால் தீர்வுகிட்டும், யாரிடம் ஜெபித்துக் கொண்டால் பிரச்சினை நீங்கும் என்றே சிந்திக்கின்றனர். எனவே அநேகர் போலியான ஊழியர்களிடமும், கள்ளத்தீர்க்கதரிசிகளிடமும், ஒளியின் தூதனின் வேஷம் பூண்ட பொய்ப் போதகர்களிடமும் சென்று கண்ணிகளில் சிக்கிக் கொள்கின்றார்கள். உண்மையான மனந்திரும்புதலின்மூலம் இயேசுவிடம் வந்து பெற வேண்டிய விடுதலையை, வல்லமையான ஊழியர்கள் என்று விளம்பரம் ஆனவர்களிடம் போய்த் தேடுவதால், ஒரு பிரச்சினை அகன்றால் வேறு பல பிரச்சி னைகள் அதைவிட அதிகமாக வந்து விடுகிறது.

சுயத்தை விட்டுப்பிரிய மனமில்லையென்றால்
தேவஆவி நம்மை விட்டுப் பிரிவதைத் தடுக்க முடியாது.

ஜீவ நீரோடை

அதிக பயம் ஏன்?

1 சாமுவேல் - 28:1-20

சவுல் பெலிஸ்தரின் பாளையத்தைக் கண்டபோது பயந்தான்... 1 சாமுவேல் 28:5

யோவான் - 14:1-18

பயம் என்பதற்கு முக்கியமான காரணம் தனிமை உணர்வே ஆகும். தனித்து விடப்பட்டது போன்ற உணர்வின் விளைவாகவே சூழ்நிலைகள் மனதிற்குள் ஒருவிதமான அச்ச உணர்வுகளை ஏற்படுத்தி மனிதனைக் கவலைகள் நிறைந்தவனாக மாற்றுகிறது. பயத்திலிருந்து விடுதலை அடைய வேண்டுமானால் இருதயத்தின் தனிமை உணர்வை நீக்க உரியதைச் செய்ய வேண்டும். சவுல் அரசனின் வரலாற்றைப் பார்க்கும் போது, அவன் கலங்கினான், பயப்பட்டான், தத்தளித்தான் என்பது போன்ற செய்திகள்தான் அவனைக் குறித்து அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது. தாவீதின் வளர்ச்சியைக் கண்டு அவன் பயப்பட்டான். கோலியாத்தைக் கண்டு அவன் கலங்கினான். பெலிஸ்தர்களின் படையெடுப்பைக் கண்டு அவன் பயப்பட்டான். எதிரான சூழ்நிலைகளைக் கண்டு அவனுடைய இதயம் தத்தளித்தது. (1 சாமு. 18:15; 17:11; 28:20)

காரணம் என்னவென்றால் அவனோடு தேவஐக்கியம் இருக்கவில்லை. கர்த்தர் தன்னோடிருக்கிற நிச்சயத்தைத் தரும் தேவப் பிரசன்னத்தை அவன் அனுபவிக்கவில்லை. எனவே அவனுக்கு ஏராளம் போர் வீரர்களின் ஆதரவு இருந்தபோதிலும், மனரீதியாகத் தனித்து விடப்பட்டவனைப் போல உணர்ந்து, ஒவ்வொரு சலசலப்புகளையும் கண்டு மிகுதியாகக் கலங்கித் தவித்தான்.

ஆம். எதற்கெடுத்தாலும் பயந்து தத்தளிக்கும் ஒரு நிலை தேவ ஐக்கியமின்மையின் முக்கியமான பிரதிபலிப்பாகும். பயப்படத்தக்கதான சோதனைகளும், கலங்கித் தவிக்கத்தக்கதான துன்ப சூழ்நிலைகளும் வாழ்க்கையில் வருவது இயற்கையே. தேவன் நம்மோடிருக்கிறார் என்ற நிச்சயத்தை அனுபவ ரீதியாகப் பெற்ற மனிதன் அவைகளால் அலைக்கழிக்கப்படாமல், அவைகளை மேற்கொள்கின்றான். எனவேதான் சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்ற நிச்சயத்தைப் பெற்றிருந்த சங்கீதக்காரன், பூமியே நிலைமாறினாலும் நாங்கள் பயப்படோம் என்று கூறுகின்றான். (சங்-46:1-3)

தாவீதின் வாழ்க்கை சவுல் ராஜாவின் வாழ்க்கையைவிட, மிகுந்த சோதனைகள் நிறைந்ததாகவும், பயப்படத்தக்க சூழ்நிலைகள் நிறைந்ததாகவும் இருந்தபோதிலும், அவன் பயத்திற்கு அடிமைப்பட்டுப் போனதில்லை. தேவ ஐக்கியத்தை மிக நிச்சயமாக உணர்ந்த அவன் பயப்படத்தக்க எதிர் மாறான சூழ்நிலைகளிலும் தைரியமாக அனைத்தையும் சந்திக்கும் துணிவும், தேவனைச் சார்ந்த நம்பிக்கையின் பலமும் உடையவனாயிருந்தான். தேவ ஐக்கியத்தின் நிச்சயம் இல்லாத நிலையில் நாம் பாதுகாப்பான நிலைகளில் கூட மனரீதியில் தனிமைப்பட்டுக் கலங்குகின்றவர்களாகவேயிருப்போம்.

பிறருடைய அமைதிக்காக ஏதாவது செய்து கொண்டிரு. உன்னுடைய அமைதியைத் தக்க வைக்க அது சிறந்த வழி.

ஜீவ நீரோடை

சரியான வேத அறிவு

உபாகமம் 13:1-11

நாம் இனிக் குழந்தைகளாயிராமல்...
எபேசியர் 4:14

எபேசியர் 4:14-32

பல திருச்சபைப் போதகர்கள் யெகோவா சாட்சிகளின் தவறான உபதேசங்கள் தொடர்பாகத் தங்களின் விசுவாசிகளுக்கு ஒரு எச்சரிப்புக் கொடுப்பதுண்டு. யெகோவா சாட்சிகள் உங்களிடம் பேச வந்தால் அதை ஏற்றுக் கொள்ளாமல் அவர்களைத் தவிர்க்க வேண்டும் என்பதே அந்த எச்சரிக்கை. இது நல்ல எச்சரிக்கைதான். ஏனென்றால் கேட்கின்றவர்களின் மூளையைச் சலவை செய்து தங்களின் தப்பறையான உபதேசங்களை உட்புகுத்தி விடுவதில் C.T. ரசலின் விசுவாசிகள், வேதாகம மாணாக்கர்கள், யெகோவா சாட்சிகள் போன்றோர் மிகவும் கில்லாடிகள். வேத அறிவில் அரைகுறையானவர்கள் அவர்களின் வலைகளில் சிக்காமலிருப்பது கடினம்.

அதே வேளையில் தவறான உபதேசங்களைக் கேட்காமல் காதுகளை அடைத்துக் கொள்வதே சரியான வழி அல்ல. மற்றவர் எதை எவ்விதம் தவறாக அர்த்தப்படுத்தி வேதத்தின் மையக் கருத்துக்கு முரண்பாடாக விளக்கம் கொடுக்கின்றார் என்பதைக் கவனிக்கவும் பழக வேண்டும். யெகோவா சாட்சிகளின் போதனைகளுக்குக் கதவை அடைப்பது மட்டுமல்ல. அவர்களின் தவறான போதனைகள் எவ்விதம் வேதத்தின் அடிப்படையில் தவறானது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இல்லையென்றால் என்றாவது ஒரு நாள் ஏதாவது ஒரு விதத்தில் அவர்களின் மூளைச்சலவை போதனைகள் நம்மை அறியாமலே நமக்குள் புகுந்துவிட வாய்ப்புண்டு.

பரிதாபகரமாக இன்றைய திருச்சபை விசுவாசிகளுக்கு ஆமென், அல்லேலூயா, தோத்திரம் என்று கோஷம் இடத் தெரிந்த அளவிற்கு வேத போதனைகளைப் பகுத்தறிந்து கொள்ளத் தெரியவில்லை. ஏனென்றால் ஜனங்களைப் பரவசப்படத் தூண்டும் வார்த்தைகளையே போதகர்கள் அதிகமாகப் பேசுகின்றனர். விசுவாசிகள் எதையும் பகுத்துணர்வதற்கான தெளிவு தரும் போதனை களுக்குச் சபைகளிலே பஞ்சம். சரியான உபதேசங்களைச் சரியாக உபதேசித்து இதுதான் சத்தியம், இதுதான் வேதம் என்ற உறுதியை விசுவாசிகள் பெறச் செய்ய வேண்டும். இல்லையென்றால் தந்திரமான போதகமாகிய பலவிதக் காற்றுகளின் பாதைகளில் போகாமலிருப்பது அவர்களுக்குக் கடினமான காரியம். நாம் குழந்தைகளாயிராமல் சரியான உபதேச உணவுகளால் புருஷர்களானால்தான் தவறான உபதேசங்களை எதிர்கொள்ள இயலும்.

புதிதாக எதையாவது அரிய விரும்பும் முன்பு
ஏற்கெனவே அறிந்ததின்படி செயல்பட்டாயா என்று பார்.

ஜீவ நீரோடை

சௌகரியங்கள் பெருகினால்

1 இராஜாக்கள் - 11:1-14

என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமானதால்... 1 பேதுரு - 1:6

1 பேதுரு - 1:1-9

எக்காலங்களையும் விட இக்காலத்தில் மனிதன் சௌகரியங்களை அதிகமாகத் தேடுகிறான். எந்த ஒரு சின்ன விஷயமாயினும், அதில் இன்னும் கொஞ்சம் சௌகரியத்தைப் பெற முடியுமா என்றே மனிதன் தேடுகிறான். எழுந்து சென்று ஒரு விளக்கின் சுவிட்சை அழுத்தவோ, ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கவோ தேவையின்றி எல்லாவற்றையும் இருந்த இடத்திலிருந்தே மனிதன் செய்கின்றான். வேலைகளை இதைவிட எளிதாக்க முடியாதா என்ற எண்ணமே எல்லோரிடமும் மேலோங்கியுள்ளது. ஆனால் வாழ்க்கையில் சௌகரியம் பெருகப், பெருக உடல் ஆரோக்கிய நிலை பெரிதும் குறைந்து வருகிறது. சரீரத்தை ஆடாமல், அசையாமல் வைத்துக் கொண்டு, அவன் எல்லாவற்றையும் செய்து பழகி விட்டதால் போதிய வேலையில்லாத சரீரம் பல நோய்களுக்குப் புகலிடமாகி விடுகிறது.

வாழ்க்கையில் நம்முடைய உடல், பலம், மன ஆற்றல், புத்தி, சிந்தனை ஆகிய யாவற்றிற்கும் போதிய அளவு வேலைகள் வேண்டும். வாழ்க்கையில் எப்போதும் சிரமமின்றிச் சுகமாயிருக்க விரும்புகின்ற மனிதன் தனக்குள் இருக்கும் ஆற்றல்கள் இயங்க இடம் கொடாதிருக்கிறான். எனவே சுகம் பெருகப், பெருக மனிதன் மனரீதியாக பலவீனம் அடைந்து பல பாவ நோய்களுக்கும் அடிமையாகின்றான்.

யோசேப்பு, மோசே, தாவீது போன்றோரின் வாழ்க்கைப் பாதை சௌகரியம் நிறைந்தவைகளும், சுகமானவைகளுமாக இருக்கவில்லை. ஆனால் அந்தச் சூழ்நிலைகளின் நடுவில் அவர்களின் மனமும், உணர்வுகளும் தேவனையும், அவருடைய கிருபைகளையும் அதிகமாகப் பற்றிக் கொண்டிருந்தன. அதன் விளைவாக சோதனையான சூழ்நிலைகளின் நடுவிலும் மனதில் அவர்களுக்கு தேவ இளைப்பாறுதலும், சந்தோஷமும் இருந்தன.

தாவீது வாழ்க்கைப் போராட்டங்களைச் சந்திப்பது எப்படி என்ற சூழ்நிலையிலேயே எப்போதும் இருந்தான். சாலொமோன் வாழ்க்கையை இன்னும் கொஞ்சம் சுகமாக்குவது எப்படி என்ற கேள்வியிலேயே எப்போதும் இருந்தான். முடிவு, தாவீது ஆத்ம நிலையில் செயல்படும் மனிதனாயிருந்தான். சாலொமோனோ ஆத்ம நிலையில் செயலிழந்த மனிதனாய் மாறினான். தாவீதின் சரீர மன இயக்கங்களுக்கு எப்போதும் பரபரப்பான வேலை இருந்தது. எனவே அவன் தேவனுக்குப் பிரியமானவன் என்ற நிலையில் வாழ்ந்தான். சாலொமோனுக்கோ எப்போதும் சௌகரிய வாஞ்சையே பரவசமூட்டிக் கொண்டிருந்தது. எனவே ஒரு நாள் அவன் தேவனுக்குப் பிரியமற்றவனாக மாறிப் போனான். ஆம். சில கஷ்டங்கள், பிரச்சினைகள் ஆகியவை வாழ்க்கையில் நம்மை எப்போதும் சரியாகச் செயல்படுத்துகின்றன என்பது உண்மை. அசௌகரியங்கள் சிலவற்றைக் கடந்து சென்றால்தான் உண்மையான மன சௌகரியங்களை அடைய முடியும்.

சிரமங்களைக் காணாத சரீரம் பலமிழக்கிறது
துன்பங்களைக் காணாத வாழ்வு தரமிழந்து போகிறது.

ஜீவ நீரோடை

உயர்ந்து நிற்போம்

11 நாளாகமம் - 20:1-17

கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.
11 கொரிந்தியர் 4:9

11 கொரிந்தியர் - 4:1-12

ஜப்பான் நாடு இன்று உலக நாடுகளின் நடுவில் எந்த முன்னேற்றமுமின்றி, பொருளாதார வளங்குன்றிய ஒரு நாடாக இருப்பதாகக் கற்பனை செய்வோம். அப்படியிருந்திருந்தால் அதற்கு நியாயமான பல காரணங்களை காட்ட முடியும். உலகத்திலேயே முதன் முறையாக அணுகுண்டு தாக்குதலினால் எழும்ப முடியாத அளவிற்கு விழ வைக்கப்பட்ட நாடு. அடிக்கடி பூமி அதிர்ச்சியினாலும், நில நடுக்கங்களினாலும் பாதிக்கப்படும் நாடு. அமெரிக்காவைப் போலவோ, ஆஸ்திரே லியாவைப் போலவோ இயற்கை வளங்கள் மிகுந்த நாடல்ல. நிலப்பரப்பில் ரஷியா, இந்தியா போல பெரிய நாடல்ல. ஆனால் ஜப்பான் என்ற குட்டிநாடு இன்று உலக அளவில் எத்தனையே பாதகமான சூழ்நிலைகளின் நடுவிலும் தலை நிமிர்ந்து நிற்கிறது.

காரணம் என்ன? தாங்கள் எந்த நிலைமையிலிருக்கின்றோம் என்பதையே பார்த்துக் கொண்டிருக்கவில்லை. தாங்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதிலேயே அவர்களின் கவனம் இருந்தது. எல்லா எதிர் சூழ்நிலைகளையும் கடந்து நாம் எழுந்து நிமிர்ந்து நின்று காட்ட வேண்டும் என்ற தரிசனம்தான் உலக நாடுகளின் நடுவில் ஜப்பானை அண்ணாந்து பார்க்க வைத்தது.

எந்த நிலைமையிலிருந்தாலும் மன ரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன் என்றான் அப்போஸ்தலனாகிய பவுல் (பிலி-4:11). அப்போஸ்தலனாகிய பவுலை எந்தச் சாதனையும் படைக்காமல் யோபுவைப் போல துக்கத்தோடு புலம்புகின்ற ஒருவனாக வேதத்தில் பார்த்திருந்தால் அது நமக்கு ஆச்சரியம் தராது. ஏனென் றால் பவுலின் வாழ்க்கையில் அவன் சந்தித்த உபத்திரங்கள் அவ்வளவு மிகுதி யானவை. ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் எதிர்மாறான நிலைமைகளையும் சார்ந்து சிந்திக்காமல், தேவனை அறிந்த தான் எப்படி இருக்க வேண்டும் என்ற தரிசனத்திலேயே குறியா யிருந்தான்.

உண்மையில், ஒழுக்கத்தில், உயர்செயல்களில், சிறந்த பண்புகளில், மகிழ்ச்சியான மனநிலையில் உத்தமமான ஒரு ஜீவியத்தில் உயர்ந்து நின்று காட்ட வேண்டும் என்ற கொள்கை பவுலை சிகரங்களுக்குச் கொண்டு சென்றது. உலகத்தில் தனக்கு எவை எவை எதிராக இருக்கின்றன என்பதையல்ல. கிறிஸ்து வுக்குள் தனக்கு எவை எவை ஆதரவாகவும், ஆற்றல் தருகிறவைகளுமாக உள்ளன என்பதையே அவன் பார்த்தான். எனவே பவுல் மகிழ்ச்சிமிக்க மனிதனாக வும், மதிக்கத்தக்க சாட்சி மிக்க மனிதனாகவும் உயர்ந்து நின்று காண்பித்தான். ஆம். சூழ்நிலையைச் சார்ந்து அல்ல. தேவனைச் சார்ந்து யோசிப்போம்.

தரைமட்டும் உன்னைத் தாழ்த்திக் கொள்ள முடிந்தால்
வானளாவ உன்னை உயர்த்த தேவனால் முடியும்.

தீமையும் நன்மையாக

ஏசாயா – 43:1-20

நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்...
ஏசாயா – 43:19

லூக்கா – 5:1-11

இந்தியாவிற்கு சுவிசேஷத்தைச் சுமந்துவந்த மிஷனரிகளில் மிக முக்கியமானவர் வில்லியம் கேரி. அவர் இந்தியாவிற்கு வந்து இந்திய மொழிகளைக் கற்று, இந்தியர்களுக்கு சுவிசேஷத்தைக் கொடுத்தவர். துவக்கத்தில் அவர் வங்காள மொழியைக் கற்று அந்த மொழியில் புதிய ஏற்பாட்டு வேதாகமத்தை சுமார் பன்னீரெண்டு ஆண்டுகால கடும் பிரயாசத்தில் மொழி பெயர்ப்பு செய்தார். ஆனால் அச்சகத்தில் நடைபெற்ற தீ விபத்தில் அனைத்தும் எரிந்து போனது. எவ்வளவு பெரிய வேதனையான நிகழ்வு இது. எண்ணிப்பாருங்கள்.

ஆயினும் அவர் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு, மீண்டும் மொழிப்பெயர்ப்பு பணியில் இறங்கினார். இரண்டாவது மொழி பெயர்ப்பு முதல் மொழிபெயர்ப்பை விட மிக சிறப்பானதாகவும், தவறுகள் தவிர்க்கப்பட்டதாகவும் இருந்தது. ஒரு விபத்து ஒரு பெரிய பிரயாசத்தின் பலனை அழித்துப் போட்டது போலத் தோன்றினாலும், உண்மையில் சிறப்பான ஒன்று உருவாவதற்கே அது வழி வகுத்தது.

ஆம். தேவன் சில நஷ்டங்கள் வாயிலாகவும், சில லாபங்களை உருவாக்குகிறார். சில நேரங்களில் நமக்கு நிகழ்கின்ற சில காரியங்கள் எந்த விதத்திலும் நன்மையானது என்று பார்க்க முடியாத அளவிற்கு தீமையானவையே. ஆனால் நாம் கர்த்தரோடிருந்தால் அந்த தீமையின் நடுவிலும் தேவன் ஒரு நன்மையை உருவாக்குகிறார். நம்முடைய வாழ்க்கையின் எந்த ஒரு தோல்வியின் நடுவிலும், நஷ்டத்தின் நடுவிலும், ஏமாற்றத்தின் நடுவிலும், தேவனை உறுதியாகப் பற்றிக் கொண்டு வாழப்பழகிக் கொள்ள வேண்டும். அப்பொழுது அந்த தோல்விகளையும், நஷ்டங்களையும், ஏமாற்றங்களையும் தேவன் உபயோகித்து ஒரு ஆசீர்வாதமான ஒன்றை ஏற்படுத்த வல்லவராயிருக்கின்றார்.

நகோமிக்கு நிகழ்ந்தவைகள் யாவும் வேதனையானவைகளே. அவற்றை நன்மைகள் எனக் கூற முடியாது. ஆனால் அந்த தீமையான சூழல்களை தேவன் பக்குவமாக உபயோகித்து ஒரு நன்மையான சூழலை உருவாக்கினார் என்பது எத்தனை ஆறுதலான விஷயம். அரண்மனையில் இருந்த மோசேக்கு நடந்த சம்பவம் கசப்பானதே. ஆனால் அதையும் நன்மையாகத் தேவனால் மாற்ற முடிந்தது.

சில குடும்பங்களில் ஏற்பட்ட வியாபாரத் தோல்வி, சில குடும்பங்களில் ஏற்பட்ட மரணங்கள், சில உறவு நிலைகளில் ஏற்பட்ட உடைவுகள், சிலருக்கு ஏற்பட்ட வேலையிழப்புகள், சில திருமண முயற்சிகளில் ஏற்பட்ட தோல்விகள், சிலரால் இழைக்கப்பட்ட மிக மோசமான அநீதிகள் போன்றவை அந்தந்தக் குடும்பங்களை கடுமையான வேதனைகளுக்குள் தள்ளியிருக்கின்றன. ஆனால் அவைகளின் நடுவில் கர்த்தரை உறுதியாகப் பற்றிக் கொண்டதால், கர்த்தர் கேடானவைகளின் நடுவிலும் செயல்பட்டு முந்தி இருந்ததைவிட மிக மேன்மையான சூழ்நிலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்.

துவக்கத்தில் நீ பெற்ற சில தோல்விகள், எதிர்கால வெற்றிகளை தக்க வைக்கும் முள் வேலிகள்.

செயல்பட வேண்டும்

சங்கீதம் 119:1-16

அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும். – 1 யோவான் 2:6

1 யோவான் 2:1-13

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் வேறு வேலை எதுவும் கிடைக்காததால் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அருகில் டைப்ரைட்டர் வேலை செய்ய ஆரம் பித்தார். ஆனால் இவரிடம் யாரும் டைப் செய்ய வரவில்லை. ஏன் யாரும் வர வில்லை என்று யோசித்த அவருக்கு உண்மை விளங்கியது. தான் வேலையின்றி கையை கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பதால் யாரும் தன்னை நம்பி டைப் செய்ய வருவதில்லை என்று புரிந்து கொண்டார். எனவே ஒரு யோசனை செய்தார். மறுநாள் யாரும் டைப் செய்ய வராத போதும் இவர் ஏதோ நிறைய வேலைகள் வாங்கி வைத்திருப்பது போல எதை எதையோ வேக வேகமாக டைப் செய்து அவற்றை கிழித்துப் போட ஆரம்பித்தார். இவர் வேலையில் மிகவும் பிஸியாக இருப்பதை போல காண்பித்த உடன் அநேகர் இவரிடம் வர ஆரம்பித்து விட்டனர்.

நாம் செயல்படாமல் சும்மாயிருந்தால் யாரும் நம்மால் ஈர்க்கப்பட மாட்டார் கள். நாம் செயல்படுகிறவர்களாகக் காணப்படாத போது ஜனங்கள் நம்முடைய போதனைகளாலோ, உயர்ந்த கருத்துக்களாலோ தொடப்படுவது கடினம். இந்நாட்களில் கிறிஸ்தவப் போதனைகள் ஜனங்களின் நடுவில் அதிகமான தாக்கங்களை ஏற்படுத்தவில்லை. கிறிஸ்துவைக் குறித்த நற்செய்தியும், போதனை யும் பலரால் வெறும் மத போதனைகளாகவே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஏனென்றால் இன்றைய கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாகச் செயல்பட்டுக் காண்பிக்கவில்லை. அவர்கள் மிக நல்ல ஆரோக்கியம் தரும் மருந்தை விற்கச் செல்லும் மிகவும் பலவீனமான நோயாளிகள் போல உள்ளனர். அவர்கள் வானத்தில் பறப்பது போன்ற போதனைகளைக் கொடுத்துவிட்டு எழும்பி வர இயலாத பள்ளங்களில் விழுந்து கிடக்கின்றார்கள். கிறிஸ்தவம் என்பது வெறும் போதனைக்குரியது அல்ல. அது பிரதிபலித்துக் காண்பிக்கப்பட்டுக்கொண்டே போதிக்கப்பட வேண்டும்.

கிறிஸ்தவர் என்பவரிடத்தில் உண்மையான கிறிஸ்தவ மகிமையின் அடையா ளங்கள் தெரிய வேண்டும். கிறிஸ்தவத்தை பிரசங்கிக்கின்ற ஒருவரிடம் கிறிஸ்தவ உயர்குணங்கள் பிரகாசிக்க வேண்டும். கிறிஸ்தவத்தால் என்னென்ன உயர்ந்த அனுபவங்கள் கிடைக்குமோ அதனை ஜனங்கள் கிறிஸ்தவ விசுவாசிகளிடமும் ஊழியர்களிடமும் பார்க்க வேண்டும்.

தேவனடைய புகழைப் பாடுவதில் அல்ல.
அவர் புகழும்படி வாழ்வதில்தான் பக்தி விளங்கும்.

இரங்கும் குணம்

ஏசாயா – 58:1-11

பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும்... ஏசாயா 58:7

கலாத்தியர் – 6:1-18

சிலர் தெருவில் பிச்சையெடுக்கிறவர்களையும், தங்கள் வீடுகளுக்கு வந்து பிச்சை கேட்கிறவர்களையும் கண்டால் இரங்கி அவர்களுக்கு காசோ, உணவோ கொடுப்பார்கள். சிலர் தர்ம ஸ்தாபனங்களுக்கும், அனாதை இல்லம், முதியோர் இல்லம் நடத்துகிறவர்களுக்கும் தாராளமாக நிதி உதவி தருவார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்களில் அநேகர் வறுமையில் வாடுகின்ற ஒரு குடும்பத்திற்கோ, ஆதரவற்ற நிலையில் உள்ள ஒரு தனி நபருக்கோ இரங்கி எதையும் செய்வ தில்லை. ஏனென்றால் அவர்களிடம் உண்மையான இரக்க சுபாவம் இல்லை.

பிச்சையெடுக்கத் துணிந்து விட்டவர்களுக்கு உண்மையில் நல்ல சாப்பாடு உண்டு. அவர்கள் எங்கு போயாவது பசிக்கு உணவைப் பெற்றுக்கொள்வார்கள். ஆனால் ஒருவேளை உணவு கூடச் சரியாகக் கிடைக்காமல் பிச்சைக்காரர் களைவிடக் கேவலமாக வறுமையினால் வாடுகின்ற பல குடும்பங்கள் உண்டு. சப்பாணிகளையும், குருடர்களையும், கண்டவுடன் நாம் மன மிரங்கி சில உதவி களைச் செய்கின்றோம். ஆனால் வாழ்க்கைச் சூழ்நிலைகளால் முடமாக்கப்பட்டு, வாழ வழி தெரியாமல், யாருடைய இரக்கத்தையும் பெற முடியாத நிலையில் எத்தனையோ பேர் உள்ளனர். இவர்களுக்காக நம்முடைய மனம் இரங்குகிறதா?

பல சபை அமைப்புகளும், போதகர்களும் தர்ம ஸ்தாபனங்களையும், அனாதையில்லங்களையும் எழுப்புவதில் அதிகத் தீவிரமா யிருக்கின்றனர். அவைகளுக்கு நிதியுதவி பெறுவதில் திறமையானவர்களாக இருக்கின்றனர். ஆனால் தனி நபர்களை இரக்க குணமுடையவர்களாகவும், இரங்கிச் செயல் படுகிறவர்களாகவும் மாற்றுவதற்குப் போதிய சிந்தையின்றி இருக் கின்றனர். ஜனங்களைத் தசமபாகமும், காணிக்கையும் கொடுக்கவைப்பதில் அதிக வெற்றி காணும் பாஸ்டர்கள் அவர்களை நன்மை செய்கிறவர்களாகவும், மனதுருகிப் பிறருக்கு உதவி செய்கிறவர்களாகவும் மாற்றுவதற்கோ ஆர்வமின்றி யிருக்கின்றனர்.

அனாதை இல்லங்கள் வழியாகவும், தர்ம ஸ்தாபனங்கள் வழியாகவும் ஆதரவற்றவர்களில் வெகுசிலருக்குதான் உதவ முடியும். இரக்கமுள்ளவர்களும், மனதுருக்கம் நிறைந்தவர்களும், பிறர் துயருக்காகப் பரிதக்விகிறவர்களும், நல்ல சமாரியனைப் போல துன்புறுகிறவர்களைக் கண்டதும் ஓடோடி வரும் மனநிலை உள்ளவர்களும் சமுதாயத்தில் பெருக வேண்டுமு. தாங்கள் வாழும் பகுதிகளில், தாங்கள் காண நேரிடும் எளிய நிலை மக்களுக்காக இரங்கி இயன்ற உதவிகளைச் செய்கிறவர்கள் எங்கும் எழும்ப வேண்டும். இப்படிப்பட்டவர்களை உருவாக்கவும், இரக்க மனதுடன் செயல்படுகிறவர்களாக மாற்றவும், சபைகளும், போதகர்களும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

எரியாத விளக்குகளால் யாருக்கு லாபம்?
பிறருக்கு உதவாத செல்வங்கள் இருப்பதே சாபம்.

இந்த இரட்சிப்பு வேண்டாம்

எரேமியா 2:21-29

மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள். – மத்தேயு 3:8

மத்தேயு 3:1-12

மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று அந்நிய பாஷையின் அடையாளத்தோடு அபிஷேகம் பெற்றுக்கொண்டதாகச் சாட்சி சொல்லுகின்ற சகோதரி அவர். ஆனால் பெரும்பாலான அவருடைய செயல்களில் பரிசுத்த சாயலைப் பார்க்க முடியாது. அவருடைய வார்த்தைகளில் உண்மையைப் பார்ப்பது மிக அரிது. அவருடைய பெரும்பாலான சுபாவங்கள் அவரிடம் முன்னரே இருந்த ஜென்ம சுபாவங்களைக் கொண்டவைகளே. ஆனால் அந்த சகோதரியோ எங்காவது போய் சிலருக்கு இயேசுவின் இரட்சிப்பைக் குறித்து நற்செய்தி சொல்லாவிட்டால் நிம்மதியாகத் தூங்க மாட்டார்கள்.

நாம் இரட்சிக்கப்பட்டதாகவும், ஆவிக்குரிய அனுபவங்களைப் பெற்றிருப்பதாகவும் அறிக்கை செய்வது சந்தோஷமானது. ஆனால் அந்த இரட்சிப்பும், ஆவிக்குரிய அனுபவங்களும் நமக்கு என்ன செய்திருக்கின்றன என்பது முக்கியம். இரட்சிப்பு நம்மை நற்செயல்கள் செய்திடப் பலப்படுத்தியிருக்க வேண்டும். இரட்சிப்பு தேவ உறவில் நாம் வாழ்வதற்கு உதவியிருக்க வேண்டும். இரட்சிப்பு தவறான சுபாவங்களை மேற்கொள்ளும் கிருபையை நமக்குத் தந்திருக்க வேண்டும். இரட்சிப்பு எதைச் செய்தாலும் பரிசுத்த சிந்தையோடு செய்யும் தூண்டுதலை நமக்குள் தந்திருக்க வேண்டும். இரட்சிப்பு துணிந்து பாவத்தை எதிர்ப்பதற்கும், தூய்மையாய் மனதை வைத்திருப்பதற்கும் நமக்குள் போதிய ஆர்வத்தையும் ஆசையையும், ஆற்றலையும் தந்திருக்க வேண்டும்.

இப்படியில்லையென்றால் நம்மிடம் உள்ள இரட்சிப்பு உண்மையானதல்ல. அது இயேசுவால் வந்ததல்ல. அது தேவனால் வராத இரட்சிப்பாயிருப்பதால் அது தேவனுக்குப் பிரியமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை. அது உண்மையான இரட்சிப்பாயிராததால் அதனால் உண்மையான கிறிஸ்தவ மகிமையை நம்மிடம் வெளிப்படச் செய்ய இயலவில்லை.

நாம் வாங்கி வந்த ஓர் இயந்திரம் நாம் எதிர்பார்த்த வேலையைச் செய்யாவிட்டால் அதனை வீட்டில் வைத்துக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை. நம்மைக் கிறிஸ்துவுக்கேற்ற பரிசுத்தவான்களாக்க இயலாமல் போன போலி இரட்சிப்பை வேண்டாம் என்று வீசிவிட்டு, உண்மையான இரட்சிப்பின் அனுபவத்தை இயேசுவிடம் கேட்டு வாங்க முன்வருவோம். பாவ விடுதலை, தேவ உறவு, பரிசுத்த வாழ்க்கை இவற்றை முன்னிலைப்படுத்திக் கேட்டால் அந்த உண்மையான இரட்சிப்பு வரும்.

நல்லதைப் பகைவனிடம் பார்த்தாலும் மெச்சிடத் தயங்காதே
தீயதை நண்பனிடம் பார்த்தாலும் சுட்டிக்காட்டத் தவறாதே.

சத்தமும், அமைதியும்

சங்கீதம்-37:23-40

நீயும் போய் அந்தப்படியே செய்...
லூக்கா – 10 : 37

லூக்கா-10:25-37

படித்தவர்களும், பெரியவர்களும் அந்த வீதி வழியாக அதிகமாகச் செல் வார்கள். அந்த வீதியில் யாரோ குப்பைகளைக் கொட்டிச் சென்றதால், எங்கும் அது சிதறியிருந்தது. அந்த வழியாக வந்த சிலர் எவ்வளவு பொறுப்பற்றவர்களாக இந்தியர்கள் உள்ளனர் என்றனர். "சிலர் அரசாங்கம் என்னதான் செய்து கொண்டிருக்கின்றதோ" என்றனர்." "சிலர் நகராட்சி நிர்வாகம் சரியில்லை. நீதிமன் றத்திற்குப் போனால்தான் சரிப்படும்" என்றனர். சிங்கப்பூரில் இப்படி யாராவது செய் திருந்தால் கம்பி எண்ண வேண்டியதுதான்" என்றார் சிலர். விமர்சனங்களின் சத்தம் அங்கே அதிகமாகிக்கொண்டேயிருந்தது. குப்பையோ சிதறி, எங்கும் பரவிக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் முதியவர் ஒருவர் வந்தார். அவர் எந்த விமர் சனமும் செய்யவில்லை. ஆனால் பொறுமையாகக் குப்பைகள் யாவற்றையும் அள்ளிக்கொண்டுக் குப்பைத்தொட்டியில் போட்டார். பலருடைய விமர்சன சத்தம் செய்யாத நல்ல செயலை, ஒருவருடைய அமைதியான செயல்பாடு செய்து முடித்தது.

குறைகளைக் கண்டு கூச்சலிடுவோர் பலர். குற்றங்களைக் கண்டு கொந் தளிப்போர் பலர். தவறானவைகளைக் கண்டு அவசர ஆத்திரத்துடன் அதிக ஆரவாரம் செய்வோர் பலர். ஆனால் நடந்துவிட்ட தவறைச் சரிசெய்ய என்ன செய்யலாம் என்று யோசிக்கின்றவர்களும், சரியானதைச் செய்து காட்ட முனைகின்றவர்களும் வெகு சிலரே.

இந்நாட்களில் நான் எங்கு சென்றாலும் தவறான போலி ஊழியர்களுக் கெதிராக, ஆணித்தரமாக விமர்சனம் செய்கின்ற சிலரைப் பார்க்க முடிகிறது. தவறுகள் விஷயத்தில் மௌனம் சாதிக்காமல், தங்களின் எதிர்ப்புணர்வைக் காட்டுவது நல்லதே. அதே வேளையில் இவர்களிடமும் திருப்திகரமான நல்லதைப் பார்க்கமுடியவில்லை. வைராக்கியமாக விமர்சிக்கின்றவர்களாயிருந்தும், சரியான வற்றிற்கு இவர்களும் சாட்சியாக நிற்கவில்லை.

உண்மையை ஒருவரிடமும் பார்க்க இயலாவிட்டால் நம்மிடமாவது அதை உலகம் பார்க்க வேண்டும். சரியானதைச் செய்திடும் ஒருவரையும் பார்க்க இயலா விட்டால் உலகம் நம்மையாவது பார்த்து சந்தோஷப்படவேண்டும். இன்று ஒரு கூட்டம் தவறானவைகளைச் செய்கின்ற பரிசேயர்கள். மறுபுறம் அவர்களை விமர்சிக்க ஒரு கூட்டம். ஆனால் இவர்களும் பரிசேயர்களே, அவர்கள் விதிவிலகிய பரிசேயர்கள். இவர்களோ விவேகமில்லாத பரிசேயர்கள். ஆரவார விமர்சகர்களாக மட்டும் இராமல் அமைதியான செயல்பாட்டாளர்களாகவும் விளங்குவோம்.

நல்லவராயிராமலே நன்மை செய்ய முடியும். ஆனால் நன்மை செய்யாமல் நல்லவராயிருக்க முடியாது.

ஜீவ நீரோடை

அறிவும், உணர்ச்சியும்

11 சாமுவேல் - 6:12-23

நான் ஆவியோடும், கருத்தோடும் ....
1 கொரி – 14:15

1 கொரிந்தியர் - 14 :1 -20

பெற்றோர் - பிள்ளைகள் என்ற உறவின் அடிப்படையில் பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைப் பொறுப்புடன் செய்கின்றனர். பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்கின்றனர். இது உறவைக் குறித்த அறிவின் அடிப்படையிலான செயல்பாடு. பெற்றோரும், பிள்ளைகளும் அன்போடு, பழகிப் பேசி ஒருவருக்கொருவர் ஐக்கியமாயிருக்கின்றனர். இது உறவின் விளைவான உணர்வுப்பூர்வமான செயல்பாடு. பெற்றோர் பிள்ளைகள் உறவில் இந்த இரண்டு வகை செயல்பாடுகளும் இருந்தால்தான் குடும்பம் குதூகல சூழ்நிலையில் இருக்கும்.

அதுபோல தேவனோடு நமக்குள்ள உறவு நிலையில் அறிவுப்பூர்வமான செயல்பாடும், உணர்வுப் பூர்வமான செயல்பாடும் இணைந்து இயங்க வேண்டும். தேவனுடைய காரியங்களைக் குறித்த அறிவோடு அவருக்கு முன்பாக ஒழுங்குமுறை மிக்க வாழ்க்கையை வாழ்கின்ற அறிவுப்பூர்வச் செயல்பாடு தேவை. அத்துடன் தேவ உறவைக் குறித்த உணர்ச்சிப்பூர்வமான உற்சாகச் செயல்பாடுகளும் தேவை. இயேசு கிறிஸ்து எப்போதும் பிதாவாகிய தேவனுக்குப் பிரியமானவைகளைச் செய்து அதன் விளைவாக, பிதா தம்மோடிருப்பதை எப்போதும் உறுதிப்படுத்தி உணர்ந்தார். எனவே அவர் ஒருபோதும் தனிமையுணர்வினால் வருத்தப்பட்டதில்லை. (யோ - 8:29) சீடர்கள் யாவரும் தம்மை விட்டு ஓடிப் போகப் போகிறார்கள் என்பதை அறிந்திருந்தும், தாம் தனியாக விடப்படுவதில்லை, பிதா தம்மோடிருப்பார் என்ற நிச்சயத்தை அவர் பெற்றிருந்தார். (யோவான் 16:32)

நம் தேவனைத் துதித்துப்பாடி, ஸ்தோத்தரித்து, ஆராதித்து, ஆவியின் களிப்பை உணர விரும்புகிறோம். எதற்காக? தேவ ஐக்கியத்தை உணர்ச்சிப் பூர்வமாக அனுபவிப்பதற்காக. பரிசுத்தமாக வாழ்ந்தால் மட்டும் போதும் என்று, உற்சாக குதூகல உணர்வுகளை நாம் புறக்கணிக்கவும் கூடாது. பாடித் துதித்துப் பரவசநிலை அடைந்தால் அதுவே போதும் என எண்ணி, அறிவுப் பூர்வமாக சிந்தித்துச் செயல்படுதலைக் குறித்து அசட்டையாகவும் இருக்கக்கூடாது.

சிலர் ஆவிக்குரிய விஷயங்களில், உணர்ச்சிப்பூர்வ உற்சாகங்கள் அவசியமில்லை என எண்ணி விடுகின்றனர். சிலர் ஆவிக்குரிய வாழ்க்கை என்றாலே உணர்ச்சிப்பூர்வ, உற்சாக மனநிலைகள்தான் என எண்ணி விடுகின்றனர். எனவே தேவனுடைய காரியங்களைச் சரியாகச் சிந்தித்து, செவ்வையாய்ச் செயல்பட வேண்டியதின் தேவையை உணராமல் போய்விடுகிறார்கள். அறிவுப் பூர்வ ஒழுங்குகளும், உணர்ச்சிப்பூர்வ உற்சாகங்களும் இணைந்தால்தான் இறை வாழ்க்கை இன்பமாயிருக்கும்.

> *உண்மையைப் புரிந்து கொள்ள அல்ல. அதனை ஏற்றுக் கொள்ளத்தான் மனிதன் சிரமப்படுகிறான்.*

ஜீவ நோடை

ஒரே ஒரு நாள்

பிரசங்கி-3:1-12

என் கூடாரத்தை விட்டுப் போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று... 11 பேதுரு – 1:13

11 பேதுரு-1 :10 -21

இன்னும் ஒரே ஒரு நாள் தான் நீ வாழமுடியும் என்ற நிலை இருந்தால், நீ என்ன செய்வாய் என்று மாணவர்களிடம் கேட்டார் ஆசிரியர். வாழ்வதற்கு இன்று கடைசி நாள் அல்லவா என்று நினைத்து, நினைத்து அழுதுகொண்டிருப்பேன் என்றான் ஒருவன். இந்த ஒரு நாளையாவது மிக நன்றாக வாழ்ந்து முடிக்க பிரயாசப்படுவேன் என்றான் இன்னொருவன்.

நாம் எத்தனை வயதுகளில் வாழ்ந்தாலும் இன்று ஒருநாள்தான் நமக்கு நிச்சயமாகத் தரப்பட்ட நாள். நாளைக்கு என்பது நிச்சயமற்ற ஒன்று. வாழ்வதற்கு இன்னும் பல ஆண்டுகள் இருந்தாலும் சரி, சில ஆண்டுகளே இருந்தாலும் சரி, நாம் செயல்படுவதற்கு "இன்று மட்டுமே" நிச்சயமானது. எனவே இதுவரை வாழாத ஒரு நல்ல வாழ்க்கையை இன்று நாம் வாழவேண்டும் என்ற ஆசை தேவை.

நாளைய தினக் கவலைகள், இன்றைய தினத்தை நாம் சரியாக வாழ்வதற்குத் தடையாகி விடக்கூடாது என்பதற்காக இயேசு நல்ல ஆலோசனைகளைத் தந்தார். இந்த ஒரு நாளையும் நன்றாக வாழ்ந்து என்ன பயன் என்ற சிந்தனையல்ல, இன்று ஒருநாளாவது ஏன் நன்றாக வாழ்ந்து முடிக்கக்கூடாது என்ற சிந்தை வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுலும், பேதுருவும் மரணத்தின் நேரத்தை ஓரளவிற்கு முன்னறிந்தவர்கள். தாங்கள் உலகத்தை விட்டு விடை பெறுவதற்கான நேரம் வந்து விட்டது என்பதைத் தெரிந்து கொண்டவர்கள். ஆனால் அந்த சிந்தனை அவர்களைச் செயல்படாமல் முடக்கிவிடவில்லை. ஐயோ, இனி அதிக நாள் வாழ முடியாதே என்று அவர்களை அழவைத்து விடவில்லை. இறுதிவரைச் சரியாக வாழ்ந்து முடிப்போம் என்ற சிந்தனையோடு, தங்களுக்குத் தேவனால் தரப்பட்டப் பொறுப்புகளைத் தொடர்ந்து சந்தோஷமாகச் செய்து கொண்டிருந்தனர்.

சிலுவையில் தொங்கின கள்ளன், இதுவரை பாவியாக வாழ்ந்துவிட்டு மரிக்கப் போகின்ற இறுதி வேளையில் என்ன செய்துவிட முடியும் என்று சிந்திக் கவில்லை. அதற்குப் பதிலாக இந்த நேரத்திலாவது தவறுகளை உணர்ந்து, மனந் திரும்புவோம் என்ற சிந்தனையுடன் இயேசுவை நோக்கிப் பார்த்தான். அங்கே அந்த ஒரே நாள் அவனுடைய வாழ்வில் மிக நல்ல நாளாக மாறினது. உலகத்தி லிருந்து பிரிக்கப்படும் முன்பு, மனந்திரும்பி இறை அரசிற்குத் தகுதியாகிவிட்ட ஒரு திருப்தியைப் பெற்றுக்கொண்டான்.

உண்மைகளை உணர்ந்திட மனிதனுக்கு அதிகநேரங்கள் தேவைப்படுகிறது. அதற்குள் பொய்கள் அவனை உருக்குலைத்து விடுகிறது.

ஜீவ நீரோடை

பரிசுத்த நிறைவை நோக்கி

லேவியராகமம் - 20:7 -27

பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்... எபிரேயர் 12 : 14

எபிரேயர் - 12:1-14

நாம் எல்லா நிலைகளிலும் தேவனைப் பிரியப்படுத்தி வாழவேண்டும் என்றும், அவருக்கு முன்பாக நாம் பரிசுத்தத்தில் நிறைவுள்ளவர்களாக வாழ வேண்டும் என்றும் கூறும் போது, பலர் அதனைத் தவறாகப் புரிந்து கொள்வது உண்டு. நாம் நூற்றுக்கு நூறு பரிசுத்தமாக வாழ இயலுமா? தேவனைப் பிரியப்படுத்துகிற அளவுக்கு நாம் பரிசுத்தத்தில் முழுமையடைந்து விட முடியுமா? என்ற கேள்விகள் அவர்களைக் குடைந்தெடுக்கும்.

இந்த உலகத்தில் வாழ்கிற எவராலும், நூற்றுக்கு நூறு பரிசுத்த நிலைகளில் வாழ்ந்து விட முடியாது. பரிசுத்தத்தில் யாரும் பரிபூரணர்கள் அல்ல. ஆனால் பரிசுத்த வாழ்வு அல்லது தேவனைப் பிரியப்படுத்தும் வாழ்வு என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் பரிசுத்தமாக வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடனும், அது சார்ந்த விருப்பத்துடனும், அதற்காக இயன்ற பிரயாசத்தை மேற்கொள்வதே பரிசுத்த வாழ்க்கையாகும். அடைந்து விட்டோம் என்பது அல்ல பரிசுத்த வாழ்வு. அடையும்படி பின்னோக்காமல் முன்னேறுகின்றோம் என்பதே அது.

தேவனைப் பிரியப்படுத்திவிட்டோம் அல்லது பிரியப்படுத்திவிட முடியும் என்பது அல்ல. அவரைப் பிரியப்படுத்தி வாழ வேண்டும் என்பதில் பிரியப்பட்டுச் செயல்படுவதே தேவனைப் பிரியப்படுத்துகிற வாழ்க்கை. நூறு சதவீதம் பரிசுத்தத்தை எட்டி விட்டோம் என்பதல்ல. நூறு சதவீதத்தை எட்டிவிட வேண்டும் என்ற உள்வாஞ்சையோடு இலக்கை நோக்கித் தொடருவதே உண்மையான இறைவாழ்க்கை.

அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு முழுமையான அர்ப்பணிப்பின் மனிதன். தேவனைப் பிரியப்படுத்தி வாழ்வதை மட்டுமே கொள்கையாகக் கொண்டு வாழ்ந்தவன். ஆனாலும் தான் இலக்கை எட்டிவிட்டதாகக் கூறாமல், இலக்கை நோக்கித் தொடர்வதாகவே நிருபங்களில் கூறுவதைப் பார்க்கின்றோம். ஒருவர் பரிசுத்தமாக வாழ்கிறார் என்றால், அவர் துளிகூட தப்பு, தவறு, குறை, குற்றம் இல்லாமல் வாழ்கிறார் என்பது அர்த்தமல்ல. அவர் பரிசுத்த வாழ்வில் பிரியப்பட்டு, அந்த பிரியத்தை இயன்ற அளவு தேவ ஆவி அருளும் பலத்தால் நிறைவேற்றப் பிரயாசப்படுகிறார் என்பதே அதன் அர்த்தம். சிகரத்தைத் தொட்டு விட்டோமா என்று தேவன் பார்ப்பதில்லை. சிகரத்தை தொடுகின்ற வாஞ்சையோடு முன்னேறுகின்றோமா என்பதையே அவர் பார்க்கிறார்.

தேவனைப் பார்க்க விரும்புவது ஆர்வம். அவர் உன்னைப் பார்க்கின்றவர் என்பதை உணர்வது விவேகம்.

ஜீவ நீரோடை

முதலாவது கற்றுக் கொள்

பிரசங்கி–2:10–26

நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு... 11 தீமோத்தேயு – 3 : 14

11 தீமோத்தேயு–3:1–17

நாம் நன்றாகக் கற்றுக்கொடுக்க முடியும். ஆனால் நன்றாகக் கற்றுக் கொள்ளும் தன்மை நம்மிடம் இருக்கின்றதா என்பது மிக முக்கியம். நன்றாக நம்மால் பேசமுடியும். ஆனால் பிறர் பேசுவதை நம்மால் கேட்க முடிகிறதா என்பது மிக முக்கியம். ஒருவர் எப்பொழுதும் வேதப்பூர்வமாக யாருக்காவது, எதையாவது கற்றுக்கொடுக்க வாய்ப்புள்ளதா என்று பார்ப்பார். ஆனால் யார் கற்றுக் கொடுப்ப தையும் அமர்ந்து கேட்கும் பழக்கம் அவருக்கு இல்லை. அவர் பிரசங்கித்தால் கேட்பவர்கள் பக்தியோடு இரண்டு மணிநேரம் அமர்ந்து கேட்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். ஆனால் பிறர் பிரசங்கிப்பதை அவர் கேட்க அமர்ந்தால் கயிறு போட்டுக் அவரை கட்டி வைத்தால் கூட 15 நிமிடத்தில் கயிற்றை அறுத்துவிட்டுப் போய்விடுவார்.

சமீபத்தில் எதிர்பாராதவிதத்தில் ஒருவர் ஆலயத்தில் பிரசங்கிப்பதைக் கேட்க நேர்ந்தது. அருமையான, ஆணித்தரமான, வேத அடிப்படையிலான பிரசங்கம். ஆனால் அதைக் கேட்டபோது ஆச்சரியம் தாங்கவில்லை. இவ்வளவு விஷயங்களைச் சரியாகத் தெரிந்துவைத்துக்கொண்டு, எப்படி இவரால் சரியில் லாமல் வாழ முடிகிறது என்பதே அந்த ஆச்சரியம். ஆம். கற்றுக்கொடுக்கும் திறன் செயல்படுகிறது. கற்றுக்கொண்டு, செயல்படும் திறன் இல்லை.

ஞானம் என்பது கற்றுக் கொடுப்பதில் அல்ல, கற்றுக்கொள்வதில்தான் உறுதிப்படுகிறது. சாலொமோன் இராஜாவால் மிகக் மிக நல்ல விஷயங்களை, கற்றுக் கொடுக்க முடிந்தது. மிக நல்ல விஷயங்களைப் பிறருக்குப் பேச முடிந்தது. ஆனால் அவன் தாவீதைப் போல தேவசமுகத்தில் கற்றுக்கொண்டவன் அல்ல. எப்படி வாழ வேண்டும் என்று சொல்ல அவனால் முடிந்தது. எப்படி வாழ வேண்டும் என்று அவனால் கற்றுக்கொண்டு செயல்படத் தெரியவில்லை. ஏனென்றால் அவன் ஒரு போதகப்பிரியனேயன்றி, செயல்பிரியனல்ல.

நாம் எதைப் பிறருக்குச் சொல்லுகின்றோமோ அதனை முதலாவது நமக்குச் சொல்லவேண்டும். நாம் பிறருக்கு எதைக் கற்றுக்கொடுக்கின்றோமோ, அதை நாம், நமக்கு முதலாவது கற்பிக்க வேண்டும். தாங்கள் பின்பற்றாதவை களைப் போதிக்கின்றவர்கள், தாங்கள் கேட்பதைப் பின்பற்றாத ஒரு கூட்டத்தை உருவாக்குகின்றார்கள். தாங்கள் போதிக்கின்றவைகளால் தங்களுக்குள் மாற்றம் பெறாதவர்கள், தாங்கள் போதனைகளைக் கேட்டும், மாற்றம் பெறாத ஒரு கூட்டத்தையே உருவாக்குகின்றார்கள்.

பிறருடைய தவறுகளையே கவனித்துக் கொண்டிருப்பவன் தான் தவறிப் போவதை தவிர்க்க இயலாது.

ஜீவ நீரோடை

வசதியிருந்தும் வறுமை

ஓசியா -10:1-15 | **சகோதரரே உங்களுக்குள் வாக்குவாதங்கள் உண்டென்று... 1 கொரி – 1:11** | 1 கொரிந்தியர் -1:1-21

ஒருமுறை வசதியான ஒருவரின் அழைப்பை ஏற்று, அவருடைய வீட்டிற்கு, ஜெபிக்கும்படி சென்ற தேவ ஊழியர் ஒருவர், அந்த வீட்டின் ஆடம்பர மான சூழ்நிலைகளைக் கண்டு சற்றே பிரமித்துப் போனார். ஆனால் அவரை அழைத்தவர் அவரிடம் பேசும் போது, நாங்கள் ரொம்ப வசதியானவர்கள், ஆனாலும் பரம எழைகள் என்றார்.(We are so rich, but very poor). அவர் என்ன சொல்கின்றார் என்பதைப் புரிந்து கொள்ள சிரமப்பட்ட ஊழியரிடம் அவர், "எங்களிடம் அனுபவிக்க அனைத்து வசதிகளும் உள்ளன. ஆனால் சந்தோஷம், அமைதிக்கு எங்களிடம் மிகுந்த பற்றாக்குறை" என்றாராம்.

எல்லாச் செல்வ சூழ்நிலைகளும் நன்றாகயிருந்தும், இருக்க வேண்டியதும், அவசியமானதுமான சந்தோஷம், சமாதானம் இல்லாமலிருப்பதும் எங்கும் காணப்படுகின்ற பரிதாப நிலைகளாக உள்ளன. இருக்கவேண்டிய சந்தோஷமும், சமாதானமும், பற்றாக்குறையாக இருக்கையில் எவ்வளவு செல்வச் செழிப்பு இருந்தும் என்ன பயன்?

இது போலவே பலருடைய ஆவிக்குரிய நிலமைகள் ரொம்ப வசதி, ஆனால் பரம ஏழை (so rich, but very Poor) என்ற விதமாகவே உள்ளன. அவர்கள் வரம், வல்லமை, அபிஷேகம், அன்னிய பாஷை, ஆராதனை, ஜெபம், ஊழியம் என மிகவும் ஆவிக்குரிய செழிப்புடையவர்களாகவே காணப்படுகின்றார்கள். அவர்களைச் சுற்றிலும் ஆன்மீக செழிப்பின் சூழ்நிலை நிலவுகிறது. ஆனால் அன்பு, தாழ்மை, பொறுமை, சாந்தம், தயவு போன்ற நற்குணங்களுக்கோ பெருத்த பற்றாக்குறை. சூழ்நிலையின் தோற்றம் செழிப்பானதுதான். ஆனால் இருக்க வேண்டிய ஆவிக்குரிய கனிகளோ இல்லை.

ஒருவர் எவ்வளவு வரமுடையவர், வல்லமையுடையவர், ஆராதிக்கின்றவர், அபிஷேகம் நிறைந்தவர், அன்னிய பாஷை பேசுகின்றவர் என்பது மிக முக்கிய மல்ல. ஒருவர் எந்த அளவிற்கு ஆவிக்குரிய கனிகளை உடையவர் என்பதே மிக முக்கியமாகும். ஏனென்றால் எங்கே நற்குணங்களும், செயல்களும், நற்சிந்தனைகளுமாகிய ஆவிக்குரிய கனிகள் உண்டோ, அங்கேதான் கர்த்தர் இருக்கிறார் என்பது உண்மையாகிறது. கொரிந்து சபையார் வரங்களுக்கும், வல்லமைகளுக்கும் குறைவில்லாதவர்கள். ஆனால் ஆவிக்குரிய கனி கொடுக்கும் நிலையிலோ எந்த நிறைவும் இல்லாதிருந்தார்கள்.

அநேகர் தங்களின் ஆவிக்குரிய நிலமையையும், அனுபவத்தையும் தவறான ஒரு கண்ணோட்டத்திலேயே கணக்கிடுகின்றனர். தங்களின் ஜெபம், உபவாசம், ஆராதனை ஈடுபாடுகள், காணிக்கை பங்களிப்புகள், ஊழிய வாஞ்சைகள் ஆகியவற்றையே தங்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் கனிகளாக பார்ககின்றனர். ஆனால் இவை உண்மையில் ஆவிக்குரிய விளைவுகளும், கனிகளும் அல்ல. கனிகொடுப்பதற்குத் தேவையான பக்திச் செயல்பாடுகளே இவை. ஜெபம், உபவாசம், காணிக்கை, ஊழியம் என நாம் அதிகமான ஆவிக்குரியவர்கள் போலத் தோன்றினாலும், நம்மிடம் தெய்வீக விடுதலை, தேவ சமாதானம், மனமகிழ்ச்சி, பரிசுத்த வாஞ்சை, தேவ ஐக்கியம், தெய்வீக நற்குணாதிசயங்கள் போன்றவை இல்லாமலிருந்தால், அங்கே நாம் இன்னும் ஆவிக்குரிய வறியவர்களே.

எண்ணெய் இருந்து என்ன பயன்? விளக்கு இல்லாவிட்டால்,
அறிவு இருந்து என்ன பயன்? அதற்கேற்ற செயல் இல்லாவிட்டால்.

ஜீவ நீரோடை

உண்மை அன்பு

ஏசாயா– 25:1–12

தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை... ரோமர் – 5 : 8

ரோமர்– 5:1 –10

ஒரே ஒரு நாள் வாழ்ந்தாலும் உன்னோடு வாழ்ந்துதான் முடிப்பேன். ஓரா யிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலும் உன்னோடு மட்டுமே வாழ்வேன். என்னு டைய உலகத்தில் உன்னைத்தவிர வேறு பெண்கள் ஒருவருமில்லை. அழகாகாக எழுதப்பட்ட காதல் கடிதம் ஒன்றின் சிலவரிகள் பலருக்கு முன்பாக படித்துக்காட்டப் பட்டது. எவ்வளவு ஆழமான ஓர் அன்பு என்று எவரும் உணரத்தக்கதாய் அந்தக் கடிதம் இருந்தது. ஆனால் அந்த கடிதத்தை எழுதிய கதாநாயகன் தான் “இனி ஒரு நாள் கூட இவளோடு வாழ விரும்பவில்லை” எனக்கூறி விவாகரத்து கேட்டு நீதி மன்றம் வந்திருந்தான். அங்குதான் அவன் எழுதிய கடிதம் படித்துக் காட்டப்பட்டது.

எதிர்பாலினத்தைச் சேர்ந்த இன்னொருவர் மேல் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டுவிட்டால் கற்பனை சிறகு கட்டி மிக மிக உயரத்தில் பறக்கும் நிலை வந்து விடுகிறது. தன் மனம் பிரியப்பட்ட ஒன்றின் மேல் ஏற்பட்ட அதிகமான ஆசையை அன்பு என்று பேரிடும் நிலை உள்ளது. ஏதோ ஒன்று தனக்குள் மிகுதியான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டதால் அதன் மேல் கொள்ளும் அதிகமான விருப்பம் உண்மை யான அன்பு அல்ல.

உண்மையான அன்பு என்பது தனக்கு எது தேவை என்ற அடிப்படையில் ஏற்படுவது அல்ல. இன்னொருவருக்கு என்ன வேண்டும் என்பதை அறிந்து அதற்காக ஒரு பெரிய தியாகத்தைச் செய்வதுதான் அன்பு. தான் விரும்பிய அழகை, இனிமையை, இனிமையான ஒரு அணுகு முறையை, மனதை ஈர்க்கும் ஒரு சுபாவத்தை இன்னொருவரிடம் காண நேரிட்டால் அதை விரும்புவது உண்மையான அன்பு அல்ல. தான் விரும்ப இயலாத ஒன்றையும், தன்னால் சகிக்கக் கடினமான ஒன்றையும் காணநேர்ந்தும் அதனை ஏற்றுக்கொள்ளும் மனநிலை இருந்தால் அதுதான் அன்பு.

அழகைப் பார்த்ததும் விரும்புகின்றான். தன்னுடைய எதிர்பார்ப்பிற்கு எதிரான ஒன்றைப் பார்த்ததும் வெறுக்கின்றான். இது உண்மை அன்பு அல்ல, நாம் பாவிகளாயிருப்பதை தேவன் விரும்ப முடியாது. ஆயினும் கிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்தி நம்மை ஏற்றுக்கொண்டார். தாம் விரும்புகின்ற நல்ல அம்சங்கள் இல்லாத போதும் நம்மை விரும்பி ஏற்றுக்கொண்ட அதுதான் உண்மை அன்பு. இந்த உண்மை அன்பை உலகம் அறியவில்லை. எனவே போலியான அன்பினால் எளிதாக வஞ்சிக்கப்படும் நிலை ஏற்படுகிறது. தேவனுடைய உண்மை அன்பை வாழ்வில் அனுபவித்தவர்களால் மட்டுமே உண்மை அன்பை அடையாளம் காணவும் உண்மை அன்பைக் கொடுக்கவும் இயலும்.

நன்மையைப் பெற்றவரிடமிருந்து அல்ல. நன்மைசெய்யச் சொன்ன தேவனிடமிருந்து நற்பலனை எதிர்பார்.

ஜீவ நீரோடை

நெருப்பில் தங்கம்

ஏசாயா – 43:1-11

அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்... ஏசாயா – 43:2

1 பேதுரு- 4 :12 -19

தங்கத்தை நெருப்பில் போட்டால் தங்கம் சிறிதும் அழிந்து போவதில்லை. ஆனால் தங்கத்தோடிருப்பதற்கு தகுதியற்ற சில மட்டமான உலோகங்கள் அந்த நெருப்பினால் அழிந்து போகும். எனவேதான் வேண்டுமென்றே தங்கம் பல அக்கினிப் பரிட்சைகளைக் கடந்துவர அனுமதிக்கப்படுகிறது.

கர்த்தரைத் தேடி வருகின்ற நாம் கர்த்தர் நமக்கு ஆசீர்வாதமான ஒரு சூழ்நிலையை அருளுவார் என்ற நம்பிக்கையோடு வருகின்றோம். கர்த்தரை ஏற்றுக் கொண்ட நாம் கர்த்தர் நமக்குச் சௌகரியமான நல்ல ஒரு வாழ்க்கைப் பகுதியைத் தருவார் என்ற விசுவாசத்தோடு ஜெபிக்கின்றோம். ஆனால் பெரும்பாலும் நிகழ்வதோ நம்முடைய எதிர்பார்ப்புகளுக்கு எதிராக உள்ளது. சோதனைகளும், தோல்விகளும், ஏமாற்றங்களும், வந்து நம்மை எரிக்க ஆரம்பிக்கின்றன. பலவிதமான கஷ்டங்கள் நமக்கு அதிகமான வெம்மையைக் கொடுக்கின்றன.

ஏன் இவ்விதம் நிகழ்கின்றன? இந்தச் சோதனை நெருப்புகளை அனுமதித்தது நம்மை எரித்து விட அல்ல. தங்கமாகிய நம்முடைய பரிசுத்த வாழ்க்கையுடன் தகுதியில்லாமல் ஒட்டிக் கொண்டிருக்கிற ஆகாத பாவக் கறைகளையும், தகாத சுபாவ நிலைகளையும், கடின மனநிலைகளையும், மாசு ஏற்படுத்தும் தன்மைகளையும் அழித்து அகற்றுவதற்கே. ஏனென்றால் சில சோதனை நெருப்புகளின் வாயிலாகக் கடந்து வராமல் எவ்வளவுதான் நம்மைச் சுத்திகரித்துக் கொள்ள விரும்பினாலும் அது நடக்காத விஷயமே.

சில கஷ்டங்களும், பிரச்சினைகளின் மோதல்களும், மன வியாகுலங்களும் தான் நம்மைப் பிடித்திருக்கிற ஆவிக்கு உகந்ததல்லாத பாவ சாயலான காரியங்களையும், ஜென்ம சுபாவ இயல்புகளையும் அகன்று போகச் செய்து, நம்மை ஜொலிக்கின்ற பொன்னாக மாறும்படி செய்கிறது. ஆகாத அழுக்கு உலோகங்களை அகற்றப் பயன்படும் நெருப்பு உண்மையான தங்கத்தையும் சுடவே செய்யும். ஆயினும் அதனால் எந்த சேதமும் இல்லை. எனவேதான் யோபு தன்னுடைய மிகுந்த உபத்திரவங் களின் நடுவில், “அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்” என்றான். (யோபு – 23:10) எனவேதான் வேதாகமக்கால தேவ மனிதன் ஒருவன் “நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது, அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்கிறேன் என்றான்” (சங் – 119:71)

மோசே, யோசேப்பு, தாவீது போன்ற தேவ மனிதர்கள் யாவரும் பலவித நெருப்புகள் வழியாகக் கடந்து வந்ததின் விளைவாகத்தான் தேவனுக்குப் பிரியமற்ற தவறான இருதயத்தின் எல்லாக் கேடுபாடான குணநிலைகளும் நீங்கப் பெற்றுப் புதிய பிரகாசமுடையவர்களாக மாறினார்கள்.

தோல்விக்குப் பின்வரும் வெற்றி மனிதனிடம் நிலைக்கிறது.
வெற்றிக்குப் பின்வரும் தோல்வி மனிதனை நிலைகுலையை வைக்கிறது.

அதிக எதிர்பார்ப்பு

ஏசாயா - 5:1-16

அது நல்ல திராட்சைப் பழங்களை தருமென்று நான் காத்திருக்க..... ஏசாயா - 5:4

மத்தேயு - 21:33-46

ஒருமுறை ஆனந்தபவன் என்ற கடையிலிருந்து வாங்கிவந்த சமோசா ஒன்றை மிகுந்த அதிருப்தியுடனும் சற்று கோபத்தோடும் சாப்பிட்டேன். இன்னொரு முறை ஒரு சாதாரண சமோசா கடையிலிருந்து வாங்கி வந்த சமோசா அவ்வளவு சுவையில்லாத போதும் அதனைத் திருப்தியோடு சாப்பிட்டேன். ஆனந்த பவன் சமோசா அதிக விலை கொடுத்து அதிக எதிர்பார்ப்போடு வாங்கப்பட்டது. அந்த அளவிற்கு அது சுவையின்றி இருந்ததுதான் அதிருப்திக்குக் காரணம். இன்னொரு கடை சமோசா மிகவும் மலிவு. அந்த விலைக்கு அவ்வளவு சுவையாக இருப்பதே பெரிய காரியம். அதுவே திருப்திக்கு காரணம்.

பழைய ஏற்பாட்டுக் கால இஸ்ரவேலர்கள் பிறஜாதி மக்களைவிட மிகமிக மோசமானவர்களாக இருந்தார்கள் என்று கூற முடியாது. பிறமத மக்களைவிட அவர்கள்தான் அதிகபாவம் செய்தார்கள் என்று கூற இயலாது. இஸ்ரவேலர்கள் உண்மையிலேயே பக்தி ஒழுங்குகள், இறை நம்பிக்கை, போன்ற விஷயங்களில் மற்றவர்களைவிட நன்றாகவேயிருந்திருப்பார்கள். ஆயினும் தேவனுடைய மிகுதி யான அதிருப்திக்குட்பட்டவர்கள் அவர்களே.

காரணம் என்ன? அவர்களுக்காக தேவன் ஏராளமாகச் செய்திருந்தார். அவர்களுக்காக தேவன் ஆசீர்வாதங்கள், நல்ல உபதேசங்கள், நம்பிக்கையான வாக்குறுதிகள், வழிகாட்டுவதற்குப் போதகர்கள், தீர்க்கதரிசிகள் என ஏராளம் நன்மைகளைச் செய்திருந்தார்.

எனவே மற்றவர்களைவிட அவர்கள் மிக மிக நன்றாக வாழ்ந்து தேவ நோக்கங்களை நிறைவேற்றியிருக்க வேண்டும். அவரால் அதிகமாக நன்மை பெற்ற மக்கள் அவருடைய அதிக எதிர்பார்ப்பை விட மிகவும் குறைந்தது போனார் கள். எனவே அவர்கள்மேல்தான் தேவ கோபமும், சாபமும், தண்டனைகளும் அதிகமாக வந்தன.

கிறிஸ்தவர்கள் பலர் மற்றவர்களை விடப் பல விஷயங்களில் நன்றாகத்தான் இருக்கின்றார்கள். ஆயினும் அவர்கள்மேல் தேவன் பிரியமாயில்லை. ஏனென் றால் கர்த்தர் அவர்களுக்காகச் செய்திருப்பது ஏராளம். தம்முடைய ஒரே பேறான குமாரனையே தியாகமாகக் கொடுத்த அவருக்கு ஏதோ சில கனிகள் அல்ல. மிகுந்த கனிகளைக் கொடுக்க வேண்டிய அவசியம் உள்ளது. இல்லையேல் தேவ அதிருப்தியே மிஞ்சும்.

உன் வாழ்க்கை புகழத்தக்கதாக இராவிட்டால் தேவனை நீ புகழ்வது அவரைத் துக்கப்படுத்தவே செய்யும்.

ஜீவ நீரோடை

சௌகரிய நிலை

1 இராஜாக்கள் - 11:1-12

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்க.... லூக் - 13:24

லூக்கா - 13:19 -31

கர்த்தர் நமக்குச் சௌகரியமான சூழ்நிலைகளை அருளினால், நாம் சற்று நன்றாகச் சாப்பிட்டு, நன்றாக உடுத்தி, சௌகரியமாக ஒரு வீட்டில் தங்கி, கர்த்தர் தந்த நன்மைகளை அனுபவிப்பதைத் தவறு எனக்கூற முடியாது. அதே நேரத்தில் உணவு, உடை, உறைவிடம் போன்ற விஷயங்களில் நாம் செலுத்தும் அளவுக்கதிகமான கரிசனையும் அக்கறையும், நாம் தேவனுக்காக வாழ்கிறவர்கள்தானா என்ற கேள்வியைப் பிறர் மனதில் எழுப்பும் விதமாக இருக்கக்கூடாது. சிலர் வீட்டுச் சமையலுக்கு விடைகொடுத்துவிட்டு விதவிதமான ருசிகளை உணரும்விதமாக, நட்சத்திர ரக உணவு விடுதிகளையே சுற்றி, சுற்றி வருகிறார்கள். சிலர் தங்களுக்கு வீடு என்பது எவ்வளவு வசதியாயிருக்க வேண்டும் என்பதை விட, ஒரு அரண்மனை போன்று அந்தஸ்தாக இருக்க வேண்டும் என்பதற்கே கவனம் செலுத்துகின்றார்கள். சிலர் உடை விஷயத்தில் ஆடம்பரத்தின் எல்லையைக் கடந்து செல்கின்றார்கள்.

சிலர் கர்த்தர் தங்களுக்கு வசதி வாய்ப்புகளைத் தந்திருக்கும் போது, அவைகளை அனுபவிப்பதில் என்ன தவறு என நினைக்கின்றனர். ஒருவேளை கர்த்தர் சாலொமோனைப் போல நம்மை ஆசீர்வதிக்கக்கூடும். ஆனால் சாலொமோனுடைய வாழ்க்கை தேவனையும் மகிமைப்படுத்தவில்லை, தன்னையும் திருப்திப்படுத்தவில்லை என்பதை நாம் உணர வேண்டும். கர்த்தர் அருளிய செல்வங்களைப் பார்த்து சாலொமோனைப் போல வாழ ஆசைப்படும் நாம், கர்த்தர் விரும்புகிற தாழ்மை, எளிமை, அடக்கம் பெருமையற்ற மனநிலை, அர்ப்பணம், போன்றவற்றிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோம் என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து விசாலமான பாதை இடுக்கமான பாதை என இரண்டு பாதைகளைக் குறித்துப் பேசினார். இவை ஒன்று உலகப் பிரகார வாழ்க்கை, இன்னொன்று ஆவிக்குரிய வாழ்க்கை என்று நினைப்பது தவறல்ல. ஆயினும் அந்த இரண்டு பாதைகள் இரண்டு விதமான ஆவிக்குரிய வாழ்க்கைகளை குறிக்கிறது என்பது உண்மை. ஒன்று உலகப் பிரகாரமாக வாழ்ந்து கொண்டே ஆவிக்குரியவர்களாக வாழ விரும்பும் பாதை. இன்னொன்று ஆவிக்கேற்ற சுய வெறுப்புகளை ஏற்றுக்கொண்டு வாழ விரும்பும் பாதை. இதில் ஒன்றை நாமாகத் தேர்ந்து கொள்ள வேண்டும். விசாலமான பாதை போன்ற சௌகரிய சூழ்நிலையில் நாம் வைக்கப்பட்டிருந்தாலும், நாமாக ஒரு இடுக்கத்தின் பாதையைத் தெரிந்துகொண்டு வாழ்வதையே தேவன் விரும்புகின்றார். சில நேரங்களில் நமக்கு அமைகிற ஒரு பொருளாதார சௌகரிய சூழ்நிலை நமக்கு ஆசீர்வாதங்களாக அல்ல. நம்மை அழிவுக்கு வழி நடத்தும் கண்ணிகளைக் கொண்ட ஒரு சாபமாக அமைவதுண்டு. நம்மை நாம் சன்னியாசிகளாக மாற்றிவிட வேண்டாம். ஆனால் உண்ணவும் உடுக்கவும், உலகத்தை அனுபவிக்கவுமே வாழ்கின்றோம் என்ற நிலைக்குப் போகாதிருக்க எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

சுகவாழ்வைத் தேடும் மனிதன். அது வந்த பின்னர் அந்த சுக வாழ்வாலேயே சுகவீனமாகிப் போகிறான்.

ஜீவ நீரோடை

தூக்கமும் ஆன்மீகமும்

யோனா – 1:1-17

தூங்குகிற நீ விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு... எபேசியர் – 5 :14

எபேசியர் -5 :1 -20

இரவு நன்றாகத் தூங்கினால், பகலில் நன்றாக வேலை செய்ய முடியும். பகலில் நன்றாக உழைத்தால் இரவில் நன்றாகத் தூங்கஇயலும். தூக்கத்தை தியாகம் செய்து உழைப்பதும் தவறு. வேலை எதுவும் செய்யாமல் தூங்கியே நேரங்களைக் கழிப்பதும் தவறு. சிலர் எங்கே சற்று நேரம் அமர நேரிட்டாலும் உடனேயே குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பித்து விடுவார்கள். சிலருக்கு ஞாயிறு காலை ஆராதனை பிரசங்க வேளையைப் போல மிக நன்றாகத் தூங்கும் வேளை வேறு இல்லை.

இரவில் நெடுநேரம் விழித்திருந்து வேலை செய்வதைச் சிலர் சாதனை என நினைக்கின்றனர். ஆனால் வயதுகள் குறைவாயிருக்கும் வரை இவை சாதனைகள்தான். ஆனால் இந்த சாதனையாளர்களுக்கு 40-ஐ தாண்டும் போது பெரிய சோதனைகள் வரும். ஏனென்றால் தேவன் உருவாக்கிய உடல்நலன் தொடர்பான இயற்கைச் சட்ட விதிகளை இவர்கள் மீறி அலட்சியம் செய்கின்றனர்.

தூக்கம் தொடர்பான விஷயங்களுக்கும் ஆன்மீகத்திற்கும் என்ன தொடர்பு? சிலர் ஜெபிக்க ஆரம்பித்ததும் தூங்கிவிடுவார்கள். சிலர் வேதம் வாசிக்க ஆரம்பித் ததும் தூங்கி விடுகின்றார்கள். சிலர் பிரசங்கம் ஆரம்பித்ததும் யோனாக்கள் ஆகி விடுகின்றனர். தேவசமுகத்தில் விழித்திருந்து ஆவிக்குரிய பலன் பெற வேண்டு மானால் தூக்க விஷயத்தில் சரியாயிருக்க வேண்டும். தூக்கக் குறைவோடிருப் பவர்கள் ஜெபம், வேதவாசிப்பு, பிரசங்கம் போன்ற நேரங்களில் மிகுந்த சோதனை களைச் சந்திக்க நேரிடும்.

பவுலின் நடுஇரவு பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தபோது ஐத்திகு என்பவன் ஜன்னலிலிருந்து கீழே விழும் அளவிற்குத் நித்திரை மயக்கத்தி லிருந்தான். சிலருடைய ஆத்துமா கனநித்திரை வியாதி பிடித்த ஆத்துமா. அந்த ஆத்துமாவில் தேவ ஆவி இல்லாததால் ஆவிக்குரிய விஷயங்களில் அந்த ஆத்துமா எந்த விழிப்புமின்றி நித்திரை மயக்கம் கொண்டுவிடும்.

தூங்கிவிழுந்த விசுவாசியைப் போதகர் கண்டித்தார். அதற்கு அந்த விசுவாசி பிரசங்கிக்கின்றவர் பிரசிங்கித்துக் கொண்டே தூங்க முடியாது என்றாராம். ஆனால் உப்புச் சப்பில்லாத பிரசங்கத்தைக் கேட்கின்ற என்னைப் போன்ற வர்கள் தூக்கத்தைத் தவிர்க்க முடியாது என்றாராம். செய்தியில் சாரமில்லாமை தூக்கத்தை வரவழைக்கும். இருதயத்தில் ஆவிக்குரிய உணர்வில்லாமை தூக்கத்தை எளிதாக வரவழைக்கும்

உயர்ந்த எண்ணங்களில் வளர்ந்து கொண்டேயிருந்தால்
தாழ்ந்த செயல்களால் நீ தலைகுனிவதில்லை.

ஜீவ நீரோடை

சுதந்திரம்

சங்கீதம் – 119:1–16

உமது கட்டளைகளை நாங்கள் கருத்தாய்க் கைக்கொள்ளும்படி... சங் – 119 :4

11 தீமோத்தேயு - 3 :10 -17

வெளிநாடுகளில் காரை ஓட்டுகின்றவர்களும், காரில் பயணம் செய்கின்றவர்களும், பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கண்டிப்பாக பெல்ட் அணிந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்தியாவில் பலர் இதுபோன்ற கட்டுப்பாட்டை விரும்புவதில்லை. பெல்ட் அணியாமல் சுதந்திரமாகப் பயணம் செய்வதையே அவர்கள் விரும்புகிறார்கள். எனவே ஏதாவது விபத்து நேரிடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், பயணம் செய்கின்றவர்கள் படுகாயமடைவதைத் தவிர்க்க முடியாமல் போகிறது.

சுதந்திரம் மனிதனுக்குத் தேவைதான். ஆனால் எங்கும் சுதந்திரம், எதிலும் சுதந்திரம் என்று கட்டுப்பாடுகள் எதையுமே ஏற்காமல் வாழ்ந்தால், அந்த சுதந்திரம் நமக்கு ஆபத்துகளையே வரவழைக்கும். அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் தனிமனித சுதந்திரம் என்பது அதிகமாக வற்புறுத்தப்படுகிறது. எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லாமல், தாங்கள் வாழ விரும்புகிறது போல வாழ்ந்து, அனுபவிக்க விரும்புகிறது போல் அனுபவிக்கத் தங்களுக்கு முழு சுதந்திரம் வேண்டும் என்று அவர்கள் கேட்கின்றனர். இந்நாட்களில் இவ்விதமான ஒரு சுதந்திர தாகம் உலகமெங்கும் பரவி எந்த நெறிமுறைகளையும் விரும்பாத, ஒரு ஒழுங்கீனம் எங்கும் பெருகியுள்ளது. இதன் விளைவாக மனிதன் மன அமைதி இல்லாதவனாகவும், மனநிறைவைப் பெறாதவனாகவும் அலைகின்ற நிலை உள்ளது.

கர்த்தருடைய வார்த்தைகளும், வசனங்களும், நெறிமுறை சார்ந்த கட்டளைகளும், நம்முடைய மன சுதந்திரத்திற்கு எதிரானவை போலவே தோன்றும். எனவே அவைகளால் நாம் கட்டுப்பட விரும்பாமல் போகலாம். ஆனால் அவ்விதம் கட்டுப்படவில்லையேல் எதிர்மாறான சூழ்நிலைகள் வரும்போது, வாழ்க்கை பலவிதங்களில் காயமடைந்து, மிகுந்த வேதனைகளை உருவாக்கும்.

சாலொமோன் ராஜா தனக்குக் கிடைத்த மிகுதியான ஆசீர்வாதச் சூழ்நிலைகளின் நடுவில் தனக்கு எந்தக் கட்டுப்பாடுகளையும் விதிக்காமல் சுகம் அனுபவிப்பதிலேயே குறியாகயிருந்தான். தன் இருதயம் இச்சித்த எதையும் இல்லை என்று சொல்லாத தன் நிலையை எண்ணி பெருமைப்பட்டுக் கொண்டான். ஆயிரம் பேரைத் திருமணம் செய்யும் அளவிற்கு மனக்கட்டுப்பாடற்ற அவல நிலைக்கு அவன் சென்றான். அதன் விளைவாக அவனுடைய வாழ்க்கை தேவனுடைய கோபத்திற்கு உட்பட்டது. ஆம், நம்முடைய வாழ்க்கை பயணங்களில் கர்த்தருடைய வசனங்களாலும், கட்டளைகளாலும் நாம் கட்டப்பட வேண்டியது மிக அவசியம். இல்லையேல் பலவித தீமைகளும், குழப்பங்களும், மன அமைதியை அழிக்கும் காரியங்களும் நம் விஷயத்தில் கட்டவிழ்ந்த நிலையில் வந்து செயல்படும்.

உன்னை நீ உரிய முறையில் அறியும் வரை உலகத்தைக் குறித்த உன் அறிவு மிகவும் குறைவானதே.

கிறிஸ்துவின் ஐக்கியம்

சங்கீதம்–73:13–28

பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை... சங்கீதம் – 73:25

1 கொரிந்தியர்–1:1–15

இராஜா ஒருவன் அரண்மனை சுகபோக சூழ்நிலைகளிலேயே எப்பொழுதும் வாழ்வது பிடிக்காமல் சாதாரணமான மக்களோடு சாதாரணமாகப் பழகி வாழ விரும்பினான். எனவே அடிக்கடி சாதாரணமான ஒரு மனிதனைப் போல மாறுவேடம் பூண்டு சாதாரணமான மனிதர்களைத் தேடிச் செல்வான். அவ்விதம் குதிரை வண்டி ஓட்டும் ஒருவனை அடிக்கடி சந்தித்தான். அந்தக் குதிரை வண்டிக்காரன் தன்னுடன் பேசிப் பழகிக் கொண்டிருக்கின்றவனை இராஜா என்று அறியவில்லை. ஒருநாள் அந்த இராஜா ராஜ உடைகளை அணிந்து கொண்டு தன்னை யார் என்று அறிவித்தான். நான் இராஜா, உனக்கு என்ன வேண்டும் கேள் என்றான். அதற்கு அவன் எனக்கு விசேஷமாக ஒன்றும் வேண்டாம். ஆனால் மீண்டும் நீர் சாதாரண மனிதனாக வந்து என்னுடன் பேசினால் அதனை – மிகப்பெரிய பரிசாக எண்ணுவேன் என்றான்.

அநேகர் தேவனை வல்லவர், பெரியவர் என்ற நிலையில் பார்த்துத் தங்களுக்கு அவர் சில நன்மைகளைச் செய்ய வேண்டும் என்றே நினைக்கின்றனர். தேவனின் சர்வவல்லமையினால் தங்களுக்குப் பெரிய நன்மைகள் கிடைக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். எனவே தேவன் என்றால் எதையாவது ஜெபித்துப் பெறுவதையே சிந்திக்கின்றனர்.

ஆனால் தேவன் மனித இனத்திற்கு அளிக்கும் அனைத்து நன்மைகளைவிட தம்முடைய ஐக்கியத்தை நமக்குத் தருவதுதான் மிகப்பெரிய ஆசீர்வாதம். சர்வபூமிக்கும் தேவனாயிருப்பவர் சாதாரண மனிதராக இந்த பூமியில் வந்து, சாதாரணமான நம்முடன் பேசிப்பழகி வாழ விரும்புகின்றார் என்பதே மிகப்பெரிய கிறிஸ்தவ செய்தி. கிறிஸ்து நம்மோடிருக்கின்ற ஆசீர்வாதத்தை விட மிகப்பெரிய நன்மை பயக்கும் ஒரு ஆசீர்வாதம் இருக்க முடியாது.

கிறிஸ்துவின் ஐக்கியத்தை நமக்குள் தேடி அனுபவித்துப் பழகிவிட்டால் அதன்பிறகு எத்தனை நன்மைகள் தேவைப்பட்டாலும் அவருடைய அன்பின் ஐக்கியமே நம்முடைய மிகப்பெரிய தேடலாகிவிடும். ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் நாம் காணும் அன்பு, கிருபை, அமைதி, சந்தோஷம், நம்பிக்கை, தைரியம் பரிசுத்தம் ஆகிய உயர்ந்த நன்மைகள் வேறெதற்கும் இணையாகாது. கிறிஸ்துவின் ஐக்கியத்தில் வாழ்வது என்றால் என்ன என்பது மட்டும் நமக்குத் தெரிந்துவிட்டால், எதை இழந்தாகிலும் கிறிஸ்துவின் ஐக்கியத்தை ஆதாயப்படுத்துவதையே நம்முடைய மனம் வாஞ்சிக்கும், ஏனென்றால் கிறிஸ்துவின் ஐக்கியம் தருவதை வேறெதுவும் தராது.

இறைவனை நீ உலகுக்குக் காண்பிக்க முடியாது. ஆனால் உனக்குள் இறைவன் செய்வதை உலகுக்குக் காட்ட முடியும்

பரீட்சிக்கப்படும் வேளை

ஏசாயா-50:1-11 | வையப்பட்டு ஆசீர்வதிக்கிறோம், துன்பப்பட்டு சகிக்கிறோம்... 1 கொரி – 4 : 12 | 1 கொரி-4:1-21

ஆவிக்குரிய வாழ்க்கையில் சபை, ஆராதனை, ஜெபக்கூட்டம், ஊழியம் என்று ஒருவர் மிகவும் உற்சாகமாகச் செயல்பட்டு வந்தார். ஆனால் அவருடைய உறவினர்கள் சிலர் அவருடைய மனம் காயமடையும்படியாக சற்று நியாய மில்லாமல் நடந்து கொண்டபோது, ஆத்திர உணர்வை அவரால் அடக்க இயலவே யில்லை. இனி இவர்களின் ஒட்டோ, உறவோ என்றுமே தனக்கு அவசியமில்லை என்ற முடிவுக்கும் வந்தார். இதற்கிடையில் நடந்தவைகளை அறிந்து அவரை அமைதிப் படுத்த வந்த சபை பாஸ்டரிடம் "பாஸ்டர் கர்த்தருக்காக வைராக்கியமாய்ச் செயல் பட்ட எனக்கு ஏன்தான் தேவன் இத்தகைய மனக்கஷ்டங்களை அனுமதித் தார்?" எனப் புலம்பினார். அந்த பாஸ்டர் அமைதியாக "உங்களின் ஆரவார மான ஈடுபாடுகளுக்குப் பின்னால் ஒரு வலுவான ஆவிக்குரிய வாழ்க்கை இல்லை என்பதை உங்களுக்கு உணர்த்தவே இவைகளை தேவன் அனுமதித்தார்" என்று பதிலளித்தார்.

நாம் பலவிதமான இறைபக்தியான காரியங்களில் தீவிரமாக ஈடுபட்டு, நம்மைச் சிறந்த ஆவிக்குரியவர்களாக எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனாலும் நாம் உண்மையிலேயே ஆவிக்குரியவர்கள்தானா? நமக்கும் தேவனுக்கும் இடையே உண்மையான ஒரு ஐக்கியம் உண்டா? என்பதைப் பரீட்சித்துக் காண்பிக் கும் வேளைகளை தேவன் அனுமதிப்பார். அப்போதுதான் நாம் மாம்சீக பலத்தில் ஆன்மீகத்தை வெளிப்படுத்துகிறோமா, உண்மையான தேவ ஐக்கியத்தின் பலத்தில் செயல்படுகின்றோமா என்ற உண்மை வெளியரங்கமாகும்.

பிறரால் பாதிக்கப்படும் நிலைகள் வரும்போதும், பிறருடைய அநீதிகளால் உள்மனம் காயப்படும் வேளைகள் வரும் போதும், எந்த அளவிற்கு நாம் பொறுமை, சாந்தம், தாழ்மை, அமைதி ஆகியவற்றைக் கடைபிடிக்கின்றோமோ, இவைதான் நம்முடைய உண்மையான ஆவிக்குரிய ஆற்றல் எவ்வளவு என்பதை வெளிப்படுத்துகிறது. ஏனென்றால் இறை வாழ்க்கை அல்லது தேவ பக்தியான வாழ்க்கை என்பது நேர்மறையான செயல்களால் அல்ல. எதிர்மறையான சூழ் நிலைகளில், நாம் எப்படி அவைகளை அணுகுகிறோம் என்பதை வைத்தே அதனை அறிந்து கொள்ள முடியும்.

இன்னும் அநேகர் பக்தியான தங்களின் செயல்களிலேயே தங்களின் ஆவிக்குரிய நிலையைப் பார்க்கின்றார்களேயன்றி, தங்களின் சுபாவங்களில் அவற்றைப் பார்க்கவில்லை. உள்நிலை மாற்றம் ஏற்படாமலே தேவனுக்குப் பிரியமாயிருக்கும் தோற்றமுடைய பக்தியான செயல்களை நம்மால் செய்ய முடியும். ஆனால் உள்ளான பாவ மனிதன் மரித்து, ஆவிக்குரிய மனிதன் தோன்றினாலன்றி ஆவிக்குரிய பண்பு நிலைகளில் நிறைவு காணமுடியாது.

தென்றல் இதமாக வீசினால் அனுபவிக்க உஷாராயிரு.
புயலாக மாறி வந்தால் தாங்கிடவும் தயாராயிரு.

ஜீவ நீரோடை

கீழ்படிதல் எப்படி?

எசேக்கியல்-11:14-25

அவர்கள் என் கட்டளைகளின்படி நடந்து... எசேக்கியல்- 11:19

யோவான் -13 :1 -19

தேவன் நம்மிடம் முக்கியமாக எதிர்பார்ப்பது கீழ்ப்படிதல். ஆனால் தேவனுக்குக் கீழ்ப்படியும் தன்மை நம்மிடம் எப்படி வரும்? என்பது முக்கியமானதோர் கேள்வி. தேவன் நமக்கு என்ன செய்தால் அவருக்கு நாம் கீழ்ப்படிவோம்? தேவன் நமக்கு நன்மைகள் பல செய்தால் அதன் மூலமாக இருதயம் உற்சாகம் அடைந்து நாம் அவருக்கு நன்றாகக் கீழ்ப்படிய முடியும் என்று நாம் நினைக்கலாம்.

தேவன் நமக்கு நன்மைகள் பல செய்யும் போது நாம் நன்றி மிக்கவர்களாக மாறமுடியும். நன்றியுணர்வின் விளைவாக தேவனை மிகமிக உயர்வாக எண்ணி அவரை ஆராதிக்க முடியும். ஆயினும் தேவனுக்குப் பிரியமான சுபாவங்களோடும், நல்ல மனநிலையோடும் தேவனுக்குக் கீழ்ப்படிவது எளிதானதல்ல. ஏனென்றால் தேவனுக்குப் பிரியமாக நாம் வாழ விரும்பலாம். ஆனால் அவ்விதம் கீழ்ப்படியும் ஒரு இருதயம் நமக்கில்லை. திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமான நம்முடைய இருதயம் தேவனைப் பிரியப்படுத்தி, கீழ்ப்படியும் இயல்பு கொண்டதல்ல. சவுல் தேவன் தனக்குச் செய்த நல்ல நன்மைகளை நினைக்காதவன் அல்ல. ஆயினும் தேவனுக்கு இசைந்து போய் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய அவனால் முடியவில்லை.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் 40 வருடங்கள் எத்தனையோ அற்புதங்கள் வாயிலாகத் தொடர்ந்து நன்மை செய்தாரே. ஆயினும் அவர்களைக் கீழ்படியும் தன்மையுள்ளவர்களாக அவர் மாற்றமுடியவில்லையே. எத்தனையோ நன்மைகளைப் பெற்று அனுபவித்தபோதிலும் தேவனுடைய வார்த்தைகளுக்கு இசைந்து கீழ்ப்படியும் இருதயம் அவர்களுக்கு ஏற்படவில்லை.

ஆபிரகாம், யோசேப்பு, மோசே, காலேப், தாவீது போன்றோர் தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தார்கள்! அது எப்படி? அது நன்மைகள் பெற்றதால் அல்ல. அவர்கள் தேவ உறவோடும், அனுதினம் தேவ ஐக்கியத்தோடும் வாழ்ந்தார்கள். தேவ நட்பைத் தங்களுக்குள் அனுபவித்து வாழ்ந்ததால், அவர்களின் இருதயம் தேவ சித்தம் செய்யும் தன்மையுடையதாக மாறியது. தேவனுடைய கண்டிப்புகளும், எச்சரிப்புகளும் இருந்தாலும் நமக்கு தேவனோடு அன்பின் ஐக்கியம் இருந்தால் மட்டுமே கீழ்படியும் உற்சாகமான ஒரு இருதயம் நமக்குள் காணப்படும்.

இறைவனோடு சிங்காசனத்தில் அமர விரும்பினால்
இன்று அவருக்காகத் தரையில் அமரவும் தயாராயிரு.

ஜீவ நீரோடை

பரிசுத்தம் தேடுவோம்

யோசுவா – 3:1-17

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலான வைகளையே நாடுங்கள்... கொலோ – 3 :2

கொலோசெயர் – 3 :1-17

அழுக்கும் கிழிந்ததுமான சட்டையை அணிந்து கொண்டு தன்னிடம் பிச்சை கேட்டு வந்த ஒருவன் மேல் நண்பர் ஒருவர் பரிதாபப்பட்டு, அவனுக்கு நல்ல ஒரு சட்டையைக் கொடுக்க முன் வந்தார். ஆனால் அவனோ "ஐயா... சட்டை எதுவும் எனக்கு வேண்டாம். என்னிடம் நிறையச் சட்டைகள் உள்ளன. ஆனால் அவைகளை நான் அதிகமாக அணிவதில்லை. எனக்குக் கொஞ்சம் காசோ, சாப்பாடோ தாருங்கள் அது போதும்" என்று கேட்டான். ஆம். இவனுக்குச் சுத்தமாயிருப்பது என்பதில் எந்த நாட்டமுமில்லை. அவனுக்குத் தேவையெல்லாம் காசு அல்லது உணவுதான். தேவனை அறிந்திருக் கின்ற, அவரை ஆராதிக்கின்ற அநேகருடைய நிலைமையும் இதுதான். அவர்கள் தேவன் என்றால் தங்களுக்குச் சரீரப்பிரகாரம ான நன்மைகளைத் தரவேண்டும் என்று மட்டுமே எதிர்பார்க்கின்றார்கள்.

அவர்களுக்கு வேத சம்பந்தமான பல ஒழுங்கு முறைகளும், வாழ்க்கைச் சட்டத் திட்டங்களும் தெரியும். ஆனால் அந்தப் பிச்சைக்காரனைப் போல அவை களை உபயோகித்து தங்களை ஒழுங்குள்ளவர்களாகவும், நல்ல ஆவிக்குரிய தோற்றமுடையவர்களாகவும் மாற்ற விரும்புவதில்லை, அவர்கள் தங்களுக்குச் சாதகமான ஆசீர்வாத வாக்குத்தத்தங்களில் அதிக வாஞ்சையுடனிருப்பார்கள். ஆனால் தேவன் அருளிய வாழ்க்கை நெறிமுறைகளைக் குறித்துக் கவலைப்பட மாட்டார்கள். இவர்களுக்காக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தத் தைச் சிந்தி இரட்சிப்பு என்னும் பரிசுத்த ஆடையை ஆயத்தமாக வைத்திருக்கின்றார். ஆனால் அவர்கள் அதின்மேல் விசேஷப் பிரியம் எதுவும் காட்டாமல் உலகப்பிரகார நன்மைகளுக்காக மட்டுமே கெஞ்சி மன்றாடி, உபவாசித்து ஜெபிப்பார்கள்.

நாம் பொதுவாக நம்முடைய கஷ்டங்கள், பிரச்சினைகள், இல்லாமைகள், வியாதிகள் இவைகளைப் பார்த்து கர்த்தர் மிகுதியாகப் பரிதாபப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். ஆனால் கர்த்தரை நாம் வேத வெளிச்சத்தில் பார்த்து நன்கு புரிந்துகொள்ள வேண்டும். நம்மைப் பார்க்கும் போது, கர்த்தருடைய கண்கள் நம்முடைய கஷ்டங்களைவிட, நம்முடைய பரிசுத்தமடையாத வாழ்க்கை நிலைகளைப் பார்த்துதான் அதிகமாகப் பரிதவிக்கின்றன. ஏனென்றால் பரிசுத்தம டையாத ஒரு வாழ்க்கைநிலை தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு நம்மைத் தூர மாக் குகிறது. பரிசுத்தம் தேடாத பாவ சாயலான வாழ்க்கை நித்திய அழிவிற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. நம்முடைய எல்லாப் பிரச்சினைகளைவிட, பரிசுத்தமில்லாத ஒரு வாழ்க்கை தேவனுடைய பார்வையில் மிகப்பெரிய வருத்தத்திற்குரிய விஷய மாக இருந்ததால்தான் தம்முடைய ஒரு பேறான குமாரனை பூமிக்கு அனுப்பி நம்மைச் சுத்திகரிப்பதற்கான கிரியைகளைச் செய்தார்.

கிறிஸ்து வாழ்கிறார் என்பதை வாயினால் சொல். அவர் உன்னிடம் வாழ்கிறார் என்பதை வாழ்க்கையினால் சொல்.

ஜீவ நீரோடை

எது முக்கியம்?

ஏசாயா 1:11-20

உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு – ஏசாயா 1:11

லூக்கா 10:25-37

அவள் தன் கணவனுக்காக மிக மிகச் சுவையாக சமைத்து வைப்பாள். ஆனால் அவளுடைய கணவனோ அவளுடைய நல்ல சமையலுக்காக அவளை மெச்சுவதோ பாராட்டுவதோ இல்லை. ஏனென்றால் நன்றாக அவள் சமைத்தாலும் அதனை அன்புடன் கணவனுக்கு பரிமாறிக் கொடுக்கும் பழக்கம் அவருக்கு இல்லை. அவன் தன் மனைவி எதைக் கேட்டாலும் தாராள மனதுடன் கேட்டதைவிட அதிக மாகவே வாங்கிக் கொடுப்பான். ஆயினும் அவனுடைய தாராள மனதை அவள் ஒரு போதும் பெரிய விஷயமாக எண்ணியதில்லை. ஏனென்றால் அவன் செய்வதில் தாராளக்காரன். ஆனால் அன்பை வெளிப்படுத்தும் விதமாக நாலு வார்த்தைகளைப் பேசுவதிலேயோ மகா கஞ்சன்.

ஒருவன் யானையை இலவசமாகக் கொடுத்தானாம். ஆனால் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் அற்பப் பொருளாகிய அங்குசத்தைத் தர முடியாது என்றானாம். சில நேரங்களில் நாம் இன்னொருவருக்காக மலையளவாகப் பெரிய காரியங்கள் செய்யத் தயங்குவதில்லை. ஆனால் மற்றவர் மிக முக்கியமாக எண்ணுகின்ற ஒரு சிறிய காரியத்தைச் செய்வதற்கோ முடியாதபடி நம்முடைய இருதயத்தைக் கடின மாக வைத்துக் கொள்கின்றோம். ஆனால் நாம் பெரிதாக என்ன செய்கின்றோம் என்பதைவிட, மற்றவருடைய உணர்வுகளுக்கு எது மிகப் பெரியதாகத் தெரிகிறது என்பதே முக்கியம். சில நேரங்களில் சில சின்ன விஷயங்களைச் செய்வதற்குத்தான் பெரிய மனதும் வலிமையும் தேவைப்படுகிறது.

ஏழையான ஒருவருக்குப் பணக்கார உறவினர் ஒருவர் பணம், பொருள் எனப் பல நல்ல உதவிகளைச் செய்வார். ஆனால் அவரிடம் இரண்டு வார்த்தை அன்பாகப் பேச அவருடைய கௌரவ வெறிபிடித்த மனம் இடம்தராது. தேவனுக்காக நாம் பணம், பொருள், நேரம், உழைப்பு எனப் பலகாரியங்களை தாராளமாகச் செய்யலாம். நம்மால் தேவ ஊழியங்கள் மிகுதியாகப் பயனடையலாம். ஆயினும் தேவன் நம்மிடம் சில நல்ல பண்புகளைத்தான் முதலாவது எதிர்பார்க்கின்றார். மற்றவர்களிடம் அன்புடனும், தாழ்மையுடனும் நடந்து கொள்வதைத்தான் முக்கியமாக விரும்புகின்றார். அவறைச் செய்திட முடியாமல் நம்முடைய மனம் கல்லாக, இருக்கையில் நாம் வேறு பல காரியங்களைச் செய்திட எவ்வளவு நல்ல தியாகமான மனம் படைத்திருந்தும் பயனில்லை. ஆம். தேவனுக்காகச் செய்தாலும் சரி, மனிதனுக்காகச் செய்தாலும் சரி, முதலாவது எது முக்கியமாகச் செய்யப்பட வேண்டுமோ அதை முதலாவது செய்வோம்.

இறைவனின் நற்குணங்கள் உன்னிடம் வெளிப்படாத நிலையில் நீ பெற்றதாக எண்ணும் இறைச் சந்தோஷம் போலியானதே.

பரிசுத்த ஆவி

யோவேல் - 2:28-32

அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்... அப் - 2:38

அப்போஸ்தலர் - 2:36-47

விசுவாசி ஒருவர் நீண்டகாலமாக உபவாசித்து, ஜெபித்து, நீதியாய்ச், செயல்பட்டு பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள ஆவலாய்க் காத்திருந்தார். ஆனாலும் அவர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஒருநாள் அவர் தேவ ஊழியர் ஒருவரிடம் வந்து, "ஐயா... நான் எவ்வளவோ ஜெபிக்கின்றேன், எவ்வளவோ உபவாசிக்கின்றேன். எவ்வளவோ பயந்து, பயந்து பரிசுத்தமாய் வாழ்கின்றேன். ஆயினும் கர்த்தர் எனக்கு ஏன் பரிசுத்த ஆவியைத் தரவில்லை?" என்று கேட்டு அங்கலாய்த்தார்.

அநேகர் பரிசுத்த ஆவி பெறுவதை தவறாகவே புரிந்து கொண்டிருக்கின்றார்கள். பரிசுத்த ஆவி என்பது நம்முடைய ஜெபத்திற்கும், உபவாசத்திற்கும், பக்தியான வாழ்க்கைக்கும் கிடைக்கின்ற சம்பளம் அல்ல. நாம் நம்மை பாவி என உணர்ந்து, இயேசுவிடம் வரும் போது, நாம் பாவத்தை மேற்கொண்டு வாழ்வதற்காக நமக்குக் கொடுக்கப்படும் கொடைதான் பரிசுத்த ஆவி. பரிசுத்தமாக வாழ்ந்து, நாம் பரிசுத்த ஆவியைப் பெறுவதில்லை. பரிசுத்த ஆவியைப் பெறுவதினால்தான் பரிசுத்தமாக வாழ்கின்றோம். பரிசுத்த வாழ்வு என்பதை நாமே நம்முடைய சொந்த முயற்சியாலும், பிரயாசத்தாலும் வாழ்வதற்கு ஆண்டவர் சொல்லவில்லை. தேவ ஆவியைப் பெற்று, அந்த தேவஆவி அருளும் ஆவிக்குரிய ஆற்றலின் வாயிலாகத்தான் பரிசுத்த வாழ்க்கையை வாழ முடியும்.

எனவே பரிசுத்த ஆவி ஜெபத்தாலும், உபவாசத்தாலும், பரிசுத்த வாழ்க்கையாலும் பெற்றுக்கொள்ளுவதல்ல. விசுவாசத்தினால்தான் நாம் பரிசுத்த ஆவியைப் பெறுகின்றோம். பரிசுத்தமாக வாழ்ந்திட அழைக்கப்பட்ட நம் ஒவ்வொருவருக்கும் தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியை தந்தால்தான், நாம் அந்தக் குறிக்கோளைச் செயல்படுத்த முடியும். எனவே இயேசுவின் மூலம் இரட்சிப்பைப் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் நம்முடைய பலவித முயற்சிகள் இல்லாமலே பரிசுத்த ஆவியை தேவன் தந்தாக வேண்டும். அவர் அவ்விதம் தருகின்றார்.

நாம் நம்மை பாவிகள் என்றும், தேவன் நம்மை பரிசுத்த ஆவியினால் நிரப்பினாலன்றி அவர் விரும்புகிறபடி வாழ முடியாது என்றும் உணர்ந்து கொள்வதுதான் முதல்படி. இவ்விதம் தங்களின் நிர்ப்பந்தமான நிலையை உணர்ந்து வரும் போது, கர்த்தர் பரிசுத்த ஆவியானவரை நமக்கு அருளி, நம்மை பரிசுத்தத்தில் பலப்படுத்துகிறார் என்பதுதான் விசுவாசம். இந்த விசுவாச உணர்வோடு, பரிசுத்தமாய் வாழ வாஞ்சிக்கும் நமக்கு, கர்த்தர் பரிசுத்த ஆவியைத் தந்திருக்கின்றார் என்ற நம்பிக்கையோடு முன்னோக்கிச் செல்ல வேண்டும். அப்போது பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல்களையும், தொடர்புகளையும், தூண்டுதல்களையும், தொடுதல்களையும் நமக்குள் உணர முடியும்.

இறைவனுக்குக் கீழ்ப்படிய நீ கற்றுக்கொள், பாவத்தைக் கீழ்ப்படுத்தும் பலத்தை அதனால் பெற்றுக்கொள்.

ஜீவ நீரோடை

எது நற்குணம்?

நீதிமொழிகள் - 14:12-35

மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும்
எபேசியர் 4:2

எபேசியர் - 4:1-16

ஒரு பெரிய பணக்காரனுக்கு பெரிய மரியாதையைக் கொடுப்பது என்பது நம்முடைய நற்குணத்தின் பிரதிபலிப்பு அல்ல. ஒரு ஏழைக்கு மரியாதை கொடுத்தால் அதுதான் நம்முடைய மனம் எவ்வளவு நல்லது என்பதைப் பிரதிபலிக்கிறது. ஒரு பெரிய உயர் அதிகாரிக்கு முன்பாக நாம் பொறுமையாய் அடங்கிப் போவது என்பது நம்முடைய சாந்த குணத்தின் வெளிப்பாடு அல்ல. ஒரு சாதாரண மனிதன் விஷயத்தில் நாம் சுயகௌரவத்தை உயர்த்திப் பிடிக்காமல் விட்டுக் கொடுத்துப் போனால் அதுதான் நமக்கு நல்ல இருதயம் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தும்.

நாம் தேவனை மிக மிக உயர்வாக எண்ணி மரியாதை மிகுந்த வார்த்தைகளினால் அவரைப் புகழுகின்றோம். நாம் நல்ல வசதி நிலையோடு வாழ்ந்தாலும் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்திக் கொள்கின்றோம். ஆயினும் இவற்றைப் பார்த்து நம்மை தேவன் நல்ல மரியாதை உணர்வு உள்ளவர்கள் என்றும், நல்ல தாழ்மையாளர்கள் என்றும் எடுத்துக் கொள்வாரா? நிச்சயம் இல்லை. எவ்வளவு பெரிய நிலைமையிலிருந்தாலும் தேவனுக்கு முன்பாக எல்லோரும் தங்களை அற்பமாகவே உணர முடியும். அது ஒரு நல்ல இருதயத்தின் பிரதிபலிப்பினால் அல்ல.

மனிதர்கள் நடுவில்தான் நம்முடைய உண்மையான மனம் வெளிப்படும். அங்கே சாதாரணமானவர்களை நம்மால் மதிக்க முடிந்தால் அதுதான் நற்குணம். சாதாரணமானவர்களுக்கு முன்பாக நம்மை உயர்த்திக் காட்டாமல் தாழ்வாக எண்ணப்பட விட்டுக்கொடுத்தால் அதுதான் நற்பண்பு.

கடவுளுக்கு முன்பாக நின்று நம்முடைய பக்தியின் விளைவாக நம்மை அற்பமாகவும் தூசியாகவும் எண்ணுவதல்ல. மனிதர்களுக்கு முன்பாக நம்மை தாழ்த்தவும், மனிதர்களுக்கு மனதார மரியாதையும் கொடுக்க முடிகிறதா என்பதே முக்கியம். மனிதனை மதிப்பதற்குத் தேவையான வலிமையான இருதயத்தை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். மனிதர்களுக்கு முன்பாக நாம் தாழ்வாக எண்ணப்படுவதை பொறுத்துக் கொள்ளும் இதய ஆற்றலை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் உண்மையான பக்தி. தேவனுடைய நியாயங்களைவிட மனிதனை உயர்வாக எண்ணுவதும் தவறு. தேவனை மிக உயர்வாக மதித்து விட்டு மனிதர்களுக்கு முன்னால் மிக மிக உயர்வாக எண்ணிக் கொள்வதும் தவறு.

உரிய முறையில் வரவேண்டும் உயர்வுகள், இல்லையேல்
அந்த உயர்வுகள் தாழ்வுகளுக்குள் உன்னைத் தள்ளிவிடும்.

மூடி மறைத்தல்

ஏசாயா – 1:11-20

பழைய மனுஷனையும் அவன் செய்கை களையும் களைந்து போட்டு... கொலோசெயர் 3:9

கொலோசெயர் – 3:1-17

அநேகர் தங்களுடைய இயற்கையான குணங்களும், தன்மைகளும், செயல்களும் நல்லதோ, கெட்டதோ அவைகளை மறைக்காமல், இருக்கின்றபடியே வாழ்கின்றார்கள். எனவே அவர்களை அடையாளம் கண்டுகொள்வது எளிதா யிருக்கின்றது. ஏனென்றால் அவர்கள் வெளியரங்கமாயிருக்கின்றார்கள். அதே வேளையில் அநேகர் தங்களுடைய தவறான குணங்கள், இயல்புகள். ஆகாத செயல்கள் ஆகியவை வெளியரங்கமாக யாருக்கும் தெரிந்து விடாதபடி தங்களைப் பக்தியான வாழ்க்கை என்ற போர்வையால் மறைத்துக் கொள்கின்றார்கள். அவர்கள் தங்கள் இறைபக்தியின் விளைவாக பலவீனங்களையும், குறைவுகளையும், தவறு களையும் வெளிப்பட அனுமதிக்காமல் மூடிக்கொள்ள விரும்புகின்றார்கள். எனவே அவர்களின் உண்மை நிலையை அறிய முடியாமல் அநேகர் இடறிப் போகின்றனர்.

ஏராளமான கிறிஸ்தவ பக்தியாளர்கள் தாங்கள் பரிசுத்தமாக வாழ்கின்றவர்கள் என்று தெரிய வேண்டுமென்ற ஆசையினால் தங்களிடம் உள்ள அன்பின் குறைவு, தாழ்மையின்மை, சாந்தமின்மை, பணஆசை, பெருமை, உண்மையின்மை, கபடு போன்ற தாழ்வான குணங்களை பிறர் அறிந்துவிடாமல் மறைத்துவிடப் பெரிதும் முயற்சிக்கின்றார்கள். ஆனால் அவர்களால் சில வேளைகளில் அவைகளை மறைத்து நல்லவர்களாக தோன்ற முடிகிறதேயன்றி, அவைகளை வெளித்தெரியாமல் வாழ்வதில் வெற்றியடைய முடியவில்லை. ஆனால் அதற்குள் அவர்களின் நிலவரமற்ற நிலையினால் அநேகர் இடறி விழுகின்றனர்.

பரிசுத்த வாழ்க்கை என்பது ஆகாத குணங்களை அழிப்பதும் அகற்றுவதும் தானேயன்றி, அவைகளை இல்லாதது போல காட்டி மூடி மறைப்பதல்ல. சிலர் ஒரு குறிப்பிட்ட காலம் மிக நல்ல கிறிஸ்தவர்கள் போலத் தோன்றுவார்கள். ஆனால் வெறொரு கால கட்டத்தில் மிக மோசமாக வாழ்வார்கள். சிலர் சில குறிப்பிட்ட இடங்களில் அல்லது சூழ்நிலைகளில் தவறேதும் இல்லாத தூயர்களாகத் தென்படுவார்கள். ஆனால் வேறொரு சூழ்நிலையில் முற்றிலும் முரண்பாடாக விளங்குவார்கள். ஏனென்றால், அவர்கள் தங்களின் உண்மை நிலையை அதிக நேரம் மூடி மறைத்து வைக்க இயலவில்லை.

பலர் மனந்திரும்புதல் என்ற அனுபவத்தை சரியாக வந்தடையாமல் ஒரு பரிசுத்தமான வாழ்க்கையை விரும்புவார்கள். எனவே அவர்களின் உள்நிலை தேவ ஆவியினால் மாற்றம் பெறாத நிலையில், புதிதாகப் பல ஆவிக்குரிய நற்குணங்களையும், நற்செயல்களையும் சேர்த்துக் கொள்வார்கள். ஆனால் பழைய பாவ உள்நிலை அப்படியே இருப்பதால், அதனுடைய பாவ வலிமை புதிதாக ஏற்படுத்திக் கொள்ளும் ஆவிக்குரிய நற்குணங்களையெல்லாம் அவ்வப்போது மேற்கொண்டு விடுகிறது

நல்லவன் என்ற பெயரை எளிதாகப் பெறலாம்,
நேர்மையானவன் என்ற நிலையில் நிலைப்பதுதான் கடினம்.

ஜீவ நீரோடை

அறிவும் அனுபவமும்

நீதிமொழிகள் 9:1-18 | 1 கொரிந்தியர் 2:1-16

ஜென்ம சுபாவமான மனுஷனோ...
1 கொரி 2:14

திருச்சபை போதகர் ஒருவர் மனமாற்றம், சுபாவநிலைகள் மாறுதல் போன்றவற்றை அதிக முக்கியமாக எண்ணி திரும்பவும் திரும்பவுமாக போதிக்கும் பழக்கமுடையவர். மனந்திரும்புதல் தொடர்பான போதனைகளை மீண்டும் மீண்டும் கேட்பதால் சலிப்படைந்த சில சபை உறுப்பினர்கள் போதகரின் செயல்பாட்டை ஆட்சேபிக்க ஆரம்பித்தனர். நீங்கள் திரும்ப திரும்ப மனந்திரும்புதலையே வற்புறுத்திப் போதிக்கின்றீர்கள். எனவே நாங்கள் ஆவிக்குரிய பிற விஷயங்களை அதிகமாக அறிய முடியவில்லை என்றனர். அதற்கு அந்த போதகர் உண்மையான மனமாற்றம் பெற்றவர்களுக்கு நான் போதிக்காமல் கூட பல விஷயங்களை அவர்களால் அறிந்து கொள்ள இயலும். ஆனால் மனந்திரும்பாதவர்களுக்கு நான் எவ்வளவு தான் போதித்தாலும் அதனால் அவர்களுக்கு எந்தப் பிரயோஜனமும் ஏற்படாது என்றார்.

சற்றும் நடக்க இயலாமல் கால் ஊனமாகிப் போன ஒருவருக்கு ஒலிம்பிக் ஓட்டப்பந்தயத்தில் வெற்றிகரமாக ஓடி பரிசு பெறுவது எப்படி என்று மிகச் சிறப்பாக போதிக்க முடியும். அவரும் அதனை மிக நன்றாகக் கவனித்து ரசிக்க முடியும். ஆனால் அந்தப் போதனை அவரை ஓட வைத்து விடாது. அது போலவே உண்மையான மனந்திரும்புதலின் வாயிலாக மறுபடியும் பிறந்த ஆவிக்குரிய அனுபவம் பெறாதவருக்கு மிக நன்றாகப் போதிக்கலாம். ஆவிக்குரிய விஷயங்களை ஆழமாக கற்றுக் கொடுக்கலாம். அவற்றை அவர் மிக நல்ல போதனைகள் என்று தலையாட்டிக் கொண்டு நன்றாகக் கேட்க முடியும். ஆனாலும் அவரால் நல்ல ஆவிக்குரிய பண்புகளோடும், நடத்தைகளோடும், மிகச் சிறந்த செயல்களோடும் வாழ்ந்து காட்ட இயலாது.

மனந்திரும்புதல், மறுபடியும் பிறத்தல் ஆகியவற்றின் வாயிலாக புதிய தோர் சிருஷ்டி அடைந்தவர்கள் யாருடைய போதனையுமின்றி, தேவ ஆவியின் வாயிலாக பல விஷயங்களைக் கற்றுக் கொள்ள இயலும். ஏனென்றால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பல மேன்மையான உண்மைகளை அறிந்து கொள்ளும் ஆவிக்குரிய அறிவுத்திறனைத் தரும். சிலர் இறையியல் கற்றுத் தேர்ந்த மேதைகளாயிருப்பார்கள். ஆயினும் அன்பு, உண்மை, பொறுமை, தாழ்மை போன்ற பண்புகளை அவர்களிடம் பார்ப்பது மிகவும் கடினமாயிருக்கும். அதே வேளையில் வேதாகமத்தைத் தவிர ஏராளமான பிறநூல்களைப் படிக்க இயலாத சிலர் நல்ல சுபாவ நிலைகளோடு வாழ்வார்கள். அது கல்வித் திறனால் அல்ல. தேவ ஆவி தந்த அனுபவத்தினால் வந்தது.

கற்றுக் கொள்வதற்காக மட்டும் அல்ல
கடைப்பிடிப்பதற்காக கற்பவனே சரியான மாணவன்.

ஜீவ நீரோடை

பணம் எச்சரிக்கை

11 இராஜாக்கள் 5:20-27

நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து... எபிரேயர் 13:5

எபிரெயர் 13:1-16

கிறிஸ்தவ விசுவாசத்தில் ஆழமாக உள்ள ஒருவரைக் குறித்து இன்னொருவர் கூறும் போது அவருடைய பலவித நல்ல கிறிஸ்தவ ஈடுபாடுகளைக் குறித்து பிரமாதமாகப் பேசினார். எல்லாவற்றையும் சொல்லிவிட்டு சொன்னார். "அவர் பண விஷயத்தில் மட்டும் கொஞ்சம் அதிகக் கரிசனையாயிருப்பார்" என்று. ஆனால் எல்லாவற்றையும் விட பணம் பற்றின விஷயத்தில மனிதனுடைய அதிகக் கரிசனைதான் அவனை எல்லா விதத்திலும் நாசமாக்கிவிடுகிறது.

குடும்பம் வேண்டாம், திருமணம் வேண்டாம், பங்களா வேண்டாம், கல்வித் தகுதிகள் சார்ந்த அந்தஸ்து வேண்டாம் என்றெல்லாம் உதறிவிட்டு கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்ய வந்த அநேகர் கூட பணம் என்ற விஷயத்தில் பலவீனமாயிருந்ததுண்டு. அதன் விளைவாக அவர்களின் பிற மேன்மைகள் யாவும் கூட வீணாய்ப் போயிருக்கின்றன. வயதுகள் அதிகம் ஆகிவிட்டால் பாலியியல் வாஞ்சைகள் வேகம் குன்றிப் போகும். ஆனால் பணமோ கிடுகிடு கிழவரையும் விறுவிறுப்பாக்கிவிடும். எனவே எல்லாவற்றையும் விட இந்தப் பணம் என்ற விஷயத்தில்தான் ஆவிக்குரியவர்களாகிய நாம் அதிக விழிப்பாயிருக்க வேண்டும்.

யூதாஸ் இயேசுவுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தான். தினமும் இயேசுவின் திவ்ய உண்மைகளைக் கேட்டான். ஆனால் சாத்தான் அவனை அவரைவிட்டுப் பிரித்துக் கொண்டு சென்றது பண ஆசையைக் காட்டித்தானே. கேயாசி மாபெரும் தீர்க்கதரிசியாகிய எலிசாவுக்கு அருகில் இருந்தான். ஆனாலும் பண விஷயத்தில் எலிசாவின் சிந்தை வேறாக இருந்தது. கேயாசியின் சிந்தை வேறாக இருந்தது.

ஊழியத்திலாயினும் சரி, ஆவிக்குரிய ஜீவியத்திலாயினும் சரி, பிசாசானவன் ஒருவரை விசுவாசத்தை விட்டும், தேவ ஐக்கியத்தை விட்டும் பிரிக்கும்படி அதிகமாக கொடுக்கும் தூண்டுதல்கள் பண ஆசைத் தூண்டுதல்களே. ஒரு வேளை பணம் நம்மிடம் அதிகம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் பணத்தைக் குறித்த நம்முடைய மனநிலையையும், மனோபாவத்தையும் சரியாகச் சோதித்து தெரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் பணம், பொருள் இல்லாத நிலையிலும் கூட பணத்தைக் குறித்த ஒரு பெரிய தாகமும், வாஞ்சையும் நமக்குள் உருவாக முடியும்.

மாத சம்பளமாக கை நிறைய பணம் வாங்கிவந்த ஒருவர் அந்த கட்டுகளை பிரிக்க மனமின்றி பீரோவில் வைத்துவிட்டு, செலவுக்காக பக்கத்து வீட்டில் போய் ஒரு தொகையை கடனாக வாங்கினாராம். ஆம், பண ஆசையின் விளைவு இப்படியெல்லாம் இருக்கும். மிக நல்ல விசுவாசிகள் சிலரும், மிகச் சிறந்த ஊழியர்கள் சிலரும் எத்தனையோ விஷயங்களில் ஆவிக்கேற்றவர்களாக இருந்தும், பணம் என்ற விஷயம் வரும்போது மட்டும் முற்றிலும் வேறுபட்டுப் போகிறார்கள்.

பணம் ஒரு பலம். அந்த பலத்தால் பிறரைக் தாங்கு. அப்போது பணத்துடன் பண்பையும் சம்பாதிப்பாய்.

வெள்ளை நிற அடிமைத்தனம்

உபாகமம் 18:9-22

ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்பட மாட்டேன் – 1 கொரிந்தியர் 6:12

1 கொரிந்தியர் 6:9-20

ஒருவர் தனக்குத் தெரிந்த ஒருவன் மதுபானத்திற்கு அடிமையாகிப் போனதை கதை கதையாய் தன்னுடைய நண்பனிடத்தில் சொல்லிக் கொண்டிருந்தார். உடனேயே அந்த நண்பர் தனக்கு தெரிந்த ஒருவன் சூதாட்டப் பழக்கத்திற்கு அடிமையாகிப் போனதை மிகுந்த பரிதாப உணர்வோடு பகிர்ந்து கொண்டார்.

ஆனால் இந்த இருவருடைய கதை என்ன தெரியுமா? இவர்கள் இருவரும் வெள்ளை நிறம் கொண்ட அடிமைத்தனத்தில் சிக்கியுள்ளார்கள். ஒருவர் நேரம் காலம் பாராமல் பேஸ்புக் வலைத்தளத்தில் வீழ்ந்து கிடக்கிறார். மற்றவர் இரவு பகல் பாராமல் கிரிக்கெட் மேட்ச் பார்க்கும் அடிமைத்தனத்தில் சிக்கியுள்ளார்.

மிக, மிக மோசமான தோற்றமுள்ளவைகளில் சிக்கியிருப்பது மட்டுமே அடிமைத்தனம் அல்ல. மதுபானம் மட்டுமே போதைப் பழக்கம் அல்ல. பொழுது போக்கு சார்ந்த நிகழ்ச்சிகளில் மிகுந்த நேரங்களை இழப்பதும், பிரயோஜனமற்ற அரட்டை நிகழ்ச்சிகளில் நேரங்களை நாசமாக்குவதும், அதிகமான நேரங்களை சீரியல், சினிமா, செய்தி, அரசியல் விவாதம், விளையாட்டுப் போட்டிகள் என செலவழிப்பதும் அடிமைத்தனங்கள்தான். அவைகளும் ஒரு விதமான போதைப் பழக்கங்கள்தான்.

மேற்கண்ட யாவும் தவறானவை என்று கூறிவிட முடியாது. ஆனால் நாம் செலவிடும் நேரங்கள், அதனால் ஏற்படும் பிரயோஜனங்கள், அவற்றால் மனரீதியாக ஏற்படும் பின் விளைவுகள் யாவற்றையும் கணக்கிட வேண்டும். பொழுது போக்கு என்பது பொழுது நாசகாரியாகி விடக்கூடாது. நாம் செலவிடுகின்ற ஒவ்வொரு நிமிடத்துளிகளும் மிகவும் விசேஷமானவைகள்.

பல டி.வி. நிகழ்ச்சிகள் பாவத்தோற்றம் கொண்டிருப்பதில்லை. ஆனால் அவை மறை முகமாக நம்முடைய மனங்களில் பலவித பொல்லாத தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும். பொழுதுபோக்குத் தன்மையுள்ள விஷயங்களில் அதிகமாக மனதை ஈடுபடுத்துகின்றவர்கள் தேவசமுகத்தில் மனதைச் சரியாக ஈடுபடுத்த முடியாது.

ஏதாவது ஒன்று நம்முடைய மனதை எளிதாக ஈர்த்துக் கொண்டும், இழுத்துக் கொண்டும் இருந்தால், அவற்றிற்கு நாம் அடிமையாகிவிட்டோம் என்று அர்த்தம். பயனுள்ள காரியங்களை பார்க்க வேண்டும், பயனுள்ளவைகளைப் பேச வேண்டும், நேரத்தின் மதிப்பறிந்து செயல்பட வேண்டும். எதுவும் போதையாகி விடக்கூடாது.

இதய சுத்தம் என்பது உலக சிந்தையை வெறுப்பதால் அல்ல இறைவனின் சிந்தையை ஏற்பதினால்தான் அது வரும்.

ஊழியத்திற்குச் செல்லலாமா?

நெகேமியா 2:1-16

ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய – எபிரெயர் – 5:4

எபிரெயர் 5:1-14

தன்னுடைய தாய் நாட்டிற்கு எதிராக, பகை நாட்டவர் படையெடுத்து வரும் போது, ஒருவர் மிகுந்த தேசப்பற்றின் விளைவாக, சொந்த நாட்டிற்காக போராட முன் வரலாம். இந்த தியாகமான மனோபாவம் மிகவும் மெச்சத்தக்கதே. அதே வேளை யில் போர்க்களம் சென்று தாய் நாட்டிற்காக போராட தேசப்பற்று மட்டும் போதாது. போர்ப் பயிற்சியும் வேண்டும். தகுந்த பயிற்சியின்றி தேசப்பற்றை மட்டுமே அடிப்ப டையாகக் கொண்டு போரிட வந்தால் பயன் ஏற்படாது. அதனால் போர்க்களத்தி லுள்ள பிற வீரர்களுக்கும் இடையூறுகளும் தொந்தரவுகளும் ஏற்படும்.

அதுபோல கர்த்தருடைய அன்பை ருசித்ததின் விளைவாகவும், தேவ நன்மை களைப் பெற்றதின் பிரதிபலிப்பாகவும், கர்த்தருக்காகப் பணி செய்ய வேண்டும் என்ற மன வாஞ்சையின் நிமித்தமாகவும், நாம் நம்மை தேவ ஊழியத்திற்காக அர்ப்பணிக்கலாம். ஆயினும் அவ்விதம் ஊழியம் செய்யத் தேவையான ஆயத்தங்களும், பயிற்சிகளும் நமக்கு உண்டா என்பதே முக்கியம்.

சிறந்த விசுவாசிகளாக வாழ்ந்து, முக்கியமான வேலைகளில் இருந்த சிலர், உணர்ச்சிவசப்பட்டதின் விளைவாகவும், தவறான வழிநடத்துதல்களின் விளை வாகவும், தங்களை முழு நேர ஊழியத்திற்குள் ஈடுபடுத்தியதுண்டு. நல்ல உத்தியோ கங்களை ராஜினாமா செய்துவிட்டு ஊழியத்திற்கு வந்தார்கள். ஆனால் ஊழியத் தில் பிரகாசிக்க முடியவில்லை. இதனால் தங்களிடமிருந்த நல்ல விசுவாச வாழ்க்கையையும் இழந்தவர்கள் உண்டு. ஆம், திட்டவட்டமான தேவ அழைப்பும், ஊழியம் செய்வதற்கான ஆவிக்குரிய ஆற்றல்களும், பயிற்சிகளும் மிக முக்கியம். வெறும் இறைப்பற்று மட்டும் போதுமானதல்ல.

தானியேலைப் போல, யோசேப்பைப் போல உலகப்பிரகார வேலைகளை செய்து கொண்டு கூட தேவ ஊழியக்காரன் என்ற நிலையில் இருக்கமுடியும். நமக்குக் கொடுக்கப்பட்ட அலுவல்களையும், பொறுப்புகளையும், தேவ பயத்துடனும், நீதி, நேர் மையுடனும் செய்து கர்த்தருக்குச் சாட்சியாக வாழ்வதும் ஒரு பெரிய ஊழியமே. ஒருவேளை அவ்விதம் செய்து வருகையில் நெகேமியாவைப் போன்று ஒரு முழுநேரப் பணிக்காக நாம் அழைக்கப்படலாம். ஆனால் அந்தப் பணிக்குத் தேவையானவைகளை அன்று நெகேமியாவுக்குக் கொடுத்தது போல, தேவன் நமக்குத் தந்திருக்கின்றாரா என்பதையும் கவனிக்க வேண்டும்.

நற்செய்தியைச் சரியான புரிந்து கொள்ளுதலுடன் பிரசங்கிக்கத் தெரியாமல், நற்செய்திப் பணிக்குச் செல்லுவது பயன் தராது. சபை மக்களைச் சரியான வேத சத்தியத்தில் வழி நடத்தும் சத்திய வெளிப்பாடுகள் இல்லாமலும், போதிக்கும் ஆற்றல் இல்லாமலும் சபை ஊழியங்களைப் பொறுப்பேற்பதும், ஆரம்பிப்பதும், ஆவிக்கேற்ற பலன்களைத் தராது.

படுவேகமாக ஓடுகிறவன் நெடுந்தூரம் கடக்க மாட்டான். வாழ்க்கையிலும் அப்படியே.

ஏதனால் பயன்பட?

ஆதியாகமம் 13:1-18

தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து... – 11 தீமோ 4:10

11 தீமோத்தேயு 4:1-22

ஒருவர் எவ்வளவு நல்லவராகயிருந்தாலும், அவர் வல்லவராக இருந்தால் தான் பலர் அவரைப் புகழவும், மதிக்கவும் செய்கின்றனர். சமீபத்தில் என்னுடைய நண்பர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட ஒருவரைப் பற்றி பேசும் போது அவர் நல்லவர் எனக் கூற முடியாது. ஆனால் அவரால் எங்களுக்கு பல நன்மைகள் உள்ளது என்றார். ஏனென்றால் அவருடைய செல்வமிகுதியினால் அவர் அநேகருக்குக் கொடை கொடுக்கின்றார். ஒருவர் மிகவும் நல்லவராகயிருந்தாலும் அவரால் மற்றவர்களுக்கு வாரி வழங்கும் வலிமை இல்லாவிட்டால் அவர் மதிக்கப்படுவதில்லை.

இதற்கு முக்கியமான காரணம் என்ன? மனிதன் பிறர் வாயிலாக பண உதவி, வளமை சார்ந்த ஆதரவு, சாதித்து தரும் ஆற்றல், போன்றவற்றையே முக்கியமாகத் தேடுகின்றான். ஒருவரிடத்திலிருக்கும் அதிகாரம், அந்தஸ்து, பதவி, பணம், சரீர வலிமை, ஆள் பலம், இவற்றின் வாயிலாகத் தனக்கு ஏதாவது நல்லது கிடைக்காதா என்றே மனிதன் யோசிக்கின்றான்.

ஏனென்றால் நற்பண்புகளையோ, நற்செயல்களையோ, அவன் தன்னுடைய மிகப் பெரிய தேவையாக எண்ணவில்லை. தான் நல்லவனாக வாழ்வதற்கும், நற்பண்புகளில் வளர்வதற்கும், மெச்சத்தக்க ஒரு குணநிலை சார்ந்த வாழ்க்கை வாழ்வதற்கும் யாராவது உதவமாட்டார்களா என்று சிந்திக்கவில்லை. அன்பு, தாழ்மை, நேர்மை, நாணயம், உண்மை, ஒழுக்கம், போன்ற உயர்குணங்களை வாழ்க்கையின் முக்கியத் தேவைகளாக எண்ண இயலாதவனுக்கு நல்லவர்களால் எந்தப் பலனும் இல்லை.

இயேசுவோடு இணைந்திருந்த சீடர்களுக்கு பணம், பொருள், பதவி, அந்தஸ்து போன்றவைகளைப் பெற முடியவில்லை. ஆனால் இயேசுவின் நல்ல ஐக்கியத்தினால் அவர்கள் நற்பண்புகளும், உயர்ந்த வாழ்க்கை முறையையும் பெற்றார்கள். இயேசுவை விட்டுப் போகாமலிருப்பதற்கு பேதுரு கண்ட காரணம் என்ன? அவரிடத்தில் அல்லாமல் தனக்கு நித்திய ஜீவ வார்த்தைகள் கிடைக்காதே என்பதாகும்.

அப்போஸ்தலனாகிய பவுலோடு ஐக்கியமாயிருந்த தேமா அதிக காலம் பவுலோடு இருக்க இயலவில்லை. ஏனென்றால் அவனுடைய தேவையெல்லாம் பணம், பொருள், உலகத்திற்கேற்ற வாழ்க்கை நிலை என்பதாகயிருந்தது. எனவே பவுலை விட்டுப் பிரிந்து செல்லும் கட்டாயம் ஏற்பட்டது. ஆம். நல்லதை நாடுகின்றவர்கள் மட்டுமே நல்லவர்களால் பயனடைவார்கள்.

பொய்யையும், போலித்தனத்தையும் கண்டு கொள்ளாதவனிடம் உண்மையை ஒரு போதும் பிறர் காண முடியாது.

ஜீவ நீரோடை

சுவிசேஷகன்

11 இராஜாக்கள் 5:1-14

கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே... அப்போஸ்தலர் 4:20

அப்போஸ்தலர் 4:1-20

சுவிசேஷத்தை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் ஒரு சுவிசேஷகரே. அவர்கள் சுவிசேஷ நற்செய்தியைப் பிறருக்கு அறிவிக்கும் கடமை உள்ளவரே "போ அல்லது அனுப்பு" என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் அநேகர்" என்னால் போக முடியாது. எனவே என் செலவில் ஒரு மிஷனரியை அனுப்புகிறேன்" என்று முடிவு செய்வதுண்டு. ஆனால் "போ" என்பதற்கு "பதி லாக" அனுப்பு என்பதை மாற்று வழியாக உபயோகிப்பது அவ்வளவு சரி அல்ல. நாம் ஒவ்வொருவரும் சுவிசேஷத்தை அறிவிக்கப் போக வேண்டும்.

போக வேண்டும் என்பது வட இந்தியா என்றோ, தூர இடம் என்றோ கட்டாயம் அல்ல. அது அழைப்பையும், வாஞ்சையையும் பொறுத்த விஷயம். கிறிஸ்துவை அறியாத இன்னொரு மனிதனிடம் போவதுதான் சுவிசேஷ ஊழியம். அந்த மனிதன் நம்முடைய அண்டை வீட்டிலோ அல்லது எதிர்வீட்டிலோ அல்லது பக்கத்து தெருவிலோ கூட இருக்க முடியும். தேவையுள்ள ஒரு ஆத்துமா, தொடுகிற அளவு தூரமாக இருந்தால் கூட அங்கே போவதும் ஊழியம்தான்.

"எனக்கு சுவிசேஷம் சொல்லவே தெரியாது" என்பது ஒரு முக்கியமான பிரச்சினை. சுவிசேஷம் சொல்வதற்குத் தேவையான பயிற்சியைப் பெற ஆறு மாசமோ, ஒரு வருடமோ இறையியல் போய் படித்தாக வேண்டிய கட்டாயம் இல்லை. அது ஒரு எளிமையான விஷயம்தான். நாம் அறிந்த, உணர்ந்த ஒன்றை இன்னொருவருக்கு அறிவிப்பது சாதாரண விஷயம்தான். "இயேசுவை பாவ மன்னிப்பு தருகிறவராக, இரட்சிக்கிறவராக, பரிசுத்தமாக்குகிறவராக, வாழ்க்கையை மாற்றுகிறவராக, நித்திய வாழ்வு தருகிறவராக என்னுடைய வாழ்க்கையில் கண்டேன். அதை நீங்களும் பெறும்படியாக அவரை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்பதுதான் சுவிசேஷ அறிவிப்பின் சாராம்சம். அது ஏதோ மத சித்தாந்த சம்பந்தமான மலை போன்ற விஷயம் என எண்ணாமல், எளிமை யான சில இறை உண்மைகளை இன்னொருவரோடு பகிர்ந்து கொள்கிறோம் என எண்ணவேண்டும்.

பேசவே வராது என்பதும் ஒரு பிரச்சினை. பேச துவங்கும்வரைதான் அது வராது. விசுவாசத்துடன் பேசத் துவங்கிவிட்டாலோ வந்துவிடும். "பேசுவது நீங்களல்ல, பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுவார்" ஆனால் நீங்கள் நம்பிக்கையோடு வாயைத் திறந்து பேச ஆரம்பித்துவிட்டால் அது உண்மையாகிவிடும். "பேச வெட்கமாயிருக்கிறது" இது ஒரு எண்ணம். "ஒரு உண்மையைச் சொல்ல ஏன் எனக்கு வெட்கம் வருகிறது" என்று உங்களுக்குள் அடிக்கடி கேளுங்கள். அந்த வெட்கத்தை நீக்க ஜெபியுங்கள். கர்த்தர் உதவி செய்வார்.

எல்லாவற்றையும் விட உங்களின் உண்மையான இரட்சிப்பின் அனுபவம் பிரதிபலிக்கத்தக்க சாட்சியான ஒரு வாழ்க்கையே ஒரு சுவிசேஷ ஊழியம்தான். மற்ற எந்த ஊழியமும் இந்த வித ஊழிய பின்னணியுடன்தான் செய்யப்பட வேண்டும்.

பொய்யை பேசுவதற்கு நல்ல திறமை வேண்டும். உண்மையை பேசுவதற்கு துணிவும், நேர்மையும் வேண்டும்.

வல்லமை

நியாயாதிபதிகள் 6:11-23

அவருடைய சத்துவத்தின் வல்லமையில்...
எபேசியர் 6:10

எபேசியர் 6:10-24

முதலாளி ஒருவன் ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்திட ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போகவேண்டும் என்று வேலைக்காரனிடம் சொல்லியிருந்தான். கீழ்ப்படிதல் மிகுந்த அந்த வேலைக்காரன் கால்நடையாக வெகுதூரம் நடந்து சென்று மிகவும் சிரமப்பட்டு, சொன்ன வேலையைச் செய்து முடித்தான். ஆனால் அதிகமான நேரம் எடுத்துக்கொண்டதற்காக முதலாளி அவனைத் திட்டினான். உத்தமமாகப் பணி செய்த தன்னிடம் முதலாளி அநியாயமாக நடந்து கொண்டதாக வேலைக்காரன் எண்ணி வேதனைப்பட்டான். ஆனால் தவறு அவனுடைய பக்கத்தில்தான். சொன்னபடி வேலையை முடிக்க அவன் அவசரம் காட்டினான். ஆயினும் முதலாளி அந்த வேலைக்காக ஏற்பாடு செய்திருந்த வாகனத்தைக் குறித்தும், உடன் உதவியாளர்களைக் குறித்தும் அவன் கவனக் குறைவாய் இருந்தால் அதிக சிரமமும் அதிக நேரவிரயமும் ஏற்பட்டது.

கிறிஸ்துவின் போதனையின்படி வாழ்வதுதான் கிறிஸ்தவம் ஆனால் போதனைகளின்படி செயல்படத் தேவையான வல்லமையையும், வழிகாட்டுதலையும் தேவன் தருகின்றார். அவற்றைக் குறித்த நல்ல அறிவும், அவற்றைப் பயன்படுத்தும் நல்ல ஆர்வமும் வேண்டும். அநேகர் தாங்கள் கேட்ட நல்ல போதனைகளின்படி வாழ விரும்புகின்றார்கள். ஆனால் அதனைச் செயல்படுத்துவதற்குத் தேவையாக தேவன் ஆயத்தமாக்கி வைத்துள்ள தேவ உறவு, தேவ ஆவியின் வல்லமை ஆகியவற்றைக் குறித்து அதிகமாகச் சிந்திப்பதில்லை.

தேவஐக்கியம் தொடர்பான தேவ ஆலோசனைகளையும், தேவ வல்லமை பெறுவது தொடர்பான வேதவழிகாட்டுதல்களையும் அவர்கள், உற்றுக் கவனிப்பதில்லை. அவர்கள் தங்களின் சொந்தத் தீர்மானத்தைச் சார்ந்தும், சொந்தப் பலத்தைச் சார்ந்தும் செயல்படுவதற்கே அதிக முனைப்புக் காட்டுகின்றனர். தேவ வல்லமை, பெறுவது தொடர்பான போதனைகளை அவர்கள் பெரிதாக எண்ணுவதில்லை. கிறிஸ்துவின் போதனைகளின்படி வாழ்வதற்கு மட்டும் அல்ல,

முதலாவது கிறிஸ்துவின் ஐக்கியத்தில் வாழ்வதற்கே அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு முன்பு அவரோடு இணைந்திருத்தலாகிய அனுபவத்தைப் பெற வேண்டும். கிறிஸ்துவோடு இணைந்திருப்பதற்குத் தேவையான காரியங்களைச் செய்திட தீவிரமாகும் போது, கிறிஸ்துவுக்காக வாழ்ந்து காட்டத் தேவையான வல்லமை நம்மிடம் செயல்பட ஆரம்பித்து விடும்.

சோதனைகள் நெருக்கும் போதுதான் மனிதன் தன்னிடம் மறைந்திருக்கும் ஆற்றல்களை அறிகின்றான்.

துன்பத்தைக் கண்டவர்கள்

உபாகமம் 15:1-12

நம்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. – கலாத்தியர் 6:9

கலாத்தியர் 6:1-10

நெருப்பு சரீரத்தில் பட்டுவிட்டால் அது எவ்வளவு வேதனை தரும் என்பதைப் பொதுவான அறிவால் எல்லோராலும் அறிந்து கொள்ள முடியும். ஆயினும் அந்த அறிவு, நெருப்பால் சுடப்பட்டு வேதனையடைந்த ஒருவருடைய அனுபவ அறிவுக்கு இணையாகாது. பிறரால் புறக்கணிக்கப்படுவதும், அற்பமாய் எண்ணப்படுவதும் மிகுந்த மன வேதனையைத் தரும் என்பது, பொதுவாக யாராலும் புரிந்து கொள்ள இயலும். ஆயினும் அவ்விதம் புறக்கணிக்கப்பட்ட ஒருவருடைய அனுபவரீதியான புரிந்து கொள்ளுதலுக்குக் கொஞ்சமும் அது இணையாகாது.

வாழ்க்கையில் சில துன்பங்கள், வேதனைகள், தோல்விகள், நஷ்டங்கள் எந்த அளவிற்கு மனதை விசனப்படுத்தும் என்பதை, அவ்விதமான பாதிப்புகளைக் கண்டு வருந்தியவர்களால் மட்டுமே சரியாகப் புரிந்து கொள்ள இயலும். இந்த அனுபவம் சார்ந்த அறிவுதான் மற்றவர்களின் மனக்கஷ்ட வேளைகளில் நாம் அவர்களுக்கு நல்ல ஆறுதலாகவும், ஆக்கப்பூர்வ ஆதரவாகவும் விளங்கிட நம்மைப் பக்குவப்படுத்தும்.

பெரும்பாலும் நாம் தேவனிடமிருந்து நன்மைகளைப் பெறுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்துகின்றோம். ஆனால் தேவன் நாம் நன்மையைத் தேடுகின்றவர்களாக மட்டுமிராமல், பிறரைத் தேடி நன்மை செய்கின்றவர்களாக விளங்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார். எனவே தேவன் நம்மையும் சில காலம் சில வருத்தத்திற்குரிய சூழ்நிலைகளைக் கடந்து போகச் செய்கின்றார். அவ்விதமான பாதைகளில் நாம் அடைய நேரிடுகின்ற அனுபவங்களால் பிறருக்கு நாம் ஏற்ற ஆறுதலாளர்களாகவும், ஆதரவாளர்களாகவும் செயல்பட வழி ஏற்படுத்துகின்றனர்.

பரிதாபகரமாக அநேகர் தங்கள் வாழ்க்கையில் அவர்கள் சந்தித்த துன்பங்களையும், அவைகளால் அனுபவித்த வேதனைகளையும் திரும்பிப் பார்த்து சுய பரிதாபம் அடைகின்றார்களேயன்றி, அந்த அனுபவங்களைப் பிறர் பயன்படும் விதமாக உபயோகிக்காமல் போகின்றார்கள். நண்பர் ஒருவர் வாலிப வயதுகளில் பலவிதமான பாடுகளின் வழியாகக் கடந்து வந்தார். நண்பர்களால், உறவினர்களால் கைவிடப்படுகின்ற அனுபவங்களைக் கண்டார். வசதியற்ற நிலையின் விளைவாக பலரால் அவமதிக்கப்படவும், அற்பமாக நடத்தப்படவும் செய்தார். ஆயினும் ஒரு நாள் அவர் நல்ல வசதியான நிலைக்கு வந்தார். ஆனால் நண்பரோ, உறவினரோ யாருக்கும் நாலணா நன்மை செய்யக் கூடாது என்பதே அவரது தீர்மானம். ஏனென்றால் அவருடைய கஷ்ட நாட்களில் யாரும் உதவவில்லை.

ஆனால் இது ஒரு தவறான அணுகுமுறை. நாம் எங்கெங்கு பாதிக்கப்பட்டோமோ, எந்தக் காரணங்களால் அவமதிக்கப்பட்டோமோ அதுபோன்று பாதிக்கப்படுகிறவர்களுக்கு ஆறுதலாகச் செயல்படுவதே நாம் முன்னேறியதால் ஏற்படவேண்டிய பலன். ஆம். நாம் அடைந்த துன்பத்தின் வேதனை, நம்மைச் சிலருடைய துன்பத்தில் உதவத் தூண்டுமானால், நாம் துன்பத்தால் அதிக ஆதாயமடைந்திருக்கின்றோம் என்பது பொருளாகும்.

**துன்பங்களின் பாதையில் கிடைத்த அனுபவங்கள்
துன்புறும் இன்னொருவரைத் தூக்கி நிறுத்தும்.**

விசுவாசப் பார்வை

யாத்திராகமம் - 3:1-17

நான் எம்மாத்திரம் என்றான்
யாத்திராகமம் 3:11

மாற்கு - 11:19-24

கிறிஸ்தவ வாழ்க்கை எவ்வளவு சிறந்ததோர் வாழ்க்கையாக இருக்க வேண்டும் என்ற போதனைகளைக் கேட்கின்றோம். ஆனால் அப்படிப்பட்டதோர் மேன்மைமிகு வாழ்க்கையை வாழ்ந்துகாட்டுவோம் என்ற விருப்பத்தை விட இப்படியெல்லாம் வாழ முடியுமா? என்ற கேள்விதான் பலருக்கு முதலாவது வருகிறது. தேவன் வல்லமைமிகு காரியங்கள் செய்வார் என்ற அடிப்படையில் பேசும் போது மிக இலகுவாக நம்பி அல்லேலூயா கோஷம் போடுகின்றோம். ஆனால் நாம் ஒரு வல்லமையான வாழ்வை வாழ வேண்டும் என்று சொல்லக் கேட்டதும் அது எப்படிச் சாத்தியமாகும் என்ற சிந்தனைதான் மேலோங்குகிறது.

ஒரு உயர்ந்த வாழ்க்கை முறையைக் குறித்துச் சொல்லும் போது, அதனுடைய சாத்தியக் கூறுகளைத் தங்களுடைய சொந்த பலவீனங்களின் அடிப்படையிலேயே யோசிக்கின்றார்கள். அத்தகைய ஒரு வல்லமையான வாழ்வை வாழ்ந்து காட்ட நம்மிடம் எங்கே வல்லமையுள்ளது என்றே யோசிக்கின்றார்கள். ஆனால் இயேசு போதித்த விதமான ஒரு வாழ்க்கை என்பது விசுவாசம் சார்ந்தது. அவ்விதம் வாழ அழைத்த தேவன் அதற்குரிய பலத்தையும் அருளுவார் என்ற நம்பிக்கை சார்ந்தது அது.

நாம் கடவுளுக்காக என்ன செய்ய முடியும் என்ற விதமாகவே சிந்திப்பதல்ல கிறிஸ்தவ வாழ்க்கை. நம்மைக் கொண்டு கடவுள் எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்ய முடியும் என்று விசுவாசத்தோடு யோசிப்பதே கிறிஸ்தவ வாழ்க்கை. எப்படி வாழ வேண்டும் என்று கர்த்தர் சொன்னாரோ அப்படி வாழ முடியும் என்ற விசுவாசத்தை நமக்குள் உருவாக்க வேண்டும்.

எபிரெயர்களை பார்வோனிடமிருந்து விடுதலை செய்யும் பணிக்கு மோசேயைத் தேவன் அழைத்தார். மோசே அதனைக் கேட்டதும் அதனை விசுவாசம் சார்ந்து யோசிக்காமல் தன்னுடைய பலவீனங்களின் பின்னணியிலேயே யோசித்தான். ஏனென்றால் ஒரு பெரிய காரியத்தை தேவன் தன் வழியாகச் செய்யப் போகிறார் என சிந்திக்கவில்லை. அதற்குபதிலாக இவ்வளவு பெரிய விஷயத்தை தேவனுக்கு நான் எப்படிச் செய்ய முடியும் என்று சிந்தித்தான். எனவே முடியாது முடியாது, என்று திரும்பத் திரும்பக் கூறினான்.

ஆனால் அதே மோசேயின்மூலம் தேவன் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தி மாபெரும் காரியங்களைச் செய்தார். நான் தேவனுக்காக என்ன செய்ய முடியும் என்று அல்ல. தேவன் என்னைக் கொண்டு என்ன செய்யமுடியும் என்று விசுவாசத்தோடு யோசிப்போம்.

ஆற்றைக் கண்டு பயப்படுகிறவன் அக்கரை போகமாட்டான்
துன்பத்தைக்கண்டு பயப்படுகிறவன் துக்கத்தைக் கடக்கமாட்டான்

துன்பத்தின் நடுவில் ஜெபம்

ஜீவ நீரோடை

சங்கீதம் 35:1-18

அவர் மறுபடியும் போய் ஜெபம் பண்ணினார்... மாற்கு - 14:39

மாற்கு 14:32-40

மிகவும் சோதனையான ஒரு சூழ்நிலையில் கெத்செமெனே தோட்டத்தில் இயேசு மீண்டும் மீண்டும் ஜெபம் செய்தார். ஆனால் அவருடைய சீடர்களோ அவர் திரும்பவும் திரும்பவுமாக எழுப்பியும் தூக்கத்திலேயே ஆழ்ந்திருந்தார்கள். துன்ப வேளைகள்தான் நாம் ஆழமாக ஜெபத்தில் நம்மை ஈடுபடுத்த வேண்டிய நேரம். துன்பங்கள் தடுக்கப்படாவிட்டாலும் அவைகளைத் தைரியமாகச் சந்தித் துக் கடந்து செல்ல ஜெபம் தேவை. வரப்போகிற துன்பங்கள் எதுவும் மாறப் போவதில்லை என்று அறிந்திருந் தும், இயேசு ஜெபத்தின் தேவையை உணர்ந்து ஜெபித்தார். அதனால் ஏற்பட்ட விளைவுகளைக் காண்போம்.

துன்பங்களை ஏற்கும் மனநிலை : சில துன்பங்கள் தவிர்க்க முடியாதவைகள், அவைகளை ஏற்றுக்கொள்ள இயலாத ஒரு மனநிலையோடு அணுகினால் அவைகளால் வரும் மனக்கஷ்டம் மிகுதியாயிருக்கும். சிலுவைப் பாடுகளாகிய கசப்பான பாத்திரத்தை நீக்கும்படி இயேசு ஜெபித்தார். அது நீங்குவது தேவ சித்தம் அல்ல எனத் தெரிந்ததும் “உம் சித்தம் ஆகக்கடவது” எனக் கூறி ஏற்றுக் கொண்டார். அந்த மனப்பக்குவம் ஜெபத்தினால் ஏற்பட்ட விளைவே.

துன்பங்களைத் தாங்கும் சக்தி : துன்பங்கள்தான் மாறப்போவதில்லை. பின்னர் எதற்கு ஜெபம்? துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றல் வேண்டுமே. கெத்செமெனேயில் இயேசு துன்பங்களைச் சகிக்கும் விசேஷ ஆற்றலைப் பெற்றார். துன்பங்களைத் தேவன் தடை செய்யாவிடினும் அவைகளைக் கடந்து செல்லப் போதுமான மன ஆற்றல்களை கிருபையால் அருளுகிறார். அவைகளைப் பெற்றுத் தருவது ஜெபமே.

துன்பங்களின் நடுவில் சமாதானம்: போர்க்களத்தில் நிற்கும் போர் வீரன் போர் ஆரவாரங்களுக்கு நடுவில் மன அமைதியை இழந்தால் அவன் எளிதாகத் தோற்கடிக்கப்படுவான். துன்பங்கள் தமக்காக நியமிக்கப்பட்டுவிட்டதை உணர்ந்தபிறகும் இயேசு அதிகமாக ஜெபித்தார். அதன் விளைவாக தெய்வீக அமைதி அவருக்குள் குடிகொண்டது. அந்த தேவ அமைதியுடன் அவர் எல்லா நிந்தைகளையும், அவமானங்களையும், இழிவுகளையும், பொறுமையாய்ச் சகித்தார். அவர் பாடுபட்டபோதிலும் பதட்டமடைந்து தீமைக்குத் தீமையை நினைக் கவேயில்லை. அந்த அமைதியின் விளைவாகத்தான் தம்மைத் துன்புறுத்தி யவர்களுக்காகவும் “பிதாவே இவர்களுக்கு மன்னியும்” என்று ஜெபிக்க முடிந்தது.

தேவன் தம்மோடிருப்பதை அறிந்தார்: நாம் துன்பங்களின் பாதையில் நடப்பதை விட, அங்கே நாம் தனியாக நடக்கிறோம் என்ற உணர்வுதான் நம்மை மிகுதியாக விசனப்படுத்தும். ஆனால் ஜெபம் அந்தத் தனிமையுணர்வை ம ாற்றுகிறது. இயேசு பாடுகளின் பாதையிலும் பிதாவாகிய தேவன் தம்மே ாடிருப்பதை உணர்ந்தார். அதற்குக் காரணம் ஜெபம். ஆம். சில கஷ்ட சூழ்நிலைகளின் நடுவிலும், அன்று அக்கினிச் சூளையில் வெளிப்பட்ட தேவன் இப்போதும் நம்மோடிருக்கிறார் என்பதை நமக்குள் உறுதிப்படுத்துவது ஜெபமே.

சிறகில்லாத பறவை வானத்தில் பறக்க இயலாது.
ஜெபமில்லாத மனிதன் ஆவியில் மகிழ முடியாது.

கிறிஸ்தவமும், சந்தோஷமும்

சங்கீதம் 33:1-22

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்
1 தெசலோனிக்கேயர் – 5:16

1 தெசலோனிக்கேயர் - 5:12-28

ஒரு வாலிபனை ஒரு சுவிசேஷகர் அடிக்கடி சந்தித்து கிறிஸ்தவ நற்செய்தியைக் கூறிவந்தார். ஆனால் அந்த வாலிபனிடமோ எந்த மாற்றமும் இல்லை. ஒருநாள் அவனுடைய தாயார் "அந்த சுவிசேஷகர் ஐய்யா உனக்கு எவ்வளவோ போதனை செய்தும் நீ அப்படியே இருக்கிறாயே" என்று சலித்துக் கொண்டார். அதற்கு அவன் எனக்கு இவரைப் போல தளா தளா ஜிப்பா போட்டுக்கொண்டு, முகத்தை "உம்"மென்று வைத்துக் கொண்டு சன்னியாசியாக வாழ விருப்பம் இல்லை என்றான்.

கிறிஸ்தவத்தைப் போதிக்கின்ற சிலருடைய நடை உடை பாவனைகள் சுவிசேஷத்திற்கு மிகுந்த தடையாக உள்ளது என்பது உண்மை. கிறிஸ்தவம் அன்பைப் போதிக்கின்றது. இவர்களோ அன்பாகப் பேசவே அறியாதவர்களாக உள்ளனர். கிறிஸ்தவம் சந்தோஷத்தைக் குறித்துப் போதிக்கிறது. இவர்களோ மருந்திற்குக் கூட மகிழ்ச்சியைக் காண்பிப்பதில்லை. இயேசுவை ஏற்றுக்கொள்வது என்பது சன்னியாசி போல மாறுவது அல்ல. சந்தோஷத்தை அலட்சியம் செய்வதல்ல.

கிறிஸ்துவால் நாம் முக்கியமாகப் பெறுவது சமாதானம், அன்பு, சந்தோஷம், புது நம்பிக்கை போன்றவற்றையே. அவற்றை நம்மிடம் பிறர் காணாவிட்டால் நாம் கிறிஸ்துவிற்குச் சாட்சியாக நிற்கவில்லை என்று அர்த்தம். கிறிஸ்துவின் ஐக்கியம் நமக்குள் தேவ அன்பினை ஊற்றுகின்றது. எனவே ஜனங்கள் எப்போதும் நம்மிடமிருந்து கடினமான வார்த்தைகளையே அல்ல. நம்முடைய வார்த்தைகளில் அன்பு வெளிப்பட வேண்டும்.

கிறிஸ்துவின் ஐக்கியம் நமக்குள் சந்தோஷத்தைக் கொண்டு வருகின்றது. எனவே நம்மிடம் சந்தோஷத்தையும், குதூகலத்தையும் ஜனங்கள் காண வேண்டும். கிறிஸ்தவம் சந்நியாச வாழ்விற்கு அல்ல, பரிசுத்த சந்தோஷம் நிறைந்த ஓர் வாழ்விற்கே நம்மை அழைக்கின்றது.

எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்று பிலிப்பியருக்கு எழுதினான் (பிலி-4:4). அன்பை வெளிப்படுத்தாத கண்டிப்பும், சந்தோஷத்தை வெளிப்படுத்தாத பரிசுத்தமும் பயனற்றது. பரிசுத்தம் என்பது அன்பு, தயவு, கண்டிப்பு, ஒழுங்கு, தயவு, மன்னிப்பு, மகிழ்ச்சி போன்ற பல நிறங்களைக் கொண்டது.

இயேசுவை எத்தனை பேருக்கு அறிவித்தோம் என்பதைவிட, நம்மிடம் எத்தனைபேர் அவரைப் பார்க்க முடிகின்றது என்பதே முக்கியம்.

மறைத்துக் கொள்ளாமல்

நீதிமொழிகள் - 28:1-14

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் – நீதி-28:13

1 யோவான் - 2:1-17

சில விஷயங்களைப் பொறுத்துக்கொள்வது என்பது வேறு. வருத்தப்படுத்தும் தன்மை கொண்ட அந்த விஷயங்களால் ஏற்பட்ட மனப்பாதிப்புகளை மனதிற்குள் மறைத்துக் கொள்தல் என்பது வேறு. சில சோர்வுக்குரிய காரியங்களை தாங்கிக் கொள்வது என்பது வேறு. அவைகளால் நமக்குள் எந்த மனக்கஷ்டமும் இல்லாதது போல் காண்பிப்பது என்பது வேறு. சிலர் தங்களுக்குள் உணரப்படும் மனக்கொந்தளிப்புகள், வருத்தங்கள், கவலைகள், கோபங்கள், யாவற்றையும் வெளியே தெரியாமல் மறைத்துக் கொள்வார்கள். தங்களுக்குள் நடப்பதை வெளியே யாரும் கண்டு கொள்ளக்கூடாது என்று விழிப்பாயிருப்பார்கள். இத்தகைய ஒரு மனப்போக்கு நல்லது போலத் தோன்றினாலும், இது தவறான ஒன்றே. ஏனென்றால் எல்லாவற்றையும் நமக்குள்ளே மறைக்க விரும்புகின்ற ஒரு மனநிலை நம்முடைய தவறுகளையும், பாவங்களையும் கூட மறைத்துக் கொள்ளவே நம்மைத் தூண்டும்.

மறைத்துக் கொள்ளுதல் என்பது தேவனுடைய பிரியத்திற்கு எதிரான ஒன்றாகும். தவறுகளைச் செய்கின்றவர்களைப் பார்த்து தேவன் வருத்தப்படுகிறாரென்றால், தவறுகளை மறைக்கின்றவர்கள் மேல் அவர் கடுங்கோபமடைகிறார். இந்த உலகில் நாம் தவறு செய்து விடுதல் என்பதில் யாரும் விதிவிலக்கல்ல. ஆனால் அந்தத் தவறுகளை அறிக்கையிட்டு, சரிசெய்வதற்குப் பதிலாக, அவைகளை மறைத்துக் கொள்ள விரும்புவது தீமையான விளைவுகளுக்கு நேராகவே நம்மைக் கொண்டு செல்லும்.

தேவன் நாம் வெளியரங்கமாக இருப்பதையே விரும்புகிறார். நம்முடைய உணர்வுகளையும், மனநிலைகளையும் கூட நாம் மறைத்து வைத்துக் கொண்டு, வாழ்வது அவருக்கு முன்பாக விரும்பத்தக்கது அல்ல. தாவீது, எரேமியா போன்றோருடைய ஜெபங்களைக் கவனிக்கும் போது, அவர்கள் எதையும் தங்களுக்குள் மறைத்துக் கொள்ள விரும்பியதில்லை என்பதை அறியலாம். துக்கம், சோகம், அதிருப்தி, பயம், கோபம், எரிச்சல் போன்றவைகளைக் கூட அவர்கள் வெளிப்படுத்தவே செய்தார்கள். எனவேதான் தாவீது, “ஜனங்களே, உங்கள் இருதயங்களை அவருடைய சமுகத்தில் ஊற்றிவிடுங்கள்” என்றான். (சங்-62:8)

சிலர் தேவனுக்கு முன்பாகத் தங்களின் தவறுகளை உணர்ந்து அறிக்கையிட்டு வெளிப்படுத்துவார்கள். ஆயினும் அதே தவறுகளை, பிறர் சுட்டிக் காட்டினாலோ, ஏற்றுக்கொள்ளாட்டார்கள். மனிதர்கள் முன்பாக நம்முடைய தவறுகளை மறைத்துக் கொண்டே, தேவனுக்கு முன்பாக அவைகளை வெளிப்படுத்துவதால் பயனில்லை. ஆம். தவறுகள் விஷயத்தில் வெளியரங்கமாயிருக்கத் தயங்காதிருப்போம்.

உன் தவறைக் கண்டுகொள்ளாமல் போகிறவனைவிட கண்டித்து உணர்த்துகின்றவனே உண்மை நண்பன்.

பணத்தை விட முக்கியமானது

2 இராஜாக்கள் - 5:20-27

பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. – 1 தீமோ 6:10

1 தீமோத்தேயு 6:6-21

பணம் என்பது மிகவும் முக்கியமானது. அதற்கு உரிய முக்கியத்துவம் தரப்பட வேண்டும். ஆனால் பணத்திற்கு முக்கியத்துவம் தருகின்ற அதே வேளையில் அதைவிட அதிக முக்கியத்துவத்திற்குரிய சிலவற்றை கவனிக்கத் தவறக்கூடாது. பெரும்பாலும் பணம் ஒருவரால் அதிக முக்கியமாக எண்ணப்படும் போது வேறு பல நல்ல விஷயங்கள் இரண்டாம் இடத்திற்குப் போய்விடுகின்றது.

வேலையில் சுமார் 25000 ரூபாய் வருமானம் ஈட்டிக் கொண்டிருந்த ஒருவருக்கு லட்சக்கணக்கில் வருமானம் பெறுவதற்கேதுவான வேலை வாய்ப்பு வந்தது. அவரோ அதனை வேண்டாம் என்றார். ஒரு நல்ல வாய்ப்பைப் பயன்படுத்த தெரியாத முட்டாள் என அவர் பலரால் பார்க்கப்பட்டார். பணத்தை விடக் குடும்ப ஐக்கியத்தில் வாழ்வது எனக்கு அதிக முக்கியமான விஷயம் என்பது அவரது நிலைப்பாடு. ஆம். கணவன் மனைவியாகக் குடும்ப உறவின் வட்டத்தில் ஒருவருக்கொருவர் நல்ல ஐக்கியமாயிருப்பது பணத்தைவிட அதிக முக்கியமானது. பிள்ளைகளை அவர்களுடைய இளம் வயதுகளில் உடனிருந்து கண்காணித்து கவனித்து நடத்துவது பணத்தைவிட அதிக முக்கியமானது.

பணத்தையே சந்தோஷத்தின் மையமாகவும், அதனையே வேறெல்லா வற்றையும்விட அதிக முக்கியமாக எண்ணுவதும் முட்டாள்தனமானது. கணவன் சம்பாதிக்கும் பணத்தைவிட மனைவிக்கு கொடுக்க வேண்டிய ஐக்கியம் அதிக முக்கியமானது. பிள்ளைகளுக்காகச் சொத்துக்களை வாங்கிக் குவிப்பதைவிட அவர்களுக்கு நல்ல ஆதரவாகவும், நல்ல பாதுகாவலாகவும் அவர்களுடைய வயதுகளில் உடனிருப்பது பணத்தைவிட அதிக முக்கியமானது.

பணம் வாழ்விற்கு உதவுகிறது என்பது உண்மை. ஆயினும் அந்தப் பணத் தைக் குறித்த சிந்தனை வாழ்க்கையின் பெரும்பகுதியை சன்யாசித்தனமாக பயனின்றி போகச் செய்யக் கூடாது. பணம் தேவையல்லவா என்ற எண்ணம் பலரை உண்மை, ஒழுக்கம், நேர்மை, அன்பு, இறை உறவு, பிறர் நலன் ஆகியவற்றைத் தியாகம் செய்ய வைத்துவிடுகிறது. எதை இழந்தா கிலும் பணத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்ற மனோபாவத்தை உருவாக்கி விடுகிறது.

எனவேதான் பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. பணத்தை முக்கியமாக எண்ணின கேயாசி தேவனுக்கு முன்பாக உண்மையாயிருத்தலை அலட்சியம் பண்ண நேர்ந்தது. பணத்தை முக்கியமாக எண்ணின யூதாசுக்கு இயேசுவின் ஐக்கியம் இழப்பதற்கு எளிதான ஒன்றாக மாறினது. அவர்களைப் பணம் மகிழ்விக்கவில்லை. பணத்தை முக்கிய மாக எண்ணுவோம். ஆனால் அதைவிட முக்கியமானவைகளை அலட்சியம் செய்யாதிருப்போம்.

பணஆசை காட்டாற்று வெள்ளம் போன்றது.
அதில் விழுந்தவர்களை அதன் போக்கில்தான் அது கொண்டு போகும்.

கப்பல் உடைந்தாலும்

11 சாமுவேல் 22:1-31

பின்னணியம் அலைகளுடைய பலத்தினால் உடைந்து போயிற்று... அப்-27:41

அப்போஸ்தலர் - 27:21-41

அப்போஸ்தலனாகிய பவுல் பயணம் செய்து கொண்டிருந்த கப்பல் பல நாட்களாக, காற்றினாலும், தொடர்ந்த மழையினாலும் கடுமையாகப் பாதிக் கப்பட்டு அபாயக் கட்டத்தைத் தாண்டாமலேயே போய்க்கொண்டிருந்தது. ஆனால் அத்தகைய சூழ்நிலையிலும் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி பவுலுக்கு நம்பிக்கை வாக்கு கொடுத்தார். அந்தக் கப்பலில் உள்ள அனைவரும் உயிர்சேதமின்றிக் கரை சேர்வார்கள் என்ற வாக்குறுதியைப் பெற்ற பவுல் அதனை யாவருக்கும், அறிவித்து தைரியமூட்டினான். ஆனால் தொடர்ந்து கப்பல் பயங்கர ஆபத்து வரப்போகிறது என்று அஞ்சத்தக்க சூழ்நிலையிலேயே சென்று கொண்டிருந்தது. கரையை நெருங்க, நெருங்க கப்பலின் பாகங்கள் உடைந்து உருக்குலைந்து கொண்டேயிருந்தது. இறுதியில் கப்பல் துண்டு துண்டாய் உடைந்து போனது. ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் இத்தனை நடந்தும் இறுதியில் கர்த்தர் சொன்னபடியே அனைவரும் உயிர்தப்பிக் கரைபோய்ச் சேர்ந்தனர்.

சில நேரங்களில் தேவ மக்களின் வாழ்க்கையிலும் இவ்விதம் நேரிடும். கர்த்தருடைய வல்லமையான வாக்குறுதிகளை அவர்கள் பெற்றிருப்பார்கள். நல்லதே நடக்கும் என்ற அடிப்படையில் நம்பிக்கையான வார்த்தைகள் அருளப்பட்டிருக்கும். கர்த்தர் கொடுத்த வாக்குறுதிகளை நம்பிச் சூழ்நிலைகளில் மாற்றத்தை எதிர்பார்த்தால் நடப்பதோ எல்லாம் எதிர்மறையாயிருக்கும். கர்த்தரிடமிருந்து அதிசயமான காரியங்கள் வரப் போகிறது என்ற எதிர்பார்ப்பைப் பொய்யாக்குவது போல் பிரச்சினைகளும், நெருக்கடிகளும் அதிகமாகும். ஆனாலும் ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் சூழ்நிலைகளையல்ல, தேவன் அருளிய நம்பிக்கையான வார்த்தைகளையே நம்பிச் சார்ந்து கொள்ள வேண்டும்.

அவர் சொல்லியும் செய்யாதிருக்க மாட்டார். காற்றுகள் வீசிக்கொண்டிருக் கலாம், எதிர்ப்புகள் பெருகிக் கொண்டேயிருக்கலாம். சில உடைவுகளும் சலசலப்பு களும் நிகழ்ந்து கொண்டிருக்கலாம். கப்பல் உடைந்து போய்க் கொண்டேயிருக் கிறதே, எப்படி நாம் கரை சேரப் போகிறோம் என்று நாம் எண்ணுகின்ற விதமாகக் காரியங்கள் நிகழலாம். ஆனாலும் கர்த்தர் ஒரு நம்பிக்கையை உண்மையாகவே தந்திருந்தால் அது அனைத்து உடைவுகளையும் தாண்டி நிச்சயம் நிறைவேறும்.

உயிருக்குப் போராடிக் கொண்டேயிருந்த மகளைக் காப்பாற்ற யவீரு இயேசுவிடம் ஓடி வந்தான். அவனுடைய வேண்டுதலுக்கு "ஆம்" என்று சொல்வது போல இயேசு உடனே புறப்பட்டார். ஆனால் அவர் வீடு வருவதற்கு முன் மகள் மரித்துப் போனாள் என்ற செய்தி வந்தது. இனி எதற்காக இயேசு? ஆனாலும் இறுதியில் இயேசு எதற்காகப் புறப்பட்டு வந்தாரோ அந்த நோக்கம் தவறாமல் நிறைவேறியது.

கப்பல் உடைந்தாலும் உடையாத உள்ளத்தையுடையவன் கரை சேர்ந்து விடுவான்.

ஜீவ நீரோடை

சவக்கடல்

நீதிமொழிகள் 11:23-31

மீதியான துணிக்கைகளைப் பன்னிரெண்டு கூடை நிறைய எடுத்தார்கள். – மாற்கு 6:43

மாற்கு – 6:34-44

சிலரிடம் உள்ள மிகுதியான பணம் அவர்களுக்குக் கொடையாளிகள் என்ற பெயரைப் பெற்றுத் தருகின்றது. சிலரிடம் உள்ள அதிகமான பணம் அவர்களுக்குக் கஞ்சர்கள் என்ற பட்டத்தைப் பெற்றுத் தருகின்றது. கலிலேயா கடலுக்கும் யோர்தான் நதியிலிருந்து தண்ணீர் வருகிறது. சவக்கடலுக்கும் யோர்தான் நதியிலிருந்து தண்ணீர் வருகிறது. ஆனால் சவக்கடலுக்கு வந்த தண்ணீரில் எந்த உயிரினமும் வாழாது. கலிலேயா கடலுக்கு வந்த தண்ணீரினால் எல்லா உயிரினமும் வாழும். ஏனென்றால் கலிலேயா கடலிலிருந்து தண்ணீர் தொடர்ந்து வெளியேறி பாய்ந்து செல்கிறது. உப்புக் கடல் அல்லது சவக்கடலுக்கு வந்த தண்ணீர் எங்கும் போகாமல் அங்கேயே தங்கி விடுகிறது.

சிலருடைய வாழ்விற்குள் வந்த நன்மைகள் அவர்களுக்குச் சாபமாகிவிடுகிறது. சிலருடைய வாழ்க்கை வட்டத்தில் வந்த நன்மைகள் பலருக்கு ஆசீர்வாதங்களாகி விடுகின்றன. ஆபிரகாமுக்குள் தேவன் வைத்த நன்மைகளினால் அநேகருக்கு ஆசீர்வாதம் வந்து சேர்ந்தது.

சாலொமோனுக்குக் கிடைத்த நன்மைகள் அவனுக்கே சஞ்சலமாக மாறி விட்டன. தேவனால் நன்மை பெற்ற தாவீது ஒரு சாம்ராஜ்யத்தைக் கட்டினான். தேவனால் நன்மை பெற்ற சாலொமோனோ அது உடைந்து போகக் காரண மானான்.

நாம் பெற்ற எந்த ஒரு நன்மையினாலும் இன்னொருவருக்கு ஒரு நன்மை அல்லது உதவி கிடைக்க வேண்டும். அப்போது நன்மைகள் பெருகுவதோடு அந்த வாழ்க்கை ஆசீர்வாத வாசலாகின்றது. எலிசா காலத்தில் இரவல் வாங்கி வந்த எண்ணெய்யை காலிப்பாத்திரங்களில் நிரப்ப, நிரப்ப இன்னும் மிச்சம் இருந்தது.

ஐந்து அப்பங்களைப் பிட்டுக் கொடுக்கக் கொடுக்க இன்னும் பல கூடைகளில் மிச்சம் வந்தன. எலியாவின் பசியைப் போக்க விதவைப் பெண் மாவை எடுக்க, எடுக்க இன்னும் மீதம் இருந்தது. ஆம். அறிவோ, பணமோ, ஆற்றலோ, நற்குணமோ, வேத அறிவோ, எதுவாயினும் தேவையுள்ள சிலருக்குக் கொடுக்கப்பட வேண்டும். அப்போது நிரம்பி வழியும் அனுபவங்கள் ஏற்படும். நாம் கலிலேயாக் கடலாக இருக்க வேண்டுமேயன்றி, யாருக்கும் உதவியற்ற சவக்கடலாக இருக்கக் கூடாது.

யாருடைய அன்பு தனக்குக் கிடைக்கவில்லை என்றல்ல யாருக்கு என் அன்பு கிடைக்கவேண்டும் என எண்ணுவதே அன்பின் விளைவு.

ஜீவ நீரோடை

முதலில் உன்னைப்பார்

மத்தேயு – 15:1–14

என் சொந்தத் திராட்சத் தோட்டத்தையோ நான் காக்கவில்லை. – உன்னதப்பாட்டு 1:6

1 தீமோத்தேயு 3:1–16

இரண்டு பெண்கள் பதநீர் பானைகளைச் சுமந்தபடி சென்று கொண்டிருந்தனர். திடீரென்று ஒருத்தியின் கால் எங்கோ இடற, தலையிலிருந்த பானை சாய்ந்தது. அதற்குள் மற்றவள் அது விழுந்து விடாதபடி கைகளால் தாங்கச் சென்ற போது அந்தப் பானையும் விழுந்து உடைந்தது. இவள் தலையிலிருந்த பானையும் விழுந்து உடைந்தது. மற்றவளின் பானையை விழுந்து விடாதபடி தடுக்கப் போனது நல்லதுதான். ஆனால் தன் தலையிலும் பானையிருப்பதை அவள் நினையாமல் போனதால் இரண்டும் நஷ்டமடைந்தது.

சில நேரங்களில் மற்றவர்கள் தவறக் கூடாது, தடம் புரளக் கூடாது, தகாத விதமாய் போய்விடக்கூடாது. என்று அதிகமாக நாம் ஜாக்கிரதைப்பட்டுச் செயல்படுகிறோம். ஆனால் மற்றவர்கள் சரியாக இருக்கும்படி எதிர்ப்பார்ப்போடு செயல்படுகிற நாம் சரியாக இருக்கிறோமா, என்பதைக் கவனித்துச் செயல்பட மறந்து விடுகிறோம். உண்மை, நேர்மை, நாணயம், அன்பு, பரிசுத்தம், தாழ்மை, ஒழுக்கம் என்று மற்றவர்கள் செவ்வையாயிருக்கும்படி பிரசங்கிக்கும் எத்தனையோ இறைப்பணியாளர்கள், தங்கள் வாழ்க்கையில் அவைகளைத் தவறவிட்டு விட்டு சிறப்பற்றவர்களாய் நிற்பதைக் காண்கின்றோம். மற்றவர்கள் மனந்திரும்பவில்லையே என்று மார்பில் அடித்துக் கொள்கின்ற எத்தனையோ பேர் தங்களுடைய வாழ்க்கையில் உண்மையான மனமாற்றம் ஏற்பட்டதா என்று சிந்திக்காமலிருக்கின்றனர்.

சாலொமோனுடைய நீதிமொழிகள் யாரையும் சிந்திக்கத் தூண்டும் தன்மை உள்ளவை. அவை மனிதன் எப்படி நடக்க வேண்டும், அவனுடைய நடவடிக்கைகள் எவ்விதம் இருந்தால் தேவன் அவனை ஆசீர்வதிப்பார் என்று தெளிவாகக் கூறுகின்றன.

ஆனால் தேவனுக்குப் பயந்து அவருடைய வழிகளில் நடக்க வேண்டிய அவசியத்தைக் குறித்து விழிப்புணர்வூட்டிய அவனோ, தன்னுடைய வாழ்க்கையை அவ்விதம் வைக்க விழிப்பாயிருக்கவில்லை. அவன் மதியீனத்தைக்குறித்துப் பலரை எச்சரித்துக் கொண்டே மதியீனமான ஒரு வாழ்க்கை வாழ்ந்தான். தேவனுடைய வழி களில் நடப்பதற்கு அநேகருக்குத் தூண்டுதல்கள் கொடுத்த அவனோ, ஒரு நாள் தேவனுடைய வழிகளை விட்டு விலகிப்போய் தேவனால் வரும் மகிமையை இழந்து போனான். தங்களை எந்த விதத்திலும் செவ்வைப்படுத்தாத பல பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் மேல் அதிக அக்கறை கொண்டு, அவர்கள் ஒழுங்காக இருக்கும்படி அதிக ஜாக்கிரதை காண்பிக்கிறார்கள். ஆனால் பயனில்லை. பெற்றோர் வழியே பிள்ளைகளும் போகிறார்கள். ஆம். மற்றவர்கள் மேல் கரிசனை கொள்வது நல்லது. அதே வேளையில் நம்மைக் குறித்தும் தேவையான அளவு கரிசனை வேண்டும்.

உயர்ந்த கருத்துக்களை மனிதன் காதலிக்கிறான்.
கரம் பிடிக்கச் சொன்னாலோ நைசாக நழுவி விடுகிறான்.

நன்மை செய்ய வேண்டும்

யாத்திராகமம் - 15:1-18

இரண்டு அங்கிகளை உடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக் கடவன். – லூக்கா 3:11

லூக்கா – 3:6-17

இரயில் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு பெண் தண்ணீர் தண்ணீர் என்று ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்த தன்னுடைய சிறுவயது மகனைப் பொறுத் திருக்கச் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டாள். அடுத்த ஸ்டேஷனில் வண்டி நிற்கும் வரை தண்ணீர் வாங்க முடியாது. அதுவரை மகனை அமைதிப்படுத்துவது அவளுக்குக் கடினமாயிருந்தது. ஆனால் அந்தப் பெண்ணிற்கு அருகில் அமர்ந் திருந்த சக பயணி 3 தண்ணீர் பாட்டில்கள் வைத்திருந்தாள். ஆனால் இந்த சின்னப் பையனுக்கு கொஞ்சம் தண்ணீர் கொடுத்து உதவுகின்ற தூண்டுதல் அவளுக்கு வரவில்லை.

சிலர் மற்றவர்களின் வாழ்க்கையில் என்ன நிகழ்ந்தாலும் அதற்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என நினைக்கின்றனர். பிறருடைய கஷ்டமோ, வறுமையோ, வேதனையோ, அங்கலாய்ப்போ, நெருக்கடியோ அவர் களைச் சற்றும் தொடாது. பிறருடைய துன்பங்களை சற்றாகிலும் உணர்ந்து பார்க்கும் உணர்ச்சி சற்றும் இராது.

திருச்சபையாக நாம் கூடிவருவதின் முக்கியமானதோர் நோக்கம் பிறர் மேல் அன்பு காட்டவும், அவர்களுக்கு ஏதாவது நல்லதைச் செய்யவும் தேவையான தூண்டுதல்களைப் பெறுவதும் ஆகும். ஆனால் இன்றைய திருச்சபைகள் வெறும் ஆராதனை மையங்களாக மட்டும் செயல்படுகிறது. எனவே “வந்தோமா, கடவுளை ஆராதித்தோமோ, போனோமா” என்ற சிந்தையே பலரிடம் உள்ளது. மற்றவர்களின் வாழ்க்கையில் என்ன நிகழ்ந்தாலும் அது அவர்களின் பாடு என்ற எண்ணமே மேலோங்கியுள்ளது.

கிறிஸ்தவ மக்கள் ஆராதிப்பதற்காக மட்டும் அல்ல. ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட சபையின் நோக்கமறிந்து வர வேண்டும். காணிக்கை தாராளம் மட்டும் போதாது. பிறருக்கு எதையாவது ஆக்கப் பூர்வமாகச் செய்து உதவுகின்ற சிந்தனை வேண்டும். பரிசுத்த ஆவியால் நடத்தப் படுகின்ற உண்மை கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவுக்குள் இருந்த சிந்தை இருக்கும். அவர்கள் இயேசு கிறிஸ்துவைப் போல் நன்மை செய்கின்ற மனோபாவத்தை கிறிஸ்தவ குணமாகக் கொண்டிருப்பார்கள். நாம் நன்றாக உடுத்துக் கொண்டு நாலு பேரின் கவனத்தை ஈர்ப்பதில் அல்ல. ஒரு நல்ல உடை, உணவு, உறைவிடம் இல்லாதவர்களின் துயரநிலை நம்முடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். அதுதான் கிறிஸ்தவத்தை வாழ்ந்து காட்டுதல். அதுதான் உண்மைக் கிறிஸ்தவராயிருப்பதை அடையாளப்படுத்துதல்.

மனித தயவுதேவை. ஆனாலும் தேவதயவையே நம்பியிரு. அப்போது மனித தயவு தானாக வரும்.

பொருளாதார ஆசீர்வாதம்

ஏசாயா - 55:1-13

ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும்... லூக்கா.12:15

லூக்கா - 12:13 -21

ஆவிக்குரிய நன்மைகள் மட்டுமன்றி, தேவன் நமக்குப் பொருளாதார ஆசீர்வாதங்களையும் அளிக்கக் கிருபை உள்ளவராயிருக்கின்றார். பொருளாதார ஆசீர்வாதங்கள் என்றால் தேவன் நமக்கு பெரிய அளவில் செல்வங்களை அளிப்பது என்று எண்ணிவிடக் கூடாது. நமக்குத் தேவையான செல்வங்களை அளிப்பதுதான் பொருளாதார ஆசீர்வாதம். நம்முடைய அடிப்படைத் தேவைகள் என்னவென்பதை அறிந்த தேவன், அவைகளைத் தருவதற்கு உண்மையுள்ளவராயிருக்கின்றார்.

நம்முடைய அடிப்படைத் தேவைகள் இன்னவென்பதை நாம் அறிந்து கொண்டோமானால், நாம் அதிகச் செல்வங்களுக்காக ஆர்வப்படுவது ஒரு ஆசையால்தானேயன்றி, அவசியமானது என்பதற்காக அல்ல என்பதைப் புரிந்து கொள்வோம். அதிகமாகப் பணம் இருந்தால் வாழ்க்கையில் பாதுகாப்புணர்வும், செழிப்புணர்வும், சந்தோஷமும் பெருகும் என்பது பொதுவான மனித சிந்தனை.

ஆனால் உண்மையான பாதுகாப்புணர்வும், மகிழ்ச்சியும், செழிப்புணர்வும், தேவ ஐக்கியத்தினால் மட்டுமே வரும் என்பது உண்மை. தேவன் நமக்கு மிகுந்த செல்வங்களைத் தருகின்றபோது நம்மையறியாமலே நாம் அவைகளின் மேல் நம்முடைய நம்பிக்கையையும், சார்புத்தன்மையையும் வைத்து விடுகிற அபாயம் உண்டு. அதன் விளைவாக தேவஐக்கியம் நாடும் நம்முடைய நிலைகள் படிப்படியாகக் குறைந்து, தேவன் இல்லாமலே வாழ்க்கையை நடத்த முடியும் என்பது போன்ற ஒரு மாயைக்குள் சென்று விட முடியும்.

தேவன் தம்முடைய ஐக்கியத்தினாலன்றி, வேறெந்த உலகச் செல்வங்களாலும் மனிதனை மிகுதியாக மகிழ்ச்சியாக்க முடியாது. தேவ ஐக்கியத்திற்குப் பதிலாக மனிதன் தேவனிடமிருந்து வேறு எந்த ஆசீர்வாதங்களைப் பெற்றாலும் அவைகளால் அவன் திருப்தியடைய மாட்டான். தேவ உறவினால் வரும் மகிழ்ச்சியையும், மனநிறைவையும் கண்டுவிட்ட மனிதன் பொருளாதார நிலையில் நலிந்து காணப்பட்டாலும், வசதி வாய்ப்புகளில் குறைந்து காணப்பட்டாலும், அவன் தன் இருதயத்தில் பிறரைவிட அதிக நிறைவுடையவனாகவே இருப்பான்.

தேவன் தம்மோடுள்ள ஐக்கியத்தினால் மட்டுமே மனிதன் பாதுகாப்புணர்வையும், சந்தோஷத்தையும் நிறைவாக அடைய முடியும் என்று அறிந்திருப்பதால் அவன் தம்மைத் தேடத்தக்க ஒரு தேவை நிலையிலேயே இருக்கும்படி செயல்படுகிறார். எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் “போதும்” என்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்” என்று இளம் ஊழியக்கரனாகிய தீமோத்தேயுவுக்கு ஆலோசனையாக எழுதினான் (1தீமோ 6:6). தேவனோடுள்ள ஐக்கியத்தின் அவசியத்தை நாம் நன்குணர்ந்து, ஆர்வத்தோடு அதைத் தேடும்போது தேவன் நம்முடைய அடிப்படைத் தேவைகளைக் குறைவுபடாமல் தந்து நடத்துவது நிச்சயம்.

செல்வம் கொஞ்சமாயிருந்தால் நீ எஜமானாயிருப்பாய், அதிகமாகி விட்டாலோ அதற்கு அடிமையாகி விடுவாய்.

அன்பு இல்லாத பரிசுத்தம்

ஏசாயா – 40:1–11

இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார். – லூக்கா 19:7

லூக்கா–19:1–10

குறிப்பிட்ட ஒரு திருச்சபையினர் நல்ல கிறிஸ்தவர்கள். அவர்கள் எல்லாரையும் போல இராமல் உண்மை, நேர்மை, நீதி, நியாயம், போன்ற ஒழுங்கு முறைகளுக்கு மதிப்பளித்துச் செயல்பட்டனர். வேதாகம சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதிலும் அவர்கள் நல்ல முனைப்புக் காண்பித்தார்கள். ஆனால் அந்த சபை வளரவில்லை. அங்கு செல்லுகின்றவர்கள் விரைவில் திரும்பிச் சென்று விடுவார்கள். ஏனென்றால் அவர்களால் பாவிகளை ஏற்றுக் கொள்ளவோ விரும்பவோ முடியவில்லை. அவர்கள் தங்களைப் போன்ற ஒழுங்கு மிக்கவர்களை வெகுவாகப் பாராட்டினார்கள். அவ்விதம் இல்லாதவர்களை மிகுதியாக விமர்சித்தனர். அவர்களுக்கு மன்னிக்கும் பண்பு இல்லை. பாவம் செய்தவர்களை நேசிக்கவும், குறைவுபட்டவர்களைப் பொறுத்துக் கொள்ளவும் அவர்களால் இயலவில்லை.

நாம் நல்ல கிறிஸ்தவர்களாக மட்டுமல்ல. அன்புள்ள கிறிஸ்தவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் ஒழுங்கு மிகுந்த கிறிஸ்தவர்களாக மட்டுமல்ல. மற்றவர்களை மன்னித்து மனதார ஏற்றுக்கொள்ளும் பக்குவமுள்ள கிறிஸ்தவர்களாகவும் விளங்க வேண்டும். நாம் பரிசுத்தவான்களைக் கௌரவிக்கும் கிறிஸ்தவர்களாக மட்டுமல்ல. பாவிகளின் பலவீனங்களுக்காகப் பரிதாபப்படும் கிறிஸ்தவர்களாகவும் விளங்க வேண்டும்.

பலவிதமான மதஒழுங்குகளில் சரியாயிருந்த பரிசேயர்களால் சகேயு போன்றவர்களின் மனமாற்றத்தைக் கண்டு மகிழ இயலவில்லை. இயேசு மகா பரிசுத்தராயிருந்தும் பாவி என்ற பட்டப்பெயர் பெற்ற சகேயுவின் வீட்டிற்குச் செல்லத் தயங்கவில்லை. ஏனென்றால் அவருடைய பரிசுத்தம் என்பது அன்புடன் கலந்த பரிசுத்தம். அவருடைய பரிசுத்தம் என்பது மன்னிக்கும் மனநிலையை உள்ளடக்கிய பரிசுத்தம். கெட்ட குமாரனின் சகோதரன் ஒழுங்குமிக்கவன். ஆனால் உண்மை அன்பு கொண்டவன் அல்ல. எனவே தன்னைப் போல இல்லாத சகோதரனை நேசிக்காமல் பொறாமைப்படத்தான் முடிந்தது.

நாம் நல்லவர்களா கெட்டவர்களா என்பதை சில நல்ல ஒழுங்குகளை வைத்துக் கணக்கிட முடியாது. அன்பு, தாழ்மை, மன்னித்தல், ஏற்றுக்கொள்ளுதல், தாங்குதல் போன்ற நற்பண்புகளோடு இணையாத எந்த நல்லதும் தேவனுடைய பார்வையில் கெட்டதே. சரியானவர்களாக மட்டுமல்ல, அன்பானவர்களாகவும் அறியப்பட வேண்டும்.

இன்னொரு மனிதனை மனிதனாக எண்ணி நடத்துகின்றவன் தனக்குள் மனிதம் இருப்பதை உறுதிப்படுத்துகிறான்.

குறைந்த மதிப்பீடு

உபாகமம் - 7:11-26

பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க...
எபே.6:11

எபேசியர் - 6:10-24

சென்றவிடமெங்கும் வெற்றிகண்ட ஜெர்மனிய ஹிட்லர், இறுதியாக ரஷ்யாவையும் எளிதாகக் கைப்பற்றி விடலாம் என்று மனக்கணக்குப் போட்டான். ஆனால் அவனுடைய கணக்கு தப்புக் கணக்கானது. ரஷ்யாவைக் கீழ்ப்படுத்த முடியாமல் போனதோடு, தன்னுடைய அனைத்துத் திட்டங்களும் தவிடுபொடியாகிப் போனதைக் கண்டான். உலகத்தை ஆட்டிப்படைக்கலாம் என்ற தன்னுடைய எண்ணத்திற்குத் தொடர்ந்து கிடைத்த வெற்றிகள் யாவும் கணப் பொழுதில் காணாமல் போய்விட்டதை ஹிட்லர் உணர்ந்தான்.

நமக்கு எதிரான விஷயங்களையும், பிரச்சினைகளையும் எளிதாக மேற் கொள்ளலாம் என்ற விசுவாசம் சார்ந்த தைரியம் தேவையே. அதே வேளையில் எதிராளியைக் குறைத்து மதிப்பிட்டு விடுவது தோல்விகளுக்கு வழிவகுக்கும். ஒரு நல்ல படைத்தளபதி, தான் எதிர்க்க வேண்டிய படையைக் குறித்தும், படைத்தளபதி யைக் குறித்தும் சாதாரண எண்ணங் கொண்டிருந்தால், போதிய எச்சரிக்கையும், ஆயத்தமும் இல்லாமல் தோல்வி அடைய நேரிடும்.

நாம் சாத்தானைச் சாதாரணமாக எண்ணி விடக்கூடாது. அவன் கொண்டு வரும் சோதனைகளையும் பலவித இச்சைகளையும், பாவச் சூழ்நிலைகளையும் குறைத்து மதிப்பிட்டு அசட்டையாக இருந்து விடக்கூடாது. பண ஆசை, பொருளாசை, புகழாசை, பாலியல் இச்சைகள் போன்ற பல பாவத்தன்மை வாய்ந்த விஷயங்கள் மிக எளிதாக மேற்கொள்ளத்தக்கவைகள் அல்ல. அவற்றைத் துரத்தி விடுவது என்பது வெறும் விசுவாச வார்த்தைகளால் ஆகிவிடுகிறவைகள் அல்ல. அங்கே நாம் வலிமையான ஒரு யுத்தத்தைச் செய்தால்தான் ஜெயம் பெற முடியும்.

யாராலும் வெல்ல முடியாது என்று கருதப்பட்ட அரக்கனாகிய கோலியாத்தை கவண்கற்களாலே வீழ்த்தி, தன்னை மாபெரும் வீரனாக தேசத்திற்கு முன்பாக நிலைநிறுத்தினான் தாவீது. ஆனால் அதே தாவீது பத்சேபாளின் அழகைக் கண்ட மாத்திரத்தில் தன்னுடைய அனைத்து மேன்மை நிலைகளையும், மறந்து, அற்ப மனிதன் போல் மாறி, தன் வாழ்க்கையைக் கறைபடுத்தினான். "உலக அழகிகள் எல்லாம் ஒன்றாய் வந்தால் கூட அபிஷேகம் பெற்ற என்னைச் சற்றும் அசைக்காது" என்று விசுவாச வார்த்தை பேசித்திரிந்த ஒரு இளம் ஊழியர் ஒரு நாள் மிகச்சாதாரண தோற்றமுடைய ஒரு கவர்ச்சியற்ற பெண்ணிடம் தன்னுடைய பரிசுத்தத்தை இழந்து போனார். ஆம். எந்த அளவிற்குப் பரிசுத்தத்திற்கு எதிரான சோதனைகளை நாம் சரியாகக் கணக்கிடுறோமோ, அந்த அளவிற்குத்தான் ஜெபம், தியானம், தேவ ஐக்கியம் என அதிகமாக நம்மை ஈடுபடுத்தி, ஜாக்கிரதை யோடும், போதிய பலத்தோடும் யுத்தம் செய்ய முடியும்.

மனிதனுக்கு இன்னொருவரால் வரும் தீங்குகளை விடத் தன்னால் தனக்கு நேரிடும் தீங்குகள்தான் அதிகம்.

டிசம்பர் 11

குணங்கள் ஏன் மாறவில்லை?

எரேமியா – 13:15-27

சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக் கூடுமோ. – எரேமியா – 13:23

எபிரெயர் – 3:7-19

நல்லவர் ஒருவர் ஒரு மனிதனுக்கு ஏராளம் நல்ல உதவிகளைச் செய்தார். அதன் மூலம் அந்த மனிதன் அந்த நல்ல மனிதர் விரும்பும் குணங்களையும், பண்புகளையும் கொண்டவனாக மாறுவான் என அவர் எதிர்பார்த்தார். ஆனால் அந்த மனிதன் தனக்குச் செய்யப்பட்ட பல நல்ல உபகாரங்களுக்காக நன்றி மிக்கவனாயிருந்தும், அவனுடைய பண்புகளிலும், மனநிலைகளிலும் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை.

ஒரு தவறான சுபாவநிலையும், செயல்களையும் உடைய ஒரு மனிதனிடத்திலிருந்து சில உதவிகளை ஒருவன் பெற்றால் அந்தத் தவறான மனிதனுக்கொத்த தவறான குணங்களை உடையவனாக இவனால் எளிதாக மாற முடியும்.

ஆனால் நல்ல மனிதனிடம் உள்ள பண்புகளையோ தனக்குள் பெற முடியாது. ஏனென்றால் தீமை செய்யும் இருதயம் மனிதனுக்கு இயற்கையாகவே உள்ளது. நல்லதைச் செய்யும் இதயமோ தேவனால்தான் கொடுக்கப்பட முடியும். ஒரு மனிதன் நல்ல பண்புகளை உருவாக்கிக் கொள்ள இயலாத படி அவன் இயற்கையாகவே பாவத்திற்கு அடிமையாயிருக்கின்றான்.

சிலர் தங்களின் வேலைகளிலும் சிலர் தங்களின் வியாபாரங்களிலும் தேவன் விசேஷ அற்புதம் செய்து தங்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுவார்கள். அதற்காக காணிக்கை தருவார்கள். சாட்சி சொல்வார்கள். ஜெபக் கூடுகைகளில் கலந்து கொள்வார்கள். ஆயினும் அவர்களின் குணங்களிலோ சுபாவங்களிலோ ஆவிக்கேற்ற மாற்றங்களைக் காண இயலாது.

ஏனென்றால் அவர்கள் தேவன் செய்த நன்மைகளுக்குப் பதிலாக தங்களின் பொல்லாத இருதயத்தை மாற்றம் செய்ய இயலாதவர்களாக உள்ளனர்.

மனமாற்றம் என்பதும் குணமாற்றம் என்பதும், ஒரு மனிதனுக்காக தேவன் செய்துள்ள மிகப் பெரிய ஆசீர்வாதமாகிய இரட்சிப்பினை பெற்றுக் கொள்வதின் வாயிலாகவே ஏற்படுகின்றது.

ஏனென்றால் இரட்சிப்பு என்ற நன்மையோடு மட்டுமே தேவ உறவும், தேவ பிரசன்னமும், தேவ வல்லமையும் மனிதனுக்குள் வருகின்றது. அப்பொழுது தான் மனநிலையும், குணநிலையும் மாறும்.

நல்ல செயல்களால் உலகத்தைக் கவரலாம்
நல்ல குணங்களால்தான் இறைவனைக் கவரமுடியும்.

ஜீவ நீரோடை

நல்லதை ஏற்போம்

நீதிமொழிகள் - 13:13-25

தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். - அப். 18:26

அப்போஸ்தலர் - 18:24-28

ஒரு பிரபல பிரசங்கியார் குறிப்பிட்ட ஒரு சபையில் நடந்த கூட்டத்தில் பிரசங்கம் செய்தார். அப்போது அவருடைய பிரசங்கத்தில் வேத வசனம் ஒன்றிற்குக் கொடுத்த விளக்கம் தவறென்பதைக் கண்டறிந்த சபை அங்கத்தினர் ஒருவர் கூட்டம் முடிந்த பின்பு நல்லெண்ணத்தோடு அதனைச் சுட்டிக்காட்டினார். ஆனால் அந்தத் தவறை ஒத்துக்கொள்ள அந்தப் பிரபல ஊழியர் விரும்பவில்லை. நாடெங்கிலும் போய்ப் பிரசங்கம் செய்கிற தனக்கு ஒரு சாதாரண சபை உறுப்பினர் வேத விளக்கம் தருவதா என்ற கௌரவப் பிரச்சினை உண்மையை உணரவிடாமல் அவரைத் தடுத்தது.

நாம் நிறையக் கற்றறிந்திருக்கலாம். நமக்கு மிகுந்த திறமைகளும், புலமைகளும், அனுபவங்களும் இருக்கலாம். ஆனாலும் நம்முடைய கருத்துக்களில், சிந்தனைகளில், புரிந்து கொள்ளுதல்களில், விளக்கங்களில் தவறோ, தப்போ இராது என நாம் எண்ணிவிடக்கூடாது. சில வேளைகளில் நாம் சாதாரண நபர்களிடமிருந்து நல்ல தெளிவுகளையும், கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற முடியும். அங்கே நம்முடைய பெரிய நிலைமையையும், மற்றவர்களின் சிறுமையான நிலமையையும் நாம் முக்கியமாக எண்ணாமல், நல்லதை யார் சொன்னாலும் மனதார ஏற்கும் பண்பினைக் கொண்டிருக்க வேண்டும்.

என்னுடைய ஊழியப்பாதையில் சில சாதாரண விசுவாசிகளிடமிருந்து மிக நல்ல விஷயங்களைக் கற்றுக் கொண்ட அனுபவங்கள் உண்டு. ஒரு சாதாரண சிப்பிக்குள் ஒரு விலையேறப்பெற்ற முத்து இருப்பது போல மிக அற்பமாக எண்ணப்படுகிறவர்களிடம் கூட நமக்கு மிகப் பிரயோஜனமானதும், நாம் அறியாதிருந்ததுமான மிக நல்ல கருத்துக்களையும், உண்மைகளையும் நாம் பெற முடியும். தாழ்மைதான் அங்கு தேவை.

அப்பொல்லோ வேத ஆகமங்களை நன்கு அறிந்தவன். அனல்மிக்க சுவிசேஷப் பேச்சாளர். பிரபலமான ஊழியன். ஆயினும் அவனுடைய பிரசங்கத்தைக் கேட்ட ஆக்கில்லா, பிரிஸ்கில்லா தம்பதியினர் அவனை அழைத்துச் சில வேத விளக்கங்களைக் கொடுத்தபோது, அவன் கௌரவம் பாராமல் கற்றுக்கொள்ள முன்வந்தான். (அப்-18:26) மாபெரும் ஊழியனாகிய மோசேக்கு அவன் மாமனார் கொடுத்த ஒரு சின்ன ஆலோசனை, அவனுடைய பெரிய பாரத்தை பேரளவில் குறைத்தது. ஆம். நாம் எவ்வளவு அறிவும் அனுபவமும் அடைந்திருந்தாலும் நாம் கற்றுத் தெளிவடைய பல விஷயங்கள் உண்டு. ஒரு வேளை அந்தத் தெளிவை சாதாரணமானவர்களிடமிருந்து பெற நேர்ந்தாலும் அதனைத் தாழ்மையாக ஏற்க வேண்டும்.

பிறர் சொன்னதற்காக உண்மையை மறுக்காதே.
பிறருக்காக உண்மையை மறைக்கவும் செய்யாதே.

சிலுவைக்கு முக்கியத்துவம்

எரேமியா - 7:1-15

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை
1 கொரி.-1:23

1 கொரிந்தியர்-1:18-31

ஒரு குடும்பத்தார் தங்களிடம் வருகின்ற விருந்தினருக்கு உணவு பரிமாறுவதற்காக அழகான டின்னர் செட் ஒன்றை வாங்கி வந்தனர். வாங்கிவந்த பிறகு அவற்றின் மிக அழகான தோற்றம் அதனை உபயோகிப்பதற்கு பதிலாக ஷோகேசில் வைத்து அழகு பார்க்கத் தூண்டியது. கண்ணாடி அலமாரியில் அவற்றை அழகாக அடுக்கி வைத்த போது அங்கு வருவோரும் போவோரும் அவற்றைப் பார்த்து ரொம்ப நல்லாயிருக்கிறதே என்று பாராட்டிக் கொள்வார்கள். அந்தப் பாத்திரங்களின் நோக்கத்தை விட, அவற்றின் தோற்றமே அவர்களுக்கு மிக முக்கியமாக மாறிப்போனது.

நம்முடைய சபைகளிலும், வீடுகளிலும் ஆவிக்குரிய சூழ்நிலைகளிலும் சிலுவை என்ற அடையாளம் மிக முக்கிய விஷயமாயுள்ளது. சிலுவை என்ற அடையாளத்திற்கு கிறிஸ்தவ நம்பிக்கை உடைய எவரும் மிக அதிகமான கனத்தைக் கொடுக்கின்றனர். அதனை ஒரு புனிதச் சின்னம் என்றும், பரிசுத்தமான அடையாளம் என்றும் எண்ணுகின்றனர். ஆனால் சிலுவை என்ற அடையாளத்திற்கு கிடைத்த வானளாவிய மரியாதையில் எவ்வளவு சிலுவை ஞாபகமூட்டும் உண்மைக்குக் கொடுக்கப்படுகிறது என்பது முக்கியமான கேள்வி.

சிலுவை இயேசு நமக்காக அனுபவிக்க நேரிட்ட அவமானத்தை ஞாபகமூட்டும் ஒரு அடையாளம். சிலுவை நம்முடைய பாவங்களுக்காக இயேசு எவ்வளவாய் வேதனையடைய நேர்ந்தது என்பதை நினைவூட்டும் ஒரு சின்னம். சிலுவை பாவம் ஏற்படுத்திய சாபத்தை நம்மை விட்டுத் தூரமாக்கிட இயேசு அதனை ஏற்றுக் கொண்டதை நமக்குச் சொல்லிக் காட்டுகின்ற ஒரு சின்னம்.

நம்முடைய பாவங்களுக்காக இயேசு ஏற்றுக்கொண்ட சாபம், வேதனை, அவமா னம் ஆகியவற்றைத் திரும்ப, திரும்ப நமக்கு நினைவூட்டி நம்மிடமிருந்து நல்ல மாற்றங்களை உருவாக்குவதே சிலுவை அடையாளத்தின் நோக்கம். ஆனால் பலரால் அது புனிதமாகவும், பரிசுத்தமாகவும், ஆசீர்வாதமாகவும் பார்க்கப்பட்டு அதிக மரியாதையைப் பெறுகின்றது. ஆனால் சிலுவை நினைப்பூட்டும் உண்மைகளை உணர்ந்து வாழ்க்கையைப் புனிதமாக்கும் அனுபவத்திற்கு வரவில்லை.

சிலுவை அடையாளத்தைக் கனத்திற்குரியதாக எண்ணுவதல்ல. சிலுவையின் மூலம் இரட்சிப்புண்டாக்கிய கர்த்தரை உரிய விதமாகக் கனப்படுத்துவதே தேவையானது.

வேதத்தை நீ சிந்திக்கும் போதெல்லாம் இறைவன்
உன் இதயத்தைச் சந்தித்துக் கொண்டேயிருக்கிறார்.

ஐக்கியம் அவசியம்

யாத்திராகமம் - 33:11-23

நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அறிவீர்கள்... யோவான் 14:20

யோவான் - 14:13-27

தேவ ஐக்கியம் என்ற வார்த்தையை அளவிற்கு அதிகமாக எழுதவும், பேசவும் செய்துவிட்டேனோ என்று சில நேரங்களில் நான் எண்ணுவதுண்டு. இந்த வார்த்தையைத் திரும்ப, திரும்ப நான் உபயோகிப்பதைப் பார்த்து, யாராவது, "என்ன இவர் எந்தக் கருத்தை சொல்ல வந்தாலும் தேவஜக்கியம் என்ற வார்த்தையை மட்டும் தவறாமல் சொல்லுகிறாரே" என்று நினைப்பார்களோ என்றும் எண்ணுவதுண்டு. நான் தவிர்க்க நினைத்தாலும் அது இயலாத விஷயம். ஏனென்றால் தேவ ஐக்கியம்தான் ஆவிக்குரிய வாழ்க்கையின் உயிர் மூச்சு, முதுகெலும்பு, மின்சாரம் யாவுமே. அனைத்து ஆவிக்குரிய அனுபவங்களும் தேவ ஐக்கியம் என்ற அனுபவத்திலிருந்துதான் பிறக்கின்றன. அனைத்து ஆவிக்குரிய வல்லமைகளும், செயல்பாடுகளும், நம்பிக்கைகளும், நற்குண விளைவுகளும் அங்கிருந்தான் தோன்றுகின்றன.

வேத பிரமாணங்கள் யாவற்றையும் கரைத்துக் குடித்தாலும், பல நாடுகள் சென்று பல இறையியல் பட்டங்கள் பெற்றாலும், பலவித பெருமை மிக்க மதத் தலைமைப் பொறுப்புகளில் இருந்தாலும், ஒரு தனி நபருக்கு தேவனோடு ஐக்கியம் என்பது இல்லையேல் அவை யாவும் எந்தப் பயனும் இல்லாத பூஜ்யங்களே. அநேகர் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டார்கள். கிறிஸ்துவையோ ஏற்றுக் கொள்ளவில்லை. பலர் கிறிஸ்துவின் போதனைகளை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் போதனைகளைத் தந்தவராகிய கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை. அநேகர் கிறிஸ்துவை ஆராதிக்கின்றார்கள். ஆனால் அவரோடு ஐக்கியமடைய வில்லை.

நாம் கிறிஸ்தவப் போதனைகளையும், ஆராதனை முறைகளையும் கடைப் பிடித்து, கிறிஸ்தவப் பண்புகளைக் கைக்கொள்ளப் பிரயாசப்பட்டு, இப்படியாக ஒரு ஆன்மீக வாழ்க்கை வாழலாம். ஆனால் இது உண்மையான கிறிஸ்தவ அனுபவம் அல்ல. நாம் கிறிஸ்தவப் போதனைகளை ஏற்றுக் கொள்வதற்காக மட்டும் தேவன் நம்மை அழைக்கவில்லை. முதலாவது கிறிஸ்துவையே ஏற்றுக் கொள்ள அழைக்கப்பட்டோம். அவ்விதம் ஏற்றுக்கொண்டு, ஐக்கியம் ஆகும் போது, அதனுடைய பிரதி விளைவுகளாக கிறிஸ்தவ நெறிமுறைகளும், போதனைகளும் நம்மிடம் வெளிப்படுவதே கிறிஸ்தவ அனுபவம்.

அநேகருக்கு கிறிஸ்தவப் போதனைகளோடு ஏற்பட்ட ஆழமான பழக்கம், கிறிஸ்துவோடு ஏற்படவில்லை. எனவேதான் அவர்களால் போதனைகளையும், நெறிமுறைகளையும் அறிந்த அளவிற்கு அவைகளின்படி வாழ்ந்து கனி கொடுக் கும் அனுபவத்தைக் காண முடியவில்லை. நாம் கிறிஸ்துவின் போதனைகளைக் கடைப்பிடிப்பதற்கு மட்டுமே முழுக் கவனமும் செலுத்தாமல், போதகராகிய கிறிஸ்து வோடு உறவாடுவதற்கும், ஐக்கியமாவதற்கும், அவர் நம்மோடிருப்பதை ஆவியில் அடையாளங் காண்பதற்கும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

சிந்திக்கும் முன்பு செயல்படுகிறவன் முட்டாளாகின்றான். சிந்தித்த பின்பும் செயல்படாதவன் சோம்பேறியாகிறான்.

சுத்தம் ஒழுங்கு

நீதிமொழிகள் 12:1-15

புத்திமதிகளை விரும்புகிறவன் அறிவை விரும்புகிறான் – நீதி–12:1

லூக்கா-15:1-10

சபை கூடி வரும் ஜனங்களுக்கு வேதாகம பக்தி விஷயங்களை மட்டுமே போதித்தால் போதாது. வேறு பல விஷயங்களிலும் அவர்களுக்கு ஆலோசனை களும், போதனைகளும் தேவை. பலர் பரிசுத்தம் தொடர்பாகப் பல பிரசங்கங்கள் கேட்பதை பக்தி என எண்ணுகின்றனர். ஆனால் இவர்களுக்குக் கழிவறை, குளியலறை, முகம் அலம்பும் கோப்பை, சமையலறை, போன்ற இடங்களை எப்படிச் சுத்தமாக வைக்க வேண்டும் என்ற போதனைகளும் தேவை.

சிலர் குளியலறையில் விழுந்து கையை காலை உடைப்பதற்கு முக்கியக் காரணம் குளியலறையை அவ்வப்போது கழுவி, சறுக்கி விழுவதற்கான வாய்ப்பைத் தவிர்க்காததே ஆகும். சிலர் முகம் அலம்பும் கோப்பையை (Wash Basin) மாதத் திற்கு ஒரு முறை கூடக் கழுவுவதில்லை சிலருக்குக் கழிவறையை உபயோகித்த பின்பு, அடுத்து உபயோகிக்கப் போகிறவர் முகம் சுளிக்காத படிக்குப் போதிய அளவு தண்ணீர் பயன்படுத்தும் பழக்கமோ அல்லது வேறு நவீன முறைகள் இருந்தால் அதனை பயன்படுத்தும் பழக்கமோ இல்லை. சிலருடைய சமயலறை வியாபார உணவகங்களிலுள்ள சமையலறையைவிடப் படுமோசமாயிருக்கும்.

துணிகளைப் போட வேண்டிய இடத்தில் போடாமல் கட்டிலில் சிதறிக் கிடக்க விடுவதும், செயர்களிலும் மேசைகளிலும் போட்டு வைப்பதும் எவ்வளவு அலங் கோலம். சிலர் எந்த நாற்காலிக பொருளைக் கண்டாலும் அதனை வாங்கி வந்து விடுவார்கள். ஆனால் எதையும் முறையாக அழகாக ஒழுங்குபடுத்தி வைக்கத் தெரியாது.

தினசரி பத்திரிகைகளைத் தாறுமாறாகக் கண்ட இடத்திலும் போட்டு வைத்தல், புத்தகங்களைப் படித்துவிட்டு அங்கேயே வைத்து விட்டு வருதல், சாப்பாட்டு மேசையைத் தேவையற்ற பொருட்களையெல்லாம் சுமக்கும் கழுதையாக்குதல், ஒரு முறை போட்ட கார்ட்டன்களை ஒரு தலைமுறைக்கும் கழற்றாமை, சாப்பிட்ட பாத்திரங்களை அப்படியே குவித்துப் போடுதல் போன்ற பழக்கங்களைப் பரிசுத்தம், ஒழுங்கு, கிரமம், என பல பக்திக் காரியங்களைக் கேட்கும் கிறிஸ்தவர்கள் தவிர்க்க வேண்டும். இது குறித்த காரியங்களை சபை பாஸ்டர்கள் அடிக்கடி பேச வேண்டும்.

சுத்தத்தையும் ஒழுங்கையும் விரும்பும் ஒரு நபர் திடீரென நம்முடைய வீட்டிற்குள் வந்து இவற்றையெல்லாம் பார்க்க நேரிட்டால் எப்படியிருக்கும் என்ற விழிப்புணர்வு அவசியம். நம்முடைய கண்கள் காண இயன்ற சூழ்நிலைகளை சுத்தமாகவும், ஒழுங்காகவும், அழகாகவும் பார்க்கும் ஆசை வேண்டும். அப்படி இல்லையேல் நம்முடைய கண்கள் காண இயலாத இதய வீட்டை எப்படி ஒழுங்காக வைக்கும் ஆசை ஏற்படும்?

நன்மையைத் தேடிச் சென்று செய்யக் கற்றுக்கொள்
இல்லையேல் தீயவை உன்னைத் தேடி வந்து பற்றிக்கொள்ளும்.

தேவ மகிமையைத் தேடாமல்

ஜீவ நீரோடை

உபாகமம் - 11:19-32 | **எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை...** **லூக்கா 11:3** | லூக்கா-11:1-13

தினமும் நாம் தேவனுடைய மகிமையையும், அவருடைய அரசாட்சியையும், அவருடைய சித்தத்தையும் நம்முடைய வாழ்க்கையில் தேடும்போது அந்தந்த நாளுக்குத் தேவையான ஆகாரமாகிய அனுதினத் தேவைகளையும் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறோம். இதுதான் பரமண்டல ஜெபம் நமக்குக் கற்றத்தரும் முக்கியமான பாடம்.

ஆனால் வாழ்வில் தேவன் கனமடைய வேண்டும். அவருடைய ஆளுகை நம்முடைய வாழ்க்கை முறையில் விளங்க வேண்டும். அவருடைய சித்தம் நம் வாழ்க்கையில் செயல்படவேண்டும். இந்த மேலான நோக்கங்களின் நிறைவேறு தல்கள்தான், நாம் தினமும் முக்கியமாகத் தேட வேண்டிய விஷயங்கள். இந்த ஆவிக்குரிய உணர்வு அநேகரிடம் இல்லை. எனவே அனுதின தேவைகளைக் குறிக்கும் அன்றன்றுள்ள அப்பத்தைக் குறித்த வேண்டுதல் கேட்கப்படாமல் போகிறது. ஏனென்றால் இதுவே அவர்களது முக்கியமான வேண்டுதலாக மாறி விட்டது.

என் மகிமையைத் தேட வேண்டிய உணர்வைப் பெறாத உனக்கு... என் அரசாட்சியை ஏற்றுக்கொள்ளாத உனக்கு... என் சித்தத்தைச் செய்யும் சிரத்தை யில்லாத உனக்கு... நான் ஏன் அப்பம் தந்து ஆதரிக்க வேண்டும்? என்று தேவன் கேட்டு விடுவாரோ என்ற அச்ச உணர்வு நமக்கிருந்தால் அது நமக்கு நல்லது. வேதாகமத்தில் மனதைத் தொடுகிற வரிகளை அடிக்கோடிடும் பழக்கமுடைய ஒருவருடைய வேதாகமத்தில் அன்றன்றுள்ள ஆகாரத்தை எங்களுக்குத் தாரும் என்ற வரி மட்டும் அடிக் கோடிடப்பட்டிருந்தது. பரமண்டல ஜெபத்தின் வேறெந்த வரி யும் அடிக்கோடிடப்பட வேண்டிய தகுதியைப் பெற்றிருப்பதை அவர் காணவில்லை.

நாம் ஜெபிக்க ஆரம்பித்தால் தேவைகளைத்தான் பட்டியலிடுகிறோம். நாம் உபவாசிக்கச் சென்றால் தேவைகளுக்காகவே உபவாசிக்கிறோம். நாம் விசுவா சிக்க விரும்பினால் நாம் எதிர்பார்க்கும் நன்மைகள் கிடைப்பது தொடர்பாகவே விசுவாசிக்கின்றோம். நாம் சோர்ந்து போய்ப் புலம்ப ஆரம்பித்தால், நாம் கேட்டபடி நன்மைகளை தேவன் தராமல் போனதற்காகவே சோர்ந்து போய்ப் புலம்புகிறோம். ஏனென்றால் “அன்றன்றுள்ள ஆகாரம்” என்பது மட்டுமே நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் அடிக்கோடிடப்பட்டு முக்கியத்துவம் பெறும் விஷயமாயிருக்கின்றது.

நம்முடைய வாழ்க்கையில் தேவன் மகிமைப்பட வேண்டியதும், அவருடைய ஆளுகை செயல்பட வேண்டியதும், அவருடைய சித்தம் நிறைவேற வேண்டியதும் தான் முதன்மையான தேவைகள் என உணரும் வெளிப்பாடு வேண்டும். அந்த வெளிப்பாடு இல்லாத வரைக்கும், நம்முடைய ஜெபங்களும், உபவாசங்களும், விசுவாசங்களும் தேவ நன்மைகளை நமக்குக் கொண்டு வரச் சக்தியற்றவையே. தேவனுக்குரியவைகளைத் தேடிப் பெறும் வாஞ்சையுடையவன், தனக்குரிய வைகளை தேடாமலே பெறுகிறான்.

நல்ல கருத்துக்களைக் கேட்டு கைத்தட்டிக் கொண்டிராதே அவைகளைக் கடைப்பிடிக்கக் கற்றுக்கொள்.

அன்பும், மரியாதையும்

சங்கீதம் 51:10-19

நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?
யோவான் 21:16

யோவான் - 21:14-25

ஒரு முக்கியமான நிகழ்ச்சிக்கு ஒரு நல்ல போதகரும் வந்திருந்தார். ஒரு மோசமான அரசியல் தலைவரும் வந்திருந்தார். நல்ல போதகரைக் கண்டதும் எல்லோரும் புன்னகைத்தனர். மோசமான அரசியல் தலைவரைப் பார்த்ததும் எல்லோரும் எழுந்து நின்றனர். அதைப் பார்த்த ஒருவர் அந்த நல்ல போதகரிடம் "ஒரு மோசமான அரசியல் தலைவரைக் கண்டதும் எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்களே, உங்களை அது போல ஏன் மதிக்கவில்லை என்று கேட்டார். எனக்கு அவர்கள் புன்னகையின் மூலம் அன்பைத் தெரிவித்தனர். அவருக்கு எழுந்து நின்று மரியாதையை செலுத்தினர். மரியாதையை விட அன்பு பெரியது. நான் சாகும் வரை அன்பைப் பெற முடியும். இவர் சாகும் வரை மரியாதையைத் தக்கவைப்பது கடினம் என்றார்.

பணம், ஆள்பலம், அறிவுத்திறன், அதிகாரம், அந்தஸ்து, ஆகியவை பிறருடைய மரியாதையைக் கட்டாயப்படுத்திப் பெற்றுவிடும். ஆனால் நற்குணங்களும், நற்பண்புகளும், நன்நடத்தைகளும், நற்செயல்களும் உண்மையான அன்பைப் பெற்றுத்தரும். நம்முடைய வலிமையான பின்னணியால் மரியாதையைப் பெறுவதைவிட, நம்முடைய நற்குண பின்னணியால் அன்பைப் பெறுவதுதான் மேலானது. நமக்கு மரியாதையைத் தேடித் தரும் விஷயங்களையல்ல, நல்ல அன்பைத் தேடித் தரும் விஷயங்களைத்தான் நாம் தேட வேண்டும்.

ஹிட்லருக்கு முன்பாக ஒரு காலத்தில் ஜெர்மானிய மக்கள் பயந்து நடுங்கினார்கள். ஆனால் இன்று ஜெர்மானியர்களால் மதிக்கப்படும் தலைவர்களின் பட்டியலில் ஹிட்லரின் பெயர் இல்லை. மகாத்மா காந்தியை இந்திய மக்கள் நேசித்தனர். இன்றும் இந்திய மக்களின் அதிக மரியாதைக்குரிய தலைவர் மகாத்மா காந்தியே.

தேவனும் தமக்கு மரியாதை செலுத்தும் மக்களையல்ல. தம்மை உண்மையாய் நேசிக்கும் மக்களையே விரும்புகின்றார். மரியாதை தேவனுக்கு நல்லதோர் ஆராதனையைக் கொடுக்கும். உண்மையான அன்பே அவருடைய வழிகளில் நடந்து அவரைக் கனப்படுத்தத் தூண்டும்.

பேதுருவிடம் இயேசு என்னை மதிக்கின்றாயா என்று கேட்காமல் என்னை நேசிக்கின்றாயா என்றுதான் கேட்டார். இன்றைய கிறிஸ்தவர்களில் அநேகர் இயேசுவுக்காக எழுந்து நின்று மரியாதை செலுத்துகின்றவர்கள். ஆனால் அன்பினால் தூண்டப்பட்ட புன்னகை அங்கே இல்லை.

கடவுளிடமிருந்து நீ எதையாவது பெற்றதுண்டானால்
மனிதர்கள் உன்னிடமிருந்து எதையாவது பெறும்படி செயல்படு.

அடையாளத்தை இழக்காதீர்

1 சாமுவேல் - 30:8-31

தீமையானதைப் பின்பற்றாமல் நன்மை யானதைப் பின்பற்று — 111 யோ—11

111 யோவான் - 1:1-14

சில விஷயங்களில் நாமாக வேண்டுமென்று நினைத்து மற்றவர்களின் தவறான வழிமுறைகளையும், குண இயல்புகளையும் பின்பற்றுவதில்லை. ஆனால் சில விஷயங்களில் பிறருடைய சில நடவடிக்கைகளால் நாம் நமக்குள் உணருகின்ற சில பாதிப்பின் அனுபவங்கள், நம்மையறியாமலே நாம் அவர் களின் தவறான வழிகளில் சென்றுவிடச் செய்கின்றன. அங்குதான் நாம் மிகவும் கவனமாயிருக்க வேண்டும்.

மற்றவர்கள் நம் விஷயத்தில் தாராளமாக நடந்து கொள்ளாவிடில், நாமும் அவர்கள் விஷயத்தில் அப்படியே நடந்து கொள்கிறோம். மற்றவர்கள் நம் விஷயத்தில் அவ்வளவு அக்கறையாக இல்லையா? நாமும் அவர்கள் விஷயத்தில் அக்கறையற்றவர்களாகப் போய்விடுகிறோம். அவர்கள் நம்மை ஏதாவது ஒரு விதத்தில் அசட்டைசெய்து விட்டார்களா, நாமும் அவர்களுக்கு அப்படியே செய்கின்றோம். அவர்கள் நம்மைத் தேடி வரவில்லையா, நாமும் அவர்களைத் தேடிச் செல்லாமல் போகின்றோம்.

இப்படி அநேகம் விஷயங்களில் நாம் நடந்து கொள்கின்றோம். இங்கே என்ன நடக்கிறது? நாம் நம்முடைய நல்ல அடையாளங்களை இழந்து மற்ற வர்களின் மோசமான அடையாளங்களை அணிந்து விடுகின்றோம். நாம் நம்முடைய நல்வழிகளையும், குண நிலைகளையும் விட்டு விலகி மற்றவர்களின் தவறான வழிகளுக்கும், குணநிலைகளுக்கும் சென்று நம்மை நாமே தரந்தாழ்த்திக் கொள்கின்றோம்.

ஆனால் வேதம் என்ன சொல்கின்றது? நாம் தீமையானதைப் பின்பற்றா மல், நன்மையானதைப் பின்பற்ற வேண்டும் என்று. பிறர் நமக்குச் செய்தபடி நாம் அவர்களுக்குச் செய்ய முற்படும் போது, ஒரு வேளை நம் மனநிலைகளுக்கு ஒரு தற்காலிக திருப்தியைக் கொடுக்கலாம். ஆனால் நாம் நம்முடைய நல்ல அடையாளத்தை இழந்து, நாமும் அவர்களைப் போல மாறி, நமக்கு நாமே தீமை யான பாதிப்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றோம்.

தாவீதிற்கு எதிராக சவுல் மிகவும் தரம் தாழ்ந்து நடந்து கொண்டான். தாவீது அழிய வேண்டும், ஒழிய வேண்டும் என்பதே சவுலின் குறிக்கோளாகயிருந்தது. ஆயினும் தாவீது சவுல் தனக்கெதிராகச் சிந்திப்பது போல, தான் அவனுக்கு எதிராகச் சிந்திப்பது நியாயம் என எண்ணவில்லை. சவுலின் தீய குணங்களால் தாவீது பாதிக் கப்பட்ட போதிலும் அவன் தன்னுடைய நல்ல குணங்களை இழக்காமல் கர்த்தருக்கு முன்பாகத் தான் நீதியுடன் செயல்படவேண்டும் என்று விரும்பினான். சவுல் பிசாசைப்போல செயல்பட்டாலும், தாவீது ஒரு தேவ மனிதனுக்குரிய உயர்பண்புகளைவிட்டு இறங்கி வரவில்லை.

பிறர் செய்த தீமைகளை மறக்க மனதில்லாதவன் பிறருக்கு நல்லது செய்யும் மனநிலையை இழக்கின்றான்.

ஜீவ நீரோடை

பணம் எதற்காக ?

சங்கீதம் 49:1-20

அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும். – லூக்கா 12:20

லூக்கா-12:13-31

அவர் அழகானதோர் வீட்டைக் கட்டினார். ஆனால் நல்ல வருமானம் கிடைக்கிறது என்பதற்காக அதை வாடகைக்கு விட்டுவிட்டார். அவர் சொகுசு கார் ஒன்று வாங்கினார். அதையும் வாடகைக்கு விட்டுவிட்டு பைக்கிலும், ஆட்டோவிலும், அரசு பஸ்ஸிலும் பயணம் செய்கின்றார். அவர் விதவிதமான தங்க ஆபரணங்களை வாங்கினார். ஆனால் பாதுகாப்பாக வங்கி லாக்கரில் வைத்து விட்டார். அவருக்குப் பலவிதங்களில் நல்ல வருமானம் வருகிறது. ஆனால் எதையும் கையில் வைத்தி ராமல் வட்டிக்கு விட்டு விடுகிறார்.

இவர் பலருடைய பார்வைக்குப் பெரிய செல்வந்தன். ஆனால் உண்மையில் அவர் ஒரு பிச்சைக்காரன் வாழ்க்கையையே வாழ்கின்றார். ஏனென்றால் இவர் எல்லாவற்றையும் வைத்திருந்தும் எதையும் தனக்காக அனுபவிக்கவில்லை. ஒன்றுமில்லாத பிச்சைக்காரனைவிட எல்லாவற்றையும் வைத்திருக்கின்ற இவர் எந்த விதத்திலும் உயர்வானவர் அல்ல.

பணம் சம்பாதிப்பது என்பது பணத்திற்காகவே இருக்கக் கூடாது. அந்தப் பணத்தினால் சிலவற்றை அனுபவிக்க வேண்டும். நன்றாக உண்ணாமல், நன்றாக உடுத்தாமல், நல்ல உறைவிடத்தில் வாழாமல் பணம் பணம் எனச் சேர்த்து அதற்குக் காவலாளியாகவும், பாதுகாவலனாகவும் இருப்பதினால் என்ன பயன்? அனாவசியமான செலவுகளும், சுபபோகமான வாழ்க்கை முறைகளும் நல்லதல்ல. பணம் இருக்கிறது என்பதற்காக சாலொமோனைப் போல உண்பதி லும், உடுப்பதிலும், இன்பம் தேடுவதிலும் அதனை மிதமிஞ்சிச் செலவழிக்கக் கூடாது.

அதே வேளையில் எல்லாம் இருந்தும் பணம் செலவாகிவிடக் கூடாது என்பதற் காகத் தேவையற்ற சிக்கனத்திலும் கஞ்சத்தனத்திலும் வாழ்ந்தால் அது பணத்தைக் காவல் காக்கும் அனுபவமேயன்றி பணம் சம்பாதிப்பதின் நோக்கத்தை அறிந்து கொண்ட வாழ்க்கை அல்ல.

பணத்தைத் தனக்கும் பயன்படுத்தாமல், பிறருக்கும் பயன்படுத்தாமல் சம்பா தித்துக் கொண்டிருப்பதிலேயே மகிழ்ச்சி காண்பது பாவமானதும் சாபமானதும் ஆகும். அவ்விதச் செல்வம் பிற்காலச் சந்ததிக்கு ஆசீர்வாதமாக மாறாமல் சாபமா கவே மாறும். செல்வங்களைச் சரியாகப் பயன்படுத்துவதைப் பற்றி யோசிக்காமல், சேர்த்து வைப்பதையே சிந்தித்துக் கொண்டிருந்த மனிதனை இயேசு மதிகேடனே என்றார். ஏனென்றால் தான் சேர்த்து வைத்த பணத்தோடு அன்றைய தினம் வாழ்வது நிச்சயமற்றதல்லவா. ஆம். பணம், சரியாகப் பயன்படுத்தப்பட்டால் ஆசீர்வாதம், இல்லையேல் சாபமே.

நற்குணங்களோடு இணைந்திராதவனின் இதயம் இறைவனை விட்டு வெகுதூரம் விலகியேயிருக்கிறது.

மூலதனம்

ஆதியாகமம் - 39:1-23

உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே... மத்-25:21

மத்தேயு - 25:14-30

வாழ்க்கையில் முன்னேறிச் செல்வதற்கும், அடுத்தபடிக்குக் கடந்து செல்வதற்கும் ஏதாவது ஒரு ஆதாரம் அல்லது மூலதனம் தேவைப்படுகிறது. எதுவுமே இல்லாத நிலையில் என்ன செய்ய முடியும்? ஆனால் பணம், பொருள், திறமை, சாதகமான சூழ்நிலை, பிறர் தயவு ஆகிய ஆதாரங்கள்தான் முன்னேறிச் செல்வதற்கு முக்கியமானவைகள் என்று நாம் எண்ணிவிடக்கூடாது.

எவ்வித நம்பிக்கைக்கும் வாய்ப்பற்ற ஒரு புதிய எதிர்மாறான சூழ்நிலையில் அன்னியனாக, அடிமையாக நின்று கொண்டிருந்த யோசேப்பிடம் முன்னேறிச் செல்வதற்கு ஏதாவது ஆதாரமோ, மூலதனமோ இருந்ததா? இல்லை. ஆனாலும் அவன் முன்னேறிச்சென்று முதன்மையான உயர்வை எட்டினான். எப்படி? அவனிடம் உண்மை, தேவபயம், தேவன் மேல் நம்பிக்கை ஆகிய உயர்ந்த குணநிலைகள் இருந்தன. அனைத்தையும் இழந்துவிட்ட சூழ்நிலையிலும் உயர்ந்த குணநிலைகள் என்னும் ஆதாரம் அவனைத் தாங்கியது. எந்தச் சூழ்நிலையிலும் உண்மை. தேவபயம், விசுவாசம் ஆகிய மூலதனங்களை அவன் இழக்காமலிருந்ததால், அவைகளே மிக உயர்ந்த உயர்வுகளுக்கு நேராக அவனை முன்னேறிச் செல்லச் செய்தன.

ஆம். ஒரு நல்ல நிலையை அடைவதற்கும், ஒரு முன்னேற்றப்பாதையில் செல்வதற்கும் நம்மிடம் சாதகமான ஆதாரங்கள் எதுவுமில்லாமலிருக்கலாம். ஆனாலும் நம்முடைய இதயம் தேவபயம் உடையதாகவும், தேவன் மேல் விசுவாசம் உடையதாகவும் இருந்தால், அவற்றை நாம் நல்ல உயர்வுகளை அடைவதற்கான மூலதனங்களாகத் தேவன் மாற்றுவார்.

மனஉண்மையும், தேவபயமும் தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்ற பொக்கிஷமாக உள்ளன. உலகம் ஒருவேளை அவற்றை அசட்டை செய்யலாம். ஆனால் தேவன் அவற்றை அதிகமாகக் கனப்படுத்துகின்றார். எனவே அவற்றைக் கொண்டிருக்கின்ற மனிதனை தேவன் ஏதுமற்ற பலவீன சூழ்நிலைகளின் நடுவிலும் ஆசீர்வாதமான முன்னேற்றங்களுக்கு நேராகக் கொண்டு செல் கின்றார். ஆம். எதுவுமேயில்லையே என நாம் கலங்க வேண்டாம். உண்மையையும், தேவ பயத்தையும் உறுதியாகப் பற்றிக் கொண்டால் உயர்வு நிச்சயம்.

தாவீதை தேவன் ஒரு தேசத்திற்குத் தலைவன் ஆக்கினார். எந்த அடிப்படையில்? அவன் மிகச்சிறந்த போராளி என்பதாலோ, நல்ல பலசாலி என்பதாலோ அல்ல. அவனைத் தேவன் தம்முடைய இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டார். தாவீதின் உண்மையான மூலதனம் அறிவோ, ஆற்றலோ, சாதுரியமோ அல்ல. தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய வேண்டும், தேவனுக்கு மகிமை சேர்க்க வேண்டும் என்ற ஒரு சிந்தைதான் அவனுடைய முக்கிய மூலதனம். ஆம். தேவனுக்கு முன்பாக உண்மையும் உத்தமமுமாக வாழ விரும்புகின்றவனை தேவன் முன்னேற்றப் பாதையில் கொண்டு வருவது நிச்சயம்.

உண்மையை உடமையாக்கிக் கொண்டவன், தனிமையாயிராமல் தகுதி வாய்ந்த துணையோடிருக்கிறான்.

ஜீவ நீரோடை

வெறும் புகழ்ச்சி

ஆமோஸ் - 5:20-27

உன் பாட்டுகளின் இரைச்சலை என்னை விட்டு அகற்று – ஆமோஸ் 5:23

எபேசியர் - 5:1-20

சமீப காலங்களிலே வெளிவந்த பல கிறிஸ்தவப் பாடல்களில் இடம் பெற்ற வார்த்தைகளைக் கவனித்துப் பாருங்கள். கிறிஸ்தவப் போதகர்கள் இயேசுவின் அன்பையும், கிருபையையும், தயவையும், வல்லமையையும் விவரித்துச் சொல் லும் விதங்களைக் கவனித்துப் பாருங்கள். புல்லரித்துப் போய்விடுவீர்கள். இதைவிட அதிகமாக தேவனைப் புகழ்வதற்கு வார்த்தைகளே இல்லை.

இயேசு வின் அன்பையும் வல்லமையையும் இதைவிட ஆழமாக உணர்வுப்பூர்வமாக விவரித்துப் பேசுவது மிகவும் கடினம். பாடல்களும், பிரசங் கங்களும் கற்பனைகளை மிஞ்சும் விதமாகப் பாடுகிற மற்றும் பேசுன்றவர்களின் ஆழ்ந்த அர்ப்பணிப்பு, மற்றும் ஆழமான அனுபவங்களைப் பற்றிப் பேசுகின்றது.

ஆனால் உண்மை என்னவென்றால் இவர்களில் பெரும்பாலானோர் பேசுகின்ற அளவிற்கு உண்மையான அனுபவம் உடையவர்கள் அல்ல. அவர்கள் பாடலுக்காக, பிரசங்கத்திற்காக அப்படிச் செய்கின்றனர். அவர்களுக்கும் அவர்கள் சொல்லுகின்ற அனுபவங்களுக்கும் சம்பந்தமேயில்லை. நாம் அளவுக்கு மிஞ்சி ஆண்டவரைப் புகழவும், விவரிக்கவும் பழகிக் கொண்டோம். அவர் தாங்குகின்றார். தேற்றுகின்றார், அற்புதம் செய்கின்றார். அதிசயம் செய்கின்றார் என்றெல்லாம் ஏரானமான காரியங்கள் சொல்கின்றோம்.

காலையில் ஜெபிக்கும் பழக்கமே இல்லாத ஒருவர் விரும்பிப் பாடும் பாடல் “காலை விழிப்பே கர்த்தரின் சாயல், கண்களும் செவியும் காத்திருக்கும்” என்பதாகும். இரவெல்லாம் டி.வி. பார்த்துவிட்டு காலையில் 9 மணிக்கு எழுந்து நேராக அலுவலகம் போகின்றவர் ஒருவர். அவருக்கு பிடித்தமான பாட்டு, “அதி காலமே தேடுகிறேன். ஆர்வமுடன் நாடுகிறேன்” என்பதாகும். ஒருநாளில் அரைமணி நேரம் கூட ஆண்டவரின் சமூகம் தேடாமல் உபலகப்பிரகாரமாக வாழ்கின்றார் ஒருவர். ஆனால் அவர் அடிக்கடி உணர்வுப்பூர்வமாகப் பாடும் பாட்டு” என் உயிரான, உயிரான, உயிரான இயேசு என் உயிரோடு கலந்தவர் இயேசு” என்ப தாகும்.

இதுதான் பலருடைய நிலைமை, தாங்கள் உணராத அனுபவியாத, ருசிக் காத, உண்மை என்று உறுதிப்படுத்தாத பலவிஷயங்களை ஒரு பக்திக்காகப் பாடுவதும் பேசுவதும் பல கிறிஸ்தவர்களுக்குப் பழக்கமாகிவிட்டன. ஆனால் அனுபவப் பின்னணி இல்லாமல் வெறும் வார்த்தைகளால் பாடுவதும், புகழ்வதும் ஒரு போதும் தேவனைக் கனப்படுத்தாது.

உன் வாழ்க்கை புகழத்தக்கதாக இராவிட்டால் தேவனை நீ புகழ்வது அவரைத் துக்கப்படுவத்தவே செய்யும்.

அஸ்திபாரம்

யாத்திராகமம் - 32:1-14

அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின... மத்தேயு 7:26

மத்தேயு - 7:18-29

இந்நாட்களில் அவர் பின்வாங்கிவிட்டார். இவர் பின் மாற்றத்தில் போய் விட்டார் என்பது போன்ற செய்திகள் பலருடைய விசுவாச நிலைகளை அதிரச் செய்கின்றது. ஆனால் இப்படிப்பட்ட பின்மாற்றங்கள் குறித்த விஷயத்தில் நான் அனுபவ ரீதியாக உணர்ந்த சில விஷயங்கள் உண்டு. பின்மாற்றம் பின்மாற்றம் என்று சொல்லப்படுகின்ற விஷயம் பலர் விஷயத்தில் வித்தியாசமாக இருக்கிறது.

பெரும்பாலான பின்மாற்றக்காரர்கள் உண்மையில் ஒருபோதும் கிறிஸ்து வோடு இருக்கவில்லை. அவர்கள் மறுபடியும் பிறந்த அனுபவத்தை ஒருபோதும் கண்டதில்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கையில் கண்டது உண்மையான மன மாற்றம் அல்ல. அது ஒரு மாயையான தோற்றம். அவர்கள் கிறிஸ்தவப் பக்தி விஷயங்களோடு வந்து சேர்ந்தார்களேயன்றி கிறிஸ்துவோடு சேரவில்லை. அவர் கள் அஸ்திபாரத்தைக் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாமல் ஒரு பெரிய கிறிஸ்தவ அனுபவம் என்ற கட்டிடத்தைக் கட்டிக் கொண்டார்கள். அதனைத் தாங் கும் உண்மையான அடித்தளம் இல்லாததால் சோதனைக் காற்றுகள் வந்தபோது வீழ்ந்து போனது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரண்டு விதமான வீடுகளைக் குறித்த ஒரு உவமையைச் சொன்னார். இரண்டும் ஒரே விதமாகவே தோன்றியது. இரண்டும் ஒரே விதமாகவே தங்கும் இடமாகச் சிலகாலம் பயன்பஃடடது. அங்கே சந்தேகப்பட எதுவும் இருக்கவில்லை. ஆனால் பெருவெள்ளம் வந்தபோதோ, பெருங்காற்று வீசிய போதோ ஒன்று வீழ்ந்து போனது. அப்போதுதான் அது ஆழமாகத் தோண்டி அஸ்திபாரம் எதுவும் போடாமலேயே கட்டிய வீடு என்பது தெரியவந்தது.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை என்னும் வீடு பக்தி, ஆராதனை, ஊழியம், கிறிஸ்தவ ஒழுங்குகள், ஆத்தும ஆதாய ஈடுபாடு, போன்ற வைகளால் அழகாகவும், சிறப்பாகவும் தோன்றலாம். நம்முடைய பல பக்தி ஈடுபாடுகள் நமக்குச் சிறந்த கிறிஸ்தவர்கள் என்ற தோற்றத்தை ஏற்படுத்தித் தரலாம்.

ஆனால் அஸ்திபாரம் உறுதியானதா? என்பதே கேள்வி. நம்முடைய வாழ்க்கையில் நம்மைப் பாவிகள் என உணர முடிந்து, அதன் விளைவாக வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கும் மனந்திரும்புதல் நடந்ததா என்பதே முக்கியம். மறுபடியும் பிறந்த ஒரு அனுபவத்தைக் குறித்த நிச்சயம்தான் அஸ்தி பாரம். அந்த அஸ்திபாரத்தைக் குறித்த கரிசனையும், நிச்சயமும் இல்லாவிடில், நம்முடைய ஆவிக்குரிய நிலை எவ்வளவு பிரமாதமாகத் தோன்றினாலும், சோதனை வருகையில் அவை எளிதாக விழுந்துவிடும் வாய்ப்புள்ளவையே.

தேவனுக்காக என்ன செய்யலாம் என்று யோசிக்கும் முன்பு அவர் உனக்கு என்ன சொல்கிறார் என்பதைக் கவனி.

ஜீவ நீரோடை

பிறருக்குப் பயன்

ஏசாயா – 58:1-11

அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். – மத்தேயு 7:12

மத்தேயு 7:1-14

நாம் பயன்பெறுகின்றோம் என்ற திருப்தியைவிட நாம் பயன்படுகின்றோம் என்ற திருப்தி மிகமிக அருமையானது. எனக்கு என்ன கிடைக்கும் என்ற சிந்தையைவிட என்னால் பிறருக்கு என்ன கிடைக்கும் என்ற சிந்தையே சிறந்தது. சில நேரங்களில் நாம் யார் யாரால் பயனடைந்தோம் என்று எண்ணும் போது, அங்கே அநேகருடைய பெயர் ஞாபகத்தில் வருவதில்லை. எனவே சோர்வு வருகிறது. ஆனால் யார் யார் நம்மால் பயன்பெற்றார்கள் என்ற விதமாகப் பார்க்கும் போது நம்மை ஆராய்ந்து பார்க்க வாய்ப்பு கிட்டுகிறது.

தேவனால் பயன்பெறும் யாரும் பிறரால் தாங்கள் பயன்பெற வேண்டும் என்பதை முக்கிய விஷயமாக எண்ணமாட்டார்கள். ஏனென்றால் உலகம் முழுவதிலுள்ளவர்களால் நாம் பயனடைவதைவிட தேவனால் பயன் பெறுவதே அதிக பயன் ஆகும். அவரால் பலன் பெற்றவர்கள். அவருடைய அன்பு, ஐக்கியம், ஆறுதல், ஆதரவு, வழிநடத்துதல் என ஏராளம் உதவிகளைப் பெறுகின்றனர். அவற்றைக் கொண்டு நாம் யாருக்குப் பயனுள்ளவர்களாக வாழலாம் என்று சிந்திப்பதே ஆவிக்குரிய சிந்தை.

கிறிஸ்துவின் ஐக்கியத்தினால் நாம் ஆவிக்குரிய பயன்பாடுகளைப் பெற்று பிறருக்குப் பயனுள்ளவர்களாக வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை. அவ்விதம் வாழும் போது நம்மால் சிலர் அன்பு, ஆதரவு, ஐக்கியம், ஆலோசனை, முன் மாதிரி வாழ்க்கை எனப் பயன் பெறுவார்கள். அப்போது நமக்கு தேவன் பல்வேறு விதமான பலன்களை தராமல் போவதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக நாம் சிலருக்குப் பயன்படுகின்றோம் என்றதோர் சிந்தனை வாழ்விற்கு அதிக மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது.

எனவேதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கனிதரும் வாழ்வை மிக முக்கிய விஷயமாக எண்ணிப் போதனை செய்தார். அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்வு பிறரால் அதிகமாகப் பயனடைந்த வாழ்வு என்று கூறுவதற்குச் சான்றுகள் இல்லை. ஆனால் இறுதி வரையிலும் பவுலின் வாழ்க்கை அநேகருக்குப் பயன்பட்ட வாழ்வு என்று கூறுவதற்கு ஏராளம் சாட்சிகள் உள்ளன. சிலர் மற்றவர்களால் மலையளவு உதவி கிடைத்தால்தான் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் தங்களால் ஒரு சிறு துரும்பு உதவியாவது பிறருக்குக் கிடைக்கின்றதா என்று யோசிக்க மாட்டார்கள். ஆம். ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை என்பது வாழ்வைச் சிலருக்காகிலும் பயனுள்ளதாக அமைத்துக் கொள்வதே.

மற்றவர்கள் செய்யாதவைகளையே நினைத்துக் கொண்டிராதே நீ செய்தவைகள் என்ன என்பதையும் நினைத்துப்பார்.

பிரச்சினைகள்

யோசுவா - 14:5-15 | இந்த மலைநாட்டை எனக்குத்தாரும்... யோசுவா - 14:12 | எபேசியர் - 6:10-18

பயணத்தின் பாதையில் குறுக்கிடுகின்ற ஒரு ஆறு ஒருவனுக்குப் பெருந்தடையாக உள்ளது. ஆனால் இன்னொருவனுக்கு அதனை நீந்திக் கடந்து தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தும் ஒரு வாய்ப்பாக அமைகின்றது. உயர்ந்து நிற்கின்ற மலையைக் கண்டு ஒருவன் பிரமித்து நிற்கின்றான். இன்னொருவனோ அதில் ஏறிச் சென்று, தன்னுடைய திறமையைக் காண்பிக்கும் ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக் கொள்கின்றான்.

வாழ்க்கைப் பாதை பிரச்சினைகள் நிறைந்தது. பிரச்சினைகளே இல்லாத ஒரு வாழ்க்கையை நாம் காணமுடியாது. அவ்விதம் ஒன்று இருந்தால் அந்த வாழ்க்கையே ஒரு பிரச்சினை ஆகிவிடும். பிரச்சினைகள் உண்மையில் நம்மை பின்னோக்கிப் போகத் தூண்டும் தடைகள் அல்ல. அவைகள் சந்திக்கவும், தாண்டிச் செல்லவும், மேற்கொள்ளவும் தேவையான உந்துவிசைகளைத் தர ஏற்பட்டவைகளே. அவைகள்தான் வாழ்க்கையில் புதிய வேகங்களையும், திருப்பங்களையும், வெற்றியான உயர்வுகளையும் கொண்டு வருகின்றது.

ராட்சதனாகிய கோலியாத்தின் சவால், சவுல் ராஜாவுக்கு ஒரு பெரிய பிரச்சினை. ஆனால் அதே பிரச்சினை இளைஞனாகிய தாவீதுக்கு தேவனைச் சார்ந்த விசுவாச பலத்தால் ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தும் வாய்ப்பாக அமைந்தது. அங்கேதான் சாதாரண ஆடு மேய்க்கிறவன் என்ற நிலையிலிருந்தவன் நாடறியத்தக்க, ஒரு மாபெரும் வீரன் என்ற நிலைக்கு வரும்படியான முதல் படிக்கல்லைக் கண்டான். அது அவனுடைய வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பமாக அமைந்தது.

கொடிய ராட்சதர்கள் வாழும் பிரச்சினை மிகுந்த மலைநாட்டை வீரனாகிய காலேப் தனக்குத் தரும்படி விரும்பிக் கேட்டான். தேவன் தனக்குச் சாதகமாக இருப்பதை வெளிப்படுத்தவும், தனக்கு தேவன் தந்துள்ள சிறப்பான ஆற்றலுக்குப் போதுமான வேலை கிடைக்கவும் வேண்டுமென்று அவன் விரும்பினான்.

தேவனை நாம் உண்மையாகப் பின்பற்றி வாழ்வோமாயின், நம்மிடம் தெய்வீக ஆற்றல் மிகுதியாகச் செயல்படும் என்பது உண்மை. ஆனால் அவைகளைக் குறித்து மனதளவிலான விசுவாசங்கள் போதாது. பிரச்சினைகள் எதிரே வரும் போதுதான் தேவன் தந்திருக்கின்ற ஆற்றல்கள் வெளிப்படும். சிம்சோனுக்கு முன்னால், சிங்கம் வந்த போதும், மிகுதியான எதிரிகள் வந்தபோதும் தேவபலம் வெளிப்படுவதற்கே அவைகள் வாய்ப்புகளாக மாறின.

ஆம். பிரச்சினைகள் மூலம்தான் நாம் புதிய வெற்றிகளுக்கான திருப்பங்களைக் காண முடியும். தேவன் நமக்குத்தரும் ஆவியின் பலம், கிருபை, விசுவாசம் ஆகியவைகள் பிரச்சினைகளை நாம் வெற்றிகளாக மாற்றுவதற்காகவே. வெற்றி மிகு ஆசீர்வாதங்கள் பிரச்சினைகளின் பாதையில்தான் வருகிறது.

பிரச்சினைகள் ஒரு நாய் போன்றது.
அது பயந்து ஓடுகின்றவனை வேகமாகத் துரத்தும்.

ஜீவ நீரோடை

கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

ஏசாயா 9:1-7 | **எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும். – லூக்கா 2:10** | லூக்கா 2:1-20

கிறிஸ்துமஸ் கொண்டாடலாமா என்ற கேள்வி பலரால் கேட்கப்படுகின்றது. ஒரு மாபெரும் நல்ல நிகழ்வை நினைத்துக் கொண்டாடுவதில் தவறேதும் இருப்ப தாகத் தெரியவில்லை. ஆனால் எதனை நினைத்து நாம் கொண்டாடுகின்றோமோ அதனால் நமக்கு ஏற்பட்ட தனிப்பட்ட நன்மை என்னவென்பது முக்கியமானது. மகாத்மா காந்தியின் தியாகமான போராட்டங்களால் இந்தியாவில் சுதந்திரமாக வாழும் வாய்ப்பைப் பெற்ற நாம் அவருடைய பிறந்த தினத்தைக் கொண்டாடுவது நியாயமானது. அதுபோல தம்முடைய ஜீவனைக் கொடுத்து, பாவ விடுதலையை ஏற்படுத்திக் கொடுத்த இயேசுவால் நாம் விடுதலை அடைந்திருந்தால் கிறிஸ்துமஸ் கொண்டாடுவது அர்த்தம் மிக்கது.

கிறிஸ்துவின் பிறப்பை நினைத்து நமக்கு நாமே கொண்டாட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் கிறிஸ்துவின் பிறப்பு நமக்குள் கொண்டாட் டத்தைக் கொண்டு வந்திருக்கின்றதா என்பதே முக்கியம். கிறிஸ்து நமக்குள் ஒரு பரிசுத்தமான கொண்டாட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறாரா என்ற நிச்சயமில்லாமல் வெறும் மதரீதியான பண்டிகைக் கொண்டாட்டத்தில் சிறப்பொன்றுமில்லை.

இயேசுவின் பிறப்பு குறித்த நற்செய்தி, சகல பேருக்கும் சந்தோஷத்தை உண்டாக்கும் என்று வான தூதர்கள் மேய்ப்பர்களிடம் கூறினார்கள். ஏனென்றால் இயேசு மனிதர்களை விசனப்படுத்துகின்ற பாவத்திலிருந்து அவர்களை விடுவித்து மகிழ்விக்கவே இந்தப் பூமியில் வந்து பிறந்தார். இந்த மகிழ்ச்சி டிசம்பர் மாதத்தின் சில நாட்களில் மட்டுமல்ல. அது நம்முடைய வாழ்வின் பாதைகளிலெல்லாம் கூட வரும்.

தவறான செயல்கள், தவறான சுபாவங்கள், தவறான சிந்தனைகள், தவ றான ஆசைகள் ஆகியவற்றிலிருந்து நம்மை இயேசு விடுவித்ததால் வருகின்ற மகிழ்ச்சி கொஞ்சமல்ல. நல்லதை நினைத்து, நல்லதை விரும்பி, நல்லதைச் செய்து அடைகின்ற மகிழ்ச்சி மட்டற்றது. மனம் போன போக்கில் போகாமல், உலகத்தின் இழுவைக்கு இசைந்து போகாமல், சுயத்தின் வலிமையான ஆளுகைக்கு அடிபணியாமல் தூய்மையானதோர் இருதயத்தோடு வாழ்வதினால் ஏற்படுகின்ற கொண்டாட்டம் எதற்கும் இணையாகாது. இரட்சிப்பு என்ற சுவைமிக்க இனிப்பை ருசிக்காமல், இரட்சகரின் பிறந்தநாள் மிட்டாய்ப் பெட்டியை பெரிய விஷயமாக எண்ணி மகிழ்வதில் எந்த மேன்மையும் இல்லை.

கிறிஸ்து பிறந்த சந்தோஷத்தை உலகம் கொண்டாடுகிறது.
கிறிஸ்து உனக்குள் இருக்கும் சந்தோஷத்தை நீ கொண்டாடு.

சிறு குறைவு

எண்ணாகமம் - 20:1-13

அவர்களில் ஐந்து பேர் புத்தியில்லாதவர்கள்
மத்தேயு 25:2

மத்தேயு - 25:1-13

இயேசு கிறிஸ்து கூறிய பத்து கன்னிகைகள் உவமையில் வருகின்ற ஐந்து கன்னிகைகள் மிகுந்த பரிதாபத்திற்குரியவர்கள். அவர்கள் மணவாளனைச் சந்திப்பதற்காக அதிக சிரமம் எடுத்தும், நீண்ட நேரம் காத்திருந்தும் இறுதியில் மணவாளனுடைய விருந்தின் மகிழ்ச்சிக்குத் தகுதியற்றுப் போனார்கள். அவர்கள் சற்று முன்ஜாக்கிரதையாக மற்ற ஐந்து கன்னிகைகளைப் போல இன்னும் கொஞ்சம் எண்ணெயைத் தயாராக வைத்திருந்தால் கடைசி நிமிடத்தில் பரிதாபமான ஏமாற்றத்தைக் கண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் பாவிகளோ, பக்தியற்றவர் களோ அல்ல. ஆனால் சிறு கவனக்குறைவால் மிகுந்த சந்தோஷத்திற்கான விருந்தில் பங்குபெற இயலாமல் போனார்கள்.

இறைவாழ்க்கையின் முக்கியமான நோக்கம் தேவன் அருளும் சந்தோஷத் தினை நமக்குள் பெற்று மகிழ்வதாகும். நம்முடைய ஒவ்வொரு ஆவிக்குரிய செயலின் இறுதி நோக்கமும் தெய்வீக சந்தோஷத்தினை நமக்குள் பெறுவதற் காகவே இருக்க வேண்டும். நாம் அந்தப் புத்தியற்ற ஐந்து கன்னிகைகளைப் போல, பலவித ஆவிக்குரிய சிரமங்களை மேற்கொண்டு மிகுந்த வாஞ்சையோடு செயல்பட்டும், இறுதியான நோக்கமாகிய ஆவிக்குரிய மகிழ்ச்சியைக் காணாமல் போனால் என்ன பிரயோஜனம்?

சிலர் கர்த்தருக்காக கடுமையாக உழைப்பார்கள். அவருடைய ஊழியத்தைச் செய்ய அதிகச் சிரமம் எடுப்பார்கள். ஆயினும் மனந்திரும்புதல், இரட்சிப்பு, தேவ ஐக்கியம் உணர்தல் ஆகிய அனுபவங்களைக் குறித்துச் சரியாகச் சிந்திக்க முன் வரமாட்டார்கள். எனவே அவர்களிடம் பலர் மெச்சத்தக்க அநேக நன்மையான காரியங்கள் இருந்த போதிலும், பிரயாசங்களுக்குரிய தேவ அசீர்வாதங்களைப் பெறுவதில்லை. அநேகர் தங்களின் பலவித பக்தியான நடவடிக்கைகளைக் கவனித்து, இதற்குமேல் என்ன தேவை என்ற உணர்வினால் மனந்திரும்புதல் என்ற விஷயத்தில் அசட்டையாக இருந்து விடுவார்கள். அதுவே இறை நன்மை களைத் தடைசெய்து விடுகிறது.

ஏராளமான ஆவிக்குரிய மக்கள் பலவிதங்களில் பக்தியோடு செயல்பட்டும், அந்த தெய்வீக விருந்தின் சந்தோஷத்தினை அனுதின வாழ்வில் அடையாமலே போகின்றார்கள். காரணம் என்ன? ஏதோ ஒரு சிறு குறைவு, ஏதோ ஒரு சிறு கவனக்குறைவு அல்லது ஜாக்கிரதையின்மை. இன்னொருவர் விஷயத்தில் நாம் காண்பிக்கும் சிறு மனக்கசப்பு, ஒரு விட்டுக் கொடுக்காத மனோபாவம், சிறு வைராக்கியம், ஏதாவது ஒன்றின்மேல் அதிக ஆசை, சுபாவ நிலைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்த விரும்பாமை போன்ற ஏதாவது ஒன்று கர்த்தருடைய சந்தோஷ விருந்திற்கு நம்மைத் தூரமாக்கி விட முடியும்.

இறைவனை நோக்கிய அன்பின் வேகம் குறையும் போது
உலகப் பொருட்களை நோக்கி ஆசையின் வேகம் அதிகமாகும்.

அன்பும், மரியாதையும்

யோபு 19:1-29

சிறு பிள்ளைகளும் என்னை அசட்டை பண்ணுகிறார்கள்... யோபு19:18

லூக்கா 22:63-71

யோபு, செல்வ வளங்களோடு சீரும் சிறப்புமாக இருந்தபோது, அவனை நேசித்தோர் ஏராளம். அவனை மதிக்கவும், மரியாதை செய்துபோற்றவும் அநகேர் இருந்தனர். அவன் எங்கு போனாலும் அவனுக்குக் கனத்தையும், மகிமையையும் கொடுக்க ஆட்கள் முந்திக் கொண்டனர்.

ஆனால் யோபுவின் வாழ்க்கையை உபத்திரவம் பற்றிக்கொண்ட போது, சொந்த மனைவியின் அன்பு கூட கிடைக்காமல் அவன் அங்கலாய்த்தான். சாதாரணமானவர்கள் கூட அவனை மதிக்காமல், பரிகாசம் செய்து வெறுக்கும் நிலை ஏற்பட்டது. ஆம். மனித அன்பும், மரியாதையும், உபசரிப்பும், மாயையானவை என்றும், ஒரு நல்ல சூழ்நிலை ஒருவரோடு இருக்கும் வரைதான் அவை செயல் படும் என்றும் அவன் புரிந்து கொண்டிருப்பான். அவ்விதமான ஒரு புரிந்து கொள்ளும் அனுபவமும் வாழ்க்கையில் மிகவும் தேவையானதே.

நாம் நன்றாகயிருக்கும் போது பிறர் காட்டும் அன்பையும், தருகின்ற மரியாதையையும் உண்மையாகவே நமக்கு கிடைப்பவை என்றே நாம் நம்பி விடுகிறோம். ஆனால் சில கஷ்டமான சூழ்நிலைகள் வரும்போதுதான், மனித அன்பு சில சூழ்நிலைகளைச் சார்ந்தவை என்பதை உணர முடிகின்றது. இந்த விஷயத்தில் சில கஷ்டங்களின் பாதை, நமக்கு சில முக்கியமான பாடங்களை கற்றுத் தருகின்றது.

மனித அன்பின் பலவீனநிலை, உலகம் தரும் மரியாதையின் பின்னால் உள்ள நிபந்தனைகள், மனிதன் நம்மையல்ல, நம்மை சூழ்ந்துள்ள ஒரு நல்ல நிலமையைத்தான் மதிக்கின்றான் என்பது போன்ற உண்மைகள் உபத்திரவங்களின் வெளிச்சத்தில் வெளிப்படுகின்றன. இதன் மூலம் மனிதர்களின் அன்பின் மாயத்தைப் புரியாமலும், மனிதர்கள் தரும் மரியாதை உணர்வின் நிரந்தரமற்ற நிலைமையினை உணராமலும், மயங்கிப் போகின்ற நிலையிலிருந்து விடுபட்டு, வாழ்க்கையைக் குறித்த சரியான புரிந்து கொள்ளுதலோடு வாழ வழி ஏற்படுகிறது. எக்காலத்திலும் கர்த்தர் காட்டும் அன்பும், அவர் தரும் மகிமையுமே நிலையானவை.

மனிதன் இயற்கையாகவே அன்பைத் தேடி இன்னொரு மனிதனிடம்தான் செல்வான். ஆனால் மனிதன் உண்மையான அன்போடும், ஸ்திர நிலையோடும் தொடர்ந்து காணப்படுவது கடினமான விஷயமே. நாம் எதிர்பார்க்கின்ற விதமாக பிறர் நம்மை நேசியாமல் போனது அவர்களின் இயலாமையினாலேயே. அவர்களின் நேசிக்கும் சக்தி குறைவானதும், மாறுந்தன்மை உடையதும் ஆகும். அன்பில் நிறைவானவரும், நிலையானவரும் தேவன் மட்டுமே. அவர் மாறாத மன நிலை உடையவர். எனவே நாம் அன்பிற்காகவும், ஆதரவிற்காகவும் எப்போதும் அவரையே பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

நெருங்கி நிற்கும் துன்பங்கள் மனிதரை தூரமாக்கலாம். ஆனால் தூரத்தில் நிற்கும் தேவனிடம் நாம் நெருங்கிச் செல்ல துணை புரியும்.

நற்செயலும், நற்பண்பும்

நீதிமொழிகள் 16:1-13

மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது. – லூக்கா 16:15

லூக்கா 16:1-15

அனாதைகளுக்கு வாழ்வு அளிப்பது தொடர்பான சமூக இயக்கத்திற்கு அவர் ஒரு காரியதரிசி. பல அனாதை இல்லங்களை அமைத்து அவைகளை நிர்வகிக்கும் இயக்குனர் அவர். வெளிநாட்டு ஸ்தாபனங்களை அணுகி அனாதை ஆசீரமங்களுக்கு உதவி பெறுவதில் அவர் திறமையானவர். மனித நேய பணிகளுக்காக அரசாங்கத்தாலும், சேவை இயக்கங்களாலும் பல பட்டங்களையும், பாராட்டுக்களையும் பெற்றவர். ஆனால் அவருடைய பின்னணியில் இன்னொரு முக்கிய செய்தி உண்டு. வயது முதிர்ந்த தன்னுடைய பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாதவர். வறுமையில் வாடும் தன் சகோதரர்களின் சுகநலனை விசாரிக்கக் கூட மனமற்றவர்.

இது போன்ற காரியங்கள் இன்றைய சமுதாய மாய்மாலங்கள். எந்த ஒரு நற்செய்லைச் செய்வதற்கும் அதற்கென்று விசேஷமான நற்பண்பு வேண்டும். நாம் எந்தெந்த விதங்களில் நற்செயல்கள் செய்கின்றோம் என்பதைவிட, அவைகளுக்கேற்ற நல்ல மனோபாவங்கள் நமக்கு உண்டா என்பது மிக முக்கியம். நற்பண்புகளை பின்னணியாகக் கொண்டிராத எந்த ஒரு நற்செயலும் சுய நலம் சார்ந்ததாகவும், மறைவான ஆதாயங்களை நோக்கமாகக் கொண்டதாகவுமே இருக்கும். அவ்வித நற்செயல்கள் மனிதர்களின் பாராட்டினைப் பெற்றுத் தந்தாலும், தேவன் அவைகளை அருவருப்பாகவே பார்க்கின்றார்.

ஆம். இன்று அன்பு சார்ந்த நற்பணிகளைச் செய்கின்ற பலரின் தனிப்பட்ட வாழ்க்கை வட்டத்தில் அன்பின் வாசனை சற்றும் இல்லை. ஜனங்களின் பிரச்சினைகளுக்காக இரங்கி சமூக நல ஸ்தாபனங்களை நடத்துகிற பலரிடம் இரக்க உணர்வு இதயத்தில் இல்லை. பரிசுத்தத்தைக் குறித்தும், ஆத்தும ஆதாயத்தைக் குறித்தும் பிரமாதமாகப் பேசுகின்ற பலரால் பெரிய ஊழிய ஸ்தாபனங்களை உருவாக்க முடிகிறது. ஜனங்களுக்கு நடுவில் பெரிய ஊழியர்களாகப் பிரபலமடைய முடிகிறது. ஆனால் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைகளோ பரிசுத்தத்தை அறியாதவைகளாகவும், பொருளாதாயங்களை நோக்கமாகக் கொண்டவைகளாகவும் இருக்கின்றன.

மனிதர்கள் நாம் பேசுவதைக் கேட்பார்கள். தேவனோ நம்முடைய உள்ளத்தில் உள்ளது என்ன என்பதைப் பார்ப்பார். மனிதர்கள் நம்முடைய செயல்களைப் பார்த்து மெச்சுவார்கள். தேவனோ அவைகளுக்கு அடிப்படையாக இருக்க வேண்டிய உண்மையான பண்பு நிலைகள் இல்லாததைக் கண்டு விசனப்படுவார். நம்முடைய நற்செயல்கள் பலருடைய பாராட்டுகளைப் பெறுகின்ற அதே வேளையில் நற்குணங்கள் இல்லாத இதய நிலைகளை தேவன் பார்த்து, தம்முடைய கோபத்தையே நம்மேல் பொழிவார். நற்செயல்களுக்கு முன்பு நற்பண்புகளை நம்மிடம் காணக் கவனமாயிருப்போமாக.

தீயவைகள் உன்னிடம் தானாய் தோன்றும். ஆனால் நல்லவைகளை நீதான் தோற்றுவிக்க வேண்டும்.

ஜீவ நீரோடை

போர் வீரன்

சங்கீதம் 20:1-9

உபத்திரவங்களினாலே அசைக்கப் படாதபடிக்கு – 1தெச 3:2

1 தெசலோனிக்கேயர் 3:1-13

போர்வீரனுக்கு தளபதி தைரியமூட்டும் நம்பிக்கையான வார்த்தைகளைக் கூறி உற்சாகப்படுத்த வேண்டியது அவசியம். அதே வேளையில் போர்வீரனிடம் போய், "வீரனே பயப்படாதே உனக்கு எந்த எதிர்ப்பும் வராது. ஒருவரும் உனக் கெதிராக வரமாட்டார்கள். நீ போகிற இடமெல்லாம் பாதுகாப்பாக சுகமாயிருப்பாய்" என்று தளபதி கூறினால் எப்படியிருக்கும்? போர் வீரன் எதற்கும் ஆயத்தமாயிருக்க மாட்டான். அவன் எச்சரிக்கையில்லாத ஆயுதம் ஏந்திய கோழையாகிவிடுவான்.

போர் வீரனென்றால் அவன் எப்போதும் தாக்குதல்களைக் குறித்த எதிர் பார்ப்போடு ஆயத்தமாயிருக்க வேண்டும். வேதத்தின்படி கிறிஸ்தவன் என்பவன் போர்ச்சேவகன். அவன் பிரச்சினைகளற்ற, சுகமான சூழ்நிலைகளில் வாழ்வதற்காக அழைக்கப்பட்டவன் அல்ல. அவன் பலவித சோதனைகளையும், பிரச்சினைகளையும். சந்தித்து மேற்கொள்ள வேண்டியவன். அங்கே அவனுக்கு வலிமையான பயிற்சியும், ஆயத்தமும் அவசியமாயிருக் கின்றன.

இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களுக்கு சுகமான ஒரு வாழ்க்கையை வாக்குரைக்காமல், அவர்கள் பலவித சோதனைகளைக் கடந்து செல்ல வேண்டியது வரும் என்றும் அதற்குரிய ஆயத்தங்களோடு இருக்கும்படியும் ஏவினார். பேதுரு, பவுல் போன்ற அப்போஸ்தலர்களும் விசுவாசிகள் சந்திக்க வேண்டிய சோதனைகளைக் குறித்தும், பாடுகளின் பாதைகளைக் குறித்தும் ஒளிவு மறைவின்றிக் கூறி, அவர்களைப் போர் வீரர்களைப் போல ஆயத்தப்படுத்தினார்கள்.

இந்நாட்களில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் கஷ்டம் இல்லை, கவலை இல்லை, சோதனை இல்லை, வேதனை இல்லை என்ற ரீதியில் பலர் பிரசங்கிப்பதால், விசுவாசிகள் வீரர்களாக எழுந்து நிற்பதற்குப் பதிலாக,சிறு சிறு துன்பங்களின் நடுவிலேயே கோழைகளைப் போல வீழ்ந்து விடுகிறார்கள். தேவன் நமக்கு விசுவாசம், ஆவியின் வல்லமை, தேவ ஐக்கியம், ஜெபம் ஆகிய போராயுதங்களை எதற்காகத் தருகிறார்? சோதனையற்ற சூழ்நிலையில் வாழ்தவதற்கல்ல. சோதனைகளை வென்று ஜெயவீரர்களாய் எழுந்து நிற்பதற்காக.

சில நேரங்களில் வாழ்க்கைப் பாதையில் எதிர்ப்புகளும், போராட்டங்களும் வரும்போது, அநேகரை அது வருத்தமடையச் செய்து விடுகிறது. கர்த்தர் மேல் பக்தியாக இருக்கும் எனக்கு ஏன் இந்தச் சோதனை என்று அங்கலாய்க்கின்றனர். ஆனால் இவைகள்தான் கர்த்தர் நமக்கு அளித்துள்ள ஆற்றல்களையும், சோதனைகளை மேற்கொள்ளத் தந்திருக்கும் கிருபைகளையும் சோதித்து அறியும் களம். சில நேரங்களில் இந்தச் சூழ்நிலைகள் இன்னும் நாம் எந்த அளவிற்கு கர்த்தரால் பயிற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நாம் உணரச் செய்கிறது.

தடையின்றி ஒருவன் பெற்ற உயர்வுகள் பின்னாளில் தடுக்க முடியாத தாழ்வுகளுக்குள் தள்ளி விடுகின்றது.

ஜீவ நீரோடை

ஸ்தோத்திரம்

சங்கீதம் 116:1-19

என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால்... சங். 116:7

அப்போஸ்தலர் 16:16-32

ஒரு பக்தனின் நன்றி அறிக்கை: சில நேரங்களில் எனக்கு ஏற்பட்ட எதிர் மாறான சூழ்நிலைகளை மாற்றும் என்று உம்மை நோக்கி கெஞ்சினதுண்டு. ஆனாலும் சூழ்நிலைகள் மாறாமலே இருந்தன. ஆனால் அந்த சூழ்நிலைகளால் நிலைகுலையாமல் அவற்றைச் சந்திக்கும் மனப்பக்குவத்தையும், ஆற்றலையும் தந்தீரே. அதற்காக உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன்.

என்னை வெறுப்பவர்களும், விரோதிப்பவர்களும் எனக்குத் தீங்காக யோசித்து, தீவினையோடு செயல்பட்டபோது அவர்களை நீர் தடை செய்வீர் என நான் எதிர்பார்த்ததுண்டு. ஆனால் நீரோ, அவர்களின் அநீதிகளையும், அக்கிரம சிந்தை சார்ந்த செயல்களைப் பொறுத்துக் கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும் எனக்கு விசேஷ கிருபை தந்தீர். அதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

வீடு, நிலம், ஆஸ்தி, அந்தஸ்து என அநேக நன்மைகளை நீர் பலருக்கு அளித்திருப்பதை நான் அறிவேன். ஆனால் நீர் அவைகளை எனக்குத் தர வில்லை. ஆனாலும் அவைகள் எனக்கு இல்லையே என்ற குறையுணர்வு ஒரு போதும் எனக்குள் எழாதபடி, ஒரு நல்ல இருதயத்தைத் தந்தீரே, அதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

எனக்குப் பக்கபலமாக இருந்த சிலர் என்னைப் பாதி வழியில் தனியாக விட்டுச் சென்ற வேளையில் நான் மிகுதியாய் கலங்கினேன். ஆனாலும் அவர்கள் பிரிந்த வேளை என்னோடு நீர் அதிகமாக இணைந்து, மீதி வழியெல்லாம் கூட வந்தீரே, அதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

எனக்கு மன வருத்தத்தைத் தந்த சிலர் மாற வேண்டும், மாற வேண்டும் என நான் ஜெபித்தேன். ஆனால் நீரோ அவர்களை மாற்றாமல் என்னை மாற்றி, எல்லா வருத்தங்களையும் சகிக்கும் ஆற்றல் அளித்தீர். அதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

சிலர் வெறுத்தபோதுதான் உம் அன்பு எனக்கு இனித்தது. சிலர் கைவிட்ட போதுதான், நீர் ஒருவரே கைவிடாதவர் என்பதை உணர முடிந்தது. தோல்விகள் வந்த போது, உமக்குள் எனக்கு ஓர் வெற்றி இருப்பதைக் கண்டேன். கசப்புகள் வந்த போது, உமக்குள் எனக்கு ஒரு இனிமை இருப்பதை அறிந்தேன்.

அலைகள் எழும்பியபோதும், காற்றுகள் பேரோசை ஏற்படுத்தியபோதும் நான் கலங்கியது உண்மை. ஆனால் என்னோடு நீர் இருக்கையில் எத்தனையாய் எனக்கு நீர் அமைதி தருகிறீர் என்பதை அங்கேதான் உணர்ந்தேன்.

பணத்தையும், பொருளையும் தந்து என்னை சந்தோஷப்படுத்துவீர் என்று நான் எண்ணிய நாட்கள் உண்டு. ஆனால் எதையும் தராமலே எனக்குள் ஒரு பெரிய சந்தோஷத்தை, என் இருதயத்தில் தந்தீரே, அதற்காக உம்மை ஸ்தோத் தரிக்கிறேன்.

தேவனின் தொடுதலை உணர நீ காட்டும் ஆர்வம்தான், உன்னைத் தொட முடியாமல் சாத்தானை ஓட வைக்கும்.

ஆயத்தமாவோம்

யோசுவா 3:1-17

உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்... யோசுவா 3:5

எபிரெயர் 12:1-17

துரித இரயில் வண்டியோ அல்லது பேருந்தோ குறிப்பிட்ட ஒரு தூரத்தை ஓடி முடித்த பிறகு, அது பல விதங்களில் சோதிக்கப்படுகிறது. அதனுடைய இயந்திர பாகங்களெல்லாம் சரியாக இயங்கும் நிலையில் இருக்கிறதா என்று கவனிக்கப்பட்டு, சரி செய்யப்பட வேண்டிய பகுதிகள் பழுது பார்க்கப்பட்டு சீர் செய்யப் படுகின்றன. நீண்ட தூரம் ஓடி வந்திருக்கின்ற நிலையில் வாகனத்தில் படிந்துள்ள அழுக்குகள் கழுவி அகற்றப்பட்டு சுத்தமாக்கப்படுகிறது. இப்போது அது தனது அடுத்த கட்ட ஓட்டத்திற்கு நன்கு ஆயத்தமாக்கப்பட்டுள்ளது.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஒரு ஆண்டினை முடித்துள்ளோம். கர்த்தருக்குச் சித்தமானால் புதிய ஒரு ஆண்டிற்குள் பிரவேசிக்கும் நேரத்தை நெருங்கி வந்துள்ளோம். முடிவடையும் தருவாயில் உள்ள இந்த பழைய வருடம், நம்மில் அநேகருக்கு ஒருவேளை பல்வேறு காரணங்களினால் சோர்வானதாகவும், சோதனையானதாகவும், எதிர்பார்த்தபடி சில காரியங்கள் நடவாமல் போய் ஏமாற்றமானதாகவும் இருந்திருக்கக்கூடும். ஆயினும் பலவித சூழ்நிலைகளைக் கடந்து இம்மட்டும் வந்து சேர தேவ கிருபை நமக்குத் துணை நின்றிருக்கிறது. இந்த உணர்வோடு, கர்த்தருக்கு மனதார நன்றிகளைச் செலுத்துவோம்.

கடந்தவை கசப்பானவைகளாக இருந்தாலும், வரப்போகிற ஆண்டை கர்த்தர் ஒரு மதுரமான ஆண்டாக மாற்றித்தர முடியும். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான். ஒரு புதிய அடுத்த கட்ட வாழ்க் கைப் பயணத்திற்கு ஆயத்தமாகும் விதமாக நாம் எப்படி செயல்பட்டோம், எப்படி செயல்படுகிறோம், எப்படியிருக்கின்றோம் என்றெல்லாம் இப்போது சற்று சோதனை செய்து பார்ப்போமா?

கர்த்தர் நம்மோடிருந்திருந்தால் கர்த்தர் நமக்குப் பல நிலைகளில் நல்லவராகயிருந்ததை, உணர்ந்திருக்க முடியும். கர்த்தர் நம்மோடிருந்திருந்தால், கர்த்தருடைய சமாதானம் நம்மோடிருந்திருக்கும். கர்த்தம் நம்மோடிருந்திருந்தால், கர்த்தரின் சத்தம் நம்முடைய ஆத்துமாவில் தொனித்ததை நாம் உணர்ந்திருப்போம். கர்த்தர் நம்மோடிருந்திருந்தால் கர்த்தருக்குப் பிரியமற்ற காரியங்களை வெறுக்கவும் விலக்கவும் நாம் பெரிதும் பிரயாசப்பட்டிருப்போம்.

இவ்வித விஷயங்களில் நாம் குறைந்து போயிருந்தாலோ, குன்றிப் போயிருந்தாலோ நாம் கர்த்தரோடிருக்கப் போதிய அளவு கவனமாயிருக்கவில்லை என்று அர்த்தம் ஆகும். அதுவே நம்முடைய பல சோர்வுகளுக்கும், அமைதிக் குறைவுகளுக்கும், நம்பிக்கை இழப்புகளுக்கும் காரணமாயிருந்திருக்க முடியும். இப்போதும் அணிவகுத்து நிற்கும் வாழ்க்கைப் பிரச்சனைகளையே சிந்தித்துக் கொண்டிராமல், ஒரு புதிய தீர்மானத்துடன் கர்த்தரோடு வலிமையான உறவு கொள்ள நம்மை ஆயத்தமாக்குவோம். நாளை நமக்காகக் கர்த்தர் அற்புதம் செய்வார்.

இறைவனுக்காக நீ இருக்கிறாய் என்பது நிச்சயமாகிவிட்டால் இறைவன் உனக்காக இருப்பது நிச்சயம்.

நினைவில் நின்றவை

ஆசிரியரின் பிற நூல்கள்

1. சந்தோஷத்தின் வழிகள்
2. இறை ஆசியுடன் இனிய குடும்பம்
3. வெளிச்சத்தில் வெளிப்படும் உண்மைகள்
4. வழிகாட்டும் சிந்தனைகள்
5. சிலுவையில் இயேசுவின் இதய ஓசைகள்
6. நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்
7. பரிசுத்த வாழ்வின் பாதையில்
8. நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?
9. துதிமலர்கள் ஆயிரம்
10. தேவன் அங்கீகரிக்கும் ஜெபம்
11. ஆராதனையும் அனுதின வாழ்க்கையும்
12. விசுவாசத்தின் பிரதிபலிப்புகள்
13. சிலுவையின் பாதையில் சில மனிதர்கள்
14. துக்கம் சந்தோஷமாக மாறும்
15. ஆசீர்வாதங்கள் தடைபடுவது ஏன்?
16. கிறிஸ்தவம் பேச்சில் அல்ல....செயலில்
17. வல்லமையாக ஜெபிப்பது எப்படி?
18. சிந்தையை சீராக்கும் சிந்தனைகள்
19. யார் என்னைத் தேற்ற முடியும்?
20. மனந்திரும்பியது உண்மையா?
21. சிலுவையில் அறையப்படும் சத்தியங்கள்
22. உண்மையான ஆராதனை
23. கலங்காதே மனமே கலங்காதே
24. சத்திய சிந்தனை முத்துக்கள்
25. ஆசீர்வாதத்தின் அடித்தளங்கள்
26. தேவனுடைய மனிதர்கள் எங்கே? எங்கே?
27. வாலிப வயதுகளில் நீ...
28. துன்பங்கள் ஏன்? ஏன்?
29. கண்ணீரின் காலங்களில்
30. விசுவாசமா? வியாபாரமா?
31. சிந்திக்கத் தூண்டும் சிந்தனைகள்
32. ஆராதனை என்றால் என்ன?
33. காதல் சரியா? தவறா?
34. சோர்ந்து போகாதே மனமே
35. தேவஉறவினால் வாழும் வாழ்க்கை
36. அக்கினி வார்த்தைகள்
37. மனநிலைகள் மாறணுமே!
38. கிறிஸ்தவன் இங்கே, கிறிஸ்தவம் எங்கே?
39. சிந்தனைத் தோட்டத்தில் சிறுமலர்கள்
40. அர்த்தமுள்ள ஆவிக்குரிய வாழ்க்கை
41. உண்மையைச் சொல்கிறேன் இது கிறிஸ்தவம் அல்ல
42. எப்படி வாழணும் கிறிஸ்தவ வாழ்க்கை?
43. வாலிபத்தை பாதுகாப்பது எப்படி?
44. வித்தியாசமான விக்கிரகங்கள்
45. நீங்களும் உங்கள் பிள்ளைகளும்
46. ஆவிக்குரிய வாழ்க்கை எதற்காக?
47. தேவனுக்காக வாழ்வது என்றால்......

(புத்தகங்களைக் குறித்த விபரங்களுக்கு எழுதவும்.)

MANAM PUTHITHAAGATTUM THINAMUM

சாம்சன் பால்

வாலிப நாட்களில் தொடர்ந்து சந்திக்க நேர்ந்த பலவிதமான துன்பங்களின் விளைவாக தேவனுடைய சிறகுகளின் கீழ் தஞ்சம் புகுந்தவர். இனி வாழ்வதற்கு எந்த ஒரு வாய்ப்பும் இல்லை என்று எண்ணத்தக்க ஒரு சூழலில் கர்த்தர் இவரை புதியதோர் பாதையில் வழிநடத்தி புதிய நம்பிக்கையூட்டினார். சுமார் 13 ஆண்டு காலம் புதுச்சேரியில் தனிப்பறவையாக வாழ நேர்ந்த இவர் இறை உறவுடன் வாழ்வது இன்னதென்பதை நன்கு புரிந்துகொண்டார். இறை உறவுடன் வாழ்வதே உண்மையான ஆன்மீகம் என்ற கருத்தை அழுத்தமாக வலியுறுத்தி வரும் இவருடைய எழுத்துக்களும், சத்திய அனல் மிகுந்த பிரசங்கங்களும் அநேகருடைய மனமாற்றத்திற்கு வழிவகுக்கின்றன. சுமார் 50 புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ள இவருடைய தினசரி தியான நூல்கள் கிறிஸ்தவ உலகில் ஆவிக்கேற்ற தனித்துவம் நிறைந்தவை.



நம்முடைய மனம் எப்படியிருக்கின்றதோ, அப்படியே நம்முடைய வாழ்க்கையும். மனதை சரியாக வைத்துக் கொள்ள இயன்றவன் வாழ்க்கையை சரியாக வைத்துக் கொள்ள இயலாதவனாய் இருக்க முடியாது. மனதிற்கு மகிழ்ச்சியூட்டுகின்ற அறிவு சார்ந்த சிந்தனைகளும், தத்துவார்த்த கருத்துக்களும் உலகத்தில் ஏராளம் உண்டு. ஆயினும் மனதை மாற்றியமைத்து, தினமும் அதனைபுதிய சூழல்களுக்கேற்ப புதிதாக்கும் ஆற்றலும் தன்மையும் தேவனுடைய வார்த்தைகளுக்கே உண்டு. உண்மையான இறைத் தொடர்புடன் வாழ்வதற்கு உதவுவதே ஆன்மீகம். உண்மையான இறைத் தொடர்பு ஒவ்வொரு நாளும் ஒரு மனிதனை புதிதாக்கிக் கொண்டேயிருக்கும். தேவன் தம்முடைய வார்த்தைகளால் இன்னும் இன்னும் நாம் மனதில் புதிதாகிக் கொண்டேயிருக்க செய்கிறார். அவ்விதமான ஆற்றல் மிக்க தேவ வார்த்தைகளை ஒவ்வொரு நாளும் உங்களுக்குள் கொண்டு வருவதே இந்த தினசரி தியான நூல். புதிய எதிர்பார்ப்போடு இதனை வாசியுங்கள். உங்கள் மனம் புதிதாகிக் கொண்டிருப்பதை பிறர் காணச் செய்யுங்கள்.

தினசரி தியான நூல்

Daily Devotional

ஜீவ நீரோடை